# தமிழ்ப் பேராய்வு
# ஆய்விதழ்

தொகுதி - 13 (பகுதி 2)
Volume - 13 (Issue 2)

டிசம்பர் / December 2024

# JOURNAL OF TAMIL PERAIVU

Published by
**Department of Indian Studies**
**Faculty of Arts and Social Sciences**
**University of Malaya**

Indexed by MyJurnal
Malaysian Citation Centre

UNIVERSITY OF MALAYA
*The Leader in Research & Innovation*

**ISSN 2289- 8379**
**eISSN 2636-946X**

# Journal of Tamil Peraivu Editorial office


## Office of the Editor – in – Chief

No. 132, Department of Indian Studies, Faculty of Arts and Social Sciences,
University of Malaya, 50603 Kuala Lumpur, Malaysia
Tel: +60379675670
Email: rajanmun@um.edu.my / rajantheran@gmail.com



**Website: https://ejournal.um.edu.my/index.php/tamilperaivu/index**

### Publisher

Department of Indian Studies,
Faculty of Arts and Social Sciences,
University of Malaya,
50603 Kuala Lumpur, Malaysia.
Tel: +60379675510

### Sponsored by

Almaa Herbal Nature Pvt ltd
No.1/8, Pinjala Subramanian street,
T. Nagar, Chennai – 600 017
Tamilnadu, India
mglv@rediffmail.com/ www. Almaaherbal.com


---


The publisher of Tamil Peraivu Aivithal (Journal of Tamil Peraivu) will not be responsible for the statement made by the authors in any articles published in the journal. Under no circumstances will the publisher of this publication be a liable for the loss or damage cost by your reliance on the advice, opinion or information obtained either explicitly or implied through the contents of this publication.

© Department of Indian Studies, Faculty of Arts and Social Sciences, University of Malaya. All rights reserved. No part of this journal may be reproduced in any forms or by any means without publisher's prior permission.

# Editorial Board

2020-2024

## Editor–in–Chief

## Professor Dr. M. Rajantheran, Malaysia

Indian civilization, Tamil culture and literature, early cultural relations between India and Southeast Asia & culture and life of the Malaysian Indians

## Chief Executive Editor

## Dr. Silllalee S. Kandasamy

Media, Tamil literature and culture, Malaysian Indians & sociology

&

## Vijayalatchumy Maruthaveeran MLIS, CSSC BB

Alternative Media, Modern Tamil literature, Information Sicence

## Journal’s Web Design and Technical Support

## Dr.Kanmani Munusamy

Software Engineering, ontology, Data Mediation - Information Technology, Centre of Information Technology, University of Malaya, Kuala Lumpur, Malaysia.

## Associate-Editing & Ideating

## Bharathi Mutty

English Education. Lecturer-Universiti Tunku Abdul Rahman, Kampar, Perak, Malaysia.

# Editorial Board Members

**Arasu Chelliah,** Professor Dr.- Tamil Language, Classical literature, modern literature, University of Maryland, Baltimore, Maryland, America.

**Balasundararam Elayathamby**, Professor Dr., Tamil Language, Classical literature, modern literature & culture Head-Tamil Department, Annamalai Canada.

**Era. Kamarasu,** Professor Dr – Tamil Language, Classical literature, modern literature & culture, Department of Tamil Literature. Tamil University, Tanjavur, Tamil Nadu, India.

**G. Singaravelu,** Professor Dr- Primary Education, Teacher Education, English Education, Head, Department of Education, Syndicate member of the university, Bharathiar University, Coimbatore, Tamil Nadu, India.

**Ira. Kurinji Vendan,** Professor Dr- Tamil literature, Culture & Diaspora. Post graduate section, Arinyar Anna College, University of Pondicherry.

**Jeevendiran Chemen,** Associate Professor Dr- Ethic identity of Mauritian Tamils, Tamil language and Linguistic & Sociology. Mahatma Gandhi Institute, University of Maurititus.

**Kizhambur S. Sankara Subramanian,** Tamil journalism, Tamil Literature and Culture & Tamil Civilization, India.

**K. Chidamparam**, Assistant Professor Dr. - Linguistics, English, Human rights, International Institute of Tamil Studies,CPT Campus,Taramani, Chennai, Tamil Nadu.

**K.Shubashini,** Dr. – Lead IT architect, DXC Technology and President of Tamil Heritage Foundation International (International Organisation for Preserving Tamil Heritage).

**Krishnan Maniam,** Associate Professor, Dr, Modern Literature, Malaysian Tamil Literature, Comparative Literature. Head Department of Indian Studies. University of Malaya, Malaysia.

**Kumarashwaran Vadevelu**, Senior Lecturer, Dr, Social work: mental health, gender studies, group work. kumarashwaran.v@um.edu.my

**Mohanadass Ramasamy**, Senior Lecturer Dr- Language and linguistics, Department of Indian Studies. University of Malaya, Malaysia.

**N. Shankaranarayanan Dr, Guest Faculty.,** Tamil language, literature, Department of Tamil, Gandhigram Rural University.

**P. Sivakumar,** Professor Dr – Educational Technology, Environmental Education & Biology Education, Dean, Faculty of Education, Alagappa University, Tamil Nadu, India.

**Paramasivam Muthusamy,** Associate Professor Dr- Tamil language and literature, socio- linguistics, pedagogy and Tamil culture. Department of Foreign Languages. Faculty of Modern Languages and Communication, University Putra Malaysia.

**Ponsamy Tiroumalechetty,** (Retired) Associate Professor Dr – Socio- linguistics, Socio Culture of Tamils. Head, School of Indian Studies, Mahatma Gandhi Institute, Mauritius.

**Priya Krishnan**, Assistant Professor, Dr. Areological, Tamil literature, History. Ethiraj College For Women, Chennai, Tamil Nadu, India.

**Rakkappan Velmurugan,** Senior Lecturer Dr- Linguistics, Pedagogy, Tamil language, Literature & Grammar. Asian Languages and Cultures Academic group, National Institute of Education, Nanyang Technological University, Singapore.

**Samikkanu Jabamoney Ishak Samuel,** Associate Professor Dr – Malaysian Tamil Literature, Modern Tamil Literature, Tamil Language and Pedagogy. Tamil unit Coordinator, Sultan Idris Educational University.

**Seethalakshmi,** Associate Professor Dr- Tamil lexicography, teaching Tail as a second language, Tamil Pedagogy, Sociolinguistics & Literature through Mass Media. Department of Asian Languages & Cultures (ALC), Nanyang Technological University, Singapore.

**V. Maheswaran,** Professor Dr- Epigraphy, Tamil culture, folklore, literature. Department of Tamil, University of Peradeniya, Peradeniya, Sri Lanka.

**Vasu Aranganathan,** Dr- History of Tamil language, literature, religion, inscriptions & Teaching and learning of Tamil language. South Asia Studies, University of Pennsylvania, USA.

# PREFACE

The Journal of Tamil Peraivu, a biannual publication of the Department of Indian Studies at the Universiti Malaya, continues its tradition of academic excellence with its latest issue, Volume 13, Issue 2. The articles in this issue encompass five major themes that highlight the breadth and depth of research in Tamil studies and related fields: Cultural and Religious Studies, Language and Education, Literary Analysis and Linguistics, Historical and Philosophical Research, and Cultural Studies with Contemporary Applications. Together, these fifteen articles demonstrate the vibrant intellectual engagement with Tamil heritage, from ancient texts to modern educational practices.

**Cultural and Religious Studies**

This article "Well Being Diet in the text Padarthaguna Chintamani" by R. Seeta Lechumi Ratha Krishnan presents a compelling exploration of traditional dietary wisdom from a 15th-century text that remains remarkably relevant to contemporary health challenges. This article expertly bridges historical knowledge with modern lifestyle concerns, offering valuable insights into food discipline that could benefit today's fast-paced society. The research thoughtfully compiles these ancient dietary principles while establishing their continued significance, though a more explicit methodology would strengthen the scholarly framework.

In "Garuda Purana's Teachings on Ahimsa: A Study," authors Elangeswari Aruchunnan, M. Rajantheran, and Arun Balan masterfully synthesize the non-violence philosophy across diverse spiritual traditions. Their integration of teachings from the Garuda Purana with insights from Thirumoolar, Sivavakkiyar, Thiruvalluvar, and Vallalar creates a rich tapestry of compassion-centered wisdom. The article effectively highlights the spiritual consequences of violating ahimsa principles while contextualizing these teachings within broader Hindu philosophical traditions.

Sinnarajah Ramanarajah's article "The Literary Efforts of the Sri Lankan's in the Dissemination of Saiva Siddhanta Concept: Presenting Namasivayam or Nan Yaar" provides a fascinating window into the cultural transmission of Saiva Siddhanta philosophy through Sri Lankan literary contributions. The research thoughtfully positions this philosophical tradition within Jaffna's cultural identity while examining how literary works have served as vehicles for philosophical dissemination since Arumuga Navalar's time.

**Language and Education**

The article "The role of drama techniques in developing the speaking skills of students learning Tamil as a second language" by Ārtti Kiruṣṇamūrtti and Dr. Sundararaj Dharma Raj presents an innovative pedagogical approach to Tamil language acquisition in Singapore. Their research thoughtfully examines how drama strategies like role play and hot seat techniques can create joyful, effective learning environments for second language learners.

Saraswathy Perianan's article "Life Values Taught to Students Through Auvaiyar's Poetry Used in Tamil Language Teaching and Learning Activities in Malaysian Tamil Schools" brilliantly examines the intersection of literary heritage, moral education, and language acquisition. Perianan demonstrates how Avvaiyar's wisdom-filled poetry serves multiple pedagogical functions—enhancing language skills while simultaneously transmitting cultural values to Malaysian Tamil students.

In "Analysis on Google Translation (GT) & Human Translation (HT) on translating Tamil phrase into

English Language," Gomathi Batumalai and Nagalingeswaran Armugam provide timely research comparing technological and human translation approaches. The article offers important insights for both translation practitioners and language educators, though including specific challenging translation examples would further illuminate the comparative strengths and weaknesses of each approach.

**Literary Analysis and Linguistics**

Dr. S. Kanmani Ganesan's article "Gender Related to Kilai and Aayam" presents a sophisticated semantic analysis of two significant Tamil nouns found in ancient literature. Through careful examination of the eight anthologies and ten idylls, researcher identifies distinctive gender-related criteria for kilai—including blood relationships, wealth-sharing eligibility, and food-sharing responsibility—while contrasting these with aayam's more limited gender applications.

The article "Tamil Medicine in Naladiyar" by Premella Vijaihian and R. Seeta Lechumi Ratha Krishnan uncovers valuable medical knowledge embedded within moral teachings of the Sangam-era text. The authors effectively demonstrate how Naladiyar promoted disease prevention through disciplined lifestyle and ethical conduct, revealing the sophisticated integration of physical and moral health in ancient Tamil thought. Their research highlights the remarkable foresight of these medical perspectives that remain relevant to contemporary health challenges.

In "The Deity Names of Tirumāl in Tiruppāvai," Chandru Muthiah and S Arulla Sitiray provide a meticulous analysis of how Andal employs various divine nomenclature in her devotional compositions. Their research categorizes these names into five meaningful groups, revealing the theological and devotional significance behind each naming choice. The comparative approach with other Alvars' works adds scholarly depth, illuminating consistent patterns in divine naming conventions that enhance our understanding of Vaishnava devotional literature.

**Historical and Philosophical Research**

M.R.J. Suhaima, S.M.M. Mazahir, and M.M.A. Abdullah's article "The Role of Muslim Women in Nursing Sector: A Historic and Contemporary Perspective" presents a comprehensive examination of Muslim women's consistent contributions to healthcare from early Islamic periods through modern times. Their research skillfully traces the development of nursing practices through historical Islamic texts, documenting pioneering female figures who established care foundations during battles and early bimaristans.

Ashker Aroos's article "Prophetic Biography (Sirah) in the Western Scholarship: A Historical Analysis" offers a nuanced chronological examination of how Western engagement with the Prophet Muhammad's biography evolved from oppositional criticism to more balanced scholarship. Aroos thoughtfully acknowledges both biased and objective Western contributions, demonstrating how scholarly approaches transformed over time despite initial hostility. The research provides valuable context for understanding cross-cultural religious scholarship while identifying noteworthy Western historians who approached the subject with greater neutrality. specificity.

Kishanthiny Thiruchchelvam's article "The Principle of Yama and Niyama in Attanayoga - A View Through the Tirukkural" presents an insightful comparative analysis of yogic ethical principles across

Hindu philosophical texts. Thiruchchelvam skillfully demonstrates how Tirukkural incorporates the eight-limbed yoga concepts from Patanjali's Yogasutra and Tirumandira, particularly focusing on the foundational yama (restraints) and niyama (observances) principles. This research illuminates the remarkable philosophical coherence across diverse Hindu texts while highlighting Tirukkural's comprehensive ethical framework.

**Cultural Studies and Contemporary Applications**

Dr. T. Geethanjali's article "Bharatava Ethnography in the Novel Alaiwaikaraiyil" pioneers an innovative ethnographic approach to fictional representations of the Bharatava community. Employing multiple analytical methodologies, the article demonstrates how literature serves as a valuable ethnographic document revealing geographical, temporal, and cultural dimensions of this specific ethnic group.

Dr. Janani Thevananth and Dr. Thevanayagam Thevananth's article "The Fusion of Art and ICT in Times of Crisis: Online Theatre Performances in Northern Sri Lanka in the Context of COVID-19" presents a timely examination of performing arts adaptation during global crisis. Through auto-ethnographic methodology informed by Performative Theory and Relational Aesthetics, the authors document how Northern Sri Lankan theatre groups leveraged technology to maintain emotional connections with diaspora audiences worldwide.

The final article "The Life Values defined for youngsters in 'Iṉṉā Nāṟpatu'" by Sharan Suklam Ahtma Lingam and Dr. Manonmani Devi M.A.R Annamalai extracts relevant ethical guidance for contemporary youth from Post-Sangam literature. Their research identifies five key value domains—education, wealth, morality, social behavior, and leadership—that remain remarkably applicable to modern young people despite originating in ancient times.

The Journal of Tamil Peraivu remains dedicated to fostering high-quality research, theoretical development, and scholarly debates across all facets of Indian studies. This commitment is bolstered by the support of numerous esteemed researchers and aspiring scholars in the field. The editorial board extends its sincere gratitude to all contributors for their valuable submissions and to our esteemed peer reviewers for their rigorous evaluations. We also acknowledge with appreciation the generous sponsorship of Mr. MGL Velayutham, CEO and Founder of Alma Herbal Nature, whose support has made this print publication possible.

**Professor Dr.M.Rajantheran**
**Chief Editor**
**25.12.2024**

## முகவுரை

மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையின் முதல் அரையாண்டு வெளியீடான தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ், இம்முறை தொகுதி 13, இதழ் 2 மூலமாக தமிழாய்வு சூழலில் தனது மரபைத் தொடர்கிறது. மலேசியா, இந்தியா, இலங்கையைச் சேர்ந்த பன்னாட்டு அறிஞர்களின் பதினைந்து ஆய்வுக் கட்டுரைகளை இப்பதிப்பு வழங்குகிறது. இவ்விதழில் இடம்பெற்றுள்ள ஆய்வுக்கட்டுரைகள் தமிழியல் துறைகளின் பரப்பையும் ஆழத்தையும் வெளிப்படுத்தும் ஐந்து முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளன: கலை-சமய ஆய்வுகள், மொழி-கல்வி, இலக்கியம்-மொழியியல், வரலாறு-மெய்யியல் மற்றும் தற்கால சமூகப் பயன்பாட்டுக் கலைகள். இப்பதினைந்து கட்டுரைகளும் தமிழ் மரபின் தொன்மை நூல்களிலிருந்து நவீன கல்விமுறைகள் வரையிலான அறிவுசார் ஈடுபாட்டின் வீச்சையும், பண்டைய அறிவு இன்றைய புரிதலுக்கு எவ்வாறு வழிகாட்டுகிறது என்பதையும் சிறப்பாக காட்டுகின்றன.

தொடக்கமாக, பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த "பதார்த்தகுண சிந்தாமணி" நூலின் உணவியல் கோட்பாடுகள் இன்றைய உடல்நலப் பிரச்சனைகளுக்கும் பொருந்தும் என்பதை இரா. சீதாலட்சுமி இராதாகிருஷ்ணன் தமது ஆய்வில் தெளிவாக்குகிறார். பழந்தமிழ் உணவு மரபை நவீன வாழ்க்கைமுறை சிக்கல்களுடன் இணைத்து, இன்றைய விரைவுச் சமூகத்திற்குப் பயனளிக்கும் உணவொழுக்கக் கோட்பாடுகளை முன்வைக்கிறார். இதழ்வழி இந்தப் பண்டை உணவுக் கோட்பாடுகளின் தொடர் முக்கியத்துவத்தை ஆய்வின் முடிவில் நிறுவுகிறார்.

"கருடபுராணம் சுட்டும் கொல்லாமை நெறி" எனும் தலைப்பிலான ஆய்வில், இலங்கேஷ்வரி அர்ஜூணன், மு. இராசேந்திரன், அருண் பாலன் ஆகியோர் பல்வேறு மதமரபுகளில் காணப்படும் அகிம்சைக் கோட்பாடுகளை திறம்பட ஒருங்கிணைக்கின்றனர். கருடபுராணக் கருத்துகளை திருமூலர், சிவவாக்கியர், திருவள்ளுவர் மற்றும் வள்ளலாரின் போதனைகளுடன் இணைத்து, அன்பு சார்ந்த நெறிமுறைகளின் செழுமையான கலவையை உருவாக்குகின்றனர். அகிம்சைக் கோட்பாடுகளை மீறுவதால் ஏற்படும் ஆன்மிக விளைவுகளையும், இந்து தத்துவப் பரப்பில் அவற்றின் இடத்தையும் இந்த ஆய்வில் சிறப்பாக விளக்குகின்றனர்.

சின்னராஜா ரமணராஜாவின் "சைவ சித்தாந்த கருத்துப் பரவலாக்கத்தில் ஈழத்தவரின் இலக்கிய முயற்சிகள்" எனும் ஆய்வு ஈழத்து இலக்கியங்கள் வழி சைவசித்தாந்தத் தத்துவத்தின் பரவலை ஆய்வுக்குட்படுத்துகிறது. இத்தத்துவ மரபை யாழ்ப்பாணத்தின் கலாச்சார அடையாளத்துடன் பொருத்திக்காட்டி, ஆறுமுக நாவலர் காலம் முதலாக இலக்கியங்கள் எவ்வாறு தத்துவக் கருத்துகளைப் பரப்பும் ஊடகங்களாகச் செயல்பட்டன என்பதை ஆராய்கிறார். "நமசிவாயம் அல்லது நான் யார்" நூலின் வழி தத்துவக் கருத்துகளின் கலை வெளிப்பாடுகள் குறித்த அரிய பார்வையை இந்த ஆய்வின்வழி வழங்குகிறார்.

அடுட்து, சிங்கப்பூரில் "தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதில் நாடக உத்திகளின் பங்கு" குறித்த ஆர்த்தி கிருஷ்ணமூர்த்தி, முனைவர் த. சுந்தரராஜ் ஆகியோரின் ஆய்வு புதுமையான கற்பித்தல் முறையை முன்வைக்கிறது. பாத்திர நடிப்பு, உடனடி கேள்வி-பதில் போன்ற நாடக உத்திகள் மகிழ்ச்சியான, திறன்மிக்க மொழிக்கற்றல் சூழலை உருவாக்குவதை விளக்குகின்றனர்.

மலேசியத் தமிழ்ப்பள்ளிகளில் "ஔவையின் செய்யுள் மாணவருக்கு உணர்த்தும் வாழ்க்கை நெறி" பற்றிய சரஸ்வதி பெரியண்ணனின் ஆய்வு, இலக்கியம், பண்பாட்டுக் கல்வி, மொழிக்கற்றல் ஆகியவற்றின் இணைவை அழகாக ஆராய்கிறது. ஔவையாரின் அறிவுக்கருவூலமான பாடல்கள் மொழித்திறன் வளர்ப்பதோடு, மலேசிய இளைஞர்களுக்குப் பண்பாட்டு விழுமியங்களையும் கற்பிப்பதை ஆசிரியர் காட்டுகிறார்.

"கூகுள் மொழிபெயர்ப்பு & மனித மொழிபெயர்ப்பு ஒப்பீடு" பற்றிய கோமதி பத்துமலை, நாகலிங்கேஸ்வரன் ஆறுமுகம் ஆகியோரின் ஆய்வு காலத்திற்கேற்ற ஒப்பீட்டு ஆராய்ச்சியாகும். தேர்ந்தெடுத்த கோட்பாட்டின் அடிப்படையில் தமிழ் சொற்றொடர்களுக்கு மனித மொழிபெயர்ப்பின் துல்லியம் உயர்ந்ததெனக் காட்டி, இயந்திர மொழிபெயர்ப்பின் நம்பகத்தன்மை பற்றிய கேள்விகளுக்கு விடையளிக்கின்றனர். இதன்வழி, மொழிபெயர்ப்பாளர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் இயந்திர மொழிபெயர்ப்பின் விளைவுகள் சார்ந்து பயனுள்ள கருத்துகளை முன்வைக்கிறார்கள்.

முனைவர் ச.கண்மணி கணேசனின் "கிளையும் ஆயமும் தொடர்புறும் பால்கள்" ஆய்வு, பண்டைய இலக்கியத்தில் காணப்படும் இரு முக்கியச் சொற்களின் பொருண்மைப் பகுப்பாய்வை வழங்குகிறது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டை ஆய்ந்து, கிளை என்ற சொல்லுக்கான பால் தொடர்பான தனித்தன்மைகளை - இரத்த உறவு, சொத்துப் பகிர்வு உரிமை, உணவுப் பகிர்வுக் கடமை - கண்டறிந்து, ஆயம் என்பதன் குறைவான பால் தொடர்புகளுடன் ஒப்பிடுகிறார். இம்மொழியியல் ஆய்வு இலக்கியப் பகுப்பாய்வையும் களஆய்வையும் இணைத்து, தமிழ் இலக்கண மரபுகளைப் புரிந்துகொள்ள உதவும் நுண்ணிய பொருள் வேறுபாடுகளை வெளிக்கொணர்கிறது.

"நாலடியார் பாடல்களில் தமிழ் மருத்துவம்" என்ற ஆய்வில் பிரேமளா விஜயன், இரா. சீதாலட்சுமி இராதாகிருஷ்ணன் ஆகியோர் அறநூலில் பொதிந்துள்ள மருத்துவ அறிவை வெளிக்கொணர்கின்றனர். நாலடியார் கட்டுப்பாடான வாழ்க்கைமுறையும் அறநெறியும் போதிப்பதுடன் நோய்த்தடுப்பை எவ்வாறு வலியுறுத்தியது என்பதைக் காட்டி, பண்டைத் தமிழரின் உடல்-மன ஆரோக்கியக் கோட்பாடுகளின் நுட்பத்தை விளக்குகின்றனர். இக்கோட்பாடுகள் இன்றைய மருத்துவச் சவால்களுக்கும் பொருந்துவதைச் சுட்டிக்காட்டி, மருத்துவ பின்புலம் சார்ந்தவர்களுக்கும் பாரம்பரிய நல்வாழ்வில் ஆர்வமுள்ளோருக்கும் பயனுள்ள தகவல்களை வழங்குகின்றனர்.

"திருப்பாவையில் காணப்படும் திருமாலின் திருப்பெயர்கள்" பற்றிய சந்துரு முத்தையா, சி. அருளா சித்திரை ஆகியோரின் ஆய்வு, ஆண்டாள் தனது பாடல்களில் பயன்படுத்திய பல்வேறு இறையியற் பெயர்களின் நுணுக்கமான பகுப்பாய்வை முன்வைக்கிறது. இப்பெயர்களை ஐந்து அர்த்தமுள்ள பிரிவுகளாக வகைப்படுத்தி, ஒவ்வொரு பெயர்த்தேர்வின் பின்னுள்ள இறையியல் மற்றும் பக்தி முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றனர். பிற ஆழ்வார்களின் படைப்புகளுடனான ஒப்பீட்டாய்வு அறிவியல் ஆழத்தை அளிக்கிறது, வைணவ பக்தி இலக்கியத்தின் இறைப்பெயரிடல் மரபுகளை விளக்குகிறது.

"தாதியத் துறையில் முஸ்லிம் பெண்களின் வகிபங்கு" பற்றிய எம்.ஆர்.ஜே. ஸுஹைமா, எஸ்.எம்.எம். மஸாஹிர், எம்.எம்.ஏ. அப்துல்லாஹ் ஆகியோரின் ஆய்வு, தொடக்ககால இஸ்லாமிய காலம் முதல் தற்காலம் வரை சுகாதாரத்திற்கு முஸ்லிம் பெண்களின்

தொடர்ச்சியான பங்களிப்புகளை விரிவாக ஆராய்கிறது. வரலாற்று இஸ்லாமிய ஆவணங்கள்வழி செவிலியர் பணிகளின் வளர்ச்சியைக் கண்காணித்து, போர்க்களங்களிலும் பண்டைய மருத்துவமனைகளிலும் அடிப்படை சேவைகளை நிறுவிய முன்னோடிப் பெண்மணிகளை ஆவணப்படுத்துகின்றனர். இஸ்லாமியக் கோட்பாடுகள் செவிலியர் அறநெறிகளை எவ்வாறு வடிவமைத்தன என்பதைக் காட்டி தற்கால சவால்களையும் பகுப்பாய்கின்றனர்.

"மேற்கின் அறிவுப் பாரம்பரியத்தில் 'ஸீரா நபவீய்யா' பற்றிய அஷ்கர் அரூஸின் ஆய்வு, நபி முஹம்மதின் வாழ்க்கை வரலாற்றோடு மேற்கத்திய ஈடுபாடு எவ்வாறு எதிர்ப்பு விமர்சனத்திலிருந்து அதிக சமநிலையான அணுகுமுறைக்கு மாறியது என்பதின் நுட்பமான காலவரிசைப் பகுப்பாய்வை வழங்குகிறது. சார்புநிலையான மற்றும் நடுநிலையான மேற்கத்திய பங்களிப்புகள் இரண்டையும் ஆசிரியர் ஏற்றுக்கொண்டு, தொடக்ககால விரோத மனப்பான்மை இருந்தபோதிலும் அறிவியல் அணுகுமுறைகள் காலப்போக்கில் எவ்வாறு மாற்றமடைந்தன என்பதைக் காட்டுகிறார். ஆய்வு கலாச்சார இடைவெளிகளைக் கடந்த மத அறிவியலுக்கு மதிப்புமிக்க சூழலை வழங்குகிறது. அதேசமயம் இப்பொருளை சிறந்த நடுநிலையுடன் அணுகிய குறிப்பிடத்தக்க மேற்கத்திய வரலாற்றாசிரியர்களைக் கண்டறிகிறது.

"அட்டாங்கயோகத்தில் இயமம் நியமம் - திருக்குறளினூடான பார்வை" என்ற கிஷாந்தினி திருச்செல்வத்தின் ஆய்வு, இந்து தத்துவ நூல்களில் காணப்படும் யோக நெறிமுறைகளின் ஒப்பீட்டாய்வை முன்வைக்கிறது. திருக்குறள் எவ்வாறு பதஞ்சலியின் யோகசூத்திரம் மற்றும் திருமந்திரத்திலிருந்து எட்டுறுப்பு யோகக் கோட்பாடுகளை, குறிப்பாக அடிப்படை இயமம் (கட்டுப்பாடுகள்) மற்றும் நியமம் (கடைபிடிப்புகள்) கோட்பாடுகளை உள்ளடக்கியுள்ளது என்பதை விளக்குகிறார். இந்த ஆய்வு பல்வேறு இந்து நூல்களில் குறிப்பிடத்தக்க தத்துவ ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது. அதேசமயம் திருக்குறளின் விரிவான அறநெறிக் கட்டமைப்பையும் பகுப்பாய்வின்வழி முன்னிலைப்படுத்துகிறது..

"அலைவாய்க்கரையில் புதினத்தில் பரதவர் இனவரைவியல்" என்ற முனைவர் த. கீதாஞ்சலியின் ஆய்வு, பரதவர் சமூகத்தின் புனைவுச் சித்தரிப்புகளுக்கு புதுமையான இனவரைவியல் அணுகுமுறையை முன்னெடுக்கிறது. பல பகுப்பாய்வு முறைகளைக் கையாண்டு, இலக்கியம் எவ்வாறு இச்சிறப்பு இனக்குழுவின் நிலவியல், காலவியல், பண்பாட்டுப் பரிமாணங்களை வெளிப்படுத்தும் மதிப்பு மிக்க இனவரைவியல் ஆவணமாகச் செயல்படுகிறது என்பதைக் காட்டுகிறார். இவ்வாய்வு நவீன தமிழ்ப் புனைகதைகள் கலாச்சார அறிவைப் பேணுவதற்கும் சமூக மாற்றங்களைப் புரிந்துகொள்வதற்கும் உள்ள அறிவியல் வாய்ப்புகளை முன்னிறுத்தி, இலக்கியம் மற்றும் மானுடவியல் ஆய்வுகள் இரண்டிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்கிறது.

"நெருக்கடியான காலகட்டத்தில் கலை மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் இணைவு" பற்றிய கலாநிதி ஜனனீ தேவானந்த், கலாநிதி தேவநாயகம் தேவானந்த் ஆகியோரின் ஆய்வு, உலகளாவிய நெருக்கடியின் போது கலைகளின் தழுவல்திறனை உரிய நேரத்தில் ஆராய்கிறது. செயல்திறன் கோட்பாடு மற்றும் உறவுமுறை அழகியல் அடிப்படையிலான சுய-இனவரைவியல் முறையியல் மூலம், வட இலங்கை நாடகக் குழுக்கள் எவ்வாறு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உலகெங்கிலும் உள்ள புலம்பெயர் பார்வையாளர்களுடன் உணர்வுப்பூர்வ தொடர்புகளைப் பேணினர் என்பதை

ஆவணப்படுத்துகின்றனர். இவ்வாய்வு, இந்த மெய்நிகர் நிகழ்த்துகைகள் எவ்வாறு புவியியல் எல்லைகளைக் கடந்து தனிமைப்படுத்தல் காலத்தில் தமிழ் கலாச்சார அடையாளத்தை வலுப்படுத்தின என்பதை வெளிப்படுத்தி, சவால்மிக்க சூழ்நிலைகளில் கலாச்சார நெகிழ்திறன் மற்றும் தொழில்நுட்பத் தழுவல் குறித்து மதிப்புமிக்க பார்வையை வழங்குகிறது.

“இன்னா நாற்பது இளையோர்க்கு வரையறுக்கும் வாழ்வியல் விழுமியங்கள்” பற்றிய சரண் சுக்லாம் ஆத்மலிங்கம், முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை ஆகியோரின் ஆய்வு, சங்கம் மருவியகால இலக்கியத்திலிருந்து நவீன இளைஞர்களுக்குப் பொருத்தமான அறநெறி வழிகாட்டுதல்களை எடுத்துரைக்கிறது. கல்வி, செல்வம், அறநெறி, சமூக நடத்தை, தலைமைத்துவம் என ஐந்து முக்கிய விழுமியப் பிரிவுகளை அடையாளம் கண்டு, இவை பண்டைய காலத்தைச் சேர்ந்தவையாக இருந்தாலும் இன்றைய இளைஞர்களுக்கும் அப்படியே பொருந்துவதைக் காட்டுகின்றனர். எதிர்கால தலைமுறைகளுக்கு இந்த அறநெறிப் போதனைகளைப் பாதுகாப்பதற்கான வலுவான வாதத்தை முன்வைத்து, தலைமுறைகளிடையே அறிவுரைகளைப் பரிமாறுவதில் இலக்கியத்தின் நிலையான பங்கை வெளிபடுத்துகின்றனர்.

இவ்விதழில் இடம்பெற்றுள்ள இப்பதினைந்து ஆய்வுக் கட்டுரைகளும் தமிழியல் துறைகளின் பல்துறை ஆய்வு முயற்சிகளை வெளிப்படுத்துகின்றன. பண்டைய உரைகள், இலக்கியங்கள், மொழியியல், இனவரைவியல், தத்துவம், கலாச்சாரம் மற்றும் கல்வி ஆகிய பரந்த துறைகளைத் தழுவியுள்ள இந்த ஆய்வுக்கட்டுரைகள், பாரம்பரிய அறிவைத் தற்கால சமூகப் பயன்பாடுகளுடன் இணைக்கும் முக்கிய முயற்சிகளாகத் திகழ்கின்றன. பல கட்டுரைகள் ஆய்வுமுறை விளக்கங்களில் மேலும் தெளிவாக தேவை இருப்பதை அடையாளம்காண முடிகிறது. எனினும், ஒட்டுமொத்தமாக, இக்கட்டுரைகள் தமிழ் அறிவுப் பரப்பை வளப்படுத்தி, எதிர்கால ஆய்வாளர்களுக்கு வழிகாட்டும் தரமான பங்களிப்புகளாக அமைந்துள்ளன.

தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ், பல அறிஞர்களின் சிறந்த ஆய்வுகளைப் பதிவு செய்வதன் மூலம் தமிழாய்வுச் சூழலில் தனத இடத்தை தொடர்ந்து நிலைநிறுகிறது. பதிப்பாசிரியர் குழு இவ்வேளையில் இந்தப் பதிமூன்றாவது தமிழ்ப் பேராய்வின் முதலாவது பகுதியின் வெளியீட்டிற்கு துணை புரிந்த கட்டுரையாளர்கள், மதிப்பீட்டாளர்கள் ஆகியோருக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்வடைகின்றது. இத்தொகுப்பின் பதிப்புச் செலவை மனமுவந்து ஏற்றுக் கொண்ட அல்மா ஹெர்பல் நேச்சர் நிறுவனத்தில் தோற்றுனரும் தலைமை நிர்வாகியுமாகிய திருமிகு MGL. வேலாயுதம் அவர்களின் தாராள மனதை இவ்விடம் நன்றியுடன் நினைத்துப் பார்க்கின்றோம்.

**பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்**
**தலைமைப் பதிப்பாசிரியர்**
**25.12.2024**

# தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ் / Journal of Tamil Peraivu
## Vol 13 (Issue 2), December 2024


பொருளடக்கம் / Contents — பக்கம் /Page


1 **பதார்த்தகுண சிந்தாமணி புகட்டும் நல்வாழ்வுக்குரிய உணவொழுக்கம்** 15
Well Being Diet in the text Padarthaguna Chintamani
**இரா. சீதா லட்சுமி இராதாகிருஷ்ணன்** / R. Seeta Lechumi Ratha Krishnan

2 **தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களின் பேச்சுத் திறனை வளர்ப்பதில் நாடக உத்திகளின் பங்கு** 21
The role of drama techniques in developing the speaking skills of students learning Tamil as a second language
**ஆர்த்தி கிருஷ்ணமூர்த்தி** /Ārtti Kiruṣṇamūrtti
**முனைவர் த. சுந்தரராஜ்** / Dr. Sundararaj Dharma Raj

3 **தாதியத் துறையில் முஸ்லிம் பெண்களின் வகிபங்கு: ஓர் வரலாற்று மற்றும் சமகால நோக்கு** 54
The Role of Muslim Women in Nursing Sector: A Historic and Contemporary Perspective
**எம்.ஆர்.ஜே. ஸுஹைமா** / M.R.J. Suhaima
**எஸ்.எம்.எம். மஸாஹிர்** / S.M.M. Mazahir
**எம்.எம்.ஏ. அப்துல்லாஹ்** / M.M.A. Abdullah

4 **மேற்கின் அறிவுப் பாரம்பரியத்தில் 'ஸீரா நபவீய்யா': ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்** 68
'Prophetic Biography (Sirah)' in the Western Scholarship: A Historical Analysis
**அஷ்கர் அரூஸ்** / Ashker Aroos

5 **Google Translation (GT) & Human Translation (HT) வழி தமிழ்ச் சொற்றொடர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஓர் பகுப்பாய்வு** 80
Analysis on Google Translation (GT) & Human Translation (HT) on translating Tamil phrase into English Language
**கோமதி பத்துமலை** / Gomathi Batumalai
**நாகலிங்கேஸ்வரன் ஆறுமுகம்** / Nagalingeswaran Armugam

6 **கிளையும் ஆயமும் தொடர்புறும் பால்கள்** 86
Gender Related to Kilai and Aayam
**முனைவர் ச.கண்மணி கணேசன்** / Dr. S. Kanmani Ganesan

7 **கருடபுராணம் சுட்டும் கொல்லாமை நெறி ஓர் ஆய்வு** 94
Garuda Purana's Teachings on Ahimsa: A Study
**இலங்கேஷ்வரி அர்ஜூணன்** / Elangeswari Aruchunnan
**மு. இராசேந்திரன்** / M. Rajantheran
**அருண் பாலன்** / Arun Balan

8 அலைவாய்க்கரையில் புதினத்தில் பரதவா் இனவரைவியல் 103
Bharatava Ethnography in the Novel Alaiwaikaraiyil
முனைவர் த.கீதாஞ்சலி / Dr.T.Geethanjali

9 நாலடியார் பாடல்களில் தமிழ் மருத்துவம் 113
Tamil Medicine in Naladiyar
பிரேமளா விஜயன் / Premella Vijaihian
இரா. சீதாலட்சுமி இராதாகிருஷ்ணன் /R.Seeta Lechumi Ratha Krishnan

10 திருப்பாவையில் காணப்படும் திருமாலின் திருப்பெயர்கள் 120
The Deity Names of Tirumāl in Tiruppāvai
சந்துரு முத்தையா / Chandru Muthiah
சி அருளா சித்திரை / S Arulla Sitiray

11 மலேசிய தமிழ்ப்பள்ளிகளின் தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் பயன்படுத்தப்படும் ஔவையின் செய்யுள் மாணவருக்கு உணர்த்தும் வாழ்க்கை நெறி 130
Life Values Taught to Students Through Auvaiyar's Poetry Used in Tamil Language Teaching and Learning Activities in Malaysian Tamil Schools
சரஸ்வதி பெரியண்ணன் / Saraswathy Perianan

12 அட்டாங்கயோகத்தில் இயமம் நியமம் - திருக்குறளினூடான பார்வை 141
The Principle of Yama and Niyama in Attanayoga - A View Through the Tirukkural
கிஷாந்தினி திருச்செல்வம் / Kishanthiny Thiruchchelvam

13 நெருக்கடியான காலகட்டத்தில் கலை மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் இணைவு: கோவிட்-19 சூழலில் வட இலங்கையில் மெய்நிகர் நாடக ஆற்றுகைகள் 149
The Fusion of Art and ICT in Times of Crisis: Online Theatre Performances in Northern Sri Lanka in the Context of COVID-19
கலாநிதி ஜனனீ தேவானந்த் / Dr. Janani Thevananth
கலாநிதி தேவநாயகம் தேவானந்த் / Dr.Thevanayagam Thevananth

14 இன்னா நாற்பது இளையோர்க்கு வரையறுக்கும் வாழ்வியல் விழுமியங்கள் 160
The Life Values defined for youngsters in 'Iṉṉā Nāṟpatu'
சரண் சுக்லாம் ஆத்மலிங்கம் / Sharan Suklam Ahtma Lingam
முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை / Dr. Manonmani Devi M.A.R Annamalai

15 சைவ சித்தாந்த கருத்துப் பரவலாக்கத்தில் ஈழத்தவரின் இலக்கிய முயற்சிகள்: நமசிவாயம் அல்லது நான் யார் நூலை முன்வைத்து 165
The Literary Efforts of the Sri Lankan's in the Dissemination of Saiva Siddhanta Concept: Presenting Namasivayam or Nan Yaar
சின்னராஜா ரமணராஜா / Sinnarajah Ramanarajah

# பதார்த்தகுண சிந்தாமணி புகட்டும் நல்வாழ்வுக்குரிய உணவொழுக்கம்

## Well Being Diet in the text Padarthaguna Chintamani

**இரா. சீதா லட்சுமி இராதாகிருஷ்ணன்** / R. Seeta Lechumi Ratha Krishnan[1]

**Abstract**

The current human lifestyle is moving very fast in a hectic environment with the motto 'can live a life in anyway'. Humans fail to accomplish their various activities fully due to lack of time. Among them, health care and diet are noteworthy. As the saying goes in Tamil, "Painting could be done only if the wall is exit", where a man can perform his daily duties properly only if he keeps his body healthy. Diet is one of the most important health influences. Instead of eating all the available foods, knowing the nature of each food and eating it will provide a good health and life. In this way, Siddhar Theraiyar has effectively explained about advantages and disadvantages of food consummation and usage of cooking ingredients in the book called 'Padhartaguna Chintamani'. It is believed that this book may belong to the 15th century. The basic aim of this research paper is to compile and present the information related to food discipline as described in the book Padarthaguna Chintamani.

Date of submission: 2024-11-18
Date of acceptance: 2024-12-01
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name: R. Seeta Lechumi Ratha Krishnan
Email: rseeta@um.edu.my

**Keywords:** Padarthaguna Chintamani, Wellbeing, Nutrition, Siddhar Theraiyar, Diet

### 1.0. முன்னுரை

பதினெண் சித்தர்களில் மிகவும் முக்கியமானவர் சித்தர் தேரையர் ஆவார். இவரது இயற்பெயர் இராமதேவன் ஆகும். இராமதேவன் அகத்தியரின் மாணாக்கர் என்றும் அகத்தியரின் வைத்திய ஞானம் முழுவதையும் ஈடுபாட்டுடன் கற்றுத் தெளிந்தார் என்பதும் வரலாறு. காசிவர்மன் எனும் மன்னனின் காது வழியே புகுந்து, கடுமையான தலைவலியை ஏற்படுத்திய தேரை ஒன்றினை இவர் எடுத்ததால் 'தேரையர்' என்ற பெயர் பெற்றார் என அறிய முடிகின்றது (நாகராஜன், ச., 2022). சித்தர் தேரையர் பல அரிய மருந்துகளைக் கண்டறிந்து, அதன் பயன்களைப் பற்றி நூல்களாக இயற்றியுள்ளார். அவ்வரிசையில், ஒவ்வொரு பொருளிலும் அடங்கியுள்ள மருத்துவக் குணங்களைக் கண்டறிந்து, அதனை 'பதார்த்தகுண சிந்தமாணி' எனும் நூலாக வெளியிட்டுள்ளார் சித்தர் தேரையர். 'பதார்த்தம்' என்பது தாவரங்களின் உறுப்புகளான வேர், பட்டை, பிசின், சாறு, இலை, பூ, காய், விதை ஆகிய எட்டுப் பொருள்களைக் குறிப்பதாகும். இப்பொருள்கள் அனைத்தும் அறுசுவைகளான

[1]The author is a senior lecturer in the Department of Indian Studies, Universiti Malaya, Kuala Lumpur, Malaysia. rseeta@um.edu.my

இனிப்பு, கசப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கரிப்பு ஆகிய சுவைகளைக் குணமாகக் கொண்டுள்ளன. இவ்வகையான பதார்த்தங்களைச் சிந்தாமணியாய்த் தொகுத்து உரைப்பதே பதார்த்தகுண சிந்தாமணியாகும் (செல்லம், ந. & உமாமகேஸ்வரி, ச., 2021). பூர்வத்தில் சிவபெருமான் உமாதேவியாருக்கு உபதேசித்தருளிய பதார்த்தகுண சிந்தாமணியாகிய ஆயுள்வேதம் என்றும் இந்நூலுக்குப் பெருமையுள்ளது என்பதனை,

'ஆதியுமைக்கருள் செயற்பிதசிந் தாமணியை...'

*(பதார்த்தகுண சிந்தாமணி: பாயிரம்)*

எனும் செய்யுள் வரியின் மூலம் அறிய முடிகின்றது. இதன்வழி, சிவபெருமானே பதார்த்தகுண சிந்தாமணி எனும் நூலின் உட்கருத்துகளை உமாதேவிக்கு உபதேசித்துள்ளார் என்பது நிரூபனமாகின்றது. ஆகவே, பிரமிக்க வைக்கும் ஆய்வுத் தகவல்களைத் தருவதால் இந்நூல் 'அற்புத சிந்தாமணி' என்ற பெயரையும் கொண்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

1508 பாடல்களைக் கொண்ட இந்தத் தமிழ் மருத்துவ நூலில் இறைச்சி, உண்கலம், உலோகம், ஔஷதம், கஞ்சி, கடல் மீன், கடைச்சரக்கு, கற்கண்டு, காய்தானியம், கீரை, கொடி, சயனம், சருக்கரை, சாணம், சித்திரான்னம், செடி, சோறு, தயிர், தாம்பூலம், தானியம், திணை, தேன், நவரத்தினம், நீர், நெய், பஞ்ச பூதம், பதார்த்த கறி, பாகு, பாஷாணம், பாத்திர பேத வெந்நீர், பால், புசிப்பு, புணர்ச்சி, புல், புன்செய் தானியம், மதுரம், மது, மரம், மீன், மூத்திரம், மோர், வஸ்திரம், வாகனம், விசிறி, வெண்ணெய், வெந்நீர், வெல்லம் ஆகியவற்றில் உள்ள வகைப்பாடுகள் பற்றி அறிவுப்பூர்வமாக ஆராய்ந்து, அவற்றின் மருத்துவ குணங்களை மிகத் துல்லியமாகச் சித்தர் தேரையர் விளக்கியுள்ளார். அவ்வகையில், ஒவ்வொரு பொருளின் நற்குணங்களையும் பொருந்தாக் குணங்களையும் விளக்கி வந்த தேரையர், இறுதியில் உணவொழுக்கத்தைப் பற்றியும் ஆழமாக விவரித்துள்ளார்.

## 2.0. ஆய்வு அணுகுமுறை

இந்த ஆய்வுக்கட்டுரை நூலக ஆராய்ச்சி அடிப்படையில் அமைந்துள்ளது. இந்த ஆய்வின் முதன்மை நூலாக, பதார்த்தகுண சிந்தாமணி இடம்பெறுகின்றது. உணவொழுக்கம் பற்றிய ஆய்வு நூல், கட்டுரை மற்றும் அதன் தொடர்புடைய பல நூல்களை ஆராய்ந்து இவ்ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. சித்தர் தேரையர் தமது படைப்பான பதார்த்தகுண சிந்தாமணியின் மூலம் எடுத்துரைத்த உணவொழுக்கம் பற்றிய அரிய குறிப்புகளைத் தொகுத்து உரைப்பதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 3.0. கருத்துரை

இவ்வுலகில் காணப்படும் ஒவ்வொரு பொருள்களின் தன்மையை விவரிக்கும் அதே வேளையில், 'நோயணுகாவிதி' எனும் தலைப்பின்கீழ் இடம்பெற்றுள்ள ஐந்து செய்யுள்களில் காணப்படும் உணவொழுக்கம் பற்றிய குறிப்புகள் இவ்விடம் ஆய்ந்தறியப்பட்டு தொகுத்தளிக்கப்படுகின்றன.

### 3.1. பின்பற்ற வேண்டியவை

தேரையர் சித்தர் தம் பாடல்களில் மனிதர்கள் உடல் நலத்தைப் பேணுவதற்குத் தவறாமல் பின்பற்ற வேண்டிய பல செயல்களைப் பட்டியலிட்டுள்ளார். மலசலத்தை அடக்காமல் வெளியேற்றுதல், விந்துவை அதிகம் வெளியேற்றாமல் தேக்கி வைத்தல், உணவருந்தும்போது நீரைக் காய்ச்சி அருந்துதல், மோரை அதிகம் அருந்துதல், நெய்யை உருக்கி உண்ணுதல் ஆகியவற்றை மேற்கொள்பவர்களுக்கு நோய் ஏற்படாது (கிருஷ்ணசாமிநாயகர், 1907) என்பதனைத் தேரையர்,

'திண்ண மிரண்டுள்ளே சிக்க வடக்காமற்

பெண்ணின்பா லொன்றைப் பெருக்காம – லுண்ணுங்கா

னீர்கருக்கி மோர்பெருக்கி நெய்யுருக்கி யுண்பவர்தம்

பேருரைக்கிற் போமே பிணி.'

(பதார்த்த குண சிந்தாமணி : 1502)

என்று உரைக்கின்றார்.

அதைத் தவிர, பால் சார்ந்த உணவுகளை உட்கொள்ளுதல், எண்ணெய் தேய்த்துக் குளிக்கும்போது வெந்நீரில் குளித்தல், படுத்து உறங்கும்போது எப்போதும் இடது கைப்புறமாகவே ஒருக்களித்துப் படுத்தல், புளித்த தயிர் உணவை விரும்பி உட்கொள்ளுதல் ஆகிய செயல்கள் நோயைத் தடுக்கக்கூடிய செயல்களாக அமைந்துள்ளன (சண்முகசுவாமி, 1891). இதனையே தேரையர்,

'பாலுண்போ மெண்ணெய்பெறின் வெந்நீரிற் குளிப்போம்

………………………………………………………….

………………………………………………………….

இரண்டளக்கோ மொன்றைவிடோமிட துகையிற் படுப்போம்

…………………………………மூத்த தயிருண்போம்

………………………………………………………….

………………………………………………………….

நமனார்க்கிங்கேது கவை நாமிருக்கு மிடத்தே.'

(பதார்த்த குண சிந்தாமணி : 1506)

என வலியுறுத்தி கூறியுள்ளார். மேலும், ஒரு நாளைக்கு இரண்டு முறை மட்டுமே உணவு உட்கொள்ளுதல், தம் மனைவியுடன் மாதம் ஒரு முறை மட்டுமே தாம்பத்திய உறவை மேற்கொள்ளுதல், வாழைக்காயை உணவுக்குப் பயன்படுத்தும்போது பிஞ்சுக் காய்களை மட்டுமே பயன்படுத்துதல், உணவு உட்கொண்டபின் உடனே சிறிது தூரம் நடைப்பயிற்சியை மேற்கொள்ளுதல் ஆகியன நோய் ஏற்படுவதைத் தடுப்பனவாக அமைகின்றதை (காசீம் முகையதீன் ராவுத்தர், 1932),

'உண்பதிருபொழுதொழிய

…………………………………….

………………………………………………………….

பெண்கடமைத்திங்களுக்கோர் காலன்றி மருவோம்

………………………………………………………….

………………………………………………………….

வாழையிளம்பஞ்சொழியக் …………………………………….

நன்புபெறவுண்டபின் புகுறு நடையிங்கொள்ளோம்

நமனார்க்கிங்கேது கவைநாமிருக்கு மிடத்தே.'

(பதார்த்த குண சிந்தாமணி : 1507)

எனும் செய்யுள் வரிகளின் மூலம் சித்தர் தேரையர் எடுத்தியம்புகின்றார்.

அதோடுமட்டுமல்லாமல், ஆறு மாதத்திற்கு ஒருமுறை வாந்தி மருந்தையும் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை பேதி மருந்தையும் உட்கொள்ளுதல், 45 நாட்களுக்கு ஒருமுறை நசியம் செய்து கொள்ளுதல் (மூக்கிற்கு மருந்திட்டு சளி போன்ற நோய்கள் வராமல் தடுத்தல்), ஆண்கள் வாரம் ஒருமுறையாவது முகச்சவரம் செய்து கொள்ளுதல், நான்கு நாட்களுக்கு ஒருமுறை எண்ணெய் தேய்த்துக் குளித்தல்; பெண்களானவர்கள் மூன்று நாட்களுக்கு ஒருமுறை கண்ணுக்கு மையிடுதல் போன்றவற்றையும் தவறாமல் பின்பற்றுவோர் நோய்களிலிருந்து விடுபட முடியும் (ஓமியோபதித்துறை, 2007) எனத் தேரையர் பின்வரும் செய்யுள் வரிகளின் மூலம் உறுதிபடக் கூறுகின்றார்.

'ஆறுதிங்கட்கொரு தடவை மனமருந் தயில்வோம்

அடர்நான்கு மதிக்கொருக்காற் பேதியுறை நுகர்வோந்

தேறுமதியொன்றரைக்கோர் தரநசியம் பெறுவோந்

திங்களரைக்கிரண்டு தரஞ்சவளவிருப்புறுவோம்

வீறுசதுர்நாட்கொருக்கானெய் முழுக்கை தவிரோம்

விழிகளுக்கஞ்சன மூன்று நாட்களுக்கொருக்காலிடுவோம்

……………………………………………………….

நமனார்க்கிங்கேது கவை நாமிருக்கு மிடத்தே.'

*(பதார்த்த குண சிந்தாமணி : 1508)*

இதனைத் தவிர்த்து, தூக்கம், உணவு, மலசலம், புணர்ச்சி, அழுக்குத் துணி, தலையை வாரும்போது உதிரும் முடி ஆகியவற்றை மாலை வேளையில் விடுத்தல்; பசு, தெய்வம், பிதுர், ஆசிரியர் ஆகியோரை மாலை வேளையில் பூசித்தல் போன்ற செயல்களைக் கடைப்பிடிப்பதனால் நோய் அணுகாது (கிருஷ்ணசாமிநாயகர், 1907). இதனையே தேரையர்,

' … துஞ்சலுணவிருமலஞ்சையோகமழுக்காடை

வகுப்பெடுக்கிற் சிந்துகசமிவை மாலைவிடுப்போம்

வற்சலந்தெய்வம்பிதுர் சற்குருவைவிடமாட்டோம்

……………………………………………………….

நமனார்க்கிங்கேது கவைநாமிருக்கு மிடத்தே.'

*(பதார்த்த குண சிந்தாமணி : 1509)*

எனும் செய்யுளின் மூலம் விவரிக்கின்றார். அவ்வகையில், நோயற்ற வாழ்வு பெறுவதற்கு உரிய உபாயமாக மேற்கண்ட தேரையரின் உபதேசங்கள் விளங்குகின்றன என்பது இவ்விடம் வெள்ளிடைமலையாகும்.

### 3.2. தவிர்க்க வேண்டியவை

மனிதர்கள் தங்கள் உடல் நலத்தைப் பேணுவதற்கு மேற்கொள்ளக்கூடிய பல்வேறான செயல்களைப் பற்றி எடுத்துரைத்த தேரையர், தங்கள் அன்றாட வாழ்க்கையில் தவிர்க்க வேண்டிய செயல்களைப் பற்றியும் பின்வரும் செய்யுளின்வழி எடுத்தியம்புகின்றார்.

'……………………………………………………….

பகற்புணரோம் பகற்றுயிலோம்பயோதரமுமூத்த

ஏலஞ்சேர் குழலியரோடிளவெயிலும்விரும்போம்

……………………………………………………….

மூலஞ்சேர்கறி நுகரோ…………………………

முதனாளிற் சமைத்தகறிய முதெனினுமருந்தோம்

ஞாலத்தான் வந்திடினும் பசித்தொழிய வுண்ணோம்

நமனார்க்கிங்கேது கவை நாமிருக்கு மிடத்தே.'

*(பதார்த்த குண சிந்தாமணி : 1506)*

இச்செய்யுளின் மூலம் தேரையர், பகலில் புணருதல், பகல் வேளையில் தூங்குதல், கரும்பு போல் இனிப்பவர்களாக இருந்தாலும் வயதில் மூத்தப் பெண்களுடனும் நறுமணம் தரும் தலைமுடியைக் கொண்ட விலைமாதர்களுடனும் புணருதல், இளம் வெயிலில் அலைதல், மலம், சிறுநீர் போன்றவற்றை அடக்குதல், முதல்நாள் சமைத்த உணவுகளை மறுநாள் உண்ணுதல், பசிக்காத போது உண்ணுதல் போன்ற செயல்களைத் தவிர்க்க வேண்டும் (சண்முகசுவாமி, 1891) எனச் சித்தர் தேரையர் எச்சரிக்கை விடுக்கின்றார்.

மேலும், ஒருநாளைக்கு மூன்று முறை உண்ணுதல், பகலில் உண்டபின் உறங்குதல், உணவு உட்கொள்ளும்போது தாகத்திற்கு நீர் அருந்துதல், கருணைக்கிழங்கைத் தவிர மற்ற கிழங்கு வகைகளை உண்ணுதல், முற்றிய வாழைக்காயைச் சமைத்து உண்ணுதல் போன்றவை உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் என்பதனால் இவற்றை முற்றிலும் தவிர்ப்பது நன்மை பயக்கும் (காசீம் முகையதீன் ராவுத்தர், 1932) எனத் தேரையர்

தெளிவுபடுத்துகின்றார். இதனையே அவர்,

'............................ மூன்று பொழுதுண்ணோம்

உறங்குவதிராவொழியப் பகலுறக்கஞ் செய்யோம்

............................................................

பெருந்தாகமெடுத்திடினும் பெயர்ந்து நீரருந்தோம்

மண்பரவுகிழங்குகளிற் கருணையன்றிப் புசியோம்

............................ கனியருந்தல் செய்யோம்

............................................................

நமனார்க்கிங்கேது கவைநாமிருக்கு மிடத்தே.'

*(பதார்த்த குண சிந்தாமணி : 1507)*

எனும் செய்யுள் வரிகளின் மூலம் எடுத்துரைக்கின்றார். தவிர, மயக்கும் நறுமணம் வீசும் கந்தம், பூக்கள் ஆகியவற்றை நள்ளிரவு நேரத்தில் நுகரக்கூடாது (ஓமியோபதித்துறை, 2007) என்பதனை,

'... நாறுகந்தம் புட்பமிவை நடுநிசியின் முகரோம்

நமனார்க்கிங்கேது கவை நாமிருக்கு மிடத்தே.'

*(பதார்த்த குண சிந்தாமணி : 1508)*

எனும் பாடல் வரிகளின் மூலம் சித்தர் குறிப்பிடுகின்றார். மாத விலக்கான பெண்கள், ஆடு, கழுதை போன்றவை வரும் பாதைகளில் எழும் புழுதி உடல்மேல் படும்படி நெருங்கி நடந்து செல்லுதல், இரவில் விளக்கு வெளிச்சத்தில் நிற்பவர் நிழலிலும் மர நிழலிலும் நிற்றல், உணவு உட்கொண்ட உடனே உடலுறவு கொள்ளுதல், மற்றவர்களின் கை உதறும்போது அவர்களது நகத்திலிருந்து விழும் தண்ணீரும், குளித்துத் தலை துவட்டும்போது உதிரும் தண்ணீரும் இருக்கும் இடத்தில் நடத்தல் (கிருஷ்ணசாமிநாயகர், 1907) ஆகிய செயல்களைத் தவிர்த்தல் உடலுக்கு நலம் தரும் என்பதனைப் பின்வரும் செய்யுள் வரிகளின் மூலம் சித்தர் தேரையர் விவரிக்கின்றார்.

'பகத்தொழுக்குமாத சரசங் கரந்துடைப்பமிவைத்தூட்

படநெருங்கோந்தீபமைந்தர் மரநிழலில் வசியோஞ்

சுகப்புணர்ச்சியசன வசனத்தருணஞ் செய்யோந்

............................................................

............................................................

............................................................

நகச்சலமுமுளைச்சலமுந் தெறிக்குமிடமணுகோம்

நமனார்க்கிங்கேது கவைநாமிருக்கு மிடத்தே.'

*(பதார்த்த குண சிந்தாமணி : 1509)*

இதுகாறும், சித்தர் தேரையர் வலியுறுத்தியுள்ள ஒழுங்கங்களை வழுவாது கடைப்பிடித்து வருவோர், நலமிகு நல்வாழ்வு பெறுதலும் அவ்வாறல்லாத மக்கள் துன்பமிகு வாழ்க்கையை வாழ நேரிட்டு கடைநிலை எய்துவதும் உறுதி.

### 4.0. முடிவுரை

பதார்த்தகுண சிந்தாமணி எனும் இந்நூலில், சித்தர் தேரையர் பொருள்களின் குணங்களை விளக்கியதோடில்லாமல், அன்றாட வாழ்க்கையில் மனிதர்கள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய செயல்களையும் தவிர்க்க வேண்டிய செயல்களையும் மிக அழகாகப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். தேரையர் கூறிய நல்வழியில் செல்வோருக்கு எந்தவொரு நோயும் அண்டாது, பல்லாண்டு காலம் உடல் நலத்துடன் சிறப்பாக வாழ முடியும் என்பது கண்கூடு. ஆக, தேரையர் சித்தர் எடுத்துரைத்த ஒழுக்கங்களை அறிந்து கொண்டு நமது அன்றாட வாழ்க்கைமுறையை மாற்றியமைத்தால், ஆரோக்கிய வாழ்வெய்தி இப்பூவுலகில் நீண்ட காலம் வாழ்வது திண்ணம்.

**References**

(2007). *Tamiḻ Maruttuva Nūl Varicai – 7: Patārttakuṇa Cintāmaṇi*. Chennai: Department of Indian Medicine and Homeopathy. [(2007). *தமிழ் மருத்துவ நூல் வரி - 7: பதார்த்தகுண சிந்தாமணி*. சென்னை: இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை.]

(2012, November 22*). Patārtta kuṇa cintāmaṇi - kālattiṉ vāṭā malar.*. Retrieved from https://sundarjiprakash.blogspot.com/2012/11/blog-post_2455.htm. [(2012, நவம்பர் 22). *பதார்த்த குண சிந்தாமணி - காலத்தின் வாடா மலர்*. Retrieved from https://sundarjiprakash.blogspot.com/2012/11/blog-post_2455.htm.]

(2014, April 30). *Patārttakuṇa cintāmaṇi - uṇaviṉ oḷiviḷakku. Ilakkaṇat tēṟal*. Retrieved from http://ilakkanatheral.blogspot.com/2014/04/blog-post_30.html. [(2014, ஏப்ரல் 30). *பதார்த்தகுண சிந்தாமணி - உணவின் ஒளிவிளக்கு. இலக்கணத் தேறல்*. Retrieved from http://ilakkanatheral.blogspot.com/2014/04/blog-post_30.html.]

(2021, January 13). *Nōykaḷ aṇṭāmal irukka vēṇṭumā? Tēraiyar cittar kūṟum rakaciyam. K7 Herbal Medicine Store.* Retrieved from https://siddham.in/archeological-findings-sirka-zhi-siddha-medicine. [(2021, ஜனவரி 13). நோய்கள் அண்டாமல் இருக்க வேண்டுமா? தேரையர் சித்தர் கூறும் ரகசியம். *K7 Herbal Medicine Store*. Retrieved from https://Siddham.In/archeological-findings-sirka-zhi-siddha-medicine.]

Chellam, N. & Uma Mageshwari, S. (2021). Uṇavē Maruntu – Paṇṭaittamiḻar Vāḻvai Muṉvaittu, Makākavi Pārati Pārvaikaḷ. *International Research Journal of Tamil, 2* (3), 7-21.

Kassim Mugaiyatheen Ravuter. (1932). *Aṟputa Cintāmaṇiyeṉṉum Patārttakuṇa Cintāmaṇi: Mūlamum Uraiyum*. Chennai: Thirumagalvilasa Achiyanthirasalai. [காசிம் முகையாதீன் ராவுதர். (1932). *அற்புத சிந்தாமணியேனும் பதார்த்தகுண சிந்தாமணி: மூலமும் உரையும்*. சென்னை: திருமகள் விலாச அச்சியந்திரசாலை.]

Krishnasaminayagar. (1907). *Muṉiccirēṭṭarkaḷ Aruḷicceyta Aṟputacintāmaṇi Eṉṉum Patārttakuṇa Cintāmaṇi Mūlamum – Uraiyum*. Madras: Son of India Achiyanthirasalai.

Nagarajan, S. (2002). *Nōyillā Vāḻvu Peṟa Cila Irakaciyaṅkaḷ*. Pustaka.Co. [நாகராஜன், எஸ். (2002). நோயில்லா வாழ்வு பெற்ற சில இரகசியங்கம். புஸ்தகா. கோ.]

Sanmugaswami. (1891). *Muṉivarkaḷ Aruḷicceyta Aṟputa Cintāmaṇiyeṉṉum Patārttakuṇacintāmaṇi Mūlamum Uraiyum.* Kolapanjeri: Kalaimathuvilakka Achukoodam. [*சண்முகசுவாமி*. (1891). *முனிவர்கள் அருளிச்செய்த அற்புத சிந்தாமணியேனும் பதார்த்தகுண சிந்தாமணி: மூலமும் உரையும். கோலப்பஞ்சேரி: கலைமத்துவிளக்க அச்சுக்கூடம்.*]

# தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களின் பேச்சுத் திறனை வளர்ப்பதில் நாடக உத்திகளின் பங்கு

## The role of drama techniques in developing the speaking skills of students learning Tamil as a second language

**ஆர்த்தி கிருஷ்ணமூர்த்தி** / Ārtti Kiruṣṇamūrtti[1]
**முனைவர் த. சுந்தரராஜ்** / Dr. Sundararaj Dharma Raj[2]

Date of submission: 2024-11-18
Date of acceptance: 2024-12-01
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name: R. Seeta Lechumi Ratha Krishnan
Email: rseeta@um.edu.my

**Abstract**

Today's teaching and learning is witnessing many changes. It is the teacher's responsibility to teach the language in a joyful and purposeful way. Speaking skills and verbal communication skills are used to share constructive ideas. Therefore, speech is essential for a language to survive. The main objective of the Ministry of Education is to establish Tamil as a living language in Singapore. Therefore, the main objective of Tamil language education is for Tamil learners to communicate with each other fluently and without hesitation in Tamil Language. Studies show that drama has the power to develop students' learning abilities. Drama techniques such as role play, hot seat etc. are recommended in the Tamil language syllabus to develop speaking skills and verbal communication among students. Therefore, the purpose of this study is to understand the role of drama strategies in developing the speaking skills of students learning Tamil as a second language. Interviews were conducted with parents and teachers to understand the role of drama strategies in developing speaking skills of students learning Tamil as a second language in Singapore. This study will be useful for preschool teachers and primary school teachers who want to incorporate drama strategies into their teaching. Different drama techniques can provide benefits such as joyful learning, developing speaking skills, developing creative and critical thinking, and many more.

**Keywords:** Drama strategies, Speaking skills, Tamil language education, Second language acquisition, Verbal communication, Pedagogical techniques, Language fluency

[1]The author is a graduate research student in the National Institute of Education, Nanyang Technological University, Singapore.

[2]The author is a Lecturer, National Institute of Education, Nanyang Technological University, Singapore. sundarasu@gmail.com

## முன்னுரை

"கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி." என்று புறப்பொருள் வெண்பா மாலை என்ற புற இலக்கண நூல் கூறுகின்றது. இதிலிருந்து உலகின் மூத்த மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்று என்பதை உணரலாம். தமிழ் என்ற சொல் இனிமையும், நீர்மையும் என்னும் பொருள்களை உடையது. இத்தகைய தொன்மையான மொழி 2500 ஆண்டுகளுக்கும் மேலான பழமையும் பாரம்பரியமும் கொண்டுள்ளது. இன்று, இந்தியாவில் மட்டுமில்லாமல் சிங்கப்பூர், இலங்கை, மலேசியா போன்ற நாடுகளிலும் தமிழ் மொழி ஆட்சி மொழியாகப் பேசப்பட்டு வருகிறது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று புறநானூற்றில் கூறியது படி உலகில் உள்ள அனைத்து மக்களுடனும் ஒருங்கிணைந்து வாழ அறிந்திருப்பது அத்தியாவசியமாகும்.

உலகமயமாக்கம் இதனை உறுதி செய்யும் விதமாகத் திகழ்கிறது. எனவே, ஆங்கிலம் என்பது நமது சர்வதேச மொழியாகக் கருதப்படுகிறது. இருந்தாலும் தமிழ் மொழி சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படுகிறது. இன்று, ஆங்கில மொழி மற்றும் மேற்கத்தியக் கலாச்சாரத்தின் தாக்கத்தினால் பல இளையர்கள் தங்கள் தாய்மொழியையும் பாரம்பரியத்தையும் மறந்துவிடுகிறார்கள். தமிழ் மொழியின் இலக்கியப் பாரம்பரியத்தை மகிழ்வூட்டும் வகையில் கற்பிப்பது தமிழ் ஆசிரியர்களின் கடமையாகும். இதனை, மனதில் கொண்டு சிங்கப்பூர் தமிழ் மொழி பாடத்திட்டத்தில் நாடக உத்திகளை இணைத்துள்ளனர். இவ்வாறு, தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களின் பேச்சுத் திறனை வளர்ப்பதில் நாடக உத்தியின் பங்கைப் பற்றி இந்த ஆய்வு விவரிக்கிறது.

## பின்னணி

தாய்மொழி என்பது ஒருவரின் கலாச்சார அடையாளமாகும். ஓர் இனத்தவரைக் குறிக்கும் குறியீடாகவும், மனிதர்களை இணைக்கும் உறவுச் சங்கிலியாகவும் மொழி திகழ்கிறது. சிங்கப்பூர் பல இன மக்கள் வாழும் நாடு. இங்குத் தாய்மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சிங்கப்பூரில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் தாய்மொழிகள் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படுகின்றன. சிங்கப்பூர் பள்ளிக்கல்வியில் மாணவர்கள் அனைவரும் முதலாவதாக ஆங்கில மொழியைக் கட்டாயமாகக் கற்க வேண்டும். இரண்டாவதாகச் சீனம், மலாய், தமிழ் ஆகிய தாய்மொழிகளில் ஒன்றைக் கட்டாயம் கற்க வேண்டும். உயர்நிலை முடிகின்ற வரை அந்நிலை உள்ளது. மாணவர்கள் தங்கள் தாய்மொழி மூலம் "கலாச்சாரம், பாரம்பரியம் ஆகியவற்றை அறிந்துகொள்வதோடு உலகெங்கிலும் உள்ள சமூகங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும்" என்று கல்வி அமைச்சு விரும்புகிறது (கல்வி அமைச்சு, 2014). நமது பேச்சு, நம் ஆளுமையை வெளிக்காட்டும். ஒருவருக்குச் சிந்திக்கும் எண்ணம் தெளிவாக இருந்தாலும், அதை வெளிப்படுத்தத் தெரிந்திருப்பது அவசியமாகும் (சம்பத்குமார், 2016). பேச்சுத் திறனும் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம் என்னும் திறனும் சிந்திக்கும் கருத்துகளைப் பகிர்வதற்குப் பயன்படுகின்றன. ஒரு மொழிக்கு அடிப்படையானது பேச்சுதான். எனவே, ஒரு மொழி வாழும் மொழியாக நிலைத்திருக்கப் பேச்சு அத்தியாவசியமாகும். சிங்கப்பூரில் தமிழ் மொழியை வாழும் மொழியாக நிலைபெறச் செய்வதே கல்வி அமைச்சின் முக்கிய நோக்கமாகும். எனவே, தமிழ் பயிலும் மாணவர்கள் ஒருவருடன் ஒருவர் சரளமாகவும் தயக்கமின்றியும் உரையாடுவது தமிழ் மொழிக் கல்வியின் முக்கிய இலக்காகும் (கல்வி அமைச்சு, 2014).

## முத்தமிழ்

ஒரு மனிதன் தன்னுடைய எண்ணங்களையும் கருத்துகளையும் வெளியிடுவதற்குப் பயன்படுத்தும் கருவியே மொழி எனப்படும். தமிழ் மொழி இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவுகளைக் கொண்டதால் இதனை 'முத்தமிழ்' எனப் பெயரிட்டு அழைத்தனர் நம் முன்னோர்கள். "இலக்கியமும் இலக்கணமும் அடங்கியது இயற்றமிழ்; பண்ணோடு கூடிய

பாடல்களையுடையது இசைத்தமிழ்; ஒரு கதையை அல்லது செயலை உரிய கதை மாந்தர்களைக் கொண்டும், உரையாடல்களை அமைத்தும், பாடல்களைப் பாடியும் மெய்ப்பாட்டுடன் பிறருக்கு நடித்துக் காட்டுவது நாடகமாகும்" என்று முத்தமிழுக்கு இலக்கணம் கூறியுள்ளார் கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி (1979). மொழியை இசையுடனும், நாடகத்துடனும் இணைத்துப் பார்க்கும் கண்ணோட்டம் பிற மொழிகளில் காணப்படாத சிறப்பு தமிழ் மொழியில் உண்டு. இவ்வாறு, தமிழ் அறிஞர்கள், தங்கள் உணர்வுகளையும் உலக இயல்புகளையும் விளக்கும் நிலையில் எழுதிய இயற்றமிழும், பாடலாசிரியர்கள் பண்ணுடன் பாடிய இசைத் தமிழும், கலைஞர்கள் வளர்த்த நாடகத் தமிழும் தமிழ் மொழிக்குச் சிறப்பைத் தந்தன.

## தமிழ் நாடகம்

தமிழ் நாடகம் தொன்மையானது. சங்கக் காலத்திற்கு முன்பே தமிழில் நாடகங்கள் இருந்திருக்கக் கூடும். தொல்காப்பியத்தில் நாடகம் பற்றிய குறிப்புகள் கிடைப்பதோடு அதற்கு முன்னர் வழக்கில் இருந்த தொல்பழம் நூல்களிலும் நாடகம் பற்றிய செய்திகள் இருந்ததாக மு.தங்கராசு (1989) குறிப்பிட்டுள்ளார். நீண்ட காலமாக நாடகங்கள் நம்மிடையே இருந்தன என்பதற்கு அடையாளங்களும் சான்றுகளும் பரவலாக உள்ளன.

அவற்றைப் பற்றிய குறிப்புகளை இலக்கியங்கள் வழி உணர முடியும். கதை தழுவிய கூத்தே பழங்காலத்தில் நாடகமாகக் கருதப்பட்டது (இராமசுவாமி et.al, 1999). இதை 'நடன நாடகம்' என்றும் அழைப்பர். தமிழ் நாடக வளர்ச்சி நிலைகளைச் சிலப்பதிகாரத்தில் காணலாம். இந்திர விழா முடிவில் மாதவி ஆடிய அல்லியம், கொடுகொட்டி, குரவை, குடக்கூத்து முதலிய பதினோரு ஆடல்களும் நடன நாடகங்கள்தான். இதனைத் தொடர்ந்து, குறவஞ்சி, பள்ளு, நொண்டி என்று தமிழ் நாடக இலக்கியம் வளர்ச்சி பெற்றது. இவ்வாறு, நாடகத்தில் இயற்றமிழும் இசைத்தமிழும் இணைந்திருக்கக் காண்கிறோம். எனவே நாடகம் என்பது முத்தமிழும் பொருந்திய ஒன்றாகும். இதிலிருந்து, தமிழ் இலக்கியத்தில் நாடக இலக்கியம் பெறும் முக்கியத்துவத்தை அறியலாம்.

பம்மல் சம்பந்த முதலியார், தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள், பரிதிமார் கலைஞர் ஆகிய மூவரும் மேடை நாடக முன்னோடிகள் ஆவர் (தங்கராசு,1989). இவர்கள் தமிழ் நாடகங்கள் வழி புராணச் செய்திகளையும் சமயத்தையும் மக்களிடையே பரப்பினர். பதினெட்டாம் நூற்றாண்டு வரை பாடல்கள் வடிவில் மட்டும் தோன்றிய நாடகங்களில் வசனங்களும் இடம் பெறத் தொடங்கின. பிறகு, 'அமெச்சூர்' போன்ற பல தொழில்முறை நாடகக் குழுக்களும் சபைகளும் தோன்றி நாடகக் கலைக்கு உரமூட்டின (இராமசுவாமி et.al, 1999). இருபதாம் நூற்றாண்டு 'நாடகத் தமிழின் பொற்காலம்' என்று அழைக்கப்பட்டது. பெரியவர்கள் மட்டும் இல்லாமல் சிறுவர்களையே கலைஞர்களாகக் கொண்ட பல குழுக்கள் இந்த நூற்றாண்டில் தோன்றின. 1910-ஆம் ஆண்டில் 'சமரசச் சன்மார்க்க நாடகச் சபை' என்னும் சிறுவர் நாடகக் குழு தோன்றியது. இக்காலக்கட்டத்தில் பல சமுதாய நாடகங்கள், சீர்திருத்த நாடகங்கள், இலக்கிய நாடகங்கள், கற்பனை நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள் முதலியவை மேடையேறின (அழகப்பன், 1987). இவ்வாறு, இயலும், இசையும் கொண்ட நாடகத் தமிழ் செவிக்கு மட்டும் இல்லாமல் கண்ணுக்கும் இன்பம் தரும் வகையில் அமைந்தன.

## தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் நிலை

பல்லின, பன்மொழிப் பண்பாட்டு சூழலைக் கொண்ட நாட்டில் வாழும் மக்கள் இடையே புரிந்துணர்வும் சமூக ஒருமைப்பாடும் அத்தியாவசியமாகும். அவ்வகையில் சிங்கப்பூர் தொடக்கக் காலத்திலிருந்தே ஒரு பன்மொழி சமூகமாக இருந்து வருகிறது. ஒவ்வொருவரும் தங்களுடைய சொந்தச் சமூகத்திற்கு அப்பாலும் செயல்பட்டுப் பொதுவான தேசிய அடையாளத்தை உருவாக்க வேண்டும் என்று சிங்கப்பூர் முன்னோடித் தலைவர்கள் விரும்பினர் (தமிழ் முரசு, 2021). சிங்கப்பூரர்கள் தங்களுடைய

கலாச்சார வேர்களைப் போற்றிப் பாதுகாக்க உதவும் நோக்கத்தில் இருமொழி கொள்கை உருவாக்கப்பட்டது. பல்லினச் சமுதாயத்தில் ஒருமைப்பாடு நிலைக்க அனைவரும் தங்கள் தாய் மொழியோடு மற்றொரு மொழியையும் பேச வேண்டும். எனவே, சிங்கப்பூர் அரசாங்கப் பள்ளிகளில் சர்வதேச மொழியான ஆங்கிலம் முதல் மொழியாகவும் தாய்மொழிகள் இரண்டாம் மொழியாகவும் கற்பிக்கப்படுகின்றன. சிங்கப்பூர் பள்ளிகளில் இரண்டாம் மொழியாக வழங்கப்படும் 3 அதிகாரப்பூர்வத் தாய்மொழிகளில் தமிழ் மொழியும் ஒன்றாகும். உலகின் தொன்மையான மொழியான தமிழ் சிங்கப்பூரின் ஆட்சிமொழிகளில் ஒன்றாக அரியணையில் வீற்றிருப்பது தமிழர்களின் பெருமை என்றே கூறலாம்.

### மகிழ்வூட்டும் கற்றல் கற்பித்தல்

முற்காலத்தில் மாணவர்கள் குருகுலத்தில் கற்றனர். பிறகு, குருகுலக் கல்வி முறையான திண்ணைப் பள்ளிகளாகப் பரிணமித்தது. இன்று, மேற்கத்தியத் தாக்கத்தினால் மாணவர்கள் கல்வி கற்க முழுமையான தனிக்கட்டிட அமைப்பு பெற்ற பள்ளிக்கூடத்திற்குச் செல்கின்றனர். பல பள்ளிகளில் தமிழ் மொழிப் பாடங்கள் ஆசிரியர்களை மையமாகக் கொண்ட பழமையான முறையிலேயே கற்பிக்கப்படுகின்றன. எனவே, இன்றைய நவீனகாலக் கட்டத்தில் மாணவர்களின் பங்களிப்பும், படைப்பாற்றலும் கேள்விக்குறியாகவே உள்ளன என்பது முனைவர் ஆனந்த்அரசு மற்றும் திரு பாபுவின் கருத்தாகும் (2017). இந்த நிலையை மாற்றுவது தமிழ் ஆசிரியர்களின் கடமையாகும். மாணவர்கள் தமிழ்மொழிக் கற்றலில் ஆர்வத்தோடும், நவீனமுறையிலும் ஈடுபட, ஆசிரியர்களால் சில கலைச்செயல்பாட்டுப் பயிற்சி முறைகள் கையாளப்பட வேண்டும் (ஆனந்த்அரசு et.al, 2017). அவ்வாறு, செய்தால் மாணவர்கள் சிறந்த மொழிப் புலமை பெறுவர்.

சிங்கப்பூர் கல்வி அமைச்சு "மகிழ்வூட்டும் கற்றல்" என்ற இலக்கை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறது (சித்திகா, 2022). ஆசிரியர்களும் பெற்றோர்களும் தமிழ் மொழியை வெறும் தேர்வுப்பாடமாகப் பார்க்கக்கூடாது. மாணவர்கள் ஒவ்வொரு நாளும் பள்ளிக்குச் செல்லும் போதும் பள்ளியிலிருந்து வீட்டுக்குத் திரும்பும்போதும் ஆர்வத்துடன் அதை எதிர்பார்த்திருக்க வேண்டும். அந்த ஆவலைத் தூண்டுவது ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் கடமையாகும். பிள்ளைகள் தமிழ் வகுப்புகளில் தமிழ் மொழி மட்டும் இல்லாமல் தமிழர்களின் பண்பாடு, கலாச்சாரம், பழக்க வழக்கங்கள் முதலியவற்றையும் கற்றுக்கொள்கிறார்கள். எனவே, தமிழ் வகுப்பறை உயிரோட்டம் நிறைந்த, அனுபவப் பாடங்கள் கற்பிக்க வழிவகுக்கும் சூழலாக அமைந்திருக்க வேண்டும். இதற்குத் துணை புரியும் வகையில் பல பாட வளங்களும் பயிற்சிக் கருவிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் தமிழ் மொழியை மகிழ்ச்சியாகவும் ஆர்வத்தோடும் கற்றுக்கொள்ள ஆசிரியர்கள் கற்பித்தலை அன்றாட வாழ்க்கையோடு இணைத்தும் மாணவர்களின் மனம் கொள்ளும் வகையிலும் கற்பிக்க வேண்டும். அதற்கு, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஏதுவான புறச் சூழலையும் அகச்சூழலையும் அமைத்துத் தர வேண்டும் (சித்திகா, 2022).

### ஆய்வின் முக்கியத்துவம்

சிங்கப்பூரில் தமிழ் மொழி அதிகாரப்பூர்வத் தாய்மொழிகளுள் ஒன்றாக இருந்தாலும் மக்களின் தொடர்பு மொழியாக ஆங்கிலமே இருக்கிறது. சிங்கப்பூரில் தமிழ் மொழி வளர்ச்சிக்காகப் பல வளங்களும் வாய்ப்புகளும் அரசாங்க வழங்கி வருகிறது. ஆனால், சிங்கப்பூரில் வாழும் பெரும்பாலான தமிழர்கள் ஆங்கில மொழியைத்தான் முதன்மை மொழியாகப் பயன்படுத்துகிறார்கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன. கொள்கை ஆய்வுகள் நிறுவனம் இனம், மொழி, சமயம் குறித்து ஓர் ஆய்வறிக்கையை 2020-ஆம் ஆண்டு வெளியிட்டது. அதில் பிற இனத்தவர்களுடன் ஒப்பிடும்போது தமிழர்கள் தமிழ் மொழியை விட ஆங்கில மொழியில்தான் அதிகப் புலமை கொண்டுள்ளனர் என்பது தெரியவந்தது. சிங்கப்பூர் பொது இடங்களான போக்குவரத்து

நிலையங்கள், விமான நிலையங்கள், நூலகங்கள், வங்கிகள் முதலிய இடங்களில் தமிழ் மொழி தெரிவுகள் மற்றும் அறிவிப்புகள் வழங்கப்படுகின்றன. இருந்தாலும், சிங்கப்பூர் இந்தியர்களில் 40 விழுக்காட்டினர் ஆங்கிலத்தை முதன்மை மொழியாகக் கருதுகின்றனர் (Mathews et al., 2020). நன்கு வடிவமைக்கப்பட்ட கல்வி முறை இருந்தாலும் தமிழ்ப் புழக்கம் குறைந்து வருவது வருத்தம் அளிக்கக்கூடியதாகும். இதற்கு முக்கியக் காரணம் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்றாலும் பள்ளி கூடத்திற்கு அப்பால் அதைப் பயன்படுத்தாத ஒரு நிலையே ஆகும்.

இன்று பிள்ளைகளும் பெற்றோர்களும் பள்ளிக்கூடங்களில், வேலை இடங்களில், பொது இடங்களில் பேசும் தொடர்பு மொழியான ஆங்கிலத்தை இல்லத்திலும் பேசுகிறார்கள். பெற்றோர்களுக்குத் தமிழ் மொழி நன்கு தெரிந்தாலும் குழந்தைகளுக்கு நாம் சொல்வது இன்னும் எளிதில் புரியும் என்று எண்ணி ஆங்கிலத்தில் பேசுவதைப் பழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். சில இல்லங்களில் இனக் கலப்புத் திருமணம் புரிந்த பெற்றோரும் உண்டு. பெற்றோரிடையே வேறுபட்ட தாய்மொழிகள் இருக்கும் சூழலில் அவர்களது தொடர்பு மொழி ஆங்கிலமாகத்தான் இருக்கும். இதனால், பிள்ளைகள் தொடர்ந்து ஆங்கிலத்தைக் கேட்டு அதில் மட்டும் தான் பேசுகிறார்கள். 2020-ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் சிங்கப்பூரில் இந்தியர்கள் 9 விழுக்காட்டினர். அதில் 2.6 விழுக்காட்டினர்தான் தமிழர்கள். தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகள் பேசும் இல்லங்களிலிருந்தும் பிள்ளைகள் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகப் பயில்வார்கள்.

எனவே, சிங்கப்பூர் தமிழ் வகுப்புகளில் பலதரப்பட்ட சூழல்களிலிருந்தும் மொழி திறன்களிலிருந்தும் மாணவர்கள் இருப்பார்கள். இவ்வாறு, ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவரின் மொழித் தேவைகளுக்கேற்பப் பொருத்தமான முறையில் பாடத்திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். பிள்ளைகள் தமிழ் மொழியில் எழுதவும் பேசவும் விருப்பத்துடன் பயிற்சி செய்ய வேண்டும். அச்சூழலை அமைத்துக் கொடுக்கும் பொறுப்பு ஆசிரியர்களுடையதாகும். மொழி வளர்ச்சிக்கு அடிப்படையானது பேச்சுத் திறன். பேச்சுத் திறனை வளர்க்கப் பரிந்துரைக்கப்படும் நடவடிக்கைகளில் நாடக உத்திகளும் ஒன்று. எனவே, மாணவர்கள் சரளமாகவும் தயக்கமின்றியும் தமிழில் பேச நாடக நடவடிக்கைகள் ஒரு கருவியாகப் பயன்படும். இந்த ஆய்வின் வழி தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகப் பயிலும் மாணவர்களின் மொழி வளர்ச்சிக்கு நாடக உத்திகள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை அறிய வேண்டும். அப்போதுதான் கற்றல் கற்பித்தலில் நாடக உத்திகளை இணைப்பது நீண்ட காலப் பயன் தரும் வகையில் அமையுமா? என்பதை அறிந்துகொள்ள முடியும்.

### ஆய்வின் நோக்கம்:

இன்றைய கற்றல் கற்பித்தல் பல மாற்றங்களைக் கண்டு வருகின்றன. மாணவர்களுக்கு மொழியை மகிழ்வூட்டும் வகையிலும் பயனுள்ள வகையிலும் கற்பிப்பது ஆசிரியர்களின் கடமையாகும். ஒருவர் ஒரு மொழியில் தன்னம்பிக்கையுடன், தயக்கமின்றி, சரளமாகப் பேச அந்த மொழியில் ஆர்வமும் திறமையும் இருக்க வேண்டும். கல்வி அமைச்சின் 2015 தமிழ் மொழி பாடத்திட்டத்தில் பாகமேற்று நடித்தல், முதன்மை இருக்கை முதலிய நாடக உத்திகள் பேச்சு திறனையும் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்தையும் வளர்க்கப் பரிந்துரைக்கப்படுகின்றன. எனவே, தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களின் பேச்சுத் திறனை வளர்ப்பதில் நாடக உத்திகளின் பங்கை அறிவதே இந்த ஆய்வின் நோக்கமாகும். எனது ஆய்வுக் கட்டுரை பின்வரும் ஆராய்ச்சி கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் வகையில் அமையும்.

1. தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் நாடக உத்திகளை இணைப்பதன் நீண்ட காலப் பயன் என்ன?

2. தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்கள் எதிர்கொள்ளும்

சவால்களை நாடக உத்திகள் எவ்வாறு தீர்த்து வைக்கின்றன?

3. கற்றல் கற்பித்தலில் நாடக உத்திகளைப் பயன்படுத்துவதில் ஏதேனும் சவால்கள் உள்ளனவா?

## தொடர்பு நூல் ஆய்வு: சிங்கப்பூரில் தமிழர்களும், தமிழ் இலக்கியமும்

சிங்கப்பூர் தென்கிழக்காசியாவில் உள்ள ஒரு சிறு தீவு. அதன் பரப்பளவு 715.8 சதுரக் கிலோ மீட்டர். அதன் மக்கள் தொகை 5.69 மில்லியன். இவர்களில் சீனர்கள் 74.3%, மலாய்க்காரர்கள் 13.5%, இந்தியர்கள் 9%, ஏனையோர் 3.2%. இந்தியர்களில் 65% தமிழர்கள். ஏனையோரில் மலையாளிகள், தெலுங்கர்கள், குஜராத்திகள், பஞ்சாபியர்கள் முதலியோர் அடங்குவர் (COP, 2020). சிங்கப்பூருக்கு வந்த இந்தியர்களில் பெரும்பாலோர் தமிழர்கள்தான். 1819-ஆம் ஆண்டில் பினாங்கிலிருந்து வந்த நாராயணபிள்ளையும் ஏனைய தமிழர்களுமே, தமிழ் இந்நாட்டில் வழங்கக் காரணமாவர் (திண்ணப்பன், 1993). பிறகு, தமிழர் பலர் சிங்கப்பூரில் பல்வேறு பணிகளைச் செய்யக் கொண்டுவரப்பட்டனர். எனவே, தமிழர்கள் சிங்கப்பூரிலேயே தங்கி வாழத் தொடங்கினர். சிங்கப்பூர் போல் பிற நாடுகளிலும் தமிழ் மொழி இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்பட்டாலும் சிங்கப்பூரில் தமிழ் மொழிக்கு ஒரு தனி மரியாதை உண்டு. இலக்கியம் என்பது ஒரு நாட்டின் சமுதாய ஆவணமாகத் திகழ்கிறது. ஒரு தனி மனிதனையும் சமூகத்தையும் இணைக்கும் கருவியாக இலக்கியத்தைக் காணலாம். சிங்கப்பூரில் மலர்ந்த சிறுகதை, கவிதை, நாவல், நாடகம் ஆகிய இலக்கிய வடிவங்கள், சிங்கப்பூர்ப் பின்னணியைச் சித்திரிக்கும் வகையில் அமைந்திருந்தன. 1870களில் சிங்கப்பூரில் தமிழ் அச்சகங்கள் நிறுவப்பட்டன. அப்பொழுது உருவாகிய செய்தித்தாள்கள் சிங்கப்பூரின் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டன. 'சிங்கை நேசன்', 'தமிழ் முரசு', 'தமிழ் மலர்', 'மலாயா நண்பன்', 'தமிழ் நேசன்', முதலிய தமிழ் இதழ்கள் தோன்றின. இதனால், தமிழ் எழுத்தாளர்களும் படைப்புகளும் அதிகரித்தன.

இன்று, 'தமிழ் முரசு' என்னும் செய்தித்தாள் மட்டுமே உள்ளது. சிங்கப்பூரில் உள்ள தமிழ் வானொலி நிலையமான ஒலி 968 என்பது இருபத்து நான்கு மணிநேரத் தமிழ் ஒலிபரப்பினைச் செய்து வருகிறது. தொலைக்காட்சிகளிலும் நாள்தோறும் கணிசமான அளவில் தமிழ் ஒளிபரப்பினைச் செய்து வருகிறது. இவற்றின் வாயிலாகத் தமிழ் மொழியும் இலக்கியமும் சிங்கப்பூரில் நல்ல வளர்ச்சி கண்டுள்ளன.

## சிங்கப்பூரில் தமிழ் நாடகம்

நாடகம் என்னும் சொல்லை நாடு + அகம் என்று பிரிக்கலாம். இதில், 'நாடு' என்னும் சொல் நாட்டில் வாழும் மக்களைக் குறிக்கின்றது. 'அகம்' என்னும் சொல் மக்களின் உள்ளங்களைக் குறிக்கின்றது. எனவே, நாடகம் என்பது 'உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடி' என்று கூறினால் அது மிகையாகாது (ஜெகதீசன், 2000). இவ்வாறு, சிங்கப்பூரையும், சிங்கப்பூர் மக்களையும், சிங்கப்பூர் மக்களின் வாழ்க்கை பின்னணிகளையும் பிரதிபலிக்கக் கூடிய நாடகங்களே 'சிங்கப்பூர் நாடகங்கள்' ஆகும். தமிழ் நாட்டிலிருந்தும், மற்ற நாடுகளிலிருந்தும் சிங்கப்பூருக்கு வந்திருந்த நாடகக் குழுக்கள் அலெக்சாண்டரா ஹாலில்தான் (Alexandra Hall) தம் நாடகங்களை நடத்தின (சண்முகம், 1977). இருபதாம் நூற்றாண்டுகளில், சிங்கப்பூர்த் தமிழ் நாடகத் துறை மாற்றம் கண்டு படிப்படியாக வளர்ச்சி பெற்றது. 'சுகுணசுந்தரம்', 'கௌரி சங்கர்', 'இரணியன்' முதலிய நாடகங்களை எழுதி, நடத்தியவர் திரு. ந. பழனிவேலு அவர்கள் (பாலகிருஷ்ணன், 1999).

சிங்கப்பூரில் தமிழ் நாடகக் கலையை வளர்க்கும் நல்ல நோக்கத்துடன் சில நாடகக் கழகங்கள் இயங்குகின்றன. இவை சமூக நலத்துறை அமைச்சு கொடுக்கும் நிதியுதவியுடன் ஆண்டுதோறும் நல்ல நாடகங்களை மேடையேற்றி வருகின்றன (திண்ணப்பன், 1993). 'சிங்கப்பூர் இந்தியக் கலைஞர் சங்கம்' என்னும் ஓர் அமைப்பு, ஒவ்வொரு ஆண்டும் ஒரு நாடகத்தை அரங்கேற்றியது. முற்றிலும்

சிங்கப்பூர் சூழ்நிலையில் அமைந்த நாடகங்களை இந்த அமைப்பு மேடையேற்றியது. திரு. சே. வெ. சண்முகம் எழுதிய, 'மாப்பிள்ளை வந்தார்', 'கல்யாணமாம் கல்யாணம்', 'அதுதான் ரகசியம்', 'மீன் குழம்பு', 'நாலு நம்பர்', 'சின்னஞ் சிறுசுகள்', 'குடும்பத்தில் குழப்பங்கள்', 'சிங்கப்பூர் மாப்பிள்ளை', 'கள்ளோ? காவியமோ?', 'காடி புதுசு ரோடு பழசு', 'ஏமாந்தது யார்?' ஆகிய 11 நாடகங்களையும் 'சிங்கப்பூர் இந்தியக் கலைஞர் சங்கம்' மேடையேற்றியது (ஆண்டியப்பன், 2001). மேலும், 'அண்ணா நாடகக் குழு', 'இந்திய நுண்கலைக் கழகம்', 'வெண்ணிலா கலை அரங்கம்', 'தமிழவேள் நாடக மன்றம்', போன்ற பல்வேறு நாடகக் குழுக்கள் சிங்கப்பூர் நாடகக் கலை வளர்ச்சிக்குப் பங்காற்றின (அழகப்பன், 1987). இந்த நாடக முன்னோடிக் குழுக்கள் ஏறக்குறைய 50 ஆண்டு காலமாகச் சிங்கப்பூர் தமிழ் நாடகக் கலையை வளர்த்தன.

இன்று, 'ரவீந்திரன் நாடகக் குழு', 'அவாண்ட் நாடகக் குழு', 'அதிபதி நாடகக் குழு', 'இவன் நாடகக் குழு' போன்ற நாடகக் குழுக்கள் உள்ளன. இக்குழுக்கள் இன்னும் தமிழ் நாடகக் கலையைப் போற்றும் வகையில் பல மேடை நாடகங்களை நடத்துகின்றனர். மேடை நாடகங்கள் நடத்துவதோடு பல நாடகப் பட்டறைகளும் நடத்தி வருகின்றன. இதனால், பல இளையர்கள் நாடகத் துறையில் சேரும் எண்ணிக்கையும் அவர்களது ஆர்வமும் கூடியுள்ளது. 2020-ஆம் ஆண்டு 'அகம் மேடை நாடக' அமைப்பு 'நாடகவாதி 2 – நாடகமும் நாப்பழக்கம்' என்னும் கலந்துரையாடல் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. இதில் புகழ் பெற்ற நாடகக் கலைஞர்கள் சிங்கப்பூர் நாடகத் துறையைப் பற்றிக் கலந்துரையாடினர். தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொண்ட நாடகக் கலைஞர்களில் ஒருவரான ஐஸ்வரியா சண்முகநாதன் கல்வியில் நாடகம் இணைப்பதைப் பற்றிப் பேசினார். "இணைப்பாட நடவடிக்கையாகவும் மேடை அனுபவமாகவும் மட்டுமில்லாமல் கல்வி அமைப்பில் நாடகக் கல்வி இடம்பெறவேண்டும். காரணம், நாடகத்துறை மதிப்பு வாய்ந்தது. சமூகத்தை உணர்வுபூர்வமாக அறிந்துகொள்ள நாடகம் மாணவர்களுக்கு உதவுகிறது. அத்துடன் 21ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான திறன்களைக் கற்றுக்கொள்ள நாடகம் பங்காற்றுகிறது," என்றார் ஐஸ்வரியா (வெங்கடேஷ்வரன், 2020). இவ்வாறு, சிங்கப்பூரில் தமிழ் மேடை நாடகங்களுக்கு ஒரு தனிச் செல்வாக்கு உண்டு. இக்காலக்கட்டத்தில், சிங்கப்பூரில் தமிழ் நாடகங்களைக் கூடுதலாக அரங்கேற்றும் பெரும் பொறுப்பு இளையர் சமுதாயத்தையே சார்ந்திருக்கிறது.

### சிங்கப்பூரில் தமிழ் மொழி கற்றல் கற்பித்தல்

இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து வந்த பெரும்பால தமிழர்கள் சிங்கப்பூரிலேயே நிரந்தரமாகத் தங்கி வாழத் தொடங்கினர். அதன் பிறகு தமிழர்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி மீது கவனம் செலுத்தத் தொடங்கினர். அவர்களில் பலர் தங்கள் பிள்ளைகள் தமிழ் மொழியில் படிக்க விரும்பினர். 1941-இல் 18 தமிழ்ப் பள்ளிகள் சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்டன. அவற்றில் சுமார் 1000 மாணவர்கள் பயின்று வந்துள்ளனர். இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் இந்த எண்ணிக்கை படிப்படியாக உயர ஆரம்பித்தது. 1945-க்குப் பின்னர்தான் இரண்டாம் மொழியின் முக்கியத்துவத்தை எல்லோரும் உணர்ந்தனர். இரண்டாம் உலகப் போர் முடிவுற்றதும் உருவாக்கப்பட்ட புதிய கல்விக் கொள்கையின் முக்கியக் கூறுகளில் ஒன்று இரண்டாம் மொழி கற்பதன் அவசியத்தை வலியுறுத்தியதாகும். அக்கல்வி கொள்கையின்படி ஆங்கிலப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குத் தத்தம் தாய் மொழியை இரண்டாம் மொழியாகப் பயில ஊக்கம் அளிக்கப்பட்டது.

பின்னர் 1959-ஆம் ஆண்டில் இரண்டாம் மொழி கட்டாயமானது. இதனால், தமிழை இரண்டாம் மொழியாகப் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. தமிழைத் தவிரப் பிற தென்னிந்திய மொழிகளைத் தங்கள் தாய் மொழியாகக் கொண்ட மாணவர்களும் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்க முன்வந்தனர் என்பது குறிப்பிடத்தக்க தகவலாகும் (திண்ணப்பன், 2016). தமிழ் பயிலும்

மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக, பல ஆங்கிலப் பள்ளிகளில் இன்னும் பல தமிழாசிரியர்கள் வேலைக்குச் சேர்க்கப்பட்டனர். இவ்வாறு, தமிழ் கற்கும் மாணவர்களது எண்ணிக்கையும் தமிழ்க்கல்வியின் தரமும் படிப்படியாக வளர்ச்சியடைந்தது. இதனால், ஆங்கில உயர்நிலை பள்ளிகளிலும் தமிழ்க்கல்வியைத் தொடர்ந்து கற்பிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

எனவே, 1955-க்கும் 1957-க்கும் இடைப்பட்ட காலத்தில் மூன்று உயர்நிலை பள்ளிகளில் தமிழ் நிலையங்கள் தோன்றின. சுமார் 150 மாணவர்கள் இங்குத் தமிழ் கற்றனர். பின்னர் அடுத்து வரும் ஆண்டுகளில் மேலும் பல தமிழ் நிலையங்கள் தேவைக்கேற்ப ஆரம்பிக்கப்பட்டன. தற்சமயம் சிங்கப்பூர் கல்வி அமைப்பின்கீழ் ஒன்பது தமிழ்மொழி நிலையங்கள் இயங்கி வருகின்றன. 1955-இல் முதன்முறையாகத் தமிழ் மொழியை ஆங்கில உயர்நிலை பள்ளிகளில் கற்பிக்கத் தொடங்கியபோது தமிழ் மொழியை ஒரு தேர்வு பாடமாகப் பயின்ற சுமார் 50 மாணவர்கள் கேம்பிரிட்ஜ் (Cambridge) தேர்வு எழுதினர். 1961-இலிருந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் புதுமுகத் தேர்வில் தமிழையும் ஒரு முக்கியப் பாடமாகக் கொண்டு மாணவர்கள் தேர்வு எழுதினர். தொடக்கநிலை கல்வியோடு உயர்நிலை கல்வியையும் மாணவர்கள் பெற வேண்டும் என்ற காரணத்தால் 1960ஆம் ஆண்டு உமறுப்புலவர் தமிழ் உயர்நிலை பள்ளி உருவானது. சிங்கப்பூரில் இயங்கிவரும் தமிழ் மொழி நிலையங்களுள் இந்நிலையம் பெரியதொரு நிலையமாகத் திகழ்கிறது.

மாணவர்களின் நிலைக்கேற்ப நெகிழ்வுத் தன்மையுடன் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டன. நோக்கங்கள் குறிக்கோள்கள், அணுகுமுறைகள், கருப்பொருள்கள், தலைப்புகள், நடவடிக்கைகள், நுண்திறன்கள், கருத்துப் பரிமாற்ற நடவடிக்கைகள், மொழிக் கூறுகள், மதிப்பீட்டு விளக்கக் குறிப்புகள் ஆகியவை இப்பாடத்திட்டத்தில் தெளிவாகத் தொகுக்கப்பட்டுள்ளன. நவீன மொழியியல் சிந்தனைகளும் மரபிலக்கணக் கூறுகளும் இதில் இடம் பெற்றுள்ளன. கல்வி அமைச்சு தமிழ் ஆசிரியர்களுக்குப் பாடத்திட்டங்களுடன் அதற்குத் தேவையான பயிற்றுக் கருவிகளையும் வழங்குகிறது. பாடநூல், பயிற்சிநூல், ஆசிரியர் கையேடு, படவில்லைகள், மின்னட்டைகள், பட அட்டைகள், மொழி விளையாட்டுகள், ஒலி, ஒளிப் படைப்புகள், உரையாடல்கள், கட்டுரைப் படங்கள், பெரிய புத்தகங்கள் எனப் பல்வேறு வகையான பயிற்றுக் கருவிகளைத் தமிழுக்கெனப் படைத்தளித்த பெருமை சிங்கப்பூருக்கு உண்டு. இவற்றைக்கொண்டு ஆசிரியர்கள், மாணவர்களுக்குத் தமிழ் மொழியின் மீது ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கற்பிக்க இயலும். கல்வி அமைச்சு இது போன்ற முயற்சிகளை எடுப்பதற்கு முக்கியக் காரணம் மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் தமிழ் மொழியைப் பயன்படுத்த வேண்டும் என்பதே ஆகும்.

## மொழி திறன்கள்

மொழி மனிதனுக்குக் கருத்து பரிமாற்றக் கருவியாகத் திகழ்கிறது. நாளடைவில் மொழி மனிதனின் சிந்தனை திறனுக்கு ஊற்றாக அமைகிறது. கற்றல் கற்பித்தலில் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் அடிப்படை மொழி திறன்களாகும். இந்தத் திறன்களோடு இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களையும் வளர்க்கும் நோக்கத்துடன் சிங்கப்பூர் தமிழ்மொழிப் பாடத்திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன (குஞ்சுக்கண்ணன், 2013). தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படும் இந்நிலையில் இருவழித் தொடர்பு மிக முக்கியக் கூறாகக் கருதப்படுகின்றது. கேட்டலும் படித்தலும் கொள்திறன்களாகும். இவை செய்திகளையும் கருத்துகளையும் அறிந்துகொள்ள உதவுகின்றன. பேசுதலும் எழுதுதலும் ஆக்கத்திறன்களாகும். இவை கருத்துகளை வெளிப்படுத்த உதவுகின்றன. இந்த நான்கு அடிப்படை திறன்களோடு பேச்சுவழிக் கருத்துப் பரிமாற்றமும் எழுத்துவழிக் கருத்து பரிமாற்றமும் சிங்கப்பூர் தமிழ் பாடத்திட்டத்தில் வலியுறுத்தப்படுகின்றன.

## பேசுதல் திறன்

பேசப்படும் மொழிக்கே நீடித்த வாழ்வுண்டு.

எனவே, ஒரு மொழிக்கு அடிப்படையானது பேச்சுதான். தமிழ் மொழி பேச்சு வழக்கு, எழுத்து வழக்கு என இரட்டை வழக்கு உடைய மொழி. அன்றாட வாழ்க்கையில் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளப் பெரும்பாலும் பயன்படுத்துவது பேச்சு வழக்கே ஆகும். மாணவர்களின் மொழித் திறன்களுக்கு ஏற்ப அவர்களுக்குப் பேச்சுத் தமிழில் போதிய பயிற்சியையும் பேசிப் பழகுவதற்கு உரிய சூழலையும் வாய்ப்புகளையும் ஆசிரியர்கள் உருவாக்கித் தர வேண்டும். கல்வி அமைச்சு பேசுதல் திறனுக்கு உரிய கற்றல் கூறுகளை அமைத்துள்ளது. ஒவ்வொரு மாணவரும் குரல் ஏற்ற இறக்கத்துடன், சரியான உச்சரிப்புடன், தெளிவாகவும் சரளமாகவும் பேச வேண்டும். மாணவர்கள் சூழலுக்கேற்பப் பேச்சுத் தமிழ் அல்லது எழுத்து தமிழில் பேச வேண்டும். மேலும், பல்வேறு சூழல்களில் கருத்துகளைப் பயன்முனைப்புமிக்க முறையில் கூற வேண்டும். கேட்போரின் தன்மையையும் சூழலையும் புரிந்து கொண்டு பதில் அளிக்கத் தெரிந்திருப்பது அவசியமாகும். மேற்குறிப்பிட்ட கற்றல் கூறுகளை மாணவர்கள் அடைவதன் வழி தமிழ் மொழியைப் பிழையின்றிச் சரளமாகப் பேச இயலும்.

### பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்

கருத்துப்பரிமாற்றம் என்பது வாழ்க்கைக்குத் தேவைப்படும் முக்கியமான திறன்களில் ஒன்றாகும். மனிதன் என்பவன் ஒரு 'சமுதாய விலங்கு' (social animal) என்று அரிஸ்டாடில் கூறியுள்ளார். மனிதன் உலகத்திற்குத் தனியாக வந்தாலும் பிறருடன் சேர்ந்து வாழும் குணம் உடையவன்தான். மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்புகொள்ளக் கருத்துப்பரிமாற்றத் திறன்கள் தேவைப்படுகின்றன. கல்வி அமைச்சு நான்கு அடிப்படை மொழி திறன்களோடு கருத்துப்பரிமாற்றத் திறன்களையும் பாடத்திட்டத்தில் சேர்த்ததிற்கு முக்கியக் காரணம் தமிழ் மொழி சிங்கப்பூரில் ஒரு வாழும் மொழியாகத் திகழ வேண்டும் என்பதே ஆகும். மாணவர்கள் பள்ளியிலும் வெளியிலும் தன்னம்பிக்கையோடு தமிழில் பேசினால்தான் தமிழ் மொழி வாழும் மொழியாக இருக்கும். மாணவர்கள் தமிழில் தயக்கமின்றிச் சரளமாகப் பேசும்போது அவர்கள் மொழியாற்றல் மிக்கவர்களாகத் திகழ்வார்கள் (கல்வி அமைச்சு, 2014). பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன் மேம்படப் பேச்சுத்தமிழ் பயன்படுத்தப்படுகிறது. தொடக்கநிலை தமிழ் பாடத்திட்டங்களிலும், பாலர் பள்ளி தமிழ் பாடத்திட்டங்களிலும் பேச்சுத் தமிழை மேம்படுத்த நாடக உத்திகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

### தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும்போது ஏற்படும் சவால்கள்:

ஒருவனுக்குத் தன் தாய்மொழி பிறப்பிலிருந்தே சேர்ந்து வளர்கிறது (கோவிந்தசாமி, 2013). ஆனால், தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட சில மாணவர்களுக்குக் கூடத் தமிழில் உரையாடப் பல சிக்கல்கள் உள்ளன. எனவே, ஒரு மொழி ஒருவனுக்குத் தாய்மொழியாக மட்டும் இல்லாமல் பிறப்பிலிருந்தே பேச்சுமொழியாகவும் இருக்கும்போதுதான் அம்மொழி இயற்கையாகவே அவனோடு சேர்ந்து வளரும். இதற்கு மாணவர்களது சூழலே அடிப்படை ஆகும். கர்ப்பகாலத்தில் குழந்தையின் செவித்திறன் குறிப்பிடத்தக்க அளவில் வளரும். இதன் விளைவாகக் குழந்தை நீங்கள் எதிர்பார்த்ததை விட வெகு முன்னதாகவே வெளி உலகத்திலிருந்து தகவல்களைப் பெறுவார்கள். மருத்துவ ஆய்வின் படி, கருவிலிருக்கும் குழந்தைக்கு ஏழாவது மாதத்திலேயே கேட்கும் திறன் வந்துவிடும் (சுந்தரேசன், 2017). குழந்தைகள் கருவில் இருக்கும் போதே தங்கள் சுற்றியுள்ள ஒலிகளைக் கேட்டுத்தான் வளர்கிறார்கள். எனவே, குழந்தைகள் வளரும் சுற்றுச்சூழலில் அதிகமாகப் பேசப்படும் மொழிதான் அவர்களோடு சேர்ந்து வளரும். அவ்வாறு, பிள்ளைகள் இல்லங்களில் அன்றாடம் தமிழ் மொழியைக் கேட்டும் பேசியும் வந்தால் பள்ளிகளில் தமிழ் மொழியை ஒரு பாடமாகப் படிப்பதில் சிக்கல்கள் அதிகம் எதிர்கொள்ளமாட்டார்கள். ஆனால், பல்லினச் சமுதாயமான சிங்கப்பூரில் ஆங்கிலத்தின் தாக்கத்தினால் அதுவே இல்லங்களிலும் பேசப்படுகிறது. ஆகையால், மாணவர்கள் தங்கள் தாய்மொழியான தமிழ் மொழியை

இரண்டாம் மொழியாக வகுப்பறையில்தான் கற்றுக்கொள்கின்றனர்.

பெரும்பாலான மாணவர்கள் இரண்டாம் மொழியைக் கற்றுக்கொள்ளச் சிரமப்படுவதற்கு முக்கியக் காரணம் அவர்களது மனப்போக்கு (கோவிந்தசாமி, 2013). பல மாணவர்கள் இரண்டாம் மொழியை ஓர் முக்கியப் பாடமாகக் கருவதில்லை. இரண்டாம் மொழியைக் கற்பதினால் என்ன பயன் என்றுதான் பலர் எண்ணுகின்றனர். வகுப்புகளில் பலதரப்பட்ட மொழி சூழல்களிலிருந்தும் மாணவர்கள் இருப்பர். அவ்வாறு, வேறுபட்ட மொழி திறன்கள் உடைய மாணவர்களுக்குக் கற்பிப்பது மிகவும் சிரமம். எனவே, சிங்கப்பூரில் முதல் மொழியின் ஆதிக்கம் இரண்டாம் மொழியான தமிழைப் பாதித்துள்ளது (மாரிமுத்து, 2000).

தமிழ் மொழி புழக்கம் குறைவதற்குச் சூழல் மட்டும் காரணமில்லை. தமிழ் எழுத்துகளின் ஒலி வடிவமும் ஒரு காரணம். தமிழ் மொழியில் ஒரே எழுத்து பல்வேறு ஒலி வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றன. இதனால், தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் பெரும்பாலான மாணவர்கள் தமிழில் பேசுவதற்குச் சிரமப்படுகிறார்கள். தமிழ் மொழியில் ஓர் எழுத்தின் ஒலி அதனை அடுத்து வரும் எழுத்தின் ஒலிக்கேற்ப மாறுதல் அடைவது இயற்கை. எடுத்துக்காட்டு, ‘க்’ என்னும் எழுத்து ‘கடல்’ என்னும் சொல்லில் ‘*k*’ என்று ஒலிக்கப்படுகிறது. அதே ‘க்’ என்னும் எழுத்து ‘பங்கு’ என்னும் சொல்லில் ‘*g*’ என்று ஒலிக்கப்படுகிறது. ‘பகல்’ என்னும் சொல்லிலும் ‘க்’ என்னும் எழுத்து ‘*h*’ என்று ஒலிக்கப்படுகிறது. இவ்வாறு, சொல் அமைப்புக்கு ஏற்ப ஒரே தமிழ் எழுத்தின் ஒலிகள் திரிபடைந்து ஒலிக்கின்றன. இதனை மாற்றொலிகள் என்று ஆய்வாளர்கள் அழைக்கின்றனர் (கஜேந்திரன், 2017).

ஆகவே, சிங்கப்பூரில் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகப் பயிலும் மாணவர்களின் இல்லத்தின் சூழல் காரணமாகவும், ஆங்கில மொழியின் ஆதிக்கத்தின் காரணமாகவும், தமிழ் மொழியின் ஒலிப்பு வேறுபாடுகள் காரணமாகவும், மாணவர்கள் தமிழில் பேசச் சிரமப்படுகிறார்கள். இதனால், மாணவர்களின் ஆர்வ நிலையும் குறைகின்றது.

### சிரமங்களை நீக்கும் வழி

தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்கள் தமிழில் பேசுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். மாணவர்கள் தொடர்ந்து தமிழில் பேசுவதற்கு ஏற்றச் சூழல் இருக்க வேண்டும். ஒரு மாணவன் மற்றொரு மாணவனோடு உரையாட ஊக்குவிக்க வேண்டும். இவற்றைச் செய்தாலும் சிங்கப்பூரில் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தை நீக்குவது இயலாத ஒன்றாகும். உலகெங்கும் ஆங்கிலத்தின் செல்வாக்கு பரவியுள்ளதால் அம்மொழி மிகவும் அவசியம். எனவே, சிங்கப்பூரில் தமிழ் மொழியின் புழக்கத்தை அதிகரிக்கத் தமிழ் மொழி மீது மாணவர்கள் கொண்டுள்ள ஆர்வ நிலையை அதிகரிக்க வேண்டும். எளிதில் செய்ய முடியாத காரியங்களையும் விருப்பத்தோடு செய்தால் அது சாத்தியமாகும். ஆகையால், ஒவ்வொரு வகுப்பும் மாணவர்களை ஈர்க்கும் வகையில் அமைந்திருக்க வேண்டும். மாணவர்களுக்கு அனைத்துத் தமிழ் எழுத்துகள் தெரிந்தாலும் அதில் எளிதில் பேசிட முடியாது. மாணவர்கள் தமிழ் மொழியில் உள்ள ஒலிப்பு வேறுபாடுகளை அறிந்து, சரியாகப் பேசச் சொல்வளம் அதிகம் இருக்க வேண்டும். அதற்கு மாணவர்கள் வாசிக்கவும் பேசவும் வேண்டும். மாணவர்களைக் கதை புத்தகங்கள், நாவல்கள் போன்றவற்றை வாசிக்கக் கூறினால் அவர்களுக்குச் சலிப்பு தட்டிவிடும். எனவே, மாணவர்களுக்கு நடவடிக்கை கலந்த வாசித்தல் இருக்க வேண்டும். மாணவர்கள் சொல் வளத்தைப் பெருக்கிக் கொண்டு சூழலுக்கு ஏற்பப் பேச வேண்டும். மாணவர்களுக்கு ஏற்றச் சூழலையும் உற்சாகத்தையும் நாடக நடவடிக்கைகள் வழங்குகிறது என்பது ஆனந்த்அர்சு என்னும் ஆய்வாளரின் கருத்தாகும் (ஆனந்த் அரசு et.al, 2017).

### நாடகக் கல்வி

நாம் இப்போது நவீனக் கல்வி அளிக்கக் கூடிய காலத்தில் இருக்கின்றோம். கற்றல் கற்பித்தலில் நாடகத்தை இணைப்பது ஒரு

நவீனக் கற்றல் அனுபவம் என்று மேற்கத்திய நாட்டு ஆய்வாளர்கள் கூறுகின்றனர் (ஆனந்த்அரசு et.al, 2017). ஆனால், நாடகக் கல்வி என்பது தமிழர் மரபில் இருந்த ஒன்றாகும். முத்தமிழுள் ஒன்றான நாடகத் தமிழ் சங்கக் காலத்திற்கு முன்பே தோன்றி இன்று வரை மக்கள் மனதில் இடம் பிடிக்கும் ஒரு கலையாக வாழ்ந்து வருகிறது. நாடகக் கல்வி என்பது மாணவர்கள் எதிர்காலத்தில் சந்திக்கக்கூடிய இக்கட்டான சூழலைச் செயற்கையாக அமைத்து, அந்தச் சிக்கலின் பொழுது என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்று கற்றுக்கொடுப்பதே ஆகும் (இராமசுவாமி et.al, 1999). இவ்வாறு, நாடகக் கல்வி வழி மாணவர்கள் தங்களைத் தயார் படுத்திக்கொள்கின்றனர். மேலும், அவர்கள் தங்கள் சிந்தனைத் திறனையும் மேம்படுத்துகிறார்கள்.

நாடகம் பல உறுப்புகளைக் கொண்டது. கதை, பாத்திரப்படைப்பு, காட்சியமைப்பு, வசனம், நடிப்பு, வேடப் பொருத்தம், அரங்கம் என்று பல்வேறு கூறுகளைக் கொண்டு விளங்குவது நாடகம் ஆகும். மக்கள் தொடர்புகொள்வதற்கு மொழியைப் பயன் படுத்துவதற்கு முன் நடிப்பின் (சைகைகள்) வழி தங்கள் கருத்துகளை வெளிப்படுத்தினர் (இராமசுவாமி et.al, 1999). இன்றும், மொழி தெரியாத இடத்தில், ஒருவரிடம் நடித்து, சைகை காட்டித்தான் செய்தியைப் பரிமாறிக் கொள்கிறோம். எனவே, நடிப்பு என்பது எல்லாரிடமும் இயல்பாகவே இருந்து வரும் ஒரு கலையாகும். அதைச் செம்மை படுத்தச் சிறிது பயிற்சி வேண்டும். இவ்வரிய கலையைக் கற்றல் கற்பித்தலில் இணைத்துக் கொண்டு ஆசிரியர்கள் தமிழ் மொழியை எளிமையாகவும் இனிமையாகவும் கற்பிக்கலாம் (ஜெகதீசன், 2000).

### நாடகம் வழி தமிழ் மொழியைக் கற்பித்தல்

நாடகம் மாணவர்களின் கற்றல் திறன்களை வளர்க்கும் ஆற்றல் உடையது என்று ஆய்வுகள் கூறுகின்றன. மனதின் ஆற்றலில் முக்கியமானது கற்பனையே. கற்பனை ஊற்றுப்பெருக்கு இன்றேல் எந்தக் கலையும் வளராது. பிள்ளைகள் ஊனக் கண்ணால் காண முடியாதவற்றையெல்லாம் மனக் கண்ணால் காண்கின்றனர் (நெடுமாறன், 2013). கற்பனை சக்தியினால்தான் குழந்தைகள் அரிதான செயல்களைக் கூட எளிதாக நிறைவேற்றுகின்றனர். குழந்தைகள் பெற்றோராக, ஆசிரியராக, அரசனாக, மிருகமாகப் பாத்திரமேற்று நடிப்பதில் பேரின்பம் அடைகின்றனர். இவ்வாறு, நாடக உத்திகள் கற்றல் கற்பித்தலில் மகிழ்வூட்டும் கற்பித்தல் முறையாகக் கருதப்படுகின்றன. நாடகம் வழி மாணவர்கள் சமூகத்திலும் இல்லங்களிலும் மாறி வரும் மொழிச்சூழலுக்கு ஏற்பத் தமிழ் மொழியை எவ்வாறு கையாளுவது என்பதைத் தெரிந்திருப்பர்.

"தைவானிலும், சீனாவிலும் மேற்கொண்ட ஆய்வின்படி, பின்தங்கிய மற்றும் நடுநிலை மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் நாடகத்தில் ஈடுபட்டுக் கூச்சமின்றி அன்னிய மொழியைப் பேசி மீள்திறன் மாணவர்களுக்கு ஈடாகச் சிறந்து விளங்குகின்றனர் என்கிறார் கார்கின்" (குஞ்சுக்கண்ணன், 2013). "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்" என்னும் பழமொழிக்கு ஏற்பத் தமிழில் சரளமாகவும் பிழையின்றியும் பேசுவதற்குத் தொடர்ச்சியான பயிற்சி தேவை. தமிழில் உரையாடக் குறைவான சொற்களஞ்சியம் உள்ளவர்கள் கூட வகுப்பில் ஆர்வத்துடன் ஈடுபட நாடக நடவடிக்கைகள் வழிவகுக்கின்றன. நாடகம் வழி மாணவர்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ள இயலும். ஒரு மொழி தொடர்ந்து நிலைத்திருக்க மனிதர்கள் அதில் உரையாட வேண்டும். எனவேதான், பாடத்திட்டத்தில் அடிப்படை பேச்சுத் திறனோடு பேச்சு வழி கருத்துப்பரிமாற்றம் என்னும் திறனும் கற்பிக்கப்படுகிறது. வகுப்பறையில் மாணவர்களை நாடக நடவடிக்கையில் ஈடுபடுத்துவதன் வழி அவர்கள் தமிழில் அதிகமாக உரையாடுவார்கள். மேலும், மாணவர்கள் கூச்சம் இன்றியும் உச்சரிப்புப் பிழை இன்றியும் உணர்ச்சிப் பாங்குடனும் சரளமாகப் பேச நாடக உத்திகள் உதவியாக இருக்கும் (நெடுமாறன், 2013). நாடக நடவடிக்கைகள் மாணவர்களிடையே ஓர்

உற்சாகத்தையும் ஏற்படுத்துவதால் அவர்கள் தமிழ் மொழியில் ஆர்வத்தோடு பேசுவார்கள். இவ்வாறு, தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்கள் கருத்தினை உள்வாங்கிக்கொண்டு வெளிக்கொணர நாடக உத்திகள் உதவியாக இருக்கும்.

**நாடக உத்திகள்**

கற்றல் கற்பித்தலை எளிதாக்க ஆசிரியர்கள் உத்திகளைக் கையாளுகின்றனர். பல்வேறு கற்றல் நிலைகளில் உள்ள மாணவர்களுக்குப் பொருத்தமான பாடத்திட்டங்களை உருவாக்க ஆசிரியர்கள் பல கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்துகின்றனர். அவற்றில் நாடகக் உத்திகளும் அடங்கும். மேடை நாடக கலை வளர வளர அது பல புதிய உத்தி முறைகளையும் அவ்வப்போது பெற்று வளர்ந்து வந்துள்ளது. நடிப்புக் கலைக்குரிய விதிகள் பல உள்ளன. பல்வேறு உணர்ச்சிகளை, இயக்கம், கை, கால் அசைவுகள், முகக்குறிப்பு, உரையாடல், ஆகியவற்றின் வாயிலாக வெளிப்படுத்தும் முறைகளை அந்த விதிகளிலிருந்து உணரலாம் (இராமசுவாமி et.al, 1999). இவ்வாறு நாடகத்தின் விதிகளைச் சரியாகப் பின்பற்றப் பல நாடக உத்திகள் உள்ளன. மாணவர்களை இந்த உத்திகளின் வழி நடிக்க வைப்பதால் அவர்களின் கூச்சச் சுபாவம் மறைந்து தன்னம்பிக்கை வளர்கிறது. பேச்சுத் திறனும் உச்சரிக்கும் பாங்கும் மேம்படும் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கச் சிந்தனையும் பெருகும் (ஜெகதீசன், 2000). பேச்சுத் திறனையும் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத் திறனையும் மேம்படுத்தப் பரிந்துரைக்கப்படும் நாடக உத்திகளைத் தொடர்ந்து காண்போம்.

**போலச் செய்தல்:**

நாடகம் என்பது போலச் செய்தலின் வழியாகத் தோற்றம் பெற்றது என்று அரிஸ்டாடில் கூறியுள்ளார். நாம் காணும் மற்றும் கேட்கும் ஒன்றை அது போலவே சித்திரிப்பது போலச் செய்தல் எனப்படும். போலச் செய்தல் என்பது ஒலிகள், செயல்கள் மற்றும் முகபாவனைகளை ஒருங்கிணைக்கும் தகவல்தொடர்பு உத்தியாகும். இந்த உத்தியை இளம் குழந்தைகள் பேசத் தொடங்குவதற்கு முன் தங்களை அறியாமலேயே செய்யத் தொடங்கிவிடுகின்றனர். குழந்தைகள் எட்டு மாதக் காலத்திலிருந்தே கைத்தட்டல் போன்ற கை சைகைகளைப் பின்பற்றத் தொடங்குகின்றனர் (Charman, 2006). குழந்தை உளவியலாளர்களும் போலச் செய்தல் பற்றி தங்கள் ஆய்வுகளில் குறிப்பிட்டுள்ளனர். ஜீன் பியாஜே (Jean Piaget) என்பவர் அறிகை விருத்தி (Cognitive Development) பற்றிய உளவியல் விளக்கத்தினை முன்மொழிந்தார். அவரது கருத்துப்படி குழந்தையின் வயதுக்கேற்பப் பல்வேறு படிநிலைகளில் அறிவு வளர்ச்சி ஏற்படுகிறது. பியாஜே குழந்தையின் அறிவு வளர்ச்சி நிலைகளை நான்கு வகையாகப் பிரித்துள்ளார். குழந்தைகள் பிறப்பு முதல் 2 வயது வரை புலன் இயக்கப் பருவத்தில் இருப்பார்கள். இந்த நிலையில் குழந்தைகள் தனக்கென்று ஓர் உலகத்தை உருவாக்கிக் கொள்கிறது. குழந்தைகளுக்கு அடிப்படை நினைவு தோன்ற ஆரம்பித்தவுடன் பிறரைப் போலவே தானும் செய்யக் கற்றுக் கொள்கின்றன. இவ்வாறு, போலச் செய்தல் என்பது குழந்தைகளிடம் இயல்பாக உள்ள திறனாகும்.

எனவே, குழந்தைகள் முன் சிறந்த வகையில் பேசுவதும் நடந்து கொள்வதும் முக்கியமாகும். மாணவர்கள் போலச் செய்தல் நடவடிக்கையில் ஈடுபடுவதன் வழி வாய்மொழியில் அதிகப் பயிற்சிகளை மேற்கொள்வார்கள். மேலும், மாணவர்கள் பல சொற்களைப் பின்தொடர்ந்து பேசித் தங்களின் வாய்மொழியை மேம்படுத்துவர். வகுப்பறைகளில் போலச் செய்தல் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் மாணவர்கள் கற்றுக்கொண்ட சொற்களை அதன் பொருத்தமான செயல்கள் மற்றும் பாவனையுடன் இணைப்பார்கள் (Charman, 2006). எடுத்துக்காட்டாக, குழந்தை பெரும்பாலும் தங்கள் பெற்றோரைப் பின்தொடர்ந்து தொலைபேசியை எடுத்து "ஹலோ" என்று கூறுகிறது. ஆகவே, போலச் செய்தல் என்னும் உத்தியைப் பயன்படுத்தி மாணவர்களின் சொல்வளம், உச்சரிப்பு, வாக்கிய அமைப்பு, இருவழித் தொடர்பு முதலியவற்றை மேம்படுத்தலாம்.

### பாகமேற்று நடித்தல்:

பாகமேற்று நடித்தல் என்பது நாடகத்தின் ஓர் பகுதியாகும். ஒரு குறிப்பிட்ட பாத்திரத்தையும் சூழலையும் கற்பனை செய்து, அந்தப் பாத்திரத்தைப் போல் பேசுவதும் நடந்துகொள்வதும் பாகமேற்று நடித்தல் எனப்படும். பாகமேற்று நடித்தல் உண்மையான சூழ்நிலையை நெருங்கி வருவதற்கான பாதுகாப்பான வழியை மாணவர்களுக்கு வழங்குகிறது. எனவே, ஒரு மொழியைப் பல அறியாத சூழல்களில் பயன்படுத்த அறிவதற்குப் பாகமேற்று நடித்தல் உதவியாக இருக்கும் (Glover, 2014). கல்வி அமைச்சின் 2015-ஆம் ஆண்டின் தமிழ் மொழி பாடத்திட்டத்திலும் பாகமேற்று நடித்தல் என்னும் உத்தி பேச்சு திறனையும் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்தையும் வளர்க்கப் பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளுள் ஒன்றாகும்.

ஆசிரியர் வகுப்பறைகளில் ஒரு கதையைக் கூறுவார். பிறகு, ஆசிரியர் மாணவர்களைக் கதையில் உள்ள கதாபாத்திரங்களைப் பாகமேற்று நடிக்கக் கூறுவார். மாணவர்களின் சிந்தனையைத் தூண்ட ஆசிரியர் கதையின் முடிவைக் கூறமாட்டார். மாணவர்கள் கதையின் முடிவைக் குழுவாக யூகித்துப் பாகமேற்று நடிக்க வேண்டும். இவ்வாறு, பிள்ளைகள் ஏற்கனவே வாசித்த கதையையொட்டிப் பாத்திரம் ஏற்று நடிக்கும் போது பேசுவதற்கு அதிக வாய்ப்பு ஏற்படுகின்றது. பிள்ளைகள் இத்தகைய நடவடிக்கையில் அதிக விருப்பத்தோடு ஈடுபடுவார்கள் இதனால் இவர்களது சொல் வளம் மேம்படுகிறது. மேலும், இதன் வழி தாங்கள் கற்றுக்கொண்ட புதிய சொற்களைப் பயன்படுத்திப் பார்க்கும் வாய்ப்பைப் பெறுவார்கள். இது போன்ற நாடக நடவடிக்கைகள் கூடிக்கற்றலை ஆதரிக்கின்றன. பாகமேற்று நடித்தல் என்னும் நாடக உத்தி தொடக்கநிலையில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. மாணவர்களிடம் பாகமேற்று நடிக்கக் கொடுக்கப்படும் சூழல் அவர்கள் அனுபவித்ததாக அல்லது பார்த்ததாக இருக்க வேண்டும். எனவே, தேர்ந்தெடுக்கும் கதை, கதாபாத்திரம், சூழல் அனைத்தும் மாணவர்களின் வயதிற்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

இந்த நாடக உத்தியை மீத்திறன், சராசரி மற்றும் பையப்பயிலும் மாணவர்களுக்கு வெவ்வேறு வகையில் கொண்டு செல்லலாம். எடுத்துக்காட்டாக, மீத்திறன் மற்றும் சராசரி மொழியாற்றல் உள்ள மாணவர்கள் கதாபாத்திரமாகக் கற்பனை செய்து கதையின் முடிவை நடித்துக் காட்டலாம். பையப்பயிலும் மாணவர்கள் கதையில் வரும் ஏதேனும் ஒரு காட்சியை நடித்துக் காட்டலாம். மாணவர்கள் பாகமேற்று நடிக்கும் போது ஆசிரியர்கள் மாணவர்களது சொல் பயன்பாடு, உச்சரிப்பு, தொனி போன்ற பல்வேறு கூறுகளுக்குக் கவனம் செலுத்த முடியும். இவ்வாறு, பல்வேறு கற்றல் நிலைகளில் உள்ள மாணவர்களைப் பேசத் தூண்டும் நடவடிக்கையாகப் பாகமேற்று நடித்தல் அமைகிறது.

### முதன்மை இருக்கை

'முதன்மை இருக்கை' (Hot Seat) என்பது ஒரு நாடக உத்தி. இந்த நடவடிக்கையின் போது மாணவர்கள் அரை வட்டமாக அல்லது முழு வட்டமாக அமர்ந்திருப்பர். அந்த வட்டத்திற்கு முன்னால் அல்லது நடுவில் ஒரு நாற்காலி வைக்கப்படும். பங்கேற்பாளர் ஒரு கதாபாத்திரத்தை ஏற்றுக்கொண்டு அந்த நாற்காலியில் அமர வேண்டும். பங்கேற்பாளர் நாற்காலியில் அமர்ந்தவுடன் அந்தக் கதாபாத்திரமாகவே மாறிப் பிற மாணவர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டும். பங்கேற்பாளர் கதாபாத்திரத்தின் எண்ணங்கள், உணர்வுகள், இலக்குகள் முதலிய கூறுகளை நினைவில் கொண்டு பேச வேண்டும். ஆகையால், இந்த நடவடிக்கை 'முதன்மை இருக்கை' என்னும் பெயரைப் பெற்றது.

முதன்மை இருக்கை என்பது நாடகப் பயிற்சிகள், ஒத்திகைகள் மற்றும் பிற படைப்புக் கலைகளை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு பயிற்சியாகும். கலை சார்ந்த சூழல்களுக்கு மட்டும் இந்த அணுகுமுறை அமைக்கப்படவில்லை. எல்லா வகையான சூழ்நிலைகளுக்கும் இந்த உத்தியை மாற்றியமைக்கலாம். 'முதன்மை இருக்கை'

உத்தி பேச்சுத் திறனை வளர்த்துக்கொள்ள ஒரு சிறந்த வழியாகும். இந்த அணுகுமுறை பாத்திரமேற்று நடித்தல், பொது இடங்களில் பேசும் திறன், பேச்சுவழிக் கருத்துப் பரிமாற்றத் திறன் முதலியவற்றை மேம்படுத்தும். இந்த உத்தி மாணவர்களின் பேச்சுத் திறனைச் சுவாரசியமான முறையிலும் பயனுள்ள வழியிலும் வளர்க்க உதவுகிறது. மேலும், இந்த உத்தி மாணவர்களின் சிந்திக்கும் திறனையும் மேம்படுத்தும் எதிர்பாராத கேள்விகளுக்கு உடனுக்குடன் உடன் பதிலளிக்கும் திறனையும் மேம்படுத்தும். இவ்வாறு, முதன்மை இருக்கை என்னும் உத்தி மாணவர்களுக்கு வகுப்பின் போது பயனுள்ள, விரைவான மற்றும் எளிதான ஒரு கலந்துரையாடலில் பங்கேற்கும் இடத்தை வழங்குகிறது. இதன் வழி ஆசிரியர்கள் வகுப்பறையில் அனைவரது குரல்களையும் கேட்க முடியும்.

### மனச்சான்று வழியில்

'மனச்சான்று வழியில்' *(Decision Alley)* என்பது ஒரு நாடக உத்தியாகும். இது பெரும்பாலும் கல்வி அமைப்புகளில், குறிப்பாக மொழி மற்றும் பேசுதல் திறன்களைக் கற்பிக்கவும் மேம்படுத்தவும் பயன்படுத்தப்படுகிறது. இது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையை அல்லது முடிவை வெவ்வேறு கண்ணோட்டங்களிலிருந்து ஆராயத் தனிநபர்களை அனுமதிக்கும் ஓர் உத்தியாகும். மனச்சான்று வழியில் என்னும் நாடக உத்தி ஒரு கதாபாத்திரம் எதிர்கொள்ளும் எந்த விதமான இக்கட்டான சூழ்நிலையையும் ஆராய்வதற்கான பயனுள்ள ஒரு வழியாகும். இந்த உத்தி ஒரு சூழலில் ஏற்படும் முக்கியமான தருணத்தை இன்னும் விரிவாகப் பகுப்பாய்வு செய்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

இந்த உத்தியைத் தமிழ் வகுப்புகளில் பயன்படுத்தி மாணவர்களைப் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடுத்தலாம். முதலில் ஆசிரியர் ஓர் இக்கட்டான சூழலை மாணவர்களிடம் அறிமுகப்படுத்த வேண்டும். மாணவர்கள் வெவ்வேறு கண்ணோட்டங்களைக் கருத்தில் கொள்ள வேண்டிய சூழலாக அது இருக்க வேண்டும். ஆசிரியர்கள் அந்தச் சூழலைப் புதிதாக உருவாக்கியோ அல்லது கதைப்புத்தகங்களிலிருந்து எடுத்தோ மாணவர்களிடம் அறிமுகப்படுத்தலாம். பிறகு, பங்கேற்பாளர்கள் இரண்டு வரிசையில் ஒருவரை ஒருவர் எதிர்நோக்கும் வகையில் நிற்க வேண்டும். குறைந்தது ஒருவராவது நடந்து செல்ல நடுவில் இடத்தை விட்டுப் பங்கேற்பாளர்கள் நிற்க வேண்டும். இவ்வாறு ஒரு 'மனச்சான்று வழியை' பங்கேற்பாளர்கள் உருவாக்குவர். கொடுக்கப்பட்டிருக்கும் சூழலில் உள்ள முக்கியக் கதாபாத்திரமாக ஏற்று நடிக்கும் மாணவர், 'மனச்சான்று வழியில்' நடந்து செல்ல வேண்டும். அந்த மாணவர் நடக்கும்போது, மனச்சான்று வழியை உருவாக்கிய பங்கேற்பாளர்கள் தங்களின் வெவ்வேறு எண்ணங்கள், கருத்துகள் அல்லது கதாபாத்திரம் அனுபவிக்கும் உணர்வுகளை உரக்கக் கூற வேண்டும். இதன் மூலம் நடந்து செல்பவர் வெவ்வேறு கண்ணோட்டங்களைக் கேட்பார். இந்த நடவடிக்கை முடிந்த பிறகு, பங்கேற்பாளர்கள் தங்கள் அனுபவங்கள், கருத்துகள் மற்றும் பயிற்சியிலிருந்து அவர்கள் கற்றுக்கொண்டவற்றைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு கலந்துரையாடல் நடைபெறும். இதன் வழி மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களின் பிரதிபலிப்புகளை வகுப்பின் முன் எடுத்துரைக்க முடியும்.

இவ்வாறு, மனச்சான்று வழியில் என்னும் உத்தி விமர்சனச் சிந்தனை, புத்தாக்கச் சிந்தனை, மற்றும் பிறர் இடத்திலிருந்து சிந்திக்கும் திறனை ஊக்குவிக்க ஒரு ஆக்கப்பூர்வமான வழியாகும். மேலும், மாணவர்கள் தங்களின் எண்ணங்களையும் கருத்துகளையும் வாய்மொழியாகத் தன்னம்பிக்கையுடன் வெளிப்படுத்த இது ஒரு சிறந்த உத்தியாகும். பொது இடங்களில் பேசுவது தொடர்பான கூச்சத்தையும் பயத்தையும் சமாளிப்பது பேச்சு திறன்களை வளர்ப்பதற்கான இன்றியமையாத அம்சமாகும். இதை மனச்சான்று வழியில் என்னும் நாடக உத்தி உறுதி செய்யும்.

### அசையா நிலை

'அசையா நிலை' *(Freeze Frame)* என்னும் நாடக உத்தியின் வழி மாணவர்கள் ஒரு குறிப்பிட்ட தருணத்தை அல்லது காட்சியைப் படம் பிடித்துக் காட்டுவது போல் அசையாமல்

இருக்க வேண்டும். இந்த உத்தி பெரும்பாலும் நாடக வகுப்புகள் அல்லது குழு உணர்வை மேம்படுத்தும் பயிற்சிகளில் பயன்படுத்தப்படும். அசையா நிலை உத்தியின் நோக்கமே ஒரு சூழலில் காணப்படும் உணர்ச்சிகள், உறவுகள் மற்றும் கருத்துகளை ஆராய்ந்து வெளிப்படுத்துவதாகும். இந்த உத்தி குறிப்பாக உடல் பாவனையை வெளிப்படுத்தவும், மறைமுகமாகப் பேச்சுத்திறன் வளர்ச்சிக்கும் பங்களிக்கும்.

ஆசிரியர் ஒரு குறிப்பிட்ட காட்சியை அல்லது சூழலை மாணவர்களிடம் அறிமுகப்படுத்துவார். அந்தச் சூழலில் காணப்படும் முக்கியமான தருணத்தை மாணவர்கள் அசையா நிலையில் சித்தரிக்க வேண்டும். இதன் வழி மாணவர்கள் ஒரு காட்சியில் காணப்படும் உணர்ச்சிகள், உறவுகள் மற்றும் செயல்களை அவர்களின் உடல், சைகைகள், மற்றும் முகபாவனைகளைப் பயன்படுத்திக் காட்டுவர். அசையா நிலை நடவடிக்கைக்குப் பிறகு, மாணவர்கள் உருவாக்கிய அசையா நிலை அமைப்பைப் பற்றி பகுப்பாய்வு செய்வார்கள். பங்கேற்பாளர்கள் ஒவ்வொரு அசையா நிலை அமைப்பிலும் என்ன பார்க்கிறார்கள், வெளிப்படுத்தப்பட்ட உணர்ச்சிகள் பற்றியும் கதாபாத்திரங்களுக்கு இடையிலான உறவுகள் பற்றியும் விவரித்துக் கலந்துரையாடலாம். மேலும், ஆசிரியர் கொடுக்கப்பட்ட காட்சியில் சில மாற்றங்களை அறிமுகப்படுத்தலாம். மாணவர்கள் அதற்கேற்ப மீண்டும் புதிய அசையா நிலை அமைப்புகளை உருவாக்கலாம். இதன் வழி மாணவர்களிடையே நெகிழ்வுத்தன்மையும் பல்வேறு சூழ்நிலைகளில் திறம்படத் தொடர்பு கொள்ளும் திறனையும் ஊக்குவிக்கிறது. மாணவர்கள் அசையா நிலை அமைப்புகளை விவரிக்கும் போது, அவர்கள் அடிப்படையில் கதைசொல்லலில் ஈடுபடுகிறார்கள். இது பேச்சுத் திறன் வளர்ச்சிக்குப் பங்களிக்கிறது. அசையா நிலை உத்தி வாய்மொழி அல்லாத நுட்பமாக இருந்தாலும், பங்கேற்பாளர்கள் வர்ணித்தல், பிரதிபலிப்பு மற்றும் கலந்துரையாடல் மூலம் பேச்சுத் திறனை வளர்த்துக்கொள்கின்றனர். நாடகம் மற்றும் பேச்சு திறன் மேம்பாட்டிற்கான பயனுள்ள கருவியாக அசையா நிலை உத்தி அமைகிறது.

இவ்வாறு, மேற்குறிப்பிட்ட உத்திகள், பலதரப்பட்ட மாணவர்களைத் தங்களுடைய மொழி திறத்திற்கு ஏற்பக் கற்றல் கற்பித்தலில் ஆர்வத்தோடு ஈடுபட வழிவகுக்கின்றன. தொடக்கநிலை வகுப்புகளில் கதைகள் வழி இந்த உத்திகளை அறிமுகப்படுத்தலாம் என்று கல்வி அமைச்சு குறிப்பிடுகிறது.

### ஆய்வு முறை (Methodology):

தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகப் பயிலும் மாணவர்களின் பேச்சுத் திறனை வளர்ப்பதில் நாடக உத்திகள் எத்தகைய பங்கை வகிக்கின்றன என்பதைக் கண்டறிவதே இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும். மேலும், ஆசிரியர்கள் தங்கள் பாடத்திட்டத்தில் நாடக உத்திகளை இணைப்பதன் நன்மைகளையும், சவால்களையும் இந்த ஆய்வு ஆராய விரும்புகிறது. எனவே, இந்த ஆய்விற்குத் தரம் சார்ந்த ஆய்வு (Qualitative Research) மேற்கொள்ளப்பட்டது.

### ஆய்வின் வடிவமைப்பு

தனி நபரின் எண்ணங்களையும், உணர்வுகளையும், கருத்துகளையும் சேகரித்து அவற்றிற்கான காரணங்களையும் பகுப்பாய்வு செய்வதே தரம் சார்ந்த ஆய்வின் நோக்கமாகும் (Bailey, 1987). தரம் சார்ந்த ஆய்வு முறை காலப்போக்கில் பல மாற்றங்களையும் மேம்பாடுகளையும் அடைந்துள்ளது. தரம் சார்ந்த ஆய்வு முறை பல கூறுகளை உள்ளடக்கியது. இந்த அத்தியாவசியக் கூறுகளை முதன் முதலில் 1925-ஆம் ஆண்டில் உளவியலாளர் பால் பெலிக்ஸ் லாசர்ஸ்ஃபீல்டின் (Psychologiist, Paul Felix Lazarsfeld) ஆய்வில் அடையாளம் காணப்பட்டது என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர் (Bailey, 2014). தரம் சார்ந்த ஆய்வு முறையை மேம்படுத்திய முன்னோடிகளில் வில்லியம் ஜேம்ஸ் (William James) குறிப்பிடத்தக்கவர். இவர் ஓர் அமெரிக்க உளவியலாளரும் தத்துவவாதியும் ஆவார். வில்லியம் ஜேம்ஸ் (William James) மனிதர்களின்

தனிப்பட்ட அனுபவங்களையும் எண்ணங்களையும் ஆராய்வதின் முக்கியத்துவத்தைப் பற்றி வலியுறுத்தினார். இவர்களது உளவியல் சார்ந்த ஆய்வுகள் தரம் சார்ந்த ஆய்வு முறைக்கு ஓர் அடித்தளத்தை அமைத்தது. எனவே, இவர்களது அணுகுமுறைகளைப் பின்பற்றி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தலில் நாடக உத்திகளை இணைப்பதன் வழி அவர்கள் எதிர்நோக்கும் பயன்கள், சவால்கள் ஆகிய அனுபவங்களை இந்த ஆய்வின் வழி சேகரிக்க வேண்டும். மேலும், நாடக உத்திகள் மாணவர்களிடையே ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றியும் கண்டறிய வேண்டும். எனவே, தரம் சார்ந்த ஆய்வு முறை இந்த ஆய்விற்கு மிகப் பொருத்தமாக இருந்தது.

### ஆய்வுக்கு உட்பட்டோர்

தரம் சார்ந்த ஆய்வின் வழி பங்கேற்பாளர்களின் அனுபவங்களையும் கண்ணோட்டங்களையும் ஆழமாகப் புரிந்துகொள்ள முடிகிறது. மேலும், இந்த ஆய்வின் மூலம் ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தலில் நாடக உத்திகளைச் செயல்படுத்தும்போது எதிர்கொள்ளும் அனுபவங்கள், அணுகுமுறைகள் மற்றும் சவால்களைக் கண்டறிய வேண்டும். எனவே, பொருத்தமான தரவுகளைப் பெற ஆய்வுக்கு உட்பட்டோரை மிகவும் கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

இந்த ஆய்விற்கு ஐந்து ஆசிரியர்களும் ஐந்து பெற்றோர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த ஆய்வு கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தப்படும் நாடக உத்திகளைப் பற்றி அமைந்திருக்கிறது. எனவே, இந்த ஆய்விற்குத் தங்கள் கற்பித்தலில் நாடக உத்திகளைப் பயன்படுத்தும் தமிழ் ஆசிரியர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நாடகம் சார்ந்த மொழிப் பயிற்றுவிப்பில் அனுபவம் உள்ள அல்லது தற்போது ஈடுபட்டுள்ள பங்கேற்பாளர்களைத் தேர்ந்தெடுக்க, நோக்கமுள்ள மாதிரிகள் பயன்படுத்தப்படும். இந்த அணுகுமுறை மாறுபட்ட மற்றும் பிரதிநிதித்துவ மாதிரியை உறுதிசெய்கிறது, இது பலவிதமான முன்னோக்குகளை வழங்குகிறது.

### ஆசிரியர்கள்

தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களில் மூன்று தமிழ் ஆசிரியர்கள் நாடகத்தின் மீது வேட்கை கொண்டவர்களாகவும் திகழ்ந்தனர். அவர்கள் தங்கள் பள்ளி பருவத்திலிருந்தே நாடகங்களில் ஈடுபட்டுப் பயன் பெற்றதால் தங்கள் கற்பித்தலிலும் நாடக உத்திகளை இணைத்துள்ளனர். மேலும், இந்த மூன்று தமிழ் ஆசிரியர்கள் தங்கள் பல்கலைக்கழகப் படிப்பின் பொழுது பல நாடகப் பயிற்சிகளைப் பற்றியும் பயின்றனர். எனவே, இவர்கள் கல்வி அமைச்சு பரிந்துரை செய்த நாடக உத்திகளுக்கு அப்பாலும் பல நாடக உத்திகளைத் தங்கள் கற்பித்தலில் இணைத்துள்ளார்கள் என்பதை நேர்காணலின் வழி அறிந்துகொள்ள முடிந்தது. நேர்காணலில் பங்கேற்ற மற்ற இரண்டு தமிழ் ஆசிரியர்கள் ‘ஆசிரியர் கையேடுகளில்’ பரிந்துரைக்கப்படும் நாடக உத்திகளைப் பயன்படுத்துபவர்கள். இவ்வாறு, மாணவர்களின் பேச்சுத்திறனை வளர்க்க நாடக உத்திகளைப் பயன்படுத்தும் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### பெற்றோர்கள்

கல்வி அமைச்சின் பாடத்திட்டங்களையும், ஆசிரியர் கையேடுகளையும் ஆராய்ந்து பார்த்ததில் பாலர் பள்ளி மற்றும் தொடக்கப் பள்ளி கற்றல் கற்பித்தலில்தான் நாடக உத்திகள் இணைக்கப்பட்டுள்ளன. ஆனால், இளம் மாணவர்களால் தங்களுக்கு ஏற்பட்ட மொழி மாற்றங்களையும் தாக்கத்தையும் அடையாளம் கண்டு எடுத்துரைப்பது சற்றுக் கடினம். எனவே, நாடக நடவடிக்கைகளில் பங்கேற்கும் மாணவர்களின் மொழி மாற்றங்களைக் கண்காணித்து வரும் பெற்றோர்களுடன் நேர்காணல்கள் நிகழ்த்தப்பட்டன.

### ஆய்வுக் கருவிகள்

மாணவர்களது மொழி வளர்ச்சியில் நாடக உத்திகளின் பங்கைப் பற்றிய கருத்துகளைத் தொடர்பு நூல் ஆய்வு வழியாகவும் நேர்காணல்

வழியாகவும் சேகரிக்கப்பட்டன. முதலில் சிங்கப்பூரில் உள்ள தமிழர்களைப் பற்றியும் தமிழ் இலக்கியங்களைப் பற்றியும் புரிந்துகொள்ள ஆய்வாளர்கள் எழுதிய வரலாற்று நூல்கள் ஆய்வு செய்யப்பட்டன. சிங்கப்பூரில் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களின் நிலையைப் பற்றி அறிந்துகொள்ளவும், அவ்வாறு கற்கும் மாணவர்கள் பேசுவதில் சந்திக்கும் சிக்கல்களைப் பற்றி அறிந்துகொள்ளவும், கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தப்படும் நாடக உத்திகளைப் பற்றி அறிந்துகொள்ளவும் பல ஆய்வு கட்டுரைகள் ஆய்வு செய்யப்பட்டன. சிங்கப்பூர் தமிழ் மொழி கற்றல் கற்பித்தல் பற்றி அறிந்துகொள்ளக் கல்வி அமைச்சு தயாரித்த பாடத்திட்டங்களும், ஆசிரியர் கையேடுகளும் ஆய்வு செய்யப்பட்டன. இவ்வாறு, பலதரப்பட்ட நூல்கள் ஆய்விற்குப் பயன்படுத்தப்பட்டன. இந்த ஆய்விற்கு, பதினைந்து தொடர்பு நூல்கள் பயன்படுத்தப்பட்டன.

சிங்கப்பூரில் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களின் பேச்சுத் திறனை வளர்ப்பதில் நாடக உத்திகள் வகிக்கும் பங்கைப் புரிந்துகொள்வதற்காக நான் பெற்றோர்களுடனும் ஆசிரியர்களுடனும் நேர்காணல்களை நடத்தினேன். வெளிப்படையான, வரையறையற்ற கருத்துகளைப் பெற உதவும் கேள்விகள்தான் (Open-ended questions) வடிவமைக்கப்பட்டன. ஆய்வுக்குத் தேவையான ஆழமான தரவுகளைச் சேகரிக்கும் நோக்கத்துடன் இந்தக் கேள்விகள் வடிவமைக்கப்பட்டன. நேர்காணலின் போது ஆய்வாளர் பங்கேற்பாளர்களிடம் முன்பே தீர்மானிக்கப்பட்ட கேள்விகளைக் கேட்டார். நேர்காணலின் போது பங்கேற்பாளர்களின் பதில்களுக்கு ஏற்பத் தூண்டுதல் கேள்விகளும் கேட்கப்பட்டன (பின்னிணைப்பு 3).

**நேர்காணலின் போது ஆய்வாளர் பின்வரும் கேள்விகளை ஆசிரியரிடம் கேட்டார்.**

1. உங்கள் கற்பித்தல் முறைகளில் நாடக உத்திகளை இணைப்பதன் நோக்கம் பற்றிக் கூறுங்கள்.

2. நாடக உத்திகளில் பேச்சுத்திறனை வளர்க்கும் கூறுகளாக நீங்கள் அடையாளப்படுத்துபவை எவை?

3. உங்கள் அனுபவத்தில், பாடத்திட்டத்தில் நாடக உத்திகளை ஒருங்கிணைத்ததன் விளைவாக மாணவர்களின் பேச்சுத்திறன் மேம்பாடு அடைகிறதா? அந்த மேம்பாட்டை எவ்வாறு அடையாளப்படுத்துகிறீர்கள்?

4. மாணவர்களிடையே கூட்டு மற்றும் தொடர்பு திறன்களை (collaborative and communicative skills) வளர்ப்பதற்கு நாடக நடவடிக்கைகள் எவ்வாறு பங்களிக்கின்றன?

5. மாணவர்களின் பேச்சுத் திறனை வளர்ப்பதற்கு நாடக உத்திகளைப் பயன்படுத்துவதில் ஏதேனும் சவால்களைச் சந்தித்திருக்கிறீர்களா, அவற்றை எவ்வாறு எதிர்கொண்டீர்கள்?

**நேர்காணலின் போது ஆய்வாளர் பின்வரும் கேள்விகளைப் பெற்றோரிடம் கேட்டார்.**

1. உங்கள் பிள்ளை பள்ளியில் தான் கலந்துகொள்ளும் நாடக நடவடிக்கைகள் பற்றி உங்களிடம் பகிர்ந்துகொள்வாரா? அதுபற்றிப் பகிருங்கள்.

2. நாடக நடவடிக்கைகளில் பங்கேற்கத் தொடங்கிய பின், உங்கள் பிள்ளையின் பேச்சுத்திறனில் ஏற்பட்ட மாற்றங்கள், மேம்பாடுகள் பற்றி கூறமுடியுமா?

3. பொது இடங்களில் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் திறனில் (உரையாடல், விளையாட்டு) அவரது மொழி மேம்பாடு அடைந்திருக்கிறதா?

4. நாடகங்களில் பங்கேற்பதன் வழி தன்னம்பிக்கை பெறுகிறாரா?

5. நாடகம் தொடர்பான பயிற்சிகளில் அவருக்கு ஆர்வம் இருக்கிறதா? வீட்டில் நாடகப்பயிற்சியில் ஈடுபடும் வழக்கம் உண்டா?

இவ்வாறு, நேர்காணல்கள் வழியாகவும் தொடர்பு நூல் ஆய்வு வழியாகவும் சேகரிக்கப்பட்ட தரவைப் பயன்படுத்தி, தமிழ்

மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களின் பேச்சுத் திறனை வளர்ப்பதில் நாடக உத்திகளின் பங்கு, நன்மைகள், சவால்கள் என்ன என்பதை விளக்குவேன்.

### ஆய்வு எல்லை

இந்த ஆய்விற்குப் பங்கேற்பாளர்களைத் தேர்ந்தெடுக்க அர்த்தமுள்ள தேர்வு செயல்முறை (purposeful sampling / selection) என்னும் அணுகுமுறை பயன்படுத்தப்பட்டது. இந்தச் செயல்முறையின் வழி, ஆய்வாளர் தன் பங்கேற்பாளர்களை ஒரு குறிப்பிட்ட அளவுகோல்களின் அடிப்படையில் தேர்ந்தெடுத்தார். தரவுகளின் நம்பகத்தன்மையையும் தரமும் அதிகரிக்க இந்தச் செயல்முறை பின்பற்றப்படுகிறது.

### சேர்த்தல் அளவுகோல்கள் (inclusion criteria)

1. நேர்காணலில் பங்கேற்கும் தமிழ் ஆசிரியர்கள் சிங்கப்பூர் அரசாங்கப் பள்ளிகளில் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பவராக இருக்க வேண்டும்.

2. நேர்காணலில் பங்கேற்கும் தமிழ் ஆசிரியர்கள் குறைந்தது மூன்று ஆண்டுகள் கற்பித்தல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

3. நேர்காணலில் பங்கேற்கும் தமிழ் ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தலில் நாடக உத்திகளைப் பயன்படுத்துபவராக இருக்க வேண்டும்.

4. நேர்காணலில் பங்கேற்கும் தமிழ் ஆசிரியர்கள் பாலர் பள்ளி மற்றும் தொடக்கப் பள்ளி தமிழ் ஆசிரியர்களாக இருக்க வேண்டும்.

5. நேர்காணலில் பங்கேற்கும் பெற்றோர்களின் பிள்ளைகள் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களாக இருக்க வேண்டும்.

6. நேர்காணலில் பங்கேற்கும் பெற்றோர்களின் பிள்ளைகள் தமிழ் நாடகப் பயிற்சிகளில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

### நீக்குதல் அளவுகோல்கள் (Exclusion criteria)

1. பெற்றோர்கள் தமிழ் பேசாதவர்களாக இருந்தால் ஆய்விலிருந்து நீக்கப்படுவார்கள்.

2. பெற்றோர்களின் பிள்ளைகள் தனியார் பள்ளிகளில் மாணவர்களாக இருந்தால் ஆய்விலிருந்து நீக்கப்படுவார்கள்.

3. உயர்நிலை அல்லது கல்லூரி ஆசிரியர்களாக இருந்தால் ஆய்விலிருந்து நீக்கப்படுவார்கள்.

இவ்வாறு, மேற்குறிப்பிட்ட அளவுகோல்கள் அடிப்படையில் பங்கேற்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பக்கச்சார்பற்ற தரவுகளைச் சேகரிக்க, நேர்காணலுக்கு ஆண்களும் பெண்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் பங்கேற்பாளர்களை நேர்காணல் செய்வதில் உள்ள சிரமங்களின் காரணமாக, பத்துப் பங்கேற்பாளர்கள் மட்டுமே நேர்காணலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும் ஒப்புதல் படிவமும் அவர்கள் கலந்துகொள்ளும் ஆய்வின் விவரங்களும் அளிக்கப்பட்டன. ஆய்வாளர் பங்கேற்பாளர்களை மெய்நிகர் (Zoom) வழியாக நேர்காணல் செய்தார். பங்கேற்பாளர்களின் அடையாளத்தை மறைக்க முகங்கள் காட்டப்படவில்லை; அவர்களின் பெயர்களும் மறுபெயரிடப்பட்டன. பங்கேற்பாளர்களின் குரல்கள் மட்டும் பதிவு செய்யப்பட்டன.

### தரவுப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

ஆய்வாளர் நேர்காணலில் ஆசிரியர்களிடமும் பெற்றோர்களிடமும் ஐந்து கேள்விகளைக் கேட்டார். நேர்காணலின் போது பங்கேற்பாளர்களின் பதில்களுக்கு ஏற்பத் தூண்டுதல் கேள்விகளும் கேட்கப்பட்டன. பங்கேற்பாளர்களின் ஒலிப்பதிவுகள் எழுத்து வடிவமாக்கப்பட்டன. நேர்காணல்கள் சுமார் ஐந்திலிருந்து முப்பது நிமிடங்களுக்கு இருந்தன. நேர்காணலின் வழி கிடைக்கப்பட்ட கருத்துகள் கேள்வி அடிப்படையிலும் ஆய்வின் நோக்கத்திற்கு ஏற்பவும் வகைப்படுத்தி ஆராயப்பட்டன.

**ஆசிரியர்களிடம் நேர்காணல் நிகழ்த்திய போது கிடைத்த பதில்கள்:**

ஆசிரியர்களிடம் தங்கள் கற்பித்தல் முறைகளில் நாடக உத்திகளை இணைப்பதன் நோக்கம் பற்றிக் கேட்டபொழுது அவர்கள் பின்வரும் பதில்களை அளித்தனர்.

"என்னுடைய பாடத்திட்டத்தில நாடக உத்திகளை இணைப்பதன் மூலம் என் மாணவர்கள் தமிழ் மொழியை நேசிக்கிறார்கள்." - அமுதா

"மாணவர்களைப் பேசத் தூண்டு வதற்காகத்தான் நாடக உத்திகளை என்னுடைய கற்பித்தல் முறைகளில் இணைக்கிறேன். அதே சமயம் மாணவர்களிடையே கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்த முடிகிறது. நாடகம் என்று சொன்னாலே மாணவர்கள் உற்சாகமாக ஆய்டுவாங்க" – மாலதி

"மாணவர்களுக்குச் சுயமா சிந்திக்கிற ஆற்றல் இருக்கு. அதை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்ப இந்த நாடக உத்திகள் வழி உருவாக்கிக் கொடுக்குறேன்" – ஷா

மேற்குறிப்பிட்ட பதில்களிலிருந்து ஆசிரியர்கள் மாணவர்களின் பேச்சுத்திறனை வளர்பதற்காகத்தான் நாடக உத்திகளைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. மேலும், மாணவர்கள் தமிழ் வகுப்புகளில் ஆர்வத்தோடு ஈடுபடவும் தமிழ் மொழியில் விருப்பத்தோடு பேசவும் நாடக உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. நேர்காணலில் பங்கேற்ற அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களின் பேச்சுத்திறனை வளர்க்கத்தான் இந்த நாடக உத்திகளைத் தங்கள் பாடத்திட்டத்தில் இணைத்துள்ளனர்.

ஆசிரியர்களிடம் நாடக உத்திகளில் பேச்சுத்திறனை வளர்க்கும் கூறுகளாக நீங்கள் அடையாளப்படுத்துபவை எவை? என்பதைக் கேட்டபொழுது அவர்கள் பின்வரும் பதில்களை அளித்தனர்.

"மாணவர்களைப் பேசத் தூண்டும் நடவடிக்கைகள்... உதாரணத்திற்கு முதன்மை இருக்கை (Hot seat), சிந்தனை கண்காணிப்பு (Thought tracking). இந்த நடவடிக்கைகளை வகுப்பில் புகுத்தும் போது மாணவர்கள் கண்டிப்பாகப் பேசத்தான் ஆக வேண்டும்..." – மாலதி

"மாணவர்களைக் கதையில் உள்ள கதாபாத்திரத்தை ஏற்று நடிக்கச் சொல்லும்போது பேச்சுத்திறன் வளர்கிறது. மாணவர்கள் கதையைத் தான் படிக்கிறாங்க, வசனத்தைப் படிக்கல. அதனால கதையை நன்கு புரிந்தால் தான் மாணவர்கள் சுயமாக வசனங்களை உருவாக்கிப் பேச முடியும்... இந்த வசனங்களைப் பற்றி கலந்துரையாடும் போதும் மாணவர்கள் நிறையா பேசுறாங்க..." – ராமு

"போலச் செய்தல் உதவியா இருக்கும்னு நான் நினைக்கிறேன். தமிழ்ல பேசச் சிரமப்படும் மாணவர்களுக்கும் தமிழே தெரியாத மாணவர்களுக்கும் இந்த உத்திமுறையைத்தான் நான் பயன்படுத்துவேன். மாணவர்களுக்கு எப்படித் தங்களின் எண்ணங்களைத் தமிழில் கூறுவது என்று தெரியாது. அப்போது நான் என்ன சொல்வேனா, அவங்களுக்கு எந்த மொழியில பேசுறதிற்குச் சுலபமா இருக்கோ அந்த மொழியில பேசச் சொல்லிட்டு, அதற்கு அப்புறம் அவங்க சொன்னத தமிழல மொழி பெயர்த்து; என்னைய பின்தொடர்ந்து பேசச் சொல்லுவேன். இதன் வழி அவங்களுடைய மொழி வளம் கூடுதலா வளருது." – அமுதா

மேற்குறிப்பிட்ட பதில்களிலிருந்து ஆசிரியர்கள், முதன்மை இருக்கை (Hot seat), சிந்தனை கண்காணிப்பு (Thought tracking), போலச் செய்தல் (Imitation), பாகம் ஏற்று நடித்தல் (Role play) போன்ற நாடக உத்திகளைப் பயன்படுத்துகிறார்கள் என்று தெரிகிறது. ஆசிரியர்கள் மேலே குறிப்பிட்டுள்ள நாடக உத்திகள் பேச்சுத்திறனை வளர்க்கும் கூறுகளாகத் திகழ்கின்றன. மேலும், இது போன்ற உத்திகளின் வழி மாணவர்களின் பேச்சுத்திறன் மட்டும் இல்லாமல், சொல் வளம், சிந்தனை ஆற்றல் ஆகிய திறன்களும் வளர்கின்றன. நேர்காணலில் பங்கேற்ற 5 ஆசிரியர்களில் 3 ஆசிரியர்கள் முதன்மை இருக்கை, அசையாநிலை (Freeze

*Frame*) என்னும் நாடக உத்திகளைத் தங்கள் கற்பித்தலில் பயன்படுத்துகின்றனர். 5 ஆசிரியர்களில் 4 ஆசிரியர்கள் போலச் செய்தல் என்னும் நாடக உத்தியைத் தங்கள் கற்பித்தலில் பயன்படுத்துகின்றனர். நேர்காணலில் பங்கேற்ற அனைத்து ஆசிரியர்களும் பாகம் ஏற்று நடித்தல் என்னும் நாடக உத்தியைத் தங்கள் கற்பித்தலில் பயன்படுத்துகின்றனர். இதிலிருந்து, பாகம் ஏற்று நடித்தல், போலச் செய்தல் போன்ற உத்திமுறைகள் மாணவர்களின் பேச்சுத்திறனை வளர்க்கப் பரவலாகப் பயன்படுத்தப்படும் உத்திமுறைகள் என்பதை அறியலாம். இவ்வாறு ஆசிரியர்கள் மாணவர்களின் பேச்சுத்திறனை வளர்க்கத் தங்கள் கற்பித்தலில் பல்வேறு நாடக உத்திகளை இணைத்துள்ளனர்.

ஆசிரியர்களிடம் தங்கள் அனுபவத்தில், பாடத்திட்டத்தில் நாடக உத்திகளை ஒருங்கிணைத்ததன் விளைவாக மாணவர்களின் பேச்சுத்திறன் மேம்பாடு அடைகிறதா? அந்த மேம்பாட்டை எவ்வாறு அடையாளப்படுத்துகிறார்கள்? என்பதைக் கேட்டபொழுது அவர்கள் பின்வரும் பதில்களை அளித்தனர்.

“கண்டிப்பா, அது வந்து உதவி செய்துனு நான் சொல்லுவேன். ஏனா, இப்ப நீங்க பாத்தீங்கனா, ஆரம்பத்திலிருந்தே தவணை ஒன்று, இரண்டில் நீங்க பாத்தீங்கனா பிள்ளைங்க வந்து ரொம்பக் கூச்சப் படுவாங்க பேசுறதுக்கு. அது மட்டும் இல்லாம, அவங்களுக்கு வந்து அந்த மொழித்திறன் அவளவா இருக்காது. இப்ப தவணை ஒன்று, இரண்டில முன்ன சொன்ன மாதிரி பிள்ளைங்க ரொம்பக் கூச்சப்படுவாங்க... இந்த மாதிரி நாம உத்திகள பயன்படுத்திப் பயன்படுத்தி, இப்ப நான் வந்து என்ன பாக்குறேன்னா தவணை நான்குக்குள்ள அவங்களால நல்ல தமிழ்ல சரளமா பேச முடியுது. அது மட்டும் இல்லாம அவங்களால நல்ல தன்னம்பிக்கையுடன், நல்லா பேச முடியுது” – ஸ்ருதி

“கண்டிப்பா மேம்பாடு அடைகிறது. முக்கியமா இதைத் தொடக்கநிலை ஒன்று, இரண்டு மாணவர்களுக்கிட்டப் பாக்குறேன். மாணவர்கள் வந்து ஜனவரி மாதம், வாரம் ஒன்று இரண்டுல வரும்போது, ஒரு சில மாணவர்கள் என்கிட்டே வந்து ஆசிரியை “*I can’t speak in Tamil*” அப்படினு சொன்னாங்க. இப்போ பாத்தீங்கனா நாடக உத்திகள் அவங்களுடைய பயத்தை முழுமையா போக்கிடுச்சு... அப்போ வாரம் ஒன்று ல வந்து ஒரு வாக்கியத்துள்ள ஒரு தமிழ் சொல் மட்டும்தான் இருந்துச்சு. இப்போ என்னால ரொம்ப நிச்சயமா சொல்ல முடியும், என் மாணவர்கள் இப்ப வந்து ஒரு வாக்கியம் பேசுறாங்கனா அதுள்ள ஒரு ஆங்கிலம் சொல்தான் இருக்கும்.” – ஷா

“ஆமா மேம்பாடு அடைகிறது. அவங்க வந்து கேட்பாங்க, “நம்ம வந்து இந்த வாட்டி நாம ஆடலாமா, பாடலாமா, அந்த மாதிரி நடிக்கலாமானு கேட்பாங்க. இதிலிருந்து அவங்களுக்கு நாடகம் எவ்வளவு பிடிச்சிருக்குனு தெரிஞுக்கலாம். பள்ளில போன வருடம் நம்ம இன்னொரு நாடகக் குழுவோட இணைந்து மாணவர்களுக்கு எட்டு வாரங்களுக்கு நாடகப் பயிற்சி கொடுத்தோம். இறுதி வாரம் மாணவர்கள் சேர்ந்து ஒரு நாடகம் நடித்தார்கள். அவங்களுக்கு ஒரு தன்னம்பிக்கை வந்துச்சு பள்ளி மேடை மேல ஏறி நடிச்சதனால. மேலும், சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த முகப் பாவனையாளர், இந்த மாதிரி நிறைய பரிசுகள் கொடுக்கவும் அவங்களுக்கு ஒரு வெற்றி கிடைச்ச மாதிரி இருந்துச்சு.” – ராமு

மேற்குறிப்பிட்ட பதில்களிலிருந்து, ஆசிரியர்கள் நாடக உத்திகளைக் கற்பித்தலில் இணைத்ததன் வழி, மாணவர்கள் ஆங்கிலத்தில் பேசுவதைக் குறைத்துள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது. மேலும், மாணவர்கள் காலப்போக்கில் தமிழ் மொழியில் சரளமாகவும், தன்னம்பிக்கையாகவும் பேசுகிறார்கள். மாணவர்களுக்குத் தமிழ் மொழி மீதும், நாடகக் கலை மீதும் ஓர் ஆர்வம் ஏற்பட்டுள்ளதையும் காண முடிகிறது. இவ்வாறு, நேர்காணலில் பங்கேற்ற அனைத்து ஆசிரியர்களும், பாடத்திட்டத்தில் நாடக உத்திகளை ஒருங்கிணைத்ததன் விளைவாக மாணவர்களின் பேச்சுத்திறன் மேம்பாடு அடைந்துள்ளது என்றுதான் குறிப்பிட்டுள்ளனர்.

ஆசிரியர்களிடம் மாணவர்களிடையே கூட்டு மற்றும் தொடர்பு திறன்களை (collaborative and communicative skills) வளர்ப்பதற்கு நாடக நடவடிக்கைகள் எவ்வாறு பங்களிக்கின்றன? என்பதைக் கேட்டபொழுது அவர்கள் பின்வரும் பதில்களை அளித்தனர்.

“நாடக நடவடிக்கைகள் இரண்டையும் வளர்கிறதுதான்னு சொல்லுவேன். நாடக நடவடிக்கையின் போது பேச்சு வழி கருத்துப் பரிமாற்றம் (communication skills) அதிகமாகவே நடைபெற்றது. என் வகுப்புள்ள படிக்கற மாணவர்கள் பெரும்பாலும் வீட்டில் வந்து ஆங்கிலம்தான் பேசுவாங்க. அதனால அவங்களுக்கு வந்து தமிழ்ல அதிகமா பேசுறதுக்கு வாய்ப்பு கொடுக்கனும். இப்ப என் வகுப்புல தமிழ் பேசாத மாணவர்கள் தமிழ்ல பேச முயற்சி செய்யறாங்க. மற்ற மாணவர்கள் என்ன கேட்குறாங்க என்கிறத புரிஞ்சு சுயமா தமிழ்ல பேசுறாங்க... கூட்டுத்திறன் பாத்தீங்கன்னா, நான் பெரிய புத்தகம் படிக்கறதுக்கு முன்னாடி

அவங்க கிட்ட இந்தக் கதை எதைப் பற்றியது? என்ன நடந்திருக்கும்? அப்படினு கேட்பேன். மாணவர்கள் குழுவாகச் சேர்ந்து கலந்துரையாடி அவங்களுடைய யூகங்களை என்கிட்ட சொல்லுவாங்க. கதையைப் படிச்சு முடிச்சதுக்கு அப்புறம் தான் அவங்களுக்கு அவங்களுடைய யூகம் சரியா? தவறா? என்பது தெரிய வரும். அப்பொழுதும் அவங்க தங்களுக்குளையே கலந்துரையாடல் செய்வாங்க. அவங்க கலந்துரையாடலின் போது ஆங்கிலத்தில் பேசுனாங்கனா அத எப்படித் தமிழ்ல சொல்லலாம் என்று கேட்டு அவங்கள தமிழ்ல பேச ஊக்குவிப்பேன்.” – அமுதா

“மாணவர்கள் ஒரு நாடகத்துள்ள நடிக்கும் போது அத அவங்க தனியாச் செய்யவில்லை. பெரும்பாலான நேரத்துள்ள அவங்க வந்து ஒரு குழுவாகத்தான் செய்றாங்க. அப்படி இருக்குற பட்சத்துல, அவங்களுக்கு அந்தத் தலைப்பு பத்தியோ, இல்ல நாடகத்த பத்தியோ, இல்ல அவங்க படிச்ச கதையைப் பற்றியோ பேசுறதுக்கான வாய்ப்புகள் இருக்கு. தொடக்கநிலை மூன்று, நான்கு மாணவர்கள பாத்தீங்கனா, அவங்க படித்த கதைய வந்து மாற்றி அமைக்கிற மாதிரி நான் கொடுத்தேன். அப்போ, அவங்க வந்து அத என்ன பண்ணலாம்? எப்படி மாத்தலாம்? என்பத ஒருவர் மட்டுமே முடிவு செய்ய முடியாது. மாணவர்கள் எல்லாரும் சேர்ந்து முடிவு எடுப்பாங்க. அப்போ ஒவ்வொருத்தருடைய பங்களிப்பும் இருகண்ணும், ஒவ்வொருத்தருடைய கருத்துகளையும் அவசியம் உள்ள கொண்டு வறுவதுக்கு மாணவர்கள் முயற்சி செய்வாங்க. இந்த மாதிரி அவங்க ஒன்றாகச் சேர்ந்து செயல்படுவது ஒரு நல்ல வழியா இருக்கும். அதே சமயம் தொடர்பு திறன்கள் (Communication skills) பாத்தீங்கனா நாடகத்துள்ள ஈடுபடும் போதே அவங்க நிறையப் பேசுறதுக்கான வாய்ப்புகள் இருக்கு. அது மட்டுமில்லாம, அவங்க குழுவாகக் கலந்துரையாடல் செய்யும் போது மாணவர்கள் தங்களுடைய கருத்துக்களக் கூறவேண்டிய நிலையிலும் வைக்கப்பட்டுறாங்க. வகுப்பாகக் கலந்துரையாடல் செய்யும் போது அதிகமா பேசுற மாணவர்கள் அடிக்கடி பேசிக்கிட்டே இருப்பாங்க. அப்போ எல்லா மாணவர்களுடைய கருத்துகளையும் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியாது. ஆனால், ஒரு சின்னக் குழுவாகச் சேர்ந்து நடிக்கும் போது அதிகமா பேசாத மாணவனுக்கும் பேச ஒரு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. அதுமட்டுமில்லாம ஒரு குழுவாகச் செயல்படும்போது, (ஒரு குழு மூன்று பேரு, நான்கு பேரு இருப்பாங்க) அந்த நேரத்துல அதிகமா பேசாத மாணவர் கூடத் தைரியமா, கூச்சமின்றிப் பேசுவதற்கு முற்படறாங்க.” – ஷா

“நாடக உத்திகள் கொண்ட நடவடிக்கைகள் செய்யும் போது பெரும்பாலும் அவங்க வந்து குழுவாகச் செயல்படுவாங்க. உதாரணத்திற்குத் தொடக்கநிலை மூன்று, நான்கு மாணவர்கள் அசையா நிலை (Freeze frame) நடவடிக்கை செய்யும் போது... அந்தத் தருணத்துள்ள கதையை எப்படி மாற்றியமைக்கலாம்?, கதாபாத்திரங்கள் என்ன செய்யலாம்? என்பத மாணவர்கள் கலந்துரையாடுவாங்க. அந்த நேரத்துள்ள ஒரு ஆசிரியரா நான் வந்து மாணவர்களுடைய கலந்துரையாடல வந்து சும்மா மேற்பார்வையாளரா மட்டும் அங்கிருந்து

பாத்துட்டு இருப்பேன். அவங்க எப்படிப் பேசுறாங்க? எப்படி வந்து நடிக்கிறாங்க என்பத பார்க்க முடியும். அப்ப அதுல வந்து அவங்க நிறைய சுய கருத்துகளைத் தங்கள் நண்பர்களிடம் தெரிவிக்கிறாங்க. அப்பொழுது நிறையப் பேச்சு வழி கருத்துப் பரிமாற்றம் நடப்பெறுகிறது. அப்ப மாணவர்கள் அது வந்து எப்படிச் செய்றாங்க? எப்படி வந்து ஒரு முடிவுக்கு வருவாங்க? என்பத பார்க்க முடிகிறது. அந்த மாதிரி உத்திகளைப் பயன்படுதுவதால நிறைய communication அதாவது தொடர்பு திறன்கள் நடைபெறுகிறது. மாணவர்கள் இதத் தனியாச் செய்யாமா குழுவா செய்யும் போது கூட்டுத் திறன் (Collaborative skills) வளர்கிறது.'' – ராமு

மேற்குறிப்பிட்ட பதில்களிலிருந்து, மாணவர்கள் நாடக நடவடிக்கையில் ஈடுபடும்போது இயல்பாகவே குழுவாகக் கலந்துரையாடல் செய்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளலாம். குறிப்பாக மாணவர்கள், 'அசையா நிலை' (Freeze frame) என்னும் நடவடிக்கையில் ஈடுபடும்போது, குழுவாகச் சேர்ந்து கலந்துரையாடல் செய்கின்றனர்.

இதன் வழி மாணவர்களிடையே கருத்துப் பரிமாற்றமும் நடைபெறுகிறது என்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். இவ்வாறு, வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களும் பேசுவதற்கான வாய்ப்பை இந்த நாடக நடவடிக்கைகள் வழங்குகின்றன என்பது நேர்காணலில் பங்கேற்ற அனைத்து ஆசிரியர்களின் கருத்தாகும்.

ஆசிரியர்களிடம் மாணவர்களின் பேச்சுத் திறனை வளர்ப்பதற்கு நாடக உத்திகளைப் பயன்படுத்துவதில் ஏதேனும் சவால்களைச் சந்தித்திருக்கிறார்களா?, அவற்றை எவ்வாறு எதிர்கொண்டார்கள்? என்று கேட்டபொழுது அவர்கள் பின்வரும் பதில்களை அளித்தனர்.

"இப்ப அசையா நிலை (Freeze frame) நாடக நடவடிக்கை எடுத்துகிட்டா, மாணவர்கள் அத தனியாச் செய்யலாம். அல்லது, குழுவா கூடச் செய்யச் சொல்லலாம். இந்த நடவடிக்கையைக் குழுவாகச் செய்யும் போது நிறைய, வெவ்வேறு கருத்துக்கள் வரும். அதுவும் சின்னப் பிள்ளைங்க வந்து ஆர்வமாதான் பேசுவாங்க. ஆனா அந்த மாதிரி அவங்க சுயக் கருத்துக்களை வந்து முன்வைக்கும் போது, அங்கச் சில மாற்றுக் கருத்துகள் ஏற்பட வாய்ப்பு இருக்கு. அந்த மாதரி என் வகுப்பிலும் நடந்துருக்கு. அதெல்லாம் எப்படி வந்து நான் சமலித்தேன்னா? இத ஒரு 'கற்கத் தக்க தருணமா' மாதிக்கிட்டேன். இந்த மாதிரி சில சம்பவங்கள் வந்து எடுத்துக்கிட்டு நான் அதைப்பற்றி மாணவர்கள் கிட்டப் பேசினேன். இப்ப ஒருத்தவங்க கருத்து சொல்லும்போது நம்ம எப்படி அதை ஏற்றுக்கொள்ளலாம்? இதுவே எனக்கு மாற்றுக் கருத்து இருந்தால் அது எப்புடி நான் வந்து சொல்லலாம்? 'முடியாது!, நான் சொல்றது தான் சரி!' இந்த மாதிரிலாம் சொல்றதுக்கு பதிலாக என்ன சொல்லாம் என்கிறத கற்றுக்கொடுக்கனும்.'' – மாலதி

"ஆமா இதலெயும் சவால்கள் இருக்குது. என் பள்ளில வந்து எனக்கு ரொம்பக் கம்மியான பிள்ளைங்க இருக்காங்க. சில நேரத்துல வந்து ஒன்று அல்லது இரண்டு பிள்ளைங்க தான் வருவாங்க. அப்படி இருக்கும் போது, அவங்களுக்கு பேசுறதுக்குக் கொஞ்சம் கஷ்டமா இருக்கும். இப்ப ஒரு கதையில நிறையக் கதாபாத்திரங்கள் இருக்கு. உதாரணத்திற்கு வந்து அந்தக் கதைல வந்து நான்கு கதாபாத்திரங்கள் இருக்குனு வைத்துக்கொள்ளுவோமே, எனக்கு இப்போ ரெண்டு பிள்ளைங்க தான் இருக்காங்க. இப்ப இவங்க ரெண்டு பேரு தான் கதையில உள்ள கதாபாத்திரங்களாகப் பாகமேற்று நடிப்பாங்க. அதுனால அவங்களுக்கு கஷ்டமா இருக்கும். ஆனால், நான் என்ன சொல்லுவேனா பரவால்ல நீங்களே எல்லாக் காதாப்பாத்திரமாக மாறி, மாறி நடிக்கலாம். ஒரு மாணவர் ரெண்டு கதாபாத்திரங்களாக நடிக்கலாம் என்று சொல்லுவேன். வெவ்வேறு முகமூடிகள பயன்படுத்தி, குரல மாற்றி அந்தக் கதாபாத்திரங்கள நடிக்கலாம் என்று என் மாணாவர்களிடம் சொல்லுவே. இதன் மூலமா அவங்க வெவ்வேறு சூழலுக்கு ஏற்பக் குரலை மாற்றிப் பேசக் கத்துக்குறாங்க.'' – ஸ்ருதி

"முதல வந்து எனக்கு நேரம் ஒரு பெரிய சவாலா இருக்குன்னு சொல்லுவேன். தமிழ் வகுப்புக்குனு பாதீங்கனா ஒன்றிலிருந்து, மூன்று

பாடவேளைகள்தான் இருக்கு. தொட்டக்கநிலை ஒன்று மாணவர்கள எல்லாம் கூடிக்கொண்டு வகுப்பறைக்கு வந்து வகுப்ப முறைப்படி ஆரம்பிக்கறதுக்கே ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் ஆகிடும். அதுக்கப்புறம் நான் நாடக நடவடிக்கையைப் பற்றி அறிமுகமும் செய்ய வேண்டும். இதே வந்து நாடக உத்திய பயன்படுத்தாம வகுப்ப நடத்தினா அந்தப் பாடத்த என்னால வந்து ஒரு அரைமணி நேரத்தில் முடிக்க முடியும். ஆனா, இப்ப நாடக உத்திய பாடத்திற்கு உள்ள புகுத்துவதுனால எனக்கு வந்து 45 நிமிடங்களோ இல்ல 50 நிமிடங்களோ ஆகும். ஏன்னா, ஒவ்வொரு குழுவும் வந்து அவங்க தயாரித்தத நடிக்கணும், அந்தக் கலந்துரையாடலுக்கான நேரத்தையும் நான் கொடுக்க வேண்டியது இருக்கோம், அதுக்கப்புறம் ஒவ்வொரு குழுவா முன்வந்து நடிச்சு முடிச்சுக் காட்ட வேண்டும். அதனால, நேரம் ஒரு பெரியா சவாலா இருக்கு. ஆனா, மாணவர்கள் நாடக நடவடிக்கைகான விதிமுறைகளை அறிந்து செயல்பட்டாங்கனா வகுப்பை உரிய நேரத்துக்குள்ள முடிக்க முடியும். அதுனால, மாணவர்களிடம் நமது எதிர்பார்ப்புகளையும் விதிமுறைகளையும் நன்கு விளக்க வேண்டும். இத அவங்களுக்குத் தொடர்ந்து பயிற்சி கொடுத்தா சரியான நேரத்துக்குள்ள பாடத்த முடிக்கலாம்.'' – ஷா

மேற்குறிப்பிட்ட பதில்களிலிருந்து, ஆசிரியர்கள் நாடக உத்திகளைக் கற்பித்தலில் இணைப்பதால், வகுப்பு நேரம் பற்றாக்குறை, மாணவர்களிடையே மனக் கசப்புகள் போன்ற சவால்கள் ஏற்படுகின்றன. மேலும், வகுப்பறை சூழல் காரணமாகவும் ஆசிரியர்கள் நாடக உத்திகளைக் கற்பித்தலில் இணைக்கச் சிரமப்படுகிறார்கள். இவ்வாறு, நாடக உத்திகளைப் பயன்படுத்துவதில் பல சவால்கள் இருந்தாலும் அதிலிருந்து பெரும் பயன் மிகையாகும் என்பது நேர்காணலில் பங்கேற்ற அனைத்து ஆசிரியர்களின் கருத்தாகும்.

### பெற்றோர்களிடம் நேர்காணல் நிகழ்த்திய போது கிடைத்த பதில்கள்:

பெற்றோர்களிடம் அவர்களது பிள்ளை பள்ளியில் அல்லது வெளியே வகுப்புகளில் கலந்துகொள்ளும் நாடக நடவடிக்கைகள் பற்றி அவர்களிடம் பகிர்ந்துகொள்வாரா? அதுபற்றிப் பகிருங்கள் என்று கூறியபோது அவர்கள் பின்வரும் பதில்களை அளித்தனர்.

“அவங்க தொடக்கப் பள்ளியில் இருக்கும் போது, அவங்க பள்ளி வந்து நாடகப் பட்டறைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தாங்க. அந்த நாடகப் பாட்டறைக்குப் போயிட்டு வந்த பிறகு, அவங்க அந்தப் பட்டறையைப் பற்றிப் பகிர்ந்துகொண்டாங்க. வெவ்வேறு கதாபாத்திரங்கள ஏற்று நடித்ததாகவும் பல நாடகப் பயிற்சிகள சொல்லிக் கொடுத்தாங்கனும் வந்து சொன்னாங்க. அவங்க அந்தப் பாகங்களை ஏற்று நடிக்கும்போதும், அதற்குப் பயிற்சிகள் செய்யும் பொழுதும் அவங்களுக்கு முதல்ல ரொம்பப் பயமா இருந்துச்சு, கூச்சமா இருந்துச்சுனு சொன்னாங்க. பிறகு, தொடர்ந்து வகுப்புகளுக்குச் செல்ல, செல்ல அவங்க அந்த நாடகப் பட்டறையில் ஆர்வத்தோடு கலந்துகொண்டாங்க. அப்புறம் அந்தப் பயிற்றிவிப்பாளரும் எப்படி வந்து அவங்களுக்கு கூச்சத்தையும் பயத்தையும் போக்கி மேடையில நடிக்கிறது என்பத பற்றிக் கற்றுக்கொடுத்தாரு. பிறகு, அவங்க தன்னம்பிக்கையுடன் மேடையில நடித்தாங்க.'' – உஷா

“ஆமா என் பையன் வந்து நாடக வகுப்புகளுக்குப் போறாரு. அவர் வந்து கடந்த... ஒரு வருஷமா நாடக வகுப்புகளுக்குப் போறாரு. அது வந்து ஒவ்வொரு வாரம் நடக்கும். ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை அந்த நாட வகுப்பு நடக்குது. ஒரு மூன்று மணிநேரம் அந்த வகுப்புக்குப் போவாரு. அங்க என்ன நடந்துச்சு என்பத பற்றியெல்லாம் சொல்லுவாரு, எல்லாத்தையும் சொல்லுவாருனு சொல்ல முடியாது. வீடுக்கு வரும் போதே ரொம்பக் கலைப்பா வருவாரு. ஆனா, அங்கக் கற்றுக்கொடுக்கப்படும் சில நடவடிக்கைகளைப் பற்றிச் சொல்லுவாரு. இனிக்கு நான் வகுப்புல மூச்சுப் பயிற்சி செஞ்ச, பாத்திரம் ஏற்று நடித்தேன், ஒரு நாடக வசனம் கொடுத்தாங்க, அத படிக்கச் சொன்னாங்க, என்னைய வசனங்கள் எழுதச் சொன்னாங்க, அப்படினு வந்து

சொல்லுவாரு.'' – புஷ்பா

"என் மகன் அவன் பள்ளியில நடக்குற நாடகப் பயிற்சிகள் பற்றி நிறைய பகிர்ந்து இருக்கான். அதுல எல்லாம் எனக்கு ஞாபகம் இல்ல. உதாரணத்துக்குச் சொல்லணும்னா, சென்ற வருடம் அவன் வகுப்புல ஒரு கதைய படிச்சு வகுப்புல நடித்துக் காட்டிருக்கான். இது ஏன் என் நினைவில இருக்குனா என் மகனோட வாழ்க்கையிலும் அந்தக் கதையில் வரும் நிகழ்வு நடந்திருக்கு. அந்தக் கதையில வந்து ஒரு மாணவி தொலைஞ்சு போய்டுவா. அந்த மாணவியோட தோழியின் அம்மா வந்து அவளப் பாத்துப் பாதுகாப்பா ஒரு பூங்காக்குக் கூட்டிட்டுப் போறாங்க... அந்தக் கதையோட முடிவுள வந்து அவங்க என்ன கருத்து சொல்லி இருக்காங்கனா, இந்த மாதிரி எதாவது தொலைந்து போனாலும், ஏதாவது அறியாம போயிட்டாலும் தைரியமா இருக்கனும். என் மகனும் வந்து ஒரு முறை அவனோட பாட்டு வகுப்புக்குப் போகும்போது அந்த மாதிரி தொலைஞ்சுட்டான். அப்போ அவன் என்ன சொன்னான்னா எங்க ஆசிரியர் சொன்னாங்க அந்த மாதிரி எதாவது தொலைஞ்சு போயிட்டா பயப்படக்கூடாது தைரியமா இருக்கணும் அப்படின்னு சொன்னாங்க. அதனால நான் வந்து பயப்படாம தெரியுமா என் அப்பாக்குக் கால் (call) பண்ணேன் அப்டின்னு வந்து சொன்னான். அதனால எனக்கு இன்னும் இது நினைவில் இருக்கு. இதிலிருந்து நாடகம் மூலமா கத்துக்குற ஒரு விஷயம் வந்து மாணவர்களுடைய வாழ்க்கையிலும் வந்து ஒரு தாக்கத்தை ஏற்படுத்துத்து என்பத அன்னைக்கு நான் தெரிஞ்சுக்கிட்டேன்'' – தீபா

மேற்குறிப்பிட்ட பதில்களிலிருந்து, நாடக நடவடிக்கைகள் மாணவர்களின் வாழ்க்கையில் பல தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளன என்பதை அறிந்துகொள்ளலாம். தமிழில் பேசக் கூச்சப்படும் மாணவர்கள் கூட நாடகப் பயிற்சிகள் வழி தைரியமாகப் பேசுகிறார்கள். அறியாத சூழல்களையும் நெருங்கி வருவதற்கு நாடகம் உதவிச் செய்துள்ளது என்பதைத் தீபாவின் கூற்றிலிருந்து அறிந்துகொள்ளலாம். நேர்காணலில் பங்கேற்ற பெற்றோர்களின் பிள்ளைகளில் மூவர் நாடகப் பட்டறைகள், துணைப்பாட வகுப்புகள் போன்றவற்றில் கலந்துகொண்டவர்கள். மற்ற இரு பிள்ளைகளும் தமிழ் வகுப்புகளில் நடைபெறும் நாடக நடவடிக்கைகளில் மட்டும்தான் கலந்துகொள்வர். இவற்றை நேர்காணலின் வழியாக அறியலாம் (பின்னிணைப்பு 3).

நாடக நடவடிக்கைகளில் பங்கேற்கத் தொடங்கிய பின், உங்கள் பிள்ளையின் பேச்சுத்திறனில் ஏற்பட்ட மாற்றங்கள், மேம்பாடுகள் பற்றிக் கூறுங்கள் என்று கேட்டதிற்குப் பெற்றோர்கள் பின்வரும் பதில்களை அளித்தனர்.

"நிச்சயம் மேம்பாடு இருக்குத் தான் சொல்லுவேன். ஏனா, முன்பு வந்து அவங்களுடைய தமிழ் குழந்தை தமிழ் (மழலை தமிழ்) மாதிரி இருக்கும். இப்ப நல்லா தெளிவா பேசுராங்க, அந்த வெட்கம், தயக்கம் இல்லாம பேசுராங்க'' - ருத்துரன்

"நாடக நடவடிக்கையில் ஈடுபட ஆரம்பித்த பிறகு என் பிள்ளை பேசுர விதம், சொல் வளம் வலர்ந்திருக்கு. முன்பு பேசும் போது நிறைய ஆங்கிலம் பயன்படுத்துவாரு. இப்ப அங்கிலத்தில சொல்றத அப்படியே தமிழ்ல சொல்றாரு. தமிழ் வார்த்தைகள இன்னும் தைரியமா பயன்படுத்தர மாதரி தெரியுது. – ராணி

"நாடக வகுப்புள்ள என் மகன் பல நாடகப் பயிற்சிகளை மேற்கொள்வாரு, அவ்வாறு செய்வதனால மேடையில நீண்ட நேரம் பேசுவதற்கும் சத்தமா பேசவதற்கும் உதவியா இருக்கு... பேசரதுக்கு அவருடைய preferred language வந்து ஆங்கிலம் என்று தான் சொல்லனும். ஆனா, இவரு இப்ப தமிழ் நாடகங்கள பங்கேற்பதுனால தமிழ் வசனங்கள மனனம் செய்கிறார். அதனால, அவருடைய சொல் வளமும் பெருகியிருக்கு. – புஷ்பா

மேற்குறிப்பிட்ட பதில்களிலிருந்து, பிள்ளைகள் நாடக நடவடிக்கைகளில் பங்கேற்கத் தொடங்கிய பிறகு அவர்களது தமிழ் பேச்சுத் திறனில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதைக் கண்டறிய முடிகிறது. நேர்காணலில் பங்கேற்ற பெற்றோர்களின் பிள்ளைகளில்

இருவர் மழலைத் தமிழில் பேசியதாகவும், நாடக நடவடிக்கைகளில் பங்கேற்கத் தொடங்கிய பிறகு அவர்களது பேச்சு தெளிவடைந்ததாகவும் கூறினர். குழந்தைகளின் பேச்சு, அனைவருக்கும் பிடித்த ஒன்றாகும். கொஞ்சலும், குலாவலுமாக ஆரம்பமாகும் மழலை மொழி, வயதிற்கு ஏற்ப முதிர்ச்சியானதாகவும், தெளிவானதாகவும் மாறும். ஆனால், சிலருக்கு நீடித்துக்கொண்டே போகும். ஒருவர் குழந்தை பருவத்தைத் தாண்டிய பிறகும் உளறல் மொழியில் பேசுவது சரியல்ல. இந்த நாடகப் பயிற்சிகளின் வழி மாணவர்கள் மழலை பேச்சை விட்டுத் தெளிவாகப் பேசத் தொடங்குகிறார்கள். மேலும், அனைத்துப் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளின் சொல்வளமும் பெருகியுள்ளது என்று குறிப்பிட்டனர். இவ்வாறு, நாடக நடவடிக்கைகளின் வழி மாணவர்களின் பேச்சுத் திறன் மேம்பாடு அடைந்துள்ளது.

பொது இடங்களில் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் திறனில் (உரையாடல், விளையாட்டு) அவரது மொழி மேம்பாடு அடைந்திருக்கிறதா? என்று கேட்டதிற்குப் பெற்றோர்கள் பின்வரும் பதில்களை அளித்தனர்.

“அதோட மேம்பாடு இருக்குனு நினைக்கிற. ஏன்னா, முன்னாடியெல்லாம் விளையாட்டுத் திடலுக்குப் போனாலும் சரி மற்ற மாணவர்கள் பாக்கும் போது அவங்க ஆங்கிலத்துல பேசுறதுக்கு விருப்பபடுறாங்க. ஏன்னா, அதுதான் அவங்க மத்த, மத்த மாணவர்களிடம் பேசுறாங்க. நானும் அவருகிட்ட தமிழ் பேசக்கூடிய நண்பர்களைப் பார்க்கும் போது தமிழ்ல பேசலாம் இல்ல? அப்டின்னு கேட்பேன். சில நேரத்துல சரியான தமிழ் சொல்தான் பயன்படுத்துறெனா என்கிற பயத்துல தமிழ்ல பேச மாட்டார். ஆனா இப்போ, நாடகப் பயிற்சிகளின் மூலியமா அவருக்கு அது எந்தச் சொற்கள் பயன்படுத்தனும் என்கிரது தெரிகிறது.” – தீபா

“மேம்பாடு அடைந்திருக்காங்கனு நினைக்கிறேன். ஆங்கிலத்தில மட்டும் பேசிகிட்டு இருந்தவங்க இப்ப தமிழ்ல பேச ஆரம்பிச்சுருக்காங்க... ஒரு குறிப்பிட்ட அனுபவம் சொல்லனும்னா, நாடகப் பட்டறை முடிந்து அவங்கள வீட்டுக்கு அழைச்சுக்கிட்டு காடியில வரும் போது அவங்க முழுக்கத் முழுக்க தமிழ்ல பேசனா மாதிரி இருந்துச்சு. அத கேட்க ரொம்ப மகிழ்ச்சியா இருந்துச்சு. அது மட்டும் இல்லாம நாடக வசனங்கள அவங்க கற்றுக்கொள்ளக்கூடிய சொற்கள் வந்து, சில சொற்கள் வந்து இயல்பு வாழ்க்கைக்கு ஏற்புடையதாகத் தான் இருக்கு. அந்தச் சொற்கள அவங்க பயன்படுத்தும் பொழுது எனக்குக் கொஞ்சம் ஆச்சரியமா இருக்கும். ஏ உனக்கு இந்தச் சொல் தெரியுமா? அப்படினு கேட்பேன். அவங்க இது சாதாரணச் சொல் தானே அப்படின்னு கேப்பாங்க... அந்தப் பயிற்சி நேரத்துல அந்தப் பசங்க தமிழ்ல மட்டுமே பேசுறாங்க. அவங்களுக்கு கொடுக்கப்படும் விதிமுறைகளும் செயல் முறைகளும் தமிழ்லதான் இருக்கும். அதனால, ஒரு மணி நேரம் அங்க இருந்துட்டு வீட்டுக்கு வரும் பொழுது கொஞ்ம் நேரம் தமிழ்லையே பேசுறாங்க.” – உஷா

“மேம்பாடு அடைந்திருக்குனு சொல்லுவேன். முன்பெல்லாம் தமிழல கேள்வி கேட்டா, ஆங்கிலத்தில்தான் பதில் வரும். இப்ப தமிழல கேள்வி கேட்டா, தமிழலையே எனக்குப் பதில்கள் வருது. மற்ற நண்பர்களுடன் விளையாடும்போது புதிய புதிய தமிழ் சொற்களைப் பயன்படுதுகிறாரு. – ராணி

இதிலிருந்து, மாணவர்கள் நாடகப் பயிற்சியில் ஈடுபடுவதால் அவர்களை அறியாமலையே தமிழில் உரையாடத் தொடங்கியுள்ளனர் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. ஒரு சொல்லை அடிக்கடி கேட்டால், அதையே மீண்டும் கூறுவார்கள் பிள்ளைகள். அது போல மேற்குறிப்பிட்ட பிள்ளைகளும் தமிழ் பேசும் சூழலில் தொடர்ந்து இருப்பதால் அவர்களும் தமிழில் பேசுகின்றனர்.

தங்கள் பிள்ளைகள் நாடகங்களில் பங்கேற்பதன் வழி தன்னம்பிக்கை பெறுகிறாரா? என்று கேட்டதிற்குப் பெற்றோர்கள் பின்வரும் பதில்களை அளித்தனர்.

“ஆமா, நிச்சயமா... அவர் ஒரு முழு மேடை நாடகத்தில் நடித்ததைப் போய்ப் பார்த்தோம் எங்களுக்கே ரொம்ப ஆச்சரியமா இருந்துச்சு. இவளோ சரளமா தமிழ்ல பேசுராங்க என்பத பார்க்க ரொம்ப மகிழ்ச்சியா இருந்துச்சு.” – புஷ்பா

“என் மகள் ரொம்பக் கூச்சப்படுவாங்க பேசுறதுக்கு. இப்ப என்கிட்ட ரொம்பத் தைரியமா தமிழ்ல பேசுராங்க.... நிறையத் தலைமைத்துவத்தையும் (Leadership roles) பள்ளிகளில் மேற்கொள்கிறார். இதற்கு முக்கியக் காரணம் நாடகப் பயிற்சினு நினைக்கிறேன். அதுக்கப்புறம்தான் அவங்க ரொம்பத் தைரியமா பேச ஆரம்பிச்சாங்க.”- ருத்தரன்

“நிச்சியமா, நாடகத்துல மற்ற வயதில் உள்ள நடிகர்கள், உதவியாளர்கள் இருப்பாங்க. அவங்க எல்லாருகுடையும் தைரியமா பேசிப் பழக வேண்டும். முன்ப விட இப்ப அவங்கள் மேடையில நடிக்கிறத பாக்கும் போது அவங்களுக்குள்ள அந்தக் கூச்சம் விட்டுப்போன மாதரி இருக்கு. முன்பெல்லாம் தண்ணீர் கடையில் கூடத் தண்ணீர் வாங்கனும்னா நீங்களும் வாங்க நீங்களும் வாங்க அப்படினு கூப்பிடுவாங்க இப்ப அவங்களே தைரியாமா போய்க் கடக்காரர்களிடம் பேசுறாங்க. தமிழ் கடைக்காரர்களிடமும் கூச்சப்படாம தமிழ்ல பேசுறாங்க.” – உஷா

நேர்காணலில் பங்கேற்ற அனைத்துப் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகள் நாடக நடவடிக்கைகள் வழி தன்னம்பிக்கை பெறுகிறார்கள் என்று குறிப்பிட்டனர். இதிலிருந்து, மாணவர்கள் நாடக நடவடிக்கைகளில் பங்கேற்பதன் மூலம் தன்னம்பிக்கையுடன் தமிழில் பேசுவதற்கு முயற்சி செய்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

நாடகம் தொடர்பான பயிற்சிகளில் அவருக்கு ஆர்வம் இருக்கிறதா? வீட்டில் நாடகப்பயிற்சியில் ஈடுபடும் வழக்கம் உண்டா?

“அவருக்கு நாடகத்துள்ள நிறைய ஆர்வம் இருக்கு. வகுப்புல கற்றுக்கொண்ட நாடகப் பயிற்சிகள், கதைகள் அனைத்தையும் என்கிட்ட வந்து சொல்லுவாங்க. அவங்களுக்கு இபோ திரைப்படத்தின் மீதும் ஒரு மோகம் வந்துருக்கு. திரைப்படத்தில ஒரு கதாபாத்திரம் எப்படிப் பேசுவாங்களோ அதே மாதிரி என்கிட்ட செஞ்சு காட்டுவாரு. பள்ளியில ஒரு கதாப்பாத்திரத்தை ஏற்று நடிக்கும் போதும் அவரு அப்படிச் செய்ராரு.” – தீபா

“அவரு பள்ளியில கற்றுக்கொண்ட விலங்குகளின் பாத்திரம், ஓசை இத எல்லாத்தையும் வீட்ல செய்வாரு. அது மட்டும் இல்லாம நான் ஒவ்வொரு இரவும் தூங்குவதற்கு முன்பு தமிழ் கதை அல்லது ஆங்கிலக் கதை அவருக்குப் படித்துக் காட்டுவேன். அந்தக் குறிப்பிட்ட கதாபாத்திரங்கள் அல்லது விலங்குகள் வந்தா அவங்கள மாதிரியே நடித்துக் காட்டுவாரு”

– ராணி

“மேடை நாடகத்தில் நடிப்பதுனால நிறைய பயிற்சி செய்ய வேண்டியது இருக்கும். ஆனா, நான் அவருகிட்ட போய்ப் பயிற்சி செய் அப்படினு சொல்லத் தேவையில்ல. அவரே பொறுப்பா பயிற்சி செய்வாரு. தந் வசனங்கள் மட்டும் இல்லாம மற்றவர்களுடைய வசனங்களையும் மனனம் செய்வாரு. இதிலிருந்து ஆர்வத்தோடுதான் எல்லாத்தையும் செய்ராரு அப்படினு தெரிகிறது.” – புஷ்பா

நேர்காணலில் பங்கேற்ற அனைத்துப் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகள் நாடக நடவடிக்கைகளில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள் என்று குறிப்பிட்டனர். இதிலிருந்து, நாடகப் பயிற்சிகள் மாணவர்களை ஈர்த்துள்ளன என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

## முடிவுகள்

நேர்காணல்கள் வழி ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் கருத்துகளைத் தெரிந்துகொள்ள முடிந்தது. நேர்காணல்கள் வழி கிடைத்த இந்தத் தரவுகளைப் பகுப்பாய்வு செய்ததன் வழி கிடைத்த முடிவுகள் கீழே வருகின்றன.

| அதிகமாகப் பயன் படுத்தப்பட்ட நாடக உத்திகள் | பயன்கள் |
| --- | --- |
| பாகம் ஏற்று நடித்தல் (Role Playing) | •தமிழ் மொழியைப் பேசுவதற்கான ஒரு தளம். •சொல் வளம் பெருக்கம். |
| போலச் செய்தல் (Imitation) | •ஆங்கிலச் சொல்லுக்கான தமிழ் சொற்களை அறிந்தும், புரிந்தும் பேசுதல். •சொல் வளம் பெருக்கம். |
| முதன்மை இருக்கை (Hot Seat) | •தமிழ் மொழியைப் பேசுவதற்கான ஒரு தளம். •சிந்தனை திறன்களின் வளர்ச்சி. |
| அசையா நிலை (Freeze Frame) | •தமிழ் மொழியைப் பேசுவதற்கான ஒரு தளம். •சிந்தனை திறன்களின் வளர்ச்சி. •கூடிக் கற்றலுக்கு வழி வகுக்கிறது. |

*(நேர்காணலிலிருந்து பெற்ற தகவல்கள் – பின்னிணைப்பு 3)*

**நாடக உத்திகளின் பங்கு:**

பெரும்பாலான மாணவர்களின் இல்லங்களில் தமிழ் மொழி புழக்கம் இல்லாததால், "அவர்கள் தமிழ் மொழியைக் கண்டு பயப்படுகிறார்கள் (ராமு – ஆசிரியர்)". கிடைக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், மாணவர்களைத் தமிழ் மொழியில் ஆர்வத்துடன் பேசவும், தமிழ் மொழி மீதுள்ள பயத்தைப் போக்கவும் நாடக உத்திகள் கையாளப்படுகின்றன. இதுவே, நாடக உத்திகளின் பங்காகும். மாணவர்களுக்குக் கற்பனை வளம், சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் இருந்தாலும் அதை வெளிப்படுத்துவதற்குப் பல வாய்ப்புகள் இல்லை. எனவே, "மாணவர்களின் பல்வேறு திறன்களை வெளிக்காட்ட நாடக உத்திகள் ஒரு தளத்தை ஏற்படுத்திக்கொடுக்கின்றது (ஷா - ஆசிரியர்)." இவ்வாறு, நாடக உத்திகள் வழி மாணவர்களின் பேச்சுத்திறனை மேம்படுத்துவதே முக்கிய நோக்கமாக ஆசிரியர்கள் கொண்டுள்ளனர்.

இவ்வாறு, நாடக உத்திகளின் வழி தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களின் பேச்சுத்திறனை வளர்க்க முடிகிறது. தமிழ் மொழியைப் பேசச் சிரமப்படும் மாணவர்கள் எளிதில் பேசவும், தமிழ் வகுப்புகளில் ஆர்வத்துடன் ஈடுபடவும் இந்த நாடக உத்திகள் உதவுகின்றன.

**நாடக உத்திகளின் நன்மைகள்**

மாணவர்கள் நாடக உத்திகளின் வழி "இயல், இசை, நாடகம்" ஆகிய முத்தமிழின் சிறப்பைப் பற்றி அறிந்துகொள்வர். தமிழ் நாடகத்தில் வசங்கள் மட்டும் இல்லாமல், ஆடல், பாடல் போன்ற கூறுகளும் இருப்பதால் மாணவர்கள் அதில் விரும்பிக் கலந்துகொள்வர். நாடக உத்திகளின் வழி, பல புதிய தமிழ் சொற்களுக்கு அறிமுகமாகின்றனர். அந்தச் சொற்களை நாடகத்தில் பயன்படுத்தி நடிக்கும் போது அவர்களது மனதில் பதிந்துவிடுகின்றன. இதனால், மாணவர்களின் தமிழ்ச் சொல் வளம் பெறுகிறது. நாடக உத்திகளின் வழி மாணவர்களின் பேச்சுத் திறனை மட்டும் இல்லாமல் அவர்களது சிந்தனை ஆற்றலையும் தூண்டும். மாணவர்கள் வகுப்பில் சந்திக்கும் சூழல்கள், உண்மை வாழ்க்கையிலும் சந்திப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. எனவே, ஒருவர், இக்கட்டான சூழலில் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக் கூடாது, ஆகியவற்றை அறிந்துகொள்வர். மேலும், நாடகப் பயிற்சியின் உதவியால் மாணவர்கள் தன்னம்பிக்கையுடன் தங்களை வெளிப்படுத்துகிறார்கள்.

**நாடக உத்திகளைக் கற்பிப்பதில் ஏற்படும் சவால்கள்**

| சவால்கள் | தீர்வுகள் |
|---|---|
| 1.நேரமின்மை | •விதிமுறைகளை வலியுறுத்தல்.<br>•வகுப்பறை கலாச்சாரத்தில் கவனம் செலுத்துதல்.<br>•பாடத்திட்டத்தை வகுத்துக்கொண்டு திட்டமிடுதல் |
| 2. சத்தம் | • விதிமுறைகளை வலியுறுத்தல்.<br>•வகுப்பறை கலாச்சாரத்தில் கவனம் செலுத்துதல். |
| 3. மாணவர் பற்றாக்குறை | •ஆசிரியரும் பங்கேற்றல். |
| 4. பள்ளியின் ஒத்துழைப்பு | •பள்ளி தலைவர்களிடமும் சக ஆசிரியர்களிடமும் தங்கள் திட்டங்களையும் நோக்கங்களையும் பகிர்தல்.<br>•திட்டங்களை முன்பே தெரிவித்தல். |

*(நேர்காணலிலிருந்து பெற்ற தகவல்கள் – பின்னிணைப்பு 3)*

நாடக உத்திகளைக் கையாளுவதில் ஆசிரியர்களுக்கு ஏற்படும் மிகப் பெரிய சிக்கல் நேரமாகும். கல்வி அமைச்சு அமைத்திருக்கும் பாடத்திட்டத்தில் மாணவர்கள் அடைய வேண்டிய விரும்பத்தக்க நோக்கங்கள் பல உள்ளன. எனவே, ஆசிரியர்கள் அதில் நிச்சயம் கவனம் செலுத்த வேண்டும். நாடக உத்திகளை மாணவர்களிடம் அறிமுகப்படுத்துவதற்கு அதிக நேரம் செலவாகும். குறிப்பாக இளம் மாணவர்களுக்கு இந்தப் பயிற்சிகளின் நோக்கத்தைப் புரிந்துகொள்ளச் சிரமப்படுவார்கள். மேலும், நாடகப் பயிற்சியில் ஈடுபடும் போது மாணவர்கள் தங்களையே மறந்து அதிகமாகச் சத்தம் போடுவார்கள். மாணவர்கள் வகுப்பறை விதிமுறைகளை நன்கு அறிந்து அதைப் பின்பற்ற வேண்டும். வகுப்பறை கலாச்சாரமும், ஆசிரியர் – மாணவர் மற்றும் மாணவர் – மாணவர் உறவுநிலை சிறப்பாக இருந்தால்தான் நாடக உத்திகளை வகுப்பறையில் செயல்படுத்த முடியும். எனவே, நாடக உத்திமுறை பல பயன்களை அளித்தாலும் அதைச் செயல்படுத்துவது சற்றுக் கடினம்தான். இந்தச் சாவாளை சமாளிக்க ஆசிரியர்கள் முதலில் மாணவர்களைத் தயார்படுத்த வேண்டும். நடவடிக்கை விதிமுறைகள், குழுப்புள்ளிகள் போன்றவற்றை மாணவர்களின் வழக்கமான செயல்பாடுகளில் *(Setting routines)* இணைக்க வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பல நினைவூட்டல்களை அளிக்க வேண்டும். மாணவர்களுக்கு உதவி தேவைப்படும் போது சாரக் கட்டு *(Scaffolding)* போல் ஆசிரியர்கள் திகழ வேண்டும்.

பாலர் பள்ளிகளில் மாணவர்கள் குறைந்த எண்ணிக்கையில் காணப்படுவது வழக்கம். அவ்வகையில் ஆசிரியர்களும் மாணவர்களுடன் சேர்ந்து நடவடிக்கையில் ஈடுபடலாம். குறைந்த எண்ணிக்கை கொண்ட மாணவர்களுக்கு நடவடிக்கையை மாற்றியமைப்பது முக்கியம். பள்ளிகளில் நாடக நடவடிக்கைகளைச் செயல்படுத்தவும் நாடகம் தொடர்பான கற்றல் பயணங்கள் போன்றவற்றைச் செயல்படுத்தவும் பள்ளி மற்றும் சக ஆசிரியர்களின் ஆதரவு தேவை. அதற்கு, ஆசிரியர்கள் தங்கள் திட்டத்தின் நோக்கம் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். அவற்றை மற்றவர்களிடம் தெரிவித்து, திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு, நாடக உத்திகளைக் கற்பித்தலில் இணைப்பதால் பல சவால்கள் இருந்தாலும், அனைத்து ஆசிரியர்களும் இந்தச் சவால்களை நேர்மறையாக எடுத்துக்கொண்டு தொடர்ந்து நாடக உத்திகளைப் பயன்படுத்தி வருகின்றனர்.

**புதிய அணுகுமுறைகள்**

ஆசிரியர்களிடம் நேர்காணல் நிகழ்த்தியதில் பல புதிய அணுகுமுறைகளைக் கண்டறிந்தேன்.

அசையா நிலை (Freeze frame) என்னும் உத்திமுறை பாடத்திட்டத்தில் உள்ள நாடக உத்திமுறைகளில் ஒன்று. ஆனால், ஆசிரியர்கள் இதற்கு ஒரு புதிய அணுகுமுறையை உருவாக்கியுள்ளனர். மாணவர்கள் கதையில் உள்ள ஒரு முக்கியக் காட்சியைப் பார்த்து, நடிப்பார்கள். முக்கியமான தருணத்தில் ஆசிரியர் மாணவர்களை அசையா நிலையில் (Freeze) இருக்கக் கூறுவார். பிறகு, ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் அந்த நிலையிலிருந்து வெளியேறி, அவர்கள் மனதில் ஓடும் உணர்வுகளை எடுத்துரைப்பர். இவ்வாறு, செய்வதால் மாணவர்கள் தங்களின் விமர்சனச் சிந்தனையைத் தூண்டுகிறார்கள். மேலும். தங்கள் கருத்துகளைப் பிற மாணவர்களிடம் வெளிப்படுத்துகிறார்கள். இன்னும் சில ஆசிரியர்கள் கதையை மாணவர்களிடம் படிக்கும் போது, கதையின் முடிவை முதலில் கூறித் தொடக்கத்தை யூகித்து நடிக்கச் சொல்லுவார்கள். இவ்வாறு, கதையின் முற்பகுதிகளை அல்லது முடிவை மாணவர்களிடம் மறைத்து அதை யூகித்து நடிக்கக் கூறலாம். இவ்வாறு, ஆசிரியர்கள் பாடத்திட்டத்தில் உள்ள உத்திகளைத் தங்கள் மாணவர்களின் கற்றல் தேவைக்கு ஏற்ப மாற்றிக் கொள்கின்றனர்

நேர்காணலில் திரு ராமு அவர்கள் தங்கள் மாணவர்களை நாடகக் கற்றல் பயணத்திற்கு அழைத்துச் சென்றுள்ளார். மாணவர்கள் வகுப்பில் கற்றுக்கொண்டவை நேரில் பார்க்க இது ஒரு அரிய வாய்ப்பு. மேலும், மாணவர்கள் நடிகர்களின் உடலசைவு, குரல், பாவனைகள் போன்றவற்றைக் கவனித்து, வகுப்பறையில் கலந்துரையாடலாம். அதிபதி, அவாண்ட் போன்ற நாடகக் குழு பள்ளி மாணவர்களுக்கு நாடகப் பட்டறைகளையும் நிகழ்த்துகின்றனர். இதன் வழி மாணவர்கள் தமிழில் அதிகமாகப் பேசுவார்கள்.

நாடக உத்திகளில் தொழில்நுட்பத்தையும் இணைக்கலாம் என்னும் புதிய கண்ணோட்டத்தைப் பாலர் பள்ளி ஆசிரியர் ஸ்ருதி காண்பித்துள்ளார். 'யதார்த்தம்' (Augmented Reality) என்னும் தொழில்நுட்பத்தைக் கொண்டும் நாடக உத்திகளை மேம்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, 'சடெர்பிக்ஸ்' (chaterpix) என்னும் நுண்ணறிவு செயலியைக் கொண்டு விலங்கியல் தோட்டம், முகமூடிகள், யதார்த்தக் கதாபாத்திரங்கள் போன்ற காட்சிகளை உருவாக்க முடியும். இது பாகமேற்று நடித்தல், போலச் செய்தல், அசையா நிலை போன்ற நாடக நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருக்கும்.

### ஆய்வின் வரம்பு

தற்போதைய ஆய்வில் சில வரம்புகள் உள்ளன. குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் பங்கேற்பாளர்களை நேர்காணல் செய்வதில் உள்ள சிரமங்களின் காரணமாக, பத்துப் பங்கேற்பாளர்கள் மட்டுமே நேர்காணலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த ஆய்விற்கு இரண்டு பாலர் பள்ளி ஆசிரியர்களும், மூன்று தொடக்கப் பள்ளி ஆசிரியர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சிங்கப்பூர் தமிழ் பாடத்திட்டங்களை ஆராய்ந்ததில் பாலர் பள்ளியிலும், தொடக்கப்பள்ளியிலும்தான் நாடக உத்திகள் பயன்படுத்தப்பட்டன. எனவேதான், பாலர் பள்ளி ஆசிரியர்களும், தொடக்கப்பள்ளி ஆசிரியர்களும் நேர்காணலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. மேலும், இந்த ஆய்விற்கு ஒரு பாலர் பள்ளி மாணவரின் பெற்றோரும், ஒரு கீழ்த் தொடக்கநிலை மாணவரின் பெற்றோரும், இரண்டு மேல் தொடக்கநிலை மாணவர்களின் பெற்றோர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டன. நேர்காணல் செய்யப்பட்ட பெற்றோர்களின் பிள்ளைகள் நாடகத்தில் வெவ்வேறு அறிவுப்பரப்பை கொண்டவர்கள். சில பிள்ளைகளுக்கு நாடக வகுப்புகளுக்குச் சென்ற அனுபவங்கள் இருக்கின்றன. ஆனால், சில பிள்ளைகளுக்குத் தங்கள் பள்ளியில் கற்றுக்கொண்ட நாடக உத்திகளை மட்டும்தான் தெரியும். பிள்ளைகளின் மொழித்திறனும் வெவ்வேறு நிலையில் உள்ளன. இவ்வாறு, தேர்ந்தெடுக்கப்பட்ட பங்கேற்பாளர்களில் வரம்புகள் இருக்கின்றன. ஆனால் இதிலிருந்து, பலதரப்பட்ட தரவுகளைப் பெற முடிந்தது. எனவே, இத்தகைய வரம்புகள் இருந்தாலும் இந்த ஆய்வு சிங்கப்பூரில் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களைப் பற்றியும், சிங்கப்பூர் பள்ளிகளில்

ஆசிரியர்கள் கற்பிக்கும் நாடக உத்திகளைப் பற்றியும், அவை பேச்சுத்திறன் வளர்ப்பதில் வகிக்கும் பங்கைப் பற்றியும், ஆராயும் வகையில் இந்த ஆய்வு அமைந்திருக்கிறது.

### முடிவுரை

சிங்கப்பூர் சூழலில் மாணவர்கள் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகத்தான் கற்றுக்கொள்கிறார்கள். ஆசிரியர்கள் மாணவர்களின் குடும்ப மொழிப் பின்னணி, மொழித் திறன் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். இன்றைய சூழலில் இல்லத்தில் தமிழ் மொழி புழக்கம் இல்லாததால் மாணவர்கள் தமிழ் மொழியில் பேசக் கூச்சப்படுகிறார்கள். இந்தக் கூச்சத்தைப் போக்குவதற்காகவும், தன்னம்பிக்கையோடு தமிழ் மொழியில் பேசுவதற்காகவும் நாடக உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. தமிழ் மொழி வகுப்பில் நாடக உத்திகளை இணைப்பது இன்னும் ஒரு புதுமையான செயல்முறைதான். ஆனால், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய இருவரும் நாடக உத்திமுறைகள் வழி பல நன்மைகளை அடைகிறார்கள். இந்த அணுகுமுறையைக் கற்றல் கற்பித்தலில் இணைப்பது கடினமான ஒன்று என்று பலர் கருதலாம். ஆனால், உலகின் பரிணாம வளர்ச்சிக்கு ஏற்ப நாமும் நம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும்.

## References

### முதன்மை தரவுகள்

சிங்கப்பூரில் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்களின் பேச்சுத் திறனை வளர்ப்பதில் நாடக உத்திகள் வகிக்கும் பங்கைப் புரிந்துகொள்வதற்காகப் பெற்றோர்களுடனும் ஆசிரியர்களுடனும் நேர்காணல் நிகழ்த்தப்பட்டன. இந்த ஆய்விற்கு ஐந்து ஆசிரியர்களும் ஐந்து பெற்றோர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

### துணை தரவுகள்


Aḻakappaṉ, Āṟu. (1987). *Tamiḻ nāṭakam tōṟṟamum vaḷārcciyum*. Aṇṇāmalaip Palkalaikkaḻakam. Śrī Rāmakiruṣṇā Miṉ Accakam, Citamparam. [அழகப்பன், ஆறு. *(1987). தமிழ் நாடகம் தோற்றமும் வளார்ச்சியும். அண்ணாமலைப் பல்கலைக்கழகம். ஸ்ரீ ராமகிருஷ்ணா மின் அச்சகம், சிதம்பரம்.*]

Āṉantaracu, Irā& Pāpu, Ca. (2017). *Tamiḻmoḻi Kaṟṟal Kaṟpittalil Navīṉa Muṟaikaḷum Kalaic Ceyalpāṭukaḷiṉ Payaṉpāṭum*. Tamiḻ Pērāyvu Āyvitaḻ, 5(1), 65-74. [ஆனந்த்அரசு, இரா & பாபு, ச. *(2017). தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் நவீன முறைகளும் கலைச் செயல்பாடுகளின் பயன்பாடும். தமிழ் பேராய்வு ஆய்விதழ், 5(1), 65-74.*]

Āṇṭiyappaṉ, Nā. (2001). *Ciṅkappūr Tamiḻ Eḻuttāḷarkaḷ Tokuppu Nūl*. Ciṅkappūr Tamiḻ Eḻuttāḷar Kaḻaka Veḷiyīṭu. [ஆண்டியப்பன், நா. *(2001). சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர்கள் தொகுப்பு நூல். சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழக வெளியீடு.*]

Bailey L. F. (1987) What determines quality in qualitative research? *Market Research Society Newsletter*, October, pp 44–45

Bailey, L. F. (2014). The origin and success of qualitative research. *International Journal of Market Research, 56*(2), 167-184. https://doi.org/10.2501/IJMR-2014-013

Campatkumār, Jō. (2016). *Moḻiyiyal Toṭakkamum Vaḷarcciyum – Cila Cūḻalkaḷil*. [சம்பத்குமார், ஜோ. *(2016). மொழியியல் தொடக்கமும் வளர்ச்சியும் – சில சூழல்களில்.*] *International Journal of Linguistics and Computational Applications*, 3(1). http://irdp.info/journals/j3/volume3/International_Journal_of_Linguistics_and_Computational_Applications_Sampath.pdf

Census of Population. (2020). Statistical Release 1: Demographic Characteristics, Education, Language and Religion. *Department of Statistics, Ministry of Trade & Industry, Republic of Singapore.* ISBN 978-981-18-1381-8

Charman, T. (2006). Imitation and the Development of Language. In S. J. Rogers & J. H. G. Willams (Eds.), *Imitation and the social mind: Autism and typical development* (pp. 96–117). The Guilford Press.

Cittikkā, Ā. (2022). *Ciṅkappūr Paḷḷikaḷil Aḻa. Vaḷḷiyappāviṉ Kuḻantaip Pāṭalkaḷ.* Tamiḻ Paṇpāṭṭu Maiyam& Ciṅkappūrt Tamiḻāciriyac Caṅkam. [சித்திக்கா, ஆ. (2022). சிங்கப்பூர் பள்ளிகளில் அழ. வள்ளியப்பாவின் குழந்தைப் பாடல்கள். தமிழ் பண்பாட்டு மையம் & சிங்கப்பூர்த் தமிழாசிரியச் சங்கம்.]

Glover, I. (2014). Role-play: An Approach to Teaching and Learning. In: Technology Enhanced Learning at SHU. Retrieved from: https://blogs.shu.ac.uk/shutel/2014/07/04/role-play-an-approach-to-teaching-and- learning/?doing_wp_cron=1551899531.9534809589385986328125

Irāmacuvāmi, Mu. Murukēcaṉ, Ku. & Kōvintacāmi, Pe. (1999). *Irupatām Nūṟṟāṇṭut Tamiḻ Nāṭakaṅkaḷ*. Ulakat Tamiḻāciriyar Niṟuvaṉam. Ci.Ai.Ṭi. Vaḷākam, Taramaṇi Ceṉṉai. [இராமசுவாமி, மு. முருகேசன், கு. & கோவிந்தசாமி, பெ. (1999). இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள். உலகத் தமிழாசிரியர் நிறுவனம். சி.ஐ.டி. வளாகம், தரமணி சென்னை.]

Jekatīcaṉ, Ca. (2000). *Ciṅkappūril Tamiḻ Kaṟṟal Kaṟpittalai Iṉimaiyum Eḷimaiyum Mikkatākkuvōm* (Ṭākṭar Kā Irāmaiyā, Ṭākṭar Cītā Laṭcumi). Tamiḻ Moḻi Maṟṟum Paṇpāṭṭu Tuṟai, Āciya Moḻikaḷ Maṟṟum Paṇpāṭṭu Tuṟai, Naṉyāṅ Toḻilnuṭpap Palkalaikkaḻakam.[ஜெகதீசன், ச. (2000). சிங்கப்பூரில் தமிழ் கற்றல் கற்பித்தலை இனிமையும் எளிமையும் மிக்கதாக்குவோம் (டாக்டர் கா இராமையா, டாக்டர் சீதா லட்சுமி). தமிழ் மொழி மற்றும் பண்பாட்டு துறை, ஆசிய மொழிகள் மற்றும் பண்பாட்டு துறை, நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்.]

Kajēntiraṉ, Ti. Ka. (2017). *Moḻi Amaippum Varalāṟum*. Tamiḻ Iṇaiyak Kalvikkaḻakam. [கஜேந்திரன், தி. க. (2017). மொழி அமைப்பும் வரலாறும். தமிழ் இணையக் கல்விக்கழகம்.] https://www.tamilvu.org/ta/courses-degree-a051-a0511-html-a05116l3-9503

Kalvi Amaiccu. (2014, May). *Tamiḻmoḻip Pāṭattiṭṭam 2015 Toṭakkanilai*. [கல்வி அமைச்சு. (2014, May). தமிழ்மொழிப் பாடத்திட்டம் 2015 தொடக்கநிலை. https://www.moe.gov.sg/-/media/files/primary/tamil-primary-2015.ashx]

Kiruṣṇamūrtti, Ku. Cā. (1979). *Tamiḻ Nāṭaka Varalāṟu*. Vāṉati Patippakam. Ti.Nakar. Ceṉṉai. [கிருஷ்ணமூர்த்தி, கு. சா. (1979). தமிழ் நாடக வரலாறு. வானதி பதிப்பகம். தி.நகர். சென்னை.]

Kuñcukkaṇṇaṉ. (2013). *Nāṭaka Vaḻi Tamiḻmoḻiyai Iraṇṭām Moḻiyākak Kaṟpittal*. 10Ām Ulakat Tamiḻāciriyar Mānāṭu. [குஞ்சுக்கண்ணன். (2013). நாடக வழி தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல். 10ஆம் உலகத் தமிழாசிரியர் மாநாடு.]

*Mathews, M. Tay, M. Selvarajan, S. & Han, T, Z. (2020). Language Proficiency, Identity and Management: Results from the IPS survey on Language, Race & Religion. IPS exchange series, 15. National University of Singapore.*

Neṭumāṟaṉ. (2013). *Kaṟṟal Kaṟpittalil Nāṭakattiṉ Paṅku*. 10Ām Ulakat Tamiḻāciriyar Mānāṭu. [நெடுமாறன். (2013). கற்றல் கற்பித்தலில் நாடகத்தின் பங்கு. 10ஆம் உலகத் தமிழாசிரியர் மாநாடு.]

Pālakiruṣṇaṉ, Pa. (1999). *Kaviñar Na. Paḻaṉivēlu Paṭaippuk Kaḷañciyam*. Tamiḻkkōṭṭam

(Putuvai). [பாலகிருஷ்ணன், ப. (1999). கவிஞர் ந. பழனிவேலு படைப்புக் களஞ்சியம். தமிழ்க்கோட்டம் (புதுவை).]

Taṅkarācu, Mu. (1989). *Tamiḻ Mēṭai Nāṭakaṅkaḷ*. Aṇṇāmalaip Palkalaikkaḻakam Aṇṇāmalainakar. [தங்கராசு, மு. (1989). தமிழ் மேடை நாடகங்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாமலைநகர்.]

Tiṇṇappaṉ, Cupa. (1993). *Ciṅkappūril Tamiḻ Moḻiyum Ilakkiyamum*, Tēvakōṭṭai, Tēṉ Vaḷḷiyam'mai Patippakam. [திண்ணப்பன், சுப. (1993). சிங்கப்பூரில் தமிழ் மொழியும் இலக்கியமும், தேவகோட்டை, தேன் வள்ளியம்மை பதிப்பகம்.]

Tirumalaimuttucāmi, A. (1959). *Tamiḻnāṭum Moḻiyum*. Sṭār Piracuram. [திருமலைமுத்துசாமி, அ. (1959). தமிழ்நாடும் மொழியும். ஸ்டார் பிரசுரம்.]

Veṅkaṭēṣvaraṉ, Es. (2020). *Nāṭakatturai Etirkālam Paṟṟiya Kalanturaiyāṭal*. Tamiḻ Muracu. [வெங்கடேஷ்வரன், எஸ். (2020). நாடகத்துறை எதிர்காலம் பற்றிய கலந்துரையாடல். தமிழ் முரசு.] *https://www.tamilmurasu.com.sg/singapore/story20200913-51821*

**பின்னிணைப்பு 1**

**நேர்காணல் பங்கேற்பாளர் விவரங்கள்**

| | புனைபெயர் | வயது | பிள்ளையின் வகுப்பு/ கற்றுக்கொடுக்கும் கல்வி நிலை |
|---|---|---|---|
| 1. | ஸ்ருதி | 26 | பாலர் பள்ளி ஆசிரியர் |
| 2. | அமுதா | 25 | பாலர் பள்ளி ஆசிரியர் |
| 3. | மாலதி | 30 | தொடக்கப்பள்ளி ஆசிரியர் |
| 4. | ராமு | 38 | தொடக்கப்பள்ளி ஆசிரியர் |
| 5. | ஷா | 30 | தொடக்கப்பள்ளி ஆசிரியர் |
| 6. | புஷ்பா | 45 | தொடக்கநிலை 6 மாணவரின் பெற்றோர் |
| 7. | உஷா | 45 | தொடக்கநிலை 5 மாணவரின் பெற்றோர் |
| 8. | ருத்ரன் | 50 | தொடக்கநிலை 5 மாணவரின் பெற்றோர் |
| 9. | தீபா | 32 | தொடக்கநிலை 2 மாணவரின் பெற்றோர் |
| 10. | ராணி | 30 | பாலர் நிலை 2 (K2) மாணவரின் பெற்றோர் |

**பின்னிணைப்பு 2**

**நேர்காணல் வினாக்கள்அ**

**. ஆசிரியர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகள்**

1. உங்கள் கற்பித்தல் முறைகளில் நாடக உத்திகளை இணைப்பதன் நோக்கம் பற்றிக் கூறுங்கள்.

2. நாடக உத்திகளில் பேச்சுத்திறனை வளர்க்கும் கூறுகளாக நீங்கள் அடையாளப்படுத்துபவை எவை?

3. உங்கள் அனுபவத்தில், பாடத்திட்டத்தில் நாடக உத்திகளை ஒருங்கிணைத்ததன் விளைவாக மாணவர்களின் பேச்சுத்திறன் மேம்பாடு அடைகிறதா? அந்த மேம்பாட்டை எவ்வாறு அடையாளப்படுத்துகிறீர்கள்?

4. மாணவர்களிடையே கூட்டு மற்றும் தொடர்பு திறன்களை (collaborative and communicative skills) வளர்ப்பதற்கு நாடக நடவடிக்கைகள் எவ்வாறு பங்களிக்கின்றன?

5. மாணவர்களின் பேச்சுத் திறனை வளர்ப்பதற்கு நாடக உத்திகளைப் பயன்படுத்துவதில் ஏதேனும் சவால்களைச் சந்தித்திருக்கிறீர்களா, அவற்றை எவ்வாறு எதிர்கொண்டீர்கள்?

**ஆ. பெற்றோர்களிடம் கேட்கப்பட்ட கேள்விகள்**

1. உங்கள் பிள்ளை பள்ளியில் தான் கலந்துகொள்ளும் நாடக நடவடிக்கைகள் பற்றி உங்களிடம் பகிர்ந்துகொள்வாரா? அதுபற்றிப் பகிருங்கள்.

2. நாடக நடவடிக்கைகளில் பங்கேற்கத் தொடங்கிய பின், உங்கள் பிள்ளையின் பேச்சுத்திறனில் ஏற்பட்ட மாற்றங்கள், மேம்பாடுகள் பற்றி கூறமுடியுமா?

3. பொது இடங்களில் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் திறனில் (உரையாடல், விளையாட்டு) அவரது மொழி மேம்பாடு அடைந்திருக்கிறதா?

4. நாடகங்களில் பங்கேற்பதன் வழி தன்னம்பிக்கை பெறுகிறாரா?

5. நாடகம் தொடர்பான பயிற்சிகளில் அவருக்கு ஆர்வம் இருக்கிறதா? வீட்டில் நாடகப்பயிற்சியில் ஈடுபடும் வழக்கம் உண்டா?

# தாதியத் துறையில் முஸ்லிம் பெண்களின் வகிபாங்கு: ஓர் வரலாற்று மற்றும் சமகால நோக்கு

# The Role of Muslim Women in Nursing Sector: A Historic and Contemporary Perspective

எம்.ஆர்.ஜே. ஸுஹைமா / M.R.J. Suhaima[1]
எஸ்.எம்.எம். மஸாஹிர் / S.M.M. Mazahir[2]
எம்.எம்.ஏ. அப்துல்லாஹ் / M.M.A. Abdullah[3]

Date of submission: 2024-11-18
Date of acceptance: 2024-12-01
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name:
M.M.A. Abdullah
Email: abdullahmma416@gmail.com

**Abstract**

In contemporary times, nursing is regarded as a highly noble profession. Islam, which offers guidance for all aspects of human life, considers nursing as a profession suitable for women's nature and encourages it. Based on a review of literature, this study analyzes the contributions of nurses in Islamic history and examines the current status of the profession. The research traces the historical development of nursing within Islamic societies, beginning with the early Islamic period when Muslim women first engaged in organized care for the wounded and sick. The study documents how nursing responsibilities were carried out by notable female figures during significant historical events, including major battles and the establishment of the first bimaristans (hospitals). Through examination of historical texts and scholarly sources, this research highlights how Islamic principles influenced the development of nursing ethics and practices. The investigation reveals that Muslim women consistently played vital roles in healthcare delivery systems throughout different Islamic eras and across various geographical regions. The study further explores how the nursing profession has evolved within contemporary Muslim societies, analyzing current challenges and opportunities. The key finding of this study is that Muslim women have been significantly involved in nursing from the early Islamic period to the present day. This study can serve as a valuable resource for historical research on women and gender studies.

**Keywords:** Islamic nursing, Muslim women in healthcare, Nursing history, Religious healthcare ethics, Gender in Islamic medicine, Bimaristans

[1]The author is an Assistant Lecturer in the Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka. zuhaimaroomy18@gmail.com

[2]The author is Professor in the Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka, Oluvil, Sri Lanka. mazahirsmm@seu.ac.lk

[3]The author is a Doctoral Candidate in Ahmad Ibrahim Kulliyyah of Laws, International Islamic University Malaysia, Selangor, Malaysia, abdullahmma416@gmail.com

## முன்னுரை (Introduction)

மருத்துவம் நோய்களை கண்டறியவும் அவற்றை குணப்படுத்தவும் நோய்கள் வராமல் தடுப்பதற்கும் உதவுகின்ற அறிவியல் செயற்பாடு எனலாம். செவிலிப்பணி என்பது நோயாளியின் உடல் நலப் பாதுகாப்புடன் ஒன்றிணைந்த செயற்பாடாகும். பராமரிப்பு தேவைப்படும் இடங்களில் தனிநபர்களின் தேவைகளை அடையாளம் கண்டு அவற்றைப் பாதுகாக்க அவர்கள் அயராது உழைக்கிறார்கள். இரக்கம் மற்றும் அர்ப்பணிப்புடன் கூடிய சமூகத்தின் தேவைகளை நிவர்த்தி செய்யும் சிறப்புமிக்க தொழிலாக இது பார்க்கப்படுகிறது (American Nurses Association, n.d.).

வலிமையற்றவர்களுக்கான அனுதாபத்தையும், பொறுப்புக்கூறலையும் தன்னகத்தே சுமந்துள்ள இஸ்லாமிய மரபுக்கு தாதியர் பணி ஒரு புதிய விடயமல்ல. வரலாறு நெடுகிலும் முஸ்லிம் பெண் தாதியர்கள் தமது இறைவனான அல்லாஹ்வின் மீதும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீதும் கொண்ட அன்பின் வெளிப்பாடாக நோயாளிகள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கிடையில் சுகாதார சேவைகளை வழங்கி வருகின்றனர் (Rasool, 2000). அந்தவகையில் தாதியர் தொழிலில் முஸ்லிம் பெண்களின் ஈடுபாடு தொடர்பான வரலாற்று நடைமுறையை இவ்வாய்வு பரிசீலிக்க முனைகிறது.

## ஆய்வின் குறிக்கோள் (Research Objective)

இவ்வாய்வு நபி (ஸல்) அவர்களின் காலம் முதல் நவீன காலம் வரையில் முஸ்லிம் பெண் தாதியர்களின் பணிகள் எவ்வாறு இடம்பெற்றுள்ளன என்பதனை பகுப்பாய்வு செய்வதை நோக்காகக் கொண்டுள்ளது.

## ஆய்வு முறையியல் (Research Methodology)

இது ஒரு இலக்கிய மீளாய்வாகும். இவ்வாய்வுக்கான தரவுகள் இஸ்லாமிய மூல ஆவணங்களான அல்குர்ஆன், அஸ்ஸுன்னாவுடன் இஸ்லாமிய அறிஞர்களின் கருத்துக்கள் மற்றும் தாதியர் ஒழுக்கக்கோவை போன்ற மூலங்களில் இருந்து பெறப்பட்டன. இவற்றிற்கு மேலதிகமாக ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் மற்றும் இணையதள ஆக்கங்கள் மூலமாகவும் தரவுகள் திரட்டப்பட்டு உள்ளடக்கப் பகுப்பாய்வு முறை (Content Analysis Method) மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## கலந்துரையாடலும் பெறுபேறுகளும் (Discussion and Results)

கி.பி. 6ஆம் நூற்றாண்டில் அரேபியத் தீபகற்பத்தில் முஹம்மத் (ஸல்) அவர்களின் பணி ஆரம்பமானதிலிருந்து ஒவ்வொரு துறையும் இஸ்லாமியப் பண்பாடுகளோடு வளரத் தொடங்கியது. அந்தவகையில் தாதியர்களின் தொண்டு இஸ்லாமிய வரலாற்றில் எவ்வாறு செயற்பட்டு வந்தது என்பதை பின்வருமாறு ஆராயலாம்.

### நபி (ஸல்) அவர்களின் காலம் (கி.பி. 610 – 632 வரையான காலப்பகுதி)

இக்காலம் நபித்துவம் கிடைக்கப்பெற்று நபி (ஸல்) அவர்களின் மரணம் வரையுமான கால கட்டத்தை குறிக்கின்றது (Khan, 2022). நபி (ஸல்) அவர்களின் காலத்தில் செவிலியர்களின் பணிகள் தொடர்பான தகவல்களை இஸ்லாமிய வரலாறு தொடர்பான பல்வேறு ஆவணங்களில் இருந்து அறிய முடிகின்றது.

அதனடிப்படையில் கி.பி. 570 இற்கு முற்பட்ட பழங்கால மருத்துவ முறைகள் மருத்துவர்களால் மாத்திரமே சிகிச்சை அளிக்கப்பட்டதோடு, நோயாளிகளை வீட்டில் சந்தித்து அவர்களுக்கு மருந்துகளை பரிந்துரை செய்யும் நடைமுறையே காணப்பட்டது. மேலும் நோயாளிகளின் தேவைகள் உறவினர்களினால் பூர்த்தி செய்யப்பட்டன. இதனால் செவிலியர்களின் தேவைப்பாடு குறைவாகவே இருந்தது. எனினும் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் காலத்திலேயே நோயாளிகளுக்கான உடல் ரீதியான பராமரிப்பு மற்றும் உணர்வு ரீதியான ஆதரவு செவிலியர்களினால் வழங்கப்பட்டு வந்தமையைக் காண முடிகின்றது. நவீன தாதியல் துறையின் முன்னோடியாக இங்கிலாந்தைச் சேர்ந்த ப்ளோரன்ஸ்

நைட்டிங்கேல் (Florence Nightingale) (1820-1910) பிரபலமாக அறியப்பட்டிருப்பினும் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் ருபைதா அல் அஸ்லமிய்யா என்ற அன்ஸாரிப் பெண் செவிலியப் பணியில் நிபுணத்துவம் பெற்றிருந்தமையை இஸ்லாமிய வரலாற்றின் ஊடாக அறிய முடிகின்றது (Rosser et al, 2006).

அந்தவகையில் ருபைதா அல் அஸ்லமியா (ரழி) நபி (ஸல்) அவர்களின் காலத்தில் செவிலியம் தொடர்பான கலைகளில் பயிற்சி பெற்ற முதல் முஸ்லிம் செவிலியாவார். ருபைதாவின் வழிகாட்டல்கள் பல தலைமுறையாக முஸ்லிம் செவிலியர்களுக்கு வாய்மொழியாக வழங்கப்பட்டு அவை தொடர்ந்தும் பின்பற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது (Yahya, 2017).

நபி (ஸல்) அவர்களின் காலத்தில் வாழ்ந்த புகழ்பெற்ற வைத்தியரான ஸஃத் அல்அஸ்லமி அவர்களின் மகளான இவர் தனது தந்தையிடமிருந்து செவிலியம் தொடர்பான பயிற்சிகளை பெற்றுக் கொண்டார். ருபைதா சாதாரண மக்கள் மத்தியில் நோய் மற்றும் அதற்கான காரணங்களை அறிந்து பணிவிடை செய்வதில் ஆர்வம் கொண்டிருந்தார். அவர் தனிப்பட்ட முறையில் ஏழை சமூகங்களின் சுகாதாரத்தை ஊக்குவிப்பவராகவும் உடல் நலக் குறைவுக்கு வழிவகுத்த சமூகப் பிரச்சினைகளை தணிக்க முயன்றவராகவும் காணப்பட்டார் (Yahya, 2017).

அத்துடன் ருபைஃ பின்த் முஅவ்வித் (ரழி) எனும் நபித்தோழி "...நாம் போராளிகளுக்கு நீர் புகட்டிக் கொண்டு இருந்தோம். மேலும் அவர்களுக்கு மருத்துவம் செய்து கொண்டும் கொல்லப்பட்டவர்களையும் காயப்பட்டவர்களையும் மதீனாவுக்கு இடம் மாற்றிக் கொண்டும் இருந்தோம்" (புகாரி, 5679) எனும் ஹதீஸூம் தாதியர் சேவையில் பெண்களின் ஈடுபாட்டை விளக்குகிறது.

மேலும் உம்மு அத்திய்யா (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் யுத்தங்களில் கலந்து கொண்டார்கள். இவர் நோயுற்றவர்களை கவனிப்பதிலும் தாகிப்போருக்கு தண்ணீர் புகட்டுவதிலும் காயப்பட்டவர்களுக்கு மருந்து கட்டுவதிலும் ஈடுபட்டார்கள் (முஸ்லிம், 4786) எனும் ஹதீஸூம் இக்கருத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

அதேபோல் ருபைதா (ரழி) அவர்களிடம் காயப்பட்டிருந்த ஸஃத் இப்னு முஆத் (ரழி) அவர்களுக்கு சிகிச்சை அளிக்குமாறு நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். மேலும் இவர் கந்தக் (அகழி) யுத்தத்தில் முஸ்லிம் இராணுவத்தினருக்கு பணிவிடை செய்வதற்காக நபி (ஸல்) அவர்களிடம் அனுமதி பெற்று பயிற்சி பெற்ற தன் செவிலியர் குழுவினருடன் சென்றுள்ளார்கள். காற்று மற்றும் பாலைவன வெப்பத்தில் இருந்து காயமடைந்த மற்றும் மரணமடையும் நபர்களை பாதுகாக்கத் தேவையான முதல் உதவி உபகரணங்கள், குடிநீர் என்பவற்றை எடுத்துச் செல்வார்கள். போரின் போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற ஒழுக்கங்களை சக பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதன் மூலம் திட்டமிட்ட ஒழுங்கில் குழுவை தயார் செய்தும் கொள்வார்கள். இதில் உம்மு இமாரா (ரழி), உமைமா (ரழி), உம்மு அய்மன் (ரழி), உம்மு ஸூலைம் (ரழி) மற்றும் ஹிந்து (ரழி) ஆகியோர் முக்கியமான ஊழியர்களாவர். இவர்கள் அனைவரும் பராமரிப்பு தொடர்பில் நன்கு கற்றுத் தேர்ந்தவர்களாவர் (Jan, 1996). தாலிப் அல் ஹஷ்மியின் Thazkar-e-sahabiyyah இல் மேற்கோள் காட்டப்பட்ட இப்னு ஸாத்தின் கூற்றுப்படி முஹம்மது நபி (ஸல்) அவர்களின் அனுமதியுடன் தமது கூடாரத்தில் சுகாதார கல்வியை ருபைதா (ரழி) அவர்கள் வழங்கி வந்தார்கள். மேலும் அவர் பராமரிப்புத் துறையில் நிபுணராகவும் சுகாதார கல்வியின் முக்கியத்துவத்தினை உணர்ந்தவராகவும் இருந்தார் (Jan, 1996).

இதனால் வரலாற்றில் முதல் அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் செவிலியருக்கான அந்தஸ்த்து ருபைதா அல்அஸ்லமியா (ரழி) அவர்களுக்கு வழங்கப்படுகின்றது (Rosser et al, 2006). மேலும் பாகிஸ்தானில் அமைந்துள்ள புகழ்பெற்ற Aga Khan University School of Nursing எனும் தாதியர் கல்லூரியின் ஒரு

கட்டிடம் இவரது பெயரால் அழைக்கப்படுகின்றது. வருடா வருடம் பஹ்ரைன் பல்கலைக்கழகத்தின் மூத்த மருத்துவ ஊழியர் குழுவினால் தாதியர் கற்கையில் சிறப்பு தேர்ச்சி பெறும் ஒரு மாணவி தெரிவு செய்யப்பட்டு ருபைதா அல்அஸ்லமியா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும் (Yahya, 2017).

### II. நபி (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பின்னரான காலப் பகுதி (கி.பி. 632 – 1000)

இக்காலப் பகுதி முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மரணம் தொடக்கம் கி.பி. 1000 வரையானதாகும் (Global Security, n.d.). அந்தவகையில் நபி (ஸல்) அவர்களின் மரணத்தின் பின்னர் குலபாஉர் ராஷிதூன்களின் காலத்தில் மருத்துவத் துறை ஓர் ஒழுங்குமுறையில் வளர்ச்சியடைந்திருக்கவில்லை (Lanka History, 2019). அது போலவே உமையாக்களின் ஆட்சிக்காலமான கி.பி 661-750 வரையான காலப்பகுதியில் இஸ்லாத்தை வெளி உலகுக்கு பரப்பும் முயற்சியில் ஆட்சியாளர்கள் அதிகம் ஈடுபட்டதனால் மருத்துவத்துறையில் அதிக ஈடுபாடு காட்டவில்லை (Hamarneh, 1962). உண்மையில் நபி (ஸல்) அவர்களின் மரணத்தின் பின்னரான காலப்பகுதியில் தாதியர் தொழில் குறித்த பதிவுகள் குறைவாகவே காணப்படுகின்றன. தற்போது உள்ள வரையறுக்கப்பட்ட ஆவணங்களில் காணப்படும் குறிப்புகள் அக்கால மருத்துவர்களின் கூற்றுக்களையே உள்ளடக்கியுள்ளது (Rosser et al., 2006).

இதனடிப்படையில் முதல் மருத்துவ மையம் 6ஆம் நூற்றாண்டில் பெர்சியாவில் (Persia) நிறுவப்பட்டது. 8ஆம் நூற்றாண்டில் சிறந்த இஸ்லாமிய மருத்துவரான அர்-ராஸி பக்தாதின் ஆடிடி மருத்துவமனையினை (Audidi Hospital) மேற்பார்வையிடச் சென்றார். அங்கு 24 மருத்துவர்களுடன் தாதியர்கள் மற்றும் வேறு சில ஊழியர்களும் பணிபுரிந்து வந்துள்ளனர். புகழ்பெற்ற மருத்துவரான அர்-ராஸி ஒரு ஆசிரியராகவும், தாதியராகவும் பராமரிப்புக்களை வழங்கி வந்துள்ளார். மேலும் இவர் சிறந்த குணம் கொண்டவராகவும் வரலாற்றில் அடையாளப்படுத்தப்படுகின்றார் (Helmi, 2017).

இக்காலகட்டத்தில் செவிலியர்கள் நோயாளிகளுக்கு உணவை வழங்குவதிலும், பரிந்துரைக்கப்பட்ட மருந்து மற்றும் குணப்படுத்தும் திரவங்களை வழங்குவதிலும் தமது பணிகளைச் செய்து வந்துள்ளனர். இக்காலத்தில் பெண் செவிலியர்கள் "ஆசியா" என்று குறிப்பிடப்படுபவர். இச்சொல் "ஆசா" என்ற வினைச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். இதன் பொருள் காயப்பட்டவர்களை குணப்படுத்துதல், அக்கறை காட்டுதல் என்பவை ஆகும் (Rosser et al., 2006). இந்த ஆரம்ப கால இஸ்லாமிய மருத்துவ மையங்கள் இன்று மருத்துவமனைகளின் உருவாக்கத்திற்கு வித்திட்டன. அவற்றில் நோயாளர்களுக்கான தனியான வார்டுகள், வெளிநோயாளர் பிரிவு, அறுவை சிகிச்சை மீட்பு வார்டுகள் மற்றும் மருந்தகங்கள் காணப்பட்டன. மேலும் மருத்துவப் பயிற்சிக்கான மருத்துவக் கல்வி வழங்கும் மையங்களாகவும் அவை செயற்பட்டன (Alotaibi, 2021).

### III. மத்திய காலம் (கி.பி.1000 – 1300 வரையிலான காலம்)

அப்பாஸியக் கலீபாக்களின் தலைமையின் கீழ் நிறுவப்பட்ட பக்தாத் நகரமானது (கி.பி. 750-1258) அறிவியல் செயற்பாட்டின் மையமாகத் திகழ்ந்தது. மேலும் இக்காலம் இஸ்லாத்தின் பொற்காலம் என்றும் அழைக்கப்பட்டது (Khan Academy, n.d.).

இக்காலகட்டத்தில் அரேபியர்கள் கட்டிடக் கலையில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக மருத்துவமனைகளை நிர்மாணித்தார்கள். நோயுற்றவர்களை பராமரிப்பதற்கான புதிய முறைகளையும் அறிமுகப்படுத்தினார்கள். இஸ்லாமிய நாகரிகத்தின் எல்லா திசைகளிலும் மருத்துவம் பிரபலம் பெறத் துவங்கியது. மேலும் பெண் தாதியர்கள் பெண்களுக்கும் ஆண் தாதியர்கள் ஆண்களுக்கும் பராமரிப்பு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டதானது இம்மருத்துவமனைகளின் தனித்துவமான அம்சமாகும் (Khan Academy, n.d.).

இஃப்ரிகியா மாகாணத்தின் (இன்றைய மேற்கு லிபியா) இளவரசர் ஸியாததுல்லாஹ்வின் கட்டளையின் கீழ் அல்-டிம்னா (Al-Dimna) எனும் மருத்துவமனையானது கைரவானிலுள்ள பெரிய பள்ளிவாயலின் அருகாமையில் கட்டப்பட்டது. இம்மருத்துவமனை 9ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருக்க முடியும் என வரலாற்றாசிரியர்கள் குறித்துக் காட்டுகின்றனர். இது இஸ்லாமிய உலகின் ஆரம்பகால மருத்துவமனைகளில் ஒன்றாகவும், வட ஆபிரிக்காவின் ஆரம்பகால மருத்துவ நிறுவனங்களில் மிகவும் பிரபல்யம் அடைந்ததுமாகும். இம்மருத்துவமனைக்கு வருகை தருபவர்களுகக்கு தனியான காத்திருப்பு மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மேலும் இங்கு பணியாற்றுவதற்காக சூடானில் இருந்து அதிகாரப்பூர்வமாக பயிற்றுவிக்கப்பட்ட பெண் செவிலியர்கள் பணி அமர்த்தப்பட்டனர். அங்கு பணிபுரியும் வைத்தியர்களை தவிர புகஹா அல்-பதன் என்றழைக்கப்படும் இஸ்லாமிய அறிஞர்களை உள்ளடக்கிய ஒரு குழுவானது நோயாளிகளின் ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டல்களையும் வழங்கி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும் (Virk, 2017).

கலீபா வலீத் இப்னு அப்துல் மலிக் இன் ஆட்சியின் கீழ் (கி.பி. 646-705) மாற்றுத்திறனாளிகள் மற்றும் பார்வையற்றவர்களுக்காக டமஸ்கஸில் நிறுவப்பட்ட மருத்துவமனையில் நன்கு பயிற்றப்பட்ட செவிலியர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் கடமை புரிந்து வந்தனர். மேலும் ஹாரூன் அல்ரஷீத் இனால் (கி.பி. 766-809) பக்தாதில் நிறுவப்பட்ட இலவசப் பொது மருத்துவமனையில் பொது மக்களை மையப்படுத்தி மருத்துவக் கல்வி போதிக்கப்பட்டது (Alotaibi, 2023).

11ஆம் நூற்றாண்டுகளில் இம்மருத்துவமனைகள் மிகப் பிரபல்யம் அடைந்ததுடன் உலகெங்கிலும் உள்ள திறமையான பேராசிரியர்கள் வரவழைக்கப்பட்டு மருத்துவ மாணவர்களுக்கு பாடப் போதனைகளும் நடாத்தப்பட்டன. தலைசிறந்த மருத்துவர்கள் மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர்கள் மூலமாக செவிலியர்களுக்கான பயிற்சிகள் இங்கு வழங்கப்பட்டன. மேலும் மருத்துவ மாணவர்கள் அனைவருக்கும் மருத்துவ மதிப்பீட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு மருத்துவ பயிற்சிக்கு தகுதியானவர்களாக அவர்கள் தரம் உயர்த்தப்பட்டனர். மேலும் பொது மருத்துவமனைகளின் கட்டுமானப் பணிகள் மேற்கில் ஆபிரிக்கா வரையிலும், வடக்கில் ஸ்பெயின் வரையிலும், கிழக்கில் பெர்சியா வரையிலும் என இஸ்லாமிய சாம்ராஜ்யம் முழுவதும் பரவியது. இடைக்காலத்தில் பக்தாத், டமஸ்கஸ், குர்துபா, செவில்லா ஆகிய தலைசிறந்த நகரங்களில் பொது மருத்துவமனைகள் நிர்மாணிக்கப்பட்டன. இதன்படி 1160இல் Tudela என்ற பயணியால் பக்தாதில் 60 மருத்துவமனைகளும் குர்துபாவில் 50 மருத்துவமனைகளும் அடையாளம் காணப்பட்டன. இவை ஆண்களுக்கும் பெண்களுக்குமான தனியான வார்டுகளை கொண்டமைந்திருந்தன. மேலும் கெய்ரோவில் அமைந்துள்ள மன்சூரி (கி.பி.1284) எனும் மருத்துவமனையானது ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தனித்தனியான அமைப்பில் இயங்கியது. இங்கு நோயாளிகளைப் பராமரிக்க ஆண் மற்றும் பெண் செவிலியர்கள் கடமை புரிந்தனர். மருந்தகம், விரிவுரை மண்டபம், வெளி நோயாளர் பிரிவு, மஸ்ஜித் போன்றவற்றில் ஆண்களுக்கும் பெண்களுக்குமாக தனித் தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. மேலும் மருத்துவமனைகளின் அருகாமையில் நூலகமும் நிர்மாணிக்கப்பட்டிந்தது. இக்காலகட்டத்தில் சுகாதார உள்கட்டமைப்பை மேம்படுத்தும் துரித நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. பக்தாத், குர்துபா, செவில்லா ஆகியன மருத்துவக் கல்வியின் மையங்களாக மிளிர்ந்தன. அதேசமயம் ஐரோப்பாவின் சுகாதார துறையின் தேக்க நிலையானது மருத்துவக் கல்வியின் பால் அங்குள்ள மாணவர்களை இங்கு ஈர்த்தது (Alotaibi, 2021; Hamarneh, 1962).

வரலாற்றில் இஸ்லாத்தின் பொற்காலம் என அறியப்படும் (கி.பி. 8ஆம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நுற்றாண்டு) காலப்பகுதியில் பல்வேறு தொழில்நுட்பங்களுடன் கூடிய வைத்தியசாலைக்

கட்டுமானங்களில் கிறிஸ்தவ உலகை விட முஸ்லிம் உலகு மிகவும் முன்னேறி இருந்தமையானது நவீன கால போதனா வைத்தியசாலைத் (Teaching Hospital) துறையின் முக்கிய முன்னோடிகளாக அவர்கள் மாறுவதற்கான அடித்தளமாக அமைந்தது என Retief & Cilliers (2006) குறிப்பிடும் கருதும் இங்கு அவதானிக்கத்தக்கது.

## IV. உஸ்மானிய பேரரசுக் காலம் (கி.பி. 1299 – கி. பி. 1922)

உஸ்மானிய பேரரசுக் காலத்தை டான்சிமத் இற்கு (சீர்திருத்தம்) முன்னரான காலகட்டம் (Pre-Tanzimat Era 1299-1839), டான்சிமத் இற்குப் பின்னரான காலகட்டம் (Post-Tanzimat Era 1839-1922) என இரண்டு அடிப்படைகளில் நோக்கலாம் (Baykara, 2017).

டான்சிமத் இற்கு முன்னரான காலகட்டத்தில் பெண் மருத்துவப் பயிற்சியாளர்கள் மற்றும் செவிலியர்களின் பங்களிப்பானது உஸ்மானிய பேரரசின் கீழ் உயர்ந்த அந்தஸ்த்தில் நோக்கப்பட்ட ஓர் பணியாகும். மேலும் உஸ்மானிய பேரரசின் கீழ் பின்வரும் மூன்று அதிகாரபூர்வ நிலைகளில் மருத்துவப் படிநிலைகள் அடையாளப்படுத்தப்பட்டன (Darwish & Weber, 2017).

*Physicians (Hekims or Tabibb)*

*Surgeons (Cerrahs) , Ophthalmologist (Kehhals)*

*Midwives (Dayas)*

உஸ்மானிய ஆட்சியின் கீழ் பெண்கள் அதிகளவில் ஈடுபட்ட தொழில்முறை செவிலியம் ஆகும். அதிலும் குறிப்பாக மருத்துவச்சி (Dayas) அல்லது மருத்துவ உதவியாளர் தொழில் முறைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது (Segev, 2024). இவர்கள் கருத்தரிப்பு, குழந்தை பிறப்பு, குழந்தை பிறப்புக்கு பின்னரான காலம் மற்றும் பெண்களின் பாலியல், இனப்பெருக்க ஆரோக்கியத்துடன் தொடர்புடைய சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளனர். உஸ்மானிய பேரரசின் ஆரம்பகால கட்டத்தில் பிரசவம் என்பது மருத்துவச்சி மற்றும் உதவி செவிலியர்கள் சிலரை உள்ளடக்கிய குழுவினால் வீடுகளிலேயே மேற்கொள்ளப்பட்டது (Nizamoglu, 2021).

மேலும் அரண்மனைக்கென தனியாக பயிற்றுவிக்கப்பட்ட மருத்துவச்சிகளும் செவிலியர்களும் காணப்பட்டனர். அரண்மனையில் குழந்தை பிரசவத்திற்கென தனியான அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. பிரசவ முடிவில் இவர்களுக்குப் பெருந்தொகைப் பணப்பரிசல்களும் வழங்கப்பட்டன (Kocaturk, 2020). 1476இல் இஸ்தான்புலில் உள்ள டோப்காபி (Topkapi) அரண்மனையில் ஆட்சியாளர் மெஹ்மதினால் மருத்துவ மையம் ஒன்று நிறுவப்பட்டது. மேலும் வரலாற்றுப் பதிவுகளில் 18ஆம் நூற்றாண்டு வரை அரண்மனை அந்தப்புரத்தில் பெண்களுக்கென தனியான பெண் மருத்துவக் குழுக்களும் செவிலியர்களின் குழுக்களும் பணிபுரிந்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளன (Darwish & Weber, 2017). டான்சிமத் இற்குப் பின்னரான காலகட்டம் (Post Tanzimat Era) ஆனது பால்கன் போர் இடம்பெறும் வரையான காலப் பகுதியாகும். இக் காலகட்டத்தில் அரசியல் ரீதியாக பல்வேறு சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இதன் பின்னணியில் ஒட்டோமன் சுகாதார அமைப்பு நவீன மயமாக்கத்திற்கு உள்வாங்கப்பட்டதுடன் செவிலியர் பணிகள் அரச தொழில் முறைமையாக மாற்றியமைக்கப்பட்டது. மருத்துவமனைகள் நிறுவப்பட்டு நவீன மருத்துவ நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன (Mossensohn, 2016). இவர்களுக்கு உஸ்மானிய செம்பிறைச் சங்கத்தின் (Ottoman Red Crescent Society) நவீன மருத்துவக் கற்பித்தல் முறைகளை உள்ளடக்கிய பயிற்சிகள் வழங்கப்பட்டன (Sonpol, 1996).

இதனைத் தொடர்ந்து இடம்பெற்ற கிரிமியன் (Crimean) போரானது (1853-1856) செவிலியர்களின் தேவையை அதிகரித்தது. இப்போரில் ப்ளோரன்ஸ் நைட்டிங்கேர்ள் பிரிட்டிஷ் வீரர்களுக்கு ஆற்றிய பணிகள் பரவலாக அறியப்படுகிறது. எனினும் ஒட்டோமன்களும் தமது சொந்த செவிலியர்களை உள்ளடக்கிய குழுக்களை பணியமர்த்தினர். முஸ்லிம்

பெண்களில் குறிப்பாக உயர் குடும்பங்களை சேர்ந்த பெண்கள் காயமடைந்தவர்களை கவனிக்க முன்வந்தனர். இவர்கள் இஸ்தான்புல் மற்றும் பிற இடங்களில் உள்ள இராணுவ மருத்துவமனைகளில் ஒட்டோமன் வீரர்களுக்கு காயங்களுக்கு மருந்திடல், கட்டுப்போடுதல் மற்றும் பராமரிப்பு அளித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வந்துள்ளனர் (Yayin, 2016).

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உஸ்மானியர்கள் முறைப்படுத்தப்பட்ட வகையில் தாதியர் பயிற்சித் திட்டங்களை வடிவமைத்தனர். 1842ஆம் ஆண்டு இஸ்தான்புலில் கடர்கா தாதியர் பள்ளி (Katarca School of Nursing) நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் ஆண் செவிலியர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெண் செவிலியர்கள் பயிற்சிக்காக இதில் உள்வாங்கப்பட்டனர். இதில் முஸ்லிம் பெண்கள் அதிக அளவில் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும் (Dal & Kiti, 2008). உஸ்மானிய செம்பிறைச் சங்கமானது (Ottoman Red Crescent- Hilal E-Ahmer) 1868இல் நிறுவப்பட்டது. இது போர்க்காலங்களில் செவிலியர்களுக்கான பயிற்சி மற்றும் ஆதரவை வழங்கியதுடன் பேரரசின் பல பகுதிகளுக்கும் மருத்துவக் குழுக்களை அனுப்பியது (Yayin, 2016).

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இஸ்தான்புலில் உள்ள பெண்கள் மருத்துவமனை பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவ உதவிகளை புரிந்தது. இஸ்லாத்தின் வரையறைகளை பேணும் முகமாக பெண் நோயாளிகளுக்கென பெண் செவிலியர்கள் இங்கு வேலைக்கு உள்வாங்கப்பட்டனர். இவர்கள் பிரசவம், குழந்தை பராமரிப்பு போன்றவற்றை மேற்கொண்டனர். இவர்களில் 'சபியா அலி' எனும் பெண் மருத்துவர் ஒட்டோமன் பேரரசில் மிக முக்கிய நபராவார். முஸ்லிம் பெண்களுக்கென தனியான தாதியர் சங்கத்தினை உருவாக்குவதில் இவரின் பணி மிக முக்கியமானதாகும் (Sonpol, 1996; Nizamoglu, 2021).

முதலாம் உலகப் போரின் போது செவிலியர்களின் தேவை அதிகரித்தமையானது குறித்த இப்பணியை மேலும் விரிவுபடுத்தியது. கலிபோலி பிரச்சாரம், மத்திய கிழக்குப் போர்கள் ஆகியவற்றில் இருந்து திரும்பி வரும் காயமடைந்த வீரர்களை கவனிப்பதற்கு முஸ்லிம் செவிலியர்கள் பெரும் எண்ணிக்கையில் அணி திரட்டப்பட்டனர். இந்த செவிலியர்கள் இராணுவ மருத்துவமனைகள், கள மருத்துவமனைகளில் பணிபுரிந்தனர். இரண்டாம் உலகப்போரின் போது இந் நிலை தொடர்ந்தது. குறிப்பாக பிரிட்டிஷ் காலனித்துவ நாடுகளை சேர்ந்த முஸ்லிம் பெண்கள் இராணுவ மருத்துவமனைகளில் பணியாற்றினர். இவர்கள் பொதுமக்களுக்கான சுகாதார சேவைகளை வழங்குவதில் முக்கிய பங்கு வகித்தனர் (Segev, 2024).

இரண்டாம் உலகப் போருக்கு (1939-1945) பின்னரான காலகட்டத்தில் பல முஸ்லிம் பெரும்பான்மை நாடுகள் காலனித்துவ சக்திகளிடமிருந்து சுதந்திரம் பெற்றன. இக்காலகட்டத்தில் செவிலியர்களுக்கான பயிற்சி நெறிகளை வழங்கும் அமைப்புக்கள் மற்றும் தேசிய சுகாதார அமைப்புக்கள் ஆகியன நிறுவப்பட்டன. இவற்றுக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆதரவு வழங்கப்பட்டது. மேலும் முஸ்லிம் செவிலியர்கள் பலர் ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றினர். மருத்துவப் பராமரிப்பு மட்டுமல்லாமல் சுகாதாரக் கல்வி உள்ளூர் சுகாதார அமைப்புக்களுக்கான ஆதரவையும் இவர்கள் வழங்கினர் (Segev, 2024). இவ்வாறு இஸ்லாமிய வரலாற்றில் செவிலியர்களின் பணி இடம்பெற்றிருப்பதை அவதானிக்க முடியும்.

**V. தற்காலம் (கி.பி 1950 – சம காலம் வரை)**

1950ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான காலப்பகுதியை வரலாற்றாசிரியர்கள் தற்காலம் (Contemporary Period) என வரையறை செய்கின்றனர் (Barbier, 2012). இதனடிப்படையில் தற்காலத்தில் முஸ்லிம் தாதியர்களின் பணிகளை இரண்டு விதத்தில் நோக்க முடியும்

### அ. இஸ்லாமிய சூழலில் பணிபுரிதல்

இஸ்லாமிய ஆட்சியை அடிப்படையாகக் கொண்ட நாடுகளிலும்பெரும்பான்மை முஸ்லிம்களை கொண்ட நாடுகளிலும் இஸ்லாத்தின் வரம்புகளைப் பேணி தாதியர்கள் பணி புரிந்து வருகின்றனர். இதனடிப்படையில் வளைகுடா நகரங்களில் ஒன்றான துபாயில் சத்வா ஜுமைரா என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஈரான் நாட்டவர்கள் பணிபுரியும் மருத்துவமனையானது முழுமையாக இஸ்லாமிய அடிப்படையைத் தழுவியதாகும். இங்கு பல வெளிநாட்டு மக்கள் சிகிச்சைக்காக வருகின்றார்கள். இங்கு பணிபுரியும் செவிலியர்களின் உடைகள் இஸ்லாம் வழிகாட்டியுள்ள முறையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது (Afrin & Bujaira, 2007).

பாகிஸ்தானில் அமைந்துள்ள Shifa International Hospital (2011இல் ஸ்தாபிக்கப்பட்டது) வைத்தியசாலையானது இஸ்லாமிய வரம்புக்குள் அமைந்துள்ளது. இங்கு பெண் செவிலியர்கள் ஹிஜாப் அணிந்த நிலையில் பணிபுரியலாம். மேலும் முஸ்லிம் அல்லாத செவிலியர்கள் அவர்களின் உரிமைகளை முழுமையாக அனுபவிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது (SIH, 2021).

மேலும் பாகிஸ்தானில் Qamar Al Islam Hospitalஉம் இதே அடிப்படையில் இயங்கி வருகின்றது (Qamarul Islam Hospital, 2022). மலேசியாவில் அமைந்துள்ள பிரபலமான மருத்துவமனையான (Islamic Hospital Consortium-Malaysia) 2005இல் உருவாக்கப்பட்டது. இது இஸ்லாமிய அடிப்படை நெறிமுறை, மருத்துவ பயிற்சி மற்றும் மருத்துவ நிர்வாகத்தை வழிப்படுத்தும் சுகாதார பாதுகாப்பு துறை மற்றும் அதன் உறுப்பினர்களிடையே ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் அமைக்கப்பட்டதாகும். மேலும் An Noor Specialist Hospital ஆனது "Physical, Mental, Psychology, Spiritual, Worship Services - Ibadha Friendly" எனும் தொனிப்பொருளின் அடிப்படையில் இயங்கி வருகின்றது (Islam Hospital, 2021).

சவூதி அரேபியாவில் 160 தனியார் மருத்துவமனைகளும் 350 அரச மருத்துவமனைகளும் காணப்படுகின்றன. இதில் 289 வைத்தியசாலைகள் சுகாதார அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றன. இங்கு முஸ்லிம் தாதியர்களுக்கென தனியான ஆடை அமைப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் முஸ்லிமல்லாத செவிலியர்களுக்கு வேறான ஆடை அமைப்பும் அறிமுகப்படுத்தப்பட்டு அவர்களின் உரிமைகளும் பேணப்பட்டு வருகின்றுது (Saudi Ministry of Health, 2020). மேலும் ஓமானில் தாதியர் தொழிலானது மிகவும் பெறுமதி வாய்ந்த தொழிலாக பார்க்கப்படுகின்றது. அங்குள்ள மக்கள் மத்தியில் அதிக வரவேற்பும் சமூக அங்கீகாரமும் இத்தொழிலுக்கு வழங்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். அங்கு பணிபுரியும் முஸ்லிம் தாதியர்கள் மிகவும் திறமையானவர்களாவர் (Shiyam, 2021).

2020ஆம் ஆண்டில் இந்தோனேசியாவில் உள்ள முஸ்லிம் செவிலியர்களின் ஆடை அமைப்பு முறையில் பல மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு அவை இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு உள்வாங்கப்பட்டது. இவர்கள் நீண்ட கை சீருடை மற்றும் ஹிஜாப் அணிவது கட்டாயமாகும். மேலும் இந்தோனேசியாவின் சுகாதாரத் துறையினால் ''கைகளின் கீழ் பகுதிகளை வெறும் நிலையில் வைத்திருத்தல்'' (Bare Below Elbows Policy)1 எனும் கொள்கையானது சில பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது (Szumska et al., 2023). மேலும் பங்களாதேஷ், கட்டார், எகிப்து போன்ற நாடுகளிலும் இதே ஆடை அமைப்பு முறை பின்பற்றப்படுகின்றது.

[4]The Bare Below Elbow (BBE) concept is a healthcare practice guideline often implemented in hospitals and clinical settings to maintain hygiene and reduce the risk of infections. It involves keeping the forearms free of clothing or accessories to ensure proper hand hygiene. This concept is especially important for healthcare workers during patient care.

குறிப்பாக தொற்றுக்கட்டுப்பாட்டு (Infection Control) நடைமுறைகளைப் பேணும் நோக்கில் சில சந்தர்ப்பங்களில் குறுகிய கையை கொண்ட (Short Sleeves) ஆடைகள் அணியப்படுகின்றன. இருந்தாலும் இஸ்லாமிய விதிமுறைகள் மற்றும் சுகாதார விதிமுறைகள் இங்கு சமமாகப் பேணப்படுகின்றது என ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன (Hadley et al., 2006; Abujaber et al., 2024; Tayeb et al., 2023).

மேலும் 2024இன் சமீபத்திய ஆய்வுகளின் படி தென்னாபிரிக்க நாடுகளில் பணி புரியும் முஸ்லிம் செவிலியர்கள் ஹிஜாப் அணிவதற்கான நாடு தழுவிய தடைகள் இல்லை. எனினும் சில சுகாதார அமைப்புக்களுக்கு மத்தியில் முஸ்லிம் செவிலியர்களின் ஆடைக் குறியீடு தொடர்பிலான விவாதங்கள், சர்ச்சைகள் இடம்பெற்ற வண்ணமுள்ளன. சில அரச வைத்தியசாலைகளில் முஸ்லிம் தாதியர்கள் ஹிஜாப் அணிந்த நிலையில் பணிபுரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும் (Githahu, 2023).

### ஆ. முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் பன்மைத்துவ சூழலில் முஸ்லிம் பெண்கள் தாதியர்களாகப் பணிபுரிதல்.

2024ஆம் ஆண்டு உலக நாடுகளின் சனத்தொகை அறிக்கையின் படி, உலகளவில் 45 நாடுகளில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக உள்ளனர். மக்கள் தொகையில் 50%க்கும் குறைவான முஸ்லிம்கள் இருக்கும் பகுதிகளும் இதில் அடங்கும். இந்த நாடுகள் முதன்மையாக ஐரோப்பா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா-பசிபிக் பகுதிகளில் அமைந்துள்ளன (Muslim Population by Country, 2024). குறிப்பாக இலங்கை, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, மியான்மார், கம்போடியா, வியட்னாம், சீனா, ஜெர்மனி, பிரான்ஸ், மொசாம்பிக் போன்ற நாடுகளில் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்ந்து வருகின்றனர் (Khan & Magid, 2011). சிறுபான்மை முஸ்லிம்கள் பிற சமூகங்களுடன் சேர்ந்து வாழும்போது பல்வேறுபட்ட சமூக, பொருளாதார, அரசியல் ரீதியிலான பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். இந்த பிரச்சினைகளை எவ்வாறு அணுகுவது? இந்த பிரச்சினைகளுக்கான மார்க்க ரீதியிலான தீர்ப்பினை எப்படி பெறுவது? முஸ்லிம்களின் பாதுகாப்பை எப்படி உறுதி செய்வது? என்பன முக்கியமான சவால்களாக திகழ்கின்றன (Ismail, n.d.).

இதனடிப்படையில் முஸ்லிம் தாதியர்கள் எதிர்நோக்கும் சவால்களை அடையாளப்படுத்தும் போது, சிறுபான்மை முஸ்லிம்களைக் கொண்ட நாடுகளின் தற்போதைய சூழ்நிலையில் முஸ்லிம் பெண்கள் ஹிஜாப் அணிந்த நிலையில் தாதியர்களாகப் பணிபுரிய முடியாத காரணத்தினால் அங்கு அவர்கள் தாதியர்களாகப் பணிபுரிவதற்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. ஹிஜாப் அணியாது தொழில் புரியும் போது அது பாவமாக மாறிவிடும் எனும் கருத்தில் பெற்றோர்களும் தம் பெண் பிள்ளைகளை தாதியர் கற்கை நெறியில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். பெற்றோரின் விருப்பத்தின் கீழ் இக்கட்டான சூழ்நிலைகளை தவிர்த்து பிற தொழில் துறைகளை தேர்ந்தெடுப்பதே சிறந்தது எனும் நிலைப்பாடு இங்கு காணப்படுவதாக Haniff Hassan (2020) தனது ஆய்வறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆனால் 2021ஆம் ஆண்டு சிங்கப்பூரின் அரச நிறுவனக் கொள்கைகளில் கொண்டுவரப்பட்ட மாற்றங்களின் பிரகாரம் 2021 நவம்பர் 1ஆம் திகதி முஸ்லிம் செவிலியர்கள் மற்றும் சுகாதார அமைப்புக்களில் பணிபுரியும் முஸ்லிம் பெண் ஊழியர்கள் ஹிஜாப் அணிய அனுமதிக்கும் சீருடை கொள்கை (Uniform Policy) கொண்டுவரப்பட்டது (Maisha, 2021; and Yeoh, 2021).

மேலும் பிலிப்பைன்சில் உள்ள முஸ்லிம் செவிலியர்கள் ஹிஜாப் அணிந்த நிலையில் பணிகளில் ஈடுபடும் போது பல்வேறு சவால்களை எதிர்கொள்வதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன (Castro et al., 2008; Amccartney, 2023; and Gauci et al., 2023). அதிலும் குறிப்பாக ஆடைக் கட்டுப்பாட்டு நடைமுறைகள், பணியிடப் பாகுபாடு என்பன அடையாளப்படுத்தப்படுகின்றது (Salaamedia, 2023). இது அவர்களின் தொழில்முறை

வளர்ச்சியை தடுப்பதுடன் அவர்களின் மன நலத்தில் தாக்கம் செலுத்துகின்றது என்பது ஆய்வுகளின் முடிவுகளாக அமையப்பெற்றுள்ளன. குறித்த சவால்களை எதிர்கொள்ள நிறுவனக் கொள்கை சீர்திருத்தங்களும், மத வேறுபாட்டினை அங்கீகரிக்கும் நிலை, கலாசார விழிப்புணர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன (Amccartney, 2023; and Gauci et al., 2023).

மேலும் தாய்லாந்து, வியட்நாம் மியன்மார் மற்றும் சீன போன்ற நாடுகளில் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்வதனால் முஸ்லிம் மக்களால் தாதியர் கற்கை நெறிக்கு வழங்கப்படும் அங்கீகாரம் மிகக் குறைவாகும். இந்த நாடுகளில் காணப்படும் தனியார் மருத்துவமனைகளில் மாத்திரம் முஸ்லிம் செவிலியர்கள் ஹிஜாப் அணிந்து பணிபுரிய அனுமதிக்கப்பட்டுள்ளனர் (McKinn et al., 2017). எனினும் அரச மருத்துவமனைகளில் பொதுவான செவிலியர்களுக்கான சீருடை அணிய முஸ்லிம் செவிலியர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படுவதனால் முஸ்லிம் பெண்கள் இத்தொழிலில் உள்வாங்கப்படுவது மிகக் குறைவாகும். மேலும் இவர்கள் எதிர்கொள்ளும் சவால்களாக ஹிஜாப் அணிந்து பணிபுரியும் போது ஏனைய தாதிமார்களுடன் இணைத்துப் பார்க்கப்படாமை, பதவி உயர்வு வாய்ப்புகளை மறுத்தல், குறித்த மருத்துவ சேவைகளில் இருந்து அவர்களை விலக்கி வைத்தல் போன்றன இவர்கள் எதிர்கொள்ளும் சவால்களாகும் என ஆய்வுகளில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன (Amccartney, 2023; Hasan et al., 2024; and Song et al., 2016). குறித்த இந்த நிலையினை இலங்கை மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் அரச மருத்துவ மனைகளில் பணி புரியும் முஸ்லிம் தாதிமார்கள் எதிர்கொள்கின்றனர் (Shiyam, 2021).

மேலும் ஜெர்மனி, அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளில் பணிபுரியும் முஸ்லிம் செவிலியர்கள் தமது தொழிலை மதக் கடமைகளின் ஊடாக சமப்படுத்திக் கொண்டு செல்வது சவாலாக உள்ளது. Pentaris & Thomsen, 2018; and Jun et al., 2023 ஆய்வுகளின் அடிப்படையில், பிரான்ஸ் இன் கடுமையான மதச்சார்பற்ற கொள்கைகளின் பிரகாரம் மருத்துவமனைகளில் ஹிஜாப் அணிந்து பணிபுரிதல் தடை செய்யப்பட்டுள்ளது. 2004ஆம் ஆண்டின் சட்ட சீர்திருத்தங்கள் ஹிஜாப் தடையை வலுப்படுத்தியுள்ளதுடன் தமது வேலையை தக்க வைக்க வேண்டுமாயின் ஹிஜாப் தடைக்கு இணங்க அழுத்தம் கொடுக்கப்படுகின்றனர். இஸ்லாத்தின் மீதான பிரெஞ்சு சமூக அணுகுமுறைகள் இவர்களின் வேலையை அதிக அளவு பாதிப்பதுடன் வேலைச் சுமை, பாகுபாடு, பதவி உயர்வு தடை போன்ற சவால்களையும் எதிர்கொள்கின்றனர் (Efendio�lu, 2023).

ஜெர்மனி மற்றும் அமெரிக்க நாடுகளில் ஹிஜாபை தடை செய்யும் தேசிய சட்டங்கள் எதுவும் இல்லை. ஒரு சில மாநிலங்களில் மாத்திரம் ஆடை கட்டுப்பாட்டு நடைமுறைகள் பேணப்படுகின்றன. மேலும் அரச மற்றும் தனியார் கலாசார மருத்துவமனைகள் கலாச்சார பன்முகத்தன்மை ஆதரிப்பதுடன் இங்கு முஸ்லிம் தாதியர்கள் தமது ஆடை அமைப்பை இஸ்லாமிய வழிகாட்டலின் கீழ் பேணி பணிகளை மேற்கொள்கின்றனர் (Major, 2021).

மேலும் கனடாவின் உரிமை மற்றும் சுதந்திரத்திற்கான சாசனம் மதப் பன்முகத்தன்மையை பாதுகாப்பதனால் முஸ்லிம் செவிலியர்கள எவ்வித சட்டக் கட்டுப்பாடுகளும் இன்றி தமது பணிகளை ஹிஜாப் அணிந்த நிலையில் பேணுவதற்கு அனுமதிக்கின்றது (Rassool, 2015). மேலும் ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோவில் 2007இல் முற்றிலும் மார்க்க அடிப்படையில் அமைக்கப்பட்ட இஸ்லாமிய மருத்துவமனையில் (Russian First Muslim Clinic) இன, மத பேதமின்றி எந்த நாட்டினரும் குறைந்த செலவில் சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும். இங்கு பெண் நோயாளிகளைப் பராமரிப்பதற்கு பெண் செவிலியர்களும், ஆண் நோயாளிகளைப் பராமரிப்பதற்கு ஆண் செவிலியர்களும் பணி புரிவதுடன் பெண் செவிலியர்கள் மற்றும் ஆண் செவிலியர்களின் உடைகள் இஸ்லாம் வலியுறுத்திய அடிப்படையில் அமைந்திருப்பதுவும் குறிப்பிடத்தக்கதாகும் (Asianews, 2007).

இவ்வாறு ஏனைய நாடுகளில் தாதியர் தொழிலுக்காக வழங்கப்படும் அங்கீகாரமும் வரவேற்பும் முஸ்லிம் சிறுபான்மையாக வாழும் நாடுகளில் வழங்கப்படுவதில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும். மேலும் தாதிமார்களை அங்கீகரிப்பதிலும் அவர்களை சமூகத்தில் அடையாளப்படுத்துவதிலும் ஒரு தேக்க நிலை சிறுபான்மை சூழலில் காணப்படுகின்றது. எனவே, திறமையான தாதியர்களை உருவாக்குவது முஸ்லிம் சமூகத்தின் பொறுப்பாகும் என்ற வகையில் ஒவ்வொரு முஸ்லிம் பெண்ணும் சமூகத்தின் ஒரு கடமையை நிறைவேற்றும் இப்பணிக்கு முன்வருவது அவசியமாகும் (Shiyam, 2021).

## முடிவுரை

இவ்வாய்வு தாதியர் சேவையில் முஸ்லிம் பெண்களின் வகிபாகத்தை விபரிக்கிறது. அந்தவகையில் இஸ்லாம் பெண்கள் தாதியர் சேவையை ஈடுபடுவதை ஊக்குவித்துள்ள அதேவேளை இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்ப காலம் முதல் வரலாறு நெடுகிலும் தாதியர் சேவையில் முஸ்லிம் பெண்களின் ஈடுபாடும் பங்குபற்றுதலும் குறிப்பிடத்தக்க அளவு இருந்துள்ளது. உண்மையில், இஸ்லாம் தாதியர் சேவையுடன் தொடர்பான பெண்களுக்கான பிரத்தியேகமான பல்வேறு ஒழுங்குகளையும் வரையறைகளையும் வகுத்துள்ளது. எனவே, தாதியர் சேவை இன்று ஒரு தொழிலாக மாறியுள்ள அதேவேளை நவீன உலகில் குறிப்பாக முஸ்லிம் சிறுபான்மைச் சூழலில் இச்சேவையுடன் தொடர்பான பல்வேறு புது விவகாரங்கள் தோன்றியுள்ளமையினால் இச்சேவையில் முஸ்லிம் பெண்களின் ஈடுபாடு தொடர்பான நடைமுறை ஆய்வுகளும் கால, சூழ்நிலை மாற்றங்களுக்கு ஏற்ற வகையிலான இஸ்லாமிய சட்டவியலை அடிப்படையாகக் கொண்ட துறைசார்ந்த ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுவது காலத்தின் தேவையாகும்.

## References


Abedin, S. M. (1989). Muslim minority and majority countries: a comparative study of demographic, social and economic data. *Institute of Muslim Minority Affairs. Journal*, *10*(2), 375–424. https://doi.org/10.1080/13602008908716129

Abu Afrin & Bujaira. (2007, December 15). *Thevaiyana Sevaigal* [Needed Services]. SatyaMargam. http://www.satyamargam.com/articles/common/needed-services/

Abujaber, A. A., Nashwan, A. J., Santos, M. D., Al-Lobaney, N. F., Mathew, R. G., Alikutty, J. P., Kunjavara, J., & Alomari, A. M. (2024). Bridging the generational gap between nurses and nurse managers: a qualitative study from Qatar. *BMC Nursing, 23*, 623. https://doi.org/10.1186/s12912-024-02296-y

Alotaibi, H. H. S. (2021). A Review on the Development of Healthcare Infrastructure through the History of Islamic Civilization. *Journal of Healthcare Leadership, 13*, 139–145. https://doi.org/10.2147/jhl.s315323

Alotaibi, M.J. (2023). Achieving Health Security during the Umayyad Era (41-132 AH/661-750 AD). *Information Sciences Letters, 12*(8), 2607-2617. Doi: 10.18576/isl/120815

Amccartney. (2023, September 26). *Burnout, workplace discrimination common for Asian nurses*. NurseJournal.org. https://nursejournal.org/articles/asian-nurse-burnout-discrimination/

American Nurses Association. (n.d.). *What is Nursing & What do nurses do? | ANA Enterprise*. Nursingworld.Org. Retrieved July 16, 2022, from https://www.nursingworld.org/practice-policy/workforce/what-is-nursing/

AsiaNews. (2007, June 12). *Moscow's first Muslim clinic opens*. AsiaNews. https://www.asianews.it/news-en/

Barbier, E. (2010). The Contemporary Era (from 1950 to the present). In Scarcity and Frontiers: *How Economies Have Developed Through Natural Resource Exploitation* (pp. 552-662). Cambridge: Cambridge University Press. doi:10.1017/CBO9780511781131.010

Baykara, T. (2017). A Study into the Concepts of "Turkey" and "Turkistan" which were used for the Ottoman

State in XIXth Century. *Journal of Atatürk and the History of Turkish Republic. 1*(1), 179–190.

Dal, Ü., & Kitiş, Y. (2008). The historical development and current status of nursing in Turkey. *OJIN: The Online Journal of Issues in Nursing, 13*(2). Doi:10.3912/OJIN.Vol13No02PPT02

Darwish, N., & Weber, A.S. (2017). Muslim women healers of the medieval and early modern Ottoman Empire. *Hektoen International Journal, 9*(2).

De Castro, A. B., Gee, G. C., & Takeuchi, D. T. (2008). Workplace discrimination and health among Filipinos in the United States. *American Journal of Public Health, 98*(3), 520–526. https://doi.org/10.2105/ajph.2007.110163

Efendioğlu, N. (2023, October). *Islamophobia is Pushing French Muslim Professional Women to Leave France (Report)*. AA Academy. https://www.aa.com.tr/en/newsacademy/turkey/islamophobia-is-pushing-french-muslim-professional-women-to-leave-france-report/533266

Gauci, P., Luck, L., O'Reilly, K., & Peters, K. (2023). Workplace gender discrimination in the nursing workforce—An integrative review. *Journal of Clinical Nursing, 32*(17–18). 5693–5711. https://doi.org/10.1111/jocn.16684

GlobalSecurity. (n.d.). *632-1000 Early Islamic Period. Globalsecurity*.Org. Retrieved May 5, 2022, from https://www.globalsecurity.org/military/world/ethiopia/history-islam-1.htm

Hadley, M. B., Blum, L. S., Mujaddid, S., Parveen, S., Nuremowla, S., Haque, M. E., & Ullah, M. (2006). Why Bangladeshi nurses avoid 'nursing': Social and structural factors on hospital wards in Bangladesh. *Social Science & Medicine, 64*(6), 1166–1177. https://doi.org/10.1016/j.socscimed.2006.06.030

Hamarneh, S. (1962). Development of Hospitals in Islam. *Journal of the History of Medicine and Allied Sciences, 17*(3), 366–384. https://doi.org/10.1093/jhmas/xvii.3.366

Hasan, M. K., Hossain, F., & Atar, E. (2024). Implications of refugee crisis on public sector healthcare organizations: Empirical observation from Myanmar's Rohingya refugees in Bangladesh. *Journal of Refugee Studies, 37*(3), 697–715. https://doi.org/10.1093/jrs/feae062

Hassan, M. H. (2020, December 11). *Female Muslim Working as a Nurse in Singapore*. Haniff.sg. http://haniff.sg/en/short-articles/article-female-muslim-working-as-a-nurse-in-singapore/

*Health Ministry slammed over Muslim nurses' dress code (Githahu, Interviewer)*. (2023, February 6). ioL. Retrieved December 27, 2024, from https://www.iol.co.za/capeargus/news/health-ministry-slammed-over-muslim-nurses-dress-code-bebc62fd-444e-4ad7-a8ac-b254dfc07319

Helmi, K. (2017, February 15). *History of Islamic medicine*. Academia.edu. https://www.academia.edu/31457117/

Islam Specialist Hospital. (2021). *Al-Islam Hospital*. https://www.al-islamhospital.com/ifh hmtext=ibpital,clinical%20and%20non%2dclinical%20divisions

Ismail. (n.d.). *Cirupānmaic Camūkam!!*[Minority Community]. Ismayil Salafi. Retrieved July 16, 2022, from http://www.ismailsalafi.com/sirufaanmai-samooham/

Jan, R. (1996). Rufaida Al-Asalmiya, the First Muslim Nurse. *The Journal of Nursing Scholarship, 28*(3), 267–268. https://doi.org/10.1111/j.1547-5069.1996.tb00362.x

Jun, J., Kue, J., Kasumova, A., & Kim, M. (2023). Workplace discrimination and burnout among Asian nurses in the US. *JAMA Network Open, 6*(9), e2333833. https://doi.org/10.1001/jamanetworkopen.2023.33833

Khan Academy. (n.d.). *The golden age of Islam. Khan Academy*. Retrieved July 16, 2022, from https://www.khanacademy.org/

Khan, H., & Magid, I. M. (2011, August 15). *Muslim-Majority and Muslim-Minority communities in a global context*. Brookings. https://www.brookings.edu/articles/muslim-majority-and-muslim-minority-communities-in-a-global-context/

Khan, S. M. (2019, December 2). *Prophet Muhammad*. World History Encyclopaedia. https://www.worldhistory.

org/Prophet_Muhammad/

Kocatürk, A. (2020) Besim Ömer: Founder of the first modern maternity hospital and midwifery education in Turkey. *European Journal of Midwifery, 4*(June), 1-3. doi:10.18332/ejm/120111

Lanka History (2019, July). *Ariviyal thuraiyil muslim arijarkalin pangalippu*. (2019). Lanka History. https://lk-history.blogspot.com/2019/07/blog-post_95.html?m=1

Life in Saudi Arabia. (n.d.). *Saudi Arabia bans nurses from wearing tight clothes*. Life in Saudi Arabia. Retrieved September 15, 2021, from https://lifeinsaudiarabia.net/saudi-arabia-bans-nurses-from-wearing-tight-and-revealing-clothes/

Maisah. (2021, August 31). *Singapore allows Muslim nurses to wear hijab in public healthcare*. The Islamic Information. https://theislamicinformation.com/news/singapore-allows-muslim-nurses-to-wear-hijab-in-public-healthcare/

Major. (2021). *Are there any problems or restrictions for wearing a hijab as a nurse in Germany?* Quora. https://qr.ae/pYnb3m

McKinn, S., Duong, T. L., Foster, K., & McCaffery, K. (2017). 'I do want to ask, but I can't speak': a qualitative study of ethnic minority women's experiences of communicating with primary health care professionals in remote, rural Vietnam. *International Journal for Equity in Health, 16*(1), 190. https://doi.org/10.1186/s12939-017-0687-7

Miller-Rosser, K., Chapman, Y., & Francis, K. (2006). Historical, Cultural, and Contemporary Influences on the Status of Women in Nursing in Saudi Arabia. *The Online Journal of Issues in Nursing, 11*(3), 8. doi:10.3912/OJIN.Vol11No03PPT02

*Muslim Population by Country 2024*. (2024). World Population Review 2024. https://worldpopulationreview.com/country-rankings/muslim-population-by-country

Nizamoglu, C. (2021, May 11). *Women Dealing with Health during the Ottoman Reign - Muslim Heritage*. Muslim Heritage. https://muslimheritage.com/women-dealing-with-health-during-the-ottoman-reign/

Pentaris, P., & Thomsen, L. L. (2018). Cultural and religious diversity in hospice and Palliative Care: A Qualitative Cross-Country comparative analysis of the challenges of Health-Care professionals. *OMEGA - Journal of Death and Dying, 8*1(4), 648–669. https://doi.org/10.1177/0030222818795282

Punyaamin, S. (2009, May 12). *Carvathesa Thāthiyar Thinam* [International Nurses Day]. One India Tamil. https://tamil.oneindia.com .

Qamar Ul Islam Hospital. (n.d.). *About Us*.18. Qamar Ul Islam Hospital. Retrieved January 3, 2022, from https://qamarulislamhospital.com/

Rassool, G. H. (2000). The crescent and Islam: healing, nursing and the spiritual dimension: Some considerations towards an understanding of the Islamic perspectives on caring. *Journal of Advanced Nursing, 32*(6), 1476–1484. Doi:10.1046/j.1365-2648.2000.01614.x

Retief, F.P., & Cilliers, L. (2006). *The evolution of hospitals from antiquity to the Renaissance. Acta Theologica, 26*(2), 213-232. Doi: 10.4314/actat.v26i2.52575

Salaamedia. (2023, September 4). *Health Ministry criticized over Muslim nurses' dress code* [Video]. YouTube. https://www.youtube.com/watch?v=C-onkzPjwmw

Segev, R. (2024). The late Ottoman era and its legacy for nursing in Turkey. *Turkish Studies, 25*(2), 352–365. https://doi.org/10.1080/14683849.2023.2300935

Shefer-Mossensohn, M. (2016). Medicine in the Ottoman Empire. In: Selin, H. (ed.), *Encyclopaedia of the History of Science, Technology, and Medicine in Non-Western Cultures* (pp. 3048-3054). Springer.

Shifa International Hospital. (n.d.). *History*. Retrieved January 3, 2022, from https://www.shifa.com.pk/history/

Shiyam. (29 October,2021). Muslim nurses in Sri Lanka., Personal Communication.

Sonbol, A.A. (1996). *Women, the Family, and divorce laws in Islamic History*. Syracuse University Press.

Song, P., Kang, C., Theodoratou, E., Rowa-Dewar, N., Liu, X., & An, L. (2016). Barriers to Hospital Deliveries among Ethnic Minority Women with Religious Beliefs in China: A Descriptive Study Using Interviews and Survey Data. *International Journal of Environmental Research and Public Health, 13*(8), 815. Doi: 10.3390/ijerph13080815

Szumska, E., Czajkowski, P., Zablocki, M., & Rozkiewicz, D. (2023). A Multifaceted Approach to the "Bare below the Elbow" Concept and Hand Hygiene Compliance among Healthcare Professionals: Multicenter Population-Based Study. *International Journal of Environmental Research and Public Health, 20*(5), 4435. https://doi.org/10.3390/ijerph20054435

Tayeb, H. O., Tekian, A., Baig, M., Koenig, H. G., & Lingard, L. (2023). The Role of Religious Culture in Medical Professionalism in a Muslim Arab Society. *Perspectives on Medical Education, 12*(1), 56-67. Doi: 10.5334/pme.920

Thoothu. (2019, January 21). *Navēna Maruthuva Ariviyal - Muslimgalin pangalipu* [Modern Medical Science - Muslims' Contribution]. Thoodhu. http://thoothu2018.blogspot.com/2019/01/blog-post_21.html?m=1

Virk, Z. M. (2017, March 23). *Hospitals and Health Care in Medieval Islam*. Academia.edu. Retrieved May 14, 2022, from https://www.academia.edu/32015924/

Yahya, S. (2017, March 31). *Rufaida Al-Aslamia - the first Muslim nurse*. Saudi Gazette. https://saudigazette.com.sa/article/175811

Yayın, D. (2016). The First Ottoman Civil Society Organizaton In The Service Of The Ottoman State: The case of the Ottoman Red Crescent (Osmanlı Hilal-i Ahmer Cemiyeti). Academia.edu. www.academia.edu. https://www.academia.edu/30136035/

Yeoh, G. (2021, August 31). *Muslim nurses "relieved" to get to wear tudung with uniform, private hospitals to follow suit*. CNA. https://www.channelnewsasia.com/singapore/tudung-nurses-muslims-relieved-private-hospitals-ndr-2021-2144676

# மேற்கின் அறிவுப் பாரம்பரியத்தில் 'ஸீரா நபவீய்யா': ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்

# 'Prophetic Biography (Sirah)' in the Western Scholarship: A Historical Analysis

அஷ்கர் அரூஸ் / Ashker Aroos[1]

Date of submission: 2024-11-24
Date of acceptance: 2024-12-8
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name: Ashker Aroos
Email: ashker888@gmail.com

**Abstract**

It can be observed that the 'Sirah Nabawiyya', which describes the life history of the Prophet Muhammad (p.b.u.h), has been continuously studied by many people in and outside the Islamic world after his death. The main reason for this is the Prophet's central role in Islam. Muslims focused on writing the 'Sirah Nabawiyya' to protect the Prophet (p.b.u.h) and to present his role models to the world. From the beginning, the West studied his life to oppose and criticize him and to defend Christianity. At the same time, the Islamic world in the East loves the Prophet (p.b.u.h) and tries to protect and spread his history, while the Western world criticizes him. However, it cannot be denied that righteous and honest historians have emerged amidst this historical phenomenon in the West. In this way, this article aims to explain in chronological order how the history of the Prophetic Sirah emerged in the intellectual tradition of the West against the background of reasons such as opposition, ignorance, hostility, selfishness, and bias and has developed based on neutral and honest research. For this, library-based research articles and authentic books have been handled as primary sources. In addition, this study has been carried out using a few important writings printed in the West in each period as samples. This study attempts to establish how the history of the Prophetic Sirah, which arose with hatred in the West, has undergone different evolutions over time and has been developed neutrally and impartially.

**Keywords:** Prophetic Sirah, West, Western Scholarship, Islam, Historical Analysis

## ஆய்வுப் பின்புலம்

இஸ்லாமிய வரலாற்றில் 'ஸீரா' நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே பாதுகாப்பதற்கான முயற்சிகள் உருவாகிவிட்டன. அவை ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டை அடைய முன்னரே நம்பகமான முறையில் எழுத்துருவில் பாதுகாப்பதற்கான பணிகளும் நிறைவடைந்தன (Ashker 2024, pp. 14-22). அவை அரபியில் 'ஸீரா', 'மகாஸி', 'கஸ்வா' போன்ற பெயர்களில் தொகுக்கப்பட்டன. பின்னர் நபியவர்களின் ஸீரா வரலாற்றெழுதுகைக்குட்பட்டு நபிமார்களின் தொடர்வரிசையில் இறுதித்தூதர் என்ற வகையில் ஆராயப்பட்டது. ஐரோப்பிய மொழிகளில் 'ஸீரா' என்ற அரபுச் சொல்லுக்குப் பகரமாக

[1]The author is a postgraduate in the Islamic Thought and Civilization (ISTAC), International Islamic University Malaysia (IIUM). Senior Lecturer, Jamiah Naleemiah Islamiah, Sri Lanka. ashker888@gmail.com

*Machomet, Mathome, Mafometus, Mouamed, Mahoma, and Mahomet* போன்ற சொற்களில் இறைத் தூதரின் வரலாறு ஆராயப்பட்டுள்ளது (*John Tolan, 2019, p. 3*).

இவ்வாறு மேற்கில் கிறிஸ்தவ உலகம் இஸ்லாத்தையும் அதன் தூதரையும் ஆய்வு செய்து பெரும்பாலும் சந்தேகக் கண்ணோடும் இறைத் தூதரைப் பற்றிய முன்முடிவுகளோடும் விசமக் கருத்துக்களை வெளியிட்டனர். இங்கு மேற்குலகு இறைத்தூதரைப் பற்றி ஆய்வுசெய்வதற்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிடலாம். ஒன்று இஸ்லாத்தின் வேகமான வளர்ச்சி கிறிஸ்தவ உலகில் ஆதிக்கம் செலுத்திவிடக் கூடாது என்பதற்காக இறைத் தூதரைப் பற்றிய ஆய்வுகளில் அவர்கள் ஈடுபட்டு கற்பிதங்களையும் வெறுப்புணர்வையும் பரப்பினர். இரண்டாவது முஸ்லிம்கள் ஸ்பெய்னைக் கைப்பற்றி மேற்குலகுடன் சங்கமித்து நெருங்கிய உறவைப் பேணும் நிலை உருவானதால் இஸ்லாமிய மூலாதரங்களிலிருந்தே இறைத் தூதரை அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்தது (*Ubaid Al-Rahman, 2014, p. 68*). இதனால் இறைத் தூதரையும் அவர் சுமந்து வந்த தூதுத்துவத்தையும் அறிவுபூர்வமாக நிறுவ வேண்டிய பாரிய பொறுப்பை முஸ்லிம்கள் சுமந்து நின்றனர். 'தலாஇலுந் நுபுவ்வா', 'முஃஜிதாதுந் நபி', 'திப்புந் நபவீ' போன்ற பல்வேறு தலைப்புக்கள் மூலம் நபியவர்களை முஸ்லிம்கள் பாதுகாக்கவும் அவரது தூதுத்தவத்தை நிறுவவும் முனைந்தனர். இந்நிலை கீழைத்தேயவாதிகளின் தோற்றம் வரைத் தொடர்ந்தது.

கீழைத்தேயவாதிகளின் தோற்றம் 15ஆம் நூற்றாண்டு முதல் ஆரம்பித்தாலும் அவர்களது பொற்காலம் 19ஆம் நூற்றாண்டு முதல் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை நீடித்துச் செல்கின்றது. இக்காலத்தில் இஸ்லாமிய உலகம் சிதறுண்டு பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியில் பலவீனமுற்றிருந்ததோடு மேற்கு தனது ஆதிக்கத்தை சர்வதேச ரீதியில் வியாபித்திருந்தது. இக்காலப்பிரிவில் தமது தீய நோக்கங்களை பரப்புவதற்கும் இஸ்லாத்தைக் கருவருப்பதற்கும் கீழைத்தேயவாதிகளின் சிறந்த ஆடுகளமாக 'ஸீரா' விளங்கியது. இவர்களது நயவஞ்சகத்தைத் தோலுரித்து குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் பாரிய பொறுப்பை முஸ்லிம்கள் சுமந்துகொண்டனர். 20ஆம் நூற்றாண்டின் முதற் பகுதியிலிருந்து முஸ்லிம் நாடுகள் மேற்கின் பிடியிலிருந்து சிறிது சிறிதாக விடுதலை பெற ஆரம்பித்தாலும் கீழைத்தேயவாதிகளிடம் கற்று அவர்களது பல்கழைக் கழகங்களிலிருந்து பட்டம் பெற்று வெளியேறிய முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதோரும் அதே குற்றச்சாட்டுக்களை இஸ்லாத்திற்கெதிராகவும் அதன் தூதருக்கெதிராகவும் மீண்டும் மீண்டும் அசைபோடுவதை அவர்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை (*Ashker & Fatmir 2024, pp. 191-205*). இவர்களை எதிர்த்து இறைத் தூதரின் வரலாற்றை அன்று முதல் இன்று வரை பாதுகாத்துப் பரப்புவதில் பாரசீகம், உருது, துருக்கி, பிரான்ச், அரபு, ஆங்கிலம் போன்ற மொழிகளில் வெளியாகியுள்ள ஆய்வுகள் பாரிய பங்களிப்புக்களை வழங்கியுள்ளமை வரலாற்றில் புலப்படுகின்றது (*Rauf & Muhammad Islam, 2022, pp. 26-45; Javid, 2022, pp. 28-36*).

### ஆய்வின் குறிக்கோல்கள்

இந்த ஆய்வானது பின்வரும் நோக்கங்களை அடைந்துகொள்ளும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

மேற்குலகில் நபிகளாரின் வரலாற்றை ஆய்வுக்குட்படுத்திய அறிஞர்களை வகைப்படுத்தி இணங்காணுதல்

மத்திய காலம் முதல் நவீன காலம் வரை காலக்கிரம ஒழுங்கில் மேற்கில் எழுதப்பட்ட ஸீரா நூல்களை மதிப்பிடுதல்

நவீன காலத்தில் நபியவர்களை நேர்மறையாக அறிமுகப்படுத்தும் மேற்கத்தேய ஆய்வாளர்களை அறிமுகம் செய்தல்

### ஆய்வுமுறை

பண்புரீதியான ஆய்வுமுறையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள இவ்வாய்வுக்கு பொதுவாக இஸ்லாமிய உலகிலும் குறிப்பாக மேற்கிலும் நபி (ஸல்)

அவர்களின் வாழ்க்கை வரலாற்றுடன் தொடர்புற்று பிரசுரிக்கப்பட்டுள்ள ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், துறைசார் நூல்கள், விமர்சன ஆக்கங்கள், இணையத்தள தகவல்கள் போன்றன மீளாய்வுக்குட்படுத்தப்பட்டு கலந்துரையாடலும் முடிவுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

### பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்

#### 1. ஸீரா துறைசார் மேற்கத்தேய ஆய்வாளர்கள்

மேற்கில் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை பல்வேறு நோக்கங்களுக்காக அறிஞர்கள் ஆய்வுக்குட்படுத்தினார்கள். மொத்தமாக அவர்கள் அனைவரும் இஸ்லாத்தை எதிர்க்கும் நோக்கிலேயே இஸ்லாத்தின் மூலாதரங்களையும் அதன் தூதரையும் பற்றி எழுதியிருக்கின்றார்கள் என்ற பிழையான அபிப்பிராயம் முஸ்லிம்கள் மத்தியில் நிலவுகின்றது. அத்தகைய ஆய்வாளர்களை பொதுவாக நான்கு தரப்பினர்களாகப் பிரித்து நோக்க முடியும்:

1- அரபு மொழியறிவோ, ஸீரா மூலாதார நூல்களைப் பற்றிய அறிவோ இன்றி மொழியெபர்ப்புக்களில் மாத்திரம் தங்கியிருந்து எழுதியவர்கள்.

2- அரபு மொழி, வரலாறு மற்றும் இஸ்லாமிய கலைகளையும் கற்றறிந்த எழுத்தாளர்கள். ஆனால் இவர்களிடம் ஸீரா பற்றி தெளிவான அறிவு இருக்கவில்லை. தெரிந்த அரபு மொழியை வைத்து இஸ்லாத்தையும் தூதரையும் பற்றி எழுதியவர்கள்.

3- கிழைத்தேயவாதிகள் இஸ்லாத்தையும் அரபையும் துறைபோகக் கற்றவர்கள். இவர்கள் நபியவர்களை பல்வேறு கோணங்களில் விமர்சித்துள்ளார்கள். நபியவர்களின் அரசியல் வளர்ச்சி, யுத்தம், பலதார மணம், பலப்பிரயோகத்தால் மார்க்கத்தைப் பரப்புதல், அடிமைப் பெண்களை வைத்திருத்தல், அரசியல் நரித்தனம் என பல்வேறு விடயங்களை வைத்து நபியவர்களை விமர்சித்துள்ளார்கள். இவ்வாறு இவர்கள் நபியவர்களைப் பற்றி பிழையாக சித்தரிக்க இரு காரணங்களைக் குறிப்பிட முடியும்:

(அ) இவர்கள் வெறும் ஸீரா மற்றும் வரலாற்று நூல்களில் மாத்திரம் தங்கியிருந்து எழுதியவர்கள். இவற்றில் பலவீனமான அறிவிப்புக்களும் உள்ளடங்கியிருந்ததால் இவர்களது விமர்சனங்கள் உருவாகின. நம்பகமான ஹதீஸ் அறிவிப்புக்களினை இவர்கள் அறியாதிருந்தனர்.

(ஆ) ‘இஸ்னாத்’1 ஆய்வு முறை முஸ்லிம்களிடமும் ஐரோப்பியர்களிடமும் வித்தியாசமானதாக இருந்தமை. உதாரணமாக ஒரு அறிவிப்பாளரின் அறிவிப்பை ஏற்க அவர்களது நம்பகத்தன்மை, பண்பாடு, பதிவுத்திறன் போன்ற பல்வேறு விடயங்களை முஸ்லிம்கள் நோக்கினார்கள். ஆனால் இவர்கள் நிகழ்வுகளையும் அதற்கான துணைக் காரணிகளையும் மாத்திரமே ஆராய்ந்து அங்கீகரித்தார்கள் (Shibli Nuhmani, 2004, V 1, p. 93).

4- நபியவர்களின் வலராற்றை நேர்மையாக ஆய்வுக்குட்படுத்திய மேற்கத்தேயர்கள். இவர்களில் ஒரு சில கீழைத்தேயவாதிகளும் உள்ளடங்குகின்றனர் இவர்கள் முழுமையாக நபியவர்களை ஆய்வுக் கண்ணோட்டத்தில் நேர்மையாக பக்கச்சார்பின்றி அணுகியுள்ளார்கள்.

இத்தகைய நான்கு தரப்பினர்கள் மத்தியில் முதல் இரு சாரார்களும் நபியவர்களை எதிர்மறையாகவே அணுகியுள்ளனர். அவர்களின் எழுத்துக்களில் அறியாமையும் போதாமையும் புலப்படுவதை தவிர்க்க முடியவில்லை. மூன்றாம் தரப்பினரான கீழைத்தேயவாதிகள் ஆய்வின் அடிப்படையில் நபியவர்களின் வரலாற்றை அணுகினாலும் சார்பியம், முன்முடிவு, முன்னோர்களை அப்படியே பின்பற்றுதல் போன்ற பண்புகளை அவர்களின் எழுத்துக்களில் கண்டுகொள்ள முடியும். இவற்றுக்கு மத்தியில் நான்காம் தரப்பினரான நேர்மையான ஆய்வாளர்கள் கீழைத்தேயவாதிகளிலும் சமகாலத்திலும் மேற்குலகில் தோன்றியிருக்கின்றார்கள் என்பதும் இங்கு கவனத்தைப் பெற வேண்டிய முக்கிய விடயமாகும்.

## 2. மேற்குலகில் ஸீரா ஆய்வுகள்

நபி (ஸல்) அவர்களின் வரலாறு இஸ்லாத்தின் பரவலோடு உலகின் நாலாபுறங்களிலும் பரவ ஆரம்பித்துவிட்டது. மத்திய காலத்துக்கு முற்பட்ட காலம் (Pre-Medieval Period) முதல் நவீன காலம் (Modern Period) வரை மேற்குலகில் அதன் பரவலாக்கம் விரிவடைந்து வந்துள்ளது. அந்த வரலாற்று ஒழுங்கை காலக்கிரம அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தி நோக்குவது பொருத்தமாகும்.

### (2.1.) மத்திய காலம் (9th century – 15th century)

மத்திய காலத்தில் கிறிஸ்தவ ஐரோப்பாவில் மதத்தின் ஆதிக்கம் தலைத்தோங்கியிருந்தது. மதகுருமார்களின் அதிகாரமும் ஆதிக்கமும் மக்களின் அன்றாட வாழ்வில் செல்வாக்குச் செலுத்தி வந்தன. இக்காலத்தில் பொதுவாகவே நபி (ஸல்) அவர்களைப் பற்றிப் பிழையான புரிதல்களும் வதந்திகளுமே மேற்கில் பரவின. இந்த எதிர்மறைப் புரிதலுக்குப் பிரதான காரணம் இக்கால ஆய்வுகள் அனைத்தும் மத்திய காலத்திலும் அதற்கு முன்னரும் எழுதப்பட்ட மூலாதாரங்கிளில் தங்கியிருந்தமையாகும். அவை இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரங்களிலிருந்து தூதரைப் பற்றி மிகச் சரியாகப் புரிந்துகொள்வதற்கான வசதிகளை பெற்றிருக்காததால் இறைத் தூதரை 'போலி மதத் தலைவர்', 'இரத்த வெறியர்', 'கிறிஸ்தவத்தின் எதிரி' என்றே சித்தரித்தன. இதனை நிறுவத் தகுந்த, போதிய ஆதாரம் அவர்களிடம் இல்லாவிடினும் மத்திய காலத்தில் இக்கருத்தே மேற்கில் அங்கீகாரம் பெற்றதாக விளங்கியது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் முதன் முதலில் நபி (ஸல்) அவர்களது வருகை மற்றும் தூதுத்துவம் கிறிஸ்தவ உலகை எட்டிய போது அவர்கள் எவ்வித வாதப் பிரதிவாதமுமின்றி முழுமையாக இறைத்தூதரையும் அவரது தூதுத்துவத்தையும் மறுத்துவிட்டனர். ஏனெனில் அதுவரை உலகில் செல்வாக்கு பெற்ற மார்க்கமாக கிறிஸ்தவமே அடையாளப்படுத்தப்பட்டு வந்தது. இந்தப் புதிய மார்க்கம் அவர்களுக்கு பெரும் சவாலாகவும் அக்காலத்தில் மிகச் சரியாக தீரவிசாரிக்க முடியாத நிலையிலும் இருந்ததால் கிறிஸ்தவ மதகுருமார்கள் கிறிஸ்தவர்களை காப்பதில் தீவிரமாக செயற்ப்பட்டனர். மேலும் தொடர்ந்து வந்த காலத்தில் முஸ்லிம்கள் கிறிஸ்தவ உலகின் பைஸாந்திய கோட்டையையும் கிறிஸ்தவ ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த சிரியா, எகிப்து, பலஸ்தீன் போன்ற பகுதிகளையும் கைப்பற்றி மிகக் குறுகிய காலத்தில் ஆளும் சக்தியாக மாறியதால் இந்தப் பக்கச்சார்பான, நேர்மை தவறிய அணுகுமுறை மேற்கில் மேலும் விரிவடைந்ததாக Fred Donner (2010, p.106) குறிப்பிடுகின்றார். இந்தவகையில் முதன் முதலில் நபியவர்களை 'போலி நபி', 'பொய்யன்' என குற்றம்சுமத்திய மதத் தலைவர் John of Damascus (d.750) என்பவராவார். (Fahd 2016, p. 138; Sertkaya 2022, p. 9) இவரைப் பின்பற்றியே பின்வந்தவர்கள் தமது வெறுப்புப் பிரச்சாரங்களைத் தொடர்ந்தனர். இந்த வெறுப்புணர்வு கிறிஸ்தவத்தைப் பாதுகாப்பதற்கான முயற்சி என்ற தோரணையில் Abd al-Masih ibn Ishaq al-Kindi2 போன்றோரின் எழுத்துக்களில் தீவிர நிலையை எட்டியது (Muir, 1887, pp. 38-39). இவர்கள் நபியவர்களை வழிகேடர், சதிகாரர், போலி நபி, கிறிஸ்தவத்தின் எதிரி, யுத்த விரும்பி, பாவி போன்ற பெயர்களைக் கொண்டு அழைத்து தமது வெறுப்புணர்வை வெளிப்படுத்தினர்.

இவ்வாறு ஆரம்பத்தில் இஸ்லாத்தைப் பற்றிய அறியாமையாலும் பின்னர் இஸ்லாத்தின் வளர்ச்சியைக் கண்டு உருவான காழ்ப்புணர்வினாலும் இறைத் தூதரை மேற்கு கண்மூடித்தனமாக எதிர்த்தது. இதற்குப் பின்னால் அவர்களிடமிருந்த ஒரே நோக்கம் கிறிஸ்தவத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதுவே. அத்தோடு முஸ்லிம்கள் ஸ்பெய்னைக் கைப்பற்றி அங்கே கல்வி நிறுவனங்களை உருவாக்கியதால் அரபு மொழியையும் இஸ்லாத்தையும் அதன் அடிப்படை மூலாதாரங்களிலே கற்பதற்கான ஒரு வாய்ப்பை அவர்கள் பெற்றுக் கொண்டனர். இங்கே ஒருசாரார் அரபு மொழியை மாத்திரம் கற்று இஸ்லாத்தின் மூலாதாரங்களில்

பரீட்சயமின்றி தூதரை எதிர்க்க முற்பட்டனர். இன்னொரு சாரார் இஸ்லாத்தின் மூலாதாரங்களின் அடியாக தூதரைப் புரிந்துகொண்ட போதும் மனமுரண்டாக இஸ்லாத்தையும் இறைத் தூதரையும் பிழையாகத் தொடர்ந்தும் சித்தரித்து வந்தனர். இறைத் தூதரை இஸ்லாமிய மூலாதாரங்களிலிருந்தே மிகச் சரியாக அறிவோம் என்ற மகுடத்தில் ஓர் முயற்சியை 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்ஸைச் சேர்ந்த கிறிஸ்தவ மதகுரு Peter (d.1156) மேற்கொண்டார். இதற்காக அவர் இறைத் தூதரைப் பற்றி முஸ்லிம்கள் எழுதியவற்றை மொழிபெயர்ப்பதற்கான ஒரு குழுவை தனது மேற்பார்வையின் கீழ் நியமித்து செயற்திட்டத்தை ஆரம்பித்தார்.3 ஆனால் இதுவும் மறைமுகமாக இஸ்லாத்தை எதிர்ப்பதற்காகவே மேற்கொள்ளப்பட்டது. ஏனெனில், இஸ்லாத்தையும் இறைத்தூதரையும் பற்றிய கட்டுக்கதைகளும் எதிர்ப்பும் பலநூற்றாண்டுகளாக மேற்கில் தொடர்வதற்குக் இத்தொகுப்பு காரணமாக இருந்தது. இதனை மூலாதாரமாக வைத்தே பின்வந்தோர் மேற்கில் இறைத்தூதரை அறிய முற்பட்டனர் (Aadil Hussain, 2024, p. 34). இதனால் இக்காலத்தில் பேசுபொருள் முன்னைய காலத்தை விடவும் வித்தியாசமான கருவைப் பெற்றது. முஹம்மத் (ஸல்) யூத, கிறிஸ்தவ தலைவர்களிடமிருந்து இந்த வழிகாட்டலை கற்றிருக்கின்றார் என்ற குற்றச்சாட்டை அவர்கள் பரப்பினர் (Rubin, 2007, p. xvi). இருந்தும் மரபுரீதியாக இஸ்லாத்தையும் இறைத் தூதரையும் மறுக்கும் போக்கு பல நூற்றாண்டுகளாக அவர்களிடம் தொடர்ந்துகொண்டே இருந்ததை மறுப்பதற்கில்லை.

### (2.2) 16 – 18 ஆம் நூற்றாண்டு வரையான காலம்

பதினாராம் நூற்றாண்டில் மேற்கில் உருவான அறிவு மறுமலர்ச்சி கத்தோலிக்க திருச் சபையின் மத அதிகார பீடத்தை கேள்விக்குட்படுத்தியது. அதிகார பீடங்களின் கட்டளைகளை கண்மூடித்தனமாக பின்பற்றுவதை விட்டு விட்டு சத்தியத்தை தேடும் பயணம் மேற்கத்தேயர்களிடம் துளிர்விட ஆரம்பித்தது. பதினேழாம் நூற்றாண்டாகின்ற போது அங்கே பேசுபொருள் குர்ஆன் மனித ஆக்கமா? இறை வழிகாட்டலா? என்ற வாதம் அவர்களது சிந்தனைகளை குடைந்தெடுத்தது. இக்காலத்தில் அரபு மொழியை கற்ற மேற்கத்தேயர்கள் தோன்றியதால் அவர்கள் நேரடியாகவே அரபு மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு நபியவர்களின் வாழ்வை எழுத முற்பட்டனர். இந்தப் பின்னணியில் Hottinger (d.1524), Edward Pococke (d.1691), Humphery Prideaux (d.1724) போன்றோரின் எழுத்துக்கள் அரபுப் பின்புலத்தை சுட்டிக்காட்டும் வகையில் அமைந்திருப்பதை அவதானிக்கலாம். இதன் விளைவாக பிரான்ஸ் நாட்டைடைச் சேர்ந்த Henri de Boulanvilliers (d.1722) என்பவர் நபி (ஸல்) அவர்களைப் பாதுகாத்து ‘La Vie de Mohmet’ (The Life of Mohamet) என்ற தனது ஆய்வை மேற்கொண்டவர். இவரே மேற்குலகில் நபி (ஸல்) அவர்களை முதன்முதலில் நேர்மறையாக அணுகிய ஆய்வாளராகக் கருதப்படுகின்றார். இவர் நபியவர்களை இறைத் தூதர், அறிவின் ஊற்று, மகா புத்திசாலி, பிழையான வணக்க வழிபாட்டுத் தளத்தில் சரியான வணக்கத்தை காட்டிக்கொடுத்தவர், சட்ட நிபுணர், ஆட்சியாளர், வெற்றியாளர் எனவும்; அவர் கொண்டு வந்த வழிகாட்டலை நீதி மற்றும் சகிப்புத்தன்மையின் மதம் எனவும் வர்ணிக்கின்றார் (Noth, 1993, p.383).

இவ்வாறு 17ஆம் நூற்றாண்டில் மேற்கத்தேய உலகில் நபியவர்களின் வரலாறு தொடர்பான எழுத்துக்கள் பக்கச்சார்பற்ற முறையில் ஓரளவு துளிர்விட ஆரம்பித்தது. இதனைப் பற்றி Sertkaya பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: ‘Boulanvilliers ஐத் தொடர்ந்து Jean Gangnier (d.1740) போன்றோரின் எழுத்துக்களும் இந்த அணுகுமுறையைப் பின்பற்றி அமைந்தன. அவரது Vie de Mahomet என்ற ஆய்வு நபியவர்களைப் பற்றி தீவிர எதிர்ப்போ, அனுதாபக் கண்ணோட்டத்திலோ அன்றி நடுநிலையானதாக இருப்பதை அவதனிக்கலாம். இவ்வாறு மேற்கத்தேய உலகில் நபியவர்கள் பற்றிய பார்வை புதிய பரிமாணத்தை எடுக்க ஆரம்பித்தது. இங்கு குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் இக்காலத்தில் அவுஸ்திரியாவைச் சேர்ந்த Joseph Von Hammer-Purstall (d.1856)

என்பவர் ஜாமிஉ தியாபாகிரி, ஸீரா இப்றாஹீம் ஹலபீ போன்ற அரபு ஸீரா நூல்களைப் பயன்படுத்தி நபியவர்களை மேற்குலகுக்கு அறிமுகப்படுத்தினார். இவர் நபியவர்களை இறைத்தூதராகவும் தாக்கமிகு பேச்சாளராகவும் ஏகத்துவவாதியாகவும் இறுதித் தூதராகவும் அறிமுகப்படுத்துகின்றார். இவர்களோடு Godfrey Higgins (d.1833) அவர்களும் கிறிஸ்தவ விமர்சனங்களுக்கு மத்தியில் நபியவர்களைப் பாதுகாத்து தனது நேர்மையான ஆய்வை "An Apology for the life and Character of the celebrated prophet of Arabia called Mohamed or Illustrious" என்ற தலைப்பில் முன்வைக்கின்றார் (Sertkaya 2022, p.10).

இவ்வாறு 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் நபியவர்கள் பற்றிய மேற்கின் பார்வையில் சிறியதொரு மாற்றம் ஏற்பட ஆரம்பித்தது. இந்த மாற்றத்துக்கு யூத-கிறிஸ்தவ வர்க்க முரண்பாடும் கிறிஸ்தவ மதகுருமார்களின் அதிகாரத் துஷ்பிரயோகமும் இன்னொருவகையில் துணைபோயுள்ளன. John Tolan குறிப்பிடுகின்றார்: 'ஐரோப்பிய உலகில் படுமோசமான மதச் சண்டைகளும் போராட்டங்களும் நடைபெற்று வந்த நிலையில் சிலர் குர்ஆனில் பொதிந்துள்ள பன்மைத்துவ சமூகத்தில் கடைபிடிக்க வேண்டிய மதசகிப்புத்தன்மை பற்றியும் அதனை உஸ்மானிய துருக்கியர்கள் எவ்வாறு நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள் என்பதையும் அறிந்து அவற்றை ஐரோப்பிய உலகம் முன்மாதிரியாகப் பின்பற்ற வேண்டும் எனக் கருதினார்கள். 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற பல்வேறு நாடுகளில் தோன்றிய எழுத்தாளர்கள் முஹம்மத் (ஸல்) அவர்கள் குருத்துவபீட அதிகார வர்க்கத்தின் ஏகபோக உரிமையையும் போலி புனிதத்தையும் இல்லாதொழித்த சமூக சீர்திருத்தவாதியாக மேற்குக்கு அறிமுகப்படுத்தினர். மேலும் யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் மதசகிப்புத்தன்மையையும் தூய ஏகத்துவத்தையும் மீளவும் உறுதிப்படுத்துவதற்கான சீர்திருத்தவாதியாக முஹம்மத் (ஸல்) அவர்களை சமூகத்துக்கு அடையாளப்படுத்தினார்கள். 18, 19ஆம் நூற்றாண்டை அடைகின்ற போது நபி (ஸல்) அவர்கள் சட்டம், மதம் மற்றும் அருட்பாக்கியங்களைக் கொண்டு வந்த சிறந்தொரு மனிதராக (Great Man), அரபுகளின் நாயகனாக (Hero) மேற்கில் அறிமுகப்படுத்தப்படும் நிலை உருவானது. பல எழுத்தாளர்கள் அவர் கொண்டு வந்த வழிகாட்டலை அறிமுகப்படுத்தியதை விட தூதரின் வாழ்விலிருந்து பாடங்களையும் படிப்பினைகளையும் பெற்று தமது சமூகத்தில் எவ்வாறு மாற்றங்களைக் கொண்டு வரலாம் என்பதிலேயே கூடிய கவனம் செலுத்தினார்கள்' (John Tolan, 2019, p.3).

எனவே, மேற்படி கூற்றுக்களிலிருந்து 19 ஆம் நூற்றாண்டை அண்மிக்கின்ற போது மேற்கில் தூதர் பற்றிய பார்வை ஓரளவு நேர்மறையானதாக உருவாகியிருப்பதையும் உரிய மூலாதாரங்களுக்குச் சென்று ஆய்வு செய்வதற்கான தேவையை அவர்கள் உணர்ந்திருப்பதையும் விளங்கிக்கொள்ள முடியும். எனினும் இத்தகைய ஆய்வுகள் மிக அரிதாகவே அங்கு உருவாகியதால் முன்னைய காலங்களைப் போன்று தூதரைப் பற்றிய எதிர்மறைப் பார்வையே தொடர்ந்தும் ஆதிக்கம் பெற்ற கருத்தாக வலம் வந்து கொண்டிருந்தது.

### (2.3) 19 ஆம் நூற்றாண்டு (Pre–Modern Period)

நவீனத்துக்கு முற்பட்ட காலம் (Pre-Modern Period) என இதனைக் குறிப்பிட முடியும். 19ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியிலிருந்து மேற்கு இஸ்லாத்தையும் அதன் தூதரையும் ஆய்வுக் கண்கொண்டு விமர்சனரீதியில் அணுக முற்பட்டது. இதற்குக் கீழைத்தேய ஆய்வுகள் (Orientalism) பெரிதும் காரணமாக அமைந்தன. Gustav Weil (d.1889) எழுதிய 'Mohammed der prophet: Sein Leben und Seine Lehre' (Muhammad the Prophet: His Life and his Doctrine) என்ற நூல் ஐரோப்பாவில் இஸ்லாமிய கற்கைகளுக்கு புதுயுகத்தை வழங்கிய நூல் என Kecia Ali குறிப்பிடுகிறார். மேலும் குறிப்பிடுகையில், "Gustav Weil அவர்களின் மற்றொரு நூல்: Muhammad's Life மேற்கில் ஸீரா துறையில் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட முக்கிய நூலாகக் கருதப்படுகின்றது என்றும்

அவர் அன்று கிடைத்த முதற்தர இஸ்லாமிய மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு இந்நூலைத் தொகுத்திருக்கின்றார்'' என்றும் குறிப்பிடுகின்றார் (Kecia Ali, 2014, p.45).

அத்தோடு முன்னோர்களோடு ஒப்பிடுகையில் இக்காலத்தில் தோன்றிய A.Sprenger (d.1893), Muir (d.1905) போன்றோர் தமது ஆய்வுகளில் எப்பொழுதும் விடயதான பகுப்பாய்விலே கூடிய கவனம் செலுத்தினர். இவர்களுடைய விசேட சிறப்பம்சம் யாதெனில் இவர்கள் நேரடியாக அரபுமொழியில் மூலாதாரங்களை அணுகும் மொழிப் புலமையைப் பெற்றிருந்ததோடு மேற்கத்தேய கல்வி நிறுவனங்களில் இஸ்லாமிய கற்கைகளை விமர்சனரீதியில் அணுகுவதைத் துறைபோகக் கற்றவர்களாகத் திகழ்கின்றார்கள். எவ்வாறிருந்தபோதிலும் இவர்கள் இஸ்லாத்தின் மூலத்தை கிறிஸ்தவத்திலும் யூத மதத்திலும் தேடிய மத்திய கால அணுகுமுறையை விட்டும் முற்றுமுழுதாக விடுபட்டிருக்கவில்லை. மறுபுறத்தில் Carlyle (d.1881), Tor Andrae (d.1947) போன்றோர் நபியவர்களைப் பற்றி ஏலவே பரப்பியிருந்த எதிர்மறைப் பார்வைகளை கலைக்கப் பாடுபட்டனர் என்பதும் மறுப்பதிற்கில்லை. இருந்தும் கீழைத்தேயவாதிகளான G.Weil, A.Sprenger, William Muir, David S. Margoliouth, T. Noldeke போன்றோர் நபியவர்களை யுத்த விரும்பியாக (Warmonger) சித்தரிக்கும் கருத்தே இக்காலத்தில் மேற்கில் ஆதிக்கம் செலுத்ததக் கூடியதாக இருந்தது என M.Watt குறிப்பிடுகின்றார் (Buaben 1996, pp. 177-185).

இக்காலப்பிரிவில் மேற்கில் எழுதப்பட்ட நபியவர்களின் வரலாற்றுடன் தொடர்புடைய இரு முக்கிய நூல்கள் ஈன்று குறிப்பிடத்தக்கவை. Sir William Muir (d.1905) எழுதிய "The Life of Muhammed From Original Sources," மற்றும் David Samuel Margoliouth (d.1940) எழுதிய "Muhammad and Rise of Islam" ஆகிய நூல்கள் மேற்கத்தேய உலகில் பெரும் தாக்கத்தை ஏற்பத்திய நூல்களாகும். இவை கீழைத்தேய ஆய்வின் மகத்தான பங்களிப்பாகக் கருதப்படுகின்றன. Muir அவர்களின் எழுத்துக்கள் அரபு மூலாதாரங்களுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருந்ததோடு மத்தியகால வெறுப்புப் பிரச்சாரம் மற்றும் எதிர்ப்பு அணுகுமுறையை விட்டும் மிகத் தூரமாக இருந்தது. இருந்தாலும் கிறிஸ்தவத்தை மிகவும் தூய்மைப்படுத்தி, இறைத் தூதருக்குரிய கௌரவத்தை வழங்காமல் சந்தேகக் கண்ணோடு அவர் அணுகியுள்ளமை அவரும் 'யூத கிறிஸ்தவத்தின் தத்துப் பிள்ளையே இஸ்லாம்' என்று கூறுவதைப் போன்றுள்ளது என Sertkaya குறிப்பிடுகின்றார். மேலும் Muir இன் இந்த நேர்மையற்ற அணுகுமறை கிறிஸ்தவமே யதார்த்தமானது என்றும் கிறிஸ்தவத்தோடு ஒப்பிடும் போது இஸலாம் வன்முறையின் மார்க்கம் என்றும் குறிப்பிடுகின்றது (Sertkaya 2022, pp.11). அவரது ஆய்வின் வெளிப்பாடாக முஹம்மத் ஓர் நம்பிக்கையாளர்; கடவுளால் பாதுகாக்கப்பட்டவர்; நேர்மையான மனிதர்; மக்கா காலத்தில் இணைவைப்புக்கெதிராகப் போரிட்டவர்; மதீனாவில் இதற்கு முரணாக செயற்பட்டவர் போன்ற கருத்துக்களைக் குறிப்பிட முடியும். இவ்வாறு அவர் நபியவர்களை சர்வதேச கதாநாயகனாக, சிறந்த நிர்வாகியாக சித்தரிக்க முனைகின்ற விம்பம் அன்னாரின் மத அடையாளத்தை ஏற்காததால் முரண்படுவதாகத் தோன்றுகின்றது என Buaben குறிப்பிடுகின்றார் (Buaben 1996, pp. 35-42).

Muir மரணித்து அரை நூற்றாண்டின் பின்னர் தோன்றிய Margoliouth (d. 1940) அவர்கள் நபியவர்கள் பற்றி மேற்கொண்ட ஆய்வின் மூலம் மேற்குலகில் பெரும் வரவேற்பைப் பெற்றார். தன்னை அனைத்து சார்பியங்களிலிருந்தும் விடுபட்டவராகக் கூறி எந்தவொரு மதத்துக்கும் மேலாதிக்கமில்லை என்ற கருத்தியலை அவர் ஏற்றிருந்தார். இவரது ஆய்வை முஸ்லிம்கள் விஞ்ஞானபூர்வமான ஆய்வாக ஏற்கவில்லை. ஏனெனில் இவர் குர்ஆனைப் பற்றி எந்தவொரு நேர்மறையான கருத்தையும் கூறவில்லை. 'குர்ஆன் முஹம்மதுடைய கண்டுபிடிப்பு' என்றே வாதிடுகிறார். இவர் பரந்த அறிவும் இஸ்லாமிய மூலாதாரங்களை நேரடியாக அணுகும் ஆற்றலும் பெற்றவராக இருந்தாலும் முஹம்மத் (ஸல்)

அவர்கள் ஏகத்துவத்தைப் போதிக்க வந்த இறைத்தூதர் என்ற கருத்தை எங்கும் குறிப்பிடவில்லை (Abdul Samad & Bashir, 2019). இவ்வாறு மேற்குலகு 20 ஆம் நூற்றாண்டை அண்மிக்கும் போது இறைத் தூதர் பற்றிய ஆய்வு முறைமைகளில் மாற்றங்களை உள்வாங்கியிருந்தாலும் விமர்சனங்களும் தொடர்ந்து கொண்டே வந்துள்ளமை இங்கு கவனிக்கத்தக்கது.

### 3. நவீன காலம் (Modern Period)

20 ஆம் நூற்றாண்டில் மேற்கின் முக்கிய பேசுபொருளாக இஸ்லாம் மாறியது. இஸ்லாத்தின் வளர்ச்சி வேகம் கிறிஸ்தவ உலகை தொடர்ந்தும் அச்சுறுத்தியது. மேற்கில் இஸ்லாத்துக்கெதிரான தடைகளும் எதிர்ப்புக்களும் அதிகரித்த வேகத்தை விடவும் இஸ்லாத்தைப் பற்றியும் அதன் தூதரைப் பற்றியும் அறிந்துகொள்வதற்கான ஆர்வம் முஸ்லிம் அல்லாதவர்களிடம் அதிகரிக்கத் தொடங்கியது. இந்தவகையில் நவீனகாலத்தில் M. Watt, Rudi Paret, Maime Rodinson, Michael Cook, Patricia Crone, Fred M. Donner, Martyn Lings, Karen Armstrong, John V. Tolan, Craig Considine போன்றோர் நபி (ஸல்) அவர்களது வரலாற்றை ஆய்வு செய்த முக்கிய அறிஞர்களாகக் கருதப்படுகின்றார்கள்.

இவர்களில் நபியவர்களைப் பற்றி ஆய்வுசெய்த மிகச் சிறந்த மேற்கத்தே ஆய்வாளராக M.Watt (d. 2006) கருதப்படுகின்றார். இவருக்கு முன்னர் ஆய்வுசெய்தவர்கள் ஸீராவில் சந்தேகங்களையும் வெறுப்பையும் முன்வைத்தாலும் வரலாற்றுத் தடயங்களையும் அன்றைய சமூக சூழ்நிலையும் வைத்து நோக்கும் போது அதற்கு சாத்தியப்பாடிருப்பதாகக் குறிப்பிடும் அவர் மத்தியகால அணுகுமுறைகளை கடுமையாக சாடுகிறார். அவரது இரு முக்கிய ஆய்வுகளான 'Muhammad in Mecca' (1953) 'Muhammad at Medina' (1956) ஆகிய நூல்கள் பழைய கிறிஸ்தவ வாதங்களையும் குறுகிய பார்வையையும் இல்லாதொழிக்கக் கூடியதாக இருந்தன. அவரது ஆய்வு அணுகுமுறையில் முஹம்மத் (ஸல்) ஓர் இறைத்தூதர் என்பதை வெளிப்படுத்தினாலும் ஏனைய இறைத்தூதரைப் போன்று அவரும் தவறிழைக்கக் கூடியவர் என்றும் குறிப்பிடுகின்றார். மேலும் அவரது முக்கியமான வாதம் நபியவர்களின் மக்கா காலம் முழுமையாக பொருளாதார முன்னேற்றத்தை மையமாகக் கொண்டே இருந்தது. ஹபஷா ஹிஜ்ரத் கூட பொருளாதார நோக்கத்திலே அமைந்திருந்ததென விமர்சிக்கின்றார். குறிப்பாக நபியவர்கள் இறைத் தூதர் என்பதை விட ஓர் ஆட்சியாளர் (Stateman) என்ற கருத்தையே அவர் அதிகம் வலியுறுத்துகின்றார் (Mustafeez, 2011, pp. 22-33). இந்தக் கருத்தை வலியுறுத்தும் வகையில் Muhammad Prophet and Statesman என்ற மற்றொரு நூலையும் எழுதியுள்ளார்.

Watt இன் நேர்மறையான அணுகுமுறை பின்வந்த Rudi Paret (d.1983), Maxine Rodinson (d.2004) போன்றோராலும் பின்பற்றப்பட்டது. Rodinson ஒரு மார்க்சிஸ்ட். அவரது ஆய்வு மதச் சாயலை விட்டும் விலகி நபியவர்கள் பற்றிய சமூகவியல் பார்வையை முழுமையாக வழங்கக் கூடியதாக இருந்தது. நபியவர்களின் அன்றைய சர்வதேச அரசியல் உறவை விளக்கும் Rodinson நபியவர்களை காலம் வேண்டிநிற்கும் தன்னிகரற்ற தனித்துவ ஆளுமையாக அடையாளப்படுத்துகின்றார் (Buaben, 1996, pp. 151-152). இவ்வாறு மேற்குலகில் நபியவர்கள் பற்றிய பார்வை 20ஆம் நூற்றாண்டில் வித்தியாசமான கண்ணோட்டங்களைப் பெற ஆரம்பித்தது. குறிப்பாக சார்பியம், முன்முடிவுகளின்றி இஸ்லாத்தின் தூய மூலாதாரங்களிலிருந்து ஸீராவை அணுகும் முறைமை தோற்றம் பெற்றது. இவர்களில் Martin Lings, Karen Armstrong போன்றோர் பிரதான இடத்தை வகிக்கின்றனர்.

Martin Lings (d. 2005) அவர்கள் கிறிஸ்தவ குடும்பப் பின்னணியைக்கொண்டவர். ஒரு சிறந்த மொழியியலாளர். ஷேக்பியரின் எழுத்துக்களுக்கு உயிர்கொடுத்தவர். பின்னர் இஸ்லாத்தைத் தழுவி நபி (ஸல்) அவர்களைப் பற்றி Muhammad: His Life Based on the Earliest Sources என்ற நூலை எழுதிப் பிரபல்யமுற்றார். இது இப்னு ஹிஷாம், இப்னு ஸஃத், தபரீ

போன்றோரின் நூல்களை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது. இவரது எழுத்தில் ஆங்கில ஆசிரியர், மாணவர் என்ற வகையில் ஷேக்ஸ்பியர் வாடை வீசுவதை அவதானிக்கலாம். இலகு மொழியில் வரலாற்று ஒழுங்கில் நபியவர்களின் ஸீரா மிக விரிவாக இந்நூலில் ஆராயப்பட்டுள்ளது. சில விமர்சனங்கள் இருந்தாலும் மேற்குலகில் மாத்திரமன்றி இஸ்லாமிய உலகிலும் ஆங்கில மொழியில் வெளியிடப்பட்ட அங்கீகரிக்கத்தக்க ஆதாரபூர்வ நூலாக இது கருதப்படுகின்றது (Sheikh Haddad, 2005, p. 12).

அடுத்து இங்கிலாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட Karen Amrmstrong (b.1944) அவர்கள் ரோம கத்தோலிக்கப் பெண் மதகுரு. பின்னர் இவர் லெபரல் சிந்தனையால் கவரப்பட்டார். சிறந்த எழுத்தாளர், வானொலிப் பேச்சாளர் மற்றும் ஆசரியருமான இவர் மத ஒப்பீட்டாய்வில் கூடிய கவனம் செலுத்தியிருந்தாலும் ‘Muhammad – A Biography of the Prophet’, ‘Muhammad -prophet of Our Time’ ஆகிய நூல்களின் மூலம் இஸ்லாமிய உலகில் அறிமுகமானார். இந்நூல்கள் நபியவர்களைப் பற்றிய மேற்கின் பிழையான பார்வையை போக்க உதவின. இவர் நபியவர்களை நடுநிலை தவறாமல் ஆய்வு செய்துள்ளதோடு ஸல்மான் ருஷ்தி நபியவர்களைப் பிழையாக சித்தரித்து எழுதிய கட்டுரைக்கு மறுப்பாக ‘True Story of the Prophet’ என்ற ஆக்கத்தை எழுதி மேற்கில் நபியவர்களை பாதுகாத்தார் (Butt & Khalid, 2017, p. 72). Karen Armstrong அவர்கள் தனது நூலில் மேற்குலகுக்கு பின்வருமாறு உபதேசிக்கின்றார்: ‘நாம் சகிப்புத்தன்மையின்றி இந்தளவு வெறித்தனமாக நடந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அவ்வாறு நடப்பதால் மேற்குலகு இஸ்லாமிய உலகுக்கெதிராக புதியதொரு சிலுவை யுத்தத்தைத் தொடுத்துள்ளது என்ற கோசத்தை உறுதிப்படுத்த சில தீவிரவாதிகளுக்கு துணையாக அமைந்துவிடும். உண்மையில் முஹம்மத் (ஸல்) சகிப்புத்தன்மையற்றவராக இருக்கவில்லை. நாம் அவரது வாழ்வை நிதானமாக அணுக வேண்டும். அவரது சாதனைகளை வரவேற்க வேண்டும். இல்லாதபோது பக்கச்சார்பான அணுகுமுறை மேற்கு நாகரிகத்தின் சிறப்புப் பண்புகளான சகிப்புத்தன்மை, சுதந்திரம், அன்பு போன்றவற்றை சீர்குழைத்துவிடும் (Karen Armstrong, 2006, p.18).

அவ்வாறே மிக அண்மையில் வெளியிடப்பட்ட John V. Tolan (b. 1959) எழுதிய “Faces of Muhammad: Western Perceptions of the Prophet of Islam from Middle Ages to Today” மற்றும் Craig Considine (b.1985) எழுதிய “The humanity of Muhammad: A Christian View” ஆகியன நபி (ஸல்) அவர்களைப் பற்றிய நேர்மறையான பார்வையை வழங்கக்கூடிய மிக முக்கிய நூல்களாகும். அமெரிக்க கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்த John Tolan அவர்கள் பிரான்ஸ் Nantes பல்கலைக்கழகப் பேராசிரியர். பல்வேறு நூல்களின் ஆசிரியரான இவர் மத்திய கால ஐரோப்பிய வரலாற்றுத் துறையில் விஷேட ஆய்வாளர். மற்றும் கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், யூதர்களுக்கு மத்தியிலான நல்லுறவைக் கட்டியெழுப்புவதில் தொடர்ந்தும் பாரிய பங்களிப்புக்களை செய்து வருபவர். 2019 இல் வெளியான ‘Faces of Muhammad’ எனும் இவரது நூல் நபியவர்களின் வரலாற்றை விளக்கும் நூலல்ல. மாறாக நபியவர்கள் வரலாறு நெடுகிலும் எவ்வாறு வித்தியாசமான முகங்களில் முஸ்லிமல்லாத மேற்கத்தேயர்களால் பார்க்கப்பட்டிருக்கின்றார்கள் என்றும் அது காலப்போக்கில் வளர்ச்சியடைந்து சமகாலத்தில் அரசியல் மற்றும் சமூக சித்தாந்தங்களால் எவ்வாறு மாற்றம் அடைந்து வந்துள்ளது என்றும் விளக்குகின்றது. இதில் நபியவர்கள் பற்றிய நேர்மறையான பார்வையை மேற்குலகுக்கு வழங்க ஆசிரியர் முனைகின்றார். (Aadil Hussain, 2024, p. 22)

அவ்வாறே கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாமியர்களுக்கிடையில் நல்லுறவைக் கட்டியெழுப்பப் பாடுபடுகின்ற ஓர் இளம் அமெரிக்க சமூகவியலாளர் Craig Considine அவர்கள் Rice பல்கலைக்கழகத்தின் பேராசிரியர். இவரது “The humanity of Muhammad: A Christian View” என்ற நூல் மேற்குலகில் மிகுந்த வரவேற்பைப் பெற்ற நூல். அவர் நபி (ஸல்)

அவர்களின் தயாள குணம், மத பன்மைத்துவ சமூகத்தை தோற்றுவிப்பதில் அவரது புத்தாக்கமிகு வகிபாகம், அனைவருக்கும் சமசந்தர்ப்பம் மற்றும் சம உரிமை, இனவாத எதிரப்பியல், மானிட சமூக நலனுக்காக அறிவு தேடலை ஊக்குவிக்கும் பண்பு, பெண் அநீதிக்கெதிரான உரிமைக் குரல், ஈஸா (அலை) அவர்களது போதனைகளை உறுதிப்படுத்தும் பண்பு, சத்திய பாதையில் அவரது சலையாத அர்ப்பணம் என நபி (ஸல்) அவர்களது போதனைகளினூடாக மேற்குலகுக்கு அவரைப் பற்றிய ஒரு நேர்மறைப் பார்வையை இந்நூலில் வழங்குகின்றார். அவர் தனது நூலின் முன்னுரையில், 'வரலாறு நெடுகிலும் கிறஸ்தவர்களால் 'ஜீஸஸின் எதிரி' என பிழையாக் புரியப்பட்ட இறைத் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களது கண்ணியத்தை காக்கவும் மனித சமூகத்தை மேம்படுத்தவும் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மத்தியில் சமாதானம் மற்றும் நல்லுறவை ஏற்படுத்தவுமே நான் இந்நூலை எழுதினேன்' என இந்நூல் எழுதப்பட்ட நோக்கத்தைக் குறிப்பிடுகின்றார் (Considine, 2020, p. 13).

இவ்வாறு மேற்கில் வரலாற்றொழுங்கில் வெறுப்பு, குரோதம், அச்சம், மேலாதிக்கம், முன்முடிவு போன்ற நிலைகளிலிருந்து ஸீரா எழுத்துக்கள் வித்தியாசமான பரிணாமங்களைப் பெற்று வந்துள்ளன. இன்று இஸ்லாம் மற்றும் இறைத் தூதர் பற்றிய பார்வை வித்தியாசப்பட்டுள்ளது எனலாம். அறிவு, ஆய்வு அடிப்படையில் இன்று நேர்மையாகவும் பக்கச்சார்பற்ற வடிவிலும் சிந்திக்கும் முஸ்லிம் அல்லாதவர்கள் மேற்கில் மாத்திரமன்றி உலகின் நாலாபுறங்களிலும் உருவாகியுள்ளனர். அவர்கள் வித்தியாசமான கோணங்களில் நபியவர்களின் வாழ்வை ஆய்வுக்குட்படுத்தியுள்ளார்கள். அதேவேளை மேற்கில் வாழும் முஸ்லிம் அறிஞர்களும் நபியவர்களை மிகச் சிறந்த முறையில் சர்வதேசத்துக்கு அறிமுகப்படுத்தும் பணிகளை காத்திரமாகச் செய்துவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

நபி (ஸல்) அவர்களின் வரலாறு எப்பொழுதும் அனைத்து தரப்பினராலும் ஆய்வு செய்யப்பட்டு வந்திருக்கின்றது. இதில் மேற்குலகு ஒருவகையில் கிறிஸ்தவத்தைப் பாதுகாக்கவும் இன்னொருவகையில் உண்மையை மிகச்சரியாகப் புரிந்துகொள்ளவும் இந்த ஆய்வில் ஈடுபட்டு வந்துள்ளது. இத்தகைய ஸீரா ஆய்வாளர்களில் மொழிபெயர்ப்புக்களில் தங்கியிருந்து எழுதியோர், அரபு மொழியை மாத்திரம் கற்று எழுதியோர் பெரும்பாலும் நபியவர்களை எதிர்மறையாகவே அணுகினர். இவர்களிடம் சார்பியம், முன்முடிவுகள், மேலாண்மைவாதம் (Superiority) போன்ற பண்புகள் கலந்திருந்தன. இதன் விளைவாக எதிர்ப்பு, குரோதம், வன்மம் போன்றனவே இவர்களின் எழுத்துக்களில் புரையோடியிருந்தன. இவர்களில் மூலமொழியில் முதற்தர மூலாதாரத்துக்குச் சென்று இறைத் தூதரை ஆய்வு செய்தவர்கள் மிகக் குறைவு. பெரும்பாலான கீழைத்தேயவாதிகளும் தமது ஆய்வில் நபியவர்களைப் பற்றி எதிர்மறையாகவே எழுதியுள்ளனர். எனினும் மேற்கில் உருவான கல்வி மறுமலர்ச்சி, கீழைத்தேய ஆய்வின் வளர்ச்சி மற்றும் பின் காலனித்துவ கற்கைகளின் விளைவாக சுதந்திரமாகவும் நேர்மையாகவும் சிந்திப்பவர்கள் வரலாற்றில் தோன்றியுள்ளனர். இவர்களில் ஒரு சில கீழைத்தேயவாதிகளும் சமகாலத்தவர்களும் உள்ளடங்குகின்றனர். நபியவர்களைப் பற்றிய இவர்களின் பார்வை முன்னோர்களை விடவும் வித்தியாசப்பட்டது எனலாம். இவர்கள் பக்கசார்புடனோ, முன்முடிவுகளுடனோ அல்லாமல் தமது ஆய்வுகளை நேர்மையாக முன்வைத்துள்ளனர். இதனால் மேற்கில் நபியவர்களைப் பற்றிய நேர்மையான ஆய்வுகள் வெளிவந்தன் இன்றும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

## Endnote

1 ‘இஸ்னாத்’ என்பது நபியவர்களுடன் தொடர்புடைய சொல், செயல்› அங்கீகாரம்› பண்புகள்› வர்ணனைகள் என அனைத்தையும் அறிவிக்கும் அறிவிப்பாளர்களுக்கிடையிலான விடுபடா தொடர்பு அல்லது தொடர் சங்கிலி ஆகும்.

2 இந்நூல் 9ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாக சொல்லப்படுகின்றது. அதனை Sir William Muir அவர்கள் ஆங்கிலத்தில் “The Apology of Kindy” என்ற பெயரில் மொழிபெயர்த்திருக்கின்றார். எனினும் இந்நூல் al-Kindy அவர்களால் எழுதப்படவில்லை என முஸ்லிம்கள் கருதுகின்றனர்.

3 இந்த மொழிபெயர்ப்புத் தொகுப்பு இன்று ‘Toledo- Cluny Collection’’ என்ற பெயரில் பிரபல்யமடைந்துள்ளது (Gorgun 2004, p. 476) என துருக்கி மத விவகார இஸ்லாமிய கலைகளஞ்சியத்தை ஆதாரம் காட்டி Sertkaya சுட்டிக்காட்டுகிறார். (Sertkaya 2022, pp. 18)

**References**


Ahmad, Rauf & Islam, Muhammad. (2022). The Bibliometric Analysis of a Bibliography of the Works on the Prophet Muhammad in Western Languages. *Journal of Maarif-E-Islami, 21*(2).

Ali, Kecia. (2014). *The Lives of Muhammad*. London: Harvard University Press.

Ali, Mouhammad Mohar. (1997). *The Biography of the Prophet and the Orientalists*. Madinah: King Fahd Complex for the Printing of the Qur’an & Centre for the Service of Sunnah and Sirah.

Al-Olaqi, Fahd Mohammed Taleb. (2010). *“Image of Messenger Muhammad (p.b.uh) in the English Literature from Early Middle Ages to Present,” INSIGHTS, ‘Muhammad (peace be on him) and the West’ Number, 02: 4*. 029-100.

Al-Olaqi, Fahd Mohammed Taleb. (2016). Western Polemic Writings about Muhammad’s Prophethood. *Advances in Social Sciences Research Journal, 3*(5), 138-156.

Alvi, Mustafeez Ahmad. (2011). Montgomery Watt on Sirah of the Prophet (PBUH). *Journal of Al-Qalam, 16*(1), 22-32.

Armstrong, Karen. (2006). *Muhammad: Prophet for Our Time*. London: Harper Press.

Aroos, Ashker & Shehu, Fatmir. (2024). A Historical Exploration of the Selected Writing Trends on As-Sirah an-Nabawiyyah (prophetic Biography) from the first Century of Islam to the Contemporary Times. *Journal of Islam in Asia, 21*(1), 191-205.

Aroos, Ashker. (2024). “]Puhtpd; ek;gfj;jd;ikAk; tsu;r;rpg; gupzhkKk;: xU tuyhw;Wg; gFg;gha;T>” ,];yhkpa rpe;jid. *Research Journal of Jamiah Naleemiah, 42*(2), 14-22.

Bhat, Javid Ahmad. (2022). Overview of Prominent Sirah Writings of Modern Period. *Journal of Manars, 2*(2).

Brown, Jonathan A.C. (2014). *Misquoting Muhammad: The Challenge and Choices of Interpreting the Prophet’s Legacy*. London: Oneworld Publication.

Buaben, Jabal Muhammad. (1996). *Image of the Prophet Muhammad in the West, A Study of Muir, Margoliouth and Watt*. Leicester: The Islamic Foundation.

Butt, Muhammad Qasim & Khalid, Muhammad Sarfraz. (2017). Karen Armstrong as a Biographer of Muhammad: A Critical Study of Muhammad: Prophet for Our Time. *Journal of Islamic Studies and Culture, 5*(2), 72-79.

Considine, Craig. (2020). *The Humanity of Muhammad: A Christian View*. New Jersey: Blue Dome Press.

Donner, Fred. (2010). *Muhammad and the Believers*. London: The Belknap Press of Harvard University Press.

Fatima, Tehreem & Aqsa Tasgheer. (2022). The Rationalistic-Critical Approach of Orientalists in Seera Writings: An Exploratory Study of Modern Trends. *Al-Wifaq Journal, 5*(1), 86-97.

Gorgun, Hilal. (2004). *Muhammad*. Istanbul: Turkey Diyanet Vakfi Islam Ansiklopedisi.

Haddad, Sheikh. (2005, Sep 8). A Critical Reading of Martin Lings' Muhammad (PBUH): His Life Based on The Earliest Sources. *GF Haddad*. Retrieved from https://britishmisk.wordpress.com/wp-content/uploads/2009/03/52879411-critical-reading-of-martin-lings-gf-haddad.pdf.

Malik, Aadil Hussain. (2024). Modern Western Trends in Sirah Writing: An Assessment of John V.Tplan and Craig Considine's Approach. *Journal of Hamdard Islamicus, 47*(2), 9-36.

Manj, Muhammad Shahabz. (2023). A Study of Sirah in the West in the 21st Century. *Research Journal, 8*(2), 152-165.

Muir, William. (1887). *The Apology of al-Kindy*. 2nd ed. London: Society for Promoting Christian Knowledge.

Noth, A. (1993). *Muhammad*. 2nd ed. Leiden: Brill.

Nu'mani, Shibli. (2004). *Dayiratu Ma'arif Fi Sirat al-Nabi*. Delhi: Dar al-Musannifeen.

Rubin, Uri. (1995). *The Eye of The Beholder: The Life of Muhammad as Viewed By the Early Muslims*. New Jersey: The Darwin Press.

Rubin, Uri. (2007). *The Formation of Classical Islamic World IV: The Life of Muhammad*. Burlington: Ashgate.

Sertkaya, Suleyman. (2022). A Critical and Historical Overview of the Sirah Genre from the Classical to the Modern Period. *Religions, 13*(3), 196. Retrieved From https://doi.org/10.3390/rel13030196

Sheikh, Abdul Sanad & Dars, Bashir Ahmad. (2019). William Muir and His Book: The Life of Prophet (PBUH)- An Analytical Study. *Journal of Hazara Islamicus, 8*(2), 41-52.

Tayyib, Ubaid al-Rahmān. (2014). Rad al-Ulamā al-Hnūd 'Ala Kitābat al-Mustashriqīn Hawla al-Sīrah al-Nabawiyah. *Thaqāfat al-Hind, 65*(4), 72.

Tolan, John. (2019). *Faces of Muhammad: Western Perceptions of the Prophet of Islam from the Middle Ages to Today*. Princeton University Press, Oxford hire.

# Google Translation (GT) & Human Translation (HT) வழி தமிழ்ச் சொற்றொடர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு ஓர் பகுப்பாய்வு

## Analysis on Google Translation (GT) & Human Translation (HT) on translating Tamil phrase into English Language

**கோமதி பத்துமலை** / Gomathi Batumalai[1]
**நாகலிங்கேஸ்வரன் ஆறுமுகம்** / Nagalingeswaran Armugam[2]

**Abstract**

*Every language greatly benefits from translation. Translation is a mechanism for conveying the meaning of the source language (SL) to the target language (TL). Many translation tools are available, including Google Translation (GT) and human translation (HT). The primary goal of this study is to translate Tamil expressions into English using both Google Translation (GT) and human translation (HT). This study was carried out to determine the translation approaches used by Google Translation (GT) and Human Translation (HT), and to evaluate the precision of translating Tamil phrases using GT and HT (HT). The text analysis method was used to gather all the data. The data were analysed with Newmark Translation Theory (1988). This study discovered that a significant influence in translation is played by Google Translation (GT) and Human Translation (HT). It has been discovered that Human Translation (HT) is more effective and accurate than Google Translation (GT).*

Date of submission: 2024-11-14
Date of acceptance: 2024-12-07
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name:
Gomathi Batumalai
Email: gomathi7207@gmail.com

**Keywords:** Google Translation (GT), Human Translation (HT), translation, Tamil, phrase

### முன்னுரை

அதீத தொழில்நுட்ப வளர்ச்சி பல துறைகளின் மேம்பாட்டிற்கு வித்திடுகின்றது. மருத்துவம், அறிவியல், தொழில்துறை, என பல இதில் அடங்கும். அவ்வகையில் இலக்கியத்துறையும் ஒன்றாகும். எழுத்தாளர்கள், வாசகர்கள், இலக்கியவாதிகள் மட்டுமின்றி மொழிபெயர்ப்பும் இலக்கியத்துறையை மேம்படுத்த உதவுகின்றது. தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்பில் பலவகையிலான செயலிகளும் மென்பொருள்களும் இலக்கியத்துறை வளர்ச்சிக்கு ஊன்றுகோளாக அமைந்துள்ளன. ஓர் இலக்கியத்தைப் பிற மொழிக்குக் கொண்டு செல்ல உதவும் மொழிபெயர்ப்புத்துறையில் செயலிகளின் பயன்பாடு அளப்பரியதாகும். Google Translation (GT), Human Translation (HT), Machine Translation (MT) முதலிய செயலிகள் இதில் அடங்கும். இவை யாவும் ஒரு மொழியிலுள்ள

[1]Gomathi Batumalai, Universiti Putra Malaysia, gomathi7207@gmail.com
[2]Nagalingeswaran Armugam, Universiti Tun Hussein Onn, nagalingeswaranarmugam@gmail.com

நாவல், கதை, கட்டுரை, சிறுகதை, கவிதை, பழமொழி, சொற்றொடர் ஆகிய பலவற்றைப் பிற மொழிக்கு மொழிபெயர்க்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. செயற்கை நுண்ணறிவின் விளைவான *Google Translation (GT)*-உம் இயற்கை நுண்ணறிவான *Human Translation (MT)*-உம் இவ்வாய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரண்டின் மொழிபெயர்ப்புச் செயல்பாடுகளைக் கண்டறியும் வகையில் இவ்வாய்வு அமைந்துள்ளது. இவ்வாய்வானது தமிழ்ச் சொற்றொடர்களை இவ்விரண்டு வழிகளில் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதனை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது.

### ஆய்வு நோக்கம்

i. *Google Translation (GT) & Human Translation (HT)* கருவிகளின் வழி சொற்றொடர் மொழிபெயர்ப்பு உத்திமுறைகளைக் கண்டறிதல்.

ii. *Google Translation (GT) & Human Translation (HT)* வழி சொற்றொடர் மொழிபெயர்ப்புத் துல்லியத்தைப் பகுத்தாராய்தல்.

### ஆய்வுக் கோட்பாடு

இவ்வாய்வு *Google Translation (GT) & Human Translation (HT)* வழி ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள தமிழ்ச் சொற்றொடர்களை ஆங்கிலத்தில் ஒப்பீட்டு ஆராயும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்காக, *Peter Newmark (1988)* இன் மொழிபெயர்ப்புக் கோட்பாடு பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கோட்பாட்டில் இடம்பெற்றுள்ள '*semantic translation approach*' மற்றும் '*communicative translation approach*' இவ்விரண்டு மொழிபெயர்ப்பு வழிமுறைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சொல்லுக்குச் சொல் மற்றும் வரிக்கு வரி செய்யும் மொழிபெயர்ப்பினையும் பொருள் அடிப்படையிலான மொழிபெயர்ப்பினையும் வழங்கும் கருவிகளை இக்கோட்பாட்டின் துணையுடன் அறிய முடிகின்றது. துல்லியமான மொழிபெயர்ப்பினை வழங்கும் மொழிபெயர்ப்புக் கருவியினை கண்டறிய இக்கோட்பாடு துணைபுரிந்துள்ளது.




**அட்டவணை 1:**
**Peter Newmark Translation Theory (1988)**

### ஆய்விலக்கிய மீள்நோக்கு

இவ்வாய்வுக்காக *Google Translation (GT), Human Translation (HT)* மற்றும் தமிழ் இலக்கிய மொழிபெயர்ப்புத் தொடர்பான முந்தைய ஆய்வுகள் எடுத்தாளப்பட்டுள்ளன. அவ்வகையில் முதல் ஆய்வானது, "*Comparing Machine Translation and Human Translation:A Case Study (Ahrenberg et al., 2017)*. இவ்வாய்வானது, ஆங்கில கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் மொழிபெயர்ப்பின் தாக்கங்களைக் கண்டறியும் வண்ணம் அமைந்துள்ளது. ஆங்கில கற்றல் கற்பித்தலில் அரபு சொற்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்போது பலவகையான சிக்கல்கள் கூகள் மொழிபெயர்ப்புச் செயலியில் சில இடங்களில் துல்லியமின்மைக் கண்டறியப்பட்டுள்ளது. சிறு சொற்றொடர்களுக்கு *Google Translation (GT)* பயன்பாடு ஏதுவாக அமைந்தாலும் சில நேரங்களில் துல்லியமற்ற மொழிபெயர்ப்பினை வழங்குவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அடுத்த ஆய்வானது, "*A Constrastive Analysis of Machine Translation (Google Translate) and Human Translation: Efficacy in Translating Verb Tense from English to Persian*" *(Afshin & Alaeddini, 2016)* ஆகும். இவ்வாய்வானது, பெர்சியன் மொழியிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்க பயன்படுத்தப்பட்டுள்ள வினைச்சொற்களைக் காட்டுகின்றது. ஆங்கிலத்திலிருந்து பாரசீகத்துக்கு வினைச்சொல்லை மொழிபெயர்க்கும்போது

ஏற்பட்டுள்ள பிழைகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். செயற்கை நுண்ணறிவு சில சூழல்களில் சரியான மொழிபெயர்ப்பினை வழங்க இயலாது நிலை ஏற்படுவதைக் காட்டுகின்றது. இவ்வாறாக, பல முந்தைய ஆய்வுகள் Google Translation (GT) மற்றும் Human Translation (HT) தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆயினும், தமிழ் மொழிபெயர்ப்பில் இவ்வழிமுறைகளில் பங்கு தொடர்பான ஆய்வுகள் குறைந்தே காணப்பட்டன. அவ்வகையில் Google Translation (GT) மற்றும் Human Translation (HT) வழி தமிழ்ச் சொற்றொடர்களை மொழிபெயர்க்கும் ஆய்வானது கையாளப்பட்டுள்ளது.

## ஆய்வு நெறிமுறை

இவ்வாய்வு ஒரு பண்பு சார் ஆய்வாகும். நூலாய்வு முறையில் தரவுகள் எடுத்தாளப்பட்டு பகுத்தாராயப்பட்டுள்ளன. இவ்வாய்வுக்காக 15 தமிழ்ச் சொற்றொடர்கள் உட்படுத்தப்பட்டன. இவ்வாய்வுக்காக, கம்பார் கனிமொழி அவர்களின் இல்லறம் போற்றுவோம் எனும் நூல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்நூலில் இடம்பெற்றுள்ளச் சொற்றொடர்களில் 15-ஐ தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இந்நூலிலுள்ள சொற்றொடர்களை Google Translate (GT) மற்றும் Human Translate (HT) வழியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. கூகள் மென்பொருள்களின் ஒன்றான Google Translate (GT) பயன்படுத்தப்பட்டது. மேலும், Human Translate (HT)-க்காக மொழிபெயர்ப்பாளர் ஒருவர் உட்படுத்தப்பட்டார். மொழிபெயர்ப்புக்குப் பின் ஏற்பட்டுள்ள பொருள் மாற்றங்கள் அட்டவணையில் பகுத்தாராயப்பட்டுள்ளது. வெவ்வேறு மொழிபெயர்ப்பு வழிமுறைகள் எவ்வகைத் துல்லியமான மொழிபெயர்ப்பினை வழங்க வல்லது என்பது அறியப்பட்டுள்ளது. தரவுகள் யாவும் ஆய்வுக் கண்டுபிடிப்பில் தெளிவாகப் பகுப்பாய்வுச் செய்யப்பட்டுள்ளது.

## Google Translation (GT)

மொழிபெயர்ப்புச் செயலிகளில் பெரும்பாலான மாணவர்களும் மக்களும் பயன்படுத்தும் கருவிகளில் முதன்மையானது Google Translation (GT) ஆகும். மொழிபெயர்ப்புக்காக இயங்கும் இச்செயலி இலவச செயலியாகும். 64 மொழிகள் கொண்ட இச்செயலி உலகெங்கும் வாழும் மக்களால் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஒரு சொல்லைத் தட்டச்சு செய்வதன் வழியாகவும், ஒலிபெயர்ப்பு வழியாகவும் மொழிபெயர்க்கும் வசதியினை Google Translation (GT) வழங்கவல்லது. மொழிபெயர்ப்புப் பணியை இலகுவாக்கும் இச்செயலியில் நீண்ட வாக்கியங்களும் சில நேரங்களில் சில சொற்களும் முறையாக மொழிபெயர்க்கப்படாமல் சொல்லுக்குச் சொல் மற்றும் வரிக்கு வரி மொழிபெயர்ப்பதனைக் காண இயலுகின்றது. இதனால் பொருள் சிதைவு ஏற்பட அதிக வாய்ப்புகளும் அமைகின்றது. இவ்வாய்வில், Google Translation (GT) வழி மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் சொற்றொடர்களின் பொருள் மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

## Human Translation (HT)

மொழிபெயர்ப்பு வழிமுறைகள் பல உள்ளன. அதில் ஒன்றாக அமைகின்றது Human Translation (HT). Human Translation (HT) எனப்படுவது மனிதர்களைக் கொண்டு செய்யப்படும் மொழிபெயர்ப்பு ஆகும். மனித நுண்ணறிவின் ஒரு மொழியிலுள்ளச் செய்தியைப் பிற மொழிக்கு மொழிபெயர்ப்பதே Human Translation (HT) எனப்படுகிறது. இவை, புலமைபெற்ற மொழிபெயர்ப்பாளர்களை கொண்டு அமைகின்றது. பன்மொழிகளின் புலமையும், மொழியியல் புரிதலும் சிறப்பான மொழிபெயர்ப்பினை வழங்க வழிவகுக்கின்றது. முற்றிலும் மனித நுண்ணறிவால் மட்டுமே செய்யப்படும் இம்மொழிபெயர்ப்பு தற்போதும் பயன்பாட்டிலிருந்து வருகின்றது. இவ்வாய்வுக்காக மலேசிய மொழிபெயர்ப்பு மையத்தில் பதவியிலிருக்கும் ஒரு மும்மொழி மொழிபெயர்ப்பாளர் ஒருவர் உட்படுத்தப்பட்டார். இல்லறம் போற்றுவோம் எனும் நூலிலுள்ளச்

சொற்றொடர்களை இவ்வாய்வுக்காக மொழிபெயர்த்துள்ளார்.

### ஆய்வுக் கண்டுபிடிப்பு

இவ்வாய்வுக்காக கம்பார் கனிமொழி அவர்களின் இல்லறம் போற்றுவோம் எனும் நூல் பயன்படுத்தப்பட்டது. தரவுகள் யாவும் இந்நூலிலிருந்து திரட்டப்பட்டுள்ளது. Google Translate (GT) மற்றும் Human Translate (HT) வழி மொழிபெயர்க்கப்பட்ட சொற்றொடர்கள் யாவும் அட்டவணையில் இடம்பெற்றுள்ளது.

| தமிழ்ச் சொற்றொடர் | ஆங்கில மொழிபெயர்ப்பு | |
|---|---|---|
| | *Google Translation (GT)* | *Human Translation (HT)* |
| ஒழுக்கம் வலிமை | Discipline is strength | Discipline in the strength |
| நல்லோர் மொழிகள் இனிமை | Good people's language are sweet | Good people's sayings are true. |
| முகம் மலர்க | Face bloom | Keep your face cheerful |
| வாயால் கெட்டவர் பலர் | Many people are bad mouthed | Many people are destroyed because of bad mouthing |
| மறுத்துப் பேசாதே | Do not deny | Don't deny |
| அறிவுரை தாராதே | Don't give advice | Don't advice |
| கூடி வாழ்க | Gather and live | Live together/united |
| குறை பேசாதே | Don't complain | Don't gossip |
| வாழ்வு மலரும் | Life blossoms | Life will bloom |
| கணவன் குழந்தை | The husband is the child | Husband as child |
| ஐயம் புகுந்தால் | If in doubt | If in doubt |
| மனம் ஒன்றுவது இயலாது | The mind cannot unite | Mind can't unite |
| ஆர்வம் வெளிப்படுத்துக | Express interest | Express the interest |
| காதல் வாடும் | Love fades | Love fades |
| உறவு மகிழ | Enjoy your relationship | Enjoy your relationship |

**அட்டவணை 2: தமிழ்ச் சொற்றொடர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு**

மேற்காணும் அட்டவணை 2, தமிழ்ச் சொற்றொடர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பினைக் காட்டுகின்றது. Google Translate (GT) மற்றும் Human Translate (HT) வழி தமிழ்ச் சொற்றொடர்கள் மொழிபெயர்த்துள்ளன. இம்மொழிபெயர்ப்புத் தரவுகளின் பகுப்பாய்வு கீழ்க்கண்டவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**i. மொழிபெயர்ப்பு உத்திமுறைகள்**

- **Google Translation (GT)-இன் சொற்றொடர் மொழிபெயர்ப்பு உத்திமுறை**

இச்செயலி வழி 15 தமிழ்ச் சொற்றொடர்கள் மொழிபெயர்க்கப்பட்டன. அவை யாவும் Google Translate (GT) செயலியில் ஒவ்வொன்றாக உள்ளிடப்பட்டன. தரவுகள் யாவும் அட்டவணையில் உள்ளிடப்பட்டுள்ளது. Google Translate (GT) செயற்கை நுண்ணறிவுக் கொண்டு செயல்படும் ஒரு மென்பொருளாகும். இச்செயலியில் மொழிபெயர்ப்புகள் யாவும் துல்லியமாக அமைவது இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. 64 மொழிகளை மொழிபெயர்க்கக்கூடிய ஆற்றலைக் கொண்ட இச்செயலியில் ஒரு சொல்லை உள்ளிடும்போது சரியான மொழிபெயர்ப்பினை வழங்குகின்றது. ஆனால், இரண்டுக்கு மேற்பட்ட சொற்களை உள்ளிடும்போது கருத்துப்பிழைகள் அதிகமாக ஏற்படுகின்றது. Google Translate (GT) செயலி பெரும்பாலும் சொல்லுக்குச் சொல் மற்றும் வரிக்கு வரி மொழிபெயர்ப்பினை செய்கின்றது. இதுவே இச்செயலியின் மொழிபெயர்ப்பு உத்தி முறை என்பது கண்டறியப்பட்டுள்ளது.

- **Human Translation (HT)-இன் சொற்றொடர் மொழிபெயர்ப்பு உத்திமுறை**

இவ்வாய்வுக்காக, Human Translate (HT) பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வழிமுறைக்காக மொழிபெயர்ப்பாளர் ஒருவர் உட்படுத்தப்பட்டார். அவரது மொழி புலமை மற்றும் அனுபவம் அடிப்படையில் மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். இம்மொழிபெயர்ப்பானது பொருள் அடிப்படையிலும் மொழி புலமை அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டது. சொல்லுக் சொல் மொழிபெயர்ப்பதும் வரிக்கு வரி மொழிபெயர்ப்பதும் விட பொருள் அடிப்படையிலும் சூழல் அடிப்படையிலும் மொழிபெயர்ப்பது முறையாக அமைய வழிவகுக்கின்றது. தமிழில் ஒரு சொல்லுக்குப் பல பொருள் உள்ளன. அவ்வகையில், ஒரு சொல்லின் பொருளை அறிய அச்சொல் பயன்படுத்தப்பட்ட சூழலை அறிதல் மிக அவசியமாகும். அவ்வகையில், Human Translate (HT) கொண்டு செய்யப்படும் மொழிபெயர்ப்பு உத்திமுறையானது முழுக்க முழுக்க ஒரு புலமை வாய்ந்த மொழிபெயர்ப்பாளரைக் கொண்டே அமைந்துள்ளது.

### ii. சொற்றொடர் மொழிபெயர்ப்புத் துல்லியம் பகுப்பாய்வு

| தமிழ்ச் சொற்றொடர் | ஆங்கில மொழிபெயர்ப்பு | |
|---|---|---|
| | *Google Translation (GT)* | *Human Translation (HT)* |
| | துல்லியம் | துல்லியம் |
| ஒழுக்கம் வலிமை | / | / |
| நல்லோர் மொழிகள் இனிமை | x | / |
| முகம் மலர்க | x | / |
| வாயால் கெட்டவர் பலர் | x | / |
| மறுத்துப் பேசாதே | / | / |
| அறிவுரை தாராதே | / | / |
| கூடி வாழ்க | x | / |
| குறை பேசாதே | x | / |
| வாழ்வு மலரும் | / | / |
| கணவன் குழந்தை | / | / |
| ஐயம் புகுந்தால் | / | / |
| மனம் ஒன்றுவது இயலாது | / | / |
| ஆர்வம் வெளிப்படுத்துக | / | / |
| காதல் வாடும் | / | / |
| உறவு மகிழ | / | / |

**அட்டவணை 3: மொழிபெயர்ப்பின் துல்லியம் பகுப்பாய்வு**

மேற்கண்ட அட்டவணை 3, இரு வகை மொழிபெயர்ப்பின் தரவுகள் பட்டியலிடப்பட்டுள்ளன. துல்லியமான மொழிபெயர்ப்புக்கு (/) எனவும் துல்லியமற்ற மொழிபெயர்ப்புக்கு (X) எனவும் குறியிடப்பட்டுள்ளது. Google Translate (GT) மற்றும் Human Translate (HT) மொழிபெயர்ப்பில் பெரும்பாலும் Human Translate (HT)-இல் பெரும்பாலும் மொழிபெயர்ப்பு சிக்கல் ஏற்படவில்லை. ஆயினும் Google Translate (GT)-இல் தவறுகள் கண்டறியப்பட்டுள்ளன. இரண்டு சொற்களுக்கு மேலுள்ள சொற்றொடர்களை மொழிபெயர்க்கும்போது தவறுகள் ஏற்படுகின்றன. அதுமட்டுமின்றி, ஒரு சொல்லுக்குப் பல பொருள் இருப்பதால் மொழிபெயர்ப்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளன. செயற்கை நுண்ணறிவைக் காட்டிலும் மனிதனின் மொழி புலமை துல்லியமான மொழிபெயர்ப்பினை வழங்கியுள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

### முடிவுரை

இறுதியாக, Google Translate (GT) மற்றும் Human Translate (HT) வழி மொழிபெயர்க்கப்பட்ட தமிழ்ச் சொற்றொடர்கள் யாவும் சில இடங்களில் துல்லியமின்றியும் பெரும்பாலும் துல்லியமாகவும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. செயலிகளைக் கொண்டு மொழிபெயர்ப்புச் செய்வதை விட மனித மொழிபெயர்ப்பு துல்லியமாக அமைந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

## References


Afshin, H., & Alaeddini, M. A. (2016). A Contrastive Analysis of Machine Translation (Google Translate) and Human Translation: Efficacy in Translating Verb Tense from English to Persian. *Mediterranean Journal of Social Sciences, 7*(4 S2), 40. Retrieved From https://www.mcser.org/journal/index.php/mjss/article/view/9502

Ahrenberg, L., Orasan, C., Corpas, G., & Vogel, S. (2017). Comparing Machine Translation And Human Translation: A Case Study. 21–28. Retrieved From https://www.diva-portal.org/smash/get/diva2:1148856/FULLTEXT02.pdf

Bojar, O. (2018). *Proceedings of the Third Conference on Machine Translation: Shared Task Papers - ACL Anthology*. Retrieved From https://aclanthology.org/W18-64

Fengling, L. (2017). A Comparative Study of Nida and Newmark's Translation Theories. *International Journal of Liberal Arts and Social Science, 5*(8). Retrieved From https://www.ijlass.org/data/frontImages/gallery/Vol._5_No._8/4.31-39.pdf

Hutchins, J. (2001). Machine Translation and Human Translation: In Competition or in Complementation?. *International Journal of Translation, 13*(1-2). Retrieved From https://aclanthology.org/www.mt-archive.info/00/IJT-2001-Hutchins.pdf

Wang, H., Wu, H., He, Z., Huang, L., & Church, K. W. (2022). Progress in machine translation. *Engineering*, *18*, 143-153. Retrieved From https://www.sciencedirect.com/science/article/pii/S2095809921002745

Brown, P. F., Cocke, J., Della Pietra, S. A., Della Pietra, V. J., Jelinek, F., Lafferty, J., ... & Roossin, P. S. (1990). A statistical approach to machine translation. *Computational linguistics*, *16*(2), 79-85. Retrieved From https://aclanthology.org/J90-2002.pdf

# கிளையும் ஆயமும் தொடர்புறும் பால்கள்

## Gender Related to *Kilai* and *Aayam*

**முனைவர் ச.கண்மணி கணேசன்** / Dr. S. Kanmani Ganesan[1]

**Abstract**

The aim of this research article is to understand the gender related to the meanings of *aayam* and *kilai*; the two nouns found in ancient Tamil literature. It is needed to bring out the specific difference between them as there is a unique factor in the semantics of those two terms i.e. denoting abstract nouns along with living and nonliving things. Their usages in the eight anthologies and ten idylls serve as primary data for this comparative study. The views of commentators, researchers, dictionaries, *nikandu*, and field work serve as secondary data. Blood relationship, eligibility to share the riches, responsibility to share the food and the feature of separability without damaging the entity are the fundamental norms to attribute the term *kilai* as a noun which may fall under anyone of the five genders in Tamil. *Aayam* does not have the above mentioned criteria and denotes either *palarpaal* or *palavinpaal* only.

Date of submission: 2024-11-10
Date of acceptance: 2024-11-30
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name:
Kanmani Ganesan
Email: kanmanitamilskc@gmail.com

**Keywords:** *kilai* in plants, *aayam* in animals, *kilai* in animals, *aayam* denoting *ahrinai*, *aayam* denoting *uyarthinai*, *kilai* denoting ahrinai, *kilai* denoting *uyarthinai.*

### முன்னுரை

பண்டை இலக்கியத்தில் ஆயம், கிளை ஆகிய இரு பெயர்ச்சொற்களின் பொருளையும் உரிய பால்களையும் தெளிவுறுத்துவது இக் கட்டுரையின் நோக்கம் ஆகும். நுண்பொருள், சடப்பொருள் உள்ளிட்ட அஃறிணை, உயர்திணை அனைத்தையும் சுட்டும் இவ் வழக்குகளின் வேறுபாட்டைத் துல்லியமாக அறிய வேண்டிய தேவை உளது.

### ஆய்வு முன்னோடிகள்

அகராதிகளும் நிகண்டுகளும் இரண்டு சொற்களுக்கும் தரும் பொருட்கள் பரந்துபட்ட முடிபுகளாக உள்ளன. நச்சினார்க்கினியர், ஔவை சு.துரைசாமிப் பிள்ளை, பொ.வே. சோமசுந்தரனார், ந.மு.வேங்கடசாமி நாட்டாரும் ரா.வேங்கடாசலம் பிள்ளையும் ஆகியோரது உரையும் விளக்கமும் ஆழமான பொருளைக் கோடிட்டுக் காட்டுகின்றன. இச் சொற் பொருள்கள் தொடர்பான களச் செய்திகளும் உள. 'பேஎயாயம்' என்ற சொற்றொடரில் உள்ள 'பேஎய்' குறித்து இக் கட்டுரை ஆசிரியர் எழுதிய "பேஎய் அனையம் யாம் எனும் உவமை" என்ற ஆய்வுக் கட்டுரை 'ஆயம்' என்ற சொல்லின் பொருளைத் தெளிய உதவுகிறது. சங்க இலக்கியம்- தொடரடைவு என்ற வலைத்தளம் கிளை, ஆயம் ஆகிய சொற்கள் பயிலும் பாடல் வரிகளைத் தொகுத்துத் தருகிறது.

### ஆய்வு முறை

ஒப்பியல் கோணத்தில் அமையும் இவ்ஆய்வுக்குத் தொகைஇலக்கியத்தில் உள்ள மேற்குறிப்பிட்ட வழக்குகள் முதனிலை

[1]The author is a retired Principal& HOD in Tamil from Srikaliswari College, Sivakasi. India

ஆதாரங்கள் ஆக; நிகண்டுகள், அகராதிகள், களச்செய்திகள், உரையாசிரியரும் ஆய்வாளரும் கூறும் கருத்துகள் ஆகியன இரண்டாம்நிலைத் தரவுகள் ஆகின்றன.

**பலர்பால், உயிருள்ள பலவின் பால் இரண்டிற்கும் உரிய கிளை**

**(1) கிளையும் குடும்பமும்**

சங்கஇலக்கியத் தொடரடைவு வலைத் தளத்தில் உள்ள கிளை எனும் சொற் பயன்பாடுகளின் படி; 'கிளை' ஆண், பெண் இருபாலார் அடங்கிய குடும்பத்திற்கு உரிய பொதுப் பெயர் ஆகும். வேட்டுவன் எய்த அம்பிலிருந்து ஆமான் உயிர்தப்பக் குடும்பத்தார் அனைவரும் மலைமேல் இருந்த கடவுளுக்கு மழை வேண்டி வழிபாடு நிகழ்த்தியமை; கிளையோடு சேர்ந்து செய்ததாகக் பாடப் பெறுகிறது (நற்.165). உழவர் கருவுற்ற வாளைமீன் கூட்டம் போல விலாப் புடைக்கத் தம் கிளையோடு சேர்ந்து உண்டமை அவனது குடும்பத்துப் பெண்களையும் ஒருங்கு குறிக்கிறது (பரி.7). குறவன் கிளையுடன் சேர்ந்து மது அருந்தியமை குடும்ப உறுப்பினர் அனைவரையும் உள்ளடக்குகிறது (நற்.341; திருமுரு.196; அகம்.172, 348). புரவலரை நாடிச் சென்ற விறலியர் அடங்கிய கூத்தர், பொருநர், பாணர் ஆகியோரது கிளையில் குடும்பத்து ஆடவரும் பெண்டிரும் ஒருங்கு அடங்குவர் (மது.751; பதிற்.32, 42, 49; புறம்.136, 144, 163, 173, 253, 254, 378, 388).

**'கிளையொடும் காக்க தன் கொழுநன் மார்பே' (குறு.80)**

என்ற பாடல் அடியில் 'தன் குடும்பத்தார் துணையுடன் தன் கணவனைக் காத்துக் கொள்ளட்டும்' என்ற பொருள் பொதிந்து உள்ளது. போர்க்களத்தில் கணவன் இறந்துபட அவன் உடலைத் தூக்கி மடியில் வைத்து அரற்றும் மனைவியின் ஒப்பாரியில் கிளை குடும்பத்தாரைக் குறிக்கிறது (புறம்.253, 254).

தன்னைத் தழுவி இருந்த குட்டியை ஆழ்ந்த முழையிலே தவற விட்ட தாய்க் குரங்கு அதை மீட்க முயன்ற செய்கையில் குடும்ப உறவுகளே கிளை ஆகின்றன (மலை.311-314). ஆழமான பள்ளத்தில் அகப்பட்ட களிறு குழியைத் தூர்த்துத் தன் கூட்டத்தைச் சேர்ந்த அன்பு நிலை; கிளை எனும் பெயர்ப் பயன்பாட்டால் குடும்பத்தைக் குறிக்கிறது (புறம்.17).

**(2) கிளையும் குருதித்தொடர்பும்**

குருதித் தொடர்பு உடைய இளையவரும் முதியவரும் நிறைந்த ஓர் இனத்துக் குடியினரே கிளை ஆயினர். 'இருங்கிளை இனன் ஒக்கல்' (பட்டி.61) எனும் பாடல் தொடர் கிளையில் ஒரே இனத்தவர் அடங்குவர் எனக் கூறுகிறது. பொ.வே.சோம சுந்தரனார் 'கிளை' எனும் சொல்லுக்கு 'ஓரினச் சுற்றத்தாரும்' எனப் பதவுரையும்; 'தாயத்தார்' என விளக்கமும் கூறி; கிளை இனத்துடன் தொடர்புறுவதை உணர்த்துகிறார் (பத்துப் பாட்டு தொகுதி II, 2008, பட்டினப்பாலை- ப.44-45). இளையவர், முதியவர் எல்லோரும் கிளையில் இருப்பதை 'இளையரும் முதியரும் கிளையுடன்' என்ற தொடர் உணர்த்துகிறது (நற்.207; அகம்.30, 348; பெரு.268). நாராயணசாமி ஐயர் உரையில் 'இளைஞரும் முதியோரும் உறவினருடன்' என்கிறார் (நற்றிணை, 2007, ப.260). பொ.வே. சோமசுந்தரனார் 'இளையவர்களும் முதியவர்களும் சுற்றத்துடன்' என உரைக்கிறார் (பத்துப் பாட்டு தொகுதி I, 2007, பெரும் பாணாற்றுப்படை, ப.123). கிளைக்குச் 'சுற்றம், வகுப்பு, இனம், வம்சம்' என்ற அகராதிப் பொருள்கள் கட்டுரையின் கருதுகோளை வலுப்படுத்துகின்றன (கழகத் தமிழகராதி 2002, ப.341; திருமகள் தமிழகராதி, 2002, ப.347). ஆயின் கிளை, கிளைமை - 'உறவு' என்றும்; கிளையார், கிளைஞர் - 'உறவினர்' என்றும் சுட்டுவது (மேற்.); துல்லியமான பொருள் இல்லை. உறவினருள் குருதித் தொடர்பற்றவரும் இருப்பர் ஆதலால்; 'கிளை'யின் நுட்பம் அகராதியில் தெளிவாக இல்லை.

இறால் மீன் எண்ணில் அடங்கா முட்டைகளை ஈன அவை குஞ்சுகள் ஆகும் போது குருதித் தொடர்புடைய பெரிய சுற்றம் ஆவதால் 'பெருங்கிளை' எனப்படுகிறது (குறு.109). இங்கும் உரையாசிரியர் கிளைக்கு 'இனம்'

என்றே பொருள் உரைக்கிறார் (குறுந்தொகை, 2007, ப.205). வேட்டை நாயிடமும் வேட்டுவரிடமும் இருந்து குட்டிகளைக் காத்துத்; தப்பிய பெண்பன்றி அடர்ந்த காட்டில் இருந்து வெளிவந்து; ஒரு முடுக்கரின் புழையில் எதிர்த் தாக்குதலுக்குக் காத்து நின்றதை வருணிக்கும் பாடல் பகுதியில் கிளை பெற்ற பிள்ளைகளைக் குறிக்கிறது (அகம்.248). உரையாசிரியர் கிளை என்ற சொல்லுக்குக் கிளை என்றே பொருள் கூறி உள்ளனர் (அகநானூறு- மணிமிடை பவளம், 2007, ப.299). ஆண்குரங்கை இழந்த பெண்குரங்கு வரைபாயும் முன்; தன் குட்டியைக் கிளையுடன் சேர்ப்பது; குருதித்தொடர்பால் ஒரு கிளை ஆகிய குரங்குக் குடும்பத்தைக் காட்டுகிறது (குறு.69). முட்டை இட்டு வாழ்க்கைச் சக்கரத்தைத் தொடங்கும் வண்டு, தேனீ, குளவி ஆகிய பூச்சிகள்; கரையான், பாம்பு முதலிய ஊர்வன ஆகியவற்றின் குருதித் தொடர்புடைய சுற்றம் கிளை ஆகிறது (நற்.161, 202; கலி.80; ஐங்.370; மலை.183; அகம்.81, 228; பதிற்.71; புறம்.58).

தாவரங்கட்குக் குருதித் தொடர்பு இருக்க வழி இல்லை எனினும்; கலவுயிர் (cytoplasm) எனும் உயிர் ஆதாரப் பொருள் அவற்றைக் 'கிளை' எனக் கூறும் தகுதியைத் தருகிறது. காய்கள் தொங்கும் மாமரக் கொப்புகள், வரகுக் காட்டின் களை, பல்கிப் பெருகிய நாணல் கிழங்கு, தோகை விரிந்த கரும்பு, தழைகள், மூங்கில் புதர், பூத்துக் காய்த்துப் பசுந்துளிர் போர்த்துக் கவர்த்த மரங்கள், தினைக் கதிர், பூங் கொம்புகள் ஆகியவை 'கிளை'த்து இருப்பதாகப் பாடப்பட்டுள்ளன (அகம்.37, 178, 223, 235, 256, 383; நற்.25, 388; புறம்.120; பதிற்.84; குறி.101; சிறு.160). கிளை என்ற சொல்லுக்குக் களை, கப்பு, தளிர், பூங்கொத்து, மரக்கிளை, மூங்கில் என ஒத்த பல அகராதிப் பொருள்கள் உள (மேற்.).

### (3) கிளையும் சொத்துரிமை உள்ள ஆண்பாலும்

பண்டைத்தமிழகத்து ஆண்முதன்மைச் சமுதாயத்தில் சொத்துரிமை ஆண்கட்கு மட்டுமே உரியதாகக்; கிளை மனைவி, மக்கள் பங்காளிகளை ஒருங்கு குறிக்கிறது. குறச்சிறார் தமது தினைக் கொல்லையில் கிளையுடன் விளையாடிக் கொண்டே பறவை ஓட்டினர் (நற்.44). தினைக் கொல்லையின் உரிமை பங்காளிகளுக்கு மட்டுமே உரியது என்பதால் இங்கு ஆண்பாலுக்கு உரித்தாவது கருதத் தக்கது. மகாபாரதக் கதைக் கூறை விரிவாகப் பேசும் பாடல் பகுதி; திருதராட்டிரனது மூத்த மகன் துரியோதனனின் சூழ்ச்சியில் இருந்து பீமன் தன் உடன்பிறந்த பாண்டவரைக் காப்பாற்றிய செய்தியைத் தருகிறது. மனதிற்கு இனிய சகோதரரை எரியும் அரக்கு மாளிகையில் இருந்து விடுவித்ததைப் புகழ;

'உள்ளத்துக் கிளைகளோடு உயப் போகுவான்'
(கலி.25)

எனப் பங்காளிகள் ஆகிய பாண்டவரைக் கிளை என அழைப்பது மேற்சொன்ன கொள்கையை வலியுறுத்தும் சான்றாகிறது. நச்சினார்க்கினியரின் உரை கிளையைச் 'சுற்றம்' என்கிறது (கலித்தொகை, 2007, ப.68). மலையமான் திருமுடிக்காரியைக்; 'கிளையொடும் பொலிய' (புறம்.126) என வாழ்த்தும் போது; 'கிளை' அவனது உரிமைப் பெண்டிர், பிள்ளைகள், பங்காளிகளைக் குறிக்கிறது. ஔவை சு.துரைசாமிப் பிள்ளை 'சுற்றத்துடன் பெருக' என உரைக்கிறார் (புறநானூறு பகுதி I, 2007, ப.270). கிளையோடு வாழும் அன்பின் பெருமையை;

'அன்பெனப் படுவது தன்கிளை செறாமை'
(கலி.133)

என உரைத்து உள்ளனர். தன் குடும்பத்துடன் பங்காளிகள் ஆகிய சுற்றம் இணைந்து கிளை ஆவதைக் குறிப்பாகக் கூறுகின்றனர். இதற்கு மாறுபட வாழ்வதைச் செவ்விலக்கியம் இழிவாகப் பேசுகிறது (கலி.34).

### (4) கிளையும் தொழிலும்

வாழ்வின் ஆதாரமாக அமையும் தொழிலைப் பங்காளிகள் சேர்ந்து செய்யும் போது கிளை எனப்படுகின்றனர். பரதவர் மீன்வேட்டைக்குக் கிளையுடன் திமில்களில் செல்வர் (நற்.331; அகம்.30). உரையாசிரியர் 'சுற்றம்' எனப் பொருள் கூறுவர் (அகநானூறு களிற்றியானை நிரை, 2009, ப.88). கோட்சுறா கிழித்த வலையைக் கிளையுடன் கூடிச் சீராக்கினர் (நற்.207). கள்வர் கிளையுடன்

கொள்ளை இட்டனர் (அகம்.193). உணவைத் தேடும் பன்றியும் தன் கிளையோடு சேர்ந்தே காந்தட் கொழுங் கிழங்கைப் பூழியில் கிண்டி எடுத்தது (புறம்.168).

### (5) கிளையும் உணவுப் பங்கீடும்

'கிளைஞர்ஆர' வாழ்வதே சிறந்தது என்பதால்; பங்காளிகளை ஊட்டுவது இல்வாழ்வான் கடமை ஆகிறது (அகம்.93). உணவை இரந்து பெறுவதற்குக் கிளையோடு சென்றதைக் கிள்ளி வளவன் பாடுகிறான் (புறம்.173). இரந்து பெற்ற பொருளைக் கிளையோடு பகிர்ந்து உண்ண மனைவியை வலியுறுத்துகிறார் பெருஞ் சித்திரனார் (புறம்.163). மோர் விற்ற பொருளை வைத்து ஆய்மகள் கிளையோடு உண்டாள் (பெரு.163). பரதவன் கிளையோடு தேறல் மாந்துகிறான் (நற்.388).

உணவுப் பங்கீடு அஃறிணை உயிர்களுள்ளும் பங்காளிகளைக் குறிக்கிறது. வீட்டுக்கோழி அடைகாத்துப் பொரித்த குஞ்சுகள் ஒருசேரக் குப்பையை மேய்ந்த பின் மாலையில் அடையும் போது; கிளை எனக் குறிப்பதில் அதே பொருள் நுட்பம் உளது (குறு.139). பலிச்சோற்றைக் காக்கைக்குக் 'கிளையோடு ஆர'த் தருவேன் என்று தாய் பராய்க்கடன் உரைப்பது (ஐங்.391); கூட்டில் அடைகாத்துப் பொரித்து வெளிவந்த குஞ்சுத்தொகுதிகளின் குருதித்தொடர்பை அடையாளம் காட்டுகிறது. உரையாசிரியர் 'சுற்றத்தோடு நிரம்ப உண்ண' என்கிறார் (ஐங்குறுநூறு, 2009, ப.621). 'புகா ஆரும் அளகுடைச் சேவல்' ஆகிய பருந்தின் கிளையும் அத் தன்மைத்தே (பதிற்.35). பரந்து விரிந்து இருந்த ஆலமரம் எங்கும் காக்கையின் கிளை அமர்ந்து இருந்தமை பகிர்ந்து உண்ணும் குருதித் தொடர்பு உடைய பெரும் சுற்றத்தைக் காட்டுகிறது. ந.மு.வேங்கடசாமி நாட்டாரும் ரா.வேங்கடாசலம் பிள்ளையும் இணைந்து எழுதிய உரையில் கிளைக்குச் 'சுற்றம்' என்று பொருள் கூறிக் 'கூட்டம்' என விளக்கம் தந்துள்ளனர் (அகநானூறு- நித்திலக் கோவை, 2008, ப.46-47 பா.319).

காக்கை, கிளி, குருகு, பருந்து, கம்புட் கோழி, காட்டுக் கோழி முதலிய பறவைக் கூட்டம் அனைத்தும் இத்தகு கிளை உடையனவே (நற்.54, 102, 298, 304, 343, 367, 372, 376; ஐங்.7, 85; அகம்.161, 192, 247, 363, 381; மலை.54-55; பெரு.406). கரடி, மான், களிறு, கடுவன் ஆகியவற்றின் செய்திகளும் மேற்சுட்டிய முறையில் அமைந்த குடும்பங்களே (அகம்.95, 149, 218, 247, 275, 332, 352; ஐங்.217). நீர்வாழ் நண்டு, வாளைமீன், தவளை அனைத்தும் கிளையோடு வாழ்வதையும் தேடுவதையும் பகிர்வதையும் தொகை நூல்கள் பாடுகின்றன (நற்.42, 267; மலை.167; பரி.7-அ.38).

ஒரே குடியைச் சேர்ந்த பங்காளிகளைக் கூட்டம் என அழைக்கும் முறை தமிழ்ச் சமூகங்களில் இன்றும் உளது. நாடார் இனத்துள் செம்ட்டி கூட்டம், சிவனடியான் கூட்டம், எடமாறிக் கூட்டம் போன்ற பல உள. கொங்கு வேளாளருள் ஆந்தைக் கூட்டம், வண்டுக் கூட்டம், எருவைக் கூட்டம் என மிகப் பல உள. இன்றும் கொண்டையங் கோட்டை மறவர் பங்காளிகளைக் கிளை என்பர்.

### (6) மணமாகுமுன் பெண்ணின் கிளை

திருமணத்திற்கு முன் மகள் தந்தையின் கிளையுள் அடங்குவாள். ஆயர்குலப் பெண்ணின் இளமையும் அழகும்; அவளிடம் மோர் வாங்கும் பெண்களை மருட்டக்; கணவர் கண்ணில் பட்டால் ஏற்படும் ஏதத்தை எண்ணி; 'எழு நின் கிளையொடும் போகென்று' விரைந்து அனுப்பிய போதும் (கலி.109); தலைவியின் தந்தைக்கும் கிளைக்கும் அவலநிலை ஏற்படாத படித் தலைவன் பெண்கேட்டு வர ஒத்துக் கொண்டதைச் சொல்லித் தோழி மனம் ஆறும் போதும் (குறு.247); தலைவனுடன் தான் போய்த் தீரவேண்டிய சூழல் ஏற்பட்டதால்; மூங்கில் புதர் போல் பல பங்காளிகளுடன் வாழும் தந்தை கிளைகள் முன் அவப்பெயருடன் தலைகுனிய நேர்ந்து விட்டது என மனம் வெதும்பும் போதும் (அகம்.268); மணமாகாத பெண் தந்தையின் கிளையினள் ஆகிறாள்.

### (7)மணமானபின் பெண்ணின் கிளை

மணமுடிந்த பெண் கணவனின் கிளை ஆகிறாள். இங்கு கிளை பெண்பாலுக்கு

உரித்தாகிறது. பேகனின் மனைவியிடம் பரணர்; ‘கிளையைமன் எம்கேள் வெய்யோற்கு’ (புறம்.144) எனக் கேட்கும் போதும்; ‘யாம் அவன் கிளைஞரேம் அல்லேம்’ எனக் கணவனின் புறத்தொழுக்கத்தைக் குறிப்பாகச் சொல்லிப் பதில் இறுக்கும் போதும்; 'கிளை' மனைவி எனப் பொருள்படுகிறது.

நாவல் கனியைத் தன் இணையான துணை என்று கருதிக் கூட முயற்சித்த தும்பியை; ‘கிளைசெத்து மொய்த்த தும்பி’ எனப் பாடக் காண்பதால் கிளை துணையைக் குறிப்பது உறுதி (நற்.35). கருவுற்ற பிடியைக் களிறு ஓம்ப; நேரம் பார்த்துத் தாக்கிய புலியால் பிளிறும் பெண்யானை கிளை என்றே அடையாளப் படுகிறது (மலை.307-310). வழிச் செல்வோரின் உயிரை மறவர் பறிக்கப்; பட்டோரின் ஊனை உண்ணத் தொடங்கிய ஆண்பருந்து தன் துணையை அழைக்கும் வருணனையில் ‘கிளை’ பெண் பருந்தே ஆகும் (அகம்.175, 363).

#### (8) பலவின்பாலாகும் சடப்பொருட் கிளை

பிரித்தால் சிதையக் கூடிய ஒரு தொகுதி ஆன சடப் பொருட்கள் கிளை எனப்பட்டன. அணிகலனில் கோத்த மணிகளும் மேகலையின் வடங்களும் மழை தரும் மேகங்களும் கிளை ஆயின (பதிற்.74; குறு.197; அகம்.183, 188, 385; பரி.12-அ.2). கோக்கப்பட்ட மணி, வடம் ஆகியவற்றைப் பிரித்தால் முதற் பொருள் சிதையும்; அவை ஒரே தொகுதி என்ற பொருளால் கிளை ஆகின்றன. அணிகலனில் கோத்த மணிகளைக் கிளை எனும் போது ஔவை சு.துரைசாமிப்பிள்ளை 'இனம்' என்று பொருள் உரைத்து இருப்பது முற்சொன்ன கருதுகோளை மெய்ப்பிக்கிறது (பதிற். 2007, ப.356).

உரையாசிரியர் மேகத்தின் கிளையைச் சுற்றம் என்று அழைப்பதுடன்; கிளையை மலைக்கு ஏற்றிப் 'பக்கமலைகளோடு சையமலையை முற்றி' என மாற்று விளக்கமும் உரைக்கிறார் (பரிபாடல், 2007, ப.264-265). மேகங்கள் கூடுவதும் பிரிவதும் மானிடர் கட்டுப்பாட்டிற்கு அப்பாற் பட்டவை. கிளையை மலைக்கு ஏற்றிப் பொருள் காண்பதாக இருப்பின் அதைப் பிரிப்பதும் மானிட சக்திக்கு அப்பாற் பட்டது என்பது உன்னற் பாலது. திருமகள் தமிழகராதி கிளை என்பதற்கு மேகம் என்ற பொருளும் தருகிறது (மேற்.ப.81).

#### (9)ஒன்றன்பாலாகும் நுண்பொருட் கிளை

இசைக்கூறுகளில் ஒன்றான குரல் கொண்ட கிளை ஆகிய இளி நுண்பொருள் ஆகும். (பரி.11-அ.127) கழகத் தமிழகராதியில் கிளை என்ற சொல்லுக்கு ஒரு பண், கைக்கிளை எனும் இசை, வீணையின் ஒரு நரம்பு, யாழின் ஒரு நரம்பு, புல்லாங்குழல் வகை, ஓர் இசை, ஓர் இசைக்கருவி’ என இசை தொடர்பான பல பொருட்கள் சொல்லப்படுவது குறிப்பிடத் தக்கது (மேற். ப.341).

### ஆயம்

#### பலர்பால் ஆயம்

குருதித்தொடர்பற்ற வேற்றுக்குடியினரின் குழு ஆயம் ஆகும். மக்கட்கூட்டத்தில் அனைவரும் குருதித்தொடர்பு உடையவராக வேண்டும் என்ற நியதி இல்லை. அதனால் புகாரில் வாணிபத்திற்காகக் குவிந்து இருந்த பல நாடுகளைச் சேர்ந்தோர் ‘பல்லாயம்’ ஆயினர் (பட்டி.213). ஆயம் என்பது மக்கள் தொகுதி, பசுத்திரள்; என அகராதி குறிக்கிறது (திருமகள் தமிழகராதி, 2002, ப.81).

#### பெண்களை மட்டும் அடக்கும் பலர்பால் ஆயம்

கற்புக்காலத்துப் பெண்டிர் குழுவும் தாய் வீட்டுச்சுற்றமும் ஆயம் ஆவர். மகளிர் கூட்டமும் பாணர் குழுவின் விறலியரும் ஆயம் ஆகின்றனர் (மது.264; சிறு.176). கூடலூர் கிழார் யானைக்கட்சேய் மாந்தரன்சேரல் இறந்த போது அவனது பெண்டிரை ‘ஆயம்’ என்கிறார் (புறம்.229). வெளிமான் இறந்த பின் அவனது பெண்டிர் கைம்மை நோற்க வெண்ணீறு பூசிச்; சிற்றின்ப உணர்வுகளை அடக்கித்; தம்மை மேம்பட்ட தெய்வத் தன்மை பொருந்திய வாழ்க்கை முறைக்கு உட்படுத்துவதால்; 'பேஎய் ஆயம்' ஆயினர் (புறம்.238). உரையாசிரியர் 'பேயினம்' என்கிறார் (புறநானூறு பகுதி II, 2007, ப.84). அவர் பாசுபதம் சார்ந்த கைம்பெண்டிர் என்பது ஏற்கெனவே நிறுவப்பட்டது

(கண்மணி,ச., ''பேஎய் அனையம் யாம் எனும் உவமை'' ப.1-3, ஆய்வுச்சுடர்- ஜூன் 2021).

புறத்தொழுகிய கணவனைத் தன் ஆயமும் அயலும் மருள; வாயில் மறுத்தாள் எனுமிடத்து (அகம்.116); ஆயம் அயலவருடன் சேர்த்து எண்ணப்படுவது தாய் வீட்டுச் சுற்றத்தைக் குறிக்கிறது. ஏனெனில் பெண்ணுக்குத் தாய் வீட்டில் குருதித் தொடர்பு இருந்தும் சொத்துரிமை இல்லை. உடன்போன மகளைத் தேடிச் சென்ற தன் ஆயம்; 'பனங் குருத்தைக் கீண்டு பதனிடப் போடும் மாலைப் பொழுதில் நிலவின் ஒளியில் மீட்கச் சென்றது' எனும் போதும் அது பிறந்த வீட்டுச் சுற்றம் ஆகிறது (நற்.271). தலைவனோடு பரத்தை புனலாடியதை மறைக்க முற்பட்ட மகளிர் ஆயம் ஆன காரணம்; அவர் குருதித் தொடர்பு இல்லாதவர் என்பதாம் (அகம்.256).

களவுக்காலப் பெண்டிரின் ஆயம் அவரது குடும்ப உறுப்பினர்க்கு அப்பாற் பட்டு; 'ஆயத்தார்' எனப் பன்மை விகுதியுடன் விளையாட்டு ஆயத்தைக் குறிக்கும். 'கலிகொள் ஆயம்' விளையாட்டு ஆரவாரத்தால் பெற்ற அடைமொழி ஆகும் (அகம்.11). இவர் தலைவியோடு ஒத்த வயதுடன்; இழை அணிந்தும்; ஐந்து வகையாக தலைமுடியை ஒப்பனை செய்தும் காணப் படுகின்றனர் (அகம்.254, 230 385; நற்.23, 68, 80, 140, 172; கலி.76, 114, 142). பெதும்பைப் பருவத்து மகள் ஆயத்தோடு விளையாடும் போது தொடர்ந்து தாய் கண்காணிக்கிறாள் (அகம்.49; நற்.68, 143). நெய்தல்நிலத் தலைவியும் கானல் ஆயமும் சேர்ந்து கழங்கு ஆடி (அகம்.17, 66, 220; நற்.72, 123); நண்டுக்குழிகளைக் கிண்டி; ஊஞ்சல் ஆடிக்; குரவை அயர்ந்து; கடலில் நீராடி (அகம்.20, 110; நற்.90); உணங்க வைத்த மீன் குவியலுக்குக் காவலாக இருந்து உப்புவண்டிகளையும் மீன்பிடித்து மீண்டுவரும் திமில்களையும் எண்ணிப்; பந்தாடுவர் (அகம்.153, 180 190& 219; நற்.140, 331). குறிஞ்சிநிலத் தலைவி ஆயத்தோடு சேர்ந்து சுனையில் ஆடிக்; குவளைப்பூக்கள் பறிப்பாள்; அருவியில் ஆடுவாள்; அசோகந் தளிரால் தழையாடை தைத்து உடுத்துத்; தழல் ஒலித்துத்; தட்டை முழக்கித்; தினைப்புனம் காப்பாள் (அகம்.188, 358; நற்.44, 317). மருதத் திணைத் தலைவியும் 'கணங்கொள் ஆயம்' ஆகிய பெரிய கூட்டமும் சேர்ந்து; பொய்கையில் பூப் பறிப்பர்; வண்டல் ஆடுவர் (அகம்.60, 250; நற்.115, 127; பெரு.311). குறுநில மன்னன் மகளுக்கு விளையாட்டின் இடையில் சினம் வந்தால் ஆயம் அவளைக் கைதொழுது இரந்து நிற்கும் (நற்.300). 'பந்தைப் பார்க்கும் பொழுது மனம் வருந்துவார்களே' எனப் புலம்பிக் கண்ணீர் விடுவதாகவும் (நற்.12); உடன்போக்கிற்குப் பின் வாடி அழுது விளையாட மறந்தோராகவும் (அகம்.369); சித்தரிக்கப்படும் ஆயங்கள் அனைத்தும் குருதித் தொடர்பு இல்லாத பந்தங்களே.

வடமலை நிகண்டு 'ஆயம்' என்ற சொல்லுக்குக் கூறும் பொருள்களில் ஒன்று 'பெண்களின் கூட்டம்' ஆகும் (தமிழ் நிகண்டுகள் தொகுதி II, 2014, ப.18). 'ஆயம்' என்ற சொல்லுக்கு அகராதி தரும் பொருள்களில் ஒன்று 'தோழியர் கூட்டம்' ஆகும் (திருமகள் தமிழகராதி, 2002, ப.81).

### ஆண்களின் குழு ஆகிய பலர்பால் ஆயம்

நண்பர், ஆட்சியின் நிர்வாகிகள், பேரிடர் மேலாண்மையாளர், வீரர் ஆகிய பல குடும்பங்களைச் சேர்ந்த ஆடவர் குழு ஆயம் ஆனது. கரிகாற் பெருவளத்தானுக்குத் துணைநின்ற வீரர் 'ஆயம்' எனப் பெறுகின்றனர் (புறம்.224). அவனது அவையத்து ஆயம் பற்றி ஆற்றுப்படை குறிப்பிடுகிறது (பொரு.123). நல்லியக்கோடன் அவையில் ஆயம் சூழ்ந்து இருந்தது (சிறு.220). தொடித்தலை விழுத்தண்டினார் இளமையில் தன்னோடு சேர்ந்து ஆடிய நண்பர் குழுவை 'ஆயம்' என்கிறார் (புறம்.243). ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்துப் பயிர்களைப் பாழ்படுத்த; அவற்றைக் காக்கக் கரையைச் சீர்படுத்திய குழுவினர் குருதித்தொடர்பு இல்லாதவராக இருப்பது இயல்பு ஆதலால்; ஆயம் ஆகின்றனர் (பதிற்.30).

### பலவின் பாலாகும் ஆயம்

ஆநிரையில் குருதித்தொடர்பு இல்லாப் பசுக்குடும்பங்கள் பல இருக்கும் ஆதலால்; அது ஆயம் ஆகிறது (புறம்.224, 230, 258, 386; அகம்.54,

*79, 291; நற். 37; மது.692)*. அதே காரணத்தால் தான் ஆட்டு மந்தை ‘சிறுதலை ஆயம்’ ஆனது *(புறம்.54)*. பிடிகளும் கன்றுகளும் உள்ள யானைத்தொகுதி ‘ஆயம்’ ஆன காரணம்; அவை குருதித் தொடர்பு அற்ற பல குடும்பங்களின் தொகுதி என்பதாம் *(மது.101)*. கழகத் தமிழகராதி 'கிளை' என்ற சொல்லுக்கு மந்தை எனப் பொருள் கூறி இருப்பது பொருந்தவில்லை *(மேற்.ப.341)*. ஆட்டுமந்தை பல கிளைகளின் தொகுதியான ஆயமாக இருக்கவும் கூடும்.

### சடப்பொருள் ஆயம்

விளையாட்டில் எண்கள் ஆயம் ஆயின. சொக்கட்டான் ஆடும் போது கவறு உருட்டிப் பெறும் எண் ஆயம் எனப்பட்டது. ஆட்டத்தில் பெற்ற எண் பத்தாக இருப்பதை 'ஆயம் பத்து' என்பர் *(கலி.136)*. ஆயம் என்பது 'சூதாடு கருவி' என்ற வடமலை நிகண்டுக் குறிப்பும் *(மேற்.ப.18)*, 'சூதாட்டம்' என்ற திருமகள் தமிழகராதிக் குறிப்பும் *(மேற்.ப.81)* தொகை இலக்கியச் செய்திக்கு அணுக்கமான பொருள்களாக அமைந்து உள்ளன.

### முடிவுரை

‘கிளை’ ஐம்பால்கட்கும் உரிய பெயர்ச்சொல் ஆகும். பண்டைத் தமிழகத்து ஆண்முதன்மைச் சமுதாயத்தில் சொத்துப்பங்கீடு ஆண்கட்கு மட்டுமே உரியதாக இருக்கக்; குருதித் தொடர்பு உடைய இளையவர் முதியவர் நிறைந்த ஓர் இனத்துப் பங்காளிகள் அனைவரையும் உள்ளடக்கிய குடியினர் கிளை ஆயினர். மணம் முடிந்த பெண் கணவனின் கிளை ஆகிறாள். மணவினைக்கு முன் பெண் தந்தையின் கிளையினள் ஆகிறாள். தாவரங்களின் கலவுயிர் *(cytoplasm)* அவற்றைக் கிளை எனக் கூறும் தகுதியைத் தருகிறது. விலங்குகள், பறவைகள், ஊர்வன ஆகியவற்றின் குருதித் தொடர்பும் கிளை ஆகும் தகுதியைத் தருகிறது. பிரிக்க இயலா நுண் பொருளும் பிரித்தால் சிதையக் கூடிய தொகுதி ஆன சடப் பொருட்களும் 'கிளை' எனப்பட்டன. பலர்பாலையும் பலவின் பாலையும் சுட்டக் கூடிய 'ஆயம்' குருதித் தொடர்பும் சொத்துரிமையும் இல்லாப் பெண்கள் அல்லது ஆண்கள் அல்லது இருபாலாரும் அடங்கிய வேற்றுக்குடித் தொகுதியினரைக் குறித்தது. மணவினைக்குப் பின் பெண்ணின் பிறந்த வீட்டுச் சுற்றம் ஆயத்துள் அடங்கும். விளையாட்டில் எண்கள் ஆயம் ஆயின.

## References

(2002). *Kazhakath Thamizhakaraathi*. Chennai: Kazhaka Veliyeedu.

(2002). *Thirumakal Thamizhakaraathi*. Chennai: Thirumakal Pathippakam.

(2007). *Akanaanooru Manimidai Pavalam*. Chennai: Kazhaka Veliyeedu.

(2007). *Kaliththokai*. Chennai: Kazhaka Veliyeedu.

(2007). *Kurunthokai*. Chennai: Kazhaka Veliyeedu.

(2007). *Narrinai*. Chennai: Kazhaka Veliyeedu.

(2007). *Paripaadal*. Chennai: Kazhaka Veliyeedu.

(2007). *Pathirruppaththu*. Chennai: Kazhaka Veliyeedu.

(2007). *Paththuppaattu Part I*. Chennai: Kazhaka Veliyeedu.

(2007). *Puranaanooru- Part- I*. Chennai: Kazhaka Veliyeedu.

(2007). *Puranaanooru- Part- II*. Chennai: Kazhaka Veliyeedu.

(2008). *Akanaanooru Niththilakkovai*. Chennai: Kazhaka Veliyeedu.

(2008). *Paththuppaattu Part II*. Chennai: Kazhaka Veliyeedu.

(2009). *Aingurunooru*. Chennai: Kazhaka Veliyeedu.

(2009). *Akanaanooru Kalirriyaanai Nirai*. Chennai: Kazhaka Veliyeedu.

(2014). *Thamizh Nikandukal Vol.II*. Chennai: Meyyappan Pathippakam.

(2021). Pannaattu Panmukath Thamizh Min-Aayvithazh. *Aaivuchudar, 4*(2). Retrieved from https://anjacaa-ivuchudar .in/ assets/ wp-content/uploads/sites/aaivuchudar/volume4/01-kanmani-converted.pdf.

*(n.d). Toṭaraṭaivu - Caṅka Ilakkiyam*. Retrieved from http://tamilconcordance.in/TABLE-sang.html. [தொடரடைவு - சங்க இலக்கியம். Retrieved from http://tamilconcordance.in/TABLE-sang.html.]

Kanmani,S. Pey Anaiyam Yaam Enum Uvamai. *Aayvuchchudar,* 1-3.

# கருடபுராணம் சுட்டும் கொல்லாமை நெறி ஓர் ஆய்வு

## Garuda Purana's Teachings on Ahimsa: A Study

இலங்கேஷ்வரி அர்ஜூணன் / Elangeswari Aruchunnan[1]
மு. இராசேந்திரன் / M. Rajantheran[2]
அருண் பாலன் / Arun Balan[3]

**Abstract**

This research paper deeply explores the philosophy of Ahimsa (non-violence) as highlighted in the Garuda *Purana*. The Garuda *Purana* elaborates on the consequences of taking lives, categorizing it as a grave sin that leads to severe punishments in hell. Additionally, the study draws from the works of Indian sages, Siddhars, and philosophers, emphasizing the significance of adhering to the principle of non-violence. Through a comprehensive literature review, this paper underlines the necessity of practicing Ahimsa. It integrates teachings from Thirumoolar, Sivavakkiyar, Thiruvalluvar, and Vallalar, who emphasize that showing compassion towards all living beings is a path to attaining divine grace. The *Garuda Purana* provides a detailed account of the punishments awaiting those who fail to follow the principle of non-violence.

Date of submission: 2024-12-01
Date of acceptance: 2024-12-25
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name:
Elangeswari Aruchunnan
Email: elanges87@gmail.com

**Keywords:** Garuda Purana, Hell, Dharma, Ahimsa

### 1.0. முன்னுரை

உலகில் மிகத் தொன்மை வாய்ந்த மதங்களில் இந்து மதமும் ஒன்றாகும் (இராசேந்திரன், 2015). இந்து மதத்தின் பாரம்பரியத்திலும் பண்பாட்டிலும் அந்த மதத்தைச் சார்ந்த புனித நூல்கள் பெரும்பங்காற்றுகின்றன. மனிதனாகப் பிறந்த ஓர் ஆன்மா உலகத்தில் எப்படிப்பட்ட அறநெறியில் நின்று வாழ வேண்டும் எனத் திருக்குறள், திருமந்திரம், பெரியபுராணம், திருவருட்பா, ஆத்திச்சூடி, சித்தர் பாடல்கள் போன்ற பல நூல்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. இப்புனித நூல்கள் மனிதன் பூமியில் வாழ வேண்டிய ஒழுக்கங்களை நான்கு உறுதிப்பொருள்களின் அடிப்படையில் எடுத்துரைத்துள்ளன. அவ்வுறுதிப்பொருள்களானது அறம், பொருள், இன்பம், வீடு ஆகும். அறத்தில் கொல்லாமை எனும் பண்பு மிக உயர்ந்த பண்பாகக் கருதப்படுகிறது.

[1] The author is a lecturer in the Department of Tamil Studies, Institute of Teacher Education Tuanku Bainun Campus, Pulau Pinang, Malaysia. elanges87@gmail.com

[2] The author is a Professor in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. rajantheran@gmail.com

[3] The author is an Inspector of Schools, Penang State Inspection Committee, Ministry of Education, Malaysia. arun.balan@moe.gov.my

கொல்லாமை எனும் பண்பை கடைப்பிடித்தலின் அவசியத்தைப் பல பெரியோர்களும், ஞானிகளும், சித்தர் பெருமக்களும் தங்களின் பாடல்களின்வழி எடுத்துரைத்துள்ளனர். மனிதன் கொல்லாமை எனும் பண்பினைப் பின்பற்றி வாழாவிட்டால் அவன் எதிர்கொள்ளும் விளைவுகள் பற்றியும் இப்புனித நூல்கள் சொல்லத்தவறவில்லை. இம்மையில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழத்தவறிய ஆன்மாக்கள் மறுமையில் அனுபவிக்கக்கூடிய தண்டைகள் பற்றி கருடபுராணம் நமக்கு எடுத்துரைக்கின்றது. ஆக, கொல்லாமை நெறியின் முக்கியத்தவத்தையும் அப்பண்பினைக் கடைப்பிடிக்காதவர்களுக்கு மறுமையில் ஏற்படும் விளைவுகள் குறித்தும் ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாக அமைகின்றது.

### 1.1. கருடபுராணம் ஓர் அறிமுகம்

வேதாந்த அடிப்படையிலான பதினெட்டு புராணங்களில் ஒன்றாகத் திகழ்வது கருடபுராணம் ஆகும். இப்புரானம் மகாவிஷ்ணுவால் கருடனுக்குச் சொல்லப்பட்ட தகவல்களை தொகுத்துக் கொடுக்கும் ஒரு புராண நூலாகத் திகழ்கின்றது. கருடபுராணம் ‘பூர்வ காண்டம்’ மற்றும் ‘உத்திர காண்டம்’ என இரு பிரிவுகளை உடையது. இந்த நூலில் 18000 பாடல்கள் இடம்பெற்றுள்ளன (துர்க்காதாஸ். எஸ். கே.ஸ்வாமி, 2006). கருடபுராணத்தின் இரண்டாம் பகுதியில் உலகில் பிறந்த அனைத்து ஆன்மாக்களும் மறுமையில் எவ்வாறான நிலையைப் பெறுகின்றன என்பதைத் தெள்ளத்தெளிவாக விளக்கப்பட்டுள்ளன (வேங்கடவன், 2013). உயிர் உடம்போடு கூடி வாழ்வது வாழ்வு; உடம்பைவிட்டு உயிர் பிரிவது மரணம் (சிவசித்தன், 2009). ஔவையார்,

*வாயுவினா லாய வுடம்பின் பயனே*

*யாயுவி னெல்லை யது.*

*(ஔவைக்குறள்: 29)*

எனும் குறளின் வழி பிராணவாயுவைக் கொண்டு இயங்குகின்ற இந்த உடல் அதற்குரிய ஆயுள் வரைக்கும் தான் அந்த உடலைப் பொருந்தி நிற்கும் என ஆயுளுக்கும் பூத உடலுக்கும் உள்ள உறவைப் பற்றி கூறுகின்றார். ஒவ்வோர் ஆன்மாவும் தன் உடலைவிட்டு நீங்கிய பின் எமலோகம் சென்றாக வேண்டும் என்பது விஷ்ணு பகவானின் வாக்கு ஆகும் (துர்கா தாஸ் எஸ்.கே.ஸ்வாமி, 2006). ஓர் ஆன்மா பூமியில் வாழும் காலத்தில் செய்த நல்வினை, தீவினைகளுக்கு ஏற்ப எமலோகத்தில் அந்த ஆன்மா அனுபவிக்கக்கூடிய தண்டனைகளை எமதர்மராஜன் முடிவு செய்வார்.

உலகத்தில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழத்தவறிய ஆன்மாக்கள் எமலோகத்திற்குச் செல்லும் வழியில் பல துன்பங்களை அனுவவிக்கும் (கீர்த்தி, 2013). காலதேவனால் நிர்ணயிக்கப்பட்ட நரகங்கள் 84 லட்சங்கள் ஆகும். லட்சோப லட்ச நரகங்கள் இருப்பினும் அவற்றில் 28 நரகங்கள் மிக முக்கியமானவை. இவை ஒவ்வொரு விதத்திலும் மிகவும் கொடியதாக இருக்கும். உயிர்கள் எந்த நரகத்தில் தள்ளப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் என்று காலதேவனே நிர்ணயிப்பார் என்கிரது கருடபுராணம் (ரிஷபானந்தர், 2008). அறப்பண்புகளில் ஒன்றான கொல்லாமை எனும் பண்பின் முக்கியத்துவத்தையும் அப்பண்பினைக் கடைப்பிடிக்காத ஆண்மாக்களுக்குக் கருடபுராணம் கூறும் நரக தண்டனைகளையும் நின்று காண்போம்.

### 2.0.அறம்

மக்கள் வாழ்க்கையில் அடைய வேண்டிய குறிக்கோள்கள் யாவை? வாழ்க்கை முழுமைப்பெற அவர்கள் தேட வேண்டியவை யாவை? அவற்றை முயன்று தேடுவதற்கான வழிவகைகள் யாவை? போன்ற வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் அமைவதே உறுதிப்பொருள்கள் எனக் கூறப்படுகின்றன (கந்தசாமி.சோ.நா., 2002). உறுதிபொருள்களானது அறம், பொருள், இன்பம், மற்றும் வீடு ஆகும். அவ்வரிசையில் முதலாம் உறுதிபொருளாகத் திகழ்கின்ற அறம் என்பது ஒழுக்கம், தர்மம், மற்றும் நன்னடத்தையைக் குறிக்கிறது. இது மனிதனை நீதிமுறையில் வாழ வழிகாட்டும் ஒழுக்கநெறியாகும். அறத்தின் அடிப்படை

நோக்கம் நல்லொழுக்கங்களைப் பின்பற்றுவது ஆகும். இந்தியப் பாரம்பரத்தில் தோன்றிய பல சான்றோர்கள் அறத்தின் முக்கியத்துவத்தைத் தங்களின் படைப்புகளின் வழி வெளிக்காட்டியுள்ளனர். திருவள்ளுவர்,

*அறத்தினூஉங்கு அறவே இல்லை; அதனை*

*பொறுத்தவர்க்கு ஆற்றும் இனிது.*

*(திருக்குறள்: 31)*

எனும் குறளின்வழி அறம் என்பது உயர்ந்த பண்பாகும். அறத்துடன் வாழும் போதே ஒரு மனிதனுக்கு மனநிறைவும் அமைதியும் கிடைக்கும் என்பது வள்ளுவரின் கருத்தாகும். மேலும் அவர்,

*ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்*

*உயிரினும் ஓம்பப் படும்.*

*(திருக்குறள்: 131)*

எனும் குறளின் மூலம் ஒழுக்கம் என்பது வாழ்க்கையை உயர்த்தும் பண்பாகும் எனவும் அதை உயிரினும் மேலாகப் பாதுகாக்க வேண்டும் என்கிறார். வள்ளுவர் தமது திருக்குறளில் அறத்துப்பால் பகுதியில் அறம் குறித்த செய்திகளை 38 அதிகாரங்களில் கூறியுள்ளார். அதில் கொல்லாமை எனும் பண்பு மிக முக்கியமான பண்பாகக் கருதப்படுகிறது. வள்ளுவரைத் தவிர திருமூலர் போன்ற இன்னும் பலர் கொல்லாமையின் முக்கியத்துவத்தை உலகிற்கு எடுத்துக்கூறியுள்ளனர்.

### 2.1.கொல்லாமை

கொல்லாமை எனப்படுவது ஓர் உயிரைக் கொல்லாமல் இருப்பதைக் குறிக்கின்றது. திருவள்ளுவர் தமது திருக்குறளில் கொல்லாமை என்பதை மனித வாழ்க்கையின் மிக முக்கியமான அறநெறியாகச் சொல்கிறார். உயிர்களைக் கொல்லாமல் பாதுகாப்பது மட்டும் அல்லாமல், பிற உயிர்களுக்கு உண்டாகும் பாதிப்பையும் தவிர்க்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார். திருவள்ளுவர்,

*அறவினை யாதெனில் கொல்லாமை கோறல்*

*பிறவினை எல்லாந்தரும்.*

*(திருக்குறள்: 321)*

எனும் குறளின்வழி அறச்செயல் என்பது யாதென்றால் எந்தவோர் உயிரையும் கொலை செய்யாத செயலே ஆகும். கொலை செய்தல் பிற தீவினைகளைக் கொண்டுவரும் எனக் கருதுரைக்கின்றார். மேலும், வள்ளுவர்,

*அறவினை யாதெனின் கொல்லாமை; மற்றது*

*பொறாஅமைச் செய்யாமை நீர்த்து.*

*(திருக்குறள்: 312)*

எனும் குறளின்வழி அறநெறியில் வாழ்கின்ற ஒருவருக்குக் கொல்லாமையே அடிப்படை. மற்ற எல்லா அறவினைகளும் இப்பண்பின் அடிப்படையில் வருகின்றன என்கிறார். ஆக கொல்லும் குற்றமானது பிற குற்றங்களை மனிதன் செய்வதற்கு அடிப்படையாக அமைகின்றது என்பதையும் கொல்லாமை என்னும் பண்பே பிற நல்வினைகளை ஒரு மனிதன் செய்வதற்கு அடிப்படையாக அமைகின்றது என்பதை இக்குறள்களின் வழி அறியலாம். மேலும், இக்கருத்தினை உறுதிசெய்யும் வகையில் அப்பர் சுவாமிகள், இறைவனை வழிபடும் முக்கிய நெறியாக, கொல்லாமை நெறியை வலியுறுத்துகின்றார். இறைவனுக்கு நன்றியைச் செலுத்தும் வழிபாடு, பிற உயிர்களுக்குத் துன்பம் அளிக்காமல் வாழும் பண்பில் அடங்கியிருக்க வேண்டும் என்பது அப்பரின் கருத்தாக அமைகின்றது. மேலும், எல்லா உயிர்களிடத்திலும் அன்பு காட்டும் உயர்ந்த வாழ்வியல் நெறியை அப்பர்,

*கொல்லாது வாழ்வோர்க்குக் கோவில் சென்று தொழுவது,*

*கொல்லாமல் வாழும் அறிவின் நெறியே...........* (தேவாரம் 4-19-8)

எனும் பாடல் வரிகளின்வழி முன்வைக்கின்றார். திருமூலர் கொலைக் குற்றம் செய்பவர்கள் மறுமையில் நரகத்தில் தள்ளப்படுவர் என்பதை,

*கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை*

*வல்லடிக் காரர் வலிக்கயிற் றால் கட்டி*

*செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை*

*நில்லிடு என்று நிறுத்துவர் தாமே.*

*(திருமந்திரம்: 240)*

எனும் பாடலின்வழி கொல்லாமையின் முக்கியத்துவத்தைக் கருத்துரைக்கின்றார். திருமூலர் கூறும் கருத்தினை கருடபுராணம் உறுதிச்செய்கிறது கருடபுராணம் ஓர் உயிரைக் கொல்லும் குற்றமானது மிகப் பெரிய குற்றமாகக் கூறுகின்றது. கருடபுராணம் கூறும் 28 நரகங்களில், ஏழு நரகங்கள் கொலைக் குற்றம் செய்த ஆன்மாக்களுக்கான தண்டைகள் வழங்கப்படும் நரகங்களாக அமைந்துள்ளன. அவை பிற உயிர்களை வதைத்தல், வேள்வி யாகங்களுக்காக உயிர்களைப் பலியிடுதல் மற்றும் தற்கொலை செய்தல் ஆகிய மூன்று வகை குற்றங்களுக்காகக் கொடுக்கப்படும் தண்டனைகளாக அமைந்துள்ளன.

### 2.1.1.பிற உயிர்களை வதைத்தல்

சைவ சித்தாந்தம், உயிர்கள் 84 லட்ச யோனி பேத அடிப்படையில் அமைந்துள்ளன என்கிறது (நாகப்பன் ஆறுமுகம், 2020). உயிர் தோற்றமும் முடிவும் இல்லா அநாதி நிலையில் இருப்பதாகும். இறைவன் திருவருளால் உயிர்கள் தனு, கரணம், புவனம், போகங்களைப் பெற்று பூமியில் வாழ்கின்றன. எல்லா உயிர்களும் தங்களின் வினைக்கேற்ப உடல், உலகங்களைப் பெற்று பூமியில் வாழ்கின்றன (சிவபிரகாசம், 29). மேலும், உயிர்கள் பல பிறவிகளாக முக்தியை வேண்டி முன்னேறிக்கொண்டே இருக்கின்றன (மேற்படி). சைவ சித்தாந்தம் எல்லா உயிர்களும் சமம் என கருத்துரைக்கின்றது. வள்ளுவர்,

*ஒன்றா உலகத்தார்க் கெல்லாம் பிறனொன்று*

*சொல்லா தொழுக பவர்.*

*(திருக்குறள்: 323)*

எனும் குறளின்வழி அனைத்து உயிர்களும் சமமானவை எனவும் ஒருவருக்கொருவர் தீமை செய்யாத பண்பே உலக வாழ்க்கையின் அடிப்படையாகும் எனும் கருத்தை முன்வைக்கின்றார். இந்தக் கூற்றை உறுதி செய்யும் வகையில் திருமூலரும் தமது திருமந்திரத்தில் அனைத்து உயிர்களும் சமமானவை என்றும், அவற்றின் வாழ்வை காப்பதே மனிதன் கடமையென,

*கொல்லாமை செய்யும் குணமே பெரிய*

*வல்லாமை வேண்டி வருவார் சிவலோகம்*

*செல்லாமை செய்வார்கட் தீங்கு நிலையாமை*

*இல்லாமை எய்துவ தெந்தோறு காலமே.*

*(திருமந்திரம்: 197)*

எனும் பாடலின்வழி விளக்கப்படுத்துகிறார். மேலும், திருமூலர் இப்பாடலின்வழி கொல்லாமை என்பது பெரும் நற்குணமாகக் கருதப்படுகிறது. கொலை செய்யாதவர்களே தெய்வீக நிலையை அடைய வாய்ப்பு கிடைக்கும். கொலை செய்வோர்க்கு தீங்கு நிரந்தரமாக இருக்கும் எனும் கருத்தையும் முன்வைக்கின்றார். திருமூலர்,

*அம்மிருகம் தன் உயிர் தேடி அலையும்*

*இம்மிருகன் தீயவெறி ஏது நிரந்தர*

*தம்மிருகம் தன்னை அறியாதவர்*

*பொய்க்குற்ற மாடுபடும் பாவமதே.*

*(திருமந்திரம்: 251)*

எனும் பாடலின்வழி மிருகங்கள் தங்கள் உயிரைப் பாதுகாக்க வழிகளைத் தேடிக்கொண்டிருக்கும்போது அதை பலியிடுவது பெரிய பாவமாகும் எனவும் இது முற்றிலும் தவிர்க்கப்படவேண்டும் எனவும் எச்சரிக்கின்றார். இதனைத்தவிர்த்து பத்திரகிரியார், மனிதர்கள் எப்போதும் எல்லா உயிர்களையும் சமமாகவும் கருணையுடனும் அணுக வேண்டும் எனும் கருத்தை,

*மன்னுயிரைக்கொன்று வத்துண்டுழலாமல்*

*தன்னுயிர்போலெண்ணித் தவமுடிப்பதெக்காலம்.*

*(பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப்புலம்பல்: 15)*

என்ற பாடல் வரிகளின்வழி விளக்குகின்றார். எந்த உயிரையும் துன்புறுத்தாமல், தன்னுடைய உயிரைப் போல் எண்ணும் பண்பை வளர்க்க வேண்டும் என்பது இச்சித்தரின் கருத்தாக அமைகின்றது. மேலும்,

*இரப்பவர்க் கீய வைத்தார்*

*ஈபவர்க் கருளும் வைத்தார்*

*கரப்பவர் தங்கட் கெல்லாங்*

கடுநர கங்கள் வைத்தார்... *(தேவாரம் 4.38.10)*

எனும் பாடலின்வழி எல்லா உயிர்களிடத்தில் கருணையுடன் நடந்து கொள்ளாதவர்கள் நரகத்தில் பல்வேறு தண்டனைகளை அனுபவிக்க நேரிடும் என்று திருநாவுக்கரசர் எச்சரிக்கிறார். தாயுமானவரரோ, இறைவனைத் துதித்து, எல்லா உயிர்களையும் தன்னுடைய உயிராகக் கருதி கருணையுடன் நடந்து கொள்ளும் மனப்பாங்கை மனிதனுக்கு அளிக்க வேண்டுமென,

*எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி யிரங்கவும்நின்*

*தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே.*

*(பராபரக்கண்ணி: 65)*

எனும் பாடல் வரிகளின் மூலம் வேண்டுகிறார்.

பூமியில் வாழும் காலத்தில் கொலைக் குற்றம் செய்த ஆன்மாக்கள் கண்டிப்பாக நரகத்தில் அதற்கான தண்டனைகளை அனுபவித்தே தீர வேண்டும் எனக் கருடபுராணம் கூறுகின்றது (கீர்த்தி, 2013). சுவையாக உண்ண வேண்டும் என்று பிற உயிர்களைக் கொன்றும், பலவிதங்களில் துன்புறுத்திய ஜீவன்கள் செல்லும் நரகம் 'கும்பிபாகம்' ஆகும். இங்கே எரியும் அடுப்பில் வைக்கப்பட்டுள்ள எண்ணெய்க் கொப்பரையில் போட்டு ஜீவன்கள் துன்புறுத்தப்படும். தொடர்ந்து, பிராணிகளைக் கொடுமைப்படுத்தி கொலை செய்பவர்கள் அடையும் நரகம் 'பிரயணயோகம்'. இங்கே கூர்மையான பாணங்களை ஜீவன்களின் மீது எய்தி எமகிங்கிரர்கள் துன்புறுத்துவர். உயிர்களைச் சித்திரவதை செய்தல், கொடுமையாகக் கொலை செய்தல் போன்ற குற்றங்களைப் புரிந்த ஜீவன்கள் செல்லும் அடுத்த நரகமானது 'அந்தகூபம்'. இங்கு ஜீவன்களை கொடிய மிருகங்கள் கடித்துக் குதறும்; அரியவகை மாடுகள் ஜீவன்களை முட்டிமோதி கீழே தள்ளி மிதித்து துன்புறுத்தும். இறுதியாக, பிராணிகளைக் கொஞ்சமும் இரக்கமின்றி கொடுமையாக வதைத்து மற்றும் கொலை பாதகம் செய்த ஜீவன்கள் அடையும் நரகம் 'வடாரோகம்'. இங்கே எமகிங்கிரர்கள் ஜீவன்களின் கை, கால்களைக் கட்டி நெருப்பால் சூடு வைத்துத் துன்புறுத்துவர். ஓர் உயிர் எவ்வகையான துன்பங்களை ஒருவர் கொலை செய்யும் போது அனுபவித்ததோ அதே வகையில் நரகம் ஜீவன்களுக்கு கொடிய தண்டணை அளிக்கும் இடமாக அமைகின்றது. பிற உயிர்களுக்குத் துன்பம் தந்து புலால் உணவுகளை விரும்பி உண்பவர்கள் இறந்த பின் கொடிய நரகத் தீயில் எப்போதும் வெந்துகொண்டே இருப்பர் எனும் கருடபுராணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இதே கருத்தானது திருமந்திரத்தில் பின்வருமாறு காண முடிகின்றது.

*பொல்லாப் புலாலை நுகரும் புலையரை*

*எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்*

*செல்லாகப் பற்றியத் தீவாய் நரகத்தில்*

*மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே.*

*(திருமந்திரம்: 199)*

பிற உயிர்களைக் கொன்று அதன் உடலிலிருந்து உணவைப் பெறுவதாலும் அது மனித உடலுக்குத் தீமை தருவதாலும் பொல்லாத புலாலை விரும்பிச் சாப்பிடும் கீழ்மையான மக்கள் இறக்கும் வேளையில் அவர்களைச் சுற்றி நின்று அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே எமதர்மனின் தூதுவர்கள் வந்து கரையானைப் போல இறுக்கமாகப் பற்றி இழுத்துக் கொண்டு போய் எப்போதும் எரிந்துக் கொண்டிருக்கும் கொடிய நரகத் தீயினுள் அவர்களின் முதுகு கீழே பட முகமும் உடலும் மற்றவர்கள் பார்க்கும்படி மேலே தெரிய மல்லாக்கத் தள்ளிவிட்டு அவர்கள் சுடும் தீயிலிருந்து தப்பிச் செல்லாமல் இருக்க கதவுகளை மூடிவிடுவார்கள் என்று கூறுகின்றார் திருமூலர். இதன் மூலம் திருமூலர், புலால் உண்ணும் பாவம் நரக வாழ்வுக்கு வழிவகுக்கும்

ரென கருடபுராணம் கூறும் செய்தியை உறுதிபடக் கூறுகின்றார். ஆக திருமூலர்,

*உயிர் செத்துத் துயர்படுவார் தாமுன்ன*

*முயிர் நித்தம் வாழ்ந்திருப்பார் தாம்முன்ன*

*அயிரத்து நன்மை செயினும் உயிர்நலம்*

*பயன்இல தான்இங்கு பாழ்செய்தார் தாமே.*

*(திருமந்திரம்: 727)*

எனும் பாடல் வரியில் கூறுவதுபோல் அனைத்து உயிர்களையும் இறைவனின் வடிவமாகக் கருத வேண்டும். உயிரை அழிப்பது மனிதனின் அறநெறியையும், தெய்வீக முன்னேற்றத்தையும் மறுக்கும் செயலாகும். ஆக, அனைவரும் எல்லா உயிர்களையும் தன் உயிர்போல் எண்ண வேண்டும்; எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்த வேண்டும்.

### 2.1.2.தற்கொலை செய்தல்

கருடபுராணம் தற்கொலை செய்துக்கொள்ளுதல் மிகப் பெரிய குற்றம் எனவும் அதனைச் செய்யும் ஆன்மாக்கள் நரகத்தில் தண்டிக்கப்படுவது உறுதி எனவும் கூறுகின்றது. முழு அறியாமையில் இருந்த உயிர்களை உய்விக்கும் வண்ணமே இறைவன் பெருங்கருணைக்கொண்டு உயிர்கள் பூமியில் வாழ்வதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித்தருகிறார் (நாகப்பன் ஆறுமுகம், 2020). ஆனால், உயிர்கள் பூமிக்கு வந்த நோக்கம் அறியாமல் ஆணவத்தால் ஏற்படும் அறியாமையினால் தங்கள் உயிரையே மாய்த்துக் கொள்கின்றன. ஔவையார், மானிடராய் பிறப்பதே அரிது எனக் கூறுகின்றார். ஆக, அரிதாகக் கிடைத்த இந்தப் பிறவியை முழுமையாக வாழ்ந்து பயன் பெறாமல் சுயமாக மாய்த்து கொல்வது பெருங்குற்றமாகக் கூறப்படுகின்றது. சித்தர்கள் தற்கொலை என்பது மிகப்பெரிய பாவமாகவும், மனிதனின் ஆன்மீக வளர்ச்சிக்கு பெரிய தடையாகவும் இருப்பதாகக் கருதுகின்றனர். உயிர் என்பது இறைவனால் வழங்கப்பட்ட பரிசாகும்; அதைச் சிதைப்பதற்கான எந்தவொரு செயலும் கடவுளின் நியதிக்கு எதிராகும் எனச் சித்தர்கள் வலியுறுத்துகிறார்கள். சிவவாக்கியர்,

*உயிர்கொல்லும் பாவமெல்லாம் உணர்விலான*

*மயக்கம் கொண்ட பேய்மனம் ஆகும்*

*துயர் மிகுந்த துன்பமும் கூடிப்*

*பயனும் இன்றி போயினும் பாவம்.*

*(சிவவாக்கியம்: 247)*

எனும் பாடல்வழி தற்கொலை செய்தல் என்பது அறிவின்மையின் வெளிப்பாடாகவே கருதப்படுகிறது எனக் கூறுகின்றார். இதனால், துன்பம் மற்றும் நரக வாழ்வு தவிர மனிதனுக்கு வேறு பயன் இருக்காது என்கின்றார். மனிதப் பிறவியில் மட்டுதான் ஓர் உயிர் இறைவனை வழிபட்டு இறைவனின் திருவடி பேறான வீடுபேற்றை அடைய முயற்சிக்க முடியும். அம்மனிதப் பிறவியை வீணாக்கும் வகையில் தற்கொலை செய்து கொள்வது தெய்வீக அருளை அடையும் வாய்ப்புகளை நழுவச்செய்கிறது என்பதனைப் பத்திரிகிரியார்,

*தன்மையால் உயிரை அழித்திடல் தெய்வமே*

*தன்மையால் கிடைக்குமோ நன்மையே*

*தன்மையினால் வாழ்ந்திடினும் ஆழ்ந்திடும்*

*தெய்வருள் நிதியிலே வாழ்வென்றால் போதும்.*

*(பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல்: 52)*

எனும் பாடலின்வழி கருத்துரைக்கின்றார். இதனைத் தவிர்த்து, அறியாமையில் தற்கொலை செய்துக்கொள்வோருக்கு ஓர் உபாயம் உண்டு என்பதனைத் திருமூலர்,

*தூய்மை மனதில் நின்று தியானம் செய்தால்*

*மாயம் மடியும் உன் வாழ்க்கை மலரும்*

*தூய உள்ளம் தானே கருமமும் கடந்து*

*மூவுலகும் சார்ந்திடும் பேரின்ப வாழ்வு.*

*(திருமந்திரம்: 1140)*

எனும் பாடல்வழி எடுத்தியம்புகின்றார். தியானத்தின் மூலம் மனிதன் தன் பிரச்சினைகளைச் சமாளிக்கலாம் என்றும், தற்கொலை செய்யாத வகையில் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளலாம் என்றும் கூறுகின்றார். தற்கொலை செய்து கொள்ளுதல் கொலைக் குற்றத்திற்குச் சமம் எனவும் அதற்கான தண்டைகள் நரகத்தில் வழங்கப்படும் என்கின்றது கருடபுராணம். தற்கொலை செய்து கொள்பவர்கள் அடையும் நரகம் 'சூலப்ரோகம்'. இங்கே ஜீவன்களைக் கொடிய பறவைகள் குத்திக் குத்திக் குதறும்; எமகிங்கரர்கள் சூலத்தாலும் குத்தித் துன்புறுத்துவர். ஜீவன்கள் தாங்கள் செய்த குற்றத்தினை எண்ணி வருந்தும் இடமாக இந்நரகம் திகழும். ஆக, அனைத்து உயிர்களும் பிறவி எனும் கிடைத்த நல்வாய்ப்பை முழுமையாக அனுபவித்து இறையைத்தேடி, உண்மையான விடுதலை எனும் முக்தி நிலையை அடைய முயற்சி செய்ய வேண்டும்.

### 2.1.3.வேள்வி

இந்து பாரம்பரியத்தில் வேள்வி செய்யும் வழக்கம் மிகப் பரவலாக இருந்துள்ளது. முதலில் அரச குலத்தைச் சார்ந்தவர்களே வேள்விகளைச் செய்தனர். மனிதர்களின் வாழ்க்கைத், தியாகத்தை முன்னிருத்தியே அமைய வேண்டும் எனும் நிலைப்பாட்டையும், மனிதன் தன்னிடமுள்ள மிருக குணங்களை வேள்வியில் பலியிட்டு, நற்குணங்களை அதிகரிப்பதே வேள்வி செய்வதற்கான முதன்மை நோக்கமாக அமைந்தது (இராசேந்திரன், 2012). வேள்வியில் உயிர்பலி என்பது பூஜை அல்லது வழிபாட்டு நிகழ்வுகளில் ஒரு தெய்வத்தின் திருப்திக்காக அல்லது ஒரு வேண்டுதல் நிறைவேற்றும்படி உயிரினத்தைப் பலியிடும் செயலைக் குறிக்கிறது. இதன் அடிப்படையில், மிருகங்கள் அல்லது மற்ற உயிரினங்கள் கொல்லப்பட்டு தெய்வத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன. இந்த மரபு இந்தியாவின் சில பகுதிகளிலும், உலகின் பிற கலாச்சாரங்களிலும் பழமையான ஆன்மிகச் செயலாக இருந்துள்ளது.

வேதகாலப் பலி முறைகள், இயற்கையின் சக்திகளைக் கண்ணியமாக வழிபடும் ஒரு பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, இஃது உயிர்பலியின் மரபை உருவாக்கியது. யஜுர்வேதம் சில வழிபாட்டு முறைகளில் மிருகங்களின் பலியைக் குறிப்பிடுகிறது. ஆனால், பிற்காலத்தில் தோன்றிய வேதாந்தத் தத்துவம் மற்றும் உபநிடதங்கள் இதனை மறுத்து கருணை மற்றும் அறத்தின் மேன்மையை வலியுறுத்துகின்றன. கருடபுராணம் வேள்விகளில் உயிர்பலி தருவது ஒரு கொலைக் குற்றம் எனக் கூறுகின்றது.

இரண்டு வகையான நரகங்களில் இவ்வகையான குற்றம் செய்தவர்களுக்கான தண்டனைகள் வழங்கப்படுகின்றன. நரமேத யாகம் (மனிதர்களைக் கொன்று யாகம் செய்தல்) செய்தவனும் மனித மாமிசத்தைப் புசித்தவனும் அடையும் நரகம் ரக்ஷோகனம். இங்கே பாவிகளால் பாதிக்கப்பட்டவர்களே அப்பாவிகளை முன்னின்று வதைக்கும்; பாதிக்கப்பட்ட மிருகங்களும் வதைக்கும் என்கிறது கருடபுராணம். தொடர்ந்து முப்பத்து முக்கோடி தேவர்கள் வீற்றிருக்கும் பசுக்களை வதைத்துக் கொடுமை செய்பவர்கள்; பசுவதையோடு கூடிய யாகம் செய்பவர்கள் அடையும் நரகம் விசஸவம். இங்கே ஜீவன்கள் எமகிங்கரர்களால் சவுக்கால் அடித்துத் துன்புறுத்தப்படுவர் என்கிறது கருடபுராணம் (கீர்த்தி, 2013).

பல ஞானிகள், சித்தர்கள், மற்றும் தத்துவ அறிஞர்கள் வேள்வியில் உயிர்பலியை அறநெறிகளுக்கு மாறான செயலாகக் கண்டு, அதனை விலக்க முற்பட்டுள்ளனர். சித்தர்கள், வேள்வியில் உயிர்பலியை அறநெறிகளுக்கு எதிரான செயலாகக் காண்கிறார்கள். இது தெய்வீக அருளுக்குப் பதிலாகத் துன்பங்களை அதிகரிக்கும் எனும் கருத்தை முன்வைக்கின்றனர். எனவே, மனதின் தூய்மையும் கருணையும் வழிகாட்டும் செயல்பாடுகளை ஏற்படுத்தி, உயிர்களுக்குப் பாதுகாப்பை வழங்க வேண்டும் என்பதைச் சித்தர்கள் வலியுறுத்துகிறார்கள். சிவவாக்கியர்,

*தங்கள் தேகம் நோய் பெறின் தனைப்பிடாரி கோயிலில்*

*பொங்கல் வைத்து ஆடு கோழிப் பூசைப்பலியை இட்டிட*

*நங்கச் சொல்லு நலிமிகுந்து நாளும் தேய்ந்து மூஞ்சூராய்*

*உங்கள் குலதெய்வம் உங்கள் உருக்குலைப்பது உண்மையே."*

*(சிவவாக்கியம்: 534)*

எனும் பாடலின்வழி மிருகங்களை வேள்வியில் பலியிடுவது பாவத்தை அதிகரிக்கும் செயல் என்றும் இச்செயலானது ஒரு மனிதனுக்கு எந்த விதத்திலும் நன்மை தராது என்றும் கூறுகிறார். மேலும் அவர்,

*தங்கள் தேகம் நோய் பெறின் தனைப்பிடாரி கோயிலில்*

*பொங்கல் வைத்து ஆடு கோழிப் பூசைப்பலியை இட்டிட*

*நங்கச் சொல்லு நலிமிகுந்து நாளும் தேய்ந்து மூஞ்சூராய்*

*உங்கள் குலதெய்வம் உங்கள் உருக்குலைப்பது உண்மையே.*

*(சிவவாக்கியம்: 534)*

எனும் பாடலின்வழி மிருகங்களைப் பலியிடுவதன் மூலம் தெய்வீக அருள் கிடைக்கும் என நினைப்பது முற்றிலும் தவறானது என ஆணித்தரமாகக் கூறுகின்றார். இது தெய்வீக அருளுக்குப் பதிலாக பாவங்களையே சேர்க்கும் என சிவவாக்கியர் எச்சரிக்கின்றார். வள்ளலார்,

*நலிதரும் சிறிய தெய்வமென்று ஐயோ*

*நாட்டிலே பலபெயர் நாட்டிப்*

*பலிதரும் ஆடு பன்றி குக்குடங்கள்*

*பலிக்கடா முதலிய உயிரைப்*

*பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே*

*புந்தி நொந்துளம் நடுக்குற்றேன்."*

*(திருவருட்பா-பிள்ளைப்பேறு விண்ணப்பம்: 63)*

எனும் பாடலின்வழி, மிருகங்களைப் பலியிடுவது மானுடத்தின் மிருகத்தனத்தை வெளிப்படுத்துகின்றது என்று வருத்தத்துடன் கூறுகிறார். தன்னுடைய சுயநலத்திற்காகப் பிற உயிர்களை பலிகொடுத்தல் என்பது மிகக் கொடிய செயல் என்று அவர் கருத்துரைக்கின்றார். ஆக, பலியிடுதல் என்பது மிகப்பெரிய குற்றம் என்பதை இதன்வழி நன்கு அறிந்து கொள்ள முடிகின்றது.

## 3.0. முடிவுரை

ஆக, ஓரறிவு முதல் ஆறறிவைச் சேர்ந்த எந்தவொரு உயிரைக் கொலை செய்தாலும் அதற்கான தண்டனை நரகத்தில் வழங்கப்படுவது உறுதி என்கிறது கருடபுராணம். இதில் தங்கள் உயிரைத் தாங்களே தற்கொலை செய்து மாய்த்துக்கொள்வரும் அடங்குவர். எல்லா உயிர்களும் பூமியில் மகிழ்ச்சியாக வாழத் தகுதியுடையவை. அதைக் கொல்லும் உரிமை எவருக்கும் இல்லை என்பதை இக்கட்டுரையின்வழி எடுத்தியம்பப்பட்டுள்ளது. மனிதன் பூமியில் பிறக்கும் நோக்கமே இறுதியில் வீடுபேறு எனும் பேரின்பத்தை அடைவதற்காகவே ஆகும். திருமூலர்,

*கொல்லாமை செய்யும் குணமே பெரிய*

*வல்லாமை வேண்டி வருவார் சிவலோகம்*

*செல்லாமை செய்வார்கட் தீங்கு நிலையாமை*

*இல்லாமை எய்துவ தெந்தோறு காலமே.*

*(திருமந்திரம்: 197)*

எனும் பாடலில் கொல்லாமை என்பது பெரும் நற்குணமாகக் கருதப்படுகின்றது என விளக்கிக் கூறுகின்றார். கொலை செய்யாதவர்களுக்கே தெய்வீக நிலையை அடைய வாய்ப்பு கிடைக்கும்; கொலை செய்வோர்க்குத் தீங்கு நிரந்தரமாக இருக்கும் என்று அவர் உறுதிபடக் கூறுகின்றார். "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என இராமலிங்க அடிகளார் கூறுவார். இவ்வாறாக இந்திய பாரம்பரியத்தில் வந்த பலர் எல்லா உயிர்களிடத்திலும் அன்பு கொண்டு வாழ்ந்தும்

காட்டியுள்ளனர். அன்பும் கருணையும் மட்டும்தான் ஒரு மனிதனை இறை நிலைக்கு உயர்த்தும். இம்மையில் மட்டுமல்லாமல் மறுமையிலும் நன்நிலை அடைய வேண்டுமெனில் எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துதல் அவசியம் என்பதனை அனைவரும் உணர்ந்து செயல்படுதலே கட்டுரையாளரின் அவா ஆகும்.

## References


*Aḻakar Nampi. (2021). Tirumūlar Aruḷiya Tirumantiram. Ceṉṉai: Kavitā Papḷikēṣaṉ. [அழகர் நம்பி. (2021). திருமூலர் அருளிய திருமந்திரம். சென்னை: கவிதா பப்ளிகேஷன்.]*

*Caravaṇamuttup Piḷḷai. (1954). Patiṉeṉ Cittarkaḷ Periya Ñāṉakkōvai. Ceṉṉai: Tirumakaḷ Vilāca Accu Nilaiyam. [சரவணமுத்துப் பிள்ளை.(1954). பதிணென் சித்தர்கள் பெரிய ஞானக்கோவை. சென்னை: திருமகள் விலாச அச்சு நிலையம்.]*

*Ciṉṉatampi.Cu. (2018). Nāṉkām Patippu. Malaināṭu Kaṇṭa Tirukkuṟaḷ Eḷiya Urai. Cilāṅkūr: Tēṉī Patippakam. [சின்னதம்பி.சு. (2018). நான்காம் பதிப்பு. மலைநாடு கண்ட திருக்குறள் எளிய உரை. சிலாங்கூர்: தேனீ பதிப்பகம்.]*

*Irācēntiraṉ.Mu., Cillāḻi.Ka. & Vikṉarācā, Ra. (2012). Intu Camayam Ōr Aṟimukam. Cilāṅkūr: Malēciya Intu Caṅkam. [இராசேந்திரன்.மு., சில்லாழி.க. & விக்னராசா, ர. (2012). இந்து சமயம் ஓர் அறிமுகம். சிலாங்கூர்: மலேசிய இந்து சங்கம்.]*

*Irāmanāta Piḷḷai. (1957). Tirumantiram Mūvāyiram. Meṭrās: Caiva Cittānta Nūṟpatippuk Kaḻakam.[இராமநாத பிள்ளை. (1957). திருமந்திரம் மூவாயிரம். மெட்ராஸ்: சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.]*

*Kalaittiṭṭa Mēmpāṭṭup Pirivu. (2022). Ilakkaṇam, Ceyyuḷ, Moḻiyaṇikkāṉa Vaḻikāṭṭi Nūl, Ilakkiya Viḷakkavurai (Tamiḻppaḷḷi). Putrājeyā: Malēciyak Kalvi Amaiccu. [கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு. (2022). இலக்கணம், செய்யுள், மொழியணிக்கான வழிகாட்டி நூல், இலக்கிய விளக்கவுரை (தமிழ்ப்பள்ளி). புத்ராஜெயா: மலேசியக் கல்வி அமைச்சு.]*

*Kantacāmi.Cō.Na. (2003). Intiyat Tattuvak Kaḷañciyam. Tokuti 3. Citamparam: Meyyappaṉ Patippakam. [கந்தசாமி.சோ.ந. (2003). இந்தியத் தத்துவக் களஞ்சியம். தொகுதி 3. சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.]*

*Kantacāmi.Cō.Nā.(2002), Tirukkuṟaḷ Kūṟum Uṟutipporuḷ. Meyyappaṉ Tamiḻāyvakam: Citamparam. [கந்தசாமி. சோ.நா.(2002), திருக்குறள் கூறும் உறுதிப்பொருள், மெய்யப்பன் தமிழாய்வகம்: சிதம்பரம்.]*

*Kīrtti. (2013). Karuṭa Purāṇam. Ceṉṉai: Caṅkar Patippakam. [கீர்த்தி. (2013). கருட புராணம். சென்னை: சங்கர் பதிப்பகம்.]*

*Maṇi, Ci. Cu,. (1992). Umāpaticivam Aruḷiya Civappirakācam. Tirunelvēli: Aruḷnanti Civam Aruṭpaṇi Maṉṟam. [மணி, சி. சு,. (1992). உமாபதிசிவம் அருளிய சிவப்பிரகாசம். திருநெல்வேலி: அருள்நந்தி சிவம் அருட்பணி மன்றம்.]*

*Nākappaṉ Āṟumukam. Mūṉṟām Patippu. (2020). Cittānta Caivam. Kōlālampūr: Mātēcaṉ Eṇṭarpirais. [நாகப்பன் ஆறுமுகம். மூன்றாம் பதிப்பு. (2020). சித்தாந்த சைவம். கோலாலம்பூர்: மாதேசன் எண்டர்பிரைஸ்.]*

*Nārāyaṇa Kirusṇamāccāryar. (2018). Karuṭapurāṇam. Ceṉṉai: Narmatā Patippakam. [நாராயண கிருஷ்ணமாச்சார்யர். (2018). கருடபுராணம். சென்னை: நர்மதா பதிப்பகம்.]*

*Poṉṉam'māḷ.Ār. (2019). Karuṭapurāṇam. Ceṉṉai: Kiri ṭirēṭiṅ ējeṉci piraivaṭ limiṭeṭ. [பொன்னம்மாள்.ஆர். (2019). கருடபுராணம். சென்னை: கிரி டிரேடிங் ஏஜென்சி பிரைவட் லிமிடெட்.]*

*Riṣapāṉantar. (2008). Karuṭapurāṇam. Ceṉṉai: Anurākam. [ரிஷபானந்தர். (2008). கருடபுராணம். சென்னை: அநுராகம்.]*

*Tamiḻppiriyaṉ. (2019). Cittar Pāṭalkaḷ – Mūlamum Uraiyum. Ceṉṉai: Kaṟpakam Puttakālayam. [தமிழ்ப்பிரியன். (2019). சித்தர் பாடல்கள் – மூலமும் உரையும். சென்னை: கற்பகம் புத்தகாலயம்.]*

*Turkātās.Es.Kē.Svāmi. (2006). Śrī Karuṭa Purāṇam. Ceṉṉai: Pirēmā Piracuram. [துர்காதாஸ்.எஸ்.கே.ஸ்வாமி. (2006). ஸ்ரீ கருட புராணம். சென்னை: பிரேமா பிரசுரம்.]*

# அலைவாய்க்கரையில் புதினத்தில் பரதவர் இனவரைவியல்

## Bharatava Ethnography in the Novel Alaiwaikaraiyil

முனைவர் த.கீதாஞ்சலி / Dr.T.Geethanjali[1]

**Abstract**

The purpose of this article is to examine the ethnographic elements emerging in the Alaiwaikarai. Analytical approach, descriptive approach, sociological approach, historical approach, ethnographic approach have been followed as the research is carried out on the basis of classifying and analysing the ethnographic elements of Bharatava ethnic people found in Budhinam. This is the first essay on Bharatava people to be ethnographically oriented. Literature is an important document to know the history of the people. All the ancient literature was in the form of Seyul. After the arrival of the westerners, especially after the 18th century, the traditional yapu methods were changed in Tamil literature and literature like short story, novel and drama appeared. Among these, the short story and novel are fictional. Although these can be created in imagination, they are central to people's lives. In that way, by conducting a study with ethnographic elements on the newly created wave bank that reflects the life of the particular race, the geography, time environment, inherited cultural changes and contemporary problems of the Bharatava people can be found and the study results can be shown to the society.

Date of submission: 2024-10-16
Date of acceptance: 2024-11-20
Date of Publication: 2024-12-30
Corresponding author’s Name: T. Geethanjali
Email: t.geethanjalingm@gmail.com

**Keywords:** Modern Literature, Ethnography elements, Ethnic life, People’s culture

### இனக்குழு வாழ்வியல்முறை

புதினங்கள் குறிப்பிட்ட வட்டார மக்களின் வாழ்வியல் அல்லது பல்வேறுபட்ட இனத்தைச் சார்ந்த மக்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு படைக்கப்பட்டு வருகின்றன. அவை படிக்கும் வாசகனின் மனத்தை ஈர்ப்பதுடன் பல்வேறுபட்ட சமூகத்தின் பழக்கவழக்கங்களையும் கலாச்சாரத்தையும் அறிய வழிவகை செய்கின்றன.

‘தமிழ்ச்சமூகம் செல்நெறி வழியில் காலந்தோறும் ஒரு இனக்குழுவின் வரலாறு வீழ்த்தப்பட்டிருக்கிறதேயொழிய வரலாற்றுச் சமூகம் ஒன்று இருந்தமைக்கான சான்றுகள் ஏதும் இருந்ததுக்கானச் சான்றுகள் குறிப்பிடப்படவில்லை. இவை தமிழ்நில அசைவியக்கத்தின் மறுக்க முடியாத உண்மை. வீழ்த்தப்பட்ட தொல்குடிகள் தொடர்ந்து, தங்களைத் தகவமைத்துக் கொள்வதற்கான

[1] The author is an Assistant Professor in Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi-642 001, Tamilnadu, India, t.geethanjalingm@gmail.com

நெடிய பயணப்படுதலை முன்னெடுத்திருக்கும் இக்காலத்தில் படைப்பாக்கமும் அவசியமாகிறது.'

(அடைக்கலராஜ், நவம்பர் 2022)

என்ற கூற்றின்வழி நெய்தல் நில மக்களலான பரதவ இன மக்களின் வரலாறுகள், வாழ்வியல் முறைகள் இக்கால இலக்கியங்களில் பதியத் தொடங்கியிருக்கிறார்கள். அந்தவகையில் பரதவர் இன மக்களின் வாழ்வியல் பதிவுகளையும் கதை நிகழ்ந்த காலக்கட்டத்தில் அம்மக்களின் பண்பாடு எவ்வாறு இருந்தது என்பதையும் தற்காலத்தில் அவை எவ்வாறு மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கின்றன என்பதையும் இனவரைவியல் கூறுகளைக்கொண்டு உற்றுநோக்குவதாக இவ்வாய்வு அமைகின்றது.

### ஆய்வுநோக்கம்

ஓர் இனத்தின் வாழ்வியல் குறித்தக் கருத்தாக்கங்களைப் புதினத்தில் பதிவு செய்யும்போது, அதில் அவ்வின மக்களின் வரலாறு, வாழ்க்கைமுறைகள், சடங்குமுறைகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், தொழில் முறைகள் போன்ற இனவரைவியல் கூறுகள் இடம்பெற்றுள்ளனவா என்பதைக் கண்டறிவதுடன், குறிப்பிட்ட இனத்தின் பாரம்பரியமான பண்பாடுகள் தற்காலத்தில் மாற்றம் அடைந்துள்ளனவா என்பதை ஆராய்வதாகவும் இக்கட்டுரையின் நோக்கம் அமைகிறது.

### ஆய்வு அணுகுமுறைகள்

புதினத்தில் காணப்படும் பரதவர் இனமக்கள் பற்றிய இனவரைவியல் கூறுகளை வகைப்படுத்தித் தரவுகளின் அடிப்படையில் தொகுத்தும் பகுத்தும் ஆய்வு மேற்கொள்ளப்படுவதால் பகுப்பாய்வு அணுகுமுறையும் அவ்வின மக்களின் புவிச்சூழல், நம்பிக்கைகள், சடங்குகள், பற்றி விளக்குமிடங்களில் விளக்கமுறை அணுகுமுறையும் சமூகநிலை குறித்து ஆய்வதால் சமூகவியல் அணுகுமுறையும் அவர்களின் வாழ்விடம், சுற்றுச்சூழல் போன்றவற்றை விளக்கிக்காட்டுமிடத்து வரலாற்றுமுறையும் இனவரைவியல் அணுகுமுறையும் பின்பற்றப்பட்டுள்ளன.

### ஆய்வு முன்னோடிகள்

இனவரைவியல் குறித்த திறனாய்வுகள் தொடக்க காலத்திலிருந்தே நடைபெற்று வருகின்றன. ஆனால், புதினங்களில் இனவரைவியல் கூறுகளைப் பொருத்தி ஆய்வு மேற்கொள்ளுதல் என்பது அருகியே காணப்படுகிறது. எட்கார்தார்ஸ்டன் (கந்தையாபிள்ளை.ந.சி, மொழிபெயர்ப்பு ஆசிரியர்), தென்னிந்திய குலங்களும் குடிகளும் (1999) எனும் புத்தகத்தில் பல்வேறு இனக்குடிகளைச் சார்ந்த மக்களின் வாழ்வினை ஆராய்ந்து ஆய்வுமுடிவுகளை வெளியிட்டுள்ளார். அதேபோல ஆ.சிவசுப்பிரமணியன் அவர்கள் இனவரைவியலும் தமிழ்நாவலும் எனும் புத்தகத்தில் இனவரைவியல் குறித்தச் செய்திகளைப் புதினங்களில் பொருத்தி ஆய்வு மேற்கொண்டு புத்தகமாக வெளியிட்டுள்ளார். (சிவசுப்பிரமணியன், 2009) இந்த இரண்டு புத்தகங்களை முன்மாதிரியாகக் கொண்டு அலைவாய்க்கரையில் புதினத்தில் காணப்படும் இனவரைவியல் கூறுகளைப் பொருத்திப் பார்த்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

### இனவரைவியல்–வரையறை

இனவரைவியல் என்பதற்கு,

> 'எழுத்தாளன் யாரைப் பற்றி எழுதுகிறானோ, அந்த மக்களின் வாழ்க்கை முறையைப் பற்றிய விளக்க உரைகள், விவர அறிக்கைகளை உருவாக்கக் கூடிய விசாரணை மற்றும் எழுத்து வடிவமே இனவரைவியல் ஆகும்.'

(Denzin Norman, 1997)

என மேலை நாட்டறிஞர் விளக்கம் தருகிறார்.

> 'இனவரைவியல் என்பது கள ஆய்வுகளின் அடிப்படையில் மனித சமூக தோற்றப்பாடுகள் தொடர்பான பண்புநிலை விளக்கமாக அமையும் ஒருவகை எழுத்தாக்கம் ஆகும். பண்பாட்டு மானிடவியலின் முக்கிய பிரிவாக இனவரைவியல் அமைந்துள்ளது.

*ஒரு குறிப்பிட்ட சமூதாயத்தில் வாழும் மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்வியல் கூறுகளை களஆய்வு முறைகளின் மூலம் பெறப்படும் முக்கியமான தரவுகளைக் கொண்டு விளக்கமாக எழுதுவதாகும்.'*

*(Gracy Janova, 2022)*

இனவரைவியலுக்கு, இனக்குழுவியல் எனும் பெயரும் உண்டு என்றும், இனவரைவியல் இனக்குழுவியல் இரண்டும் ஒரே துறைதான் என்பதை வலியுறுத்தும் விதமாக பக்தவத்சலபாரதி,

*'சமுதாயப் பண்பாட்டு மானிடவியலுக்கு அடித்தளமாகத் திகழ்வது இனக்குழுவியலேயாகும். 'இனக்குழுவியல்' என்னும் பொருளுடைய 'ethnography' என்னும் ஆங்கிலச் சொல், 'ethnos', 'graphain' ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங்களைப் பெற்றது. 'ethnos' என்பதற்கு இனம் (race) இனக்குழு (ethnic group) மக்கள் people என்பது பொருள். 'graphain' என்பதற்கு 'எழுதுவது' அல்லது 'வரைதல்' (to write) என்பது பொருள். ஆகவே இனவரைவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது. ஒரு இனக்குழுவைப் பற்றிய முழுமையான படிப்பு என்னும் வகையில் இப்பிரிவை 'இனக்குழுவியல்' என்றும் கூறலாம்.'*

(வினோதா, 2021, ப.117)

எனக் கூறியுள்ளார். கலைக்களஞ்சியமான விக்கிப்பீடியாவும், 'இன வரைவியல் என்பது, கள ஆய்வுகளின் அடிப்படையில், மனித சமூகத்தோற்றப்பாடுகள் தொடர்பான பண்புநிலை விளக்கமாக அமையும் ஒருவகை எழுத்தாக்கம் ஆகும். தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றி எழுதுவது இனவரைவியல் எனலாம். ஒரு முறைமையின் பகுதிகளைத் தனித்தனியாக அணுகுவதன் மூலம் அம்முறைமையை அச்சொட்டாகப் புரிந்து கொள்ள முடியாது என்ற எண்ணக் கருத்தின் அடிப்படையில் உருவான ஒரு முழுதளாவிய ஆய்வுமுறையின் விளைவுகளை இனவரைவியல் முன் வைக்கிறது. இனக்குழு பற்றிய முழுமையான ஆய்வு என்பதனால் இதனை இனக்குழுவியல் என்றும் குறிப்பிடலாம்' என எடுத்துக் காட்டியுள்ளது. 'குறிப்பிட்ட இனக்குழுவின் பண்பாட்டை விளக்கும் கலை அல்லது அறிவியலை இனவரைவியல் என்று அழைப்பர்' (அருள்செல்வி, அக்டோபர் 2018, ப.1).

இதன் மூலம் இனவரைவியல் இனக்குழுவியல் என்ற இருசொற்களும் வேறு வேறானவையல்ல என்பது தெளிவாகிறது.

### இனவரைவியல் கூறுகள்

இனவரைவியல் என்பது தனிப்பட்ட மக்கள் கூட்டத்திடமிருந்துப் பெறப்படும் பண்பாட்டுத் தரவுகள் தான் இனவரைவியல் கூறுகள் என்பதற்கேற்ப என்னென்ன கூறுகள் சேகரிக்கப்பட வேண்டும் என்பதை,

*'ஓர் அயற்பண்பாட்டை விளக்க முற்படும் எந்த ஒரு சிறந்த இனவரைவியல் தொகுப்பும் பின்வரும் முதன்மையான கூறுகளைப் பற்றி விளக்குவதாக அமையும். அவை புவிச்சூழலியல்(topography) சுற்றுச்சூழல்(environment) காலநிலை(Climate) குடியிருப்பு முறை(settlement pattern) பொருள்சார் பண்பாடு(material culture) குடும்ப அமைப்பு, திருமணமுறை, உறைவிடமுறை(residence pattern) வாழ்வியல் சடங்குகள், குழந்தை வளர்ப்பு முறை, பண்பாட்டு வயமாக்கமுறை(enculturation) மக்களின் உளவியல் பாங்குகள், மணக்கொடை, மணவிலக்குமுறை, வாழ்க்கைப் பொருளாதாரம்(subsistence) தொழிற்பகுப்பு(division of Labour), உற்பத்திமுறை, நுகர்வுமுறை, பங்கீட்டுமுறை, பரிமாற்ற முறை, கைவினைத் தொழில்கள், அரசியல் முறை, அதிகார உறவுகள், சமூகக் கட்டுப்பாடு, மரபுசார் சட்டங்கள்(cutomary laws), சமய நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டுமுறைகள், மந்திரம், சூனியம், விழாக்கள், இசை, விளையாட்டுகள், அழகியல் சிந்தனைகள், வழக்காறுகள்(Folklore),*

*ஈமச்சடங்குகள், பிற தொடர்புடைய செய்திகள் முதலியன. அவ்வாறு தொகுக்கப்படும் செய்திகள் ஒரு தனிப்பட்ட சமூகத்தைப் பற்றியதாக இருப்பதால் இனவரைவியல் நூல்கள் அனைத்தும் “தனி வரைவுநூல்கள்” (monographs) எனக் கூறப்பெறும்’* (பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், 2009, பக்.118,119)

*‘புவிச்சூழலியல், சுற்றுச்சூழல், காலநிலை, குடியிருப்பு முறை, உறைவிட முறை பொருள்சார் பண்பாடு, குடும்ப அமைப்பு, திருமணமுறை, வாழ்வியல் சடங்குகள், மக்களின் உளவியல் பாங்குகள், குழந்தை வளர்ப்புமுறை, பண்பாட்டு மயமாக்கமுறை, மணக்கொடை, மணவிலக்கு, வாழ்க்கைப் பொருளாதாரம், தொழில் பகுப்புமுறை, உற்பத்திமுறை, நுகர்வுமுறை பங்கீட்டுமுறை, பரிமாற்றமுறை, கைவினைத்தொழில்கள் , அரசியல் முறை, அதிகார உறவுகள், சமூகக் கட்டுப்பாடு, மரபுசார் சட்டங்கள், சமய நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டு முறைகள், மந்திரம், சூனியம், விழாக்கள், இசை, விளையாட்டுக்கள், விழாக்கூறுகள், ஈமச்சடங்குகள் ஆகியவை பற்றிய செய்திகளே இனவரைவியல் கூறுகளாகும்’* (வினோதா, ஜனவரி 2021). என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்து குறிப்பிட்ட இனத்தின் பண்பாட்டுக் கலாச்சாரத்தை முழுமையாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் குறைந்தபட்சம் மேற்காண் கூறுகளாவது கட்டாயமாகத் திரட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகின்றது.

## புதினங்களில் இனவரைவியல் கூறுகள்

புதின இலக்கியங்கள் பொதுவாகச் சமுதாயத்தில் நிலவும் சீர்கேடுகளை எடுத்துக்காட்டுவனவாக அமைகின்றன என்றாலும், சில புதினங்கள் குறிப்பிட்ட இனத்தைப் பற்றிய செய்திகளுடன், அந்த இனத்தவரின் பண்பாட்டை விளக்கும் வரலாற்றுக் கருவூலமாகவும் திகழ்கின்றன. அவ்வகையில் இனவரைவியல் செய்திகள் எவ்வாறு புதின இலக்கியத்தில் பயன்படுத்தப்படுகின்றன என்பதை,

> *‘ஒரு இலக்கியப் படைப்பு சிறந்து விளங்க வேண்டுமானால் அதில் இடம்பெறும் மாந்தர்களும், அம்மாந்தர்களின் பின்புலத்திலுள்ள சகல இயக்கங்களும் உரிய பொருட்களும் மிக நுணுக்கமாகச் சித்திரிக்கப்பட வேண்டும். இதற்கு மிகவும் உறுதுணையாக அமைவது அவ்விலக்கியத்தைப் படைக்கும் படைப்பாளியின் இனவரைவியல் அறிவாகும். இலக்கியத்தில் இடம்பெறும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தைப் பற்றிய இனவரைவியல் செய்திகள் அவ்விலக்கியத்தில் இடம்பெறும் பாத்திரங்களுக்கும், பிரச்சனைகளுக்கும் பொருத்தமான பின்புலத்தை உருவாக்க உதவுகின்றன.*
>
> (சிவசுப்ரமணியன், 2009, ப.12)

என்ற சான்றின்வழி ஓர் இனத்தின் பண்பாட்டை அறிந்து கொள்ள உதவும் இனவரைவியல் செய்திகள் பெரும்பாலும் புதினத்தின் பின்னணியாகவோ பாத்திரங்களின் மூலமாகவோ வெளிப்படும் என்பது புலனாகிறது.

## அலைவாய்க்கரையில் புதினத்தில் இனவரைவியல் கூறுகள்

1978ஆம் ஆண்டில் எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணனால் கன்னியாகுமரி மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளில் மீன்பிடித்தல் தொழில் செய்யும் பரதவர் இனமக்களின் வாழ்வியலை எடுத்துக் காட்டும் விதமாக இப்புதினம் வெளிவந்தது. கன்னியாகுமரியை அடுத்துள்ள திருச்செந்தூர், மணப்பாடு, இடிந்தகரை போன்ற கடற்கரைப் பகுதிகளில் வாழும் பரதவர்கள் கடலில் சென்று பிடிக்கும் மீன்களின் துவிகளைத் தேவாலயங்களுக்கு வரியாகக் கொடுத்து வந்தனர். அந்நிலையில் மீனின் துவிகளை ஏற்றுமதி செய்வதன் மூலம், அதிக விலை பெற்றதால், அதனைக் கோவிலுக்குக் கொடுக்க மறுத்துப் போராட்டம் நடத்தினர். சுருக்கமாக, மதத்தின் பெயரால் பரதவர்களின் உழைப்பானது சுரண்டப்படுவதை எதிர்த்து, அம்மக்கள் போராடும் நிகழ்வை ராஜம் கிருஷ்ணன் இப்புதினத்தின் மையப்பொருளாக அமைத்துள்ளார். மேலும் இனம் சார்ந்த

செய்திகளையும், பண்பாட்டையும் பதிவு செய்துள்ளார்.

### வாழ்நிலைக்கூறுகள்

பூமியில் தோன்றிய ஒவ்வொரு உயிரினமும் இடச்சூழலுக்கும், காலச்சூழலுக்கும் ஏற்பத் தத்தம் வாழ்வினை அமைத்துக் கொள்கின்றன. மனிதனும் அவ்வியற்கை நியதிக்குள் கட்டுண்டு வாழ்கிறான். அவன் தோநதெடுக்கும் வாழ்க்கைச் சூழலுக்கு ஏற்ப அவனுடைய பண்பாடும் அமையும் என்பது சமூகவியலாளா கருத்தாகும். இதனடிப்படையில் பரதவா இனத்தவரின் வாழ்நிலைக் கூறுகள் ஆராயப்படவுள்ளன.

### புவிச்சூழல்

நிலத்தைப் பின்புலமாகக் கொண்டு இலக்கியம் படைக்கப்படும் மரபு பண்டைக்காலம் தொட்டு இன்றைய இலக்கியங்கள் வரை தொடாகின்றன. நாவலைப் பொறுத்தவரை பின்னணி என்ற சொல் பூகோள ரீதியான பின்னணியை அதாவது கதை நிகழும் நாடு, இடம் முதலியவற்றையும் சமுதாய சூழலையும் குறிக்கும் (1997, ப.119) என்று இரா. தண்டாயுதம் குறிப்பிட்டுள்ளார். புவிச்சூழல் என்பது புதினத்தின் கதைக்களமாக அமைந்திருக்கும் மாவட்டம் அல்லது வட்டாரப் பகுதிகளின் புவியியல் பதிவுகளைக் குறிப்பதாக அமைகிறது. ‘கடலின் இடையறாத இலய இசைக்கு ஏற்ப பனைகள் சுருதி கூட்டும் கன்னிபுரக் கடற்கரையில்...’ (அலைவாய்க் கரையில், ப.63) எனக் கடற்கரைச் சூழ்நிலையை ராஜம் கிருஷ்ணன் காட்சிப்படுத்தியுள்ளார்.

### குடியிருப்புமுறை

வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைத்தேடி நாடோடிகளாக அலைந்த மனிதன் காலப்போக்கில் நிலையாக ஓரிடத்தில் குடியேரத் தெடங்கினான். அந்த இடத்தினுடைய வசதி வாய்ப்புகளுக்கேற்ப அவனுடைய வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டான்.

‘மனிதனாகப் பிறந்த அனைவருக்குமே அவாகளின் வசதிகளுக்கேற்ப குடியிருக்க ஓா இடம் அவசியத் தேவையாக உள்ளது என்பதை யாராலும் மறுக்க முடியாது.’ (பவித்ரா, 2013, ப.7)

என்ற சான்றால் தெரிந்து கொள்ள முடிகிறது. கடற்கரைப் பகுதியில் வாழும் பரதவ மக்களின் குடியிருப்புப் பகுதியை,

‘சில வீடுகள் வெறும் கீற்றுக் குடிசைகள், முன்னும் பின்னும் ஒழுங்கில்லாத வரிசைகள்...’

(இராஜம் கிருஷ்ணன், 1978, ப.15)

என்று வாழ்விட அமைப்பை ராஜம் கிருஷ்ணன் எடுத்துக் காட்டியுள்ளார்.

### உணவு

எத்தகுநிலையில் வாழ்வோராயினும் உணவு என்பது இன்றியமையாதனவாகும். மனிதனின் அடிப்படைத் தேவைகளில் முதலாவதாக அமைவது உணவு, பின்பு உடையும், இருப்பிடமும் இடம்பெறுவதைக் கொண்டு உணவின் முக்கியத்துவம் புலனாகிறது.

> ‘ஒரு குறிப்பிட்ட மக்கள் சமூகத்தின் அசைவியக்கங்களை உணர அவாதம் உணவுப் பழக்கவழக்கங்களைக் கூாந்து நோக்க வேண்டும். உணவுப் பழக்க வழக்கங்கள் ஒரு சமூகம் வாழும் பருவச் சூழ்நிலை, வாழ்நிலத்தின் விளைபொருள்கள், சமூகப் படிநிலைகள், உற்பத்தி முறை, பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொருத்து அமையும்.’

(பரமசிவன், 2016, ப.23)

என்ற கூற்றும் சான்று பகாகிறது. கடற்கரைப் பகுதியில் வாழும் பரதவாகளின் உணவுமுறையினை,

> ‘வெள்ளாட்டு இறைச்சி வாங்கி வந்து ஆணம் வைக்கிறாள். பப்படம் பொரிக்கிறாள். பண்டியல் சாப்பாடு போல் உண்டு மகிழ்கின்றனா.’

(இராஜம் கிருஷ்ணன், 1978, ப.126)

என்று பதிவு செய்யப்பட்டுள்ளதன் மூலம் பரதவ மக்கள் தான் வாழும் பகுதிகளில் எளிதாகக் கிடைக்கும் உணவுப் பொருள்களை மக்கள் உண்டு வாழ்கின்றனா என்பது புலனாகிறது.

### தொழில்கள்

மனிதனின் தேவைகளை நிறைவு செய்துகொள்ள பொருள் வேண்டும். பொருளைப் பெற அடிப்படையாக அமைவன தொழில்கள் எனலாம். ஒவ்வொரு மனிதனும் ஏதேனும் ஒரு தொழிலைச் செய்வதன் மூலம் பொருளை ஈட்டுகின்றான். கடலுக்குச் சென்று மீன்பிடித் தொழில் செய்யும் மீனவ மக்களின் வாழ்க்கைப் போராட்டங்களைப் பற்றி இராமஜெயம்,

> *'வாழ்க்கை முழுமையுமே போராட்டம் என்பது மீனவ இனத்துக்கு மட்டுமே பொருந்தும். மற்ற எந்த இனத்துக்கும் இத்தகைய போராட்டமே வாழ்க்கை என்ற நிலை இல்லை. அவ்வாறு இருக்கவும் வாய்ப்பில்லை. கட்டுமரத்துடன் போராட்டம் (மற்ற எந்த வகை மீன் கலனாக இருந்தாலும் கூட போராட்டம்தான்), வலையுடன் போராட்டம், காற்றுடன் போராட்டம், கடல் நீரோட்டத்துடன் போராட்டம், வெய்யிலுடன் போராட்டம், மழையுடன் போராட்டம், புயலுடன் போராட்டம், மீன்களுடன் போராட்டம், இத்தனை போராட்டங்களையும் கடந்து கரைக்குத் திரும்புவதுதான் மீனவர்கள் வாழ்க்கை.'*
>
> (இராமஜெயம், 2002, ப.45)

என்று குறிப்பிட்டிருப்பதன் மூலம் மீன்பிடிக்கும் தொழில் செய்யும் பரதவர்களின் வாழ்க்கைச் சிக்கலை அறிந்து கொள்ள முடிகிறது. கடலில் மட்டும்தான் போராட்டம் என்றில்லை. கரைக்கு வந்ததுமே மதத்தின் பெயரால் சுரண்டப்படுவதை,

> *'கிறிஸ்தவம் மாதாண்ணும் யேசுவேன்னும் செல்லுதோம். இத்துண்ணா முருகாண்ணுவா? அதுக்காவ துவி, கோயிலுக்குச் சொந்தமிண்ணு சொல்றது நாயமா?.'*
>
> (இராஜம் கிருஷ்ணன், 1978, ப.75)

என்று தொழிலால் பரதவர் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்துப் பதிவு செய்துள்ளார்.

### மொழி

ஓர் இனத்தைக் கண்டறியவும், அதன் வரலாற்றை அறியவும் இன்றியமையாத கருவியாக மொழி அமைகின்றது. தான் சார்ந்த நிலப்பகுதியைப் பிரதிபலிப்பது மொழி எனலாம். மொழி குறித்து,

> *'ஒரு நாட்டு மக்களின் நாகரிக நிலையைக் காட்டுவது அவரவர் தாய்மொழியே. எந்நாட்டிலும் மொழி பொதுமக்களின் அமைப்பென்றும் அறிதல் வேண்டும்.'*
>
> (தேவநேயப் பாவணார், 1966, ப.19)

என்று குறிப்பிட்டுள்ளார்.

> *'மக்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதில் மொழியும் முதலிடம் பெறுகிறது. தாங்கள் சார்ந்து வாழும் வட்டாரம் தங்கள் பண்பாட்டின் தனித்த கூறுகள், வழிபாட்டு முறை, வழக்காறுகள், கலைகள் என பல கூறுகள் தனித்த அடையாளங்களாக இருப்பினும் மொழிவழி அடையாளமே முக்கிய அடையாளமாக அமைகிறது'*
>
> (ஆன்றிஷா, சனவரி 2023)

பரதவ மக்கள் பேசும் தமிழ்மொழியில் மொழிச்சிதைவு காணப்படுவதை,

> *'லே என்னியலே நாஸ்திகம் பேசுதே? நாக்கழுவிப் போசுரும்லே! ஊரில, கடக்கரயில, கோயிலை எதிர்த்து இல்லாத நாயம் கோண்டு வாரானுவ, நாய்க்கிப் பொறந்த பயலுவ...'*
>
> (இராஜம் கிருஷ்ணன், 1978, ப.79)

என்ற வரிகள் உணர்த்துகின்றன.

### திருமணமுறை

குடும்பம் என்ற கோப்பை ஏற்படுத்துவதற்கு மூலகாரணமாக விளங்குவது திருமணம் எனலாம். மனித இனம் தன் பால் உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்துகொள்ள ஏற்படுத்திக்கொண்ட முறையை திருமணம் என்பர். இதனை,

> *'திருமணம் என்பது ஓர் ஆடவனும், ஒரு பெண்ணும் இணைந்து வாழ்வதற்கு*

*சமுதாயத்தால் ஏற்படுத்தப்பட்ட வினைமுறையாகும். இவ்வினை காரணமாக மனிதன் சில மதிப்புகளையும் பொறுப்புகளையும் ஏற்க வேண்டியுள்ளது.'*

(வாழ்வியற் களஞ்சியம், தொகுதி.2, ப.430)

என்று வரையறுக்கப்பட்டுள்ள திருமணம் பல விதிகளின் படியே நடைபெறுகின்றன.

அலைவாய்க்கரையில் புதினத்தில் பெற்றோர் பார்த்து மணமுடித்தல், உடன்போக்கு, மசவாதி கெட்டு முதலிய மணமுறைகளைக் காணமுடிகின்றது. உடன்போக்கு என்பது பெற்றோர் சம்மதம் இல்லாமல் செய்துகொள்ளும் திருமணம் ஆகும். மசவாதி கெட்டுமுறை என்பது முறை மீறிய திருமணம். அதாவது ஏற்கனவே திருமணமாகிக் கணவன் இறந்தபின் பரத்தையாக வாழும் ஏலி என்ற பெண்ணிடம் மரியான்,

*'நானும் பாவஞ் செய்தேண்ணு எம்மேல கோவிச்சுக்கிறியா ஏலி?... நீ கவலிக்காத, நிச்சயமா நாம கெட்டிக்கத்தாம் பொறம். ஒரு விடியக் காலயில, மஸனாவிக் கெட்டா, நா ஒனக்குத் தாலி கெட்டுவே...'*

(இராஜம் கிருஷ்ணன், 1978, ப.173)

என்று கூறுவதிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

### பரதவா் பழக்கவழக்கங்கள்

மனிதன் எப்போது கூட்டமாக வாழ்வதென முடிவெடுத்து வாழத்தொடங்கினானோ அன்றே இனக்குழு வாழ்க்கை ஆரம்பமாயிற்று. இனக்குழுக்கள் தங்களுக்கென தனிப்பட்ட வாழ்கை முறையை வகுத்து வாழக் கற்றுக்கொண்டன. இவ்விதமாக வாழ்வில் ஓா இனக்குழுவில் கடைபிடிக்கப்பட்ட வாழ்க்கை நெறிகள் மற்றக்குழு முறையை ஈா்க்கும் பொழுது அவாக் மேற்கொண்ட செயல்கள் வழக்கமாகவும், தொடா்ந்து செய்ததன் காரணமாக அப்பழக்கங்களே காலப்போக்கில் வழக்கமாகவும் மாறின எனலாம். தமிழா பண்பாடும் பயன்பாடும் என்ற நூலில்,

*'சூழ்நிலைக்கு ஏற்ப தனிமனிதனிடம் வோ்விடுகின்ற செயல்பாடுகளே பழக்கம் எனப்படும். பழக்கம் என்பதற்கு இணையான ஆங்கிலச் சொல் Habit. பல தனிமனிதா்களின் பழக்கங்கள் ஒரு குழுவின், இனத்தின் சமுதாயத்தின் தொடா் பழக்கங்களாக வளா்ந்து மரமாக முற்படும் பொழுது அது வழக்கம் என்ற நிலைக்கு உயா்கிறது. இதனை ஆங்கிலத்தில் Costom என்பா்.'*

(பாக்யமேரி, 2006, ப.95)

எனக் குறிப்பிட்டுள்ளதன் வழி தனிமனிதனிடம் தோன்றுகின்ற பண்புகளில் ஒன்று பழக்கம் எனவும், அப்பழக்கத்தை வளா்தெடுத்து நிலைபெறச் செய்தல் வழக்கம் எனவும் தெளிவாகிறது. சமுதாயத்தில் ஒவ்வொரு சமூகத்தினரும் தனித்தனியான குணநலன்களைக் கொண்டு விளக்குகின்றனா். அவ்வகையில் கடற்கரைப் பகுதியில் வாழும் பரதவ மக்கள் மிகுந்த கோபத்துடனும், முரட்டு குணத்துடனும் இருப்பா். எனினும் அவா்களிடம் பிறரை ஏய்துப் பிழைக்கும் வழக்கம் இல்லையென்பதை,

*'கடற்கரையில் அவ்வாறு கூட்டுத்தொழில் செய்பவா்கள் ஒருவரை ஒருவா் ஏமாற்றிக் கொள்ள மாட்டார்கள். கொடுக்க மாட்டேன் என்று கள்ளுக்குக் காசு எடுத்துக் கொண்டாலும், அதற்காக அழுத்துக் கொண்டாலும், தெரியாமல் மோசம் செய்யும் வழக்கம் அவா்களில் இல்லை.'*

(இராஜம் கிருஷ்ணன், 1978, ப.38)

என இராஜம் கிருஷ்ணன் சுட்டியுள்ளார். அதன்மூலம் பரதவா் பண்புநலன்களை அறியமுடிகின்றது. அதே சமயம் இம்மக்களிடம் கட்டுப்பாடான வாழ்க்கை முறையைக் காணமுடியாது. திருமணத்திற்கு முன்னும், பின்னும் ஆண் பெண்ணையும், பெண் ஆணையும் தேடிச் செல்லும் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டுள்ளதை,

*'இந்த கடற்கரையில் எச்சியாகாத பரவன்- அல்லது பரவத்தி இருப்பார்களோ என்று மனசுக்குள் கேட்டுக் கொள்கிறான்.'*

(இராஜம் கிருஷ்ணன், 1978, ப.38)

*எனக் கதாமாந்தர்களின் கூற்றாகவே காட்சிப்படுத்துகிறார்.*

## தெய்வ வழிபாடு

பரதவர்கள் கிறித்தவர்களாக இருப்பதால் இயேசுபிரானை வழிபடுகின்றனர். தமிழகத்தின் தென் பகுதியில் வாழும் பரதவர்களில் எண்பது சதவீதத்தினருக்கும் மேலானோர் கிறத்தவ மதம் சார்ந்தவர்களாக உள்ளனர். ஆனால் ஏறக்குறைய நானூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்துதான் பரதவ இன மக்கள் அனைவரும் இந்து மதத்தைப் பின்பற்றுபவர்களாக இருந்துள்ளதைப் பல்வேறு இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின்னரே காலச்சூழலாலும், பல்வேறு அரசியல் காரணங்களாலும் ஒட்டுமொத்த பரதவ இனமும் கிறத்தவ மதத்திற்கு மாறியுள்ளன. இது குறித்து இராஜம் கிருஷ்ணன்,

> *'பதினாறாம் நுற்றாண்டின் தொடக்கமாகிய அக்காலத்தில், பாண்டிய நாட்டின் தென்பகுதி முகமதியர் படையெடுப்பின் காரணமாக ஆட்டங்கண்டு சிறு சிறு குறுநில மன்னர்களின் ஆட்சியில் பிளவுபட்டுக் கிடந்தது. கடல் ஆதிக்கம் குறித்து தமிழ்நாட்டு வாணிபத்திலும் அரசியலிலும் செல்வாக்குப் பெற்று வந்த முகமதியர்களுக்கும் பாண்டியப் பேரரசு வீழ்ந்த பின் தம் செல்வாக்கை இழந்த பரதவருக்கும் இடையே வேறுபாடுகளும் பகைமையும் தோன்றின. இந்நிலை முற்றி, பூசல்களும் தகராறுகளும் வன்முறையில் கொண்டு வந்து விட்டன. போர்த்துக்கீசியரிடம் பரதவர் உதவி கோரும் சந்தர்ப்பமும் வாய்த்தது. கிறித்தவ சமயத்தைப் பரப்ப வந்திருந்த போர்த்துக்கீசியர் இவ்வாய்ப்பைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். மெல்ல மெல்ல கோவாப் பிரதேசத்துடன், தெற்கேக் கிழக்குக் கடலோரப் பகுதிகளில் வாழ்ந்த பரதவ மக்கள் அனைவரையும் கிறித்தவ மறை தழுவச் செய்தனர். இவ்வாறு சமயம் மாறியவர் பெயரளவில் கத்தோலிக்கராக இருந்தாலும் நடைமுறையில் இந்துக்களாகவே இருந்திருக்கின்றனர். கி.பி.1542 ஆம் ஆண்டு புனித சவரியார், யேசு சபைக் குருவாக, பரதகுல மக்களிடையே பணியாற்றி வந்த பின்னரே இவர்கள் முறையாகக் கிறித்தவ சமயத்தனராக வாழத் தலைப்பட்டனர்.' (1978, ப.4)*

எனக் குறிப்பிடுகிறார். மதமாற்றம் செய்யப்பெற்ற பரதவர்களின் நிலையை,

> *'இன்றும் கடற்கரையைச் சார்ந்த பரதவர்கள் கிராமங்களில், கோயில்களில் தேர்- திருவிழாக்கள் போன்ற பண்டிகைகள், மணச்சடங்குகளில் இடம் பெற்றிருக்கும் சில பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை உற்று நோக்கினால், இந்தியப் பண்பின் வேர் நிலைத்திருக்க, சமயம் மட்டுமே மாற்றம் பெற்றிருப்பதை உணரலாம். கோயிலில் நேர்த்திகடன் கொடுப்பதிலிருந்து மொட்டையடித்துக் காது குத்துவது வரையிலும், கிறிஸ்தவ சமயம் இந்தியம் தழுவி இருப்பது கண்டு வியப்புத் தோன்றுகிறது.'*
>
> (ஜோசப் அந்தோணி ஜாண், 2003, ப.5)

என்று விளக்கியுள்ளார். மொட்டையடித்தல், காதுகுத்துதல், நேர்த்திக்கடன், திருவிழா போன்ற பழக்கவழக்கங்களிலும், நம்பிக்கைகளிலும் எவ்வித மாற்றமும் பரதவர்களிடம் உண்டாகவில்லை என்பதையும் ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

## முடிவுரை

மனிதனுடைய பண்பாடானது அடிப்படையில் நிலவியல் சார்ந்தது. நிலத்தில் ஏற்படுகின்ற அவனுடைய வாழ்வியல் சார்ந்த பழக்கவழக்கங்களே காலப்போக்கில் பண்பாடாகப் பரிணமிக்கின்றன. நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியுடைய மக்கள் வாழ்வில், காலத்திற்கேற்பப் பண்பாடானது மாறி வருகிறது என்பதை இனவரைவியல் கூறுகளை ஆராய்வதன் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் பரதவர் வாழ்வானது போராட்டம் நிறைந்ததாகவும், பல்வேறு சுரண்டல்களுக்கு ஆட்பட்டதாகவும் அமைந்துள்ளது. இதற்கு அவர்களின் வாழிடச்சூழல், ஒற்றுமையின்மை

கல்வி வளர்ச்சியின்மை, மதத்தின் பெயரால் சுரண்டப்படுதல் போன்றவை காரணமாகின்றன. பரதவர்கள் கிறித்தவ மதத்திற்கு மதம் மாறினாலும், அவர்களின் முன்னோர்களால் கடைபிடிக்கப்பட்ட பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் போன்றவற்றில் பெரும்பாலும் மாற்றங்கள் ஏற்படாமல் இன்றுவரை தொடர்ந்து பின்பற்றி வருகின்றன என்பதை இனவரைவியல் கூறுகளின் வழி அறியமுடிகின்றன.

## References


Aantisha, M. (2023). Paliyar Ethnography in the Works of Ko. Ma. Gothandam. *Journal of Tamil Language and Literary Studies, 5*(2).

Adaikalaraj, A. Jo. D. (2022). Kurus Padaippukalil Neithal Nilathin Sirappukal. *ValanAayam, 1*(1).

Āṉṟiṣā, Ma. Ko. (٢٠٢٣). Mā.Kōtaṇṭam Paṭaippukaḷil Paḷiyar Iṉavaraiviyal. *5*(2). [ஆன்றிஷா, ம. கொ. (2023). மா.கோதண்டம் படைப்புகளில் பளியர் இனவரைவியல். 5(2).]

Aruḷcelvi, Ca. (2018). Kītāri Putiṉattil Iṭaiyarkaḷiṉ Iṉavaraiviyal Pativukaḷ. Cāṉlāks Paṉṉāṭṭut Tamiḻiyal Āyvitaḻ, 2(2). [அருள்செல்வி, ச. (2018). கீதாரி புதினத்தில் இடையர்களின் இனவரைவியல் பதிவுகள். சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், 2(2).]

Arulselvi, S. (2018). Keethari Puthinathil Idaiyarkalin Inavaraiviyal Pathivukal. *International Journal of Tamil Research, 2*(2).

Aṭaikkalarāj, Ā. Jō. Ṭi. (2022). Kurus Paṭaippukaḷil Neytal Nilattiṉ Ciṟappukaḷ. *Valaṉāyam*, *1*(1). [அடைக்கலராஜ், ஆ. ஜோ. டி. (2022). குருஸ் படைப்புகளில் நெய்தல் நிலத்தின் சிறப்புகள். வளன்ஆயம், 1(1).]

Bhakiyamerry, F. (2006). *Thamizhar Panpadum Payanpadum*. Chennai: Anjanasimizh Pathippakam.

Bhakthavatchala Bharathi. (1966). *Panpattu Manudaviyal*. Chidambaram: Meiyyappan Pathippakam.

Civacuppiramaṇiyaṉ, Ā. (2009). *Iṉavaraiviyalum tamiḻ nāvalum*. Parical veḷiyīṭu. [சிவசுப்பிரமணியன், ஆ. (2009). இனவரைவியலும் தமிழ் நாவலும். பரிசல் வெளியீடு.]

Denzin & Norman, K. (1997). *Interpretive Ethnography, Ethnographic practices for the 21st century*. New Delhi: Sage Publications.

Dhandayutham, Ra. (1997). *Novel Valam* (2nd ed.). New Delhi: Tamil Puthakalayam.

Gracy Janova A. (2023). Ethnography from Purananuru's Perspective. *International Research Journal of Tamil, 4*(26).

Irāmajeyam, Mā. (٢٠٠٢). *Mīṉavar varalāṟum vāḻkkaiyum*. Maṇimoḻi patippakam: Putuccēri. [இராமஜெயம், மா. (2002). மீனவர் வரலாறும் வாழ்க்கையும். புதுச்சேரி: மணிமொழி பதிப்பகம்.]

Jōcap Antōṇi Jāṇ. (2003). Teṉ Tamiḻakattil Kattōlikkam. Tirunelvēli: Celvi Patippakam. [ஜோசப் அந்தோணி ஜாண். (2003). தென் தமிழகத்தில் கத்தோலிக்கம். திருநெல்வேலி: செல்வி பதிப்பகம்.]

Joshep Antony John. (2003). *Then Thamizhakathil Katholikkam*. Thirunelveli: Selvi Pathippakam.

Kirēci Jāṉōvā, A. (2022). Puṟanāṉūṟṟiṉ Pārvaiyil Iṉavaraiviyal. *Tamiḻ Carvatēca Ārāycci Itaḻ, 4*(S-26). [கிரேசி ஜானோவா, அ. (2022). புறநானூற்றின் பார்வையில் இனவரைவியல். தமிழ் சர்வதேச ஆராய்ச்சி இதழ், 4(S-26).]

Paktavatcala Pārati. (2009). *Paṇpāṭṭu Māṉiṭaviyal*. Citamparam: Meyyappaṉ Patippakam. [பக்தவத்சல பாரதி. (2009). பண்பாட்டு மானிடவியல். சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.]

Pākyamēri, Eḥp. (2006). *Tamiḻar Paṇpāṭum Payaṉpāṭum*. Ceṉṉai: Añcaṉaccimiḻp Patippakam. [பாக்யமேரி,

எஃப். (2006). தமிழர் பண்பாடும் பயன்பாடும். சென்னை: அஞ்சனச்சிமிழ்ப் பதிப்பகம்.]

Paramacivan̲, To. (2010). *Ariyappaṭāta Tamil̲akam*. Nākarkōyil: Kālaccuvaṭu Patippakam. [பரமசிவன், தொ. (2010). அரியப்படாத தமிழகம். நாகர்கோயில்: காலச்சுவடு பதிப்பகம்.]

Paramasivam, T. (2013). *Ariyapadatha Thamizhakam*. Nagarkoil: Kalachuvadu Pathippakam.

Pavithra, V.R. (2013). *Pulaiyar Vazhviyal Sadangumuraikal*. Chennai: Kavya Veliyidu.

Pavitrā, Vi. Rā. (2013). *Pulaiyarin̲ Vāl̲viyal Caṭaṅkumur̲aikaḷ*. Cen̲n̲ai: Kāvyā Veḷiyīṭu. [பவித்ரா, வி. ரா. (2013). புலையரின் வாழ்வியல் சடங்குமுறைகள். சென்னை: காவ்யா வெளியீடு.]

Rājamkiruṣṇan̲. (1978). Alaivāykkaraiyil…. Cen̲n̲ai: Tākam Patippakam. [ராஜம்கிருஷ்ணன். (1978). அலைவாய்க்கரையில்…. சென்னை: தாகம் பதிப்பகம்.]

Rajamkrishnan. (1978). *Alaivaikaraiyil*. Chennai: Thagam Pathippakam.

Ramajayam, M. (2002). *Meenavar Varalarum Vazhkkaium*. Puducherry: Manimozhi Pathippakam.

Sivasubramaniyan, A. (2009). *Inavaraiviyalum Tamil Navalum*. Chennai: Parisal Viyeedu.

Taṇṭāyutam. Irā. (1997). *Nāval vaḷam*. Cen̲n̲ai: Tamil̲ puttakālayam. [தண்டாயுதம். இரா. (1997). நாவல் வளம். சென்னை: தமிழ் புத்தகாலயம்.]

Ṭen̲cin̲. Nārman̲, Kē. (1997). In̲tarpiriṭiv Etn̲ōkirāpi. Cēj Papḷikēsan̲. [டென்சின். நார்மன், கே. (1997). இன்டர்பிரிடிவ் எத்னோகிராபி. சேஜ் பப்ளிகேஸன்.]

Tēvanēyap Pāvaṇār, Ñā. (1966). *Paṇṭait tamil̲ nākarikamum paṇpāṭum*. Cen̲n̲ai: Kīl̲aiyiyal Āyvu, Tamil̲ Maṇ Patippakam. [தேவநேயப் பாவணார், ஞா. (1966). பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும். சென்னை: கீழையியல் ஆய்வு, தமிழ் மண் பதிப்பகம்.]

Thevaneya Pavanar, Gna. (1966). *Pandai Thamizh Nagarikamum Thamizh Panpadum: Keelaiyiyal Aaivu*. Chennai: Thamizh Man Pathippakam.

*Vāl̲viyal Kaḷañciyam: Tokuti 2*. Tañcāvūr: Tamil̲ppalkalaik Kal̲akam. [வாழ்வியல் களஞ்சியம்: தொகுதி 2. தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக் கழகம்.]

*Vazhviyal Kalanjium* (2nd ed.). Thanjavur: Tamil University.

Vin̲ōtā, Cu. (2021). Paṇpāṭṭu Mān̲iṭaviyal Pārvaiyil Pon̲n̲īlan̲ Paṭaippukaḷ. Āyvuccuṭar Pan̲n̲āṭṭu Pan̲mukat Tamil̲ Min̲ Āyvital̲, *4*(1). [வினோதா, சு. (2021). பண்பாட்டு மானிடவியல் பார்வையில் பொன்னீலன் படைப்புகள். ஆய்வுச்சுடர் பன்னாட்டு பன்முகத் தமிழ் மின் ஆய்விதழ், 4(1).]

Vinotha, S. (2021). Panpattu Manidaviyal Parvaiyil Ponneelan Padaippukal. *Aaivusudar Pannattu Panmu Thamizh Ejournal*.

# நாலடியார் பாடல்களில் தமிழ் மருத்துவம்

## Tamil Medicine in Naladiyar

**பிரேமளா விஜயன்** / Premella Vijaihian[1]
**இரா. சீதாலட்சுமி இராதாகிருஷ்ணன்** / R.Seeta Lechumi Ratha Krishnan[2]

Date of submission: 2024-11-18
Date of acceptance: 2024-12-01
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name:
Premella Vijaihian
Email: p_premella@yahoo.com

**Abstract**

In the changing human living environment, medicine has become an important aspect. Although human beings are progressing gradually, physical health continues to pose many challenges to human beings. In general, irregular eating habits and an undisciplined lifestyle are the reasons for deterioration of physical health. Although modern medicine provides solutions for diseases that arise from time to time, there is no doubt that following the right way of life as prescribed by ancient medicine helps one to lead a healthy life throughout their lifetime. In this regard, the medical treatment practices followed by people in their daily life during various periods can be known through the study of literature that emerged during those times. Tamil literature also contains many medical references necessary for the people. The *Patinenkilkkanakku* texts are the compilations made during the Sangam period. The *Patinenkilkkanakku* texts are generally texts that preach moral values. However, many verses contain references to ancient medicine. This article aims to study the medical-related practices found in the three texts called Naladiyar - among the *Patinenkilkkanakku* Texts. The ancient Tamils gave great importance to maintaining a healthy physical lifestyle in their daily life. They inculcated good conduct and discipline in people's minds and thereby enabled them to lead a disease-free life. By reading the Naladiyar, we can understand that they made people lead a life free from diseases through inculcating good conduct and discipline. We can appreciate the greatness of these texts as they reveal medical thoughts that are relevant even for today's people.

**Keywords:** Modern Literature, Ethnography elements, Ethnic life, People's culture

### ஆய்வு அறிமுகம்

நோய்களைப் பற்றியும் நோய் தீர்க்கும் முறைகள் பற்றியும் தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நன்றாக உணர்ந்திருந்தனர் என்பதற்குத் தமிழ் இலக்கியங்களும், அக்கால கல்வெட்டுகளும் சான்று பகிர்கின்றன (சாமி சிதம்பரனார், 1986, ப.52). குறிப்பாகத் தொல்காப்பியம், சங்கக் கால இலக்கியங்கள்,

[1] The author is a Ph.D candidates in the Department of Indian Studies, Universiti Malaya, Malaysia. p_premella@yahoo.com

[2] The author is a senior lecturer in the Department of Indian Studies, Universiti Malaya, Kuala Lumpur, Malaysia. rseeta@um.edu.my

சங்கம் மருவியக் கால இலக்கியங்கள் கற்கும் போது தமிழர்களின் பண்டைய மருத்துவக் குறிப்புகள் பல காண முடிகின்றன. சங்கம் மருவிய கால நூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என்று அழைக்கப்படுகின்றன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான நாலடியார் பாடல்கள் பொதுவாக அறத்தைக் கூறும் பாடல்களாக அமைந்தாலும் மருத்துவம் தொடர்பான பல குறிப்புகள் இந்நூலின் பாடல்களில் காண முடிகின்றன. இந்த மருத்துவக் குறிப்புகள் மக்கள் நோயின்றி ஆரோக்கியமான வாழ்வு வாழ பேருதவியாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. நாலடியார் பாடல்களில் காட்டப்படும் மருத்துவக் கூறுகளான நோய், பிணி, நோய்களுக்கான காரணங்கள் அவற்றைத் தடுக்கும் வழிமுறைகள் போன்றவை இக்கட்டுரையில் ஆய்வுச் செய்யப்படுகிறது.

## ஆய்வு நோக்கம்

இவ்வாய்வின் நோக்கம் நாலடியார் நூல்களில் காணப்படும் மருத்துவக் கூறுகளை ஆய்வுச் செய்வது மட்டுமின்றி இவ்வகைச் சிந்தனைகள் மக்களுக்கு எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை ஆய்வுச் செய்வதாகும். இதன்வழி, பாரம்பரிய தமிழ் மருத்துவங்கள் மக்கள் உடல் ஆரோக்கியத்துடன் நீண்ட நாள் வாழ உறுதுணையாக இருப்பதை உறுதிப்படுத்தலாம்.

## ஆய்வு முறைமை

இவ்வாய்வானது தரப்பகுப்பாய்வு முறையில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறையும் கையாளப்பட்டது. ஆய்வுக்குத் தொடர்பான மருத்துவப் புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வேடுகள் ஆழ்ந்து ஆராயப்பட்டுக் குறிப்புகள் சேகரிக்கப்பட்டன. நாலடியார் நூலில் 400 பாடல்களைக் கொண்டுள்ளன. இவ்வனைத்துப் பாடல்களும் இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## தமிழ் மருத்துவம் அறிமுகம்

பன்னெடுங்காலமாக பழந்தமிழர்களால் வழக்கத்தில் கையாளப்பட்ட தமிழ் மருத்துவம் அல்லது கை மருத்துவத்தைச் 'சித்த மருத்துவம்' என்றும் குறிப்பிடுவர் (நாராயணசாமி, 1975, ப.4). பல சித்தர்களால் செம்மைப்படுத்தப்பட்டு வளர்க்கப்பட்டதுதான் தமிழ் மருத்துவம். தமிழ் மருத்துவம், 'மொகென்ஜொ டரோ' மற்றும் 'ஹராப்பா' நாகரீகத்தில் திராவிடர்களால் தென் இந்தியாவிற்கு 2500 ஆண்டுகளுக்கு முன் கொண்டு வரப்பட்டதாகக் ஆய்வுகள் மூலமாகவும், சங்க இலக்கிய சான்றுகள் மூலமாகவும் அறியமுடிகிறது (ஜோசப்டாஸ், ஜெ., 1996, ப.95). சித்தர்களின் ஞானத்தால் சிறப்படைந்த தமிழ் மருத்துவம் சைவ சித்தாந்தத்தின் அடிப்படையானது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர் (கந்தசாமி பிள்ளை, ந., 1979, ப.95). சித்த மருத்துவம் தமிழ் மண்ணில் தோன்றிய மிகவும் தொன்மையான மருத்துவமுறை என்பது மட்டுமின்றி சித்தர்களின் பாடல்களையே மூலமாகவும், தமிழில் மட்டும் மூல நூல்களைக் கொண்டு வளர்ந்ததாகவும் காணமுடிகிறது (கந்தசாமி பிள்ளை, 1979, ப.95). நந்தி, அகத்தியர், திருமூலர், புலிப்பாணி, போகர், காளாங்கி, கமலமுனி, கோராக்கர், பாம்பாட்டிச் சித்தர், ராமதேவர், மச்சமுனி, அழகண்ணர், புண்ணாக் கீசர், சட்டை நாதர், கருவூரார், குதம்பை சித்தர், தேரையர், சுந்தரானந்தர், இடைக்காடர் ஆகிய பதினெட்டு சித்தர்கள் தவிர இன்னும் இதர சித்தர்களும் சித்த மருத்துவத்தை வளர்த்தனர் என்று ஆய்வுகள் காட்டுகின்றன (கோமதி நாயகன், 2008, ப.7). பதினெட்டு சித்தர்களுள் அகத்தியர், திருமூலர், போகர் ஆகியோர் முக்கியமானவர்கள் ஆகும்.

இயற்கை பொருள்களான மண், கல், உப்பு, தாவரங்களின் வேர், பட்டை, பூ, இலை, காய், கனி, விதைகள் போன்றவற்றைக் கொண்டே சித்த மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. இவ்வாறு இயற்கை மருத்துவமான சித்த மருத்துவம் ஐம்பூதங்களை அடிப்படையாகக் கொண்டது (பசுமலையரசு, 1979, ப.16). 'அண்டத்தில் உள்ளதே பிண்டம், பிண்டத்தில் உள்ளதே அண்டம்' என்பது சித்த மருத்துவக் கோட்பாடாகும். அதாவது, உலகத்தை ஆளும் ஐந்து பஞ்சபூதங்களான மண், நெருப்பு, நீர், காற்று, ஆகாயம் மனித உடலிலும் காணப்படுகின்றன. இதனை, வாதம், பித்தம்,

கபம் என்று சித்த மருத்துவம் கூறுகிறது. இம்மூன்றின் அடிப்படையில்தான் சித்த மருத்துவமும் செயல்படுகிறது. வாதம், பித்தம், கபம் ஆகியவற்றை 'முக்குற்றம்' என்றே திருக்குறள் பகர்கின்றது. வாதம், பித்தம், கபம் ஆகிய இம்மூன்றில் ஏதேனும் அதிகமானாலும் குறைந்தாலும் நோய்கள் உண்டாகும் என்று பின்வரும் திருக்குறள் கருத்துரைக்கிறது.

*'மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்*

*வளிமுதலா எண்ணிய மூன்று'* (குறள். 941)

திருக்குறளின் இக்கருத்தானது சித்த மருத்துவத்தோடு ஒப்புமைக்கொள்ள முடிகிறது. ஆக, சித்த மருத்துவத்தின் துள்ளியமான அறிவியல் சிந்தனையே தமிழ் மருத்துவத்தைச் சிறப்படையச் செய்கிறது எனலாம். தமிழ் மருத்துவத்தின் சிறப்பினைத் தமிழ் இலக்கியங்கள் மூலமாக கற்றுத் தெளியலாம் என்பதற்குச் சான்றாக இவ்வாய்வு செய்யப்படுகிறது.

### நாலடியார் நூலின் அறிமுகம்

நாலடியார் பாடல்கள் அனைத்தும் வெண்பாக்களால் ஆனது. இந்த வெண்பாக்கள் நான்கு அடிகளால் அமைந்ததால் இந்நூலுக்கு 'நாலடி' என்றும்; இந்நூலின் சிறப்பு கருதி 'ஆர்' விகுதி சேர்ந்து நாலடியார் எனவும் குறிப்பிடப்படுகிறது (மாணிக்கவாசகம், 2014, ப.4). மேலும், நாலடியாரில் நானூறு பாக்கள் உள்ளதால் 'நாலடி நானூறு' எனவும் வழங்கப்படுகிறது (மாணிக்கவாசகம், 2014, ப.4). நாலாடியார், திருக்குறள் போன்று முப்பால் நூலாக அமைந்துள்ளது. அறத்துப்பால் பதிமூன்று, பொருட்பால் இருபத்து நான்கு, காமத்துப்பால் மூன்று எனும் முப்பிரிவும் நாற்பது அதிகாரங்களும் கொண்டது. சமண முனிவர்களால் பாடப்பெற்ற பாடல்களைக் கொண்டு தொகுக்கப்பட்ட நூல் நாலடியார் என்ற கூற்றிற்கு நச்சினார்க்கினியரின் சீவகசிந்தாமணி உரையில் சான்று உள்ளது என குறிப்புகள் காட்டுகின்றன (ராஜாராம் துரை, 1993, ப.82). நாலடியார் நூல் எழுந்த விபரங்களை இலக்கிய வரலாற்றில் காணலாம். தங்கள் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டதால், எண்ணாயிரம் சமண முனிவர்களும் பாண்டிய நாட்டில் தஞ்சம் புகுந்த போது, பாண்டிய மன்னன் அவர்களுக்கு அடைக்கலம் தந்தான். பஞ்சம் தீர்ந்தவுடன் புலவர்கள் தத்தம் ஊர்களுக்குச் செல்வதை ஏற்காத மன்னன் அவர்களைத் தடுத்து நிறுத்தினான். மன்னனுக்குத் தெரியாமல் அவர்கள் ஆளுக்கொரு பாட்டாக எண்ணாயிரம் பாடல்களை எழுதி விட்டு ஊருக்குப் புறப்பட்டுச் சென்று விட்டனர். இதனால் வருத்தமடைந்த பாண்டிய மன்னன் அப்பாடல்கள் அனைத்தையும் வையையில் எறியுமாறு வேண்ட, அவ்வாறு செய்தப்பின், அவற்றில் நானூறு பாடல்கள் எதிரேறிக் கரையில் ஒதுங்கின. அதிர்ச்சிக்கு உள்ளான மன்னன், புலவர்கள் எழுதிய பாடல்களின் சிறப்பை உணர்ந்து, அவற்றை ஒரு நூல் தொகுப்பாக அமைத்தான் என்று இலக்கிய வரலாறு குறிப்பிடுகிறது. இந்நூலுக்குக் கடவுள் வாழ்த்து அமைத்து, இயல் வகுத்துத் தொகுத்தளித்தவர் பதுமனார் என்னும் புலவர் என்பர் (மாணிக்கவாசகம், 2014, ப.4). நாலடியார் பாடல்களில் அதிக வடச்சொற்களைக் காணலாம். 'முத்தரையர்' என்ற அரசப் பரம்பரைப் பற்றி பாடல்கள் 200-லும், 296-லும் குறிப்பு வருவதால் நாலடியார் நூலின் காலத்தைக் கொண்டு கால ஆராய்ச்சி செய்து, இந்நூல் 7-ஆம் நூற்றாண்டையது என்று இலக்கிய வரலாறு குறிப்பிடுகிறது (ராஜாராம் துரை, 1993, ப.132).

நாலடியார், திருக்குறளோடு இணைந்து பேசப்படும் பெருமை உடையது. *'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி'; 'பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்'* என்னும் அடிகள் இதன் பெருமையைக் காட்டுகின்றன. பரிமேலழகர், நச்சர், அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர் பலரால் இந்நூலுக்கு உரை எழுதப்பட்டுள்ளது. மேலும், திருக்குறளுக்கு நிகராக போப்பையரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது நாலடியாரின் பெருமையை மேலும் சிறப்பிக்கிறது. நாலடியாருக்கு நாலடி நானூறு, வேளாண்வேதம் என்ற வேறு பெயர்களும் உண்டு (மாணிக்கவாசகம், 2014, ப.5).

### நாலடியார் பாடல்களில் 'நோய்' சொல்லாட்சி

தமிழ் அகராதி, 'நோய்' என்ற சொல்லுக்குத் துன்பம், வருத்தம், வியாதி, குற்றம், அச்சம், துக்கம், நோவு என்று பொருள் தருகிறது (கழக தமிழ் அகராதி, 1956, ப.235). 'நோய்' என்பதன் அர்த்தத்தை மேலும் தெளிவுப்படுத்திய செம்மொழி அகராதி, அதற்குத் தளர்ச்சி, மெலிவு, துன்பம், வருத்தம், வியாதி, குற்றம், அச்சம், துக்கம், நோவு என்று பல பொருள்களைத் தருகிறது (கந்தையா, 2009, ப.267). பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியப் பாடல்கள், 'நோய்' என்பதற்கு வருத்தம், துன்பநிலை, மனவருத்தம் என்ற பொருள்களில் அமைந்துள்ளன. 'நோய்' அல்லது 'துன்பம்' பிறரால் காண இயலாதப் பொருட்களுள் ஒன்று என்றும் அத்துடன் நோயென்பது எல்லா இடங்களிலும் இருப்பது என்றும் தொல்காப்பியரின் பின்வரும் பாடல் விளக்குகிறது.

*'நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்கு*

*ஆவயின் வரூஉங் கிளவி எல்லாம்*

*நாட்டியல் மரபின் நெஞ்சுகொளின் அல்லது*

*காட்ட லாகப் பொருள் என்ப' (தொல்.:பொருள்:51)*

இப்பாடல் வழி மனிதனுடைய உடலையும் உள்ளத்தையும் தாக்குவதே நோய் என்னும், அடிப்படை கருத்தை அறியமுடிகிறது.

'நோய்' என்ற சொல் இலக்கியங்களில் பல சூழல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, 'நோய்' 'பிணி' என்ற சொற்கள் பரவலாகத் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. நாலடியார் பாடல்களை ஆயும் பொழுது 'நோய்' என்ற சொல்லும் 'பிணி' என்ற சொல்லும் பல பாடல் வரிகளில் வெவ்வேறு சூழல்களில் விளக்கப்பட்டுள்ளன என்பது புலனாகுகிறது. நாலடியார் பாடல்களில், 'நோய்' என்ற சொல் பல இடங்களில் மனிதனின் துன்பமான சூழலை விளக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளதை ஆய்வின் மூலம் அறியலாம். ஒருவருக்கு நோய் வருவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. நோய் ஒருவருக்கு எவ்விதத்திலும் வந்து சேரும் என்பதனை நாலடியார் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது.

*'நிழலும் நீரும் கூடப் பிணியைத் தோற்றுவிக்கும்' (நாலடி.17)*

என்ற நாலடியார் பாடல், ஒருவருக்கு அவருடைய நிழலும், அவரைச் சார்ந்திருக்கும் நீரும் கூட நோய் வரக் காரணமாக அமைந்து விடுவதாகத் தெரிவிக்கிறது. தொடர்ந்து, துன்பத்தை 'நோய்' என்று கூறும் வகையில் சில நாலடியார் பாடல்கள் அமைந்திருப்பதையும் காணலாம். அப்பாடல்கள் கீழ்வருமாறு அமைந்துள்ளன.

*'தெரியத் தெரியுந் தெரிவிலா தாரைப்*

*பிரியப் பிரியுமாம் நோய்' (247)*

*'உரையாமை முன்னுணரும் ஒண்மை யுடையார்க்கு*

*உரையாரோ தாமுற்ற நோய்' (292)*

*'இனியார்தம் நெஞ்சத்து நோயுரைப்ப அந்நோய்*

*தணியாத உள்ளம் உடையார்' (369)*

மேற்கண்ட நாலடியார் பாடல் வரிகளில் காணப்படும் 'நோய்' என்ற சொல், ஒருவரின் துன்பத்தை வெளிக்காட்டுவனவாக அமைந்துள்ளதைக் காணலாம். மற்றொரு நாலடியார் பாடல்,

*'நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித்*

*தலையாயார் தங்கருமம் செய்வார் – தொலைவில்லாச்*

*சத்தமும் சோதிடமும் என்றாங் கிவைபிதற்றும்*

*பித்தரின் பேதையார் இல்' (பாடல் 52)*

என்று வருகிறது. இப்பாடல் வரிகளில் வரும் நோய் என்னும் சொல் பிணி, மூப்பு (முதுமை), சாக்காடு (இறப்பு) போன்றவை மனித உடலில் நிலையாக உள்ள கூறுகளாக அமைந்திருக்கின்றன என்பதனைக் குறிக்கின்றன. நோய், முதுமை,

சாக்காடு ஆகியவை ஒருவருக்குத் துன்பத்தையே தரும் என்பது இதன் மூலம் அறியலாம்.

அடுத்து ஒரு பாடலில், கற்பவர்கள் பல வியாதிகளுக்கு ஆளாகின்றனர்

என்பதனைக்,

*'கற்பவர் நாள்சில; மெல்ல நினைக்கின் பிணிபல'*

*(நாலடியார் 135)*

எனக் கூறப்படுகிறது. 'பிணி' என்று இங்கு குறிப்பிடுவது கற்றவர் மனதில் எழும் பல வித எண்ணங்கள் என்று விளக்கம் தரப்படுகிறது. கற்றவர்கள் அன்னம் போல் நல்லது கெட்டது எனப் பிரித்து நல்லவற்றை மட்டும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று இப்பாடல் உணர்த்துகின்றது. ஆக, இங்கு 'பிணி' என்ற சொல் ஒருவரிடத்தில் எழும் தீய எண்ணங்களைக் குறிக்கிறது எனலாம். ஒருவரின் தீய எண்ணங்கள் அவரைத் துன்பத்தில் ஆழ்த்திவிடும் என்பதால் 'பிணி' என்கிற சொல் இங்கு கையாளப்பட்டுள்ளது எனலாம்.

மேலும், அதிகாலையில் எழுந்து கணவனுக்கு உகந்த உணவைச் சமைத்து

பரிமாரத் தவறிய மனைவியின் செயல் கணவனுக்குச் சினத்தை மூட்டுவதால் அதுவே அவனுக்குப் பிணியாகவும் மாறுகிறது என்கிறது நாலடியாரின் அடுத்த பாடல்.

'சிறுகாலை அட்டில் புகாதாள் அரும்பிணி' *(நாலடியார், 363)*

அதாவது, நல்ல மனையாள் என்பவள் கணவனுக்குத் தேவையானவற்றை உகந்த நேரத்தில் செய்து வந்தால் இல்லறம் செழிப்பாக இருக்கும் என்ற மறைமுகக் கருத்து இப்பாடல் மூலம் உணர்த்தப்படுகிறது.

## நாலடியார் பாடல்கள் வெளிகாட்டும் நோய்களுக்கான காரணங்கள்

தமிழ் மருத்துவம், ஒருவருக்கு ஏற்படும் நோய்களுக்கான காரணத்தை அறிவியல் சிந்தனையோடு கூறியிருப்பது தமிழர்களின் அறிவு முதிர்ச்சியை வெளிகாட்டுகின்றது எனலாம். முறையற்ற உணவு முறை, வாழ்க்கை முறை நோய்களுக்கு முக்கியக்காரணமாக இருந்தாலும் ஒருவரின் மனதைச் சீர்குலையச் செய்யும் அதிக சினம், ஆசை, காமம், போன்ற கூறுகளும்தான் நோய்களுக்கு மூலமாக அமைகின்றன என்பதனைத் தமிழ் மருத்துவம் கூறுகின்றது. இது ஒருவகை மனநோயாக வகைப்படுத்துகிறது தமிழ் மருத்துவம். ஆத்திரம், பயம், கவலை போன்ற மனித இயல்புகள் இரத்த அழுத்தம், இருதய நோய்களை உருவாக்குகிறது என்று நவீன மருத்துவமும் உறுதிசெய்கின்றது. ஆதலால்தான், திருக்குறள் போன்ற தமிழ் இலக்கியங்கள் சினம் கொள்வதை முற்றிலும் தவிர்க்க வேண்டும் என அறிவுரைக் கூறுகின்றன. நாலடியார் பாடல்களிலும் இக்கருத்தினைக் காணலாம். திருக்குறள் போன்று நாலடியாரும் தமது 'சினமின்மை' என்னும் பகுதியின் கீழ் அதிக சினம் கொள்வதால் துன்பமே ஏற்படும் என்பதனைச் சுட்டிக்காட்டியுள்ளது. நாலடியாரின், 'காயும் கதமின்மை நன்று' (பாடல் 61) என்ற பாடல் வரி இதற்குச் சான்றாக அமைகிறது. இங்கு, 'கதம்' என்றால் சினம் என்று பொருள் படும். கடும்படியான கோபம் இல்லாதிருப்பது நன்று என்பது இப்பாடல் வரியின் பொருளாகும்.

மேலும், அதிக காமம், ஆசை இவை யாவும் தீங்கையே வரவழைக்கும்

என்பதால் நாலடியார் பாடல்கள் இவற்றை முற்றாக அழித்து விட வேண்டும் என்று அறிவுறுத்துகின்றன. அதிக காமம் ஒரு நோய் என்று கூறுகிறது நாலடியார். அதாவது,

*'சொல்தளர்ந்து கோல்ஊன்றிச் சோர்ந்த நடையினராய்ப்*

*பல்கழன்று பண்டம் பழிகாறும் – இல்செறிந்து*

*காம நெறிபடருங் கண்ணினார்க் கில்லையே*

*ஏம நெறிபடரு மாறு'*

*(நாலடியார் பா. 13)*

என்ற பாடல் வரிகள், பேச்சின் வலி குறைந்து, கையில் கோல் ஊன்றித் தள்ளாடிய

நடையை உடையவராய், பற்கள் உதிர்ந்து, இவ்வுடல் பழிக்கப்படுமளவும் மனைவியோடு பற்றுக்கொண்டிருந்து காமவழியில் செல்லும் சிற்றறிவுடையருக்கு மெய்யின்ப வழியில் செல்லும் வகையில்லை என்பதனைப் புலப்படுத்துகின்றன. சிற்றின்பம் என்றென்றும் உண்மையான மனமகிழ்வைத் தாராது என்பது இப்பாடல் மூலம் புலனாகிறது. இதே கருத்தினை நாலடியார் தமது பாடல் 60-லும் புலப்படுத்துகிறது. தொடர்ந்து, மனிதன் மன உணர்வுகளுக்கு அதிக இடம் கொடுக்காமல் ஐம்புலன்களையும் அடக்கி ஆள வேண்டும் என வழியிறுத்துகிறது நாலடியார்.

*'மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற*

*ஐவாய வேட்கை அவாவினைக்-கைவாய்*

*கலங்காமற் காத்துய்க்கும் ஆற்ற லுடையான்*

*விலங்காது வீடு பெறும்'*

*(நாலடியார் பா.59)*

என்ற நாலடியார் பாடல், ஆசைகளை அடக்குபவனே இறைவனடி சேர்வர் என்கின்றது. ஐம்புலன்களை ஒழுக்கநெறியில் செலுத்துதல் நன்று என்கின்ற கூற்றானது தமிழ் மருத்துவத்தை ஒத்த இருக்கிறது. ஐம்புலன்களை அடக்கத் தவறியவர் வாழ்க்கை கெட்டழியும் என்பது சித்தர்களின் கருத்தாகவும் இருக்கிறது. ஐம்புலன்களை அடக்கியாள தெரியாதவன் பல உடல் கேடுகளுக்கு ஆளாகிறான் என்பதனைச் சித்த மருத்துவம் கூறுகிறது. நோய்களிலிருந்து விடுபடவே ஒருவன் ஐம்புலன் அடக்கத்தை மேற்கொள்ள வேண்டும் என்கிற அறக்கருத்தை நாலடியார் பாடல் உணர்த்துகிறது எனலாம்.

அடுத்து, மனித உடல் நோய்வாய்ப்படுவதற்கு அவரவர் எடுத்துக்கொள்ளும் உணவே முதற்காரணமாக உள்ளது என்று மருத்துவ ஆராய்ச்சிகள் கூறுகின்றன (இரத்தினவேலனார், 2001, ப.14). புலால், கள் போன்ற உணவுகளை உட்கொள்வதால் மனித உடலில் நோய்கள் ஏற்படுகின்றது. அதிகளவு புலால் உண்பதும் கள் குடிப்பதும் மனித உடலுக்கு ஒவ்வாத ஒரு நிலையாக மாறுகிறது; உடலில் கொழுப்புகள் அதிகமாகிறது; அதுவே பல நோய்களுக்குக் காரணமாகும் விளங்குகிறது. ஆதலால்தான், மருத்துவர்கள் அதிக புலால் உண்பதையும் கள் குடிப்பதையும் தடுக்கின்றனர். தமிழ் இலக்கியங்கள் புலால் உணவை மறுத்தலைப் பற்றி பரவலாகப் பேசியுள்ளன. நாலடியார் பாடல் ஒன்று,

*'அக்கேபோல் அங்கை யொழிய விரலழுகித்*

*துக்கத் தொழுநோய் எழுபவே - அக்கால்*

*அலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற*

*பழவினை வந்தடைந்தக் கால்'*

*(நாலடியார் பா.123)*

என்று வருகிறது. அதாவது, முற்பிறவியில் நண்டை ஒடித்து தின்றவர் கடுந்துயர் கொடுக்கும் நோயான குட்ட நோய்க்கு ஆளாவர் என்று புலால் உண்பதைக் கண்டித்து கூறுகிறது இப்பாடல். இதன் வழி, நாலடியார் புலால் உணவைத் தவிர்க்க வேண்டும் என்றக் கருத்தினைக் கூறுகிறது.

### முடிவுரை

இதுகாறும், நாலடியார் பாடல்களில் இடம்பெற்றுள்ள தமிழ் மருத்துவம்

சார்ந்த பதிவுகளை இவ்வாய்வில் அடையாளம் காட்டப்பட்டுள்ளன. இவ்வாய்வு செய்தப்பின், நாலடியாரின் நூற்சிறப்பினை நன்கு விளங்கிக் கொள்ள ஏதுவாக அமைகிறது. கட்டுப்பாடுகளை மக்கள் மனதில் விதைத்து அதன் மூலமாக அறவொழுக்கத்தையும் நோயில்ல வாழ்வையும் பெறுவதற்கு நாலடியார் பாடல்கள் பெரிதும் உதவியாக இருக்கின்றன. நாலடியார் பாடல்கள் அற பாடல்கள் என்பதைத் தவிர அவை யாவும் மக்கள் நலனுடன் வாழ ஒரு சிறந்த மருத்துவக் குறிப்புகளை அடக்கியுள்ளதைக் காணலாம். மக்கள் நலமுடன் வாழ பாரம்பரிய மருத்துவம் சிறந்த ஒரு வழிகாட்டியாக அமைந்திருப்பதில் எவ்வித ஐயபாடுமில்லை.

**References**

Josephdass, J. (1996). *Siddha Maruththuva Aivu Kovai Vol.1*. Chennai.

Kanthaya, N.C. (1974). *Kazhaga Tamizh Agarathi*. Chennai: Kazhaga Veliyeedu, Southindia Saiva Siddhantha.

Kanthaya, N.C. (2009). *Senthamizh Agarathi*. Chennai: Ulaga Tamizharaichi Niruvanam.

Kanthasamy, N. (1995). *Tamizh Bakhti Ilakkiyam*. Kuala Lumpur: Thirumagal Publication.

Kandaswamy Pillai, N. (1979). *History Of Siddha Medicine*. Chennai: Directorate Of Indian Medicine.

Komathy Nayagan, I. (2008). *Siddharkal Kattum Vazhviyal Kalvi*. Chennai: Santha Patippagam.

Manickavasagam, Nya. (2014). *Naaladiyar (Moolamum Uraiyum)*. Chennai: Uma Patippagam.

Narayansami, V. (1975). *Introduction To The Siddha System Of Medicine.* T.Nagar: Anandam Research Institute Of Siddha Medicine.

Pasumalaiyarasu, M. (2006). *Senthamilum Siddha Maruthuvamum*, Chennai: Geethai Patippagam.

Rajaram Durai. (1993). *Patinenkilkkanakku (Moolamum Uraiyum)*. Chennai: Mullai Nilayam.

Rajenthiran, P. (2009). *Ariviyalum Tamizhum*. Tanjavoore: University Of Tamil.

Ratthinavelanar (2001). *Siddha Maruthuvak Kural Nul*. Chennai: Rasalakkumi Patippagam.

Sithambaranar Samy (1986). *Pattinenkilkanukku Tamilar Vazhvu*. Chennai: Ilakkiya Nilayam.

Subramaniam, S.V. (2012), *Patinenkilkanakku Nulkal (Moolamum Uraiyum)*. Chennai: Manickavasagar Patippagam.

Vengadesan, K. (1998). *Tamil Ilakkiyaththil Siddha Maruthuvam*. Chennai: Sri Sakti Patippagam.

Vasanda Kumar Nadarajah, Silllalee S.Kandasamy, Ravindaran Maraya. (2013). Malaysiavil Siddha Maruththu*vam. Journal Of Tamil Peraivu, 12*, 95-103.

# திருப்பாவையில் காணப்படும் திருமாலின் திருப்பெயர்கள்

## The Deity Names of Tirumāl in Tiruppāvai

**சந்துரு முத்தையா** / Chandru Muthiah[1]
**சி அருளா சித்திரை** / S Arulla Sitiray[2]

**Abstract**

The purpose of this study for examines the various deity names of the Perumal found in the Thirupavai composed by Andal, one of the twelve Alvars. The literature review system is dealt with in this study which deals with the qualitative strategy. Primarily manipulated texts, textbooks, dissertations, and dissertations on the original text of the Four Thousand Divine Prabhupada. This study finds that Lord Andal called Lord Vishnu's by different names in his hymns in Tirupavai and divides it into 5 parts. This review examines the purpose and factor behind the song 'Thirumalini Andal Bhakti' sung under different names. It has been found and compared that other Alvars in their psalms used the same name for the same reason as Thirupavai in the same way as Andal Thirumal's name in Thirupavai.

Date of submission: 2024-09-112
Date of acceptance: 2024-10-23
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name: Chandru Muthiah
Email: chandruchan@yahoo.com

**Keywords:** Thirupavai, Alvars, Andal, Thirumal, Deity names

### முன்னுரை

இந்து சமயம் உலக சமயங்களில் மிகவும் பழமையான சமயமாகும். இந்து சமயத்தைத் 'சனதான தருமம்' என்று கூறுவர். இதற்கு தொடக்கம் இல்லாமல் தொடரும் கொள்கை என்று பொருள்படும் (Devarajan, 2002)1. மேலும், வேதத்தை அடிப்படையாகக் கொண்டதால் வேத சமயம் என்றும் வைதீக சமயம் என்றழைப்பதும் உண்டு. சைவ சமயத்திற்குப் பிறகு சிறப்பாகத் திகழ்வது வைணவ சமயமாகும். வைணவம் விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயமாகும். 'விஷ்ணு' என்றால் எங்கும் பரவி நிற்பவன் எனப் பொருள்படும். விஷ்ணுவை வணங்கும் மார்க்கம் வைணவ நெறி. வைணவ நெறிக்கு 'திருமால் நெறி' 'திருமாலியம்' என்ற வேறு பெயர்களும் உண்டு (Kannan, 1994).

வைணவ சமயத்தைத் தழைத்தோங்கச் செய்தவர்கள் பன்னிரு ஆழ்வார்கள். இவர்கள் திருமாலைப் போற்றி பல பாசுரங்களைப் பாடியுள்ளனர். இப்பாசுரங்களைப் தொகுத்த ஆசாரியர்கள் இதற்கு 'நாலயிரத் திவ்விய பிரபந்தம்' என்று பெயரிட்டுள்ளனர். நாலாயிரம் பாசுரங்களைக் கொண்டிருப்பதால் நாலியிரத் திவ்வியப் பிரபந்தம் என்ற பெயர்பெற்றது.

[1]The author is a research candidate in the Sultan Idris Education University, Tanjong Malim, Perak, Malaysia. chandruchan@yahoo.com

[2]The author is a teacher in Linggi National School, Port Dickson, Negeri Sembilan, Malaysia. arulla_1006@yahoo.com

அதோடு, ஆழ்வார்களின் பிரபந்தங்கள் தெய்வத்தைப் பற்றி விளக்குவதால் இதனை 'திவ்ய பிரபந்தங்கள்' என்ற சிறப்பான பெயரைக் கொண்டும் அழைக்கின்றனர். 'ஆறாயிரப்படி', 'குருபரம்பரை', 'கலியனருள்பாடு' மற்றும் 'கோயிலொழுகு' போன்ற நூல்களில் திவ்வியப் பிரபந்தம் என்று பெயர் காணப்படுகிறது (Sinivasan, 2001)3. இப்பாடல்கள் நாதமுனிகள் நான்கு தொகுதிகளாக்கி, ஒவ்வொரு தொகுதியிலும் ஆயிரம் பாசுரங்கள் முறைப்படுத்தியுள்ளார். அவற்றுள் முதலாயிரத்தில் மொத்தம் பத்து பிரபந்தங்களில் ஒன்றானது திருப்பாவை ஆகும் (Sujatha,2000)4.

ஆழ்வார்கள் பன்னிருவரில் ஒரே பெண்ணானவர் ஆண்டாள். ஆண்டாளுக்குச் சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் பெயர் உண்டு. இவர் கி.பி எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். ஆண்டாள் அருளிய பாமலைகளுள் திருப்பாவை திருமாலின் புகழ் பாடும் ஓர் எளிய மற்றும் எளிதில் பொருள் விளங்கக்கூடிய நூலகவும் அமைந்துள்ளது எனலாம். இத்திருப்பாவையைத் திருமாலின் மேல் பக்தி கொண்டு மார்கழி நோன்பு நோற்கப் ஆண்டாளால் பாடப்பட்டது.

தொடர்ந்து, திருப்பாவைக்கு அறிஞர்கள் கூறும் பொருள் யாது எனக் காண்போம். (Devarajan, 2002)1 'திரு' என்ற சொல்லுக்குத் தெய்வத்தன்மை மற்றும் 'பாவை' என்ற சொல்லுக்கு காத்யாயனி எனும் தேவிக்குச் செய்யப்படும் வழிபாடு முறை என்கிறார். (Balasubrmaniam, 1994)5 அவர்கள் 'திரு' என்னும் சொல்லுக்கு இலக்குமி, செல்வம் மற்றும் மேன்மை என்றும் 'பாவை' க்குப் பதுமை என்று பொருளிடுவதைக் காண இயலுகிறது.

## 2.0 ஆய்வின் நோக்கம்:

1. திருப்பாவையில் திருமாலின் திருப்பெயர்களை அடையாளம் கண்டு பகுத்தல்.

2. திருப்பாவையில் திருமாலின் திருப்பெயர்களின் காரணிகளைக் கண்டறிதல்.

3. திருப்பாவையில் ஆண்டாள் கருதும் திருமாலின் பெயர்களை மற்ற ஆழ்வார்கள் கூறும் பெயருடன் ஒப்பிடுதல்.

## 3.0 ஆய்வின் அணுகுமுறை

இவ்வாய்வு நூலக ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டது ஆகும். திருப்பாவை இலக்கிய வடிவமைப்பு பெற்றுள்ளதால் ஆய்வாளர் பண்புசார் அணுகுமுறையினைப் பயன்படுத்தியுள்ளார். பண்புசார் அணுகுமுறை மூலம் ஆய்வாளர் திருப்பாவையில் காணப்படும் திருப்பெயர்களை ஆய்வு செய்ய ஏதுவாக அமைந்துள்ளது. ஆய்வின் வினாவிற்கு விடையளிக்க ஆய்வாளர் ஆண்டாளின் திருப்பாவை உட்பட மற்ற ஆழ்வார்களின் படைப்பான திருமாலை, முதல் திருவந்தாதி, இரண்டாந் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி, நான்முகன் திருவந்தாதி, திருச்சந்தவிருத்தி ஆகிய நூல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவாய்வில் 1952 ஆம் ஆண்டில் அண்ணங்கராசாரியார் திருப்பாவை எனும் நூலையும் மற்றும் கமலகண்ணன், 2001 ஆம் ஆண்டில் இயற்றிய நாலாயிரத் திவ்விய பிரபந்தம் மூலமும் விளக்கமும் எனும் நூலினை முதன்மையாகக் கொண்டு அதனுள் காணப்பட்ட ஆழ்வார்களின் பாசுரங்களை ஆய்வு செய்து வடிவமைகப்பட்டது ஆகும்.

## 4.0 முன்னைய ஆய்வுகள்

(Soundara, 1978) தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக சார்பில் வெளியீடு கண்ட, பத்தாவது இலக்கிய கருத்தரங்கு ஆய்வுக் கோவையில் 'திருப்பாவை' என்ற கட்டுரையை எழுதியுள்ளார். உலகம் வாழ, பொதுநல நோக்கோடு சமுதாயச் சீர்கேடுகளைத் துணிவோடு எதிர்த்து ஒழிக்க, பெண்மை எழுச்சி பெற ஒரு விரதமாகத் திருப்பாவையைக் ஏற்க வேண்டும் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

வாழ்க்கையின் குறிக்கோளனது இறைவனுடன் இரண்டறக் கலத்தலாகும். இவ்வகையில் (Tharmika, 2016)7 இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆண்டாள் பாடல்கள் மற்றும் கிறிஸ்துவ இனிமைமிகு பாடல்களில் காணப்படும் அனுபூதிகருத்துகளை ஆராய்ந்து

ஒற்றுமை மற்றும் வேற்றுமையை ஆராய்ந்துள்ளார். (Periyasamy, 2020) ஆழ்வார்களின் பக்தியை மாட்டிலும் ஆண்டாளின் பக்திநெறி காதல் உணர்வாக வெளிப்பட்டுள்ளதை விவரிக்கின்றார். புறத்தூய்மையுடனும், அகத்தூய்மையுடனும் ஒழுங்கு நெறியைக் கடைபிடித்து, அதிலிருந்து வழுவாமல் வாழசெய்கிறது திருப்பாவை என்கிறார். உயரிய கொள்கையும், பொதுநலநோக்கும் கொண்ட பக்திநெறி வாழ்வியலை எங்கணம் எடுத்துரைத்துள்ளது என்பதனை ஆண்டாளின் பசுரங்கள் வழி ஆய்வு செய்துள்ளார்.

### 5.0 ஆய்வின் வரையறை

ஆண்டாள் பாடிய திருப்பாவை வைணவ கடவுளான திருமால் மீது பக்திபால் உருவெடுத்த சமய நூலாகும். திருப்பாவை நூலனது பாவையின் நோம்பு, ஆண்டாள் புரிந்த யாகம், தோழிமார்களைத் துயல் எழுப்புதல், நோம்பிற்கு தகுந்தது தகாதது எனப் பல கூறுகளைக் கொண்டிருந்தாலும், இவ்வாய்வனாது திருப்பாவையில் ஆண்டாள் கையாண்டா திருமாலின் திருப்பெயர்கள் மட்டுமே காரண காரணிகளுடன் ஆராயப்பட்டுள்ளன. ஆண்டாள் பாடிய பாடல்களில் காணப்படும் திருமாலின் திருப்பெயர்கள் திருமாலை, முதல் திருவந்தாதி, இரண்டாந் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி, நான்முகன் திருவந்தாதி, திருச்சந்தவிருத்தி ஆகிய நூல்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 6.0 ஆய்வில் கண்டறியப்பட்டது

திருப்பெயர் அல்லது திருநாமம் என்பது வைணவ சமயத்தைச் சார்ந்தவர்களுக்கு இன்றியமையாத ஒன்றாகும். வைணவர்கள் திருமாலின் 12 நாமத்தைக் கூறி உடலில் 12 இடங்களில் திருமண் காப்பு அணிவார்கள். அவர்கள் அவ்வாறு அணியும் போது இறையருள் மேலோங்கிறது, உடல் தூய்மையடைகிறது எனவும் கருதுவதுண்டு. அத்தகைய உறுப்புகள் நெற்றி, வயிறு, மார்பு, கழுத்து, வயிற்றின் இடப்பக்கம், இடது புஜம், இடத்தோள், முதுகு மற்றும் பிடரி ஆகும் (Jayasree Mugambikai, 2001).

திருப்பாவையில் திருமாலின் பெயர்களின் பகுப்பினை ஐந்தாகப் பிரிக்க இயலும். அவையானது:




படம் 1: திருப்பாவையில் திருமாலின் பெயர்களின் பகுப்பு முறை

திருப்பாவையில் ஆண்டாள் பெருமாலின் திருநாமத்தைக் குறிப்பிட்டதுபோல மற்ற ஆழ்வார்களும் தமது பாடல்களில் ஆண்டாள் குறிப்பிட்ட திருநாமத்தைக் குறிபிட்டுள்ளனர். கீழ்க்காணும் அட்டவணை ஆண்டாளின் குறிப்பிட்ட திருமாலின் திருநாமங்கள் மற்ற ஆழ்வார்களுடன் ஒத்திருப்பதைக் குறிக்கிறது.

அட்டவணை 1:

**ஆண்டாள் மற்றும் மற்ற ஆழ்வார்கள் குறிப்பிட்ட திருமாலின் திருநாம ஒற்றுமை.**

| திருமாலின் பெயர் பகுப்பு | திருநாமங்கள் | பாசுரம் | ஆழ்வார்கள் |
|---|---|---|---|
| தோற்ற அடிப்படையிலான பெயர்கள் | கார்மேணியன் மெய்கருத்து முகில்வண்ணன் | திருப்பாவை | ஆண்டாள் |
| • திருமாலின் கரு நிறத் தோல் | காரொளி வண்ணன், காமர்சீர்முகில்வண்ணன் | திருமாலை | தொண்டிராடிப் பொடியாழ்வார் |
| | கருமேனியுடையம்மான் | பெரிய திருமொழி | திருமங்கையாழ்வார் |
| | முகில்வண்ணன் | இரண்டாந் திருவந்தாதி | பூதத்தாழ்வார் |

| | | | |
|---|---|---|---|
| • வெள்ளை நீல மேனி | பாலன்ன வண்ணன்<br>மணிவண்ணன்<br>பூவைப்பு வண்ணன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | மணிவண்ணன் | பெரிய திருமொழி | குலசேகராழ்வார் |
| • கண்கள் | செங்கன்<br>பங்கயக்கண்ணன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | செங்கன்மால் | திருமாலை | தொண்டராடிப் பொடியாழ்வார் |
| | | முதல் திருவந்தாதி | பொய்கையாழ்வார் |
| | பங்கயக்கண்ணன் | திருவாய்மொழி | நம்மாழ்வார் |
| • கைகள் | தடக்கையன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | | பெரிய திருமொழி | திருமங்கையாழ்வார் |
| • தோள் | மால்வரைத் தோள் | திருப்பாவை | ஆண்டாள் |
| | மல்லணைந்தவரைதோள் | பெரிய திருமொழி | குலசேகராழ்வார் |
| பண்புக்குரிய பெயர்கள் | உத்தமன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | | இரண்டாந் திருவந்தாதி | பூதத்தாழ்வார் |
| | | திருச்சந்தவிருத்தி | திருமழிசையாழ்வார் |
| | தாமோதிரன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | புண்ணியன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | | பெரிய திருமொழி | குலசேகராழ்வார் |
| | | முதல் திருவந்தாதி | பொய்கையாழ்வார் |
| | வல்லான் | திருப்பாவை | ஆண்டாள் |
| | வல்லளான் | முதல் திருவந்தாதி | பொய்கையாழ்வார் |
| | செல்வா | திருப்பாவை | ஆண்டாள் |
| | செல்வமல்கு சீரன் | திருச்சந்தவிருத்தி | திருமழிசையாழ்வார் |
| | செல்வன் | மூன்றாந் திருவந்தாதி | பேயாழ்வார் |
| அருட்செயல்களைக் காட்டும் பெயர்கள் | நாரயணன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | | பெரிய திருமொழி | குலசேகராழ்வார் |
| | நாரண் | இரண்டாந் திருவந்தாதி | பூதத்தாழ்வார் |
| | பரமன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | | பெரிய திருமொழி | குலசேகராழ்வார் |
| | | திருவாய்மொழி | நம்மாழ்வார் |
| | மாயன்/மாமயன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | மாயன் | திருச்சந்தவிருத்தி | திருமழிசையாழ்வார் |
| | புள்ளரையன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | கேசவன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | கேசன் | திருச்சந்தவிருத்தி | திருமழிசையாழ்வார் |
| இளப் பருவ பெயர்கள் | குமரன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | | திருச்சந்தவிருத்தி | திருமழிசையாழ்வார் |
| | மகன் | மூன்றாந் திருவந்தாதி | பேயாழ்வார் |
| | | இரண்டாந் திருவந்தாதி | பூதத்தாழ்வார் |
| | இளஞ்சிங்கம் | திருப்பாவை | ஆண்டாள் |
| பொதுப் பெயர்கள் | தேவாதி தேவன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | | இரண்டாந் திருவந்தாதி | பூதத்தாழ்வார் |
| | தேவ தேவன் | திருச்சந்தவிருத்தி | திருமழிசையாழ்வார் |
| | மாதவன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | | இரண்டாந் திருவந்தாதி | பூதத்தாழ்வார் |
| | | முதல் திருவந்தாதி | பொய்கையாழ்வார் |
| | வைகுந்தன் | திருப்பாவை | ஆண்டாள் |
| | | திருவாய்மொழி | நம்மாழ்வார் |

திருமாலின் நிறம், உடல் உறுப்பு போன்ற தோற்றத்தைக் குறிக்கும் பெயர்களைத் திருப்பாவையின் வழி காண இயலுகின்றது. ஆகையால், திருமாலின் தோற்றத்திற்கு ஏற்ப பெயர்கள் அமையப் பெற்றுள்ளதைத் திருப்பாவையில் காணலாம். திருமாலின் நிறம் கருப்பாகும். இது தாபங்களைத் தீர்க்கும் வண்ணமாக அமைகின்றது. எனவே, ஆண்டாள் திருமாலை கார் மேணியன், மெய்கருத்து, முகில் வண்ணன் என்ற பெயர்களில் அழைக்கின்றாள். இவ்வகையில் ஆண்டாளைப் போலவே தொண்டிராடிப் பொடியாழ்வார் திருமாலையில்,

*"காரொளி வண்ணனே கண்ணனே"* (29:3)

என்று பாடியுள்ளதைக் காண இயலுகிறது. இன்னும், திருமொழியில் திருமங்கையாழ்வார், "கருமேனியுடையம்மான்" (111.10.73),

*"கருமுகில்போல் திகழ்வண்ண காமருசீர்முகில்வண்ணன்"* (111.10.8:2)

என்று குறிப்பிட்டுள்ளார். அதுபோல, பூதத்தாழ்வார் இரண்டாந் திருவந்தாதியில்,

*"முற்றும்விழங்கும் முகில்வண்ணன்"* (94:1) எனக் குறிப்பிடுகிறார்.

அடுத்து, திருமால் வெள்ளையும் நீலமும் கொண்ட திருமேனியாக அமைந்திருக்கின்றான் என்று ஆண்டாள் கருதுகின்றாள். அதில் வெண்மையானது விரோதிகளுக்கெனவும் நீலம் நல்லவர்களுக்கான குளிர்ச்சி தருபவை எனக் கருதப்படுகிறது. இதனால், திருமால் 'பாலன்ன வண்ணன்', 'மணிவண்ணன்', 'பூவைப்பூ வண்ணன்' (23:5) என்றும் அழைக்கப்படுகிறார். ஆண்டாளைப் போலவே திருமங்கையாழ்வார்,

*"முன்னை வண்ணம் பாலின் வண்ணம் முழுதும்"* (IV.9.8.1)

என்று பெரிய திருமொழியில் குறிப்பிட்டுள்ளார். குலசேகராழ்வாரும் பெருமாள் திருமொழியில்,

*"மணிவண்ண னம்மானைக் கண்டுகொண்டு என்"* (1.5.7)

எனவும், பூதத்தாழ்வார் இரண்டாந் திருவந்தாதியில்,

*"மாமறை யோர்க்கீந்த மணிவண்ணன் பாதமே"* (11.4.3)

எனவும் மணிவண்ணன் என்ற பெயரைச் சுட்டியுள்ளார். தொடர்ந்து, திருமாலின் கண்கள் செந்தாமரை போல் ஒத்திருப்பதால், சிவந்து இருப்பதால் இறைவனை 'செங்கன்' (1:6;22:5;30.7) என ஆண்டாள் அழைக்கின்றாள். ஆண்டாளைப் போல தொண்டராடிப் பொடியாழ்வார் திருமாலையில்,

*"சிக்கெனச் செங்கன்மாலே"* (35:2)

எனவும், பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதியில்,

"கருமேனிச் செங்கன்மால் நாமம்: (69.1)

எனவும் குறிப்பிடுகிறார். தொடர்ந்து, ஆண்டாள் பெருமாலை 'பங்கயக்கண்ணன்' (14:8) என்று அழைப்பதுபோல நம்மாழ்வார்,

*"பயிலும் சுடரொளி மூர்த்தியைப் பங்கயக்கண்ணனை"*

(111.7:1)

எனத் திருவாய்மொழியில் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்து, ஆண்டாள் திருமாலை 'ஆழிமழைக்கண்ணன்' (4:1) என்று அழைப்பதும் உண்டு. அதாவது, இறைவன் கடல்போல் கம்பீரமான தோற்றத்தையுடைய மழைக்கடவுள் (Sree, 2002) என்பதால் இப்பெயர் எடுத்து இயம்புகிறது எனலாம். மேலும், திருமாலுக்குப் பெரிய கைகள் இருப்பதால் 'தடக்கையன்' (14:7) என்று திருப்பாவையில் குறிப்பிடப்படுகிறது. திருமங்கையாழ்வாரும் 'விறலாழித் தடக்கையன்' (111:10.2:2) என்று பெரிய திருமொழியில் குறிப்பிட்டுள்ளார். இன்னும், மலை போன்ற தோள்கள் உள்ளதால் 'மால்வரைத் தோள்' (30:6) என்று அழைப்பதும் திருப்பாவையில் காண முடிகின்றது. அதுபோல குலசேகராழ்வாரும் "*மல்லணைந்தவரைத்தோளா!*" (9.2.2) என்று திருமொழியில் குறிப்பிடுகிறார்.

**பண்புக்குரிய பெயர்கள்**

திருமால் சிறப்புக்குரிய பண்புகளைக் கொண்டுள்ளார். இதனை நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் திருப்பாவையின் வழி அறிய முடியகிறது. ஆண்டாள் திருமாலை 'உத்தமன்' (3:1) என்று அழைக்கின்றாள். 'உத்தமன்' தான் அழிந்தாலும் பிறர் வாழ வேண்டும் என்று நினைப்பவன். திருமால் தன் தேவைக்காக வாமனனாக வந்து தானம் கேட்கவில்லை. மாறாக, தேவர்களுக்காகப் பிறர் காரியம் செய்ய தன்னைத் தாழ்த்திக் கொண்டான் என்பதால் உத்தமனான். இதனையே ஆண்டாள்,

*"ஓங்கி உலகளந்த உத்தமன்"*

என்று குறிப்பிடுகிறார். பூதத்தாழ்வாரோ இரண்டாந் திருவந்தாதியில்,

*"உத்தமன்பேர்"(39:1), "உறுங்கண்டாய் நன்னெஞ்சே யுத்தமன் நாற்பதம்" (77:1)*

என்று குறிப்பிட்டுள்ளார். அதுபோல திருமழிசையாழ்வார், திருச்சந்திவிருத்ததில், "ஓசித்துகாந்த வுத்தமா" (58:2) என்று குறிப்பிடுகின்றார்.

தொடர்ந்து, 'தாமோதரன்'(5:4) என்ற பெயரினையும் திருப்பாவையின் வழி அறியலாம். தாமங்கள் என்றால் உலகங்கள். உலகங்களைத் தம் உதரத்தில் வைத்துக்காப்பவர் என்பதால் இப்பெயர் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் பகவான் கிருஷ்ணனாக அவதரித்தப் போது, பல குறும்புகள் புரிந்ததால், யசோதை கோபம் கொண்டு இடுப்பில் கயிறு கொண்டு கட்டினர். இங்கு 'தாமம்' என்றால் கயிறு மற்றும் 'உதரம்' என்றால் வயிறு என்றும் பொருள்படுகிறது.

அடுத்து 'புண்ணியன்' (10:4) என்ற பெயரும் பெருமாளுக்கு ஆண்டாள் வழங்கியுள்ளாள். இவ்வுலகின் தலைவனாக விளங்கும் திருமால் நம்மிடம் எதனையும் எதிர்பார்க்கவில்லை. மாறாக, அவனைப் போற்றி வணங்குபவர்களுக்குப் பலன்கள் அள்ளித் தருவதால் இப்பெயரோடு திகழ்கிறான் என்று கருதப்படுகிறது. ஆண்டாளைப் போலவே பெருமாள் திருமொழியில் குலசேகராழ்வார்,

*"புக்கிலங்கு சீரல்லால் புக்கிலன்காண் புண்ணியனே" (5:8:4)*

எனவும் முதல் திருவந்தாதியில் பொய்கையாழ்வார்,

*"பொன் திகழ மேனிப் புரிசடையும் புண்ணியனும்" (98:1)*

எனத் திருமாலையில் அழைக்கப்படுகின்றார்.

தொடர்ந்து 'வல்லான்' என்ற பெயரும் திருப்பாவையில் இடம்பெற்றுள்ளது. கண்ணனின் விரோதிகள் அவனை அழிக்கத் திட்டம் தீட்டினாலும், அத்திடத்தை முறியடித்து அவர்களை வெல்லுவான். இன்னும்,

*"வால்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க வல்லானை"(15:7)*

என்று ஆண்டாள் குறிப்பிடுகிறாள். 'வல்லான்' என்ற சொல் முதலாவதாக திருவந்ததியில் பொய்கையாழ்வாரும் குறிப்பிட்டுள்ளார். இதனை,

"வல்லளான் கைக்கொடுத்த மாமேனி மாயவனுக்கு'

என்ற வரி வழி அறிய இயலுகிறது.

ஆண்டாள், 'செல்வா' (17:7) என்ற பெயராலும் திருமாலை அழைக்கிறாள். திருமாலின் அறுவகை பண்புகளில் ஐஸ்வரியம் உடமையும் ஒன்றாகும். செல்வத்திற்குரிய திருமகளைத் தன் மார்பில் கொண்டதால் செல்வா என்ற பெயரினாலும் திருமால் சுட்டப்பெறுகின்றான் (Kandasamy, 1994). ஆண்டாளைப் போலவே திருமிசையாழ்வாரும் திருச்சந்தவிருத்ததில், "செல்வமல்கு சீரினாய்" (15:3) எனவும், மூன்றாந் திருவந்தாதியில் பேயாழ்வார், "பொழிலளத்த புள்ளூர்திச் செல்வன்" (7:2) என்று திருமாலை அழைக்கின்றனர்.

இறுதியாக, ஆண்டாள் கண்னனை சீர்க் கோவிந்தா(27:1), கோவிந்தா (28:4, 29:5). சீர் என்பது சிறப்பு நிறைந்ததைக் குறிக்கின்றது. கோவிந்தன் என்பது பசுக்களைக் காப்பவன் என்றும், சீவனின் முக்கால நிலையையும் அறிபவர் என்றும் குறிக்கின்றது. அதோடு

கோவிந்தனின் திருப்பெயரை உச்சரித்தால் உடல் ஆரோக்கியம் கூடுவதோடு, ஆத்மாவுக்கு ஞானத்தையும் அளிக்கின்றது. ஆண்டாளைப் போல நம்மாழ்வார் திருவாய்மொழியில்,

*"நிறத்தால் தெறித்தாய் கோவிந்தா!" (1.5.5:2)*

என்று குறிப்பிட்டுள்ளார்.

**அருட்செயல்களைக் காட்டும் பெயர்கள்**

இப்புவியில் பிறந்த மனிதர்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ முடியாமல் தவிக்கும் போது , இறைவன் பல உருவங்களில் தோன்றுகிறான். கருனையின் திருவுருவமே திருஅவதாரம் என்பதை புராணங்களின் வழி அறியலாம். திருப்பாவையில் 'நாரயணன்' *(1:7;10:3)* என்ற திருபெயரின் பொருள் எல்லாவற்றிலும் தானே நிறைந்து இருப்பவர், அனைத்தும் தாமே என்றும், உள்ளேயும் வெளியேயும் தாமே நிறைந்திருப்பவர் என்பதாகும்(Jayasree Mugambikai,2001)9. 'நாராயணன்' என்ற பெயரில் 'நாரம்' என்பது தண்ணீரைக் குறிக்கின்றது. தண்ணீரில் பள்ளிக் கொண்டிருக்கும் காரணத்தாலும் அவர் 'நாரயணன்' என்று சுட்டப்பெறுகிறார். குலசேகராழ்வார் பெருமாள் திருமொழியில்,

*"நாத்தழும்பெழ நாரணாவென்றழைத்து மெய்தழும் பத்தொழு" (2:4;3)*

என்று குறிப்பிட்டுள்ளார். அதுபோல், இரண்டாந் திருவந்தாதியில் பூதத்தாழ்வார்,

*"ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு"(1:3)*

என்று குறிப்பிடுகின்றார்.

திருப்பாவையின் நோக்கங்களில் திருபாற்கடலில் உறங்குவது போல யோகு புரிகின்ற இறைவனின் திருவடிகளை நிணைத்துப் பாடுதல் ஆகும். இதனையே, ஆண்டாள்,

*'பாற்கடலுள் பையத்துயின்ற பரமனபாடி"(2:2)*

எனக் குறிப்பிட்டுள்ளார். பரமன் என்ற திருப்பெயரைப் பெரிய திருமொழியில்,

*"ஆலிலையில் பள்ளிக்கொள்ளும் பரமனிடம்"(IV.1.6.2)*

என்று காண முடிகிறது. அதுமட்டுமின்றி நம்மாழ்வார் திருவாய்மொழியில்,

*"ஆளும் பரமனைக் கண்ணனை"(2:3)*

என்று 'பரமன்' என்ற திருநாமத்தில் திருமாலை சூட்டியுள்ளார்.

திருப்பாவையில் 'மாயன்', 'மாமயன்' *(5:1;15:8;16:5)* என்ற திருப்பெயர்களையும் அறிய முடிகின்றது. மாயச் செயல்களைச் செய்வதால் மாயன் என்று குறிப்பிடுகின்றாள். மாயையால் உயிர்களை மயக்குபவன் என்பதால் மாமயன் என்றும் அழைக்கப்படுகிறது. அதோடு, அபலைப் பெண்களைத் தன் வசப்படுத்திக் கொள்ளுவதற்குச் சாதனமாகப் பல ஆச்சரியக் குணங்களைக் கொண்டதாலும் மாமாயன் என்று ஆண்டாள் குறிப்பிடுகின்றாள். இவ்வாறு திருச்சந்நவிருத்ததில் திருமழிசையாழ்வார்,

*"ஒன்றிரண்டு தீயுமாகி ஆயனாய மாயனே"*

*ஆதியாகி யாயனாய மயமென்ன மாயனே" (7:3)*

என்ற தொடரில் திருமாலை மாயன் எனக் குறிப்பிட்டுள்ளார். இதனைவிடுத்து, திருமாலை 'புள்ளரையன்' *(6:1)* என்று அழைப்பதையும் திருப்பபாவை எடுத்துரைகின்றது. 'புள்' என்பது கருடனைக் குறிக்கின்றது. கருடனின் தலைவன் திருமால் என்பதல் 'புள்ளரையன்' என்று அழைக்கப்படுகிறது. அதோடு, கொக்கு வடிவில் கண்ணனைக் கொல்ல வந்த பகாசுரனை அழித்தமையாலும் 'புள்ளரையன்' எனப் பெயர் பெற்றுள்ளார்.

அடுத்ததாக, 'கேசவன்' *(7:7;30:1)* என்பதும் அருட்செயலுக்குரிய பெயராகும். கேசி என்னும் குதிரை வடிவில் வந்த அரக்கனைக் கொன்றதால் 'கேசவன்' என்ற பெயரைப் பெற்றான் என்று திருப்பாவை கருதுகின்றது. மேலும், 'கேசவன்' என்பது "கருத்தச் சுருண்ட அழகிய கூந்தலை உடையவன்" எனவும் பொருள்படும் (Chittan, 1994)12.இதனைக் கவிச்சக்கரவர்த்தி கம்பநாடர்,

*"நீண்டு, குழன்று, நெய்த்து இருண்டு*

*நெறித்து, செறித்து, நெடுநீலம்*

*பூண்டு, புரிந்து, சரிந்து, கடை*

*சுருண்டு, புகையும் நறும்பூவும்*

*வேண்டும் அல்ல என, தெய்வ*

*வெறியே கமழும் நறுங்குஞ்சி''*

*(கம்ப, சுந்தர காண்டம்,உருக்காட்டுபடலம்:57)*

என அழகிய மணமுடைய கூந்தலைப் பாடி மகிழ்கின்றார். இத்தகைய கேசத்தை உடையதால் கேசவனாயினான். அதுமட்டுமின்றி, 'கேசவா' என்ற நாமத்தை உச்சரித்தால் ஒருவர் செய்த பாவங்கள் அனைத்தும் தீரும் என்பதும் பொருளாகும் *(Devarajan, 2002)*. திருப்பாவையில் ஆண்டாள் கேசவன் என்று அழைப்பது போல, திருச்சந்தவிருத்தியில் திருமழிசையாழ்வார்,

*''பேசு வாழி கேசனே'' (61:4)*

என்றும். முதல் திருவந்தாதியில் பொய்கையாழ்வார்,

*''தாயவனைக் கேசவனைத் தண்டுழாய் மாலைசேர்'' (100:3)*

என்ற பெயரைக் கொண்டும் திருமாலை அழைக்கின்றனர்.

### இளம் பருவப் பெயர்கள்

'குமரன்' அதாவது மகன் என்ற திருப்பெயர்கள் நந்தகோபனுக்குப் பிள்ளையாய் பிறந்தவன் என்பதனைக் குறிக்கின்றது. எனவேதான்,

*''கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன் குமரன்''(1:4)*

எனவும்,

*''ஆற்றப் படைத்தான் மகனே!''(21:3)*

எனவும் அழைப்பதை அறிய முடிகின்றது. திருப்பாவையில் ஆண்டாள் குறிப்பது போல திருமழிசையாழ்வாரும் நான்முகன் திருவந்தாதியில், குமரன் என்று சுட்டுவதை அறிய முடிகின்றது. இதனை,

*''போம்குமரன் நிற்கும் பொழில்வெங்கட் மலைக்கே போம்குமரா ருள்ளீர் புரிந்து''*

என்ற வரிகளில் அறியலாம்.

மேலும், 'மகன்' என்று திருப்பாவையில் குறிப்பிட்டுள்ளதைப் போல, பூதத்தாழ்வர், பேயாழ்வார் பாசுரங்களின் வழியும் இதனை அறிய முடிகின்றது. இதனை:

*''மாவாய் பிளந்தமகன்'' (11.28.4)*

*''மகனொருவர்க் கல்லாத மாமேனி மாயன்*

*மகனாமவன்கன்றான் காதல்-மகனை'' (111.92:1)*

என்ற வரிகளில் அறியலாம்.

'இளஞ்சிங்கம்' *(1:5)* என்ற பெயரானது, யசோதைப் பிராட்டிக்குச் சிங்கத்தைப் போன்று காவலாளியாக் இருப்பதால் ''யசோதை யிளஞ்சிங்கம்' என்ற திருப்பெயரால் அழைத்தனர், தொடர்ந்து கண்ணன் வாழ்ந்த நந்தகோகுலம் எளிய ஆயர்கள் வசிக்கும் இடமகும். அப்படிப்பட்ட நந்தகோகுலத்தில் தோன்றி, இருட்டிலிருந்த ஆயர்களைத் தீபம்போல் வந்து வாழ வைத்ததால் அணிவிளக்கு என்றும் அழைத்தனர்.

### திருமாலின் பொதுப் பெயர்கள்

திருமாலின் பொதுப் பெயர்களில் 'தேவாதி தேவன்' என்பது தேவர்களுக்கெல்லாம் தலைவன் என்பதனைத் திருப்பாவை குறிக்கின்றது. கண்ணன், தேவரும் அசுரரும் பாற்கடலைக் கடைவதற்குக் காரணமாக இருந்தவனாவன். தேவர்கள் அமுதம் வேண்டி பாற்கடலைக் கடைந்தபோது வெளிப்பட்ட விஷத்தைக், ருத்திரனைப் பாத்திரமாக வைத்து விஷ்ணு அருந்தினார் என்று 'ரிக்' வேதம் சொல்கின்றது. விஷ்ணு அந்தர்யாமியாய் சிவனுக்குள்ளிருந்து நஞ்சை உண்ட காரணத்தால் பூதத்தாழ்வார்,

*''மாகடல் நஞ்சுண்டான் தனக்கும் இறையாவான்'' (11.96:3-4)*

என்று சிவனுக்கும் சுவாமியாய் இருப்பவன் விஷ்ணு என்பதால் 'தேவாதி தேவன்' என்பதால் தேவாதி தேவன் என்று பெயரிடப்பட்டுள்ளார். ஆண்டாளைப் போல திருமழிசையாழ்வாரும்

திருச்சந்தவிருத்தில்,

*"ஐந்துமூன்று மொன்றுமாகி நின்றவாதி தேவனே"(3:2)*

*"சிங்கமாய் தேவதேவ தேனுலாவு மென்மலர்" (24:3)*

என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், லட்சுமி பிராட்டியின் கணவன் திருமால் என்பதைச் சுட்டும் ஆண்டாள், மாதவன் என்ற பெயராலும் கண்ணனை அழைக்கின்றாள். 'மா' என்றால் லட்சுமி என்றும் 'தவன்' என்றால் கணவன் என்றும் பொருள்படும். ஆக, லட்சுமி பிராட்டியின் கணவன் என்பதே மாதவன் என்ற திருநாமத்தின் பொருளாகும். இதனைப் பொய்கையாழ்வார்,

*"வரத்தால் வலிநினைந்து மாதவ நின்பதம்"(90:1)*

எனவும், பூதத்தாழ்வார் 'மாதவன்பேர்' *(39:3)* எனவும் மாதவன் என்ற திருப்பெயரைப் பயன்படுத்தியுள்ளார். இன்னும், 'வைகுந்தன்' என்ற பெயரும் திருப்பாவையில் காண இயலுகிறது. 'வைகுந்தன்' என்றால் உலகத்தை ஆள்பவர் எனப் பொருளாகும். இதனை நம்மாழ்வார் திருவாய்மொழியில், "வைகுந் தன்எம் பெருமானே"*(1.5.4:4)*

என்று பாடியுள்ளதைக் காண இயலுகிறது.

## 8.0 பரிந்துரைகள்

திருப்பாவையின் காணப்படும் திருமாலின் திருப்பெயர்கள் எனும் இவ்வாய்வேடு, திருமால் பெயர் ஏற்றதன் காரணத்தை எடுத்து இயம்புகிறது. இவ்வகையில் எதிர்கால ஆய்வுக்காகச் சில தலைப்புகள் மும்மொழியப்படுகின்றன.

தம்பதியனர் தம் பிறக்கும் பிள்ளைகளுக்கு இறைவனின் திருநாமத்தை இடுவது உண்டு. ஆனால், அவர்களுக்கும் அந்நாமத்தின் பொருள் அறிந்தவர்களா அறியாதவர்களா எனும் ஆய்வு மேற்கொள்ள வேண்டும். இதன் வழி பிள்ளைகள் தன் பெயரின் மகிமையை அறிய இயலும்.

குறிப்பிட்ட இறைவனின் திருநாமம் ஒரு கடவுளைத் தாண்டி மற்றற்ற இறைவனுக்கும் இருப்பதை நோக்க இயலுகிறது. உதாரணமாக குமரன் என்ற திருப்பெயர் விஷ்ணு பகவானுக்கு இருப்பது போல் முருகக் கடவுளுக்கும் இருப்பதையும் அறிய இயலுகிறது. ஆக, இரு மாறுபட்ட கடவுளின் திருநாமம் ஒரே சொல்லாக இருப்பதின் காரணத்தை ஆராய்தல் சிறப்பு.

உலகில் பல நாடுகளில் இந்துக்கள் வாழ்கின்றனர். இந்து சமய சார்புடைய கடவுள் சமய நூல்களை விடுத்தும் தமிழ்மொழியையும் விடுத்து வெவ்வேறு வழக்கு மொழி பெயர்களாக அமைய பெற்றிருக்கலாம். ஆக, ஆய்வாளர்கள் பல்லின மொழியில் குறிப்பிட்ட இறைவனின் பெயர் மற்றும் அதன் காரணத்தையும் அறியலாம்.

வைணவம் போல இந்து சமயம் மேலும் 5 பிரிவுகளைக் கொண்டவை. ஆய்வாளர்கள் இவ்வாய்வேட்டில் திருமாலை ஆராய்ந்தது போல மற்ற பிரிவுகளில் காணப்படும் இறைவைனின் திருநாமத்தை ஆராய்வதின் வழி, இந்து சமய பிரிவுகளும் அதனுள் காணப்படும் திருநாமங்களைச் சரியான சான்றுகளுடன் எடுத்து இயம்பலாம்.

## 9.0 முடிவுரை

ஓர் உருவமும் ஒரு பெயரும் இல்லாத இறைவனுக்குப் பல பெயர்களைக் கொடுத்து, ஆண்டாள் பக்தி மேலிட இறைவனைப் போற்றி அழைப்பதைத் திருப்பாவையின் வழி அறியலாம். திருப்பாவையைப் போல ஆழ்வார்களும் இறைவனை வெவ்வேறு திருநாமத்தைக் கொண்டு அழைத்துள்ளதையும் காண இயலுகிறது. ஆகவே, பிறந்த பயனை அடைவதற்கு ஒவ்வொருவரும் பகவானின் திருநாமங்களைச் சொல்ல வேண்டும். சொல், செயல், சிந்தை அனைத்திலும் இறைவனை நினைத்தே வழிபடுதல் வேண்டும்.

**References**

Annangkarasariyar Swamy. (1952). *Tiruppāva*i. Kumbakonam: Forward Printings..

Balasubramaniam, S. (1994). Āṇṭāḷ. Chenai: Paari Centre.

Chittan. (1994). *Mētai Kampaṉum Kōtai Pirāṭṭiyum [Genius Kampaṉ and Kothai Pirāṭṭi]*. Chennai: Vanathi Publications.

Devarajan. (2002). *Vaiṇavamum Aḻvārkaḷum Part 2.* Chennai: Sree Shenbaga Publications.

Devarajan. (2002). *Vaiṇavamum Aḻvārkaḷum Part 1*. Chennai: Sree Shenbaga Publications.

Jayasree Mugambikai. (2001). *Tivya Nāma Kataikaḷ [ The Stories of Devotional Names*]. Chennai: Sree Hindu Publications.

Kamalakannan,R.V. (1952). *Nālāyirat Tivviyap Pirapantam:Source and Explanation Part 1 [Four Thousand Divine of Pirapantam]*. Chennai: Varthamalan Printings.

Kandasamy, N. (1994). *Caṅka Ilakkiyattil Pakti [Devotion in Caṅka Literature]*. Kuala Lumpur: Thirumagal Press.

Kannan, S. (1994). *Periyāḻvār,* Āṇṭāḷ *Pācuraṅkaḷ [ Rhyme of Periyāḻvār,* Āṇṭāḷ *]: Social, Religious and Cultural Study.* Chennai: Vijayalakshmi Publications.

Periyaswamy, B. (2020) Analyzing the Devational Biology of Andalusian Lice-A Study. *International Tamil Research Jurnal 2,* 119-130. Retrieved From https://doi.org/10.34256/irjt20213

Sinivasan. (2001). *Types of Tivviyappirapanta Literature*. Chitambaram: Meyyapan Tamil Research Centre.

Soundra. (1978). *'Tiruppāvai' 10th Seminar Review Index.* Annamalai Nagar: Agriculture University of Tamil Nadu.

Sree. (2002). *The History Of* Āḻvārkaḷ *Part 8*. Chennai: Genaral Publications.

Sujatha. (2000). *A Simpely Introduction of* Āḻvārkaḷ. Chennai: Vanathi Publications.

Tharmika, M. (2016). *A Comparative Analysis of The Ideas of Mystical Realities in Andal and Song of Songs.* Sri Lanka: Eastern University.

# மலேசிய தமிழ்ப்பள்ளிகளின் தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் பயன்படுத்தப்படும் ஔவையின் செய்யுள் மாணவருக்கு உணர்த்தும் வாழ்க்கை நெறி

## Life Values Taught to Students Through Auvaiyar's Poetry Used in Tamil Language Teaching and Learning Activities in Malaysian Tamil Schools

சரஸ்வதி பெரியண்ணன் / Saraswathy Perianan[1]

**Abstract**

This study aims to analyze the role of Avvaiyar's poems in Tamil language education in Malaysian Tamil schools. Avvaiyar, known for her wisdom and profound thoughts in her works, conveys moral, ethical, and social values through simple yet meaningful poems. This study focuses on how these poems impact students in their daily lives. Through text analysis, the study will examine the effectiveness of integrating Avvaiyar's poems into the Tamil education curriculum, considering their impact on character development, moral values, and the enhancement of students' language skills. This research hopes to provide suggestions and recommendations for strengthening the use of Avvaiyar's poems in Tamil language education in Tamil schools, as well as increasing understanding of the richness of Tamil literary heritage. Thus, this study concludes that Avvaiyar's poems serve not only as beautiful literary texts but also as an effective tool in Tamil language education, fostering moral and social values, and improving language comprehension among students.

Date of submission: 2024-11-18
Date of acceptance: 2024-12-01
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name:
Saraswathy Perianan
Email: saraswathyperianan@gmail.com

**Keywords:** Thirupavai, Alvars, Andal, Thirumal, Deity names

### முன்னுரை

தேசிய கல்வித் தத்துவம் என்னவெனின் " மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல், எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல், ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயபும் பெற தனிமனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயிற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக்

[1]The author is a postgraduate research student in the Department of Indian Studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. saraswathyperianan@gmail.com

கொண்டதாகும்". (மூலம்: கல்விச் சட்டம் 1996 / சட்டம் 550) இதனைக் கருத்தில் கொண்டே ஔவையாருடைய சில இலக்கியப் படைப்புகள் தமிழ்மொழிப் பாடத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஔவை என்பது மூதாட்டி அல்லது தவப்பெண் என்ற கருத்தைப் பழந்தமிழ் அகராதி கூறுகிறது. பிற்காலத்தில் ஔவை என்ற சொல், ஆண்டு மற்றும் அறிவு என்பவற்றில் முதிர்ச்சி அடைந்தவர்களைக் குறிக்கும் சொல்லாக விளங்கியது எனலாம். ஔவையார் தமிழ்ப்புலவர் என்பதோடு, இவர் காலத்தில் தமிழ் இலக்கியங்கள் உயர் நிலையை எய்தி இன்றளவும் பயன்பாட்டில் இருப்பது வெள்ளிடைமலை. ஔவையார் இயற்றிய செய்யுள்கள் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, புறநானூறு போன்ற நூல்களில் இடம் பெற்றுள்ளது. அவற்றில் புறத்திணைப் பாடல்கள் மற்றும் அகத்திணைப் பாடல்கள் என பகுக்கப்பட்டுள்ளன. இப்படியாக அறநெறி சார்ந்த ஔவையார் செய்யுளடிகள் 20-ம் நூற்றண்டிலும் தமிழ்ப்பள்ளிகளில் தமிழ்மொழிப் பாடத்தில் உச்சானிக்கொம்பில் விளங்குகின்றன.

ஆத்தி சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, ஞானக்குறள், நாலு கோடிப் பாடல்கள், நல்வழி நாற்பது, அசதிக்கோவை, பந்தனந்தாதி, விநாயகர் அகவல் போன்ற உயர்ரக படைப்புகளைத் தமிழுக்குத் தந்தருளியுள்ளார். இவற்றைச் சரித்திர ஆசிரியர்களால் சங்கப்பாடல்கள், தனிப்பாடல்கள், நல்வழி, நீதிநூல்கள் மற்றும் சமய நூலாக விநாயகர் அகவல், சிற்றிலக்கியமாக பந்தன் அந்தாதி போன்று ஔவையின் நூல்களாக வகைப்படுத்தியுள்ளனர். ஔவையாரின் சொல்லாட்சி மற்றும் கருத்து நிறைந்த கவியாற்றல் இன்றும் போற்றப்படுவதோடு நல்மக்களை உருவாக்குகிறது.

## ஆய்வின் நோக்கம்

தேசிய கல்வித் தத்துவத்திற்கு ஏற்றவாரு அமைக்கப்பட்ட தமிழ்ப்பள்ளிகளில் தமிழ்மொழிப் பாடத்திட்டத்தில் ஔவையாருடைய சில இலக்கியப் படைப்புகளும், அவை காட்டும் வாழ்க்கை நெறியையும் ஆய்வாகக் கொள்ளப்படுகிறது. ஆண்டு 1 முதல் ஆண்டு 6 வரையில் பயிலும் மாணவர்கள் கற்கும் செய்யுளையும், அவை உணர்த்தும் வாழ்வியல் நெறிகளையும் காட்டுவதாகும். மேலும் இன்றைய காலத்தில் இதுபோன்ற வாழ்வியல் நெறிகள் மாணவர்களுக்கு நல்ல படிப்பினையாக அமைவதோடு, வாழும் காலத்தில் சிறந்த மாந்தனாக மிளிர வழிவகுக்கிறது என்பதை ஆய்வு குறிக்கிறது.

## ஆய்வு நெறி

இந்த ஆய்வுக் கட்டுரை பண்பு நெறி ஆய்வு (kualilatif) முறையில் திரட்டப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இந்தப் பண்பு நெறி ஆய்வில் ஆய்வுக்குத் தொடர்பான ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக்கட்டுரைகள் ஆகியவைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டன.

## முந்தைய ஆய்வுகள்

Narvaez & Lapsley (2008) தங்களது ஆய்வில் 21-ஆம் நூற்றாண்டுக்கான அறநெறிக் கல்வி முறையை வடிவமைத்துள்ளனர். இவர்களது "ஒருங்கிணைந்த அறநெறிக் கல்வி கட்டமைப்பு" (Integrative Ethical Education Framework) ஐந்து முக்கிய கூறுகளை அடிப்படையாகக் கொண்டது: அன்பான பள்ளிச் சூழல், அறநெறி உணர்திறன், அறநெறி தீர்ப்பு, அறநெறி ஊக்கம், மற்றும் அறநெறி செயல். இந்த ஆய்வின்படி, மாணவர்களின் அறநெறி வளர்ச்சி வெறும் விதிமுறைகளைக் கற்பிப்பதன் மூலமல்ல, மாறாக ஒரு ஒட்டுமொத்த சூழலியல் அணுகுமுறையின் மூலம் அடையப்பட வேண்டும். பள்ளிகள் மாணவர்களுக்கு அறநெறி செயல்திறனை வளர்க்கும் வாய்ப்புகளை வழங்கும் "அறநெறிச் சூழலியல்" (Moral Ecology) ஆக செயல்பட வேண்டும் என்று இவர்கள் வலியுறுத்துகின்றனர். இந்த ஆய்வு மாணவர்களின் அறநெறி வளர்ச்சியில் பள்ளிச் சூழலின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

Lovat & Clement (2008) தங்களது ஆய்வில்,

பள்ளிகளில் மதிப்புக் கல்வி (Values Education) எவ்வாறு மாணவர்களின் அறிவாற்றல் திறன்கள், தகவல் தொடர்பு, சுய-நம்பிக்கை மற்றும் சமூக ஒற்றுமையை மேம்படுத்துகிறது என்பதை ஆராய்ந்துள்ளனர். இவர்கள் பல்வேறு ஆஸ்திரேலிய பள்ளிகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு, மதிப்புக் கல்வி மாணவர்களின் அறிவாற்றல் செயல்திறனையும் (Cognitive Performance) சமூக நடத்தையையும் (Social Behavior) மேம்படுத்துவதற்கான ஆதாரங்களை வழங்குகின்றனர். குறிப்பாக, மதிப்புக் கல்வி மாணவர்களின் உள்ளுணர்வுத் திறன் (Intuitive Awareness), பிரதிபலிப்புத் திறன் (Reflective Capacity) மற்றும் சமூக ஒத்துழைப்பு (Social Cooperation) ஆகியவற்றை மேம்படுத்துவதாக இந்த ஆய்வு காட்டுகிறது. இந்த ஆய்வு அறநெறிக் கல்வியின் கல்வி சார்ந்த நன்மைகளை வலியுறுத்துகிறது.

Bamkin (2020) ஜப்பானிய தொடக்கப் பள்ளிகளில் அறநெறிக் கல்வி (Moral Education) எவ்வாறு திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதை ஆராய்ந்துள்ளார். ஜப்பானின் அறநெறிக் கல்வித் திட்டம் "டோக்கா" (D□ka) என்று அழைக்கப்படுகிறது. இது கல்வித் திட்டத்தில் ஒரு தனித்த பாடமாக மட்டுமல்லாமல், அனைத்துப் பாடங்களிலும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறை நான்கு முக்கிய பகுதிகளில் கவனம் செலுத்துகிறது: தன்னைப் பற்றிய புரிதல், மற்றவர்களுடனான உறவு, இயற்கை மற்றும் சுற்றுச்சூழலுடனான உறவு, மற்றும் சமூகத்துடனான உறவு. ஜப்பானிய அறநெறிக் கல்வி முறை சமூக ஒற்றுமை (Social Harmony), மரியாதை (Respect) மற்றும் கடமை உணர்வு (Sense of Duty) போன்ற மதிப்புகளை வலியுறுத்துகிறது. ஜப்பானிய அறநெறிக் கல்வியின் வெற்றி, ஒரு நாட்டின் கலாச்சார மதிப்புகளை கல்வித் திட்டத்தில் ஒருங்கிணைப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

Shields (2011) தனது ஆய்வில், 21-ஆம் நூற்றாண்டில் மாணவர்கள் கற்க வேண்டிய அடிப்படை பண்புகளை ஆறு முக்கிய குணநலன்களாக வகைப்படுத்தியுள்ளார்: துணிச்சல் (Courage), நீதி (Justice), மனிதநேயம் (Humanity), மிதமான தன்மை (Temperance), ஞானம் (Wisdom), மற்றும் உயர்நிலை சிந்தனை (Transcendence). இந்த ஆய்வின்படி, இந்த அடிப்படை குணநலன்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலும், பல்வேறு கலாச்சாரங்களிலும் போற்றப்படுகின்றன. ஷீல்ட்ஸ், குணநலக் கல்வி (Character Education) மாணவர்களின் அறிவாற்றல் திறன்களை மேம்படுத்துவதுடன், அவர்களை சமூகத்தின் பொறுப்புள்ள உறுப்பினர்களாக வளர்ப்பதற்கும் உதவுகிறது என்று வாதிடுகிறார். இந்த ஆய்வு, குணநலக் கல்வி பள்ளிகளின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

Walker, Roberts & Kristjansson (2015) தங்களது ஆய்வில், குணநலக் கல்வியில் "அறநெறி நிறுவனம்" (Moral Agency) மற்றும் "சுய-ஆசிரியத்துவம்" (Self-Authorship) ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளனர். அவர்களது கருத்துப்படி, பல குணநலக் கல்வித் திட்டங்கள் மாணவர்களுக்கு குறிப்பிட்ட மதிப்புகளைக் கற்பிப்பதில் மட்டுமே கவனம் செலுத்துகின்றன, அவர்களின் சுயமாக சிந்திக்கும் திறனை வளர்ப்பதில் குறைவான கவனமே செலுத்துகின்றன. உண்மையான குணநலக் கல்வி, மாணவர்கள் தங்கள் சொந்த அறநெறி முடிவுகளை எடுக்கும் திறனை வளர்ப்பதற்கு உதவ வேண்டும். இதற்கு, மாணவர்கள் தங்கள் சொந்த மதிப்புகளை உருவாக்கும் "சுய-ஆசிரியத்துவ" செயல்முறையில் ஈடுபட வேண்டும். இந்த ஆய்வு, அறநெறிக் கல்வியில் மாணவர்களின் சுயசிந்தனை மற்றும் முடிவெடுக்கும் திறனின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

Arthur, Kristjansson, Harrison, Sanderse & Wright (2016) தங்களது ஆய்வில், பள்ளிகளில் குணநலம் மற்றும் நற்பண்புகளைக் கற்பிப்பதற்கான ஆதாரம் அடிப்படையிலான அணுகுமுறைகளை வழங்கியுள்ளனர். இந்த ஆய்வின்படி, குணநலக் கல்வி மூன்று முக்கிய

அம்சங்களை உள்ளடக்கியது: பள்ளியின் ஒட்டுமொத்த சூழல் (School Ethos), ஆசிரியர்களின் முன்மாதிரி நடத்தை (Teacher Modeling), மற்றும் வெளிப்படையான நற்பண்புக் கல்வி (Explicit Virtue Ethics Education). ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நற்பண்புகளின் முக்கியத்துவத்தைக் கற்பிப்பதோடு மட்டுமல்லாமல், அவற்றை தங்கள் சொந்த நடத்தையிலும் வெளிப்படுத்த வேண்டும். இந்த ஆய்வு, குணநலக் கல்வியில் ஒரு முழுமையான, பள்ளி அளவிலான அணுகுமுறையின் அவசியத்தை வலியுறுத்துகிறது, மேலும் ஆசிரியர்களின் முன்மாதிரி நடத்தையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

Lickona (2009) தனது புகழ்பெற்ற ஆய்வில், மரியாதை மற்றும் பொறுப்புணர்வை கற்பிப்பதற்கான ஒரு விரிவான அணுகுமுறையை வழங்குகிறார். அவரது "முழுமையான குணநலக் கல்வி" (Comprehensive Character Education) அணுகுமுறை மதிப்புகளின் நேரடி கற்பித்தலுடன், பள்ளியில் ஒரு அறநெறி சமூகத்தை உருவாக்குவதையும் இணைக்கிறது. லிக்கோனாவின் அணுகுமுறையின்படி, குணநலக் கல்வி மூன்று முக்கிய பகுதிகளை உள்ளடக்கியது: அறநெறி அறிதல் (Moral Knowing), அறநெறி உணர்தல் (Moral Feeling), மற்றும் அறநெறி செயல் (Moral Action). மாணவர்கள் நல்லது-கெட்டது பற்றி அறிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல், நன்மை செய்வதற்கான உணர்வையும், நடைமுறையில் அதைச் செய்யும் திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்த ஆய்வு, குணநலக் கல்வி வெறும் தகவல் பரிமாற்றம் மட்டுமல்ல, மாறாக ஒரு முழுமையான மாற்ற செயல்முறை என்பதை வலியுறுத்துகிறது.

Joshee (2008) தனது ஆய்வில், இந்தியாவில் மதிப்புக் கல்வி மற்றும் குடியுரிமைக் கல்வியின் பரிணாம வளர்ச்சியை ஆராய்ந்துள்ளார். காலனித்துவ காலத்திலிருந்து தற்காலம் வரை, இந்தியாவில் மதிப்புக் கல்வி எவ்வாறு மாறியுள்ளது என்பதை இந்த ஆய்வு விளக்குகிறது. இந்திய கல்வி முறையில், பாரம்பரிய மற்றும் ஆன்மீக மதிப்புகள் ஜனநாயக பங்கேற்பு மற்றும் சமூக நீதி போன்ற நவீன கொள்கைகளுடன் எவ்வாறு இணைக்கப்பட்டுள்ளன என்பதையும் இந்த ஆய்வு விளக்குகிறது. இந்தியாவின் மதிப்புக் கல்வி அணுகுமுறையில், மகாத்மா காந்தியின் கொள்கைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவரது "நீதிக்கல்வி" (Nai Talim) அணுகுமுறை மாணவர்களின் அறிவாற்றல், உடல் மற்றும் ஆன்மீக வளர்ச்சியை ஒருங்கிணைக்கிறது. இந்த ஆய்வு, மதிப்புக் கல்வியில் கலாச்சாரம் மற்றும் சமூக சூழல்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

Berkowitz & Bier (2020) தங்களது ஆய்வில், பியாஜெட் மற்றும் கோல்பெர்க்கின் அறநெறி வளர்ச்சி கோட்பாடுகளை நவீன கல்வி முறைகளில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை ஆராய்ந்துள்ளனர். இந்த ஆய்வின்படி, மாணவர்களின் அறநெறி வளர்ச்சி ஒரு படிப்படியான செயல்முறை, மேலும் இது அவர்களின் அறிவாற்றல் வளர்ச்சியுடன் நெருங்கிய தொடர்புடையது. பெர்கோவிட்ஸ் மற்றும் பிளெஸ்கோ, அறநெறி குழிக்கல்கள் (Moral Dilemmas) மற்றும் சமூக நீதி பிரச்சனைகளை பாடத்திட்டத்தில் இணைப்பதன் மூலம், மாணவர்களின் அறநெறி சிந்தனையை வளர்க்கலாம் என்று வாதிடுகின்றனர். இந்த ஆய்வு, மாணவர்களின் வயது மற்றும் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப அறநெறிக் கல்வி முறைகளை மாற்றியமைப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

Halstead & Taylor (2018) தங்களது ஆய்வில், பன்முகக் கலாச்சார சமூகங்களில் மதிப்புக் கல்வியின் சவால்கள் மற்றும் வாய்ப்புகளை ஆராய்ந்துள்ளனர். பல்வேறு கலாச்சார பின்னணிகளைக் கொண்ட மாணவர்கள் வாழும் சமூகங்களில், பொதுவான மதிப்புகளை எவ்வாறு கற்பிப்பது என்ற கேள்விக்கு இந்த ஆய்வு பதிலளிக்கிறது. ஹாலஸ்டெட் மற்றும் டெய்லர், "பகிரப்பட்ட மதிப்புகள்" (Shared Values) மற்றும் "பன்முகத்தன்மையை மதித்தல்" (Valuing Diversity) ஆகிய இரண்டையும் இணைக்கும் ஒரு அணுகுமுறையை வலியுறுத்துகின்றனர். அவர்களது கருத்துப்படி,

மாணவர்கள் தங்கள் சொந்த கலாச்சார அடையாளங்களை மதிக்கும் அதே வேளையில், பிற கலாச்சாரங்களையும் மதிக்க கற்றுக்கொள்ள வேண்டும். இந்த ஆய்வு, மதிப்புக் கல்வியில் கலாச்சார உணர்திறன் மற்றும் பன்முகத்தன்மையின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

Davidson மற்றும் அவரது குழுவினர் (2014) தங்களது ஆய்வில், பள்ளிகளில் "கருணைக் கல்வி" (Compassion Education) மற்றும் "உணர்வுபூர்வ நுண்ணறிவு" (Emotional Intelligence) ஆகியவற்றின் முக்கியத்துவத்தை ஆராய்ந்துள்ளனர். இந்த ஆய்வின்படி, மாணவர்களின் சமூக-உணர்வுபூர்வ திறன்களை வளர்ப்பது அவர்களின் அறநெறி வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைகிறது. டேவிட்சன் மற்றும் குழுவினர் உருவாக்கிய "சமூக மற்றும் உணர்வுபூர்வ கற்றல்" (Social and Emotional Learning - SEL) திட்டம், மாணவர்களின் சுய-விழிப்புணர்வு, சுய-கட்டுப்பாடு, சமூக விழிப்புணர்வு, உறவு திறன்கள் மற்றும் பொறுப்பான முடிவெடுத்தல் ஆகிய ஐந்து முக்கிய பகுதிகளில் கவனம் செலுத்துகிறது. இந்த ஆய்வு, மாணவர்களின் உணர்வுபூர்வ மற்றும் சமூக திறன்களை வளர்ப்பது அவர்களின் அறநெறி நடத்தையையும் மேம்படுத்துவதை காட்டுகிறது.

லியோன் மற்றும் அவரது குழுவினர் (2017) தங்களது ஆய்வில், டிஜிட்டல் யுகத்தில் மதிப்புக் கல்வியின் சவால்கள் மற்றும் வாய்ப்புகளை ஆராய்ந்துள்ளனர். தொழில்நுட்பம் மற்றும் சமூக ஊடகங்களின் வளர்ச்சி, மாணவர்களின் அறநெறி வளர்ச்சியில் புதிய சவால்களை ஏற்படுத்தியுள்ளது. அதே நேரத்தில், டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் அறநெறிக் கல்விக்கான புதிய வாய்ப்புகளையும் வழங்குகின்றன. லியோன் மற்றும் குழுவினர், "டிஜிட்டல் குடிமக்கள்" (Digital Citizenship) கல்வியை மதிப்புக் கல்வியின் ஒரு முக்கிய பகுதியாக இணைக்க பரிந்துரைக்கின்றனர். இதன் மூலம், மாணவர்கள் டிஜிட்டல் உலகில் பொறுப்பாக, மரியாதையுடன் மற்றும் அறநெறியுடன் செயல்பட கற்றுக்கொள்ள முடியும். இந்த ஆய்வு, மாறிவரும் தொழில்நுட்ப சூழலில் மதிப்புக் கல்வியை எவ்வாறு மாற்றியமைப்பது என்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குகிறது.

## மலேசிய தமிழ்ப்பள்ளிகளின் தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் செய்யுள் பயன்பாடு

ஔவையாரின் அறிவார்ந்த செய்யுள்கள், ஆண்டு ஒன்று முதல் ஆறாம் ஆண்டு வரை பயிலும் மாணவர்கள் கற்கின்றனர். இவரது செய்யுள்களில் உயர்நெறி பண்புகள் உள்ளது. ஔவையாரின் பாடல்களும், அவருடைய அறிவும் தத்துவங்களும் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகின்றன. தனது செய்யுள்களில் கல்வி மற்றும் அறிவின் பெருமையை உணர்த்தியவர். கல்வி அவசியம் என்றும் அறிவின் தன்மையைப் பெறுவதன் மூலம் மனிதன் சமூகத்தில் அதிகமாகப் போற்றப்படுவான் என்றும் தனது செய்யுளடியில் கூறியுள்ளார். மேலும் தானதர்மம், முறையான செல்வம் சேர்த்தல், நேர்மை, கடமை, அன்பு, நட்பு மற்றும் இதுபோன்ற வாழ்க்கைக்குத் தேவைப்படும் பண்புநெறி கொண்ட தேர்ந்தெடுக்கப்பட்ட செய்யுளடிகள் தமிழ்மொழிப் பாடத்தில் இணைக்கப்பட்டிருக்கின்றன.

### அ) ஆண்டு 1 மற்றும் ஆண்டு 2

**i.ஆத்தி சூடி**

*1)* **அறஞ்செய விரும்பு** - தருமம் மற்றும் நன்மை தரும் செயல்களைச் செய்வதில் நாட்டம் கொள்

*2)* **ஆறுவது சினம்** - கோபத்தைத் தணித்துக் கொள்ள வேண்டும்

*3)* **இயல்வது கரவேல்** - கொடுக்க இயன்றதை இல்லை என்று மறைக்கக்கூடாது

*4)* **ஈவது விலக்கேல்** - பிறருக்குக் கொடுத்து உதவுவதைத் தடுக்கக்கூடாது

*5)* **உடையது விளம்பேல்** - நம்மிடம் உள்ள செல்வத்தைப் பற்றிப் பிறரிடம் தற்பெருமையாகக் கூறக்கூடாது.

*6)* **ஊக்கமது கைவிடேல்** - முயற்சியை

விட்டு விடக்கூடாது

*7)* **எண்ணெழுத் திகழேல்** - எண்களையும் மொழியையும் அலட்சியம் செய்யாமல் கற்க வேண்டும்

*8)* **ஏற்ப திகழ்ச்சி** - உழைப்பின்றிப் பிறர் கொடுப்பதை ஏற்றுக்கொள்வது இழிவான செயலாகும்

*9)* **ஐய மிட்டுண்** - பசியென வந்தவர்க்கு உணவிட்ட பின்னரே உண்ண வேண்டும்

*10)* **ஒப்புர வொழுகு** - உலக நடைமுறை அறிந்து அதன்படி நடந்து கொள்ள வேண்டும்

*11)* **ஓதுவ தொழியேல்** - நல்ல நூல்களை நாளும் படிப்பதைக் கைவிடக்கூடாது

*(Kementerian Pendidikan Malaysia, 2016 & 2017)*

**ii).கொன்றை வேந்தன்**

**1) அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்**

தாயும் தந்தையுமே நாம் முதலில் அறிந்ந்துகொள்ள வேண்டிய தெய்வம் ஆவார்.

**2) ஆலயம் தொழுவது சாலவும் நன்று**

கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவது மிக்க நன்மை தரும்

**3) ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு**

விடாமுயற்சியோடு செயல்படுவது வாழ்க்கையை வளப்படுத்தும்

**4) எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்**

எண்களையும் மொழியையும் நமது இரு கண்களுக்கு ஒப்பானாதாகக் கருத வேண்டும்

**5) ஏவா மக்கள் மூவா மருந்து**

சொல்லாமல் குறிப்பறிந்து செயல்படும் பிள்ளைகள் பெற்றோருக்கு நீண்ட ஆயுளைத் தரும் அமிர்தம் போல் ஆவர்.

**6) ஐயம் புகினும் செய்வன செய்**

பிச்சையெடுக்கும் அளவுக்கு வறுமை ஏற்பட்டாலும் செய்ய வேண்டிய நற்செயல்களைச் செய்ய வேண்டும்

**7) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை**

பிறரின் குறைகளையே பெரிதுபடுத்திக் கொண்டிருந்தால் உறவினர்களோ நண்பர்களோ யாரும் நம்மோடு இருக்க மாடார்கள்

*(Kementerian Pendidikan Malaysia, 2016 & 2017)*

**iii) சுட்டப்பழம்**

இதனைத் தொடர்ந்து ஆண்டு இரண்டில், மாணவர்கள் சுட்ட பழம் கதையைச் சுருக்கமாக கற்கின்றனர். ஔவையார் தமிழ்க்கடவுளிடம் பெற்ற அனுபவத்தை இன்றளவும் பேசப்படுகிறது. அடர்ந்த காட்டின் வழியே பசியோடு வரும் ஔவையார் மிகவும் களைத்து, ஒரு நாவல் மரத்தடியில் அமர்ந்தார். சிறுவன் ஒருவன் அந்த மரக்கிளைகளில் அமர்ந்திருப்பதைப் பார்த்த ஔவையார், சிறுவனே எனக்குப் பசிக்கிறது, கொஞ்சம் பழம் பறித்துப் போடுகிறாயா? என்றார். உடனே அச்சிறுவன், "பாட்டி, சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்றான். இறுதியில் கிளைகளில் உலுக்கப்பட்ட கீழே விழுந்த கனிந்த பழங்களில் மண் ஒட்டியிருப்பதைக் கண்டு தன் வாயால் ஊதினார். ஔவைக்குப் அப்போதுதான் புரிந்தது சுட்டப் பழம் என்பது கனிந்த பழம். தமிழ் பிராட்டியார் கற்றது கைம்மண்ணளவுதானே என்று பூரித்துப் போனார். இதன் வாயிலாக மாணவர்கள் வாழ்வில் தொடர்ந்து கற்றுக் கொண்டே இருப்பது அவசியம் என்பதை அறிகின்றனர்

**iv) புதிய ஆத்திச்சூடி**

*1)* **அச்சம் தவிர்** -பயத்தை விட்டொழித்தல் வேண்டும்

*2)* **ஆண்மை தவறேல்** - எப்பொழுதும் வீரத்துடன் இருக்க வேண்டும்

*3)* **இளைத்தல் இகழ்ச்சி** - துடிப்புடன் இல்லாத சோர்வடைந்திருப்பது இழிவாகும்

*4)* **ஈகை திறன்** - பிறருக்குக் உதவும் ஆற்றலோடு விளங்க வேண்டும்

*5)* **உடலினை உறுதி செய்** - நலமாக வாழ உடலை நன்றாகப் பேண வேண்டும்.

*6)* **ஊண்மிக விரும்பு** - உடலுக்கு நலத்தைத் தருகின்ற உணவுகளை விரும்பி உண்ண வேண்டும்.

*7)* **ஐயம்பொறி ஆட்சிகொள்** - கண், காது, மூக்கு, வாய் மெய் முதலானஐம்புலன்களையும் நல்ல நெறியில் செலுத்தும் ஆற்றலைப் பெற்றிடுக

*8)* **ஒற்றுமை வலிமையாம்** - ஒன்று பட்டு வாழ்வதே பலமாகும்

*(Kementerian Pendidikan Malaysia, 2016 & 2017)*

**Vi) புதிய கொன்றை வேந்தன்**

*1)* **சூதும் வாதும் வேதனை செய்யும்**

சூதாடுதலும் தேவையற்ற வாக்குவாதம் செய்தலும் துன்பத்தையே தரும்

*2)* **திரைகடல் ஓடியும் திரவியம் தேடு**

கடல் கடந்து பிற நாடுகளுக்குச் சென்றாவது செல்வத்தைச் சேர்க்க வேண்டும்

*3)* **தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை**

தந்தையின் சொல்லைவிட மேலான அறிவுரை கிடையாது

*4)* **தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை**

பெற்ற தாயைவிட ஒருவருக்குச் சிறந்த கோயி வேறெதுவும் கிடையாது

*5)* **நுண்ணிய கருமமும் எண்ணித் துணிக**

மிகச் சிறிய செயலாக இருப்பினும் அதனை நன்கு ஆராய்ந்த பிறகே மேற்கொள்ள வேண்டும்

*6)* **மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்**

மூத்தவர்களின் அறிவுரையைக் கேட்டு நடப்பது சிறப்பைத் தரும்

*7)* **சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்**

உறவினரோடு கூடி வாழ்வதே சிறப்பாகும்

*(Kementerian Pendidikan Malaysia, 2016 & 2017)*

இந்த ஆத்திச்சூடி மற்றும் கொன்றை வேந்தன் வாயிலாக மாணவர்கள் இளம்பிராயத்திலே நற்பண்புகளைக் கற்கின்றனர். இதனை அன்றாட நடைமுறை வாழ்வில் பயன்படுத்துகின்றனர். இச்செய்யுளடிகள் நீதி, அன்பு, அறிவு மற்றும் பல சிறந்த நற்பண்மையும் அடிப்படையாகக்கொண்டு விளங்குகிறது. அறிவுரைமிக்க செய்யுள்களில் நம்பகத்தன்மையும் எளிமையும் கொண்டுள்ளதால் மாணவர்களுக்கு வாழ்க்கையை நடத்துவதற்கான வழிகாட்டியாகவும் விளங்குகிறது. இதுபோன்ற அறநெறிகள் மனித வாழ்க்கையைச் சீராக நடத்தவும், சமூக அமைதியையும் ஒற்றுமையையும் பெற்றிட பெரிதும் உதவுகின்றன. ஆகவே கல்விக் கொள்கையின் படி ஔவையின் சிறப்பு வாய்ந்த இந்தச் செய்யுள்களின் பயன்பாடு, காலத்திற்கு ஏற்றார் போல மாந்தனைப் வழிநடத்த உதவுகிறது என்பது துள்ளிதமான உண்மை.

**ஆ)மூன்றாம் ஆண்டு**

*i)* அதியமானும் ஔவையாரும்

மூன்றாம் ஆண்டு தமிழ்ப்பாடத்தில், அதியமானும் ஔவையாரும் கதையை கற்கின்றனர். அதியமான் வேட்டைக்குப் போகும் வழியில், மலையடிவாரத்தில் நெல்லி மரத்தின் கீழ் ஓய்வு எடுக்கிறார். அப்பொழுது அரிய நெல்லிக்கனி கிடைக்கிறது. அந்நெல்லிக்கனியை உண்பவர் நீண்ட நாள் உயிர்வாழ்வர். ஆதலால் தமிழுக்குத் தொண்டாற்றும் ஔவையிடம் கிடைப்பதற்கு அரிய அக்கனியைக் கொடை நெஞ்சரான அதியமான், தன்னலம் கருதாமல் கொடுக்கிறார்.

இக்கதையின் வாயிலாக கொடையின் சிறப்பும் அதனைப் பெறுபவர்களின் மான்பும் வெளிப்படுகிறது. கொடை என்பது ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு, பெரும்பாலும் தானமாக வழங்கப்படும் பொருள் ஆகும். இது மரியாதை, அன்பு, அதிர்ஷ்டம், அல்லது உதவி அளிக்கும் நோக்கமாக இருக்கும். மேலும் கடவுளுக்கு அல்லது திருத்தலங்களுக்கு அளிக்கப்படும் பொருள் அல்லது பரிசுகளாகவும் இருக்கலாம். ஆகவே அறத்தையும் தர்மத்தையும்

உணர்த்தும் இதுபோன்ற படைப்புக்களைக் கற்பதன் மூலம் மாணவர்கள் சிறுபிராயத்திலேயே வாழ்க்கைக்குத் தேவையான நற்பண்புகளை மனதில் பதிவுச் செய்கின்றனர்.

(Kementerian Pendidikan Malaysia, 2018)

**இ) நான்காம் ஆண்டு**

*i) ஆனமுதலில்*

*'ஆனமுதலில் அதிகஞ் செலவானால்*

*மானம் அழிந்து மதிகெட்டுப் – போனதிசை*

*எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்புந்ப தீயனாய்*

*நல்லார்க்கும் பொல்லனாம் நாடு'*

எனும் ஔவையார் செய்யுளின் வாயிலாக ஒருவன் தனது வருமானத்திற்கு மிஞ்சிய செலவு செய்தால் கௌரவம் கெட்டு அறிவிழக்க நேரிடும். இதிலிருந்து தப்பிக்க, தான் போகும் இடங்களில் உள்ள அனைவரிடமும் திருடன் என்ற பழிச்சொல்லுக்கு ஆளாவான். ஏழு பிறப்பிலும் தொடர்ந்து வரும் பாவத்திற்கு ஆளாகித் தன்னிடம் அன்பு கொண்ட அனவருக்கும் பொல்லாதவனாக விளங்க நேரிடும். ஆகவே, வரவுக்குத்தக்கச் செலவு செய்ய வேண்டும்; வரவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். செலவைச் சுருக்கிக் கொள்ள வேண்டும் என்பதைச் சிறு வயதிலேயே கற்கின்றனர். இதன் மூலம் வருங்காலத்தில் திட்டமிட்டு வாழவும் கற்றுக்கொள்வர்.

(Kementerian Pendidikan Malaysia, 2019)

**ii) உயர்ந்த தூது**

அடுத்ததாக, 'உயர்ந்த தூது' எனும் கருத்தையும் வாசித்து அறிகின்றனர். அதாவது, அதியமான் ஔவையாரைத் தூது அனுப்பியதாகப் புறநானூற்றுப் பாடலில் கூறப்படுகிறது. செய்தியை ஒருவரிடம் தெரிவித்து வருவதற்கு மற்றொருவரை அனுப்புவதையே தூதாகும். தூதர் ஒருவருக்கு அன்பு, அறிவு, சொல்வன்மை ஆகிய மூன்றும் இருப்பது அவசியமாகும். மேலும் ஒழுக்கம், துணிவும் வேண்டும். தொண்டைமான் தன்னிடம் மிகுந்த படை வலிமை உள்ளதெனக் கர்வம் கொண்டான். எனவே அதியமானிடம் பகைமை கொண்டு போர் தொடுக்க எண்ணினான். போர் ஏற்படுமானால் உயிர்ச்சேதம், பொருள் சேதம் எனப் பல துயரங்கள் ஏற்படும் என்பதால் அதியமான் தமது வீரத்தையும் படைபலத்தையும் தொண்டைமானுக்கு உணர்த்தவே ஔவையாரைத் தூது அனுப்புகிறார். இதன் மூலம் மாணவர்கள் எச்சூழலிலும் சுயபுத்தியுடனும் சமயோசிதபுத்தியுடன் துலங்க வேண்டும் ரென இச்செய்யுளின் மூலம் அறிவர்.

**iii) விவசாயத் தொழில்**

*'வரப்புயர நீருயரும்*

*நீருயர நெல்லுயரும்*

*நெல்லுயரக் கோன் உயர்வான்*

*கோன் உயரக் குடி உயரும்'*

செந்தமிழ் புலவர் ஔவையார் அரசர்களை வாழ்த்தும் பொழுது வரப்புயர என்றுதான் ஆரம்பிப்பாராம். ஆகவே விவசாயத்தின் அவசியத்தை வழயுறுத்துவதோடு, விவசாயத்தில் கவனம் செலுத்தினால், செல்வ செழிப்புடன் இருக்கலாம் என்று மாணவர்களுக்கு எடுத்து இயம்புகிறது ஔவை பிராட்டியாரின் இந்த வைர வரிகள்.

(Kementerian Pendidikan Malaysia, 2019)

**iv) நன்றி**

*'நன்றி ஒருவற்குச் செய்தக்கா லந்நன்றி*

*என்று தருங்கொ லெனவேண்டா – நின்று*

*தளரா வளர்தெங்கும் தாளுண்ட நீரைத்*

*தலையாலே தாந்தருத லால்'*

நல்லவர்களுக்குப் பயன் கருதாமல் நாம் செய்கின்ற உதவி, தென்னையானது தன் வேரால் உறிஞ்சிய நீரைத் தன் தலையில் இளநீராகத் தருவதைப் போல நிச்சயமாக நமக்குப் பயன் தரும். ஆகவே மாணவர்கள் தங்களை வளர்த்து ஆளாக்கும் பெற்றோர்களைப் போற்றிட வேண்டும் என்று இம்மூதுரை விளக்குகிறது. மேலும் நன்றி மனப்பான்மை, பொதுவாக, நாம்

பெற்ற உதவிகளுக்கு, பரிவுக்கு, அன்புக்கு அடிப்படையாக கொண்ட உணர்வு. இந்த மனப்பான்மை மாணவர்களின் வாழ்வின் மிக முக்கியமான பகுதியென்பதால் இச்செய்யுள் மாணவர்களின் உளம்சார்ந்து கருத்துக்களைக் கிரகிக்கவும் வாழ்வில் கடைப்பிடிக்கவும் உதவுகிறது.

(Kementerian Pendidikan Malaysia, 2019)

**ஈ) ஐந்தாம் ஆண்டு**

**மூதுரை**

*'அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்*

*கடக்கக் கருதவும் வேண்டா – மடைத்தலையில்*

*ஓடுமீ னோட உறுமீன் வருமளவும்*

*வாடி யிருக்குமாங் கொக்கு'*

கொக்கானது, வாய்க்காலில் ஓடுகிற சிறுமீன்கள் ஓடிக்கொண்டிருக்க, அவற்றைப் பிடிக்க எண்ணாமல் தன் இரைக்கு ஏற்ற பெரிய மீன்கள் வரும்பவரை அடங்கிக் காத்திருக்கும். அதைப் போன்று அடக்கமாயிருப்பவரை அவரது வலிமையை அறியாது அறிவற்றவரென்று கருதி, அவரை வெல்வதற்கு முயலக்கூடாது. அதனால், துன்பமே வந்து சேரும். இம்மூதுரை வாயிலாக மாணவர்கள் வாழ்வில் சிறந்திட அதிக பொறுமையும் ஆழ்ந்து சிந்தித்து ஒரு நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என தெளிவு பெறுவர்.

(Kementerian Pendidikan Malaysia, 2020)

**உ)ஆறாம் ஆண்டு**

**i) மழை**

*'நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்*

*புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் – தொல்லுலகில்*

*நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு*

*எல்லார்க்கும் பெய்யும் மழை'*

நெற்பயிர்கள் செழித்து வளர வாய்க்கால்வழி பாய்ச்சப்படும் நீரானது நெற்பயிர்களை மட்டும் சேராமல் அங்குள்ள புற்களுக்கும் போய்ச் சேருகின்றது. இதனால், நெல்லோடு புல்லும் பயனடைகின்றது. இது போன்று இவ்வுலகில் வாழும் நல்லவர் ஒருவருக்காகப் பெய்யும் மழை அனைத்து உயிரினங்களுக்கும் பாகுபாடின்றி நன்மை அளிக்கும். இச்செய்யுளடி வாயிலாக மாணவர்கள் நற்பண்புகள் நிறைந்து வாழ வேண்டும். ஒரு நல்ல பண்பு நிறைந்த மாணவனின் நற்செயலானது, அவனையும் அவனைச் சார்ந்துள்ள குடும்பத்தையும் சமுதாயத்தையும் உயர்த்தும் என்பது திண்ணம்.

(Kementerian Pendidikan Malaysia, 2021)

**ஆய்வின் முடிவு**

ஔவைப் பிராட்டியின் சிந்தனையில் உதித்த உயர்ரக படைப்பாக்கம் தமிழ்மொழியில் இணைக்கப்பட்டது, நம் மாணவர்களின் அறிவு, ஆன்மீகம், உள்ளம், உடல் ஆகிய கூறுகளை வளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய கூறுகளை உள்டைக்கியதோடு, செய்யுள் மொழியணியும் இலக்கணமும் நற்பண்புகளையும் முறையான விதிகளையும் எடுத்துரைக்கும் மலேசிய நாட்டுக் கல்வி கொள்கை தமிழ் சமுதாயத்தின் எதிர்கால வாழ்வைச் செம்மை படுத்தும் என்பது உண்மை.

**பரிந்துரை**

ஔவையின் படைப்பிலக்கியங்கள் தமிழ்ப்பள்ளி மாணவர்களிடையே நன்கு சென்றடையச் செய்ய வேண்டும். அவரது செய்யுள்கள் மிக சிறந்த பண்புநெறி கொண்டது, அன்றாட வாழ்க்கை நடைமுறையில் பயன்பாட்டில் செய்ய வேண்டியதை உணர்த்துகிறது. குறிப்பாக தொழிநுட்பம் பயன்படுத்தி புதிய உத்திமுறையில் கற்பிக்க வேண்டும். கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் கற்றலாட்ட உத்திமுறையைக் கையாண்டால், மாணவர்களின் ஊக்கத்தை மேலொங்கச் செய்வதோடு அவர்களின் ஈடுபாட்டை மேலோங்கச் செய்கிறது என்கிறார் (Muhammad Aisuddin & Nurul Nadia 2019) மனமகிழ் கற்றல் நடவடிக்கையான கவூட், கூய்சஸ், வொர்ட்வோல் போன்றதாகும். (மனோகரன், 2022) கணினி வழி விளையாட்டு உத்தி தமிழ்மொழி இலக்கிய

பாடத்தில் மாணவர்களின் ஈடுபாட்டில் மாற்றத்தைக் காட்டுகின்றது என்கிறார். ஆகவே இந்த ஆய்வின் மூலம் பாடப்புத்தகத்தோடு நின்றுவிடாமல் இச்செய்யுளடிகளின் கருத்துக்களை முறையாகவும் எளியமுறையில் வருங்கால சந்ததினருக்கும் தொடர வழிவகைகள் செய்ய பரிந்துரைக்கப்படுகிறது.

## முடிவுரை

ஔவையின் படைப்பிலக்கியங்கள் தமிழ்ப்பள்ளி மாணவரின் அறிவாற்றலைப் பெருக்குவதோடு பாட, பேச, எழுத, உரையாட, நடிக்க, விவாதிக்க, மேடை அமைக்கவும்; அறிவுரைக் கூறி அன்புவழி காட்டவும்; ஈந்து மகிழும் உணர்வை ஊட்டவும்; சிந்திக்கவும் காரண காரியங்களை ஊகித்து மகிழவும் கதைகளைக் கொண்டுள்ளது. இதனைக் கற்போர் உயர்நெறி சிந்தனையாற்றலைப் பெற்று நன்மக்களாக நாட்டில் உலாவருவர். நன்னெறிப் பண்புள்ள மாணவர்கள் தமிழ்ப்பள்ளிகளிலேயே உருவாகிறார்கள். ஆகவே ஔவையின் படைப்பிலக்கியங்கள் அவர்களின் வாழ்நாளுக்கானச் சிறந்தப் பாடப்புத்தகமாக அமையும் என்பது வெள்ளிடைமலை.

## References


Arthur, J., Kristjánsson, K., Harrison, T., Sanderse, W., & Wright, D. (2016). Teaching Character and Virtue in Schools. Routledge.

Balasubramaniam, P. (2010). *Avvaiyar's Teachings: An Ethical Perspective*. Indian Literature Journal, 2(1), 21-34.

Bamkin, S. (2020). Moral Education in the Japanese Primary School Curriculum. Japan Forum, 32(1), 5-28.

Berkowitz, M. W., & Bier, M. C. (2020). Character education and social emotional learning: The relationships. *Journal of Character Education*, 16(1), 1-20.

Davidson, R., Dunne, J., Eccles, J. S., Engle, A., Greenberg, M., Jennings, P., Jha, A., Jinpa, T., Lantieri, L., Meyer, D., Roeser, R. W., & Vago, D. (2014). Contemplative practices and mental training: Prospects for American education. *Child Development Perspectives*, 6(2), 146-153.

Halstead, J. M., & Taylor, M. J. (2018). *Values in Education and Education in Values*. Routledge.

James, C., Davis, K., Flores, A., Francis, J. M., Pettingill, L., Rundle, M., & Gardner, H. (2017). Young people, ethics, and the new digital media: A synthesis from the good play project. *Contemporary Readings in Law and Social Justice*, 2(2), 215-284.

Joshee, R. (2008). *Citizenship education in India: From colonial subjugation to radical possibilities*. In J. Arthur, I. Davies, & C. Hahn (Eds.), The SAGE handbook of education for citizenship and democracy (pp. 175-188).

Kementerian Pendidikan Malaysia. (2016). *Buku Teks Bahasa Tamil SJKT Tahun 1*. Kuala Lumpur: Multi Education Book Enterprise.

Kementerian Pendidikan Malaysia. (2017). *Buku Teks Bahasa Tamil SJKT Tahun 2*. Kuala Lumpur: Multi Education Book Enterprise.

Kementerian Pendidikan Malaysia. (2018). *Buku Teks Bahasa Tamil SJKT Tahun 3*. Kuala Lumpur: Multi Education Book Enterprise.

Kementerian Pendidikan Malaysia. (2019). *Buku Teks Bahasa Tamil SJKT Tahun 4*. Kuala Lumpur: Multi Education Book Enterprise.

Kementerian Pendidikan Malaysia. (2020). *Buku Teks Bahasa Tamil SJKT Tahun 5*. Kuala Lumpur: Multi Education Book Enterprise.

Kementerian Pendidikan Malaysia. (2021). *Buku Teks Bahasa Tamil SJKT Tahun 6*. Kuala Lumpur: Multi Education Book Enterprise.

Lickona, T. (2009). *Educating for Character: How Our Schools Can Teach Respect and Responsibility*. Bantam Books.

Lovat, T., & Clement, N. (2008). Values education as holistic development for all sectors: Researching for effective pedagogy. *Oxford Review of Education*, 34(2), 253-271.

Manimaran, G. (2006). *Penampilan Nilai Budaya dalam Puisi Tamil Malaysia: 1957-1987*. Kuala Lumpur: Universiti Malaya.

Manugaran, S., Atan, N. A., & Yusof, S. M. (2022). *Pengintegrasian Permainan Berkomputer Dalam Pembelajaran Kesusateraan Bahasa Tamil Bagi Penguasaan Kemahiran Abad ke-21 Murid Sekolah*.

Mohanarasu. (2018). *Aathichudi Ilakiyangal* (1st ed.).Chennai: Manivasagar Pathipagam.

Narvaez, D., & Lapsley, D. K. (2008). Moral Education for the 21st Century: A Framework for Promoting Moral Competence. *Journal of Moral Education*, 37(2), 213-227.

Rajan, M. (2005). *The Influence of Avvaiyar on Tamil Literature*. Journal of Tamil Studies. Rajan, M. (2005). *The Influence of Avvaiyar on Tamil Literature*. Journal of Tamil Studies.

Seenivasan. (2022). *Barathiyin Puthiya Aathichudi Oru Vilakuvurai* (2nd ed.).Frontline Printers.

Shields, D. L. (2011). *Character Education for the 21st Century: What Should Students Learn?* Center for Curriculum Redesign, Boston.

Walker, D. I., Roberts, M. P., & Kristjánsson, K. (2015). The missing component in character education: Moral agency and self-authorship. *Journal of Moral Education*, 44(4), 439-451.

# அட்டாங்கயோகத்தில் இயமம் நியமம் - திருக்குறளினூடான பார்வை

# The Principle of Yama and Niyama in Attanayoga - A View Through the Tirukkural

கிஷாந்தினி திருச்செல்வம் / Kishanthiny Thiruchchelvam[1]

Date of submission: 2024-10-11
Date of acceptance: 2024-11-15
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name:
Kishanthiny Thiruchchelvam
Email: tkishanthiny@univ.jfn.ac.lk

**Abstract**

There are four ways to get pearls in Hinduism. One of them is Yoga. Yoga is meditation. The Patanjali Yogasutra and the Tirumantra describe eight types of yoga. The number represents the number eight. An element is a part. Yoga means union and union. It is said that its meaning is to grow and unite with God by grace. Atankayogam is said to describe the eight steps that the living entities must follow in order to be united with God. Of these two principles, the yama and the niyama, are the source of the yoga. If this is done, other rules can be applied. They are believed to provide physical and mental health to those who practice yoga and make them better yogis. The Patanjali Yoga Sutra has five yamas and the Tirumandira Yoga Sutra has ten yamas. They are falsehood, falsehood, falsehood, goodness, self-control, neutrality, reasonableness, impurity, blindness, and lack of lust. At the same time, the canon is characterized by asceticism, temperance, orality, the philosophers' own way of life, and the worship of God. This field of research is focused on identifying and revealing them in the form of scrolls. The Tirukkural, which is referred to as the universal scripture, is remarkable in that it contains in itself not only theological but also philosophical ideas. It is remarkable that Tirukkural has spoken of the concepts of Yama and Niyama as embodied in the Patanjali Yogasutra and the Tirumantra. The study is structured in terms of analytical and comparative research approaches. Data collected is analyzed and analyzed.

**Keywords:** Attanayoga, Yama, Niyama, Thirukkural, Thirumantra, Yogasutra

## அறிமுகம்

உயர்ந்தநெறி அல்லது நெறிகளைப் பயின்று உயர்ந்த குறியை அடைவது என யோகம் என்னும் பதம் பொருள் கொள்ளப்படுகிறது. அளப்பரிய மகோன்னதநிலை எய்துவது மனிதனுக்குச் சாத்தியம் என்று இந்த சாஸ்திரம் கூறுகிறது. அதிகாரிபேதம், சமயபேதம் என்னும் பாகுபாடு இன்றி மக்கள் எல்லோராலும் பழகுவதற்குரிய மார்க்கம் இதுவாதலால் இது இராஜயோகம் என்னும் பெயர்பெறுகிறது. இராஜபாதை *(Public Road)* அனைவருக்கும் பொதுவானது போன்று இராஜயோகமானது மேன்மையுற விரும்புவோர்க்கெல்லாம் பொதுவுடைமையாகும்.

[1]The author is a Lecturer in the Department of Hindu Civilization,University of Jaffna.tkishanthiny@univ.jfn.ac.lk

யோகம் என்ற சொல்லுக்கு இருவேறு பெயர்கள் கூறப்பட்டுள்ளன. இது 'யுஜ்'என்ற சம்ஸ்கிருதமொழியில் உள்ள சொல்லின் வழியே பிறந்ததாகும். இதற்கு ஒருங்கிணைத்தல் அல்லது சேர்தல் என்பது ஒருபொருள். அதாவது தனிஒரு ஆன்மா பரம்பொருளுடன் இணைதலை யோகம் என்ற சொல் குறிக்கும். உபநிடதம், பகவத்கீதை என்பவற்றில் மேற்குறித்த பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. கிருஷணபரமாத்மா, "நம் அவல குணங்களை நீக்கி பலவித யோகத்தால் நற்கதி அடைவதே யோகம்"என்பர்.

பதஞ்சலி, "யுஜிர் யோகே யுஜ் ஸமாதெள என்பன ஸ்யுத் பத்திகள்"என மனவோட்டத்தைத் தடுப்பதே 'யோகம்'என்று குறிப்பிடுகிறார்.

யோகம் மனிதன் மேற்கொள்கின்ற அகமுகப்பயணம். அப்பயணத்தில் மனதைக் கருவியாகக்கொண்டு, கூர்ந்து கவனித்து பல உண்மைகளை அவன் அறிகின்றான்.

### சித்த விருத்தி

ஆன்மா சித்தவிருத்தியின் காரணமாகவே புறத்தே உள்ள பொருட்களை அறிகின்றது. சித்த விருத்திகள் ஐந்து வகையாகக் குறிப்பிடப்படுகின்றன. அவை, பிரமாணம் (ஏற்புடையஅறிவு) விபரியாயம் (பிழைபட்டஅறிவு), விகல்பம் (நுண்மையொடு பொருந்தாது சொற்களினால் வெளிப்படும் பொருளளவினாலன்றிச் சொல்லளவினால் அமையும் கருத்து) நித்திரை, நினைவு என்பனவாகும்.

உண்மையில் ஆன்மா எந்தவித மாற்றமோ விருத்தியோ பெறாவிடினும், சித்தத்தின் மாறுபடும் நிலைகளிலும் போக்குகளிலும் பிரதிபலிப்பதால் தானும் சித்தத்தைப்போலவே மாற்றங்கள்பெறுதல் போலக்காட்சியளிக்கின்றது. இதனாலேயே பதஞ்சலி, யோகம் என்பதற்கு "ஸித்த விருத்தி நிரோதக" (யோகசூத்திரம், 1:2) என விளக்கமளிப்பார். இதன்படி மனத்திலிருந்து தோன்றுகின்ற எண்ண அலைகளைப் போக்குதலே யோகமாகும்.

*"மனமென்னும் மாடு அடங்கில் தாண்டவக்கோனே - முத்தி வாய்த்ததென்று எண்ணேடா தாண்டவக்கோனே"* (இடைக்காட்டுச்சித்தர் பாடல்: 13)

என்ற இடைக்காட்டுச் சித்தருடைய பாடலும் இதனையே தெளிவுபடுத்துகின்றது. மனத்தைப் பற்றிய விரிவான ஆராய்ச்சியும் மனத்தின் ஆற்றலால் விளையும் சாதனைகள் குறித்தும் விளக்குவதனாலேயே யோகதரிசனத்தை மன விஞ்ஞானம் (Science ofMind) எனவும் அழைப்பர்.

*"யோகாங்கானுஷ;டானாத சுத்திNயே ஞான*

*தீப்திரா விவேகக்யாதே"* (யோகசூத்திரம், சாதனாபாதம்: 28)

ஆன்மா சார்ந்த கட்டுதிட்டங்களில் எல்லா அசுத்தங்களும் அகற்றப்பட்டவுடன் யோகத்தின் அங்கங்களாகச் சொல்லப்படுபவற்றைப் பயிற்சிசெய்து உயரிய ஞானம் பெறப்படுகிறது. மனதின் அசுத்தங்களைத் துடைத்தெறிய நாம் கருத்தூன்றிக் கவனிக்க வேண்டிய விதிகளும் பயிற்சிகளும் யோகத்தின் அங்கங்கள் ஆகும். அசுத்தங்களைத் துடைத்தெறிவது என்பது ஆன்ம அறிவைப்பெறத் தடையாயிருப்பவற்றைத் தகர்ப்பதாகும். ஆன்மா சார்ந்த சட்டதிட்டங்களின் முழுமையான நோக்கம் இதுதான். அறிவைப் பொறுத்தவரை தேடிப்பெற வேண்டியதல்ல. அது முன்பே நமக்குள் இருக்கிறது. உலக வாழ்க்கைக்குரிய அறிவு வேறு. அதைப் புத்தகங்களிலிருந்தும் புறவுலக அனுபவங்களிலிருந்தும் நாம் பெற்றுவிட முடியும். தடைகள் அகற்றப்பட்டவுடன் ஆத்மன் வெளிப்படுவான். ஞானம் வெளிப்படுதலைக் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். அதை அடைவது உடலையும் மனதையும் தன்வசப்படுத்திக் கொள்வதால் சாத்தியமாகும். அடுத்து அதற்கான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும் (ஆச்சார்யா, 2004: 145).

### அட்டாங்க யோகம்

சித்த விருத்திகளைக் கட்டுப்படுத்தி நிறைவான ஆத்மிக வாழ்வை அமைத்தலுக்கு யோக தரிசனம் அட்டாங்க யோக விதியை வலியுறுத்துகிறது. இயமம், நியமம், ஆசனம்,

பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவே அட்டாங்க யோக உறுப்புக்களாகும். ஒரு மனிதனை சாதாரண வாழ்க்கைக் கட்டுப்பாட்டிலிருந்து உயர்நிலைக்குக் கொண்டு வந்து சேர்ப்பது வரை ஒவ்வொன்றையும் படிப்படியாகச் செய்வதே அட்டாங்க யோகமாகும். புற, அகத்தூய்மையை ஏற்படுத்துவதே இந்த யோகப்பயிற்சியின் குறிக்கோள்.

*"இயம நியமமே எண்ணிலா ஆதனம்*

*நயமுறு பிராணாயாமம் பிரத்தியாகாரஞ்*

*சயமிகு தாரணை தியானஞ் சமாதி*

*அயமுறும் அட்டாங்க மாவது மாமே"* (திரும.552)

எனத் திருமூலர் வலியுறுத்தியுள்ளார்.

ஆன்மாக்களை உலகியல் தொடர்பினின்றும் விடுவிப்பதற்கான அல்லது ஆன்மிகப் புணர்ப்பினை ஏற்படுத்துவதற்கான வழிகளாக யோகமார்க்கத்தில் எட்டு அங்கங்களும் கூறப்பட்டுள்ளன. இந்த எண்வகை மார்க்கங்களையும் நந்தியெம்பெருமானார் விளக்கியவர். அவை தீதகற்றி நன்னெறி நின்றொழுக வழிசமைக்கின்றன எனத் திருமூலர்,

*"உரைத்தன வற்கரி ஒன்று மூடிய*

*நிரைத்த இராசிநிரை முறை எண்ணிப்*

*பிரைச்சதம் எட்டும் பேசிய நந்தி*

*நிரைத்த இயமம் நியமஞ் செய்தானே"* (திரும.549)

கூறுகிறார். தொடர்ந்து "இயம நியமமே எண்ணிலா ஆதனம்" (திரும.552) என்ற பாடலில் 'இயம நியமமே'என ஏகார விகுதியினால் இயமம், நியமம் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளமையும் அவதானிக்கத்தக்கது. ஒருவரது யோகவாழ்வியல் முழுமை பெறுவதற்கு அடிப்படைத் தகுதிகளாக இவை முதன்மைப் படுத்தப்பட்டிருக்கின்றன. இயமம், நியமம் ஆகியன மனிதனது நடத்தை சார்ந்து முன்வைக்கின்ற பண்பியற் கருத்தாக்கங்களாகும். இவையே மனிதனை விழுமியப் பண்புள்ளவனாக்குகின்றன. இவற்றைத் திருக்குறளில் நோக்கலாம்.

## திருக்குறளில் இயம நியமங்கள் குறித்த கருத்தமைவுகள்

மாந்தர்கள் தம் அகவாழ்விலும் புறவாழ்விலும் சுமூகமாகக்கூடி இன்பமுடனும் இசைவுடனும் நலமுடனும் வாழத் தேவையான அடிப்படைப் பண்புகளை விளக்கும் அறஇலக்கியமே திருக்குறள். இதனை இயற்றியவர் திருவள்ளுவர் ஆவார். அகிம்சையை மையமாகக்கொண்டு இயற்றப்பட்ட இந்நூல் தனிநபர் நல்லொழுக்கங்களான இன்னாசெய்யாமை, கொல்லாமை, கள்ளாமை இவற்றோடு வாய்மை, தூய்மை, பொறுமை, அன்பு, சான்றாண்மை, இல்வாழ்க்கை முதலான ஒழுக்கங்களை நியம முறைப்படி வகுத்துக்காட்டிய தொகுப்பாக திருக்குறளை அடையாளப்படுத்த இயலும். இவற்றின் ஒட்டுமொத்த சிந்தனைகளினதும் சாரமாக அட்டாங்க யோகத்தில் குறிப்பிடப்படும் இயம நியமங்களே அமைந்து விடுகின்றன.

திருமூலரால் விதப்புரை செய்யப்பட்டுள்ள மேல்வரும் சிந்தனைகள் திருவள்ளுவருடைய அற நியமங்களோடு ஒத்துப் போகுமாற்றை உணரமுடிகிறது. அதாவது இறைவனை அடைய உலகத்தில் கிடைக்கும் மலர்களில் இறைவனுக்குச் செய்யும் பூசைகளைவிட புலனடக்கம், அன்பு, தியானம், அறிவு, கொல்லாமை, பொறுமை, வாய்மை ஆகிய நல்லொழுக்க மலர்களால் இறைவனைப் பூஜிப்பதால் விரைவில் இறைவனையே அடைந்து பேரின்பம் அடையலாம் என்பதாகும்.

*"பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்*

*மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்*

*நற்றார் நடுக்கற்ற தீபமும் சித்தமும்*

*உற்றாரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே"* (திரும.197)

இவற்றை நாம் தனித்தனியாக திருக்குறளை அடிப்படையாகக் கொண்டு நோக்க முடியும்.

**இயமம்**

தீயனவற்றில் மனதைச் செல்லவிடாது கட்டுப்படுத்தி நெறிப்படுத்தும் கட்டளைகளாகக் காணப்படுவனவே இயமங்களாகும். சமூகம், நாடு, இனம், மொழி, சாதி, பால் என்பன கடந்து யாவருக்கும் விலக்கத்தக்கதும் கடைப்பிடிக்கத்தக்கதுமான பொதுவான அறம் என்பதனைக் குறிக்க 'இயமம்'என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது.

பதஞ்சலி முனிவர் அஹிம்ஸை (கொல்லாமை), சத்யம் (பொய்பேசாமை), அஸ்தேயம் (கள்ளாமை), பிரமச்சரியம் (காமமின்மை), அபரிஹிரகம் (பேராசையின்மை) என ஐந்து இயமங்களையும் எதிர்மறை அறங்களாகக் கட்டமைத்துள்ளார்.

"*அஹிம்ஸா ஸத்யாஸ்தேய ப்ரஹ்மசர்யா பரிக்ரஹ யமா*" (யோக சூத்:II: 30)

இவை காலம், இடம், ஜாதி நியமங்களால் தடைப்படாததால் உலகம் தழுவிய மகாவிரதங்கள் என்பர்.

"*ஏதே ஜாதி தேசகால ஸமயானவச்சின்னா*

*ஸார்வ பௌமா மஹாவ்ரதம்*" (யோக சூத்:II:31)

திருமூலர்,

"*கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்,*

*நல்லான் அடக்கம் உடையான் நடுச்செய்ய*

*வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கள்காமம்*

*இல்லான் இயமத்திடையில் நின்றானே*" (திரும.554)

என்ற திருமந்திரப் பாடலில் மேற்குறித்த கருத்தினை விளக்கி நிற்பதும் கவனிக்கத்தக்கது.

**திருக்குறளில் இயம நெறிகள்**

பதஞ்சலி முனிவர் மற்றும் திருமூலரால் முன்மொழியப்பட்ட அஹிம்ஸை, சத்தியம், பிரமச்சரியம், திருடாமை, ஆசையின்மை முதலிய இயமநெறிகளைத் திருவள்ளுவர் இன்னாசெய்யாமை, பொய்பேசாமை, காமமின்மை, கள்ளாமை, அவாஅறுத்தல் போன்ற கருத்தமைவில் எடுத்துரைக்கின்றார்.

**1. கொல்லாமை மற்றும் இன்னா செய்யாமை**

சிற்றுயிர்களும் அவைபோன்ற மக்களும் பிற உயிர்களைத் துன்புறுத்தியோ அல்லது துடைத்துத் தள்ளியோ வாழ்ந்து வருகின்றனர். அவ்வாறு இல்லாமல் பிறருக்கு உடலாலோ உள்ளத்தாலோ எந்த விதத்திலும் துன்பம் செய்யாமையை வலியுறுத்துவதாகவே இதனை அஹிம்ஸை என பதஞ்சலியால் எடுத்தாளப்பட்டிருக்கிறது. திருமூலர் 'மற்றோர் அணுக்களைக் கொல்லாமை' (திரும.197) என்று கொல்லாமையை வலியுறுத்தியுள்ளார். சொல்லாலும் செயலாலும் நாம் பிறரைத் துன்புறுத்துகின்ற போது மற்றவர் அதனைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். இது இயம நெறியில் முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. யாருக்கும் எந்தக் காலத்திலும் எந்தத் தீங்கும் செய்தல் கூடாது என்பதை வலியுறுத்துவதில் வள்ளுவரும் பிரயத்தனப்பட்டுள்ளார்.

"*எனைத்தாலும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்*

*மாணா செய்யாமை தலை*" (குறள்: 317)

என்ற குறள் இதனைச் சான்றுப்படுத்துகிறது.

மேலும் ஒப்பற்ற நல்லறம் என்பது 'நல்லது கொல்லாமை' (323) ஆகும் என்று வள்ளுவர் சுட்டியுள்ளார். இதனை,

"*நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்*

*கொல்லாமை சூழும் நெறி*" (குறள்: 324)

என்ற குறள் விளக்கி நிற்கிறது.

**2. பொய் பேசாமை**

மெய்யினது தன்மை வாய்மை ஆகும். பதஞ்சலிமுனிவர் இதனை ஸத்யம் என்கிறார். அதாவது பொய் பேசாமை என எதிர்மறைப் பொருளில் எடுத்தாளலாம். பெரும்பான்மையும் காமமும் பொருளும் பற்றி நிகழ்கின்ற

பொய்ம்மையை விலக்கின் வாழ்வு இனிக்கும் என்பதறிக. இதனை வள்ளுவரும் சிறப்பாகக் கட்டமைத்துள்ளார். ஒருவன் தன்னுள்ளத்தளவிலும் பொய்கூறாது ஒழுகுவானாயின் அவன் உயர்ந்தோர் உள்ளத்தில் எல்லாம் உயர்வாக மதிக்கப்படுவான் என பொய்ம்மை விலக்கலின் உயர்வைப் பகிர்ந்துள்ளார் வள்ளுவர்.

*“உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்*

*உள்ளத்து ளெல்லாம் உளன்” (குறள்: 294)*

என்ற குறள் மேற்போந்த கருத்திற்கு வலுவாகின்றது. மேலும் பொய்யற்க ஒருவன் வாழ்வானாயின் பிற நற்கருமங்களைச் செய்யவேண்டிய அவசியம் ஏற்படாது என்பதும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

*“பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற*

*சேய்யாமை செய்யாமை நன்று” (குறள்: 297)*

### 3. காமமின்மை

இதனைப் பிரமச்சரியம் என்கிறது யோகசூத்திரம். திருமூலர் காமமின்மை என்பதாகச் சுட்டியுள்ளார். பிறவிப்பிணிக்கு வித்து காமநோய். பின்பு யோகியானவன் பொறிவழிச் செல்லாமை பிரமச்சரியம் பூண்டவனாகின்றான். இந்திரிய சுகங்களிலிருந்து தன்னைக் ‘காப்பது விரதம்’ என்னும் சிறப்பு அவன்பால் மிளிர்கிறது. இந்நெறியினைத் திருவள்ளுவர் ‘துறவு’ என்பதாக வலியுறுத்துகிறார். துறவு என்பது இல்லற வாழ்க்கையை முற்றாகத் துறத்தல் என்பதல்ல. தாமரை இலைத்தண்ணீர் போன்று உலகவாழ்வில் இருத்தலையே இது குறிக்கின்றது. யோகநெறியில் ஈடுபடுபவர்கள் முற்றிலும் இல்வாழ்வைப் புறக்கணித்தல் தேவையன்று. இல்வாழ்வில் ஈடுபட்டுக் கொண்டே யோகநெறிகளைச் செய்யலாம். அதற்கு ஐம்புலன்களையும் அடக்கியாள வேண்டும். இதனை,

*“அடல்வேண்டும் ஐந்தன்புலத்தை விடல்வேண்டும்*

*வேண்டிய எல்லாம் ஒருங்கு” (குறள்: 343)*

என்று வள்ளுவர் எடுத்தியம்பியுள்ளார். ஐம்பொறிகளுக்கு உரியனவாகிய ஐம்புலன்களையும் வெல்லுதல் வேண்டும். விரும்பிய பொருளின்மீது கொண்டுள்ள பற்றுதலையும் ஒருங்கே விடவேண்டும் என்று துறவு என்ற நெறியில் இயமநெறியைத் தெளிவுறுத்துகிறார்.

### 4. திருடாமை

தனது சுக ஜீவனத்தின் பொருட்டுப் பிறர்பொருளை முறைதவறிப் பற்றுவது களவு. ஆனால் யோகிக்கு அஸ்தேயம் எனப்படும் கள்ளாமை அணிகலமாகின்றது என பதஞ்சலி யோகசூத்திரம் முன்மொழிந்துள்ளது. களவு தனிமனிதனையும் சமுதாயத்தையும் சீர்குலைக்கும் தன்மை கொண்டது. ஆகவேதான் ‘களவு’ நன்னெறியாகா என்பதை உணர்ந்த நிலையில் ‘கள்ளாமை’ எனும் எதிர்மறைப் பொருளில் இதனை எடுத்தாளுகின்றார்.

வள்ளுவர் பிறரது பொருளை வஞ்சித்து அடைய நினைக்கக்கூடாது. பிறர் பொருளை விரும்பா உள்ளத்துடன் வாழ்தல் வேண்டும் என்கிறார். உள்ளத்தால் கூட பிறர் பொருளைக் கவர நினைக்கக்கூடாது என்பதைப் பின்வருமாறு வலியுறுத்துகிறார்.

*“உள்ளத்தால் உள்ளலும் தீதேபிறன் பொருளைக்*

*கள்ளத்தால் கள்வேம் எனல்” (குறள்: 282)*

களவு எண்ணம் உடையவருக்கு மனம் ஒரு நிலையில் இருக்காது. இங்குமிங்கும் அலைந்துகொண்டே இருக்கும். ஒழுக்கம் குன்றும். யோகநெறி கைகூடாது. அதனால் திருடும் பண்பை விட்டொழிக்க வேண்டும் என்று யோகநெறியினர் முன்மொழிகின்றனர்.

### 5. பேராசையின்மை

அபரிஹிரகம் மனதைத் தூயநிலையில் வைத்திருப்பதற்கு உற்ற உபாயமாகும். ஆசை இல்லாதவருக்குத் துன்பம் இல்லையாம். துன்பத்திற்கே துன்பத்தைக் கொடுத்தால் இத்துன்பமே இன்பத்தைக் கொடுக்கும் என்பது இன்பநலக்கோட்பாடு. அத்தகைய இன்பத்தை

நிரந்தரமாக்கிக் கொள்ள ஆசைஅறுத்தல் பிரதானம் என்பதில் வள்ளுவரும் உடன்படுகிறார்.

*"அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம் அஃதுண்டேல்*

*தவாஅது மேன்மேல் வரும்"* (குறள்: 368)

என்றகுறளினூடாக, ஆசை இருக்குமானால் எல்லாத் துன்பங்களும் மென்மேலும் வளர்ந்துகொண்டே போகும் என்பதாக வள்ளுவர் எச்சரிப்பதிலிருந்து ஆசை விட்டொழித்தல் சிறந்த இயமநெறியாகப் பார்க்கப்படுகிறது. திருமூலரும், "ஆசை படப்பட ஆய்வரும் துன்பங்கள் ஆசை விடவிட ஆனந்தம் ஆமே" (திரும.2615) என அறிவுறுத்துவதும் இதனையேயாகும்.

**நியமம்**

தனிநபர் ஒழுக்கத்துக்குப் பொருந்தும் நடத்தைவிதிகள் நியமங்களாகும். விதிக்கப்பட்ட நல்லனவற்றைச் செய்தல் நியமம் எனப்படும் உடன்பாட்டு அறங்கள் ஆகும். இவற்றின்கீழ் ஐந்து விதிகள் உள்ளன. அவை தூய்மை, வாய்மை, தவம், ஞானநூல் பயிலுதல், இறைப்பற்று என்பவை. இதனையே யோகசூத்திரம்,

*"சௌச சந்தோஷ தப: ஸ்வாத்யாயேச்வர*

*ப்ரணி தானானி நியமா"* (யோக சூத்: II-32)

என்கிறது. கால்களைத் தூய்மை செய்து வீட்டினுள் நுழைய வேண்டும் என்பதுபோல ஒழுக்கங்களை வாழ்வில் அனுசரிக்கும்போது கைக்கொள்ளவேண்டிய விதிமுறைகளே இவையாகும்.

*"தூய்மை அருள்ஊண் சுருக்கம் பொறைசெவ்வை*

*வாய்மை நிலைமைவ ளர்த்தலே"* (திரும.556)

என யாவராலும் சிறப்பாகக் கடைப்பிடிக்கத்தக்க நியமங்களைத் திருமூலரும் அடையாளங் காட்டியுள்ளார்.

**திருக்குறளில் நியமம்**

**1. தூய்மை**

உடலைப் புறமென்றும் உள்ளத்தை அகமென்றும் சான்றோர் பகர்வர். யோகிக்கு உடலுளத் தூய்மை அவசியமான தகுதிப்பாடாகக் கருதப்படுகிறது. தூய்மையான உணவு, நீர் உள்ளிட்டவற்றைப் பயன்படுத்தி உடலைச் சுத்தமாக வைத்திருப்பதைப்போல, ஆசனங்கள், பிரணாயாமம், நற்செயல்கள் போன்றவற்றின் மூலம் உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருத்தல் சாலச்சிறந்தது. யோகிகள் தூய்மையாக இருக்கும் நிலையை,

*"புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை*

*வாய்மையாற் காணப்படும்"* (குறள்: 298)

என்ற குறள் தெளிவுபடுத்துகிறது. அதாவது புறவுடல் நீராலும் உள்ளம் சத்தியத்தாலும் தூய்மையாகும் என்பது வள்ளுவரின் ஞான விளக்கமாகும். மேலும், மனத்துள் எந்தவிதமான தீயஎண்ணங்களையும் ஏற்படுத்தாது இருத்தலே உளத்தூய்மைக்கு உகந்தநெறி என்பதை,

*"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்*

*ஆகுல நீர பிற"* (குறள்: 304)

என்ற குறட்பா வலியுறுத்தி நிற்கிறது.

**2. வாய்மை**

வாய்மையே வெல்லும் என்பது சட்டநூலோர் வகுத்தவிதி. இதனைச் சந்தோஸ என்பதாக பதஞ்சலி அடையாளம் காட்டியுள்ளார். வாய்மை என்றும் மாறாததும் நிலையானதும் முழுமையானதுமாகும். இறைவனை அறிவதற்கு வாய்மைநெறியே அடிப்படையாகும். வாய்மை என்பது மனம், வாக்கு, காயம் எனும் திரிபுடி நிலைகளிலும் தூய்மையாக இருப்பதைக் குறிக்கின்றது. இத்தகைய நெறியை,

*"மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு*

*தானம் செய்வாரின் தலை"* (குறள்: 295)

ஒருவன் தன்மனத்தோடு பொருந்த வாய்மையைச் சொல்வானாயின் அவன் தவமும்

தானமும் செய்வாரை விடச் சிறந்தவன் ஆவான் என்பதை மேற்போந்த குறளினூடாக எடுத்தியம்பிய வள்ளுவர் திறம், இயமம் குறித்த நிலைப்பாட்டை உறுதிப்படுத்துகிறது.

### 3. தவம்

தபஸ் (தவம்) என்பதாக பதஞ்சலி முன்மொழிந்துள்ள இந்நியமநெறியானது பிராயச்சித்தம் எனவும் கொள்ளப்படுகிறது. அகரமுதலி இதனைக் கழுவாய் என்று குறிப்பிடுகிறது. எதனைக் கண்டும் கலங்காது பொறுத்துக்கொண்டு அதிலிருந்து மீள்வதைக் கழுவாய் என்பது தெளிவுறுத்துகின்றது. இடுக்கண்வந்த விடத்து அதிலிருந்து மீள்வதற்கான கழுவாயை அதாவது வழியைத்தேடி அதனை வெற்றிகரமாக எதிர்கொள்ளல் அவசியமானது. இதனை வள்ளுவர் இடுக்கண் அழியாமை என்று வலியுறுத்துகிறார். யோகநூலோர் இதனைத் தவம் என்பர். தவம் என்பதற்கு மனவலிமை என்று பொருள்கோடல் செய்யப்படுகிறது. இதிலிருந்து பிராயச்சித்தம் என்பதும் ஒருவகையான மனவலிமையை வலியுறுத்துகின்ற நிலையில், துன்பத்தைக்கண்டு துவளாமல் துன்பத்தை இன்பமாக்குகின்ற மனவலிமை படைத்தவர் எவரோ அவர் துன்பத்திற்கே துன்பத்தை உண்டுபண்ணலாம் என்பதனை வள்ளுவர் துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளார்.

*“இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு*

*இடும்பை படாஅ தவர்”* (குறள்: 623)

மேலும் தமக்கு வந்த துன்பத்தைப் பொறுத்தலும் பிறவுயிர்களுக்குத் தாம் துன்பம் செய்யாமலிருத்தலும் ஆகிய பண்புள்ளவனே தவத்திற்கு உரியவனாகின்றான் என்றும் வள்ளுவர் கருத்துரைத்துள்ளார்.

*“உற்றநோய் தோன்றல் உயிர்க்குறுநோய் செய்யாமை*

*அற்றே தவத்திற் குரு”* (குறள்: 261)

### 4. ஞானநூல் பயிலுதல்

பதஞ்சலி முனிவர் யோகினாவர் ஸ்வாத்யாய (ஞானநூல்களைப் பயிலுதல்) செயல்களிலும் ஈடுபட வேண்டும் என அட்டாங்க யோகத்தில் நியமநெறியில் கட்டமைத்துள்ளார். இந்நியமநெறியானது யோகிக்கு மட்டும் உரித்தானது அல்ல. அனைவராலும் பின்பற்றப்பட வேண்டிய ஒரு நியமமாகும். இந்நிலையில் வள்ளுவர் அரசனுக்கு இருக்கவேண்டிய தகைமைப் புலத்திலேயே இந்நியமநெறியினை வலியுறுத்தியுள்ளமை காணலாம். அரசன் அறிவுடையவனாயின் தனக்கு மட்டுமன்றி மன்னுயிர்கள் எல்லாம் பயனடையும் என்ற உயரிய நோக்குநிலையிலேயே இந்நெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஞானநூல்களைப் பயிலுவதால் ஏற்புடைத்தாகும் நற்பேறுகளையும் சுட்டித்துரைக்கும் அதேவேளை, கல்லாமை காலங்கழிக்கும் மடந்தைகளையும் கேள்விகளால் உணரவைக்கும் தன்மையையும் காணலாம்.

*“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*

*எழுமையும் ஏமாப் புடைத்து”* (குறள்: 399)

ஒருவன் ஒரு பிறப்பின்கண் கற்றகல்வி அவனது ஏழுபிறப்பினும் சென்றுஉதவும் என்பது வள்ளுவரின் நிலைப்பாடு. கற்றறிவாளனுக்குத் தன்நாடு மட்டுமன்றி ஏனையநாடும் ஊரும் தனக்குடைமையாகவே கொள்ளப்படும். அவ்வாறு இருக்கையில் கல்விகற்காமல் காலங்கடத்துவது ஏன்? என்றும் கூறியுள்ளார்.

*“யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்*

*சாந்தணையும் கல்லாத வாறு”* (குறள்: 397)

### 5. இறைபற்று

புறமாகிய செல்வத்தின் கண்ணும் அகமாகிய யாக்கையின் கண்ணும் உளதாம் தன்மையினை அதனது நிலையாமையை உணர்ந்து அவற்றின்மீது கொண்டுள்ள பற்றினை நீக்கிவிட்டால் பேரின்பமாகிய இறைவனை இறுகப்பற்றலாம் என்பது ஆன்மாவின் இறுதி இலட்சியமாகும். இதனை பதஞ்சலியோகசூத்திரம் ஈஸ்வரப்ரணிதான என்றுகூறுகிறது. அதாவது இறைவனைச் சேருதலையே விளக்கிநிற்கிறது. அனைத்து உயிர்களும் இறைவனே

பற்றுக்கோடாக உள்ளான் என்பதை யோகநெறியில் இருப்பவர்கள் உணர்தல் வேண்டும். இதனை,

"*யான்எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு*

*உயர்ந்த உலகம் புகும்*" (குறள்: 346)

"*பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*

*பற்றுக பற்று விடற்கு*" (குறள்: 350)

நான், எனது என்ற செருக்கை இல்லாமற் செய்தும் உலகியலின்பப் பற்றினை விட்டும் தியானப்பயிற்சிகளில் ஈடுபட்டு வாழ்வைத் தகவமைத்துக் கொண்டால் மேலான உயர்ந்த உலகத்தை (இறைவனை) அடையலாம் என்பதை மேற்போந்த இரண்டு குறள்களின்வழி உணர்த்தப்பட்டுள்ளது.

**நிறைவாக**

யோகநெறியில் நிற்பவர்களுக்கு உடல்உள ஆரோக்கியத்தை வழங்கி, சிறந்த யோகியாக அவர்களை மாற்றவல்ல நெறிகளே இயம நியமங்களாகும். மனம், வாக்கு, காயம் எனும் திரிபுடிநிலைகளில் விருத்தி, தூய்மை மற்றும் மனத்திட்பம் முதலியவற்றை மேம்படுத்துவதற்குரிய அடிப்படை மைல்கற்களாக அமைபவையும் இவையே. யோகத்தின் எட்டுப் படிநிலைகளில் முதலிரு நிலைகளாகிய இயமம், நியமநெறிகளே நன்னிலை மேம்பாட்டிற்கு முதற்காரணம். இவையே ஆன்மிகத்தின் அடிப்படையும்கூட. இவ்விருவகை நெறிமுறைகளும் சமுதாயத்தை விழுமியங்களின் அடிப்படையில் முழுமைத்துவம் பெற வைப்பதில் முனைப்புக் கொண்டுள்ளன. பதஞ்சலிமுனிவர், திருமூலர் ஆகியோர் யோகியின் வாழ்வைப் பூரணத்துவப்படுத்துவதற்கான நிலையில் இவற்றைக் கட்டமைத்துள்ள திறம், திருக்குறளில் சாதாரண மனிதனின் ஆன்மிக வாழ்வியலையும் தீர்மானிக்கின்ற வகையில் அறநெறிகளாகப் பகிரப்பட்டுள்ள விதம் பாராட்டிற்குரியது. இந்நிலையில் அறஇலக்கியமான திருக்குறள் யோகநெறிகளுக்கான அடிப்படைகளைத் தனக்கே உரித்தான பாணியில் முன்வைத்துள்ள தன்மையில் ஒரு யோகநூலாகவும் நோக்க வாய்ப்பாகின்றது. மேலும் இக்கட்டுரைமூலம் வெளிக்கொணரப்பட்டுள்ள இயமநியமநெறிகள் எக்காலத்திற்கும் ஏற்புடைத்தான வாழ்வியல் அப்பியாசங்களாகவும் கடைப்பிடித்தல் நன்மைபயக்கும் எனலாம்.

## References

Āccāryā, Pi. Es. (٢٠٢٤). *Patañcali Yōkacūttiram: Eḷiya Tamiḻ Viḷakkam*. Ceṉṉai: Narmatā Patippakam. [*ஆச்சார்யா, பி. எஸ். (2024). பதஞ்சலியோக சூத்திரம்: எளிய தமிழ் விளக்கம். சென்னை: நர்மதா பதிப்பகம்.*]

Tāmas, Pa. Ār. (2010). *Aṭṭāṅkayōkam*. Ceṉṉai: Kuṟiñci Veḷiyīṭu. [தாமஸ், ப. ஆர். (2010). அட்டாங்க யோகம். சென்னை: குறிஞ்சி வெளியீடு.]

Parimēlaḻakar. (2021). *Tirukkuṟaḷ Mūlamum Uraiyum*. Koḻumpu: Pūpālaciṅkam Puttakacālai. [பரிமேலழகர். (2021). திருக்குறள் மூலமும் உரையும். கொழும்பு: பூபாலசிங்கம் புத்தகசாலை.]

Periyatampi, Ri. Kē. (2009). *Tirukkuṟaḷiliruntu Tirumantiramvarai*. Valveṭṭittuṟai: Civacakti Veḷiyīṭu. [பெரியதம்பி, ரி. கே. (2009). திருக்குறளிலிருந்து திருமந்திரம்வரை. வல்வெட்டித்துறை: சிவசக்தி வெளியீடு.]

Ramaṇarājā, Ci. (2009). *Tirumantirattil Uḷa-Āṉmika Pariṇāma Vaḷarccikkāṉa Aṭippaṭaikaḷ: Caivappulavar Cu. Cellatturai Niṉaivup Pēruraimalar*. Iḷavālai: Cu. Cellatturai Aṟakkaṭṭaḷai Nitiyam. [ரமணராஜா, சி. (2009). திருமந்திரத்தில் உள-ஆன்மிக பரிணாம வளர்ச்சிக்கான அடிப்படைகள்: சைவப்புலவர்சு . செல்லத்துரை நினைவுப்பேருரைமலர். இளவாலை: சு. செல்லத்துரை அறக்கட்டளை நிதியம்.]

Periyatampi, Ri. Kē. (2009). *Tirukkuṟaḷiliruntu Tirumantiramvarai*. Valveṭṭittuṟai: Civacakti Veḷiyīṭu. [விவேகானந்தசுவாமிகள். (1949). இராஜயோக. சென்னை: ஸ்ரீ இராமகிருஷ்ண மடம்.]

# நெருக்கடியான காலகட்டத்தில் கலை மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் இணைவு: கோவிட்-19 சூழலில் வட இலங்கையில் மெய்நிகர் நாடக ஆற்றுகைகள்

# The Fusion of Art and ICT in Times of Crisis: Online Theatre Performances in Northern Sri Lanka in the Context of COVID-19

**கலாநிதி ஜனனீ தேவானந்த்** / Dr. Janani Thevananth[1]
**கலாநிதி தேவநாயகம் தேவானந்த்** / Dr.Thevanayagam Thevananth[2]

Date of submission: 2024-10-11
Date of acceptance: 2024-11-15
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name:
Kishanthiny Thiruchchelvam
Email: tkishanthiny@univ.jfn.ac.lk

**Abstract**

Theatrical performances create a direct, emotional connection with the audience, a connection only possible when both performers and viewers meet in the same physical space. However, with the global lockdown announced in 2020, this norm became entirely unfeasible. In this context, the Active Theatre Movement operating in the Northern region of Sri Lanka, with the aid of information and communication technology (ICT), transitioned to online theatre performances, exploring new approaches. This study examines how, during the COVID-19 pandemic, virtual theatre performances, integrated with ICT, reached audiences. It investigates how innovative experiences were created for viewers across borders and how connections were established with them. The Performative Theory proposed by Mary Gergen and Kip Jones is employed to explore the potential of live theatre through virtual video streaming technology and the emotional impact it generated. The study further investigates the impact of online theatre performances, conducted from Northern Sri Lanka, on Tamil diaspora families worldwide. The transformation of these performances through online communication technology served as a key means of connecting Tamil cultural identity and as a relational tool to engage remote Tamils. Additionally, the study highlights the significant role of online communication technologies in strengthening socio-cultural ties among the Tamil diaspora. The Relational Aesthetics theory, proposed by French art theorist Nicolas Bourriaud, serves as the philosophical foundation of this study. Data was collected through the researchers' own auto-ethnographic experiences. This study uncovers new methods of reinforcing Tamil identity through online theatre performances, even in challenging global circumstances, contributing to the creation of new dimensions in art and social science.

**Keywords:** Online Performance; Relational Aesthetics; Performative Theory; Digital Communication; ICT in Crisis Situation

[1]The author is a senior lecturer in the Department of Financial Management, University of Jaffna. jananit@univ.jfn.ac.lk

[2]The author is a Director, Muttam, Human Resources Development Organization. tthevananth@gmail.com

## 1.0 அறிமுகம்

நாடகம் என்பது பொதுவாக மேடையில் காட்சிப்படுத்தப்படுவதற்காக உருவாக்கப்படும் ஒரு இலக்கிய வடிவமாகும். இது மனிதர்களின் உறவுகள், சமூகவியல், கொள்கைகள் மற்றும் ஒழுக்கவியல் போன்றவற்றை பேசுகிறது. நாடகம் பெரும்பாலும் உரையாடல்களையும் செயல்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டதாகும். நாடகம் மக்களை ஆவலுடன் ஈர்க்கும் வகையில் உணர்ச்சி மற்றும் அறிவுசார்ந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறது. இது சோகம் நகைச்சுவை மகிழ்ச்சி போன்ற உணர்வுகளை வெளிக்கொணர்வதோடு பல வடிவங்களில் வெளிப்படுத்தப்படும். *(Lavender, 2008)*.

மெய்நிகர் நாடகம் என்பது டிஜிட்டல் தளங்களில் காட்சிப்படுத்தப்படுவதற்காகவே வடிவமைக்கப்பட்ட நாடகங்களைக் குறிக்கிறது. இது ஒலி- காட்சி தொழில்நுட்பங்களையும் தொலைதொடர்பு தொழில்நுட்பத்தையும் பயன்படுத்துகிறதுஇ உதாரணமாக Zoom போன்ற ஸ்ட்ரீமிங் தளங்களில் நாடகங்களை உலகளாவிய பார்வையாளர்களுக்குக் கொண்டு செல்வதற்கான வழியாகிறது. Covid-19 பெருந்தொற்றின் போதுஇ ஆன்லைன் நாடகம் மிகுந்த முக்கியத்துவம் பெற்றது. இதன் மூலம் மக்கள் குழுவினருடன் கலைத் தொடர்புகளை உருவாக்கிஇ நாடகத்தின் மெய்யான காட்சியமைப்பை நிகழ்நிலையில் முழுமையாக வழங்க முயன்றது *(Kozinn, 2021; Hussin & Bianus, 2022)*.

மேலும் மெய்நிகர் நாடகம் ஹைபிரிட் மாடல்களை மேம்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது. இதில் நேரடி காட்சிகளும் டிஜிட்டல் ஒளிபரப்புகளும் ஒருங்கிணைக்கப்படுகின்றன. இது நாடகத்திற்கான அணுகலை வளர்த்ததுடன், உலகளாவிய அளவில் பார்வையாளர்களை ஈர்க்க உதவியது *(Matsumoto, 2017)*. நடப்பு ஆண்டுகளில் ஆன்லைன் நாடகங்களின் வளர்ச்சி நாடகக் கலைகளை மறுமலர்ச்சி பெறச் செய்து வருகிறது. குறிப்பாகஇ ஊழஎஜனு-19 பெருந்தொற்றின் போதுஇ இணையதள நாடகங்கள் படைப்பாற்றலின் முக்கிய தளமாக மாறியது. இந்த புதிய வடிவம் நாடகத்தின் உண்மையான வண்ணத்தையும்இ அதை அனுபவிக்கும் முறையையும் மறுதிறனாக்குகிறது.

மலேஷியாவில் நாடகக் கலைகளை பாதுகாக்க "ஹைபிரிட் நாடகம்" என்ற நடைமுறையை பரிந்துரை செய்துள்ளது. இது மெய்நிகர் மற்றும் நேரடித் தொடக்கங்களை ஒன்றிணைத்திருக்கிறது *(Hussin & Bianus, 2022)*. டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மூலம் நாடகங்கள் காட்சியமைப்பிலும் கதைகளின் விளக்கங்களிலும் புதுமைகளை எளிதாக்கியுள்ளது. டெலிமாட்டிக் நாடகங்கள் இத்தகைய ஒரு முக்கிய முன்னேற்றம் ஆகும் *(Lavender, 2008)*.

மெய்நிகர் நாடகங்கள் சமூகங்களுடன் இணைந்திருக்கும் வாய்ப்புகளை உருவாக்கும் போது பல சவால்களைச் சந்திக்கின்றன. உதாரணமாக, "Highland Park Is Here" நாடகம் இணைய தளத்தின் சிக்கல்களைச் சந்தித்தாலும் தொடர்ந்து சமூகத்துடன் இணைவதை முன்னெடுத்தது *(Kozinn, 2021)*. நாடகமும் காணொலி தொழில்நுட்பமும் கடந்த 30 ஆண்டுகளில் இணைந்துள்ளன. இவை மெய்நிகர் நாடகங்களின் மேடையை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன *(Matsumoto, 2017)*.

இந்த மெய்நிகர் நாடகப் பரிமாற்றங்கள் நாடகத்தின் நேரடி அனுபவத்தை மாற்றியமைக்கின்றது இது புதிய தொழில்நுட்பத்துடனும் நாடகத்தின் நேரடித் அளிக்கையை இணைக்கும் முயற்சியாகும்.

### 1.1 கோவிட் 19 உலகெங்கும் தொழில்முறை அரங்கை முடக்கியது.

பிரிட்டன் உலகில் முதன்மையான தொழில்முறை அரங்கப்பண்பாட்டைக் கொண்ட நாடாகும். புறிட்டன் முழுவதும், ஒரு சாதாரண ஆண்டில், சுமார் 1,100 அரங்குகள் 34 மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்களை ஈர்க்கின்றன, இந்தத் துறை வருடமொன்றிற்கு 1.8 பில்லியன் டாலர் வருவாய் ஈட்டுகிறது. லண்டனின் வெஸ்ட் எண்ட் நியூயார்க்கின்

பிராட்வே இரண்டும் உலகின் முதல் இரண்டு தொழில்முறை நாடகத்தயாரிப்புக்களுக்கான நாடக இடங்களாகும். மேலும் பிரித்தானிய அரங்கு பரந்த கலைத்துறையில் ஒரு முக்கிய இயந்திரமாகும். இங்கு தான் நாட்டின் பல திரைப்பட இயக்குநர்கள், திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நடிகர்கள் மற்றும் எழுத்தாளர்கள் தங்களது படைப்பாற்றல் வாழ்க்கையை தொடங்கினர்.

தொழில்முறை அரங்கக் கலைஞர்களின் வாழ்க்கை எப்போதும் ஆபத்தானதாகவே காணப்படுகின்றது. அரங்கு தொழில்முறையாக சாதகமான நிலையில் உள்ள பிரித்தானியா மற்றும் அமெரிக்காவில் முழுநேர அரங்கக்கலைஞர்களின் நிலை நிரந்தரமற்றதாக ஆபத்தானதாகவே இருக்கிறது. இலங்கையில் தமிழ் அரங்கைப் பொறுத்தவரை முழுநேர அரங்கக்கலைஞர்கள் என்ற நிலையை இனங்காண முடியவில்லை. இந்தியாவில் தெருக்கூத்துக் கலைஞர்கள் மற்றும் இசைநாடகக்கலைஞர்கள் தொழில்முறையாக தமது வருமானத்திற்காக நாடகக்கலையில் பயணிக்கிறார்கள். அவர்களின் வாழ்வாதாரம் கோவிட் 19 தாக்கத்தால் பாதிக்கப்பட்டு மிகவும் துயரமான நிலையில் வாழ்ந்தார்கள்;. குறிப்பாக இசை நாடகம் போன்ற நாடகத்துறைகளில் இதனைக்காணலாம்.

பிரிட்டனில் தொழில்முறை அரங்கு கோவிட் 19 காலகட்டத்தில் இழுத்து மூடப்பட்டது. மார்ச(2020); நடுப்பகுதியில் இருந்து, நாடக ஆற்றுகைகள் நிகழ்கின்ற அதாவது வருடம் முழுவதும் ஆற்றுகைகள் நிகழ்ந்து கொண்டிருந்த கட்டிடங்கள் மூடப்பட்டன (Nicholls, 2020).

பிரிட்டனில் தொழில்முறை அரங்குகளுக்காக உள்ள நூற்றுக்கணக்கான பெரிய சிறிய அரங்குகளின் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், லைட்டிங் மற்றும் சவுண்ட் இன்ஜினியர்கள் மற்றும் பிற மேடை மற்றும் முன் தயாரிப்பு ஊழியர்கள் வேலையில்லாது திண்டாடினார்கள் (Rurale, Azzolini, Ivanova & Fagundes, 2020) அவர்களின் துயரக்கதைகள் ஊடகங்களில் பகிரப்பட்டன. கோவிட் 19 காலகட்டத்தில் ஒரு தியேட்டர் கட்டிடத்தை பராமரிக்க குறைந்தபட்சம் நிதி இல்லாத நிலைமையில் சில அரங்க நிறுவனங்கள்;, தமது தயாரிப்புக்களை நேரடியாக மெய்நிகர் வெளியில் ஒளிபரப்புவதன் மூலம் இழந்த வருமானத்தில் சிலவற்றை புதுப்பிக்க முயற்சித்திருந்தார். பிரிட்டனின் நேசனல் தியேட்டர் அதன் உன்னதமான தயாரிப்புகளில் சிலவற்றை கட்டணமின்றி மெய்நிகர் வெளியில் ஒளிபரப்பியது. "மெய்நிகர்; நாடகங்களுக்கு ஒரு 5 பவுண்டுகள் கடடணம் வசூலிக்க சிரமப்பட்டதன்; காரணமாக நாடகப்படைப்புக்களை மெய்நிகர் வெளியில் இலவசமாக காண்பித்திருந்தார்கள் (Jacobson, 2020).

கொரோனா தொற்றுநோய் காரணமாக - பிரிட்டனின் நேரடி அரங்கம் கடுமையான ஆபத்தில் இருந்தது. "இது ஒரு இருத்தலியல் நெருக்கடி" என்று அரங்கத்துறைசார்ந்தவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் பிரிட்டன் அரசாங்கம் அரங்கத்துறைக்கு உதவ முன்வந்துள்ளது. ஏராளமான தியேட்டர்கள் நொடிந்து போகும் அபாயத்தை தவிர்ப்பதற்காக அரங்கத் தொழிலாளர்களின் ஊதியத்தை வழங்க அரசாங்கம் முன்வந்தது. கொரோனா வைரஸ் நெருக்கடியை எதிர்கொள்ள உதவும் வகையில் பிரித்தானிய அரசாங்கம் கிட்டத்தட்ட 2 பில்லியன் டாலர்களை கலைத்துறைக்கு ஒதுக்கியிருந்தது. ஆகவே அரங்கு வாழ்வதற்கு அதற்கான சூழலும் அரச ஆதரவும் தேவைப்படுகின்றது (Rurale, Azzolini, Ivanova, Fagundes & 2020). இருப்பினும் பிரிட்டன் போன்ற நாடுகளே கொரோனா நெருக்கடியில் அரங்கை தக்கவைத்துக் கொள்ள சிரமம்பட்டன.

இலங்கையில் தமிழர் பகுதிகளில் வளர்ந்து வரும் அரங்கிற்கு அரச ஆதரவு எப்போதும் இருந்ததில்லை. இதனால் தொழில்முறை அரங்கின் வளர்ச்சி எப்போதும் 'சாண் ஏறி முழம் சறுக்கும்' நிலைமையாகவே இருக்கிறது. இங்கு அரங்க நிறுவனங்கள் பல பகுதிநேர அமச்சூர் குழுக்கலாகவே செயற்படுகின்றன. ஆவ்வாறன ஒரு நிறுவனம் தான் செயல் திறன் அரங்க இயக்கம். இது 2003 ஆண்டிலிருந்து செயற்பட்டுவரும் அரங்க நிறுவனம். ஆரங்கை தொழில்முறையாகக் கொண்டு வர வேண்டும்

என்ற முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. வருடாந்தம் நல்லூர் நாடகத் திருவிழாவை நடத்தி வருகிறது. தனக்கென ஒரு பார்வையாளர் கூட்டத்தைக் கொண்ட அரங்க நிறுவனமாகக் காணப்படுகிறது. இந்த நிறுவனம் கொரோனாக்காலகட்டத்தில் மூடபபட வேண்டியதாகிறது. இதில் தனது பார்வையாளர்களின் விரும்பம், வேண்டுகோளின் காரணமாக உலகெங்கும் கொரோனா – 19 காரணமாக மூடப்பட்ட காலகட்டத்தில் ஏலவே தயாரித்த நாடகங்களை மெய்நிகர் வழி நிகழ்த்துவதற்கு தீர்மானித்தது.

இதற்காக 2021 காலகட்டத்தில் ZOOM செயலி வழி நான்கு நாடகங்களை ஆற்றுகை செய்தது. இந்த முயற்சிகள் தகவல் தொழில்நுட்ப மட்டுப்பாடுகளுக்கு மத்தியில் யாழ்பல்கலைக்கழக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விரிவுரையாளரின் தொழில்நுட்ப உதவியுடன் நிகழ்த்தப்பட்டது. இது உள்ளுர் பார்வையாளர்களை மட்டுமன்றி யாழ் மாவட்டத்திற்கு வெளியே உள்ள பார்வையாளர்களையும் புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்களையும் சென்றடைந்தது. ஒரு நெருக்கடியான காலகட்டத்தின் அரங்க அளிக்கை மட்டுப்படுத்தப்பட்ட பார்ர்வாயளர்கள் என்ற நிலையிலிருந்து பரந்து பட்ட உலகலாவிய பார்வையாளர்களை சென்றடைந்திருந்தது. இதனைத் தொடர்ந்து ஐந்து புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்த தமிழ்ச் சிறுவர்கள் மெய்நிகர் வழி நாடகப்பயிற்சியைப் பெற்று தத்தமது நாடுகளில் இருந்து ஒரு மெய்நிகர் நாடகத்தை மேடையேற்றியிருந்தனர்.

### 2.1 ஆய்வு வினாக்கள்

1. COVID-19 நெருக்கடியின் போது அரங்க நிறுவனம் தமது நாடக ஆற்றுகைககளை எவ்வாறு மெய்நிகர் தளத்திற்கு மாற்றியமைத்தன?

2. மெய்நிகர் நாடக ஆற்றுகைகள்; உலகெங்கிலும் உள்ள பார்வையாளர்களை எவ்வாறு கவர்ந்தது. அது ஏற்படுத்திய தமிழ் அடையாளம் சமூக-கலாச்சார மற்றும் உளவியல் தாக்கங்கள் என்ன?

3. ஏதிர்காலத்தில் மெய்நிகர் அரங்கை எவ்வாறு வளர்த்தெடுப்பது? ஆதற்கு தேவையாள சாதகமான நிலைமைகள் என்ன?

### 2.2 ஆய்வு முறையியல்

நாடகமும் அரங்கியலும் துறையில் நிகழ்த்து கலைகளை பதியும் போதும் மதிப்பிடும் போதும் புதிய அணுகு முறைகள் தேவைப்படுகின்றன. இங்கு கலையும் சமூக அறிவியலும் இணந்து பதிய வழிமுறைகள் பற்றிச் சிந்தித்தாக வேண்டும். இவ்வாறான இணைவு ஏலவே உள்ள கலைத்தத்துவக் கோட்பாடுகளை சவாலுக்கு உள்ளாக்குகிறது எனலாம். கலை சார்ந்த ஆய்வில் புதிய பார்வைகள் உருவாக்கப்பட வேண்டும்.

இன்று கலைகள் (படங்கள், வீடியோக்கள், பாடல்கள்) மற்றும் புதிய ஊடகங்கள் (வலைப்பக்கம் CD-Rom,DVD) மூலம் மக்களிடம் சென்று சேர்கின்றன. அதே வேளை அறிவையும் உறவையும் வளர்க்கின்றன. இதனால் புதிய பல்தொகை (polyvocal) அணுகுமுறைகள் சமூக அறிவியலுக்குள் புகுத்தப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இது சமூக அறிவியலை விரிவுபடுத்தி, கலாபூர்வமான படைப்புகளைப் பகிர்ந்து கொள்ளும் சிறப்பை வழங்க முடியும். பாரம்பரிய அறிவியல் முறைகளை மாற்றி, புதுமையான அறிவியல் கண்டுபிடிப்புகள் கலை மற்றும் சமூகத் துறைகளில் விரிவடைய வேண்டும். இங்கு, பிரெஞ்ச் கலை அளிப்பாளர் நிக்கோலஸ் பூர்ரியாட் முன்மொழிந்த "Relational Aesthetic" (re)presentationகோட்பாடு சமூக அறிவியலின் புதிய வழிகளுக்கு உதவும்.

கலை அழகியல் என்பது (re)presentation என்பதை அடிப்படையாகக் கொண்டே நோக்கப்படுகின்றது. கலைத்துறையின் அழகியல் கோட்பாடுகள் இதனையே வலியுறுத்துகின்றன. அதே வேளை 18ஆம் நூற்றாண்டின் “உண்மை” மற்றும் ”அழகு” தொடர்பான புரிதல்கள் 20ஆம் நூற்றாண்டில் சவால்களுக்கு உள்ளாகின. ஆகவே அவற்றை சமூகத்தின் அடிப்படையில் மீண்டும் ஆய்வு செய்ய வேண்டும். சமூக கட்டமைப்பியல்

(Social Constructionism)) புதிய மதிப்புகள் மற்றும் நம்பிக்கைகளின் அமைப்புகளில் மாற்றம் வேண்டப்படுகின்றது. நிக்கோலஸ் பூர்ரியாட் முன்மொழிந்த "Relational Aesthetics"" கோட்பாடு, மனித உறவுகள் மற்றும் சமூக சூழல்களில் கலைக்கான அடிப்படை இடங்களை மனித உறவுகள், சந்திப்புகள், கூட்டணிகள், நிகழ்வுகள், மற்றும் மகிழ்ச்சியான இடங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாகும் "மாறுபாடு" கலை (Relational) மையமாக வைக்கப்பட்டுள்ளது. பூர்ரியாட் கூறுவதுபோல், கலை சமூக பரிமாற்றங்களால் உருவாகும் பொருள். இதை எவ்வாறு சமூகத்திலிருந்து வேறுபடுத்திய ஒன்றாக எப்படி பிரதிபலிக்கலாம் என்ற கேள்வி எழுகிறது.

கலை-அடிப்படையில் (re)presentation மீள்படைப்பு தான் அது எவ்வாறு சமூகத் தொடர்பற்றதாக இருக்கமுடியும் என்பதை அவர் தனது கருத்தாக முன்வைக்கின்றார். இதனால் கலைசார்ந்த படைப்புக்கள், அணுகுமுறைகள் பல்வேறு துறைகளை இணைக்கும் அடிப்படையாக இருக்க முடியும் என்ற கருத்து முனைப்பு பெறுகிறது. நிக்கோலஸ் பூர்ரியாட் (Nicolas Bourriaud) தனது வாழ்க்கை வரலாறு சார்ந்த எடுத்துரைப்பாக (Narrative) தனது அனுபவத்தை விவரிக்கின்றார். இதில், ஆராய்ச்சி அறிக்கை ஒரு "நிகழும் ஊடகம்" (Dynamic vehicle) ஆக மாற முடியும். இதன் மூலம் வாழ்க்கை வரலாறு சமூக ஆய்வியல் (Biographic sociology) துறைக்கு புதிய கலைகளின் உதவியுடன் பலன்கள் கிடைக்கின்றன. மேலும், ஆராய்ச்சியாளரும் எடுத்துரைப்பவரும் (Narrative) தெரிவிப்பவரும் இணைந்து ஆவணங்களை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் உருவாகின்றன.

நிக்கோலஸ் பூர்ரியாட் (1998) தனது Relational Aesthetics நூலில் கலைநடத்தை மனித உறவுகள் மற்றும் சமூக சூழல்களில் புதுப்பிக்கும் விதமாக விளக்குகிறார். கலை என்பது பாரம்பரிய வடிவங்களைத் தாண்டி, சமகால சமூக சூழல்களை பிரதிபலிக்கும் மாறுபட்ட மற்றும் ஆழமான மனித தொடர்புகளின் மூலம் அர்த்தங்களை உருவாக்க வேண்டும் என்பதே இதில் மையக்கருத்தாக உள்ளது. குறிப்பாக நவீன ஊடகங்களை (New Media) பயன்படுத்துதல், ஒலிப்பதிவு மூலம் கதைகளைப் பதிவு செய்தல், அல்லது தரவுகளை காட்சிப்படுத்துதல் போன்ற பல்வேறு வழிகளை பரிந்துரைத்தார்.

சமூக விஞ்ஞானங்கள், தனது தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் முறைகளில் கலைகளை பயன்படுத்துவதன் மூலம் தனிச்சிறப்புடன் பார்வையினை விரிவாக்கலாம். இது கலை மற்றும் அறிவியல் இரண்டுக்கும் இடையே ஆழமான ஒருங்கிணைப்புகளை உருவாக்கும். 50 அல்லது 100 ஆண்டுகள் பழமையான அளவுகோல்களை இந்த முறைமைகளில் பயன்படுத்துவது பொருத்தமாகாது. "Performative" பணிகள் உள்ளூர் சமூகங்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன, மாற்றத்தை ஏற்படுத்துகின்றன, அல்லது மகிழ்ச்சியான சூழலை உருவாக்குகின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். இங்கு கலை வெளிப்பாடுகள் மூலம் பார்வையாளர்கள் எவ்வாறு அவர்களின் அனுபவங்களை உருவாக்குகிறார்கள் என்பதை ஆய்வு செய்ய வேண்டும். Mary Gergen & Kip Jones (2008) நிகழ்த்துதல் கோட்பாட்டை முளன்வைக்கிறார் "Performative" சமூக அறிவியல் (PSS) மூலம், ஆராய்ச்சியாளர்களுக்கு நேர்த்தியான, சுயதாராளமான, மற்றும் புதுமையான அணுகுமுறைகளை பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கிறது.

இந்த அணுகுமுறை கலைச் செயற்பாட்டை "நம்பச் செய்வது" அல்ல, தூண்டுதல் மற்றும் ஆர்வமூட்டுதல் ஆக மாறுகிறது. இதனை கலைஞர்களின் ஒத்துழைப்பின் மூலம்,; விரிவான பொருளாக்கத்தை பெறமுடியும். இது தகுந்த அளவுகோல்களை மீள்பார்க்கவும், சமூக அறிவியலின் வெளிப்பாட்டில் கலைகளின் பங்கு முக்கியமானது என்பதை புரியவும் உதவுகிறது இந்த உரை சமூக அறிவியலில் "Performative" (நிகழ்த்தல் சார்ந்த) அணுகுமுறையின் முக்கியத்துவத்தை மற்றும் கலைமுறைகளின் பங்களிப்பை ஆராய்கிறது. இது சமூக விஞ்ஞானிகள் தங்கள் பணி மற்றும் விளக்க முறைகளை மேம்படுத்த கலைவழிகள் எவ்வாறு

உதவுகின்றன என்பதை விவரிக்கிறது. கலைஞர்கள் எளிய வரைபடங்கள் மூலம் தங்கள் எண்ணங்களை தொடங்குவார்கள்; ஆனால், அவர்களின் நேரத்தின் பெரும்பகுதியை தங்கள் காட்சிப்படையல்களை உருவாக்குவதில் செலவிடுவார்கள் செயல்முறைதான் (process) அவர்களின் படைப்பாற்றலின் மூலதனம். இதேபோல சமூக ஆராச்சியாளர்கள் "செய்வதன் மூலம் கற்றல்" என்ற எண்ணத்திற்கு தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

அதாவது ஆராய்ச்சியாளர்களுக்கு "அறியாமையை" (not knowing) ஏற்கும் பண்பையும், தங்களை அடிமட்டத்தில் நின்று புதியது கற்றுக்கொள்ளும் உழைப்பும் தேவைபடுகிறது.

சிறந்த பார்வையைக் கற்றுக்கொள்வது. செவிமடுக்க மிகச் சிறந்த திறனைப் பயிற்சி செய்வது தங்கள் உடலை புரிந்து கொள்ளுதல், கலை மற்றும் கலாச்சாரத்தின் பங்களிப்பை புரிந்து கொள்ளும் திறனைப் பெற்றிருகக் வேண்டும். Kylie Minogue போன்ற பிரபலங்களின் கலைநிகழ்ச்சிகள் மூலம் தங்கள் படைப்பாற்றலுக்கு உத்வேகம் பெற்றதாக குறிப்பிடுகிறார், அதேசமயம் Judit Butler போன்ற தத்துவகருதுக்களை ஒப்பிடுகின்றார். இவ்வுரையாடல் Relational Aesthetics மற்றும் PSS (Performative Social Science) முறைகளில் அணுகுமுறையை சுதந்திரமாக அணுகுவதின் அவசியத்தை வலியுறுத்துகிறது. இது மனித உறவுகளை மற்றும் பார்வையாளர்களின் பங்களிப்புகளை மையமாகக் கொண்டு, கலை மற்றும் அறிவியலின் தொடர்புகளை விரிவாக்குகிறது. படைப்புகளின் அர்த்தவியல் தொடர்புள்ளவர்களின் பங்களிப்பால் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே முக்கியமான கோட்பாடாக முன்வைக்கப்படுகிறது.

### 3.0 ஆய்வு தகவல் அளிக்கையும் பகுப்பாய்வும்

கொரோனா தாக்கம் மிகவும் உச்சநிலையில் இருந்த 2021 காலகட்டத்தில் உலகெங்கும் பொது முடக்கம் அறிவிக்கப்ட்டிருந்த போது இலங்கை யாழ்ப்பாணத்திலிருந்து இயங்கி வந்த செயல் திறன் அரங்க இயக்கமும் பொது முடக்க நிலையில் காணப்பட்டது. இதனால் வருடாந்தம் நடத்துகின்ற நல்லூர் நாடகத் திருவிழாவை நடத்த முடியவில்லை.தமது வருடாந்த தயாரிப்புக்களோடு பார்வையாளர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை என்ற நிலைமை காணப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் இணையவழியாக வீட்டிலிருந்தபடி வேலை, படிப்பு, கூட்டங்கள் கலந்துரையாடல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. துகவல் தொடர்பாடலில் அதீத தேவை உணரப்பட்டது. ZOOm,Google Meet போன்ற செயலிகள் தொடர்பாடலை ஆக்கிரமித்துக் கொண்டன. இந்தச் சூழலில் செயல் திறன் அரங்க இயக்கத்தின் பார்வையாளர்களை மெய்நிகர்வழி தொடர்பு கொள்வது பற்றிச் சிந்திக்கப்பட்டது. செலவு குறைந்த இலகுவாக அணுகக்கூடிய தொழில்நுட்பம் பற்றிச் சிந்திக்கப்பட்டது. இதற்கான வழிகளை ஆராய்ந்த போது யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் தகவல் தெடர்பாடத்துறையின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி தே.ஜனனீ தொழில்நுட்ப உதவிகளை தான் வழங்கமுடியும் என்ற அடிப்படையில் முதல் கட்டமாக ஞுமுமுஆ செயலியைப்பயன்படுத்தி எவ்வாறு ஆற்றுகை செய்வது என்று ஆலோசித்தோம். ஆதன் பயனாக மெய்நிகர் ஆற்றுகைகளை இலங்கை தமிழ் அரங்கப்பரப்பில் அறிமுகமாகின.

1. ஆற்றுகையாளர்கள் ஒரு இடத்தில் ஒன்று கூடி ஆற்றுகையை நிகழ்த்தும் போது அதனை வெப்காம் வீடியோ ஸரீமிங் மூலம் ஒளி ஒலி பரப்புதல். இதற்கு ஞுமுமுஆ செயலி பயன்படுத்தப்பட்டது. முதலில் மட்டுப்படுத்தப்பட்ட 100 பார்வையாளர்களுக்கான ஞுமுமுஆ வசதி பெறப்பட்டது. இதில் அதிகளவானவர்கள் இணையமுயற்சித்து இணையமுடியாமைகாரணமாக ஆற்றுகையைப்பார்க்க முடியவில்லை. இதில் 10★10 அடி அளவு அறையில் முதலில் ‘வண்டியும் தொந்தியும்’ என்ற எள்ளல் சுவையுடைய நாடகம் மேடையேற்றப்பட்டது. இதன் போது இரண்டு நடிகர்கள் மட்டும் நடித்திருந்தார்கள். இங்கு ஆற்றுகை வெளி என்பது வெப்காம் பதிவு

செய்யும் அளவு சார்ந்ததாகவே காணப்பட்டது. இது ஒரு மட்டுப்பாடானதாக இருந்தது. ஒளியமைப்பு மேற்கொள்ளபபட்டதால் ஆற்றுகை மிகத் தெளிவாகப் வெப்காம் ஊடாக ஒளிபரப்ப முடிந்தது. லைவ் மியூசிக் பயன் படுத்தப்பட்டது. றொபேட் இந்த இசையை வழங்கினார். இங்கு பொது முடக்க காலகட்டத்தில் முகக்கவசங்களை அணிந்தபடி ஒரு குறுகிய பகுதியில் நெருக்கமாக நின்று இந்த ஆற்றுகையை மேற்கொண்டிருந்தோம். ஒவ்வொரு வீடுகளிலும் தங்கள் கொம்பியூட்டர் முன்பாக இருந்து நான்கு ஐந்து பேர் பார்த்தார்கள். வீட்டில் முடங்கியிருந்தவர்களுக்கு இந்த மெய்நிகர் ஆற்றுகை சிறந்த பொழுது போக்காக அமைந்தது. சிலர் தமது சிமார்ட் ரி.வியை தமது கைபேசி அல்லது லப்டொப் உடன் இணைத்து ரி.வியில் தமது குடும்பத்தினருடன் இணைந்து மெய்நிகர் ஆற்றுகையைப் பார்த்தார்கள். முதல் நிகழ்வில் கிட்டத்தட்ட 400 – 500 பேர் உலகெங்கும் இருந்து வட்டியும் தொந்தியும் மெய்நிகர் நாடகத்தைப் பார்த்தார்கள். இந்த நாடகம் அதிகாரிகளை எள்ளி நகையாடுகிறது. வெறுமனே கதிரைகளிலிருந்து தமது தொந்திகளை வளர்த்து சோம்பேறிகளாகி ஏதும் செய்யாது இருக்கும் அதிகாரிகளால் மக்கள் துன்பப்படுகிறார்கள் என்பதை ஆற்றுகை வெளிப்படுத்தியிருந்தது. மெய்நிகர் நாடக முடிவில் கலந்துரையாடலுக்கும் வாய்பேற்பட்டது. பலரும் தற்போது யாழ்ப்பாணத்தில் அதிகாரிகள் எவ்வாறு பணியாற்றுகிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. இந்த நிலைமையை மாற்ற என்ன செய்யலாம் என்பதாக தமது கருத்துக்களை முன்வைத்தார்கள். இதில் ஒலித்தடை ஒரு பிரச்னையாக இருந்தது. வெப்காம் பின்னால் இருந்து லைவ் மியூசிக், பின்னணி குரல் போன்றன தெளிவில்லாமல் இருந்தது குறைபாடக இருந்தது. மேலும் இதில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு மிக அவசியமாகியது. திரையில் நாடகக்காட்சி தெரிவதற்கு ஏனையவர்களின் ஒலிவாங்கியை நிறுத்திவைக்க வேண்டியிருந்தது. அதே போல போன்ற முறைகளில் மேம்பட்ட தொழில்நுட்பத்தைப்பயன்படுத்த வேணடியிருந்தது. இதற்காண இணைய இயைப்பிற்கு மொபைல் WIFI பயன்படுதததப்பட்டது. இந்த இணைய வசதியில் சற்றுத் தாமதமாகவே பார்வையாளரைச் சென்றடைவதான தொழிலநுட்பத் தடங்கல் உணரப்பட்டது. இவற்றிற்கு நடுவே மெய்நிகர் ஆற்றுகை வெற்றிகரமானதாகவே அமைந்திருந்தது.

2. இரண்டாவது ஆற்றுகை ஒலிப்பிரச்னைகளை தவர்ப்பதற்காக ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாட்டி பொம்மைகள் நாடகத்தை மெய்நிகர்வழி மேடையேற்றினோம். இது சற்று இலகுவானதாக அமைந்தது. தமிழர் பாரம்பரியமாக சொல்லப்பட்ட வந்த பாட்டி வடைசுட்ட கதையை இந்த நாடகம் சற்று வரிவாக்கம் செய்து பாடல்கள் உரையாடல்களாக இசையுடன் ஒரு 40 நிமிட ஆற்றுகையாக நிகழ்த்தியிருந்தார்கள். இது சிறுவர்களை மிகவும் கவர்ந்திருந்தது. இதனைத் தொடர்ந்து நடநத உரையாலில் பெற்றோர்கள் பலர் தமது சிறுவர்களுக்கு இணையவழி நாடகம் பழக்க முடியுமா என்று கேட்டார்கள். அதனைத் தொடர்ந்து மெய்நிகர்வழி பயிற்சி வழங்கப்பட்டது. இதன் முடிவில் அதில் பங்கு கொண்ட சிறுவர்கள் பாட்டி நாடகத்தை வெவ்வேறு நாடுகளிலிருந்து ஒரே நேரத்தில் நேரலையாக நடித்து வேறொரு பரிமானத்துக்கு மெய்நிகர் நாடகத்தை கொண்டு சென்றார்கள்.

3. மூன்றாவதாக மரணச்சான்றிதள் என்ற ஒராள் ஆற்றுகை இலங்கையில் இறுதியுத்தம் நடைபெற்ற 2009 காலகட்டத்தில் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் பலர் காணாமல் போனார்கள். இவ்வாறு காணாமல் போன இளம் குடும்பத்தவர், அவரது மனைவி அவரை தன்கண்முன்னாள் இராணுவத்திடம் ஒப்படைத்துச் செல்கிறாள். புறன்னர் அவரைக்காகணவில்லை. அவரைத்தேடி இராணுவமுகாம்களாக திரிகிறாள் ஆணைக்குழுக்கள் முன்பாக சாட்சி சொல்கிறாள் கணவன் வருவான் என்று ஏங்கித்தவிக்கிறாள். அவளது காத்திருப்பு தொடர்கிறது. ஒரு நாள் தபால் மூலம் ஒரு கடிதம் வருகிறது, உங்கள் கணவர் இறந்ததாக கருதி அவரது இறப்பை உறுதி செய்து மரணச்சான்றிதழ் தருகிறோம்.

மரணச்சான்றிதழ் கிடைத்தால் நீங்கள் நிவாரண உதவிகள் பெறலாம் என்று அதில் தெரிவிக்கப்படுகின்றது. ஆந்தக்கடிதத்தைப்பார்த்ததும் ஆவேசம் கொண்டவளாக 'எனது கணவர் இறக்கவில்லை அவர் இறக்கவும் மாட்டார்' என்று கடிதத்தை கிழித்து எறுகிறாள். அது பல்கிப்பெருகி மேடைமுழுவதும் நிரம்புகிறது என்பதாக இந்த நாடகம் நிறைவடையும் . இது ஓராள் மட்டுமே பல்வேறு பாத்திரங்களாக மாறி மாறி நடிக்கின்ற நாடகம். இதனையும் ணழமஅ செயலி வழியாக ஆற்றுகைசெய்தார்கள். இப்போது பார்வையாளர் அதிகரித்ததால் 500 பேருக்கான செயலி கணக்கு பதிவு செய்து நிகழ்த்தப்பட்டது. இசை, பின்னணிக்குரல் என்பன நேரலையாக நிகழ்த்தப்பட்டன தனியொருவர் உரையாடி, ஆடிப் பாடி நாடகத்தை நிகழ்த்தியிருந்தார். புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் பலரை இந்த நாடகம் மிகவும் கவர்ந்திருந்தது.

4. நான்காவது மற்றும் இறுதியான நாடகமாக ஏகாந்தம் நாடகம். இது இலங்கையில் யுத்தத்தினால் தமது தாய் தந்தையரை தனியே விட்டு வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்களை மிகவும் உணர்ச்சிரீதியாக பாதிப்பதான நாடகமாக அமைந்திருந்தது. 40 நிமிடங்கள் கொண்ட இந்த நாடகம் முழு வேடமுகங்களை அணிந்து நடிகர்கள் நடிப்பதாக அமைந்திருக்கும். இதில் பதிவு செய்யப்பட்ட உரையாடல்கள் பாடல்கள் சத்தங்கள் காணப்படும். இதன் ஆற்றுகையில் ஒலி தெளிவாக அமைந்திருந்தது. தமது தனிமையில் இருக்கும் தாய்தந்தையரை நினைத்து மிகவும் ஒன்றுபட் மனநிலையில் இந்தப்பார்வையாளர்கள் காணப்பட்டார்கள்.

Mary Gergen & Kip Jones (2008) கருத்துக்கமைவாக "performative" சமூக அறிவியல் (PSS) மூலம், நேர்த்தியான, சுயதாராளமான, மற்றும் புதுமையான அணுகுமுறைகளை பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கிறது. ஒரு நெருக்கடியான சூழலில் முடக்கப்பட்டிருக்கும் மக்கள் கூட்டம் தனது மக்கள் கூட்டத்துடன் தொடர்பினைப் பேணுவதற்கு தகவல் தொடர்பாடல் தொழிலநுட்பத்தைப்பயன்படுத்துகின்ற அதே வேளை அந்தத் தொடர்பு புதுமையான வழிமுறைகள் மூலம் அமையும் போது அது நெருக்கமான ஆழமான தொடர்பைப்பெறுவதோடு தொடர்பியலில் புதிய உத்வேகத்தைக் கொடுக்கிறது. அதே வேளை சுழல் புதிய கலைப்படைப்பபை உருவாக்குகிறது. அது அந்தச்சூழலில் மிக முக்கியமானதாக காணப்படுகின்றது.

இதனையே நிக்கோலஸ் பூர்ரியாட் (1998) தனது Relational Aesthetics என்று குறிப்பிடுகிறார். கலைநடத்தை மனித உறவுகள் மற்றும் சமூக சூழல்களில் புதுப்பிக்கும் விதமான தொடர்பியலைக் கொடுக்கிறது. கலை என்பது பாரம்பரிய வடிவங்களைத் தாண்டி, சமகால சமூக சூழல்களை பிரதிபலிக்கும் மாறுபட்ட மற்றும் ஆழமான மனித தொடர்புகளின் மூலம் அர்த்தங்களை உருவாக்க வேண்டும் என்ற அவரது கருத்து கொரோனா 19 காலகட்டத்தில் மெய்நிகர் அரங்காற்றுகைகள் மெய்ப்பித்திருக்கின்றன. இங்கு இந்தக்கருத்தை நாடகத்தை மெய்நிகர்வழி பார்த்தவர்கள் பலர் வெளிப்படுத்தியிருந்தார்கள்.

கொரோனா – 19 காலகட்டத்தின் சூழல் மெய்நிகர் ஆற்றுகைகளை தோற்றுவித்தாலும் அது புலம்பெயர்ந்தோர் மத்தியில் அவர்களின் தாயக நினைவுகளை மீட்டதோடு காலச்சார பிணைப்பையும் முறள்வலியுறுத்தியிருந்தது. இதனையே Performative Theory வலியுறுத்துகிறது.

ஜமுனா இந்திரகுமார (2021) பாடலில் கையாண்ட "பூவரசம் இலையில் போட்டு தட்டை வடை சுடுகிறார்" என்ற இவ்வரிகள்இ நாம் ஊரில் இருந்த போது இருந்த பூவரசமர வேலிகளையும் இஅதில் பூவரசம் இலைகளைப் பறித்து நாதஸ்வரம் செய்து ஊதிவிளையாடும் நிகழ்வுகளையும் என் கண்முன்னே கொணர்ந்தது. ஏன் பூவரசம் இலையில் வடை சுடும் முறைகூட தற்போது மாறிவிட்டதே!!.' ஆத்துப்பறக்க விடியக்காத்தால' போன்ற சொற்களை இப்போ கேட்பதில்லை. இம்மொழிகளைஇ இந்நாடகத்தில் கையாண்ட விதமும் நாடகபிரதியை வளப்படுத்தி நிற்கிறது என்றே சொல்லலாம்.

இங்கு நாடகம் பற்றிய பார்வை மாற்றம் பெறுகின்றது. அதனது அழகியல் கோட்பாடு வேறுபடுகின்றது. புரதிநிதித்துவப்படுத்தல் என்பது வேறொரு அர்த்தத்தைத் தருகின்றது. சுழலுடன் தொடர்புடையதான அழகியல் என்பது இங்கே பொருத்தப்பாடானதாக இருப்பதைக்காணலாம். பாட்டி நாடகத்தை நெருக்கடியான நிலைமையில் கிடைத்த தொழிநுட்பமூடாக ஈழத்துக் கலைஞர்களையும் சிறுவர்களையும் புலம்பெயர் மக்களையும்; அவர் தம் சிறுவர்களையும் இணைத்து பொம்மைகள் ஊடாக எம்மை மகிழ்வித்த செயல் திறன் அரங்க இயக்கத்தினருக்கும் அவர்களுடன்; பங்கு கொண்ட கலைஞர்களுக்கும் நன்றிகளும் வாழ்த்துகளும். அத்துடன் இந்த நாடகம் பொம்மைகள் இன்றி சிறுவர்கள் ஆற்றுகை செய்வதைக் காண அந்த உயிரோட்டம் காண்பதில் மேலும் ஆவலாக உள்ளேன் (ஜமுனா 2021).

நாடகத்தின் குணமே ஒவ்வொரு நிகழ்வையும் புதுமை ப்படுத்துவதுதான். அது கைகூடி வந்திருப்பது தெரிகிறது.பாடல், இசை - நாடகத்திற்கு வரப்பிரகாசமாய் இருக்கிறது. நல்ல முயற்சி! வாழ்த்துகள் பிரதீபனும் சாய்ராமும் தங்களின் நெளிப்பு சுழிப்புகளில் அரங்கவெளியைக் கண்னுன் கொண்டுவருவது சிறப்பு. பாடல், நாடகக் கருத்தை ஆற்றின் இழுப்பைப்போல் நம்மை இழுத்துச் சென்றது அழகு! நீங்கள் இசை என்பது கூடுதல் மகிழ்ச்சி! (மு. ராமசாமி,2021)

மரண சான்றிதழ் எனும் நாடகம் ZOOM வழியாக பார்க்க கிடைத்தது. கணவனைத்தொலைத்த மனைவியாக நடித்தவர் கைதேர்ந்த நடிகை என்பதை நிரூபித்திருக்கிறார். காணாமல் போன கணவனை தேடி அலையும் மனைவியாக அந்த பாத்திரமாகவே மாறி நடித்திருக்கிறார். நாடகத்தினை பார்க்கும் போது அவர் நடித்ததை போல இல்லை. அந்த கதா பாத்திரமாக மாறிவிட்டார் என்பதே நிதர்சனம். வாழ்த்துக்கள் நீண்ட நாட்களுக்கு பின்னர் நல்லதொரு நாடகத்தை பார்க்க கிடைத்தமை மகிழ்ச்சி. (பாபுஜீ ,2021).

வண்டியும் தொந்தியும் எனும் நாடகம் முதல் முதலாக சூம் ஊடாக பார்க்க கிடைத்தது. இது கதிரையிலிருந்து வயிறு வளர்க்கும் (தொந்தி) அதிகாரிகள் பற்றியது. நாடகத்தில் நடித்த இருவருமே பல அதிகாரிகளின் செயற்பாடுகளை நம் கண்முன்னே கொண்டு வந்திருந்தனர். இந்த நாடகத்தினை பார்வையிட வேண்டும் என்பதற்காக முல்லைத்தீவை சேர்ந்த ஒரு மாணவி, தனது வீட்டில் கவரேஜ் போதாமையால் இரவு 7 மணிக்கு உறவினர் வீடொன்றுக்கு சென்று அங்கிருந்து நாடகத்தினை முழுமையாக பார்த்து அதன் பின்னர் நாடகம் தொடர்பில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் கலந்து தனது கருத்தை தெரிவித்திருந்தார். அவ்வளவு தூரத்திற்கு நாடகத்திற்கான வரவேற்பு கிடைத்திருந்தது. சூம் ஊடாக நாடகத்தினை பார்வையிடும் போது கவரேஜ் பிரச்சனை, குறித்த நேரத்திற்கு சூம் செயலியை பயன்படுத்தி உள்நுழைவது என்பவற்றில் சிலருக்கு சிக்கல்கள் ஏற்பட்டு இருக்கலாம் கவரேஜ் பிரச்சனையால் சில தடவைகள் தடங்கல்கள் ஏற்பட்டன. அதனால் எதிர்வரும் காலங்களில் பேஸ்புக் யூடியூப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் நேரலையாகவோ அல்லது ஒளிப்பதிவு செய்து பதிவேற்றுவது தொடர்பில் செயற்திறன் அரங்கு கவனம் செலுத்த வேண்டும் என எதிர் பார்க்கிறோம். (மயூரப்பிரியன்.எஸ் 2021)

‘பாட்டி’ மெய்நிகர் நாடக ஆற்றுகையின் மூலம் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ்குடும்பங்கள் தாயகத்தோடு மீண்டும் கிடைத்த தொடர்பு காரணமாக இணையவழி தொலைக்காட்சியான பாமுகத் தொலைக்காட்சியுடன் இணைந்து பல்வேறு நாடுகளிலும் இருந்து சிறார்களை இணைத்து இளைய தலைமுறைக்கு இணையவழி நாடகப் பயிலரங்கை 2021 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆந்தப்பயிற்சியின் இறுதியில் பாட்டி நாடகத்தை ஐந்து நாடுகளில் இருந்து அவரவர் வீடுகளில் ஆற்றுகை செய்வதன் ஊடாக மெய்நிகர்வழி ஆற்றுகை செய்தார்கள்;. ஆந்த ஆற்றுகையை பாமுக இணையத் தொலைக்காட்சி வழி ஞுழுழுஆ செயலி மூலம் ஒளிபரப்பினார்கள். ஆதன் பின்னர் இணையவழி தனிநடிப்பு பயிற்சியும் நடத்தப்பட்டது. இணையவழி

தனிநடிப்பு போட்டியும் நடத்தப்பட்டது.

நாடக செயற்பாட்டாளர்கள் மாற்று நிலையினை தேடிக்கொண்டதன்அடிப்படையில் இணையவழிச்சாத்தியத்தின் அடிப்படையில் சூம்(ணுழுழுஆ) செயலியின் ஊடாக மெய்நிகர் வெளியினை பயன்படுத்தி அளிக்கைகளுக்கான சாத்தியத்தினை திறந்துவிட்டிருக்கின்றனர். இப்பின்னனியில் மெய்நிகர் ஆற்றுகைகளினை செயல்திறன் அரங்க இயக்கம் ஜனவரி (2021) மாதத்தில் நிகழ்த்தியிருந்தது. செயல்திறன் அரங்க இயக்கமானது தொடர்ச்சியான செயற்பாட்டின் அடிப்டையில் இடர்காலத்தில் அளிக்கையினை மேற்கொள்கின்ற வகையில் அவ் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற மெய்நிகர் அரங்க ஆற்றுகைகள் குறிப்பிடத்தக்கன (குமரன், 2023).

நாடக ஆர்வலர்கள் ஒருதளத்தில் சந்திப்பதற்கும் கருத்துக்களை பகிர்ந்துகொள்வதற்குமான களமாக மெய்நிகர் அரங்கவெளி அமைகின்றமை நாடக அளிக்கையினை உயிர்ப்புடன் வெளிப்படுத்துக்கொள்வதற்கான சூழ்நிலை காணப்படுகின்றது. இவ்வழிமுறையினை பேணிக்கொள்கின்ற வகையில் மிகக்கறுகிய ஆற்றுகையாளர்களைக் கொண்டு செயல்திறன் அரங்க நிறவனத்தினரால் மெய் நிகர் அளிக்கைகளினை மேற்கொண்டிருந்தனர். இது நாடக ஆர்வலர்களிற்கு மகிழ்ச்சி தருகின்ற செய்தியாக இருந்ததினை அளிக்கை நிறைவடைந்த பின்னர் நீண்டு சென்ற உரையாடலில் அவர்கள் முன்வைத்த கருத்துக்கள் மூலம் அறிந்துகொள்ள முடிந்தது. இத்தகைய செயற்பாடு அரங்கின் இருப்பிற்கான புதிய பொறிமுறையினை தேடுகின்ற முயற்சியின் ஒருவழிமுறையாககொள்ளமுடிவதுடன் அவ்வழிமுறையில் வெற்றிபெற்றதாகக் கருத்திக்கொள்ளலாம். வண்டியும் தொந்தியும் எனும் ஆற்றுகை ஜனவரி (2021) மாதம் 15ம் திகதி மற்றும் 21ம் திகதிகளில் நிகழ்த்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து ஏகாந்தம் எனும் வேடமுக ஆற்றுகையானது ஜனவரிமாதம் 30 ம்திகதி இடம்பெற்றது. வெளிநாட்டிற்கு பிள்ளைகளை அனுப்பிவிட்டு இங்கு தனித்திருக்கும் பெற்றோரது துயரினை இவ்வளிக்கை வெளிப்படுத்தியிருந்தது. இது துன்பியலான பதிவாக காணப்பட்டது. அடுத்து ‘மரணச்சான்றிதழ்’ எனும் ஓராள் ஆற்றுகையானது 31ம் திகதி ஜனவரிமாதம் நிகழ்த்தப்பட்டது. இவ்வளிக்கைள் முடங்கிப்போயிருந்த அரங்க அளிக்கைகளிற்கு புத்துயிர் ஊட்டிய நிகழ்வாகவே கொள்ளமுடியும் (குமரன், 2023).

### 5 . சவால்கள் மற்றும் மட்டுப்பாடுகள்

பிறமாவட்டங்கள் மற்றும் புலம்பெயர் சமூகங்களுக்குள் இருக்கும் இணைய அணுகல் மற்றும் தொழில்நுட்ப கல்வியறிவு போன்ற வேறுபாடுகள் சவால்களாக காணப்பட்டன..

உலகளாவிய பார்வையாளர்களுக்காக நேரடி மெய்நிகர்; நிகழ்ச்சிகளை வழங்கும் போது நேர மண்டல வேறுபாடுகள் சவாலாக இருந்தது.

மெய்நிகர் இடைவெளிகளில் பார்வையாளர்களின் தொடர்புகள் தமிழ் கலாச்சார அடையாளத்தை கொண்டவர்களையே அதிகளவு உறுதிப்படுத்தியிருந்தன. உலகப்பொதுவான உள்ளடக்கம் உருவாக்கப்படுவது சவாலானதாக இருக்கிறது.

தொழில்நுட்பத் தடைகள் குறிப்பாக எல்லா இடங்களிலும் இணைய வசதி சீரானதாக இல்லாததால் பெறும் அனுபவமும் அதற்கேற்ப வேறுபடுகின்றது. ஆற்றுகைகள் சிறு தாமத்துடன் சென்றடைகின்றன.

சிறந்த வீடியோ ஒளிபரப்பு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தெளிவான ஆற்றுகைகளுக்கு வாய்ப்பாக இருக்கும்.

### 4.0 முடிவுரை

சூம் செயலியைப் பயன்படுத்தி தமிழ் நாடகக் குழுக்கள் தங்கள் மெய்நிகர் ஆற்றுகைகள் மூலம் பார்வையாளர்களை விரிவாக்கிக்கொள்ளலாம். மேய்நகர் ஆற்றுகைகள் தொழில்நுட்பத்தைப் புரிந்து கொண்டு அதற்காகவே தயாரிக்கப்பட வேண்டும். ஆக்கப்பூர்வமான கதைசொல்லல் நுட்பங்கள் மற்றும் வடிவங்களை முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். நிகழ்நேர பார்வையாளர்களின் பங்கேற்பு அல்லது

ஊடாடும் கதைசொல்லல் போன்ற ஈடுபாட்டின் புதிய வடிவங்களை அறிமுகப்படுத்தி, மெய்நிகர் ஆற்றுகைகள்; ஆக்கப்பூர்வமான எல்லைகளைத் தாண்ட முடியும் என்பது இதன்வழி உணரப்படுகின்றது. புவியியல் ரீதியாகப் பிரிந்திருந்தாலும், தமிழ்க் குடும்பங்களுக்குச் சொந்தமான சமூக உணர்வை வளர்ப்பதற்கு இந்த மெய்நிகர் அரங்கு உதவமுடிகிறது. இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்ற குடும்பங்களின் உணர்ச்சி மற்றும் கலாச்சார தாக்கம் இதனை உறுதிப்படுத்துகிறது.

மெய்நிகர் ஆற்றுகைகள் தனிமைப்படுத்தப்பட்ட தொற்றுநோய் காலத்தில் உணர்ச்சிபூர்வமான ஆதரவு, மற்றும் கலாச்சார உறுதிப்பாட்டின் ஒரு வடிவமாக செயல்பட்டிருக்கின்றன. தமிழ் அரங்கப்பரப்பில் மெய்நிகர் நாடகங்கள் தமது தொழில்முறை அரங்க வளர்ச்சியில் ஒரு படிக்கல்லாக அமையும் திறன் கொண்டதாகும். இதனால் மெய்நிகர் ஆற்றுகைகள் தொடர்ச்சியாக நிகழத்தப்படுவதால் அரங்கு ‘Perfomative’ நிலைக்கு முன்னகர முடியும்.

## References


Matsumoto, R. (2017). Variations on theater and audiovisual. *Repertoire,* (28), 47-67. Retrieved From https://doi.org/10.9771/r.v0i28.24998

Kozinn, S. (2021). Theatre's On-Screen Persona: Cornerstone Theater's Highland Park Is Here: Stories from a Changing Barrio. *TDR: The Drama Review, 64*(4), 172–178. Retrieved From doi:10.1017/S1054204321000617

Lavender, A. (2006). Theatre And Technology. *MODERNBRITISH*, 551.

Kozinn, S. (2021). Theatre's On-Screen Persona: Cornerstone Theater's Highland Park Is Here: Stories from a Changing Barrio. *TDR: The Drama Review, 64*(4), 172–178. Retrieved From doi:10.1017/S1054204321000617

Jacobson, K. (2020). Theatre Companies Are Pushing Storytelling Boundaries with Online Audiences Amid COVID-19. *The Conversation*, 22.

Chatzichristodoulou, M., Brown, K., Hunt, N., Kuling, P., & Sant, T. (2022). Covid-19: theatre goes digital–provocations. *International Journal of Performance Arts and Digital Media, 18*(1), 1-6.

Rurale, A., Azzolini, M., Ivanova, D., & Fagundes, T. (2020). *The Impact of Covid-19 on the Performing Arts Sector.*

Tēvāṉant, Ti. (2021). Kooththarangam Magazine. *Scribd*.

Thulasi Muthulingam. (2021). Kūttaraṅkam Cañcikai: Virtual Performance: Timely Innovation. *Scribd*. *32*, 22.

Kumaraṉ. Es. Ri. (2021). Kūttaraṅkam Cañcikai: Meynikar Araṅkil Pārppōrai Makiḻvitta Aḷikkaikaḷ. *Scribd. 32*, 22-23. [குமரன். எஸ். ரி. (2021). கூத்தரங்கம் சஞ்சிகை: மெய்நிகர் அரங்கில் பார்ப்போரை மகிழ்வித்த அளிக்கைகள். Scribd. 32, 22-23.]

Jamuṉā Intirakumār. (2021). Kūttaraṅkam Cañcikai: Pāṭṭi Vantiṭṭā Eṅkaṭa Pāṭṭi Vantiṭṭā. *Scribd. 32*, 25-26. [ஜமுனா இந்திரகுமார். (2021). கூத்தரங்கம் சஞ்சிகை: பாட்டி வந்திட்டா எங்கட பாட்டி வந்திட்டா. Scribd. 32, 25-26.]

Rāmacāmi. Mu. (2021). Kūttaraṅkam Cañcikai: Meynikar Nāṭakam Kaikūṭivantirukkiṟatu. *Scribd. 32*, 24. [ராமசாமி. மு. (2021). கூத்தரங்கம் சஞ்சிகை: மெய்நிகர் நாடகம் கைகூடிவந்திருக்கிறது. Scribd. 32, 24.]

Pāpujī, Mu. (2021). Kūttaraṅkam Cañcikai: Maraṇac Cāṉṟitaḻ Nallatoru Nāṭakam. *Scribd. 32*, 24. [பாபுஜீ, மு. (2021). கூத்தரங்கம் சஞ்சிகை: மரணச் சான்றிதழ் நல்லதொரு நாடகம். Scribd. 32, 24.]

Mayūrappiriyaṉ, Es. (2021). Kūttaraṅkam Cañcikai: Nāṉ Pārtta Mutal Meynikar Nāṭakam. *Scribd. 32*, 24. [மயூரப்பிரியன், எஸ். (2021). கூத்தரங்கம் சஞ்சிகை: நான் பார்த்த முதல் மெய்நிகர் நாடகம். Scribd. 32, 24.]

# இன்னா நாற்பது இளையோர்க்கு வரையறுக்கும் வாழ்வியல் விழுமியங்கள்

## The Life Values defined for youngsters in 'Iṉṉā Nāṟpatu'

திசரண் சுக்லாம் ஆத்மலிங்கம் / Sharan Suklam Ahtma Lingam[1]
முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை / Dr. Manonmani Devi M.A.R Annamalai[2]

Date of submission: 2024-4-24
Date of acceptance: 2024-12-01
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name: Sharan Suklam Ahtma Lingam
Email: sharansuklam@gmail.com

**Abstract**

The Inna Narpathu, which comprises over 18 anthologies dating back to the period known as the Post Sangam era, encompasses various facets of life. This book reflects on diverse virtues and enlightens us about the thoughts of pain and the pursuit of knowledge that are universal to all living beings in the world. Even though this book contains various opinions, the primary objective of this article is to present some profound thoughts and life experiences to the younger generation that will enrich their lives. The research encompassed in this study has been gathered from various sources, including data from research, literature books and research articles. It examines life experiences that have enriched the lives of the younger generation through various perspectives. The findings of this study, which have been comprehended and appreciated by the younger generation, encompass aspects such as education, wealth, morality, social behavior, and leadership. These experiences have contributed solely to research. The insights provided in this essay shed light on literature that discusses experiences which enlighten the younger generation about principles of justice. Future researchers must undertake the task of collecting and compiling thoughts that enlighten the younger generation to ensure that such life experiences are not lost over time.

**Keywords:** Inna Naarpathu, Life Values, Youngsters, Morality

### முன்னுரை

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உலகத்தில் கூடாதவைகளை வெண்பாக்களாக அடுக்கிப் பாடப்பட்ட ஒரே பாத்தொகுப்பு இன்னா நாற்பது என்ற நூலாகும். முற்றிலும் அறத்தை மட்டுமே முன்னிறுத்தி அறம் பிறழும் கூடாதவைகளையும் துன்பம் விளைவிப்பவையையும் பட்டியலிட்டு அவ்வழியே மனித இனம் செல்லாமல் இருக்கவும் அறம் சார்ந்து வாழவும் சங்கம் மறுவிய காலக் கட்டத்தில் கபிலர் இயற்றிய நாற்பது வெண்பாப் பாடல்களே 'இன்னா நாற்பது' எனும் இந்நூலாகும். கடவுள் வாழ்த்தோடு நீதி உரைக்கும் இந்த நாற்பது பாடல்களில் அனைத்து அடிகளிலும்

[1]The author is a Master of Education (Tamil Language) research scholar in the Modern Language Department, Faculty of Languages and Communication, Sultan Idris Education University. sharansuklam@gmail.com

[2]The author is an Associate Professor in the Modern Language Department, Faculty of Languages and Communication, Sultan Idris Education University. manonmanidevi@fbk.upsi.edu.my

பெரும்பாலும் ‘இன்னா’ என்ற சீர் தோன்றுவதைக் காணலாம். இன்னாதவை இவ்வுலகில் என்னென்ன என்பனவற்றை விளக்கும் கபிலர், இவ்வுலகில் துன்பம் தரும் நிகழ்வுகளையும் சூழல்களையும் ஒவ்வொரு பாடலிலும் நான்கு கருத்தாக ஏறக்குறைய 160 கருத்துகளைப் பாடியுள்ளார் (பல்கிஸ்அன்பியா, 2020).

விழுமியம் என்பது, ஒரு நிகழ்வை அல்லது கருத்தை அடிப்படையாகக் கொண்டு அதற்கு நேர்மறையாகவோ எதிர்மறையாகவோ எடுக்கப்படும் மனப்பாங்காகும். அதோடு, மனித நடத்தையும் நன்மை, தீமைகளை வரையறுப்பதும் விழுமியம் ஆகும். அதன்வழி, விழுமியங்கள் மனித வாழ்வை நெறிப்படுத்தி வாழ்வின் பொருளை உணர்த்துகின்றன எனலாம். அதுபோல, சங்கப் புலவர் கபிலர் கூறிய கருத்துகளை இந்நூலில் கூர்ந்து நோக்கின் அவை அனைத்தும் அறம் சார்ந்து வழங்கப்பட்டுள்ளதால் அவை அனைத்தும் ஒரு மனிதனுக்குக் குறிப்பாக இளையோர்க்கு வேண்டிய வாழ்வியல் விழுமியங்களாக அமைகின்றன என்றால் அவை மிகையல்ல (ஞானமுத்து விக்ரர் பிலேந்திரன், 1996). எனினும், அக்கருத்துகளிலிருந்து மிகையாகப் பாடப்பட்ட கருத்துகளுள் ஐந்து கருத்துகள் விரிவாகத் தரவுப் பகுப்பாய்வில் விளக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வு இளையோர்க்கு இன்னா நாற்பது இலக்கியம் உணர்த்தும் வாழ்வியல் விழுமியங்களை ஆராய்வதாகும்.

## ஆய்வு நெறிமுறை

இவ்வாய்வானது பண்புசார் அணுகுமுறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கான தரவுகள் யாவும் நூலக ஆய்வு அணுகுமுறையில் எடுத்தாளப்பட்டுள்ளன. இந்த நூலக ஆய்விற்கு ஏற்ற நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவற்றைப் பயன்படுத்தி விளக்கமுறை அணுகுமுறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு முழுமையாக நூலக ஆய்வு அணுகுமுறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், தேவைக்கான தரவுகளை முதலில் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகளின் வழி சேகரிக்கப்பட்டது. தொல்காப்பியம் தொடங்கி நறுந்தொகை வரை ஏழு வகையான இலக்கிய நூல்களிலிலிருந்து ஆய்வுக்கான தரவுகள் சேகரிக்கப்படும். பின் சேகரித்த தரவுகளை வாசித்து மதிப்பீடு செய்து, தேவையான தகவல்களை மட்டும் அடையாளங்கண்டு, பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் பெரியோர், சிறியோர் சொற்களைக் கண்டறிந்து விளக்கமுறை அடிப்படையில் அத்தரவுகள் பகுத்தாயப்பட்டு ஆய்வுக் கண்டுபிடிப்புப் படைக்கப்படும்.

## இளையோர்க்கு வரையறுக்கும் வாழ்வியல் விழுமியங்கள்

இன்னா நாற்பது சங்கம் மறுவிய இலக்கியமானது பல்வேறு கருத்துகளை மனித இனத்திற்கு உணர்த்துவதைக் காண முடிகின்றது. ஆனால், அக்கருத்துகளைப் பகுத்தாய்ந்து இளையோர்க்கு உணர்த்தவரும் விழுமியக் கருத்துகளை மட்டும் ஐந்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அவை, கல்வியின் விழுமியம், செல்வத்தின் விழுமியம், இல்லறத்தின் விழுமியம், ஒழுக்கத்தின் விழுமியம், தலைமைத்துவத்தின் விழுமியம் ஆகியவை ஆகும்.

## கல்வியின் விழுமியம்

கல்வியைப் பற்றி நம் முன்னோர் பலரும் பல்வேறு காலக்கட்டங்களில் அறிவுரையாக வழங்கிச் சென்றுள்ளனர். அத்தகைய கல்விக்கு முக்கியத்துவம் வழங்கும் தமிழ்க்குடியின் மூத்த புலவருள் அடங்கும் கபிலரும் கல்வி சார்ந்த விழுமியங்களை உரைத்துச் சென்றுள்ளார்.

*ஆன்றவித்த சான்றோருட் பேதை புகலின்னா (பாடல் 17)*

இப்பாடலின் முதல் அடியானது, கல்வி கற்ற சான்றோர் நிறைந்த சபையில் கல்லாதவன் செல்லுதல் துன்பமாகும் என்ற பொருளில் அமைந்துள்ளது. அதாவது, கற்றவர் நிறைந்த சபையில் கல்லாதவன் என்பவனொருவன் இருப்பது துன்பம் தரும் என்று சொல்லப்படுகிறது. யார் இந்தக் கல்லாதவர்? ஏட்டுக் கல்வியைக் கல்லாதவரா? இல்லை. திருவள்ளுவரின் குறள் 395இன் கூற்றுப்படி, செல்வர் முன் வறியவர்

போல கற்றவரிடத்தில் ஏங்கி நின்று வேண்டிய அறிவைப் பெற்றவரே கற்றோர். இங்கு ஏட்டுக் கல்வி என்று மட்டுமே பொருள் கொள்ளல் பிழையாகும். எந்தவிதத் திறனையும் ஏங்கி விரும்பிக் கற்றுக் கொள்வோர் கற்றோராகவும் அக்கல்வியைப் பெற எந்தவொரு முயற்சியும் மேற்கொள்ளாதவர் கல்லாதவராகவும் காணப்படுகின்றார் (சிங்காரவேலு, *2014*). ஆக, கல்லாதவர் போன்றில்லாமல் இளையோர் விரும்பிய கல்வியை மேலோங்கிக் கற்க வேண்டும் எனப் புலப்படுகிறது. அதோடு,

*குலத்துப் பிறந்தவன் கல்லாமை யின்னா (பாடல் 19)*

நற்குடியில் பிறந்தவன் கல்வியறிவைப் பெறாதிருப்பது என்பதும் துன்பத்தை வழங்கும் என கபிலர் கூறுகிறார். இங்குக் குலமென்று அவர் கூறுவதைக் குடும்பம் எனும் பொருளில் கண்டால், ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்த அனைவரும், சிறந்த கல்வியைக் கட்டாயம் அக்காலத்தில் பெற்றிருக்கின்றனர் என்பது தெரியவருகின்றது. இதற்கொத்த கருத்தினைக் குறள் *409*இல் காணலாம் (கனிமொழி, *2023*). இஃது ஒரு புறமிருக்க,

*வாங்கின்னா; கல்லாதான் கோட்டி கொளல் (பாடல் 28)*

இப்பாடலில், கல்லாதவன் கற்றவர் அவையில் ஏதாவதொரு கருத்தைக் கூற விரும்புவதும் துன்பமே என்றும் கபிலர் கூறுகின்றார். ஆக, கல்வியின் விழுமியம் சார்ந்து கபிலர் கூறுவதாவது, இளையோர் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில் கல்வி கற்கவும், கற்ற கல்வியை கற்றோரிடத்தில் பகிரவும் செய்தல் வேண்டும் என்பதாகும். நற்குடும்பத்தை உருவாக்கவும் கல்வியானது அடிப்படைத் தேவையாக உள்ளதென்பதை உணர்தலும் வேண்டும்.

### செல்வத்தின் விழுமியம்

கல்வி எப்படி மனிதன் இவ்வுலகத்தில் வாழ்வதற்கு ஓர் அடிப்படைத் தேவையோ அதுபோலச் செல்வமும் மற்றோர் அடிப்படைத் தேவையாகும். செல்வம் சார்ந்தும் செல்வத்தைக் கையாளும் நுட்பம் சார்ந்தும் இன்னா நாற்பது இலக்கியத்தில் காண முடிகின்றது. முதலில்,

*இல்லாதார் நல்ல விருப்பின்னா (பாடல் 15)*

எனும் இவ்வடிகள் கூறுவதாவது, செல்வமில்லாதவர் விரும்பும் விருப்பமானது துன்பமாகும் என்பதாகும். இக்கருத்தினையே 'அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருளில்லார்க் கிவ்வுலகம் இல்லாகி யாங்கு' எனும் குறளும் தெளிவுபடுத்துகிறது (வரதராசன், *2004*). ஆக, இவ்வுலகில் நாம் விருப்பமான சிலவற்றை விரும்புவதற்கு முதலில் செல்வமானது அடிப்படையாக அமைகின்றது எனலாம். அதோடு,

*உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா (பாடல் 16)*

இப்பாடல் அடி உணர்த்துவதாவது, நாம் உண்ணாது சேர்த்து வைக்கும் பெரும்பொருள் துன்பமானது என்பதாகும். அதாவது, செல்வமானது நமது மன மகிழ்ச்சிக்கும் பிறர் நன்மைக்கும் பயன்பெறக்கூடிய பொருளாகும். ஆனால், அதனை நாமும் பயன்கொள்ளாது பிறரும் பயன்கொள்ள வழங்காது வெறுமனே அதிகமாகச் சேர்ப்பது பிற்காலத்தில் துன்பத்தை வழங்கும் என்ற கருத்தினை முன் வைக்கின்றது. பிறகு,

*வளமை யிலாளர் வனப்பின்னா (பாடல் 27)*

எனும் பாடலில், செல்வம் இல்லாதவருடைய அழகும் துன்பமானது என்பதாகும். அதாவது, செல்வமில்லாத மனிதர் கொண்டிருக்கும் அழகும் பயனற்றதாகவே காணப்படுகிறது எனும் கூற்றுத் தென்படுகின்றது. அழகியலென்பது உடலளவில் அக்காலத்தில் முக்கியத்துவம் வழங்கப்படாதவை என்றும் கல்வி, செல்வம், குடும்பம் ஆகியவற்றைச் சுற்றியே இதுபோன்ற பண்புகள் கட்டமைக்கப்பட்டுள்ளன என்றும் தெரியவருகின்றது. இத்தகைய கருத்துகளைப் பிற அடிகளில் இந்நூலிலேயே காணலாம். ஆக, இளையோர்க்கு உணர்த்தவரும் செல்வத்தின் விழுமியங்களானது, செல்வமின்றி இவ்வுலகில் நாம் வாழ்வது துன்பமானது என்றும் செல்வத்தை அளவிற்கு மீறியும் சேர்க்கக்கூடாதென்றும்

செல்வம், கல்வி போன்ற அடிப்படைத் தேவைகளை கட்டாயம் நிறைவேற்ற வேண்டும் என்பவைகளாகும்.

### இல்லறத்தின் விழுமியம்

கல்வி, செல்வத்தைக் கடந்து நன்மக்களைப் பெறும் பேறு இவ்வுலகில் நாம் மறைந்தும் வாழ்வதற்கான காரணியாகும். அத்தகைய இல்லறத்தைப் பேணுவதைப் பற்றியும் நல்லதோர் இல்லறத்தை அமைப்பதைக் பற்றியும் கபிலப் புலவர் பாடியுள்ளார்.

*ஆர்த்த மனைவி யடங்காமை நன்கின்னா (பாடல் 02)*

எனும் இப்பாடலடியில் கூறப்பட்டதாவது, திருமணம் செய்த மனைவி கணவனிடத்தில் அடங்காதிருப்பது துன்பமாகும். நாம் மனம் விரும்பி மணம்புரியும் துணையிடத்தில் அடங்காதிருப்பதும், எதிர்வழக்காடுவதும் துன்பத்தை வழங்கும் என்கிறார் புலவர். தொடர்ந்து,

*உடம்பா டில்லாத மனைவிதோ ளின்னா (பாடல் 11)*

அதாவது, உள்ளம் ஒருமித்திருக்காத மனைவியின் தோளைச் சேர்வதும் துன்பமாகும். அதாவது, திருமணம் என்ற அங்கத்தில் இணையும் இரு மணங்களிடையே மன ஒற்றுமை என்பதே அடிப்படையாகும். அப்படி, மனம் ஒத்திராத உறவில் நிலையான வாழ்க்கையும் வளமான செல்வமும் அமைவது கிடையாது. மேலும், பாடல் 14இல்,

*வணரொலி யைம்பாலார் வஞ்சித்த லின்னா*

*என்ற அடியும்*

*புணர்பாவை யன்னார் பிரிவின்னா (பாடல் 14)*

என்ற அடியும் உரைப்பதாவது, கருமையான கூந்தலையுடைய மகளிர் தம் கணவனை வஞ்சித்தல் துன்பமாகும் என்றும் வேற்றுமையின்றிக் கூடிய பெண்ணைப் பிரிந்து செல்வது துன்பமாகும் என்றும் காண முடிகின்றது. கறுத்த கூந்தல் என்ற சொல்லை நோக்கினால் அது இளைய வயதுடைய மணமக்களையும் அவர்களது வாழ்க்கை முறையையும் குறிப்பதாகும். எனவே, இளையோர் தாங்கள் தெரிவு செய்த வாழ்க்கையையும் இல்லறத்தையும் எந்நேரத்திலும் வெறுக்கவும் விட்டுப் பிரியவும் ஊடல் கொள்ளவும் கூடாது என்பதாகும்.

### ஒழுக்கத்தின் விழுமியம்

வாழ்வில் ஒழுக்கத்தை மூச்சாகவும் உயிரினும் மேலாகப் போற்றப்பட்ட இனத்தில் பலவகையான கருத்துகள் இது சார்ந்து பேசப்பட்டுள்ளது. அதுபோல, கபிலரும் சில குறிப்புகளை வழங்கியுள்ளார்.

*ஒழுக்க மிலாளார்க் குறவுரைத்த லின்னா (பாடல் 34)*

அதாவது, நல்ல ஒழுக்கம் இல்லாதவரிடத்தில் தமக்கு உறவு உள்ளதாகக் கூறும் பழக்கம் துன்பம் தருவதாகும். காரணம் அக்காலம் முதற்கொண்டே ஒழுக்கமிலாரது நட்பும் உறவும் தீயவற்றையே ஏற்படுத்தும் என்ற அகன்ற பார்வை ஒன்றை நம்மினத்தில் கொண்டிருக்கிறோம் என்பதாகும். அதோடு,

*அடக்க முடையவன் மீளிமை யின்னா (பாடல் 40)*

எனும் இவ்வடிகள் உணர்த்துவதாவது, அடக்கமுடையவனின் செருக்குத் துன்பம் தருவதாகும். ஏனென்றால், ஒழுக்கமிக்க ஒருவன் தன்னையும் தன்னைச் சுற்றியுள்ளவரையும் காக்கும் பொருட்டு வாழ்வான். ஆனால், செருக்குடைய மனிதன் தன்னலத்துடனே இருப்பார் என்பதாகும். எனவே, ஒழுக்கமென்பது இளையோருக்கு முக்கியப் பங்கு வகிக்கின்றது எனலாம். ஆக, இளையோர் ஒழுக்கத்தைப் பேணுதல் வேண்டும்.

### தலைமைத்துவத்தின் விழுமியம்

தலைமைத்துவம் என்பது சங்கக் காலம் தொடங்கி முக்கியத்துவம் வழங்கப்பட்ட விழுமியங்களில் ஒன்றாகும். உடல் போன்ற மக்களுக்கு உயிராய் விளங்குபவன் அவர்களின் தலைவனான அரசனே (அருள் செல்வம், 2017).

எனவே, ஒரு தலைவனுக்கான பண்புகளும் வாழ்வியல் உணர்த்தும் விழுமியங்களாகக் காணப்படுகின்றன. காட்டாக,

*முறையின்றி யாளு மரசின்னா (பாடல் 05)*

அதாவது, முறையின்றி நீதி இல்லாது ஆளப்படும் அரசின் ஆட்சி துன்பமாகும் என்பதாகும். அரசனானவன் தன்னை வளர்ப்பதில் மட்டும் முக்கியத்துவம் வழங்காது மக்களது நன்மைக்கு நீதி பிறழாது ஆளவேண்டும். தொடர்ந்து,

*ஆற்ற லிலாதான் பிடித்த படையின்னா*

*என்ற அடியும்*

*தேற்ற மிலாதான் றுணிவின்னா (பாடல் 07)*

தலைமைத்துவம் சார்ந்த பதிவுகளைக் கூறுகின்றன. அதாவது, ஆற்றலில்லாத வீரனின் கையிலுள்ள ஆயுதமானது துன்பம் தரும் என்பதோடு மற்றொரு அடி விளக்குவதாவது, தெளிவில்லாதவன் செய்யும் செயல்கள் துன்பமாகும் என்பதாகும். எனவே, ஆற்றலின்மையும் தெளிவின்மையும் நமக்கு மட்டும் தீங்கிழைக்காது பிறருக்கும் தீங்கிழைக்கும் தன்மை கொண்டதென்பதை ஒவ்வொரு தலைவனும் உணருதல் வேண்டும். மேலும்,

*துணிவில்லார் சொல்லுந் தறுகண்மை யின்னா (பாடல் 13)*

இவ்வடிகள் கூறுவதாவது, துணிவின்றி இருப்பவன் கூறும் வீரமொழிகள் துன்பம் தரும் என்பதாகும். அதாவது, பகைவரைச் சந்திக்கவும் துணிவாகச் செயல்படவும் தவிர்க்கும் ஒருவன் வீரமொழி பேசும் சொற்கள் துன்பமாகும் என்பதாகும். ஆக, தலைமைத்துவத்தில் இணைய விரும்பும் இளையோர் தங்களுக்குள் பல்வேறு விழுமியங்களை உள்வாங்கிக் கொண்ட பின்னரே மக்களை ஆளவோ காக்கவோ வழிகாட்டவோ வேண்டும். அதிலும், நீதியோடும் தன்னலமின்றியும் ஆற்றலுடனும் தெளிவுடனும் துணிவுடனும் வாழ்தல் வேண்டும். இளையோருக்கு இப்பண்பு முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது.

## முடிவுரை

சுருங்கக்கூறின், நல்லவை என்பனவற்றை மட்டுமே தமிழிலக்கியம் உரைத்தும் வழிகாட்டியும் வந்துள்ளது எனும் கூற்றினை ஏற்கவியாலாத வகையில் உலகில் தீதும் துன்பம் தரக்கூடியது என்ன என்று அன்றே பாடியுள்ள நமது முன்னோர்களின் அறிவுத் திறன் போற்றுதற்குரியது. அதுபோல, இன்னா நாற்பது எனும் இந்நூலில் காணக்கிடைக்கும் விழுமியங்கள் பல. அதில், கல்வி, செல்வம், இல்லறம், ஒழுக்கம், தலைமைத்துவம் போன்ற இளையோரை மையமிட்ட விழுமியங்கள் மட்டுமே ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அவை சார்ந்த விளக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன. இந்நூலைக் கொண்டு பல்வேறு ஆய்வுகள் மேலோங்க வேண்டும். இதுபோன்ற நீதி நெறி கூறும் இலக்கியங்கள் இளையோர்க்கு அறிவுறுத்தும் பணியை ஏற்றல் வேண்டும். அதுவழியே, இத்தகைய வாழ்வியல் விழுமியங்கள் அழியாது நிலைபெறும்.

## References


Arul Selvam. (2017). Mannargalin Atchimurai. In Sathasivam, S., Samikkanu Jabamoney, I., Amalarul Arasi, A. & Mary Kapcybai, M.. *Pannaaddu Parappil Tamil Ilakkiya Pokkukal* – Volume 1 (pp. 56-59). Chennai: Semmoothai Publications.

Kanimozhi. (2023) *Thirukkural*. Ipoh: Tamizhkani Publications.

Singaravelu, S. (2014). *Thirukkural*. Kuala Lumpur: Uma Publications.

Gnanamuthu Vicrar Pilendran. (1996). *Vizhumiya Kalvi*. Thirunelveli: Christian Society.

Balkil Anbiya, S. (2020). *Inna Naarpathu Unarththum Vazhviyal Neri*. Shanlax International Tamil Journal, 66-68.

Varatharasan, M. (2004). *Thirukkural*. Chennai: Saiva Siththantha Book Publishing Club.

# சைவ சித்தாந்த கருத்துப் பரவலாக்கத்தில் ஈழத்தவரின் இலக்கிய முயற்சிகள்: நமசிவாயம் அல்லது நான் யார் நூலை முன்வைத்து

# The Literary Efforts of the Sri Lankan's in the Dissemination of Saiva Siddhanta Concept: Presenting Namasivayam or Nan Yaar

**சின்னராஜா ரமணராஜா** / Sinnarajah Ramanarajah[1]

Date of submission: 2024-11-18
Date of acceptance: 2024-12-01
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name:
*Sinnarajah Ramanarajah*
Email: sramanaa@univ.jfn.ac.lk

**Abstract**

Based on the book Namasivayam or Nan Yaar, this research aims to identify the literary efforts of the Sri Lankan's in propagating the Saiva Siddhanta concept. The true vision of Saiva Siddhanta is Found in Jaffna culture, where Saiva Siddhanta is seen as the traditional culture of Jaffna people. This philosophy has evolved into the intellectual thoughts of the Saivite Tamil Society and is integrated into people's lives. Since the time of Arumuga Navalar, various activities have been undertaken to disseminate the Saiva Siddhanta concept. These philosophical concepts were carried to the society in different forms such as speeches and writings. The book Namasivayam or Nan Yaar which is the focus of this research contains a Saiva Siddhanta we have research here has tried to disseminate saiva siddhanta Philosophy as its core and serves as an artistic form for propagating this philosophy. Consequently, this research is conducted using a descriptive literature research methodology.

**Keywords:** Saiva Siddhanta, Jaffna Culture, Namasivayam or Nan Yaar, Drama Form, Saiva Leterature

## அறிமுகம்

காலனி ஆதிக்கமும் அதன் சுரண்டல் போக்குகளும் யாழ்ப்பாணத்தில் நவீனமயமாதல், நகரமயமாதல், தாராளமயமாதல் என பலவற்றைத் தோற்றுவித்தன. மேற்குலக நாடுகள் தமது காலனித்துவ ஆட்சி அதிகாரத்தின் ஊடாகத் தாம் கையகப்படுத்திய நாடுகளைப் பயன்படுத்தி பெருமூலதனத் திரட்டலைப் பெறுவதில் ஆர்வமும் முனைப்பும் கொண்டிருந்தன. இங்குள்ள பெருவளங்களைத் துணைக்கொண்டு தமது நாடுகளில் தொழில் வளத்தையும், சமூகத்தையும் வளப்படுத்துவதனை இலக்காக வும் கொண்டிருந்தன. கீழைத் தேய நாடுகள் பலவும் காலனித்துவ சக்திகளின் பொருளாதார சுரண்டலுக்கு உள்ளானதோடு அவற்றின் விற்பனை மையங்களாகவும் மாறின.

கி.பி. 16ஆம் நூற்றாண்டளவில் ஈழத்தின் காலனி ஆதிக்கத்தின் வரலாறு ஆரம்பித்தது. இதனியங்கியல் போர்த்துக்கேயர்கள், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்கள் எனத் தொடர்ச்சியாக 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை நடந்தேறியது. எனவே காலனியக காலகட்டத்தில்

[1]The author is a Senior Lecturer, Department of Hindu Civilization, Faculty of Hindu Studies, University of Jaffna. sramanaa@univ.jfn.ac.lk

ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மக்கள் வாழ்வாதாரத்திற்காகவும் பொருளாதார மேம்பாட்டிற்காகவும் கல்வி விருத்திக்காகவும் பண்பாட்டு மீட்டெடுப்புக்காகவும் காலனியாக்கர்களுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் எதிர்வினை யாற்ற வேண்டிய சூழல் காணப்பட்டது.

யாழ்ப்பாணத் தமிழர்களின் வாழ்வியல் என்பது இந்தியப்பண் பாட்டின் வலைகளால் பின்னப்பட்டிருக்கின்றது. அங்கு கருக்கொண்டு உருப்பெற்று முடிவு கண்டிருந்த 'சைவ சித்தாந்தம்' யாழ்ப்பாணத்து மக்களின் பண்பாட்டு வாழ்வியலில் அதிகளவு செல்வாக்குப் பெற்றிருந்தது. வேத ஆகமங்களையும் தோத்திர சாஸ்திரங்களையும் மூலகங்க ளாகக் கொண்டு சோழர்காலப் பின் எல்லையில் சைவ சித்தாந்தம் முடிவு பெற்றிருந்தது. தமிழர் தத்துவமாகவும் வாழ்வியலாகவும் செல்வாக்குப் பெற்று பெரும் தத்துவமாக சைவ சித்தாந்தம் திகழ்வதா யிற்று.

காலனியாக்கச் சூழலில் சைவ சித்தாந்தக் கருத்துக்களை மக்களிடையே எடுத்துச் செல்ல வேண்டும் என்பதில் முனைப்புக் கொண்டிருந்த அறிவர்கள், அதற்கான உபாயங்களை வகுத்துக் கொண்டனர். அதனை எவ்வளவு எளிமைப்படுத்த இயலுமோ அதற்கான செயலூக் கங்களை மேற் கொண்டிருந் தனர். பேருரை, பதவுரை, அரும் பதவுரை, பொழிப்புரை என மெய்கண்ட சாஸ்திரங்களை சமூகமயப்படுத்துவதற்கான முயற்சிகள் நிகழ்ந்தன. மேலும், பிரசாரங்கள், கல்வி அளிப்புகள், போதனைகள், சொற்பொழிவுகள் என பன்முகத்தன்மைகளில் சைவ சித்தாந்த தத்துவக் கருத்துக்கள் மக்களிடத்தில் எடுத்துச் செல்லப் பட்டன.

நாம் இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட நமசிவாயம் என்னும் நான் யார் 1929 ஆண்டு; வித்துவான் க. இராமலிங்கம் அவர்களால் எழுதப்பட்டது. சைவ சித்தாந்த சமூகப் பண்பாட்டு வாழ்வியலை மையப்படுத்திய கதையினை இந்நூல் பேசு பொருளாகக் கொண்டுள்ளது. க. இராமலிங்கம் சைவ சித்தாந்த தத்துவத்தின் மீதான தனது அறிவுப்புலமை சார் அனுபவத் தின் அடிப்படையில் இந்நாடக நூலை இயற்றியுள்ளார். எழுத்துரு வோடு மட்டுமன்றி மக்கள் முன்னிலையில் நாடகமாகவும் அரங்கேற்றப்பட்டிருக்கின்றது.

> "அடியேன் கல்வித் திறமையினா லாவது ஞான முதிர்ச்சியினா லாவது இந்நாடகத்தை எழுத முயன்றவனல் லன். அரிசியும் வசம்பும் விற்ற ஒருவன் வீதிகள் தோறும் சென்று 'அரிசிவசம்பு' என கூவித்திரிந்தமை யினால் ஆன்ம ஞானத்தை அடைந்தான் என்பர். அங்கனமே அடியேனும், இதை வாசிக்கும் சகோதர சகோதரிகளும் பஞ்ச கிருத்திய கர்த்தாவாகிய பஞ்சாட்சர சொரூ பியின் திருவருளைப் பெற்றுக் கடைந்தேறுமாறு அவருடைய பரிக்கிர சக்திகளின் திருநாமங் களை இடைப் பெய்து எழுதலா னன்"

என்று முகவுரையில் நூலாசிரியர் குறித்துள்ளார். இந்நூல் விநாயகர் துதி, சரஸ்வதி துதி எனும் இரு கடவுள் துதிகளோடும் நூற்பயன், அவையடக்கம், தேவாரம் என்னும் அம்சங்களோடும் தொடங்குகின் றது.

> "....ஒருவரம் வேண்டுவேன் யான் தன்னை அறிந்து தலைவனை மேவத்தகு மொரு நூல்..."

என சரஸ்வதி துதியில் வரும் பாடலடிகளில், தலைவனாகிய சிவனை அடையத் தன்னிலை அறிதலின் அவசியம் எடுத்துரைப் பதாக உள்ளது. நாடகத்தின் உட்கிடையினை மேற்போந்த அடிகள் தெரிவிக்கின்றன. 'இச் சரித உட்பொருளை எட்டுணை உணர்ந்தோர் இச்சையுடன் மெச்சி நடமிட்டவர்கள் யாரும் நிச்சயமதாய்ப் பெறுவர் நீதி தப்பார்' என நூலாசிரியர் நூற்பயன் குறித்து அறிவிக்கின் றார். இதன் மூலம் நூலாசிரியர் சைவ சித்தாந்தத்தின் மீது கொண்டுள்ள பற்றும் புலமைத் துவமும் வெளிப்படுகின்றது. மேலுமவர்,

> "கற்றறியாப் பேதையேன் காசினியிலிக் கதையை சிற்றறி வினாலெடுத்துச் செப்பினேன்..."

என அவையடக்கத்தில் தெரிவிப் பதும் எம்கவனம் பெறுகின்றது.

## பதிப்பு

ஈழத்துச் சமயப் பண்பாட்டு மெய்யியல் மற்றும் கலையியல் வரலாற்றில் நீக்கமற நிறைந் திருக்கும் இலக்கியங்களில் நமசிவாயம் அல்லது நான் யார் எனும் ஓர் நவீன நாடகநூலும் உள்ளடங்குகின்றது. சமூக மட்டத்தில் சைவ சித்தாந்த மெய்யியலை நாடகப் பாங்கில் பரப்புரை செய்யும் நூல் வடிவமாக இந்நூலுள்ளது. 1929ஆம் ஆண்டு கொழும்பு மெய் கண்டான் அச்சகத்தினரால் முதன் முதலில் பதிப்புச் செய்யப் பட்டது. சுமார் ஒரு நூற்றாண்டை அண்மித்த காலச்சூழலில் இன்று அதன் மறுபதிப்பின் தேவை உணரப்பட்டிருக்கின்றது. 2023ஆம் ஆண்டு இந்நூலின் ஆசிரியர் க.இராமலிங்கம் அவர்களால் உருவாக்கப்பட்ட மட்டுவில் கமலாசனி வித்தியாசாலையின் பரிசளிப்பு நாளுக்கு நினைவுப் பேருரைக்காக அழைக்கப்பட்ட பேராசிரியர் ச.முகுந்தனின் வரலாற்றியல் நோக்கிலான அணுகுமுறை இந்நூலின் இருப்பினை உறுதிப்படுத்தியதோடு அதனைக் கண்டறிவதற்கான தேடலையும் விரைவுபடுத்தியது. ஒருவருட காலமாக நிகழ்ந்த இவ்வரிய பணி இந்நூலை பொதுவெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது.

கமலாசனி வித்தியாசாலையின் பழைய மாணவர்கள் இந்நூலை பதிப்புச் செய்வதற்கான அனுசரணையினை வழங்கி இருந்தனர். பல நூல்களின் ஆசிரியரும், யாழ்ப்பாண வைபவம், சிதம்பர மான்மியம், யாழ்ப்பாணச் சமய நிலை ஆகியனவற்றை விமர்சன ரீதியான பதிப்புரைகளோடு மீள்பதிப்புச் செய்தவருமான பேராசிரியர் ச. முகுந்தன் இந்நூலின் பதிப்பாசிரியர் ஆவார்.

“இந்நாடக நூல் அதன் பொருண்மை நிலையில் தத்துவார்த்தக் குறியீட்டு நாடகப் பனுவலாக அமைந்துள்ளது. அந்த வகையில் சைவ சித்தாந்த மெய்யியலையும் அதுசார்ந்த வாழ்விய லையும் அக்கால சமூகத்தினருக்கு தேனில் செறித்து ஊட்டப்படும் ஔடதம் போலத் தரும் வகையில் இந்நூல் அமையப் பெற்றுள்ளது.”

என நூலின் தன்மையினை பதிப்பாசிரியர் வெளிப்படுத்துகின்றார்.

வைதிக நெறிசார் வாழ்வியல் ஊடாட்டம் வேதங்களை முன்னிறுத்தியதாகவே காணப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு தத்துவவியல் விவாதிப்புகள் காலம்தோறும் இடம்பெற்று வந்திருக்கின்றன. தத்துவவியியல் சிந்தனைகளை முன்வைப்பதும் அவற்றைச் சமூக மயப்படுத்து வதற்கான உபாயங்களைக் கொண்டிருப்பதும் மெய்யியலாளர்களின் கொள்கை வகுப்பாகும்.

இந்நூலின் பதிப்பாசிரியர், தத்துவக் கருத்தியல் பொதிந்த நாடகப் பிரதிகளை வரலாற்றியல் ரீதியாக முன்வைத்திருப்பது கவனிக்கத்தக்கது. ‘சமய தத்துவக் கருத்தியல்களை கதைக்களத்தில் மோதவிட்ட சந்தர்ப்பங்களை தமிழ் இலக்கி யப் பரப்பில் மணிமேக லையில் முதல் முதலில் அடையாளம் காண முடிகிறது’ என கூறும் பதிப்பாசிரியர், மத்தவிலாசப் பிரகசனம், பிரபோத சந்திரோ தயம் (அத்வைதக் கொள்கையை சமூக மயப் படுத்தும் நாடக நூல்), சங்கல்ப சூர்யோதயம் (விசிட்டாத் வைதக் கொள்கையை விளக்கும் நாடகநூல்), உபயக் ராஸராஹீ தயம் (துவைத வேதாந்த கொள்கையை விளக்குவது) மற்றும் மெய்ஞ்ஞான விளக்கம் முதலான நாடகப் பிரதியாக்கங் களையும் பட்டியற்படுத்தி உள்ளார். 16ஆம் நூற்றாண்ட ளவில் மாதை திருவேங்கட சுவாமிகள் தமிழில் இயற்றிய ‘மெய்ஞான விளக்கம்’ என்பது வித்துவான் க.இராமலிங்கம் பிள்ளைக்கு முன்னோடிச் சிந்தனைகளை வழங்கி இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

இலங்கையின் வடபுலத்தில் வாழ்ந்த புலமையாளர்கள் சைவ சித்தாந்த மெய்யியலை சமூக மயப்படுத்துவதற்கான அடிப்படைகளைப் பன்முக வடிவங் களில் முன்னெடுத்திருந்தனர். ஆறுமுக நாவலரின் சைவ வினாவிடை, சிவாலய தரிசன விதி, காசிவாசி செந்திநாதையரின் சிவஞானபோத வசனலங்காரதீபம், மு. கந்தையாவின் சிவஞானசித்தித் திறவுகோல் என்பன சில எடுத்துக்காட்டுகளாகும். ஆனால் இதிலிருந்து வேறுபட்டு சைவ சித்தாந்த

மெய்யியலை கலை வடிவமாக்கி மக்கள் மயப்படுத்தும் தத்துவார்த்த நாடகப் பிரதியாக்க முயற்சிகளும் ஈழத்தில் இடம் பெற்றிருந்தமைக்கு நமசிவாயம் அல்லது நான் யார் என்னும் நூல் நல்ல திருட்டாந்தமாகும்.

இப்பதிப்பில்சை வசித்தாந்த தத்துவக் கருத்தியலை நாடக வடிவமாக்கிய ஈழத்தவர்களுள் முக்கியமாக மூவர் குறித்து வரலாற்றுரீதியாக அணுகப் பட்டிருக்கின்றது. ஒருவர் சேர். முத்துக்குமாரசுவாமி. இவர் சைவம், சைவ சித்தாந்த தத்துவம் சார்ந்து புலமைத்துவ ரீதியாக ஆய்வுரைகளைச் செய்திருப்பவர். அரிச்சந்திரன் நாடகத்தை ஆங்கிலத்தில் நாடகப் பிரதியாக்கி 1864இல் விக்டோரியா மகாராணி முன்னிலையில் ஆற்றுப்படுத்தி இருந்தார். மற்றை யவர், நவாலியூர் சோமசுந்தரப் புலவர். இவரது ‘உயிரிளங்குமரன் சைவ சித்தாந்த உட்பொருளை பாத்திரப் பிரதிகள் ஊடாக வெளிப்படுத்திய நூலாக உள்ளது. ஆய்வாளர்களும் நாடக ஆசிரியர் களும் ‘உயிரிளங் குமரனை’ இனங்கண்டு கொண்டுள்ளமைபோல நமசிவாயம் அல்லது நான் யார் எனும் நூலை யாரும் கண்டு கொள்ளவில்லை என்று தமது ஆதங்கத்தை தெரிவிக்கும் பதிப்பாசிரியர், இந்த நூலை பதிப்பு செய்து வெளியிடுவதில் தான் சந்தித்த இன்னல்களை தெரிவித்திருக்கின்றார்.

### நமசிவாயம் அல்லது நான் யார் நூல் நுவலும் பொருளும் சிறப்பு களும்

சைவத்தமிழ் சமூகத்தின் அறிவார்ந்த சிந்தனைகளாக வளர்ந்த சைவ சித்தாந்த தத்துவம், மக்கள் வாழ்வியலாக இணைந்து கொண்டது. மெய்யியலும் வாழ்வியலும் ஒருமுகமானவை என்பதனைப் புரிந்து கொள்வதற்கு சைவ சித்தாந்த வாழ்வியல் துணை புரியும். சைவ சித்தாந்த தத்துவத்தின் இன்றியமையாக் கூறுகளை நாடகப் பிரதி ஊடாக மக்கள் மையப்படுத்துவதற்காக எடுத்த முயற்சியே நமசிவாயம் அல்லது நான் யார் எனும் நூலுக்கான அடிப்படையை வழங்கி இருக்கின்றது.

இந்நூலினை இலகுவில் விளங்கிக் கொள்வதெனின், தமிழறிவு நாடக அறிவு, சைவசித்தாந்த மெய்யியல் அறிவு எனும் முத்திறனறிவு நிரம்பப் பெற்றிருத்தல் வேண்டும். இது நூலாசிரியரின் புலமைத்துவத் திற்குக் கட்டியம் கூறுவதாக உள்ளது.

நாடகம் என்பது அறிவுப் பரவுகைக்கான - அறிவுக் கையளிப்புக்கான ஒரு ஊடகமாகத் திகழும் கலைவடிவமாகும். கதை தழுவி வரும் கூத்தே நாடகமாகும் என்கிறார் விபுலானந்தர். இன்றைய காலத்தினைப் போலல்லாது வலுவான ஊடகங்கள், இணையத்தள சாதனங்கள், நூல்கள், செய்தித் தாள்கள் என்பன பிரபலம் இல்லாத அன்றைய காலச் சூழலில் மக்களுக்கான அறிவுக் கையளிப்புச் செயற்பாடு நாடகம் என்னும் கலை வடிவத்தின் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டது. சைவத்தமிழ்ச் சமூகத்தின் அறிவார்ந்த தத்துவக் கோட்பாடாக இருந்த சைவ சித்தாந்த மெய்யியலை மக்களிடத்தில் எடுத்துச் செல்ல முற்பட்ட உயிரிளங்குமரன், நமசிவாயம் அல்லது நான் யார் எனும் இரு நாடக நூல்களும் ஒரே நூற்றாண்டைச் சேர்ந்தன. ஆயினும் நமசிவாயம் அல்லது நான் யார் எனும் நூல் உயிரிளங்குமரனுக்கு காலத்தால் சில ஆண்டுகள் முற்பட்டதாகவே திகழ்கின்றது.

சைவ தத்துவத்தின் நுண்ணார்ந்த சிந்தனைத் தடங்கள் காலம் தோறும் இலகுவான சாவி கொண்டு திறக்கப்படுவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வந்த சூழலில் நாடக வடிவத்தின் ஊடாக எளிமையாக்கி பாத்திரக் குறியீடுகளால் இலகுபடுத்தி சமூக மயப்படுத்தும் இந்நூன்முயற்சி மெய்ச்சத் தகுந்தது. அதுவே இந்நூலுக்கான சிறப்பு எனவும் நோக்கப்படுகின்றது.

சான்றவர் ஆய்ந்திடத் தக்க பொருள்கள் ஆவன இறைவன், உயிர் பிரபஞ்சமாகும். பேரறிவு டைய இறைவன் பிரபஞ்சப் பற்றற்ற இயல்புடையவன். ஆனால் உயிர்கள் தமது சிற்றறிவுக்கு ஏற்ப சிறு தொழில்களை ஆற்றவல்லன. சிற்றறிவும் அவற்றால் விளையும் செயல்களும் உயிர்களுக்கான உய்தியினை – விடுதலையினை அடைய முடியாதபடி செய்து விடுகின்றன. அதாவது, பிரபஞ்சப் பற்றானது பேரறிவுடைய இறைவனை அடைய

உயிர்களுக்குத் தடையாக அமைகின்றது. இத்தடைகளில் இருந்து நீங்க வேண்டுமெனில் உயிர்கள் 'தம்மை அறிய' வேண்டும். 'தன்னை அறிய தமக்கோர் கேடில்லை' என்கிறார் திருமூலர். 'தன்னை அறிய வேணும் சாராமல் சார வேணும் பின்னை அறிவதெல்லாம் பேயறி வாகும்'', என்கிறார் குதம்பைச் சித்தர். எனவே, பரம சுகத்தை அடைய 'தன்னைத் தானறிதல்' வேண்டும். இதுவே 'நான் யார்' எனும் ஞான விசாரமாகும். நான் யார் எனில், கன்மந்திரியம், ஞானந்திரியம், மனம், புத்தி, சித்தம் அகங்காரம், பிராணன் எதுவுமன்று. இதற்கு வேறாக தனித்து நிற்கும் அறிவே நான் என்பதாகும். (ரமண மகரிஷி, 2017, ப.1)

இந்த அடிப்படையில் நான் யார் அல்லது நமசிவாயம் எனும் ஓர் நவீன நாடகத்தினை அணுக வேண்டும். நமசிவாயம் என்பது ஆன்மாவின் பெயராகும். இவ்வான்மாவே இந்த நாடகத்தின் மையப் பாத்திரம் ஆகும். இதனைவிட இன்னும் பத்தொன்பது (மொத்தம் 20) கதாபாத்திரங்கள் ஊடாக இந்நாடகம் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. ஓர் ஆன்மாவின் இலட்சியம் உலகப் பற்றறுத்து அதனின்றும் விடுபடுதலே ஆகும். இச்செயல்பாட்டில் ஆத்மனுக்கு ஏற்படும் அனுபவங்கள் எவை? அதனால் அவன் அடையும் துன்பங்கள் எவை? பஞ்சப்புலன்களால் அலைப்பு உண்டாகும் நிலை என்ன? ஆணவம், கன்மம் முதலான மலங்கள் எவ்வாறு அந்த ஆத்மாவுடன் தொடர்பு கொள்கின் றன? இதற்குள் சிக்கித் தவிக்கும் ஆன்மாவின் பரிதவிப்பு எத்தகையது? என்பது பற்றியே இந்த நாடகம் தெளிவுபடுத்த முனைகின்றது.

பிரதானபாத்திரம் - நமசிவாயம், நமசிவாயத்தின் இலட்சியம் - ஈடேற்றம், ஈடேறும் கதைக்களம் - மாயாபுரம், மாயாபுரம் என்பது - பிரகிருதி மாயையில் இருந்து விரிந்த உலகம், ஆன்மாவை அழுத்தி வைத்திருக்கும் திரோதான சக்தி – மன மோகனன், மனமோகனனன் சேவகன் - ஆசைப்பிள்ளை, ஆசைப்பிள்ளை - ஆணவம், ஆகாமியன் - கன்மம், பஞ்சகிருத்திய நாயகர் - ஆன்மாக்களை கன்மத் தளைகளில் இருந்து விடுபட்டு ஈடேற வழிகாட்டும் இறைவன் (பதிப்பொருள்), பதிப்பொருள் - ஆன்ம நாயகன் (உயிர்களின் தலைவன்) என பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இந்நாடகத்தில் வருகின்ற கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றும் சைவ சித்தாந்த தத்துவக்; கருத்தியல்களுடன் தொடர்புறு வனவாகவும், ஆன்மாவின் (நமசிவாயம்) இலட்சியப் பயணத்தில் இடைவினை புரிவனவாகவும் உருவாக்கப்பட்டுள்ளமை காணுதற்குரியது. இதன் நிமித்தம் இந்நூலாசிரியர் குறிப்பிடும் கதை நிகழும் இடம் மற்றும் நாடகப் பாத்திரங்கள் பற்றி பின்வருமாறு நோக்கலாம்.

கதை நிகழும் இடம்: மாயாபுரம் என்னும் தேசத்திலே சாவாங் கோட்டை எனும் ஊரும் தபோவனமும்

நாடகப் பாத்திரங்கள்

1. ஆன்மநாயகன் (பஞ்சகிருத்திய கர்த்தர்) ஏக சக்கராதிபதி
2. சகலகலாநந்தர் - (தெட்சிணா மூர்த்தி) குரு
3. சதாசிவம் (ஆண்டான்) சிவக் கொழுந்துவை வளர்த்தவர்.
4. அறிவானந்தர் (சிவஞானம்) இளவரசன் நீதிபதி
5. சற்புத்தி(அருட்சத்தி) நமசிவாயத்தின் நண்பன்
6. மனமோகனன் (திரோதானம்) மந்திரி
7. நமசிவாயம் (ஆன்மா) மனமோகனன் புதல்வன்
8. ரசோகுணன் (ரசோகுணம்) மனமோகனன் தத்துவ புத்திரன்
9. தமோகுணன் (தமோகுணம்) மனமோகனன் தத்துப் புத்திரன்
10. விவேகானந்தர் (காலதத்துவம்) கல்யாணப் பதிவுகாரர்
11. சித்தம்பலம் (நியதி தத்துவம்) காவலர்
12. அருளம்பலம் (நியதி தத்துவம்) காவலர்

13. ஆசைப்பிள்ளை (ஆணவம்) மனமோகனன் சேவகன்.

14. ஆகாமியன் (கன்மம்) மன மோகனன் சேவகன்

15. ஆனந்தன் (சிவானந்தம்); ஆன்ம நாதரின் ஆசார வாயிற் காவலன்

16. கருணாம்பாள் (சிவ நேசம்) அறிவானந்தர் மனைவி

17. லோகசுந்தரம் (பசு ஞானம்) அறிவானந்தர் புதல்வி

18. ஞானசுந்தரம் (பதிஞானம்) அறிவானந்தர் புதல்வி

19. சாந்த வசனி (சாத்துவித குணம்) மனமோகனன் மனைவி

20. சிரத்தை (சிரத்தை) ரசோகுணன் காமக்கிழத்தி (சிவக் கொழுந்து நமசிவாயத்தின் தீக்சா நாமம்)

என்பன இந்நாடகத்தின் பாத்திரப் படைப்புகளாகும். இவற்றுள் சிவநேசம், பசுஞானம், பதி ஞானம், சாத்துவித குணம், சிரத்தை முறையே கருணாம் பாள், லோகசுந்தரம், ஞான சுந்தரம், சாந்தவசனி, சிரத்தை என பெண்பால் பாத்திரங்களாகவும் ஏனையவை ஆண்பால் பாத்திரங்களாகவும் சித்தரிக்கப் பட்டுள்ளமையும் கவனத்திற்குரியது.

ஐந்து அங்கங்கள் ஊடாக கட்ட மைக்கப்பட்டுள்ள இந்நூல் 26 காட்சிகளைக் கொண்டதாக வடிவமைக்கப் பட்டுள்ளது,

முதல் அங்கம் - இரண்டு காட்சிகள்

இரண்டாம் அங்கம் - இரண்டு காட்சிகள்

மூன்றாம் அங்கம் - பதின்மூன்று காட்சிகள்

நான்காம் அங்கம் - ஏழு காட்சிகள்

ஐந்தாம் அங்கம் - இரண்டு காட்சிகள்

என மொத்தமாக 26 காட்சிகள் உள்ளன. ஒவ்வொரு காட்சியின் இறுதிப் பகுதியிலும் காட்சிகள் ஊடாக வெளிப்படுத்தப்படும் சைவ சித்தாந்த தத்துவத்தின் பொருண்மை குறித்து எடுத்துக் காட்டப்பட்டுள்ளமை நூலின் தனித்துவத்தை அளவிடத் துணை புரிகின்றது. சைவ சித்தாந்த பொருண்மையின் ஆழம், படிப்பவரால் உணரும் திறன் கொண்டது. 26 காட்சிகள் ஊடாக நூலாசிரியர் 26 விதமாக சைவ சித்தாந்த கருத்துக்களை வெளிப்படுத்தி இருக்கின்றார், அவற்றை ஈண்டு நோக்குதல் பொருத்தமுடைய தாகும்.

**முதல் அங்கம்:**

முதலாம் காட்சி – எய்துதற்கு அரியதான மானுட தேகத்தை எடுத்த ஆன்மா அதனால் எய்தும் பயனை ஆராய்ந்து அறியாது ராசத, தாமத குணங்களின் வயப்பட்டு உலகப் பற்றுக்களில் அமிழ்த்தி தீய சக்திகளை சம்பாதித்துக் கொள்கின்றது.

இரண்டாம் காட்சி - தீயகர்மங்களை பெற்றுக் கொண்ட ஆன்மா சிறிது சாத்வீக குணம் தழைப்படுதலினால் தன்னையும் தலை வனையும் அறிய வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு அறிவினை பெற்றுய்ய முயல்கின்றது.

**இரண்டாம் அங்கம்:**

முதலாம் காட்சி - சத்துவ குணம் தலைப்பட்டு அறிவினைச் சம்பாதிக்க முயன்ற ஆன்மா பழைய கன்மங்களினால் பின்னும் உலகியல் விடயங்களில் ஈடுபாடு கொண்டபோது அறிவும் கருணையும் அதற்கு உடன்படாது எதிர்மறுத்து நிற்கும் சமயத்திற்றான் சத்குரு வெளிவந்து சன்மார்க்க உபதேசம் செய்து அருள்வார்.

இரண்டாம் காட்சி - பக்குவம் பெற்ற ஆன்மாக்கள் பஞ்சாட்சர உபதேசம் பெற்ற வழியும் பழைய கன்மங்களினால் அதன் உண்மை உணராதவர்கள் உலகப் பற்றுக் களில் அமிழ்ந்து விடுவர் என்பதும், சத்துவ குணமும் மனமும் ஒரே வழியில் செல்வதனால் சீவகாருண்ய சீலராய், அதன் உண்மை உணர்ந்து ஜெபம், தியானம் செய்பவர்கள் தம்மை அறிந்து கொண்டு தலைவனைத் தலைப்படுவர்.

**மூன்றாம் அங்கம்:**

முதல் காட்சி - விதித்துரைக்கப்பட்டதன் வழி

பஞ்சாட்சர உபதேசம் எய்திக் கிரியா பாதத்து நிற்கின்ற ஆன்மா, காமக் குரோத முதலானவற்றால் அலைக்கழிக்கப்பட்டு, சற்புத்தி இடையிடையே தோன்ற தான் யார்? தனது சுற்றத்தவர் யார்? என அறியாது இந்த சந்தர்ப்பத்தில் கருணாநிதி ஆகிய சற்குரு வந்து ஞானோப தேசம் செய்து சதாசிவ தியானத்தில் இருத்திச் செல்வார்.

இரண்டாம் காட்சி – சிவத் தியானத்தில் இருந்த ஆன்மா பழைய கருமத்தொடர்பினால் திரோதான சக்தி தன்வழி இழுக்கவும் அப்பொழுதே திருவருட் சத்தியம் உடன் எழுந்து தன்வழி இழுத்து நல்லறிவினை உண்டாக்க குருவினை நாடி நிற்கும்.

மூன்றாம் காட்சி - ஆன்மா சிவத் தியானத்திலிருந்தும் திரோதான சக்தியின் முனைப்பினால் சதா சிவத்தை அறியாது உண்மையைத் துணியுமாறு குருவினை நாடிச் செல்லும்.

நாலாம் காட்சி - ஒரு தலை துணியப் புகுந்த ஆன்மா திரோதான சக்தி தன் வழியிழுக்கவும் அருட் சக்தியினால் நல்லறிவு அவாவி நிற்கின்றது என்பது ஞானத்தையே காட்சியால் பெறப்பட்டதாமென்க. அன்றி முழுதும் திரோதான சக்தி வசப்பட்டு உலக விவகாரத்துள் அமிழ்ந்தினோர் தாமும் கடவுளை அவாவுவார் போன்று வாணாள் வீணாகக் கழிப்பர் என்பதும் இதனால் தோன்றுமாறு உய்த் துணர்க.

ஐந்தாம் காட்சி - ஞானத்தினை அவாவி சற்புத்தி தோன்றப் பெற்ற ஆன்மா குருவின் உபதேசத்தினால் அதனை எய்தும் பொருட்டு சற்புத்தியின் வழி நிலைத்து நிற்கும்.

ஆறாம் காட்சி – திரோதான சக்தி பழைய வாசனையினால் தாமத குணத்தை எழுப்பி விடவும், அருட்சக்தி இடம் கொடாமல் விவேகத்தோடு கூடிய நல்லறி வினை உண்டாக்கி ஆன்மா வினை ஞானத்தின்கண் நிலைக்கச் செய்யும் என்பது இக்காட்சியால் பெறப்பட்டது. அன்றியும் தாமத குணத்தின் வசப்பட்ட உலக விவகாரிகள் சிலர் ஞானத்தையும் கடவுளையும் எய்துவார்போல் நடித்து தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொள்வார்கள்.

ஏழாம் காட்சி - ஞானத்தின் கண் நிலைக்க முயன்ற ஆன்மாவை முன் தாமத குணத்தினை ஏவி முனைத்த திரோதான சக்தி ராஜத குணத்தை எழுப்பிக்கொண்டு பின்னும் முனைக்கும் என்பதும் அக்குணங்கள் கெடுமாயின் தன் வலிகுன்றிவிடும்.

எட்டாம் காட்சி - மேற்கூறிய ஞானத்தின்கண் நிலைக்க முயலும் ஆன்மாவை திரோதான சக்தியின் முனைப்பினால் தாமத, ராசத குணங்கள் ஒன்று கலந்து பல முறையும் அலைக்கும்.

ஒன்பதாம் காட்சி – ஞானத்தின் கண் இளைக்கும் ஆன்மா மனை மக்களாகிய உலக விவகாரங் களில் கருணை வைக்கு மாயின் அது வழியானே தாமத குணம் எழுந்து அறிவினைக் கெடுக்க முயலும்.

பத்தாம் காட்சி – சிவத்தியான வாதிகளால் தோன்றிய ஆன்ம ஞானம், அறிவானது உலக விவகாரங்களில் எழுந்த கருணையினால் அவற்றில் அமிழ்துமாயினும் தான் கீழ்நிலையை பெற்று விடமாட்டாது.

பதினோராம் காட்சி - சதாசிவ தியானத்தினால் சிவஞானத்தை விரும்பிய ஆன்மா அதனால் தன்னையும் தலைவனையும் விரைந்து தலைப்படாதவாறு உலக வியவகாரம் பற்றுக் கோடாக ராசத, தாமத குணங்கள் ஒருங்கே எழுந்து பலவாறு அழைக்க முயலும்.

பன்னிரண்டாம் காட்சி – சிவ ஞானத்தையே அடைய வேண்டும் என்னும் சற்புத்தி கைவரப் பெற்ற ஆன்மாவை அப்புத்தி ஒழியும் தோறும் ராசத தாமத குணங்கள் வெளிவந்து கெடுக்க முயலும். ஆயினும் சதாசிவ தியானத்தின் பலனாக பரமசிவன் வெளிவந்து ஆட்கொண்டு அருளுவார்.

பதின்மூன்றாம் காட்சி – சிவத் தியானத்தினால் ஞானத்தினைப் பெற நின்ற ஆன்மாவுக்குச் சிறிது உலக வாசனை இருக்குமாயின் தாமத, ராசத குணங்கள் எழுந்து ஞானத்தைத் தடுக்க முயலும். அன்றியும் ராசத, தாமத குணங்களின் வசப்பட்டு உழலும் சிலர் ஞானத்தை எய்தும் வழிவகை அறியாது அதனை எய்துவதற்குரிய சத்துவ குணம் தலைப்பட்டவர் போல நடிப்பர்.

**நான்காம் அங்கம்:**

முதலாம் காட்சி – சிவத் தியானம் உள்ள ஆன்மாவுக்கு உலகப்பற்று நீடிக்குமாயின் அதனூடாக தாமத குணம் எழுந்து காம குரோதங்களை எழுப்பி அஞ்ஞானத்தை அழிக்க முயலும் என்பதும், தாமத குணத்தின் வசப்பட்டு குரோதி குணங்களை நயந்து கொண்ட அறிவிலிகள் சிலர் “இந்தச் செயலினால் வரும் பகை எல்லாம் சிவன் செயலன்றி, அந்தகனால் மென்ற மூடர்கள் அதோ கதி அடைவர்” என்னும் சுருதியின் உணராது தம்மனம் போனவாறு போய் ஞானத்தை அறிந்தார் போல தனிமை எய்தி இறுமாந்திருப்பினும் அதனை அடைய மாட்டார் என்பதும் ஞானத்தை எய்துவேன் எய்தி னேன் என்ற என்ன மாத்திரை யானே சிறிது பயனுறுவர்.

இரண்டாம் காட்சி - எந்நேரமும் சிவத் தியானத்தில் இருந்த ஆன்மா உலக விவகாரந்தடிக்குமாயின் காம குரோதிகளில் அமிழ்ந்து விடும். பின் சிவத் தியானத்தின் பயனாக அறிவினைப் பெற முயலும். அவ்வாறு முயலுமிடத்து அந்த வாசனையினால் ஐம்புல நுகர்ச்சியும் ஞானம் என தான் அடையும் பொருள் என்று தோன்றக்கூடும். அங்ஙனம் தோன்றுமாயின் தாமத குணம் என்பதும், தாமத குணம் உடையார் ஞானம் என அடைவது ஐம்புலன் தம்வசப்படுத்தல் நுகர்ச்சியாம் என்பதும் உண்மை. ஞான அறிவு தாமத குணத்தினை விலக்கி சத்துவ குணத்தோடு கூடி நின்று பஞ்சேந்திரியங்களையும் விடயங்களில் செல்லாமல் சும்மா நில் என நிற்கும்.

மூன்றாம் காட்சி - குருவினை அவாவிய ஆன்மாவுக்கு அதன் அறிவு உலக விடயத்திலும் ஞானவழியினும் ஒப்பச் செல்லும் ஆயின் விடயத்தைக் கொண்டு எழுந்த சித்த அகங்காரங்கள் ஒருவழிப்படாது இடையூறு விளைவிக்கும் என்பதால் ஆன்மா உண்மையாகவே ஞான நெறியை அவாவிய வழி உலகப் பற்றினை வெறுக்குமாயின் அது கைகூடும். உலகப்பற்றை வெறுத்து ஒழிக்கும் ஆற்றல் இன்றி இவ்வான்மா கொடுத்து வைக்கவில்லை என்று கவர்படும் நெறியினின்று என்று கூறுபவர்களின் கூற்றுப் பொருந்தாது.

நான்காம் காட்சி – சிவத்தியானம் எய்திய ஆன்மா உலக வியவ காரியங்களைக் கண்டு கழித்துச் சற்புத்தி வழிநின்று ஞானத்தினை அவாவும் என்பதும் “கெடுவாய் கேடு நினையத் தானே வருங்கேடு” என்பதும் இதனால் தோன்றும்.

ஐந்தாம் காட்சி - குருவாக்கிய பரிபாலனம் செய்துவரும் பிடிவாதம் உள்ள மனசுக்கு ஞான வழி இது, லௌகீக வழி இது எனும் ஆராய்ச்சி இல்லாது ஒளியினும் ஞானம் தானே உதயமாகி அதனை ஒருவழிப்படுத்தி நல்லறிவை எய்தச் செய்யும்.

ஆறாம் காட்சி - பஞ்ச இந்திரியங்கள் விடய நுகர்ச்சிகளை இழுக்கவும் சிவ தியானாதிகளினால் அவ்விடயங்களின் இயல்பினை உணர்ந்து வெறுத்து ஞானத்தை அவாவிய ஆன்மாவுக்கு பசுகரண இயல்பு மாறி பதிகரணமாகும்.

ஏழாம் காட்சி – சத்தினிபாதம் எய்திய ஆன்மாவுக்கு பஞ்ச இந்திரியங்களும் தம்வலி குன்றி நல்லறிவினை நாடிச் செல்லும். சித்த அகங்காரங்கள் பசுத்துவம் நீங்கி அதனை பதிவிடத்து வலிந்திழுத்துச் செல்லும் என்பதும் இதனால் பெறப்பட்டன.

**ஐந்தாம் அங்கம்:**

முதலாம் காட்சி - பசு கரணங்கள் எல்லாம் பதி கரணங்கள் ஆகும். இயல்புடைய ஆன்மா, குரு சந்நிதியை அடைய அக்குரு, அறிவு கருணை என்பவற்றின் வழியில் செலுத்த அவ்வழி யாலே சென்று ஞானத்தை காட்ட கண்டு அதனால் சிவதரிசனம் எய்தி தன்வசமளித்து ஆனந்தமாக நகர்த்தி நிற்கும்.

இரண்டாம் காட்சி - சற்குருவழி நின்று ஞானமெய்திய ஆன்மா தன்னை அறிந்து தலைவனை மேவும்.

இவ்வாறாக ஒவ்வொரு காட்சி அமைப்பு முடிவிலும் சைவ சித்தாந்த கருத்தியல் சாரமாகத் தரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், சில காட்சி அமைப்புகள் இடையே பல்வேறு இராக - தாளங்களை முன்வைத்து

*பல்லவி, அனுபல்லவி, சரணம் எனும் வகையில் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அத்தகைய பாடல்கள் ஒவ்வொன்றும் தத்துவ நுட்பம் செறிந்தனவாகக் காணப்படுகின்றன. இந்துஸ்தான் காப்பி, காப்பி, காம்போதி, ஆனந்த பைரவி, சமாசு, எதுகுல காம்போதி, சண்முகப்பிரியா, உசேனி, பெலகிரி, தேசிகதோடி, சாமா, முகாரி ஹிந்துஸ்தான் பியாக் முகாரி, சங்கராபரணம் முதலான இராகங்களும் ஆதி, ரூபம், குதி, மேகம், (கிசிர சாதி), மிஸ்ரசாதி, ஏகம், சர்வலகு, திரிபுடை (திஸ்ர சாதி), திரிபுடை முதலான தாள அமைப்புடன் கூடியனவாக அத்தகைய பாடற்காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.*

இந்நூலினூடு இராமலிங்கத்தின் இலக்கிய அறிவார்வத்தையும் அறிந்துணர முடிகின்றது. சைவ சித்தாந்த தத்துவத்தின் கருத்தியலைப் பாத்திரங்களினூடு நகர்த்திச் செல்லும் நூலாசிரியர் அவற்றை மேலும் விளக்குவதற்காக தேவாரம், திருவாசகம், சிவஞானபோதம், சித்தியார், உண்மை விளக்கம், திருமந்திரம், தாயுமானவர் பாடல்கள், திருவாதவூர் புராணம், சிவஞான தீபம், சித்தாந்தக்கானம், திருக் குறள், காஞ்சி புராணம், திரு விளையாடல் புராணம், இராமாயணம் என இலக்கியங்களைப் பயன்படுத்துகின்ற நூலாசிரியரின் புலமைத்துவம் இதன்மூலம் இனங்கண்டறியப் படுகின்றது.

பாத்திரங்களூடான உரையாடல் மெய்கண்ட சாஸ்திரங்களை நினைவுபடுத்து கின்றன. சைவ சித்தாந்தம் முப்பொருள் உண்மையை நிறுவுவதாய் அமைந்தாலும் இங்கு ஆன்மா தொடர்பான இருப்பு, இயல்புகள், இலக்கு, இலக்குக்கான மார்க்கங் களே பாத்திரப்படைப்புகள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஆன்மாக்கள் பொதுவாக தாமத, ராசத, மற்றும் சத்துவ குணங்களை உடையவை. முதலிரு குணங்களும் இலவுகீக வாழ்வியலுக்குள் ஆன்மாக்களை இலயிக்கச் செய்யும் ஆற்றல் உடையவை. முதல் அரங்கத்தின் முதல் காட்சியில் ரசோகுணனும் (ராட்சத குணம்), தமோகுணனும் (தாமத குணம்) உரையாடி வருவதாக சித்தரிக்கப்பட்டிருக் கிறது. அந்த உரையாடல் பின்வருமாறு அமைவதனைக் கண்ணுறலாம்.

*ரசகுணன்: தம்பி நமதெண்ணம் எவ்வாறு ஆகுமோ அறியேன்.*

*தமோகுணன்: ஆசைப் பிள்ளையும் ஆகாமியனும் சாமானியமானவர்களா? நாம் ஏன் யோசிக்க வேண்டும்.*

*ரசோ: (ஆலோசித்து) சாமானியமானதென்றா நினைத்தாய் அக்குழந் தையை?*

*தமோ: ஏதோ ரொம்ப யோசிக்கின்றீர்களே?*

*ரசோ: வேண்டும் தானே*

*தமோ: எதற்காக?*

*ரசோ: அக்குழந்தையை அன்போடு வளர்த்துவரும்கால் அறிவானந்தன் அன்பு வேண்டுமானால்……*

*தமோ: நமக்கும் கெடுதல் உண்டு?*

*ரசோ : சந்தேகமா?*

*தமோ: (கலகலென நகைத்து) இவ்வுலகம் முழுவதையும் அடக்கியாளும் எமக்குமா?*

*ரசோ: ஆம் உமக்கும் எமக்கும் இன்னும்…*

என உரையாடல் நீளுகின்றது. இங்கே தாமத மற்றும் இராட்சத குணங்களின் இயல்புகள், அவை ஆன்மாவை எவ்வாறு இலௌகீக உலகில் அலைப்புறச் செய்கின்றன என்பது விவரிக்கப்பட்டு, இலௌகீக வாழ்வில் ஆன்மா அனுபவிக்கும் இன்னாப்புக்கள் எடுத்துரைக்கப்படுள்ளன. இதில் இருந்து விடுபடுவதற்கு தியானம், ஜெபம் முதலான மார்க்கங்கள் உண்டு. இம்மார்க்கங்கள் ஊடாக ஆன்மா தன்னை உணர்ந்து சிவபெரும்பொருளை அடைய இயலும் என்பதே ஏனைய அரங்கக் காட்சிகள் ஊடாக விளக்கப்பட்டு உள்ளது.

இறுதியில் ஐந்தாம் அரங்கத்தின் இரண்டாம் காட்சியானது சிவக்கொழுந்துவுக்கு ஞான சுந்தரம் சாரூப்பியத்தை விளக்குவதாக அமைக்கப்பட்டுள்ளது. சிவக்கொழுந்து என்பது நமசிவாயத்தின் (ஆன்மா) தீட்சா நாமம். ஞானசுந்தரம் பதிஞானம். எனவே

இக்காட்சியினூடே இறை - ஆன்ம தொடர்பு தெளிவுறுத்தப் பட்டிருக் கிறது. அவ்வுரையாடல் பின்வருமாறு,

*சிவ: பிராண சகி! நான் யார் என்றும், என் தாய் தந்தையர் யார் என்றும், இம்மானுட சென்மத்தின் விசேடம் இன்னதென்றும் அதனால் அடையும் பேறு என்னவென்றும் நீயே எனக்கு தெரிவிப்பாய். என எம் குருநாதர் கூறியிருந்தார். அவற்றைத் தெரிவிப்பாய். (இது நமசிவாய ஆகிய ஆன்மா வின் வேண்டுகோள்.)*

*ஞான: பிராணேச! தாம் தூல சூக்குமமாதலால் சிவக் கொழுந்து என்றும், மலபந்த முடைமையால் ஆன்மா என்றும், ஆன்ம நாதரின் பஞ்சகிருத்திய கடாட்சத்தை பெறுதலால் நமசிவாயம் என்றும் அழைக்கப்பட்டு வந்தீர்கள்.*

*சிவா: அப்படியா நல்லது என் தாய் தந்தையர் யாவர்?*

*ஞான: தாம் சூக்குமசித்தாகிய ஆன்ம நாதரைப்போல் அனாதி வஸ்துவாய் இருந்தும் சத்து, அசத்து எனும் இரண்டை யும் பற்றும், இயற்கை ஞான முடைமையால் அசத்தைப் பற்றிய குற்றத்தை நீக்கிச் சத்தைப் பற்றுதலாகிய நித்தியானந்தத்தை கொடுத் தருளும் ஆன்ம நாயகர் தமது பஞ்சகிருத்திய பரிக்கிரகம் எடுத்துக் கொண்ட சுத்தா சுத்த மாயா காரியதரிசிகளால் பரிபக்குவப்படுத்தலாகிய செங்கோன் முறையை நடாத்தினர். அம்மாயா காரிய தரிசி களின் சேர்க்கையால் தான் விரும்பிய பிறவிகளை எடுத்து கன்ம தேட்ட முடையவராய் மனோராட்சி யத்திற்கு உள்ளானீர்.*

என அவ்விரு பாத்திரங்களுக்கு இடையிலான உரையாடல் அமைகின்றது. இங்கு, நமசிவா யத்தின் தாய் தந்தையர் யாவர்? என்பதற்கு ஞானசுந்தரம் கூற்றாகப் பின் வருமாறு பதில் தரப்பட்டுள்ளது.

*"...மனமே ஆசைக்கும் அவ்வாசையே பிறவிக்கும் காரணமாதலால் மன மோகனனைத் தமது பிதாவாகவும் தாம் தூய்மை உடைய சத்துவ பொருளானமையினால் மனத்தின் சுபாவ குணமாகிய சாத்வீகம் என்னும் சாந்த வசதியைத் தமது மாதாவாகவும் நன்மை தீமைகளையும் பாவ புண்ணியங்களையும் பகுத்தறிதல் கருவியான அறிவானந்தரைத் தமது மாமனாகவும், திருவருளின் காருண்ய ரூபமாகிய கருணாம்பாளை அத்தையாகவும், திரோதான சக்தியாகிய லோக சுந்தரத்தையும் அருட்சக்தியாகிய என்னையும் மைத்துனிகளாகவும் சற்புத்தியை சிநேகனாகவும், சகல கலைகளும் ஒருங்கு திரண்ட ரூபமாகிய சகலகலாநந்தரைக் குலகுருவாகவும் பெற்றுக் கொண்டீர். இத்துணைப் பெருமை தங்கிய தாம் தமது தந்தையின் பெத்த புத்திரர்களாகிய ரசோதமோ குணர்வசப்பட்டு, ஆசைப் பிள்ளை, ஆகாமியன் என்பவர்களால் அழுக்காற்றிலே போடப் பட்டீர். நித்திய வஸ்துவாதலால் அவ்வாற்றில் அமிழாது கரையேறிப் பூதங்களால் வளர்க்கப்பட்டு காமக் குரோதிகள் ஆகிய மிருகங்களுடன் வசித்தீர்கள். தம்மைக் காணாததினால் சகலரும் துக்க சாகரத்தில் அமர்ந்திருக்கும் சமயத்தில் அவர்கள் மனக் கவலையை நீக்குதல் பொருட்டாய் சகல கலானந்தர் பிரசன்னமாகி வேண்டிய புத்திகளை கூறி தம்மை தேடுதலாகிய பஞ்சாட்சர செபத் தியானத்தையும் விளக்கி அருளினார். ஆன்ம நாயகர் என்னை அழைத்து நமசிவாயம் வருகின்றான் அவனுக்கு மாலையிட்டுச் சுலோகத்தை அடைந்த நமசிவாயத்துக்கு சாமீப்பியம் கொடுத்து சாரூப்பியத்தை விளக்கி சாயுச்சியமாகிய நித்தியானந்த சம்போக சம்பன்ன னாக வாழும்படி செய்வாயென விளம்பினார்..."*

என்று குறிப்பிட்டிருக்கிறார். சிவஞானபோத எட்டாம் சூத்திரத்தினை நினைவுபடுத்து வதாக இக்காட்சி புலப்படுகின்றது.

நமசிவாய என்பது பஞ்சாட்சரம். அது இறைவன் நாமம். இந்நூலில் அது ஆன்மாவுக்கு சூட்டப்பட்டி ருக்கின்றது. 'உள்ளிருக்கும் நாதனை உள்ளுணர்வால் அறிவதற்கு இந்நூல் தூண்டுகின்றது. உலகப் பற்றுக்களோடு இருக்கும் ஆன்மா (நமசிவாயம்) அவற்றிலிருந்து நீங்க பஞ்சாட்சர (நமசிவாய) செபத்தியானம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இவற்றினால் குருவருள் உண்டாகும். இதனால் சத்குரு வழிநின்று ஆன்மா ஞானமெய்தும். இஞ்ஞான முடமையினால் ஆன்மா தன்னையறிந்து

பதியாகிய பரனை தலைப்படுதலாகிய (தாடலை) பேரின்ப நிலையினைப் பெறும் என்பது இந்நூலில் தெளிவுபட விளக்கப் பட்டுள்ளது.

### முடிவுகளும் பெறுபேறுகளும்

எனவே, நமசிவாயம் அல்லது நான் யார் என்னும் ஓர் நவீன நாடகம் எனும் நூலினை வரலாற்றியல் ஆய்வு முறை, இலக்கிய விபரண ஆய்வு முறையியலினூடாக ஆராய்ந்த தன் அடிப்படையில் பின்வரும் முடிவுகளைப் பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

- சைவ சித்தாந்த மெய்யியலை மக்கள் மயப்படுத்தும் சிறந்த உபாயமாகவே இந்நூல் அமைகின்றது.
- கேட்பவரை தொடர்ந்து வாசிக்கத் தூண்டும் வகையில் சைவ சித்தாந்த மெய்யியல் துலங்கள் கதாபாத்திர அமைப்பின் ஊடாக வெளிப்படுத்தப்படுகிறது.
- ஒவ்வொரு காட்சிகளின் நிறைவுப் பகுதியிலும் சைவ சித்தாந்த தத்துவப் பொருண்மை சுருக்கமாக குறிப்பிடப்பட்டள்ளது.
- திருமுறைகளின் தாக்கம் வெகுவாக உள்ளது.
- சில காட்சி அமைப்புகளிடையே பல்வேறு ராகம், தாளங்களுடன் கூடியன வாக பாடற்காட்சிகளும் தத்துவ நுட்பச் செறிவுடன் இடம்பெற்றிருக்கிறது.
- இங்குள்ள பாத்திரப் படைப்புகள் யாவும் சைவ சித்தாந்த கருத்தியலுடன் தொடர்புடையனவாகும்.
- நமசிவாயம் என்னும் பாத்திரமே ஆன்மாவாக சித்தரிக்கப்பட்டிருக்கின்றது.
- இந்நாடகப் பிரதியாக்கத்தின் ஊடாக சைவ சித்தாந்தம் கட்டமைக்கும் ஆன்ம இலக்கும் இலக்கினை அடைய விரும்பு பவனின் இயல்பும் தெளிவுபட விளக்கப்பட்டிருக்கின்றது.
- ஊன்றி நோக்குமிடத்து சிவஞான போத எட்டாம் சூத்திர வெண்பாக் கருத்தியலை மிகத் தெளிவாகவும் நுண்ணார்ந்தும் வெளிப்படுத்தும் நாடக வடிவமாக இந்நூலை அணுக முடிகின்றது.
- ‘குருவருள் இன்றித் திருவருள் இல்லை’ என சைவ சித்தாந்தம் இறுதி செய்வதற்கு அமைய சத்குருவழி நின்று ஞான மெய்திய ஆன்மா தன்னைத் தானறிந்து பதிவாகிய தலைவனைச் சேரும் என்பது பெறப்படுகின்றது.
- நமசிவாயம் என்பது இறை நாமம். ஆயினும் ஆன்மா வுக்கு சூட்டப்பட்டு இருப்பதன் காரணம் ‘தன்னைத் தன்னால் அறிதலே’ தலைவராகிய இறைவனை அடைய முடியும் என்பதாலாகும். அந்த ஞானவிசாரமே ஆன்ம விடுதலைக்கு அடிப்படை யாகும். எனவே ஆன்மா தன்னை உணரும் நிலையில் தானே பதிப் பொருள் என்று உணரும். அதுவே நான் யார் அல்லது நமசிவாயம் என்பதாக அமைகின்றது.
- சைவ சித்தாந்த கருத்தியல் தளம் பல்வேறு வடிவங்களில் மக்கள் மயப் படுத்தப்பட முற்பட்ட காலனித்துவ காலச் சூழலில் அக்கருத்தியல் நாடக வடிவமாக்கப்பட்டு மக்கள் வாழ்வியல் நீரோட்டத்தில் கலக்கச் செய்வதற் கான புதிய முயற்சியாக நமசிவாயம் அல்லது நான் யார் எனும் நூல் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது புலனாகின்றது.
- ஆகவே, ஆன்மாவைப் பற்றி தோகான்ம வாதிகள், சூக்கும தேகான்மவாதிகள், இந்திரிய ஆன்ம வாதிகள், அந்தக்கரனான்ம வாதிகள், ஏகான்மவாதிகள் என ஆன்ம வாதிகள் கட்டமைத்த புனைவுகளுக்கு எதிரான நாடக வடிவமாக இந்த நமசிவாயம் அல்லது நான் யார் அமைந்துள்ளது. இதன் வழி சைவ சித்தாந்தம் பற்றிய இலக்கியப் பதிவுகளில் இன்னும் முக்கியமான இடத்தினைப் பெற்றிருக் கின்றது. பிரிட்டிசார் காலனி ஆதிக்க வரலாற்றுக் காலத்தில் சுதேசிய

*பண்பாட்டுப் படிமலர்ச்சிக்கான செயலூக்கங்களாக அமையும் இலக்கியப் பதிவாக இந்த நமசிவாய அல்லது நான் யார் எனும் ஓர் நவீன நாடகம் எனும் நூல் அமைந்துள்ளது.*

- *சுருங்கக் கூறின் இந்தியாவில் கருக்கொண்டு வளர்ந்து ஈழத்தில் படர்ந்த சைவசித்தாந்த கருத்தியல் பரவலாக்கத்தில் ஈழத்த வரின் இலக்கிய முயற்சிகள் தனித்துவ மானவை. இத்தகைய இலக்கியப் பதிவுகளிடையே வித்து வான் க.இராமலிங்கத்தின் இந்நாடக நூல் சைவ சித்தாந்தப் பரவலாக்கத்தில் ஓர் வரப்பிரசாதமே எனக்கூறலாம்.*

**References**


Kantacāmi, Cō. Na. (2003). *Intiyat Tattuvak Kaḷañciyam: Tokuti-2*. Ceṉṉai: Maṇivācakar Nūlakam. [*கந்தசாமி, சோ. ந. (2003). இந்தியத் தத்துவக் களஞ்சியம்: தொகுதி-2. சென்னை: மணிவாசகர் நூலகம்.*]

Kantaiyā, Mu. (2007). *Caivaññāṉa Viḷakkam*. Koḻumpu: Civattiru Maṉṟam. [*கந்தையா, மு. (2007). சைவஞான விளக்கம். கொழும்பு: சிவத்திரு மன்றம்.*]

Mukuntaṉ, Ca. (2008). *Tirumuṟaikaḷil Caivacittānta Cintaṉaikaḷ: Aṭaṅkaṉ Muṟaiyaiyum Tiruvācakat Taiyum Aṭippaṭaiyākak Koṇṭa Nōkku, Pakti Neṟiyum Paṇpāṭṭuk Kōlaṅkaḷum*. Koḻumpu: Intucamaya Kalācāra Aluvalkaḷ Tiṇaikkaḷam. [*முகுந்தன், ச. (2008). திருமுறைகளில் சைவசித்தாந்த சிந்தனைகள்: அடங்கன் முறையையும் திருவாசகத் தையும் அடிப்படையாகக் கொண்ட நோக்கு, பக்தி நெறியும் பண்பாட்டுக் கோலங்களும். கொழும்பு: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.*]

Mukuntaṉ, Ca. (Pa.Ā.). (2024). *Namacivāyam Allatu Nāṉ Yār Eṉṉum* Ōr *Navīṉa Nāṭakam*. Paḻaiya Māṇavar Caṅkam, Maṭṭuvil: Maṭṭuvil Kamalācaṉi Vittiyālayam. [*முகுந்தன், ச. (ப.ஆ.). (2024). நமசிவாயம் அல்லது நான் யார் என்னும் ஓர் நவீன நாடகம். பழைய மாணவர் சங்கம், மட்டுவில்: மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்.*]

Vēluppiḷḷai, Ā. (1985). *Tamiḻ Ilakkiyattil Kālamum Karuttum: Mūṉṟām Patippu*. Ceṉṉai: Pāriputtakap Paṇṇai. [*வேலுப்பிள்ளை, ஆ. (1985). தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்: மூன்றாம் பதிப்பு. சென்னை: பாரிபுத்தகப் பண்ணை.*]